
# மங்கையர் மலர்


Mangayar Malar

டிசம்பர் 83 ரூ 2





ஜெதிரா



ஆர். பத்மாவதி



# பதினாறு வயது பாடகி



ஒரு பாடலுடன் இனித் திரைப் படத்தில் பாடுவதில்லை என்ற தீர்மானத்தோடு ஒதுங்கி விட்ட நஸியா ஹஸனை பாலிடார் நிறுவனம் ஒப்பந்தம் செய்ய முற்பட்டபோது நஸியாவின் தந்தை ஒப்புக்கொள்ளவில்லை. அந்த முயற்சிகள் தோல்வி யடைந்த நேரத்தில் லண்டனில் உள்ள எச். எம். வி. நிறுவனம் இவர்களை அணுக அதிர்ஷ்டம் அவர்கள் பக்கம் திரும்பியது. ஒரே சமயத்தில் லண்டன், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இந்த இசைத்தட்டுக்களை விற்பனைக்கு வெளியிட வேண்டும் என்றும், ரிகார்டு செய்வதற்கான தொகையில் 50 சதவீதத்தை (சுமார் 3,60,000) கொடுப்பதாகவும் ஒப்பந்தம் செய்யப்பட்டு லண்டனிலேயே டிசம்பர் மாதத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தத்துக்காக பெரு முயற்சி எடுத்துக் கொண்டவர் எச். எம். வி. நிறுவனத்தைச் சேர்ந்த அனில் தத். உடனடியாகக் கல்கத்தாவில் உள்ள எச். எம். வி.யின் மூலம் பாகிஸ்தானிலும் தொடர்பு கொண்டு வெளியிடுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்து விட்டனர்.

ஆரம்ப முயற்சியிலேயே தோல்வி கண்ட பாலிடார் நிறுவனம் உடனடியாகக் காஷ்மீரில் பிறந்து பாகிஸ்தானில் பிரபலமாகியுள்ள முஸ்ரத் நசீர் என்ற பாடகியை, ஏற்கனவே 'ஹாரிசான்' என்ற இசைத்தட்டின் மூலம் அமெரிக்காவில் புகழ் பெற்று கானடாவில் வசித்து வருபவரை ஒப்பந்தம் செய்து புகழ் பெற்ற 'போனி' எம். பாடல்களை இந்தியில் மகேந்திர கபூருடன் பாட வைத்து வெளியிட முயற்சிகளை மேற்கொண்டனர். முன்பே எடுத்த முடிவுப்படி ஏப்ரல் 8ந் தேதி வெளியிடப்பட வேண்டிய நஸியாவின் 'டிஸ்கோ தீவானே' இசைத்தட்டை ஏப்ரல் 3ம் தேதியன்றே எச். எம். வி. வெளியிட்டது. நஸியாவின் அதிர்ஷ்டம் அன்று அவருடைய பதினாறாவது பிறந்த நாள். எதிர்பாராத விதமாக பாலிடார் நிறுவனமும் அவர்களுடைய 'எம் 3' இசைத்தட்டை அன்றே வெளியிட வேண்டியதாகி விட்டது.

வெளியான தினத்தன்றே நஸியாவின் இசைத்தட்டு 1,15,000 விற்பனையாகிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி விட்டது. மற்றொரு விசேஷம் இதுவரை திரைப்படப் பாடல்களற்ற தனிப்பட்ட பாடல்களை ஒரு பாடகரோ பாடகியோ பாடி, விற்பனைத் துறையில் அதிகமாக விற்பனையாகி தங்க இசைத்தட்டை நஸியா பெறப் போவதைப் போல் யாருக்கும் கிடைத்ததில்லை. இந்த இசைத் தட்டுக்காக எச். எம். வி. நிறுவனம் விளம் பரத்துக்குச் செலவழித்த தொகை ரூ. 4,50,000. இதுவரை எந்த இசைத்தட்டு நிறுவனமும் தனிப்பட்ட ஒரு இசைத் தட்டுக்காக இவ்வளவு விளம்பரப் படுத்தியதில்லை. இதன் வெளியீட்டை முன்னிட்டு ஏப்ரல் மாதத்தில் நஸியா, பிட்டு, மற்றும் எட்டுப்பேர் அடங்கிய இசைக் குழுவினரை இந்தியாவில் முக்கியமான ஒன்பது நகரங்களில் 'டிஸ்கோ நைட்' நடத்த எச். எம். வி. உத்தேசித்திருந்தது. ஆனால் நஸியாவின் தேர்வுகளை ஒட்டி ரத்து செய்யப்பட்டாலும் ஜூலை மாதத்தில் நடத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

பாலிடார் வெளியிட்ட 'எம் 3' இசைத் தட்டின் நிலைமை எப்படி?

'டிஸ்கோ திவானா'வுக்கு எந்த வகையிலும் குறையற்ற முறையில் சிறப்பாக ஒலிப்பதிவு செய்யப்பட்டு, முஸ்ரத், மகேந்திர கபூரால் பாடப்பட்ட 'எம்3' வெளியான தினத்திலிருந்து இதுவரை சுமார் 50,000 இசைத் தட்டுக்கள் விற்பனையான போதிலும் தங்க இசைத்தட்டைப் பெற்றுத் தருமென்று எதிர் பார்க்கிறார்கள். இசைத்தட்டு அறிமுகத்தன்று முஸ்ரத் நசீர் பங்கேற்றுக் கொண்ட டீ. வி. நிகழ்ச்சியில் 'எம்3' இசைத்தட்டில் இடம்பெற்றுள்ள பாடல்களிலிருந்து இரு பாடல்களைப் பம்பாயில் ஒளிபரப்பினார்கள். 'போட்டியாலும் ஆர்வத்தாலும் எச்.எம்.வி. நிறுவனம் இப்பாடல்களை ஒலிப் பதிவு செய்ய 20,000 டாலர்களைச் செலவழித்திருப்பதாகவும் மேற்கொண்டு விளம்பரத்துக்காகச் செலவழிக்கப்பட்ட தொகையையும் சேர்த்தால் சாதாரணமாக ஆகும் செலவைவிட அதிகம் என்றும், ஒரு இசைத்தட்டின் அடக்க விலை ரூ. 33 என்றாலும், ஒரு லட்சம் விற்பனைக்கு 33 லட்சம்தான் கிடைக்கும். மேலும் அதிகம் விற்பனையானாலும் செலவழித்த தொகை திரும்புமா என்பது சந்தேகம்தான்' என்று பாலிடார் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் கருதுகின்றனர்.

ஆதாரம்: நியூடெல்லி, ஸண்டே.

—லட்சுமி குமார்

ஆறும் மாசம் அவளுக்குக் கண் திறந்து கொண்டது. அழகான கண்களைப் பார்க்க முடிந்தால் பார்க்கலாம். அந்த இருண்ட உலகத்தில் எப்படியாவது வெளிச்சம் கசியக் கூடுமென்றால் அவள் கண்கள் அந்த வெளிச்சத்தைத் தொடரும். கண் புருவங்களும் கண் இரைப் பைகளும் அமைய ஆரம்பித்து விட்டன. நாக்கில் ருசி பார்க்கும் முனைகள் எதற்கோ இத்தனை சீக்கிரம் வந்துவிட்டன. அவள் இப்பொழுது பிறந்தால் பிழைப்பது மிக அரிது. பிறக்கும் அவசரத்திலும் இல்லை அவள்.

அம்மா லேடி டாக்டரிடம் போய்ப் பரிசோதித்துப் பார்த்துக்கொண்டதில் ''எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது'' என்றாள்.

''என்ன குழந்தை சொல்ல முடியுமோ டாக்டர்?''

''நானும் இந்தத் தொழில்ல இருபது வருஷம் இருந்திருக்கேம்மா. இதுவரைக்கும் ஒரு தடவை கூடச் சொல்ல முடிஞ்சதில்லே. பகவான் அதை மட்டும் பிறக்கற வரைக்கும் காட்ட மாட்டேங்கறார்!''

''எனக்கு என்னவோ இன்னொரு புள்ளையாப் பொறந்து வைக்கப் போறதேன்னு கவலையா இருக்கு டாக்டர்!''

''நீங்க ஒருத்திதாம்மா பொண்ணு வேணும்னு சொல்ற முதல் தாய். யூஷுவலா அப்பாமாருங்கதான் பொண்ணு பொண்ணுன்னு கேப்பாங்க.''

''எனக்கென்னமோ பொண்ணு இருந்தா பிற்காலத்திலே வீட்டு வேலைக்கு ஒத்தாசையாயிருக்குமேன்னுட்டுத்தான். எல்லாக் காரியமும் நானே பண்ண வேண்டியிருக்கு. ஆத்திலே பசங்க ஒரு துரும்பை எடுத்து அந்தாண்டை போட மாட்டாங்க.''

''பசங்க பசங்கதாம்மா. எனக்கு ஒரு புள்ளை இருக்கான். பதிமூணு வயசு. இப்பவும் என்கிட்டத் தொட்டுக்கிட்டுத்தான் படுத்துப்பான். சைக்கலாஜிக்கலா இது நல்லது இல்லேன்னு எங்க வீட்டுக்காரர் சொல்றார். இவனை ரொம்ப அட்டாச்ட்.''

''டாக்டர்! பிரசவம் நார்மலாத்தானே இருக்கும்.''

''கவலையே படாதீங்கம்மா.''

''ஏன்னா வயசாயிடுத்து பாருங்கோ.''

''அப்படியெல்லாம் இல்லேம்மா. கொஞ்சம் கூட ரிஸ்க் எடுக்க மாட்டேன். ஆனா அனாவசியமா சிஸேரியனும் பண்ண மாட்டேன். நல்லாச் சாப்பிடுங்க. நல்லா வேலை செய்யுங்க. அதுவே போதும்.''

ஏழாம் மாசம் அவள் சிவந்த தோலுடன் சுருங்கிப்போய் வயசான குழந்தை போல் மூன்று பவுண்டு கனமும் பதினாறு அங்குல நீளமும் இருந்தாள். இப்போது அவளுக்கு இருட்டுக்கும் வெளிச்சத்துக்கும் வித்தியாசம் தெரியும். அம்மா உள்ளங் கையால் லேசாகத் தொட்டுப் பார்க்கும்போது அவளுக்குத் தெரிந்தது. இப்போது பிறந்தால் அவள் பிழைத்துக்கொள்ள சான்ஸ் இருக்கிறது.

''லீவுக்கு இப்பவே சொல்லி வெச்சுட்டேன். அப்புறம் ஆடிட் கீடிட்டுன்னு உயிரை வாங்கிடுவான்.... விட மாட்டான். பாட்டி போறுமா? அக்காவைக் கூட்டி வெச்சுக்கலாமா?''

''எல்லாம் பாட்டி போறும். உங்க அக்கா வந்தா எந்த உபகாரமும் செய்யப் போறதில்லே. பாட்டிக்கு இன்னொருத்தருக்குச் சமைக்க வேண்டி வந்துடும். பக்கத்தாத்து சாரு வந்து ஹெல்ப் பண்றேன்னு சொல்லியிருக்கா. கவலையே படாதீங்கோ. நீங்க கூட ஜாஸ்தி லீவு எடுக்க வேண்டாம்.''



# எப்போதும் பெண்

எட்டாம் ஒன்பதாம் மாதத்தில் அவள் உள்ளே சும்மா இருக்க முடியாமல் விஷமம் பண்ண ஆரம்பித்து விட்டாள். கையைக் காலை ஆட்டிக் கொஞ்சம் இடம் மாற்றிக் கொள்ளவும் செய்தாள். இப்போது அவள் எல்லா அங்கங்களையும் அமைத்துக்கொண்டு விட்டாள். சோனிப் பீச்சாங்கை இருந்த தன்னை அழகு படுத்திக் கொண்டாள். தசைகளும் சதைகளும் வளர்த்துக் கொண்டுகொஞ்சம் சருமம் பாலிஷ் வாங்கிக்கொள்ள சுருக்கங்கள் எல்லாம் குறைந்து போய் கொஞ்சம் ஷேப்புக்கு வந்து விட்டாள். அந்த 280ம் தினத்துக்குக் காத்திருந்தாள்.

அம்மா சாதாரணமாகத்தான் இருந்தாள். நிறைகர்ப்பமாக இருந்தாலும் வீட்டுக் காரியங்களை விட்டு வைக்காமல் துடைத்துக் கொண்டும் அரைத்துக் கொண்டும் கைக்காரியங்கள் செய்துகொண்டுமிருந்தாள். அவ்வப்போது ஸ்டூலில் உட்கார்ந்து கொண்டு சற்றே மூச்சு வாங்கும்போது மது ''பூதம்'' என்று கேலி பண்ணுவான்.

''ஆமா! உனக்கு வந்தாத் தெரியும்டா கடன்காரா! எப்பப் பார்த்தாலும் தின்னுண்டே இரு. அம்மாவுக்கு ஒரு ஒத்தாசையும் பண்ணாதே!''

மதுவோடு பேசிக் கொண்டிருந்தபோது, அம்மாவின் உடம்பு ஒன்பது மாசமாகப் போற்றிப் பாதுகாத்ததை வெளியே விரட்டுவதற்குத் தீர்மானித்து விட்டது. இந்தத் தீர்மானம் முதலில் யார் எடுக்கிறார்கள் என்பது மனித குல ஆச்சரியங்களில் ஒன்று. ஆனால் குழந்தை வெளியே வரத் தீர்மானித்து விட்டது என்பதற்குத் தவிர்க்க முடியாத அறிகுறிகள் துவங்கி விட்டன. முதலில் அம்மாவுக்கு 'இடுப்பு வலி'யின் ஆரம்பங்கள் தெரிந்தன. இடுப்பு வலியில்லை இது. யூட்டிரஸ் சுருங்கத் துவங்குவதால் ஏற்படும் வலி. அம்மாவுக்குத் தெளிவாகத் தெரிந்துவிட்டது இதுதான் ஆரம்பம் என்று.

அம்மாவின் உடல் எத்தனையோ விதங்களில் அந்தக் கணத்துக்குத் தயாராகியிருந்தது. அவள் இதயம் சற்றுப் பெரிசாகி இருந்தது. பாப்பாவுக்குத் தேவைப்பட்ட உபரி ரத்தத்துக்காக — அதைச் சமாளிக்க செக்ஸ் ஹார்மோன்களின் அழுத்தத்தால் மார்பகங்கள் பெரிசாகி பால் சுரப்பிகளும் அவைகளுக்கு ரத்தம் தர சின்னச்சின்ன நுண்ணிய ரத்தக் குழாய்களையும் அம்மா புதுசாக அமைத்துக் கொண்டிருந்தாள்.

கருப்பையின் வாய் மெலிசாக இழையத் துவங்கியிருந்தது. சாதாரண தினங்களில் கூல்ட்ரிங்கின் உள் வைத்து நாம் உறிஞ்சும் ஸ்ட்ராவின் அளவிற்கே திறந்திருக்கும் இந்த ஸெர்விக்ஸ் துவாரம் இப்போது பாப்பாவைக் கடத்துவதற்கு ஆறு அங்குலம் அகலமாக வேண்டும். கர்ப்ப வாசலில் உள்ள அத்தனை தசைகளும் மகத்தான மாறுதல்கள் பெறுகின்றன. எல்லாமே நீண்டு மென்மைப்படுகின்றன. பாப்பா போகும்போது கஷ்டப்படாமல் இருப்பதற்குப் புதுசு பண்ணப்பட்ட ரத்தக் குழாய்களின் மூலம் அங்கே உள்ள டிஷ்யூக்களில் கிளைகோஜென் திரவம் கசிகிறது. அது சற்று நேரத்தில் குளூகோசாகி லாக்டிக் அமிலமாகிவிடுகிறது. குழந்தை பிறக்கும்போது அந்த இடத்தில் பாக்டீரியா இல்லாமல் பார்த்துக்கொள்வதற்கு.

ஹார்மோன்களின் பாதிப்பில் பெல்விக் எலும்புகளைப் பிடித்து இழுத்து வைத்திருக்கும் தசைநார்கள் இளகுகின்றன. பெல்விக் இணைப்புகள் அகலப்படுகின்றன.

அம்மா, ''போய் பாட்டியைக் கூப்பிடுடா'' என்றாள்.

''ஏம்மா என்னமோ மாதிரி பாக்கறே?''



சுஜாதா

''பாட்டியைக் கூப்பிடுடா, உங்கப்பாவைக் கூப்பிடு. அம்மா ஆஸ்பத்திரிக்குப் போகணுமாம்னு சொல்லு.''

மது கீழே ஓடிப்போகஅம்மா சற்று வாகாக உட்கார்ந்தாள். அவளுக்குக் கவலே ஏதும் ஏற்படவில்லே. இப்போதுதான் ஆரம்பம். இன்னும் பல மணி நேரங்கள் ஆகும். அவளுக்குத் தெரியும். அம்மா முதல் குழந்தையின்போதுதான்சற்றுச் சிரமப்பட்டாள். மற்றதெல்லாம் டாண்டாண் என்று இடுப்பு வலி ஏற்பட்ட எட்டாவது மணி நேரத்தில் பிறந்திருக்கிருர்கள். ''வாடி பொண்ணே!'' என்று தன் வயிற்றைப் பிடித்துக் கொண்டு சொல்லிக் கொண்டாள்.

முதல் வலி லேசாகத்தான் இருக்கும். அம்மாவுக்கு இது தெரியும். லேசாக ஒரு நிமிஷம் வலிக்கும், அப்புறம் சரியாகிவிடும். அரை மணி கழித்துத்தான் அடுத்த முறை வரும். ''எல்லாம் சரியாக இருக்கிறதா? நான் வரப்போகிறேன்'' என்று எச்சரிக்கை வலி அது.

அவள் தலே கீழாக இருந்தாள். கைகளேக் குறுக்கிக் கொண்டு இன்னும் அவசரப்படவில்லே. ஒவ்வொரு வலி, பந்திலும் மெல்ல மெல்லத் தலேயை வாசலில் முட்டினுள். கொஞ்சம் கொஞ்சமாக வாசல் பெரிசாகட்டும். அம்மாவுக்கு வலிக்கும் என்று அதற்குத் தெரியுமோ என்னமோ மொத்தம் எட்டு மணி நேரமாகும் என்று தெரியுமோ என்னவோ அவசரப்படுவதாகத் தெரியவில்லே.

---

**உடல் முழுவதும் அரிப்பு எடுத்துச் சொறிந்து கொண்டு இருக்கத் தோன்றுகிறதா?**

**. மருதோன்றி இலேயையும் சிறிது மஞ்சளேயும் சேர்த்து வைத்து அரைத்து உடல்முழுவதும் தேய்த்து, சிறிது நேரம் ஊறிய பின்பு, குளித்து விடுங்கள்: அரிப்பு நின்றுவிடும்.**

**எஸ். எஸ். மணியம்**



ஸெர்விக்ஸ் வாசல் பூராவும் திறந்ததும் அவளேச் சுற்றியிருந்த திரவப் பை உடைந்தது. அவள் வெளியே புறப்படத் தயாராகி விட்டாள்.

வெளியே அம்மா டாக்ஸியில் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச்செல்லப்பட்டாள். உடனே அட்மிட் ஆகிப் பக்கத்தில் நின்ற நர்ஸ் 'முக்கும்மா, முக்கும்மா'' என்று வற்புறுத்திக்கொண்டிருந்தாள். பாப்பா மெல்லத் தலேயை ஸெர்விக்ஸ்பெரினியம் என்றுநுழைத்துக் கடந்து அவள் மண்டை எலும்புகள் இன்னும் இளகலாகவே இருந்ததால் அந்த வழிக்கு ஏற்பத் தலே சற்று ஷேப் மாற்றிக் கொண்டது. ஏற்கனவே மூன்று பிள்ளே பெற்றிருந்ததால் இந்தப் பிரசவத்தில் அம்மா அதிகம் கஷ்டப்படவில்லே. சரியாக நாற்பத்தி ஐந்து நிமிஷத்தில் குழந்தை வெளி உலகத்தைச் சந்திக்கத் தயாராகிவிட்டது.

அபாயகரமான கணம் அது. பாப்பாவின் சுவாசப் பைகள் காற்றிழந்த பலூன்போல இருந்தன. இதுவரை அதற்குத் தேவையான பிராண வாயு முழுவதும் அம்மாவிடமிருந்தே கிடைத்து ஜாலியாக இருந்து விட்டது. இப்பொழுது சொந்தமாகச் சமாளிக்க வேண்டும். குழந்தையின் ரத்தம் கூட இதுவரை சுவாசப் பைக்குப் போகவில்லே. இப்போது அனுப்பியாக வேண்டும்.

வெளியே வந்தவள் அழுக்குக் கலரில் கண்களேச் சுருக்கிக் கொண்டு என்ன என்னவோ திரவங்கள் எல்லாம் வழிந்துகொண்டு ஈரமாக, அதைத் தலேகீழாகத் தொங்கப் போட்டுப் பின் பக்கம் தட்ட 'ஙே' என்று அழ ஆரம்பித்தது. மூக்கு நுனி ரொம்பச் சிவப்பாக இருந்தது. பார்க்க நன்ருகவே இல்லே. தொப்புள் கொடி வேறு! இப்போதெல்லாம் உடனே வெட்டி விடுவதில்லே. பிறப்புக்கு அப்புறம் ஒருசில நிமிஷங்கள் கழித்து அம்மாவிடமிருந்து கடைசி ரத்த சட்டேயை வாங்கிக் கொண்ட பின்தான் வெட்டினுர்கள்.

இதுவரை சிக்கலில்லாமல் சென்றுகொண்டிருந்த பிரசவம் இப்போது பாதை மாறியது. பிறப்புக்குப் பின்னும் கொஞ்ச நேரம் பிளாசெண்ட்டா கர்ப்பப் பையின் மேற் பகுதியுடன் இணேந்துதான் இருந்தது. இணேந்திருந்த அந்தப் பகுதியில் ஏகப்பட்ட ரத்த நாளங்கள் இணேந்துதானிருந்தன. இந்தச் சமயத்தில் வழக்கமான பிரசவத்தில் உடம்பு கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கொண்டு விட்டு பிளாசெண்ட்டாவை உதறி எறிய —மறுபடி வெளியேற்ற அசைவுகளேத் துவக்க வேண்டும். கர்ப்பப் பை சரிவரச் சுருங்கி அந்த ரத்த இணேப்புக்களே சீல் அடிக்க வேண்டும். அம்மாவுக்கு அப்படி ஆகாமல் எங்கோ அட்டவணேயில் தப்பாகி உடனே அந்த அசைவுகள் ஏற்பட்டுப் பெருவாரியாக ரத்தம் கசிய ஆரம்பித்து விட்டது. நர்ஸ் டாக்டருக்குத் தகவல் சொல்ல ஓடிப்போக

டாக்டர் மற்றொரு பிரசவம் பார்க்கப் போயிருந்ததால் புதிதாகச் சேர்ந்த அவள் அஸிஸ்டண்ட் வந்து பார்க்க, அவள் ''திஸ் ஈஸ் நார்மல்'' என்று சொல்லிப் போய் விட்டாள்.

அம்மா கண்ணை மூடிக்கொண்டு மயக்கத்தில் இருக்க மிக வேகமாக ரத்தம் இழந்து கொண்டிருந்தாள். ஜுரம் வந்து விட்டது. பக்கத்தில் படுத்திருந்து லேசாகக் கத்திக் கொண்டிருந்த அந்தப் புதியவளுக்கு இதெல்லாம் தெரிய நியாயமில்லை. ஒரு பிளாஸ்திரியில் 3456 என்று நம்பர் எழுதி அதன் முழங்கையில் ஒட்டி யிருந்தார்கள். அவள் ஏழு பவுண்டு இருந்தாள். பத்தொன்பது அங்குல நீளமிருந்தாள். அதில் கை கால் எல்லாம் ரொம்பக் குட்டை. இப்போது எலும்பைத் தொட்டுப் பார்த்தால் ரப்பர் போல இருக்கும். முதுகெலும்பைத் தொட்டாலே நீண்டு விடும்போல அவ்வளவு இளசு. மணிக்கட்டு எலும்புகள் இன்னும் ஆரம்பிக்கக் கூட இல்லை. தலை மேல் சொட்டையாக ஒரு அவசர முடி. தசைகளில் பலமே இல்லை. அதற்காகத் தேகப் பயிற்சி செய்வது போல இப்போதே கையைக் காலை ஆட்டத் தொடங்கிவிட்டாள்.

பிற்பாடு ஏற்படப்போகும் நிறத்துக்குச் சம்பந்தம் இல்லாமல் இப்போது சற்றே பழுப்புக் கலந்த நீலமாகக் கண்கள். அம்மா பூர்ண மயக்கத்தில் இருந்தாள். அப்பா சாக்லேட் வாங்க எதிர்க்கடைக்குப் போயிருந்தார். பெண் என்றதும் சற்று குஷி. புதியவளின் உடல் சற்று அதிக உஷ்ணமாக இருந்தது. அம்மணமாக, ஈரமாக, வந்தவளை இப்போது துணி சுற்றின நர்ஸ் ''அம்மா! எப்படி இருக்கீங்கம்மா, இப்ப தேவலையா?'' என்று கேட்கக் கேட்கப் பதில் இல்லாமல் போக பல்ஸ் பிடித்துப் பார்த்தபோது பல்ஸ் இல்லை. புதிதாக மாற்றப்பட்டிருந்த பெட்ஷீட்டில் அதிகப்படியாக ரத்தக் கறை படிந்திருக்க, படுக்கை ஓரத்திலிருந்து ரத்தம் சொட்டுச் சொட்டாக சொட்டுவதைப் பார்த்துப் பதறிப்போய் ஓடினாள். டாக்டர் வந்து பார்த்தபோது அம்மா இறந்திருந்தாள்.

அப்பா எதிர்க் கடையில் சாக்லேட் வாங்கி விட்டு, உடுப்பி ஹோட்டலில் பசித்ததால் ஒரு தோசை சாப்பிட்டுவிட்டுப் பெண்ணுக்கு என்ன பெயர் வைப்பது என்று யோசித்துக் கொண்டே சாலையைக் கடந்து நாப்பது வாட் பல்பு வெளிச்ச காரிடாரையும் எத்தனையோ படுக்கைகளில் வயிறுடன் படுத்துக் கொண்டிருந்தவர்களையும் கடந்து கோடி மூலையில் திரும்பினபோது ''எங்க போயிட்டீங்க! உங்களை எல்லோரும் தேடிக்கிட்டிருக்கோம்.'' என்று நர்ஸ் சொல்ல ஏன் என்று கேட்க, ''சீக்கிரம் போங்க அம்மாவுக்கு ஆபத்து'' என்றாள். அங்கே போய்ச் சேர்ந்த போது ஏகப்பட்டபேர் படுக்கையைச் சூழ்ந்



வெந்நீர் போடும் கெட்டிலில் உள்ளே சில சமயம் கறை படிவது உண்டு. இதைத் தடுக்க ஒரு சுத்தமான கருங்கல் அல்லது சலவைக்கல்துண்டை கெட்டிலுள் போட்டு உபயோகித்தால் கறை போய் விடும்.

ஜனனி முரளி

---

திருக்க, பெரிய டாக்டர் ''என்ன சாந்தா ஹௌ கன் யூ கன்க்ட் லைக் தட்!'' என்று சத்தம் போட்டுக் கொண்டிருக்க அப்பா, ''டாக்டர்! என்ன ஆச்சு?'' என்றார்.

''வாங்க! சரியான சமயத்தில எங்க போயிட்டீங்க? நீங்களாவது கொஞ்ச நேரம் பார்த்துக்கிட்டு இருக்கக் கூடாதா?''

''என்ன டாக்டர்... குழந்தைக்கு ஏதாவது?''...

''குழந்தை நல்லாத்தான் இருக்கு. அம்மாதான்....''

அப்பா, அம்மாவின் மார்பில் நேராக ஊசி ஏற்றப்படுவதையும், அவள் மார்பை மூர்க்கத்தனமாக, முரட்டுத்தனமாக அவர்கள் பிசைவதையும் பார்த்து கிட்டக்கப்போனார். ''அச்சச்சோ! அச்சச்சோ!'' என்பதைத் தவிர சட்டென்று அப்பாவுக்கு ஒன்றும் சொல்ல வரவில்லை. அம்மா கண்ணைத் திறக்காமல், உடம்பை அசைக்காமல் படுத்திருந்ததும், அவர்கள் சிகிச்சையின் அசைவுகளுக்கு ஏற்ப அவள் உடல் ஒரு ஜடப் பொருள்போல் ஆடுவதும் அப்பாவுக்கு வயிற்றில் பயமாக இருந்தது. அம்மாவின் பெயர் சொல்லிக் கூப்பிட்டார். டாக்டர்கள் அவர் இருப்பதைக் கவனிக்கவில்லையோ என்னவோ கூடிக் கூடிப் பேசிக் கொண்டார்கள். அப்பாவுக்கு உள்ளம் பதைத்தது. ஆக்ஸிஜன் சிலிண்டர் வேகமாக உருண்டு வந்தது. அதைப் படுக்கை அருகே கொண்டு வர பெரிய டாக்டர், 'வேண்டாம்ப்பா அவசியமில்லை'

அப்பா அம்மாவின் கி[illegible]த்தில் சென்ற போது வெளியே பாட்டியும் [illegible] [illegible]தைகளும் சைக்கிள் ரிக்ஷாவில் வந்து இறங்கினார்கள்.

புதியவள் பிறந்த களைப்பில் தூங்கிக் கொண்டிருக்க...

(தொடரும்)

பெயரில் என்ன இருக்கிறது? ஒரு ரோஜா மலரை வேறு எந்தப் பெயரால் அழைத்தாலும் அதே மணத்தைத்தானே தரும்? என் தாத்தா ஷேக்ஸ்பியர் படித்தவர் இல்லை. அவரது குலதெய்வம் சீர்காழித் தலத் தெய்வம் திரிபுரசுந்தரி. தமது அருமைப் பேத்திக்கு அந்தப் பெயரைச் சூட்டி விட்டார். பின்னர் பேத்தியான அடியேன் வளர்ந்து பள்ளிக்கூடத்துக்குப் போகத் தொடங்கிய பின்னர்தான் என் பெயரைப் பற்றிய கவலை ஆரம்பமாகியது.

அகல்யா, அமுதா என்ற 'அ' எழுத்தில் தொடங்கியிருந்தால் பெயர் அழைக்கப் 'பிரசண்ட் டீச்சர்' என்று உற்சாகமாக நான் குரல்எழுப்பியிருப்பேன். பெயர்ப் பட்டியலில் மூன்றுவது பகுதியில்தான் ஆசிரியை என் பெயரை அழைப்பார். அதுவரை நான் காத்திருக்க வேண்டியிருந்தது.

# பெயரில் என்ன இருக்கிறது?



எனக்கு இது பள்ளி நாட்களில் பெரும் குறையாகத் தென்பட்டது. மேலும் அந்தக் காலத்தில் உஷா, சரோஜா என்ற பெயர்கள் நாகரிகமாகக் கொண்டாடப்பட்டபோது முழ நீட்ட அளவில் கடவுளின் பெயர் என்று எனக்குத் தாத்தா பொறுக்கி எடுத்துச் சூட்டியிருந்த பெயரை எண்ணி நான் குமைந்தேன்.

கான்வெண்ட் பள்ளியில் ஹைஸ்கூல் படிப்பை முடிக்கச் சேர்ந்தபோது எனக்கு என் பெயர் கட்டோடு பிடிக்காமலே போய் விட்டது.

கான்வென்டிலிருந்த கன்னிகா ஸ்திரீகளின் (வெள்ளைக்காரிகள்) வாயில் என் பெயர் மிகவும் சிரமப்பட்டது. சரித்திர ஆசிரியரான ஒரு பிரெஞ்சு சிஸ்டர் என்னை 'தர்பர்ஸண்டரி' என்று அழைத்தபோது, வகுப்பில் கலீர் என்ற சிரிப்பு ஓசை எழும்பியது. எனக்குக் கோபமும் அழுகையுமே வந்து விட்டது. இந்தத் தாத்தா இப்படியா சதி செய்வார்? என்று உள்ளூற வெகுண்டு போனேன். அது சமயம் நான் ஒரு தடவை என் தந்தையிடம் என் பெயரை மாற்றி வைக்க வேண்டும் என்றுகூடக் கேட்டுப் பார்த்தேன். ''பள்ளி ரிஜிஸ்டரில் பதிவாகியிருக்கிறது. எஸ். எஸ். எல். சி. புத்தகத்தில் இடம் பெற்று விட்டது. கடவுள் பெயர்... ஏன் மாற்றணும்?'' — அதட்டினர் கோபத்துடன். வாயை மூடிக் கொண்டேன்.

வைத்தியக் கல்லூரியில் சேர்ந்தபோது கூட எனக்கு என் பெயர் மனத்தை உறுத்திக் கொண்டுதான் இருந்தது. என் பெயர் கொண்ட வேறு ஒரு மாணவி அதை வெட்டிப் பாதியாக்கி சுந்தரி என்று வைத்துக் கொண்டிருந்தாள். அதைக் கண்டு எனக்குப் பொறாமையாகத்தான் இருந்தது.

## லக்ஷ்மி

நான் வைத்தியக் கல்லூரியில் முதல் ஆண்டு மாணவியாகப் படிக்கும்போதே எழுதத் தொடங்கி விட்டேன். முதலாவதாக ஒரு சிறு கதையை எழுதி ஆசிரியருக்கு அனுப்ப நினைத்தபோது என் உண்மைப் பெயரைப் போட்டுக் கொள்ள நான் விரும்பவில்லை. முதலாவது அந்தப் பெயர் நீட்டமாக இருந்தது. இரண்டாவது காரணம் கூடப் படிக்கும் மாணவர்களுக்கு நான் கதை எழுதுவது தெரிந்து விட்டால் வகுப்

பிலே என்னைக் கேலி செய்து கலாட்டா செய்வார்கள் என்றதொரு அச்சம்! லக்ஷ்மி என்ற புனை பெயருக்குள் (என் பாட்டியின் பெயர்) புகுந்துகொண்டு விட்டேன். இன்னொரு பிரச்னை கல்லூரி வகுப்புப் பெயர்ப் பட்டியலில் என் பெயர் ஆங்கில எழுத்து வரிசைப்படி மூன்றாவது பகுதியில் வந்து நின்றது. அதனால் நேர்முக வினா விடைத் தேர்வின்போது நான் 'சி' என்ற பகுதியில் ஒதுக்கப்பட்டேன்.

ஆரம்பத்தில் தேர்வு அதிகாரிகள் மாணவ மாணவிகளிடம் அத்தனை கடுமையான கேள்வியைக் கேட்க மாட்டார்கள். காலை ஆகாரம் சாப்பிட்டுக் குஷியான மனநிலையில் இருப்பார்கள். சிரித்துக் கொண்டே கேள்விகள் கேட்பார்கள், நேரம் செல்லச் செல்ல, கேள்விகள் கேட்டு வாய் அலுத்து வயிறு பசியில் சுருளும்போது எரிச்சலோடு இருப்பார்கள். அப்போதுதான் 'சி' பகுதி மாணவ மாணவிகள் கேள்விகளுக்காக உள்ளே அனுப்பப்படுவார்கள். பரீக்ஷை அதிகாரிகள் கடைசியாக வரும் அந்த மாணவ மாணவிகளைக் கேள்விகள் கேட்டுப் புலியாகச் சீறுவார்கள். சில சமயம் அந்தக் கடைசி மாணவக் குழந்தை சட்டென்று பதிலளிக்கத் தொடங்கிய காரணத்திற்காகப் பெயில் ஆக்கி விடுவார்கள். இப்படியெல்லாம் எங்களுக்குள் பரீட்சை அதிகாரிகளைப் பறறி ஒரு கணிப்பு இருந்தது.

ஐய்யய்யோ! என் பெயரால் நான் 'சி' பகுதிக்குத் தள்ளப்பட்டு விட்டேனே என்று புலம்பிக் கொண்டு சிங்கத்தின் குகையில் நுழைவது போல ஒவ்வொரு தேர்வின் போதும் நடுநடுங்கிக் கொண்டு நேர்முக வினா விடைக்குப் போய் வெற்றியோடு வெளி வந்ததை இப்பொழுது நினைத்துச் சிரித்துக் கொள்கிறேன்.

டாக்டர் திரிபுரசுந்தரியும் எழுத்தாளர் லக்ஷ்மியும் ஒருவர்தான் என்பது அப்போது பலருக்குத் தெரியாது.



வைத்ய உலகில் திரிபுரசுந்தரியாக இருந்த போதுதான் மதிப்பு ஏற்பட்டது. லக்ஷ்மியை நோயாளிகள் கண்டு கொள்ளவில்லை. எழுத்து உலகில் 'லக்ஷ்மி' என்ற முத்திரைக்குத்தான் மதிப்பு இருந்தது. திரிபுரசுந்தரி என்று போட்டிருந்தால் கதைகள் பிரசுரிக்கப்பட்டிருக்குமோ என்னமோ சந்தேகம்!

தென் ஆப்பிரிக்காவுக்குப் போனபோது அங்கேயும் என் பெயர் எனக்குப் பெரும் பிரச்னையாகத்தான் இருந்தது. என்னுடன் கூட வேலை பார்த்த டாக்டர்கள் (வெளி நாட்டவர்கள்) அவர்கள் வாயில் பெயர் புரள மறுத்தது.

ஒருசிலர் என்னை டாக்டர் சுந்தா...தா...ரீரீ... என்று அழைக்கத் தலைப்பட்டனர். ஆனால் நான் வேலை பார்த்த ஆஸ்பத்திரியின் தலைவர் எனக்கு ஒரு புதுப் பெயர் கொடுத்து விட்டார். பெயரில் உள்ள முக்கிய எழுத்துக்களை மட்டும் வைத்து டாக்டர் 'டி.பி.எஸ்.' என்று அழைக்க ஆரம்பித்தார். பின்னர் வைத்தியர், நண்பர்கள், தொழிலதிபர்கள் எல்லோருக்கும் நான் டாக்டர் டி.பி.எஸ். ஸாக மாறிவிட்டேன். இன்னமும் இந்தப் பெயரில் எனக்கு நண்பர்கள் அன்புடன் கடிதம் எழுதிக் கொண்டிருக்கின்றனர்.

முதல் முதலாகப் பல ஆண்டுகளுக்குப் பின்னர் என் பெயர் எனக்கே இனிமையாக ஒலித்த ஒரு புது அனுபவம் அந்த நாட்டில் தான் ஏற்பட்டது.

காச நோய் ஆஸ்பத்திரியிலிருந்து ஸ்கூல் மெடிகல் இன்ஸ்பெக்ஷன் எனும் பகுதிக்குப் பணி செய்ய என் வேலையை மாற்றினார்கள். ஆயிரக் கணக்கான பிரைமரி ஸ்கூல் பள்ளி மாணவ மாணவிகளைப் பரிசோதனை செய்து நான் கல்வித் தலைமை அதிகாரிக்குப் பள்ளிக் குழந்தைகளின் ஆரோக்கியம் — கட்டிடங்களின் அமைப்பு இத்யாதி பற்றிப் பொறுப்பான நீண்டதொரு அறிக்கையை அனுப்ப வேண்டிய வேலை அது.

ஒரு பள்ளிக்கூடத்தில் நான் மாணவ—மாணவிகளைப் பரிசோதித்துக் கொண்டிருந்த போது என்னுடன் கூட வேலை செய்த நர்ஸ் உள்ளே வந்தாள்.

உங்களுக்கு ஒரு சிறு அதிசயம் தரப் போகிறேன். சொல்லிக் கொண்டே பள்ளிச் சிறுமி ஒருத்தியை உள்ளே அழைத்து வந்தாள்.

பளிச்சென்ற சீருடையுடன் சிரித்த முகத்துடன் பட்டாம்பூச்சியாக உள்ளே வந்த மாணவியைப் பார்த்தேன்.

திக்கு வாய் என்பது போன்ற ஊனம் உள்ளதா என்று அறியப் பரிசோதனையின் போது நான் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருப்பது வழக்கம்.

அதே போல 'உன் பேர் என்னம்மா குழந்தை?' கேட்டுக் கொண்டே ஸ்டெதஸ் கோப்பைக் கையில் எடுத்தேன்.

'திரிபுரசுந்திரி' என்றாள். தூக்கி வாரிப் போட்டது எனக்கு. தென் ஆப்பிரிக்காவில் மாகி, ஜாய், ரோஸி என்று பெயர் வைத்துக் கொள்ள விரும்பும் கூட்டத்திலே... வாயில் நுழைய முடியாத கடினமான பேர் என்று பிரசித்தி பெற்றிருந்த என் பெயரை இந்தக் குழந்தைக்கு ஏன் வைத்திருக்கிறார்கள்? இதனால் வருங்காலத்தில் இந்தக் குழந்தைக்கு எத்தனை பிரச்னை... கல்லூரி, அலுவலகம் என்று எல்லா இடத்திலும் இந்த நீண்ட பெயர் குளறுபடி செய்யுமே?

''யாரும்மா உனக்கு இந்தப் பேர்வச்சா?'' வேடிக்கையாக நான் கேட்டேன்.

''எங்கம்மாதான் வச்சாங்க இது சாமி பேர். அத்தோட இந்த ஊரில் இதே பேரில் இந்தியாவிலிருந்து வந்த ஒருடாக்டரம்மா இருக்காங்களாம். அவங்க ரொம்பத் தமிழ் படிச்சவங்களாம். அம்மா சொன்னாங்க. எனக்குஇந்தப் பெயர் ரொம்பப் பிடிக்கிறது. இதே பேரில் இந்த நாட்டில் நாங்கரெண்டே பேர்தான் இருக்கோம்.....'' சிறுமி சொல்லி விட்டு மகிழ்ந்தாள்.

''திரிபுரசுந்தரி! நீ கெட்டிக்காரி. நல்லா படி... ஒரு சங்கதி தெரியுமா? நான்தான் உங்கம்மா சொன்ன அந்த டாக்டர்.'' சிறுமியிடம் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன்.

மறுநாள் அந்தச் சிறுமி தன் தாயுடன் ஒரு கொத்து ரோஜா மலருடன் என்னைப் பார்க்க வந்தாள்.

''உங்கள் பெயரைக் கேட்டு ஆசைப்பட்டு என் குழந்தைக்கு அதை வச்சேன். அவளை ஆசீர்வதியுங்கள். அவளும் உங்களைப் போல நிறையத் தமிழ் படிக்கணும்.. டாக்டராகணும்'' என்றாள் தாயார்.

முதல் முதலாக என் பெயர் எனக்குக் கேட்க அன்று மிகவும் இனித்தது.

எழுத்தாளர் உலகில் என் புனை பெயருக்கு ஒரு மகிமை இருப்பதை நான் அறிவேன்.

அது எழுத்துத் திறமையால் ஏற்பட்ட தகுதியல்ல. செல்வத்தை அள்ளித் தரும் திருமகளின் பெயர் என்ற நம்பிக்கை தந்ததொரு பதவி!

பிரபல பத்திரிகை ஒன்றின் முக்கிய மனிதரான ஒருத்தரை நான் அவசரமாகத் தொலை பேசியில் கூப்பிட நேர்ந்தது. அது ஒரு வெள்ளிக் கிழமை காலைவேளை.

யார் அது? அப்பா வேலையா இருக்கார். மறுபக்கம் அவர் பெண்ணின் குரல் வினவியது.

''லக்ஷ்மி கூப்பிடறேன்னு சொல்லும்மா.'' அவ்வளவுதான். ஹலோ... நமஸ்காரம்... என்று மறு பக்கம் வந்துவிட்டார் அவர்.''

''வெள்ளிக் கிழமை லட்சுமி அழைத்தால் வேண்டாம் பிறகு வா என்று சொல்வார்களா?'' என்றபடி தொலைபேசியில் மறுபக்கத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு விட்டார்!

பெயரில் என்ன இருக்கிறது? என்று கேட்டால் ரொம்ப ரொம்ப விஷயங்கள் இருக்கின்றன என்பேன் நான்.

---

குடிக்கும் நீர் சிறிது உப்பாக இருந்தால் ஒரு துண்டு படிகாரத்தைப் போட்டுவைத்துப் பிறகு குடியுங்கள்.




# எப்போதும் பெண்

4

புதியவள் பிறந்த அலுப்பில் தூங்கிக் கொண்டிருக்க, அப்பாவுக்கு உண்மை உறைத்து அழவேண்டும் என்கிற அவசியம் புலனாகித் துண்டால் வாயைப் பொத்திக் கொண்டு அழத் துவங்குவதற்குச் சற்று நேர மாயிற்று.

பாட்டி சைக்கிள்ரிக்ஷாக்காரன் கொடுத்த அழுக்கு ஒரு ரூபாய் நோட்டைச் சந்தேகத்துடன் சோதித்துப் பார்த்துவிட்டு, மூன்று பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு வார்டு விசாரித்து அங்கே செல்வதற்குள் அம்மாவின் படுக்கையைச் சுற்றிலும் திரை போட்டு விட்டார்கள். அப்பா அவள் பேர் சொல்லி அனாவசியமாகக்கூப்பிட்டுக்கொண்டிருந்தார்.

''என்னடா புள்ளையா பொண்ணா?''

''பாட்டி, இங்க வந்து பாருங்கோ, இங்க வந்து பாருங்கோ.''

பாட்டி கண் சரியாகத் தெரியாமல் கிட்ட வந்து பார்த்து ''தூங்கறாளா?'' என்றாள். மது ''அம்மா, அம்மா'' என்று படுத்திருந்தவளைக் கலைத்து ஆட்டினான்.

''பாவம், மூணும் ஆம்பிள்ளைங்க மகாலெச்சுமி மாதிரி இருந்தாங்க.''

''அப்பா, அம்மா ஏன் பேச மாட்டேங்கறா?''

''அடிப் பாவி! என்னடி இப்படிப் பண்ணிட்டுப் போயிட்டே! நான் கிழம் கிடந்து குண்டுக் கல்லாட்டம் இருக்கேன். இந்த அநியாயத்தைக் கேக்கறவா இல்லையா''

பாட்டி பொல பொலவென்று கண்ணீர் சிந்தி அழ ஆரம்பித்தது இன்னும் குழந்தைகளுக்குப் புரியவில்லை. சின்னவன் காலையிலிருந்து பார்க்காத அம்மாவின் புடவைத் தலைப்பைப் பிடித்துக் கொண்டு விரல் போட்டுக் கொள்ள, அடுத்தவன் அந்த இடத்துக்குப் போட்டி போட...

''ம்ம்ம்ம்... எங்கம்மா'' என்றான் இடம் கிடைக்காதவன்.

''பொர்ட்டோட மையோட
பொறந்த கொடியோட
போடுசரப் பட்டோட
பிள்ளை பறக்க வாழ்வரசி ஆனயோ...
பாலுக்கு மகளேப் பறக்க வெச்சுப் போனயோ?
தொட்டில்ல மகளைத் துடிக்க வெச்சுப் போனயோ?'

என்று பாட்டி பாடியதை வேடிக்கை பார்த்துச் சிரித்தான்.

மதுவுக்கு ஒரு மாதிரியாகப் புரிந்துபோய் வீறிட்டு அழ ஆரம்பித்தான்.

இந்த சப்தம் எல்லாம் புதியவளுக்கு ஆகாமல் சின்னக் கண்களைத் திறந்து விழித்துக் கொண்டு கொஞ்சம் அழுதது. சின்னதாக ஒரு கொட்டாவி விட்டது.

அஸ்க் என்று தும்மியது.

''பாப்பா...பாப்பா'' என்றான் சின்னவன்.

பாட்டி முதல் முறையாகக் குழந்தையைப் பார்க்க, முகத்தைச் சுருக்கிக் கொண்டு ஙே என்றது.

பாட்டி, ''சண்டாளி! பொறக்கறதுக்கு முன்னடியே தாய்க்காரியை முழுங்கினயா மூதேவி'' என்றாள்.

''அதை ஏம்மா திட்டறீங்க... இப்பத்தான் பொறந்து வச்சிருக்குது.''

''இதை எடுத்துண்டு போயிடுங்கோ. எங்களுக்கு வேண்டாம்'' என்றார் அப்பா.

சின்னவன், ''ம்!... எனக்கு வேணும்'', என்று அழ ஆரம்பித்தான். ''அப்பா, அம்மாவை எழுப்புப்பா.''

''அம்மா எழுந்திருக்க மாட்டாடா! அம்மா எழுந்திருக்க மாட்டா!''

அப்பா கீழே உட்கார்ந்து கொண்டு குலுங்கி அழுதார்.

''தபாருங்க மிஸ்டர்! நீங்க இப்ப தைரியமா இருக்கணும். குளந்தைகளைப் பார்த்துக்க வேணுமா? பாட்டியம்மா! நீங்க எத்தனையோ அனுபவம் உள்ளவங்க. எத்தனையோ பார்த்தவங்க... நீங்கதானே இப்ப அவங்களுக்கு ஆறுதல் சொல்லணும்.''

''அய்யோ, என்ன சொல்றீங்க நரசம்மா? இப்ப இந்தச் சனியனை நானு வளர்க்கணும்? எனக்கு இருக்கிற மூச்சுப் பிடிப்பிலயும் தள்ளாத வயசிலயும்... போனயே பிராமணு என்னையும் கூட்டிண்டு போயிருக்கக் கூடாதா... இப்படிச் சின்னவாள்ளாம் போயிடறாளே... கிழம் நாங்க இருந்துண்டு கொட்டம் அடிக்கறமே. அய்யோ பத்துத் தலைமுறைக்குப் பதுமையுள்ள வாழ்வரசி அருமை முத்துக் கையாலே அனல் வாங்கிப் போவாயோ...''

''எடுத்துட்டுப் போம்மா இதை. இதும் பேச்சே வேண்டாம்.''

''ஸிஸ்டர், இந்த பேபியைக் கொண்டு போய்ட்டு ஸீ ரூம்ல வெச்சிருங்க. இவங்க துக்கத்தில் எதாவது எக்கச்சக்கமா செய்துருவாங்க...''

''நீ வாடி செல்லம்.'' என்று புதியவளைத் திறமையாக மூடிக்கொண்டு ''உங்களுக்கு வேணும்னுச் சொல்லுங்க. நான் வளர்க்கறேன்'' என்று கோபத்துடன் சொல்லிக் கொண்டே சென்றாள் நர்ஸ்.

''பாட்டி! நான் இப்ப என்ன பண்ணுவேன்?''

''சொல்லத்தெரியலையேடாப்பா. அய்யோ நேத்திக்கு வடாத்துக்கு நனைச்சு வெச்சு வெய்யல் வீணாப் போறதேன்னு கூழ் பண்ணி பாய் நிறையக் காயப்போட்டு... என்னடா ஆச்சு? ஆயுதம் கீயுதம் போட்டு எச்கேடா போயிடுத்தா?''

''ஒண்ணுமே தெரியலையே பாட்டி! வந்து பாக்கறேன், போய்ட்டான்னு சொல்றாளே!''

''அந்தம்மாளுக்கு ப்ளீடிங் நிறைய ஆயிடுச்சுங்க....''

''இப்ப என்ன பண்றது? பொணத்தை எப்பக் கொடுப்பா?''

''அம்மா எப்ப ஏந்திருப்பா?''

''ஏந்திருக்க மாட்டா'' என்றான் மது.

சின்னவன் நர்சின் பின்னால் பாப்பாவுடன் சென்றவன், கண்ணாடி வழியாக நூறு தொட்டில்களில் ஒன்றில் அவள் இடப்படுவதைப் பார்த்துக் கொண்டிருந்தான். மேர்ட்ரன் அவனைப் பார்த்து, ''இங்கெல்லாம் நிக்கக் கூடாது தம்பி. போய்டு'' என்று சொல்ல,

''அந்தப் பாப்பா என்னது.'' என்றான்.

''எந்தப் பாப்பாம்மா?''

''அதோ பாருங்க. ஒண்ணு ரெண்டு நாலு தொட்டில்ல இருக்கே... என்னது!''

''அப்படியா?''

''எப்ப ஆத்துக்கு எடுத்துண்டு போலாம்?''

''நாளை நாளன்னிக்குக் கொடுத்திடுவாங்க.''


''அது என்ன சாப்பிடும்?''

''சக்கரைத் தண்ணி. அம்மாகிட்ட பால். அம்மா எங்கே?''

---

பாலில் இரண்டு தேங்காய்த் துண்டுகளைப் போட்டு வையுங்கள். மூன்று நாள் வரையிலும்கூடப் பால் கெடாமல் இருக்கும்.

ஆர்.சி. எஸ்.



## பசலைக் கீரை

கீரைகளிலேயே மிக அதிகமான புரதச் சத்துக் கொண்டது பசலைக் கீரையே! வைட்டமின் ஏ, பி, சி மூன்றும் ஒருசேர அதிகமாயுள்ளது இந்தக் கீரையில்! இதனைக் கொதிக்க வைத்து அந்த நீரில் தேனையோ சர்க்கரையையோ கலந்து கொடுக்க மலச்சிக்கல் தீரும். இதன் தளிரைக் கிள்ளி சாறு பிழிந்து வெந்நீரில் கலந்து சாப்பிட்டால் தொண்டை கமறல் உடனே நிற்கும்.

வேலை செய்வதினால் நம் உடலில் தேய்வடையும். டிஷ்யூக்களைத் திரும்பவும் தருகிற சக்தி பசலைக் கீரைக்கு உண்டு.

இதனைச்சமைக்கும்போது இதன் கொதித்த நீரைக் கீழே கொட்டிவிடாமல் அதையும் உணவுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் முழுப் பலன் கிடைக்கும்.

— ஆர்.சி. எஸ்.



''அங்க இருக்கா. அம்மா ஏன் தூங்கறு?''

''களைப்பா இருக்கும்.''

வெளியில் வந்த ஸிஸ்டர், ''வா, தம்பி!'' என்று அவனைப் பரிவுடன் கூப்பிட,

''அது பேசுமா?'' என்றான்.

''அதுக்குள்ள பேசாதுப்பா. பாவம், ஸ்டாஃப்! தாய் டெத் ஆயிட்டாங்க!''

''அடப் பாவமே!'' என்றாள் மேட்ரன். ''என்ன ஆச்சு?''

''எம்ரேஜிங்.'' சற்றுக் குரலைத் தாழ்த்தி ''இண்ட்ரன் வந்து பார்த்துட்டு, 'ஒண்ணும் இல்லைன்னு சொல்லியாச்சு! அம்மாவானு ப்ளீட் பண்ணிட்டே இருக்காங்க... நார்மலாம்! இவங்கள்ளாம் டாக்டராகி என்னத்தைக் கிளிக்கப் போறாங்களோ!''

''எரைஞ்சு பேசாதே.''

''இந்த ஆஸ்பத்திரிலே நடக்கிறது ஒண்ணும் நல்லால்லே ஸ்டாஃப்.''

''குழந்தை நல்லா இருக்குது!''

''பொண்ணு! தகப்பனும் ஒரு பாட்டியும் வந்திருக்காங்க... இதைக் கொண்டு போய் குப்பைல போடுங்கறாங்க. இது என்ன செய்யும் பாவம்!''

''சிரிக்குமா அது?''

''தூங்கி எழுந்ததும் சிரிக்கும்.''

''எப்ப எழுந்திருக்கும்?''

''நீ தூங்கி எழுந்திருச்சப்புறம் அது நானும் எழுந்திருக்கிறேன்னு.''

''சாரதா கொஞ்சம் தனியா வரியா?''

சின்னவன் ஜன்னல் வழியாக ஆர்வத்துடன் எட்டிப் பார்த்துக் கொண்டிருக்க மேட்ரன் சாரதாவைத் தனியாக அழைத்துச் சென்று, ''இப்பக் கேக்காதே. குழந்தையை இப்பக் குடுக்க மாட்டாங்க. தாய்ப் பால் இல்லை. கொஞ்ச நாள் அப்ஸர்வேஷன்ல வெச்சுட்டுத்தான் கொடுப்பாங்க. அதுக்குள்ள நீ அவங்களைக் கேட்டுப் பாத்துரு.''

''என்ன கேக்கணும்?''

''குழந்தையைக் கொடுக்கிறாங்களான்னு. நமக்குத் தெரிஞ்ச ஒரு பார்ட்டி காத்துக்கிட்டிருக்கு. குளந்தை எப்படி இருக்கு?''

''நல்லா சிவப்பா இருக்குதுங்க. நல்ல நிறத்துக்கு வந்துரும்.''

''கொடுப்பாங்களா கேட்டுப் பாரு. விசாரிச்சு வை. என்ன?''

''விலைக்கா?''

''ஆமாம்மா. பாரின் கப்பிள் எடுத்து வளக்கத் துடிக்கிறாங்க. எக்கச்சக்கமா காசு. நீ இதை யார் கிட்டயும் சொல்லிடாதே. எனக்கு ஒண்ணும் இல்லை. ஏதோ கேட்டுக்கிட்டே இருக்காங்க. இவங்களும் வளக்க முடியாம சிரமப்படுவாங்கல்ல....''

''சரி! சமயம் வர்றப்ப கேட்டுப் பாக்கறேன். வாடா—தம்பி அப்புறம் பார்க்கலாம். பாப்பாவை இப்பத் தூங்கட்டும்.''

''பல்லு வெச்சுண்டிருக்கோ?''

''சேச்சே. பல் எல்லாம் இப்ப வராதுப்பா.''

ஒரு தடவை முழிச்சுப் பார்த்தது. இக்கூண்டு இருக்கு. இப்பத் தூங்கறதா? எப்ப சாதம் சாப்புடும்?... என்று சின்னச் சின்னச் சந்தேகங்களுக்கு விடையளித்துக் கொண்டே நர்ஸ் மறுபடி வார்டுக்கு வந்தாள். அப்பா இப்போது சற்றே அழுகை குறைஞ்சு பழுப்புக் காகிதங்களில் கையெழுத்துப் போட்டுக் கொண்டிருந்தார்.

''அதிர்ஷ்டமில்லீங்க. இல்லாங்காட்டி அரை மணிக்கு ஒரு தபா இங்க குளந்தை பொறக்குதுங்க. எல்லாரும் பெத்துப் பொளைக்கத் தானே செய்யறாங்க. பாட்டியம்மா! வீட்

டில ஒத்தாசைக்கு யாராவது இருக்காங்களா?''

''இல்லம்மா. யாரும் இல்லே.''

''அப்ப குழந்தையை வளக்கப் போறது யாருங்க?''

''அய்யோ, கேக்காதே. நான்தான் வளத்தாகணும். வைத்தியநாத சுவாமி! என் மேலே இந்த வயசில இந்தப் பாரத்தைப் போட்டுட்டார். நான் கடைசியா புள்ளே பெத்தது அம்பது வருஷத்துக்கு முந்திம்மா. என் புள்ளேயும் ஒரே புள்ளே] பாகிஸ்தான்லே போயிட்டான் சண்டைல. இவாத்தில ஒண்டிண்டிருக்கேன். எனக்கு வந்த பொறுப்பைப் பாத்தியா?''

''ரொம்பக் கஷ்டங்க. அதும் சின்னக் குழந்தையைச் சமாளிக்கிறதுன்னு என்ன கஷ்டம், தெரியுங்களா?''

''அய்யோ, சொல்லாதே.''

''ஸார்! ரொம்ப ஸாரி ஸார். நாங்க எங்களால முடிஞ்சதெல்லாம் பாத்துட்டோம்.''

''குழந்தை எங்க?'' அப்பா பிரமிப்புடன் மெஷின் பேசுவது போலக் கேட்டார்.

''அது நல்லாத்தான் இருக்குதுங்க. கவலைப்படாதீங்க.''

''அதுக்கு ஆகாரம்?''

''எல்லாம் நாங்க பார்த்துக்குவோம். கவலைப்படாதீங்க.''

இப்போது அம்மாவை முழுவதும் மூடியிருந்தார்கள். இரண்டு மகன்களும் அவ்வப்போது வேடிக்கை பார்த்துக் கொண்டே உம்...உம்... என்று அழுது கொண்டிருக்க, ''சின்னப் பிள்ளைக்கு இன்னும் தெரியாதுங்க. சொன்னாப் புரியக் கூடப் புரியாதுங்க. ஏதாவது சமாதானம் சொல்லி தூங்கப் பண்ணிர்றேன். ராத்திரி ரொம்ப நேரமாகுதுங்க. ஏதாவது வாங்கிட்டு வரச் சொல்லட்டுமா?.... ஆயா?''

''வேண்டாங்க.''

''அப்ப பையன்களை அழைச்சுக்கிட்டுப் போயி ரெஸ்ட் ரூம்ல வச்சிருக்கேன். எதாவது திங்கறதுக்கு கொடுக்கறேன். பெரியம்மா நீங்க வரீங்களா கொஞ்ச நேரமாகும். இந்தத் தள்ளாத வயசில உங்களுக்கு எதுனாச்சும் ஆயிருச்சுன்னா அப்புறம் கஷ்டம் பாருங்க!''

''எனக்குப் படபடன்னு வரது.''

''பாட்டி, நீங்க போயிட்டு வாங்கோ. நான் பார்த்துண்டு உங்களைக் கூப்பிடறேன். ஏம்மா, ஒரு போன் பண்ணணும்.''

''நம்பர் சொல்லுங்க. நான் சொல்லிடறேன்.''

''எல்லாரும் நல்லவாளா இருக்கா. இந்தப் பாவிப் பொண்ணு உசிரோட இருக்கக் கூடாதா?''

அப்பா அம்மாவுடன் தனியாக விடப்பட்டார். சற்று நேரம் கைத்துண்டை இறுக்கக் கடித்துக் கொண்டு மவுனமாக அழுதார். அம்மாவை முதலில் பெண்பார்த்த போது கேஸரியில் நிரடின முந்திரிப் பருப்பு கூட ஞாபகம் வந்தது. அப்போது அம்மா சின்னதாக இருந்தது ஞாபகத்துக்கு வந்தது. தான் வேஷ்டிக்கு மேல் பெல்ட் போட்டுக் கொண்டு அன்னைக்குத்தான் புதுசாகச் செருப்பு வாங்கினது ஞாபகம் வந்தது. முதலில் அந்த வீட்டில் இருந்த பெண் பிள்ளைகளில் பார்க்க வந்த பெண் யார் என்பதிலேயே இருந்த குழப்பம் ஞாபகத்துக்கு வந்தது. அம்மா அணிந்திருந்த நீலப் பட்டுப் புடவை ஓரத்தில் குங்குமம் சிதறியிருந்தது. சுவரில் தெரிந்த பெரிய போட்டோவில் ராவ் பகதூர் யாரோ என்று எழுதியிருந்தது. பாய் விரித்தது. ஆர்மோனியத்தைக் கொண்டு வந்து வைத்து அதன் பின்னால் அம்மா வந்தது, தலையைக் கவிழ்த்துக் கொண்டதை ஒரு இம்மியும் நிமிர்த்தாமல் மார்பை இழுத்துப் போர்த்துக் கொண்டு அழுத்தி வாரிக்கொண்டு... மெல்ல போர்வையை விலக்க அந்த முகத்தைப்பார்த்தார். நெற்றியில் பொட்டு லேசாகக் கலைந்திருந்தது. இரண்டு மூக்கிலும் மூக்குத்தி. வாய் லேசாகத் திறந்திருந்தது. தாலி பக்கவாட்டமாகச் சரிந்திருந்தது. முகம் அமைதியாக இருந்தது. மார்பில் பால் சுரந்து புடவையை நனைத்திருந்தது. பக்கத்தில் கையாலாகாத ஆக்ஸிஜன் ஸிலிண்டர் மௌனமாக நின்று கொண்டிருந்தது.


''நான் போயிட்டேன்னா வேற கல்யாணம் பண்ணிப்பேளா?''

புதியவள் கத்த ஆரம்பித்தாள். பிறந்தவுடன் அவள் எழுப்பிய முதல் அழு குரலை யாரும் கவனிக்க முடியாதபடி அசம்பாவிதம் நிகழ்ந்து விட்டாலும் அவள் உயிர் வாழ்வதற்கு அந்தக் கத்தல் தேவையாக இருந்தது. மார்புக் கூட்டின் கீழ் டயாஃபர்ம் துருத்தி போல் இயங்கி மூக்கு வாய் வழியாக உள்ளே சேர்ந்துபோன திரவங்களை வெளியேற்ற அவசரக் கூக்குரல் அந்த முதல் அழுகை. அதற்குப் பின் அவள் இப்போது பற்பல காரணங்களுக்காக அழத் தயாரானாள். பசி, மூத்திரம் ஈரம்... கொஞ்ச நேரத்திலேயே அழுகை பலனளிக்கும் என்று கற்றுக்கொள்ள வேண்டும் அவள். அவள் அம்மாவுக்கு மட்டும் புரியக்கூடிய ஒருசில சப்தங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும்... அம்மா தான் இல்லை.

அப்போது நமசிவாயத்தின் வீட்டில் டெலிபோன் அடித்தது. (தொடரும்)

---

பால் பிறைகுற்றுவதற்கு மோர் இல்லையா? நான்கு பச்சை மிளகாய்க் காம்புகளைப் பாலில் போட்டு வைத்து விடுங்கள். மறுநாள் நல்ல தயிர் கிடைத்துவிடும். —ஆர்.சி.எஸ்.





# சுஜாதா

5

"அல்லோ! யார் வேணும்?''

''நமசிவாயம் இருக்காருங்களா?''

''நமச்சிவாயம் தான் பேசறேன்.''

''அய்யா நான் ஆஸ்பத்திரில இருந்து பேசறேனுங்க. கொஞ்ச நாளைக்கு முன்னே அம்மா எடுத்து வளர்க்கறதுக்கு ஒரு குழந்தை வேணும்னு சொல்லியிருந்தாங்க.''

''ஆமா. தெரியும்.''

''ஆஸ்பத்திரில ஒரு பொண் குழந்தை பொறந்து உடனே தாயார்இறந்துட்டாங்க. அ.வங்க குடுப்பாங்க போல இருக்கு''

''பிராமின்ஸ்ங்களா?''

''ஆமாங்க. அப்புடித் தான்.''

''அவங்க சாதாரணமாக் கொடுக்க மாட்டாங்களே.''

''இவங்க குடுப்பாங்க போலத் தெரியுது. குழந்தையை வளர்க்கறதுக்கு வீட்டிலே பொம்பளேங்க யாரும் இல்லே போல. ஒரு வயசான கிழவியைத் தவிர.''

''குழந்தை நல்லா இருக்குதுங்களா?''

''நல்லா கல்கண்டாட்டம் இருக்குதுங்க.''

''எத்தனே பவுண்டு?''

''அது வந்துங்க... எல்லா விவரமும் வார்டுக்கு வந்தீங்கன்னு தெரிஞ்சுக்கலாம். ஸ்டாஃபுத்தான் சொல்லச் சொல்லிச்சு.''

''இப்பவே வரதா?''

''இப்ப வேண்டாங்க. குழந்தை இன்னும் பத்து நாளேக்கு இங்கதான் இருக்கும்போல தெரியுது. அதுக்குள்ள தகப்பனேப் பார்த்துப் பேசி முடிச்சுரலாம் என்ன?''

நமச்சிவாயத்தின் மனேவி கிட்டத்தில் காதை வைத்துக் கொண்டிருந்தாள். ''என்னங்க?''

''அதான் கேட்டுக்கிட்டு இருந்தியே.''

''செரியாக் கேக்கலே. என்னவாம்?''

''ஆஸ்பத்திரியில ஒரு பாப்பாரக் குளந்தை தாயில்லாம அநாதையா இருக்குதாம். குடுத்துருவாங்கன்னு சொல்றுங்க.''

''நம்ம சாதியா இருந்தாப் பரவாயில்லேயே.''

''ஆரம்பத்திலே எல்லாம் ஒரே சாதி தான்.''

''ஆணு, பொண்ணு?''

''பொண்ணு.''

''எடுத்துக்கலாங்க. எனக்குத் தோதா வீட்டு வேலே செய்யும். குங்குமம் இட்டுக்கிட்டுக் கோயிலுக்குக் கூட வரும். நல்லாப் படிக்க வைக்கலாம். பட்டுப் புடவை எல்லாம் வீணுப் போவுது. நகையெல்லாம் பொட்டில தூங்குது. போட்டு அடுக்கி அழகு பார்க்கலாம்.''

''இன்னிக்குத்தான் பொறந்திருக்கு. இருவது வருஷம் தாவாதே. முதல்ல அவங்க குடுக்கறுங்களான்னு கேட்டுப் பார்க்கலாம்.''

''வரப்போ ஒரு பீடிங் பாட்டில் வாங்கிட்டு வந்துரலாம்.''

''அவங்க குடுக்கல்லேன்னு அதை யார் சப்பறது?'' என்றூர் நமசிவாயம். வீட்டில் பழங்காலத்துத் தேக்கு மரப் பீரோக்களில் நிறைய வேஸ்டாக ரூபாய் நோட்டுக்கள் இருந்தன. எந்த அலமாரியைத் திறந்தாலும் பத்து ரூபாய் நோட்டு உதிரும். செட்டுக் கட்டாமல் சின்னச் சின்ன வைரங்களாக ஒரு பிளாஸ்டிக் டப்பா நிறைய ரொப்பியிருந்தார். உபயோக மில்லாமல் நிறைய சோபாக்கள் துணி போட்டு மூடியிருந்தன. ரத்தினக் கம்பளம் அதிகம் மிதிக்கப்படாமல் பரவியிருந்தது.

நமச்சிவாயத்தின் வயசு நாற்பத்தி நாலு. மனேவி அவரை விட தாட்டியாக ஏராளமாக இருந்தாள். முப்பது வயசில் ஒடிசலாக இருந்தாள் என்பதற்குச் சாட்சியாகப் போட்டோப் படங்கள் இருக்கின்றன. அப்புறம்



இத்தனை பணத்தை வைத்துக் கொண்டு அனுபவிக்கத் தெரியாமல் எல்லாவற்றையும்பூட்டிப் பாதுகாத்து, ஒரு டெலிவிஷன் செட்டு வாங்குவதற்கு ஆயிரம் யோசனைகள் பண்ணி சொத்துச் சேர்த்து வைப்பதில் யாருக்கு லாபம் என்று நமச்சிவாயமும் மனைவி பார்வயம்மாளும் யோசித்துப் பார்த்ததில் நமச் சிவாயத்தின் தம்பியும் குடும்பமும்தான் கிட்ட உறவு என்று உணரும்போது, பார்வதி

# எப்போதும் பெண்

தான் ஜடபரதர் மாதிரி சாப்பிட ஆரம்பித்தாள் போலும். இப்போது ஒரு பாட்டியைப் போல மாறிவிட்டாள்!

'இனிமேல் வைத்தியம் பார்த்துக்கிட்டு பிள்ளை பெத்து என்னையே தூக்க முடியலை. ஒரு புள்ளையையும் சுமக்க முடியுமா?'

குழந்தையே பிறக்காமல் இருப்பது பற்றி எப்போதும் இருவரிடையேயும் தீவிரமாக விவாதிக்கப் படவில்லை. நமசிவாயம் கந்தர் அலங்காரம் படிக்கும் வாயால் எப்படி ஃபாலோப்பியன் டியூப்ஸ்பர்ம் என்றெல்லாம் மனைவிக்கு விளக்கிச் சொல்ல முடியும்? அந்தம்மாளுக்கும் தன் கவர்ச்சியில்லாத உருவத்தின் காரணத்தாலோ, என்னவோ இந்த மாதிரி சரீரசம்பந்தமான விஷயங்கள் அனைத்துமே உச்சரிக்கக்கூட லாயக்கில்லாதவையாகி விட்டன. அவள் எப்போதும் வத்தல் போடுவதிலும், கைவேலைகள். தையல், பாத்திக் போன்ற சில்லறைச் சாதனைகளிலுமே கவனமாக இருந்தாள். பிள்ளை பிறக்காததை எப்போதாவது தெய்வ சன்னிதானத்தில் முணுமுணுத்திருக்கிறாளே தவிர இத்தனை வருடமாக ஒரு லேடி டாக்டரிடம் தீவிரமாகக் காட்டியது கிடையாது. மேலும் தயக்கம். யார் மேல் குறை என்று தெரியாதவரைக்கும் தயக்கம்.

அந்த அம்மாளுக்கு ஒரு டைலேஷன் பண்ணி வைத்தால் பட்டென்று 'அடுத்த சந்தர்ப்பத்தில் கர்ப்பமாகிவிடக் கூடிய சின்னச் சமாச்சாரமாகக் கூட இருக்கலாம். காலந் தாழ்த்தி, காலந் தாழ்த்தி இனிமேல் பிள்ளை பெற்றுக் கொள்ள முடியாத நிலைக்கு அம்மாள் ஏராளமாகிவிட்டாள். நமச்சிவாயத்துக்கும் ஏறக்குறைய எல்லாம் மறந்து போய் விட்டது.

அம்மாள்,'அவங்களுக்குப் போகக்கூடாதுங்க. ஊர் பேர் தெரியாத யார் பேருக்கு வேணும் போகட்டும். அவங்களுக்கு மட்டும் போகக் கூடாதுங்க' என்று அடித்துச் சொல்லிவிட்டாள்.

அதற்குக் காரணம், இந்தத் தொடருக்குப் புறம்பான விஷயம். தம்பி சுவீகாரமாகத் தர வந்த பையனையும் மறுத்துவிட்டார்கள். இப்போது குழந்தை எடுத்து வளர்ப்பதற்கு அலைகிறார்கள்.

பனிரெண்டு நாள் கழித்து நமச்சிவாயம் அப்பாவின் வீட்டைத் தேடிப் போனார். உள்ளேயிருந்து அவள் விராட் விராட் என்று கத்திக் கொண்டிருந்தாள். நமச்சிவாயம் கையில் பை நிறையப் பாக்கு வெற்றிலை, பழங்கள் என்று ஏகத் தாராளமாக உள்ளே நுழைந்து, அப்பாவின் பேர் சொல்லி 'வீட்டில இருக்காருங்களா?' என்று கேட்டார். பார்வதி அம்மாள் வெளியே காரில் உட்கார்ந்திருந்தாள்.

''யாரு?'' என்றார் அப்பா.

''யாரு?'' என்றான் சின்னவன்.

''ஸார், என்பேரு நமச்சிவாயம். உங்க மனைவி இறந்து போனதுக்கு ஆழ்ந்த அனுதாபங்கள். இந்த வயதிலே உங்களுக்கு இத்தகைய பெரிய நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. என்னதான் சோதனைன்னு உங்க கடவுள் மேலே விரோதம் கொண்டிருக்கலாம்.

'விடப்பண்ணி வைத்தார் விடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணங்கொண்டார்
இடப்பக்கமே இறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந்தாரே!'

திருமந்திரத்திலே சொல்றாப்பல நாம எல்லாருமே போகப் போறோம்னு வெச்...,

இந்தாங்க சாக்லட்டு பழம் வாப்பா, குழந்தை! வாங்கிக்கிங்க.''

''நீங்க எதுக்கு வந்திருக்கீங்கன்னு சொல்லவே இல்லையே'' அப்பா க்ஷவரம் செய்யாமல் முகமெல்லாம் வெள்ளை முள்ளாக துண்டு பூரா ஒரு வார மூக்கு சிந்தலாக இருந்தார். பாட்டி சமையலறையில் தட்டிக்கொட்டிக் கொண்டு,

''கடன்காரா' கடன்காரா! வெறும் புளியைத் தின்றே! மசக்கையாடா உனக்கு'' என்று அதட்டிக் கொண்டிருக்க,

''இல்லை பாட்டி, உப்புச் சேர்த்துத் தான் சாப்பிட்டேன்'' என்று இரைச்சல் கேட்டுக் கொண்டிருக்க, இரண்டாமவன் அழுகிற குழந்தையை ''நிறுத்தப் போறியா, பூச்சாண்டி கிட்டப் புடிச்சுக் கொடுத்துடட்டுமா'' என்று அதட்டிக் கொண்டிருந்தான்.

''பாவம். புள்ளைங்க தவிக்குது.''

''எதுக்கு இதெல்லாம்?'' என்று அப்பா ஈன ஸ்வரத்தில் கேட்டார்.

''ஆஸ்பத்திரியில சொல்லலிங்களா?''

''ஆஸ்பத்திரில நடந்தது என்ன ஞாபகம் இருக்கு!''

நடை வழியாகத் தெரிந்த அவளைப் பார்த்து, ''இதான் குழந்தைங்களா? நல்லா வளர்த்தியாத்தான் இருக்குது. பாவம். தாயில்லாப் புள்ளை...''

''உங்க பேர் என்ன சொன்னீங்க?''

''நமச்சிவாயம். இந்தக் குழந்தை விஷயமா ஆஸ்பத்திரில அந்தம்மா உங்க கிட்டப் பேசலிங்களா?''

''ஏதோ சொன்னாங்க. நீங்க சொல்லுங்க. என்ன வேணும்?''

நமச்சிவாயம் கனைத்துக் கொண்டு ''எங்களுக்கு இந்தக் குழந்தையைத் தருவீங்களா?''

''எதுக்கு?''

''நாங்க வள்க்கறதுக்கு. நானும் என் சம்சாரமும் குழந்தை இல்லாம இருக்கோம். ஏகாந்திரத்துக்கு இருக்குது சொத்து. வீடு வாசல், நெல் புலன்கள்...''

''பணத்துக்கு விக்கணும்கிறீங்களா?''

''அப்படிப்பேசலை நான். நாங்க எடுத்துக்கிட்டு வளர்க்கிறோம்னு சொல்றோம். பணம் பெரிசில்லை. உங்களுக்குப் பணம் தேவையா இருக்குதோ இல்லையோ வேற விசயம். இதை ஏதோ வியாபாரமா நினைக்காதீங்க. நீங்க இந்தக் குழந்தையை வளர்க்கிறதுக்குக் கஷ்டப்படுவீங்கன்னு சொன்னாங்க. அன்பா ஆசையோட கேக்கறோம். உங்க குடும்பத்தைப் பூராவே கவனிச்சுக்கிறதுக்கு எனக்குப் பண வசதி இருக்குறது வேற விஷயம். பணத்தை வைச்சு ஆசை காட்டறதா நீங்க ஒருபோதும் நினைக்கக் கூடாது. விருப்பத்தோட கேக்கறவங்களுக்கு விருப்பத்தோட குடுக்கணும். இதில கட்டாயம் எதுவும் இல்லே. மனம் விரும்பிக் குடுக்கிறதுன்னா சந்தோஷமா ஏத்துக்கத் தயாரா இருக்கோம்.''


அப்பா ''உட்காருங்க'' என்றார். அடுத்த அறையில் தெரிந்த அவளைப் பார்த்தார். கையையும் காலையும் விலுக் விலுக்கென்று உதைத்துக் கொண்டு இன்னும் அழுது கொண்டிருந்தது. எப்போது எப்படி அதன் அழுகையை நிறுத்துவது என்று இன்னும் பாட்டிக்குக்கூடப் பிடிபடவில்லை. இன்னும் அதற்குப் பெயர் வைக்கவில்லை. ஏதோ ஓரத்தில் குப்பைக் காகிதம் போலத்தான் கிடந்தது. அதன் மேல் பாசம், அன்பு எதையும் காட்டுவதற்குச் சமயமின்றி அம்மாவின் காரியங்கள் ஆக்கிரமித்து விட்டன. அதற்கு யார் என்ன கொடுத்தார்கள் என்று யாரும் கவலைப்படவில்லை. வீச் வீச்சென்று கத்திப் பிராணனை விட்டுடும் போல இருந்தது. அதன்மேல் எந்தப் பச்சாதாபமும் ஏற்படவில்லை. பாட்டி மூதேவி மூதேவி என்று திட்டிக்கொண்டுதான் இருந்தாள். பாட்டிக்கு அதை எடுக்கவே தயக்கமாக இருந்திருக்கிறது. தலை நிற்பதற்கு முன் அதை அணைத்து ஒருசேர எடுத்து ஸ்பரிசத்தின் சூடு தருவதற்கு யாருக்கும் தெரியவில்லை.

மது அவளைக் கிட்டத்திலே கவனித்திருக்கிறான். இந்தப் பத்து நாட்களில் எப்போதும் அவள் அழவில்லை. சில வேளைகளில் முகத்தைச் சுளித்துக் கொண்டாள். சில வேளை சிரித்தாற்போலக்கூட இருந்தது. இதற்கெல்லாம் அர்த்தம் ஏதும் இல்லை.

அவள் தன் நரம்பு இணைப்புக்களைச் சோதித்துப் பார்த்துக் கொண்டிருக்கும்போது தற்செயலாக ஏற்படும் ஜாடைகளே அவை. அவள் இந்தக் குறுகிய காலத்தில் சில ரிப்ளெக்ஸ் சக்திகளையும் பெற்றிருந்தாள். குறிப்பாக வலி அல்லது அசௌகரியம் ஏற்படும் போது, சில வேளைகளில் அவள் உடல் குளிரில் நடுங்கியது. சின்னவன் ஒரு முறை அவளைக் கிள்ளியபோது ஒதுங்கிக் கொண்டாள். ஒரு தடவை பாட்டி தெரியாமல் தலை குப்புற வைத்துவிட்டாள். சட்டென்று தானாகத் திரும்பிக்கொண்டு விட்டாள், மூச்சு விடுவதற்கு. தலையையோ கைகளையோ ஸ்திரமாக வைத்துக் கொள்ளாமல் அசைத்துக் கொண்டே இருந்தாள்.

---

● கடலை எண்ணெயில் பலகாரம் செய்வதற்கு முன், எண்ணெய் நன்றாகப் புகை வரும்வரை சூடேற்றி, பின் தெளியவைத்து இறுத்துவிட வேண்டும். இப்போது இந்த எண்ணெயில் பலகாரம் செய்து பாருங்கள். பலகாரங்களில் கடலை எண்ணெய் வாடையே வீசாது. —ஏ. நூர்ஜஹான்



அவளுக்கு அந்த ஆரம்ப நாட்களிலும் பலம் இல்லை என்று சொல்ல முடியாது. அவள் கையில் ஒரு குச்சியைக் கொடுத்தால் அந்தக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விடுவாள். அதே நிலையில் அவளைத் தூக்கினு லும் முப்பது செகண்டுவரை தொங்குவாள். அவளால் கண்களைக் கொட்ட முடிந்தது. ஆனால் மது ஒரு தடவை அதன் கண்களுக்கு அருகே விரலைக் கொண்டு போனபோது கண்ணை இமைக்கவில்லை. ஏறக்குறைய கண்ணைத் தொட்டதும்தான் கண்ணைக் கொட்டினாள். உடனே அழுதாள். கண் களுக்கு இப்போது தெரிந்தது, வெளிச் சத்தை உணர்வது மட்டும்தான்.

தன்னைச் சுற்றியிருக்கும் பொருட்களையும் மனிதர்களையும் அடையாளம் கண்டு கொள் வதற்கு இன்னும் அறுபது நாட்களாகும் அவளுக்கு. தொடுகை தான் அவளுக்கு இப் போது முக்கியமான உணர்ச்சி. தாயின் தொடுகை அதன் கதகதப்பு அதன் இன் பப் பிரவாகம் எதுவும் இல்லாமல் அவள் உள்ளே ஒருவிதமான பிரிவின் ஏக்கம் ஏற் பட்டிருக்குமா? இது எவ்வளவு தூரம் அவள் பிற்கால வாழ்க்கையைப் பாதிக்கும் என்பதெல்லாம் இப்போது சொல்ல முடிய வில்லை.

''உங்களுக்கும் நல்லது. குழந்தைக்கும் நல் லது. நீங்க எப்பத் திருப்பிக் கேட்டாலும் நான் குடுக்க தயார். இதுக்குன்னு ஆயா போட்டுர்றோம். வெட்நர்ஸ் போட்டுர்றோம். தங்கத்திலே வேணு தொட்டில் போட்டுர் றோம்! குடுங்க!'' என்றார் நமச்சிவாயம்.

அப்பா யோசித்தார். மூன்று மகன்களும் கண்களில் பயத்துடன் அவரையே பார்த் துக்கொண்டிருக்க — அவர்களுக்கு இங்கு நடக்கும் பேரம் தெரியுமா? மதுவுக்குத் தெரிந்திருக்கலாம். இல்லை... மூவருக்கும் தெரியும்போலத்தான் தோன்றுகிறது. மூவ ருக்கும் என்னவோ தப்பாக நிகழ்கிறது என்று உள்ளுணர்வில் தெரிந்திருக்க வேண்டும்.

''சரி, நான் யோசிச்சுச் சொல்றேங்க. வெள்ளிக் கிழமை வாங்க.''


''என்ன பேரு வெச்சிருக்கீங்க?''

''பேரா?'' என்று சிரித்தார் அப்பா.

''சம்சாரம் கார்ல காத்திருக்குதுங்க... கொணுந்து காட்டட்டுமா?''

''சரி.''

நமச்சிவாயம் உற்சாகத்துடன் வெளியே வந்து, ''பாரு! ஒப்புத்துக்குவாங்க போல இருக்கு. வந்து பாக்கிறியா? குழந்தை நல்லா இருக்குது.'' கார் கதவைத் திறந்து மனைவியை வெளியே பிடுங்குவதற்கு ஒத் தாசை செய்தார். பார்வதி அம்மாள் தேர் போல மெல்ல உள்ளே ஆடி ஆடிக்கொண்டு நுழைந்தாள். ''இவங்கதான் என் சம்சார முங்க'' என்றார் நகச்சிவாயம். பார்வதி கைகூப்பி வணங்கும்போது வைரம் மின்னி யது. நெற்றியில் பெரிசாகக் குங்குமம். பட்டுப் புடவையில் ரெட்டைப் பேட்டு.



உடம்பில் பருமன் ஏற முக்கிய காரணம் இரவுச் சாப்பாடுதான். இரவுச் சாப்பாட்டை லேசாக்கிக்கொள்ளுங்கள். அல்லது விலக்கிக் கொள்ளுங்கள். கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருவீர்கள்.

—எஸ். எஸ். மணியம்

---

புதுசாகத்தங்க வளையல்கள். கல் வளையல்கள். பார்வதியின் முகத்தில் அத்தனை பரும னிருந்தும் ஒரு குழந்தைத் தனம் இருந்தது. சிரிக்கும்போது பல் வரிசையாக இருந்தது. ''உள்ள போய்ப் பாரு. ஆல்ல படுக்க விட்டிருக்காங்க.''

பார்வதி அவளை அணுகி உட்கார்ந்து கொண்டு சற்று நேரம் பாயில் படுத்துக் கொண்டிருப்பவளையே கண் கொட்டாமல் பார்த்தாள். புதியவள் மேலே தொங்கும் எலக்ட்ரிக் பல்பில் கவனமாக இருந்தாள். பார்வதி தன் சுண்டு விரலை அவள் வாயருகில் கொண்டு செல்ல அவள் அதைப் பற்றிக் கொண்டு ஜிவ்வென்று உறிஞ்சினாள். ''கொஞ் சம் சர்க்கரை கொண்டுவா தம்பி. பாவம் முலைப் பாலுக்கு ஏங்குதுங்க. வாடி கண்ணு'' என்று அதை அப்படியே எடுத்து அள்ளிக் கொண்டு மார்புடன் ஒட்ட வைத்துக்கொண் டாள். ''தம்பி! இந்தப் பாப்பாவை எங்க வீட்டுக்கு எடுத்துட்டுப் போயிறலாமா?''

சின்னவன், ''பாப்பா என்னது'' என்று வீறிட்டு அழுதான்.

''பயப்படாதே தம்பி! பாப்பா உன்னது தான். பாவம் பசிக்குதில்ல இதுக்கு? நல்ல ஆகாரம் தரணுமில்ல? அதுக்குத்தான் இதைக் கொஞ்ச நாளைக்கிக் கூட்டிட்டுப் போயி...''

''பாட்டி தருவா. பால் போட்டுவா! இத பாரு பாலாடை!''

''குண்டு மாமி!'' என்றான் மது.

''மது!'' என்று அதட்டி அவனை முதுகில் அடித்தார்.

'பரவாயில்லேங்க. சின்னப் புள்ளைங்க தானே? சூதுவாது தெரியாத வயசு. நான் குண்டு மாமியா இருந்துட்டுப் போறேன். ஏங்க சாக்லேட் கொடுத்தீங்களா?''

பட்டை பட்டையாக சாக்லேட் இறைக் கப்பட்டும் மூவரும் தொடவில்லை.

(தொடரும்)



# உருவமில்லாத அரக்கனுடன் போர்!

○ ஸ்ரீனிவாசன்



இந்தியாவில் பிறக்கும் குழந்தைகளில் 40 சதவீதம் ஐந்து வயதை அடையுமுன்பே இறந்து போகின்றன. சத்துக் குறைவு காரணமாக ஒவ்வொரு மாதமும் — ஆமாம்! ஒவ்வொரு மாதமும் — லட்சம் குழந்தைகள் இறக்கின்றன. இது தவிர 25 லட்சம் குழந்தைகள் இதே வைட்டமின் சத்துக் குறைவால் கண் பார்வை இழந்து, தம் வாழ்வில் காணாத ஒளியைக் கண்ணால் காணக்கூட இயலாதவர்களாகின்றனர்.

இது என்ன கொடூரம்! இதை இப்படியே அனுமதித்துப் போவதை விட ஒரு கையாலாகாத்தனமும், அசட்டை செய்வதைவிட வேறு ஒரு கொடுமையும் உண்டா? இந்த மாபெரும் மக்கள்சக்தி விரயத்தை நிவர்த்திக்க, எந்த மட்டத்திலும், யாரும் முயற்சி எடுக்கவில்லையா?

எடுத்ததுண்டு.

அவ்வப்போது வெளிநாட்டு, உள் நாட்டு அமைப்புக்களும் தர்ம ஸ்தாபனங்களும், தங்கள் வசதி, தற்காலிகத் திட்டங்கள், மற்ற நிலவரங்களின் சக்திக்கேற்ப முயற்சிகளை, அவர்களின் கண்ணோட்டத்தில் செய்து கொண்டுதான் வருகின்றனர். ஆனால் கிராமப்புறப் பெண்களின் படிப்பறிவு, புரிந்து கொள்ளும் திறமை, குடும்பத்தில் புதிய எதையும் பின்பற்ற அவர்களுக்கு இல்லாத சுதந்திரம் — எல்லாமே இத்திட்டங்களின் முழுப் பயனைக் காண முடியாமல் போய், அதன் விளைவாக அத்திட்டக் குழுவினர், மேலும் உற்சாகமடையாமல், பாதியில் பின்வாங்க வைத்துவிட்டன.

அப்போது இந்தப் பயங்கர அறியாமை வியாதி, சத்துணவுக் குறைவு போன்ற சீரழிவு அரக்கர்களிடமிருந்து விமோசனம் தான் என்ன?

இதோ ஒரு வலுவான சக்தி! நம்பிக்கையும், தன் குறிக்கோளின் தூய்மையுமே பலமாக, தன் வலுவான கைகளால், அல்லலுறும் இவ்விளம் சிசுக்களைப் பொத்திப் பாதுகாக்க முழுமூச்சோடு புறப்பட்டிருக்கிறது. இதன் ஒரு கையின் அக்ஷயபாத்திரமாக உலக வங்கியும், மற்றைய கையின் உழைப்பாக தமிழ் நாடு சமூகநலத் துறையும் செயலாற்றுகின்றன. இன்னும் பத்தாண்டில், தமிழ்நாட்டில் சிசு மரணம், சத்துக் குறைவால் அங்கஹீனம், பிள்ளைப் பேறில் தாயின் மரணம், போன்ற அவலங்கள் எதுவுமே இல்லாமல் பூண்டோடு ஒழிக்க, தீவிர ஆராய்ச்சியின் விளைவாக முழு செயல்திறன், பொருள் திறன், அவற்றோடு அது பற்றிய முழு அறிவும், தீவிரமும் கொண்டுள்ள ஒரு குழு செயல்பட ஆரம்பிக்கிறது.

இவர்களின் இந்தப் பிரம்மாண்ட திட்டத்தின் செயலாக்க முறை என்ன? அணுகு முறை எப்படி இருக்கும்? குறைபாடுகள் உண்டா? இதில் நம் பங்கு என்ன?

—இதையெல்லாம் அறியும் ஆவலுடன், உலக பாங்க் சத்துணவுத் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு எம். எஸ். ஸ்ரீனிவாசன் அவர்களை திருமதி உஷாதேவி, திருமதி உஷாசங்கர் ஆகியோருடன், நமது பத்திரிகையில் 'உணவும் ஆரோக்கியமும்' பற்றிக் கட்டுரை எழுதும் குமாரி மாயாஒரு கருத்துப் பரிமாற்றத்தின் பொருட்டுச் சந்தித்தார்.

கேள்வி: இதுவரையில் இந்தக் குறிக்கோளுக்காக எத்தனையோ முயற்சிகள் தனித் தனியே நடந்திருக்கின்றன. நடைபெற்றும் வருகின்றன. இவற்றிலிருந்து இப்போது நீங்கள் தொடங்கும் நடவடிக்கை எந்த விதத்தில் வித்தியாசப்படுகிறது?

# எப்போதும் பெண் (கதைச் சுருக்கம்)

அப்பாவுக்கு வயது நாற்பத்தி ஐந்து. அம்மாவுக்கு முப்பத்தி ஏழு. மூன்று குழந்தைகள். சரீரத் தேவையின்றி விலகிக் கொண்ட அவர்கள், ஒரு நாள் கரண்ட் நின்று போனதால் மாடியில் போய்ப் படுத்துக்கொண்டார்கள். பாட்டியும் குழந்தைகளும் கீழே.

நடு ராத்திரியில் ஏதோ ஒரு கூட்ஸ் வண்டி போட்ட சத்தத்தில் விழித்துக் கொண்ட அப்பா, மல்லாக்கப் படுத்து அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த அம்மாவைப் பார்த்தார். அவருக்குள் ஏதோ ஒன்று விழித்துக்கொண்டது.

அம்மாவுக்குப் பாதித் தூக்கம்; பாதி விழிப்பு. தனக்கு நிகழ்ந்ததில் பாதிதான் தெரியும். மீதி... அடுத்த மாதம் தெரிந்தது.

அம்மாவின் கர்ப்பம் அடுத்த வாரம் ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

அம்மா முதலில் அழுதாள். அப்புறம் தன் விதிக்குப் பழகிக் கொண்டாள்.

ஏற்கனவே மூன்று பிள்ளைகளைப் பெற்றிருந்ததால் இந்தப் பிரசவத்தில் அதிகம் கஷ்டப்படவில்லை. வெளியே வந்தாள் பெண். இப்போதெல்லாம் தொப்புள் கொடியை உடனே வெட்டிவிடுவதில்லை. அம்மாவிடமிருந்து கடைசி சப்ளை ரத்தத்தை வாங்கிக் கொண்ட பின் வெட்டினார்கள்.

ஆனால் எங்கேயோ தப்பு ஏற்பட்டு ஏகப்பட்ட ரத்தம் உடனே வெளிவர ஆரம்பித்தது.

டாக்டர் மற்றொரு பிரசவம் பார்க்கப் போய்விட்டாள். புதிதாகச் சேர்ந்த அஸிஸ்டெண்ட் 'திஸ் இஸ் நார்மல்' என்று கிளம்பி விட்டாள். அம்மா வேகமாக நிறமிழந்தாள். டாக்டர் வந்து பார்த்தபோது அம்மா இறந்திருந்தாள்.

பாட்டி, ''சண்டாளி! பொறக்கறதுக்கு முன்னாடியே தாய்க்காரியை முழுங்கினியா மூதேவி'' என்றாள்.

நிலைமையைப் பார்த்துவிட்டு, மேட்ரன், இதை பாரன் கப்பிளுக்கு விற்கலாமா என்று யோசித்தாள்.

அந்த பாரன் கப்பிள்—

நமச்சிவாயமும், அவரது மனைவியும். குழந்தைகளே இல்லாதது பற்றி இருவரும் தீவிரமாக விவாதிக்கவில்லை. நமசிவாயம் கந்தர் அலங்காரம் படிக்கும் வாயால் ஃபாலோப்பியன் டியூப்ஸ்பர்ம் என்றெல்லாம் மனைவிக்கு விளக்கிச் சொல்ல முடியுமா? காலந் தாழ்த்தி, காலந் தாழ்த்தி இனிமேல் பிள்ளை பெற்றுக் கொள்ள முடியாத நிலைக்கு அம்மாள் ஏராளமாகி விட்டாள். நமசிவாயத்துக்கும் ஏறக்குறைய எல்லாம் மறந்து விட்டது.

அவள் பிறந்து பனிரெண்டாவது நாள் நமச்சிவாயம் அப்பாவின் வீட்டைத் தேடிப் போனார்.

''நீங்க எப்பக் கேட்டாலும் நான் திருப்பிக் குடுக்கத் தயார். தங்கத்தினால் வேணா தொட்டில் போட்டுர்றேன். குடுங்க!'' என்றார்.

''நான் யோசிச்சுச் சொல்றேங்க. வெள்ளிக் கிழமை வாங்க'' என்றார் அப்பா.

—அடுத்த பக்கம்...

# எப்போதும் பெண்

சுஜாதா




அப்பா திருதிருவென்று விழித்தார். குழந்தையைச் சமாளிப்பது பெரும் பாடாகிக் கொண்டிருக்கையில் இதோ சுலபமாகச் சமாளிப்பதற்கு ஒரு வழி காட்டுகிறார்கள். ஆனால் இது குழந்தையை விற்பது போல் ஆகாதா? எல்லாரும் என்னைத் திட்ட மாட்டார்களா ஜனங்கள் என்ன நினைப்பார்கள்? குழந்தையை விற்பதாவது!

''நீங்க மனசில என்ன நினைப்பீங்கன்னு எனக்கு நல்லாத் தெரியுதுங்க. உங்களுக்கு அநாவசியமாப் பிரச்னைகளைக் கொடுக்க விரும்பலேங்க. அவசரப்படுத்தறதாவும் நினைக்காதீங்க. உடனே நீங்க முடிவெடுக்க வேண்டாம். எங்ககிட்டக் குளந்தையைக் கொடுக்கிறதால நீங்க திரும்பி அதைப் பார்க்கவே முடியாதுன்னும் நினைச்சுக்காதீங்க. நாங்க இந்த ஊர்தான். குழந்தை இந்த ஊரை விட்டு எங்கேயும் போயிடப் போறதில்லே. எப்ப வேணு வந்து பார்த்துக்கலாம். வாரம் ஒரு முறை நீங்க திரும்பக் கொண்டு வந்து வெச்சுக்கலாம். நாங்களும் சைவம்தான். வீட்டில எல்லாமேகுறையில்லாம நடக்குங்க''

அப்பா தம் குழந்தைகள் மூவரையும் பார்த்தார். மூன்றும் கிலி பிடித்தது போல அப்பாவையே பார்த்துக் கொண்டிருக்க ''வேண்டாம்ப்பா. பாப்பா நம்மாத்திலயே இருந்துட்டுப் போகட்டும்'' என்றான் சன்னமான குரலில்.

சின்னவன் மறுபடி 'பாப்பா என்னுது' என்றான். குண்டு மாமியிடம் அதைப் போய்ப் பிடுங்கப் பார்த்தான். பாப்பா வீறிட்டது.

அப்பா அவன் முதுகில் மொத்தினார். இப்போது சின்னவனும் சேர்ந்து அழுதான். நமச்சிவாயம் ''குழந்தையைக் கொடுத்துரு'' என்றார். அம்மாள் சற்று மனதில்லாமல் அதைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே காற்றில் முத்தம் கொடுத்துக் கொண்டே,

''வாங்கிக்கங்க பெரியம்மா'' என்று அதைக் குப்பலாகப் பாட்டியிடம் கொடுத்தாள்.

''அப்ப நாங்க வரட்டுமா?''

''போயிட்டு வாங்க.''

''எங்களுககு எப்ப முடிவு சொல்றீங்க?''

அப்பா சற்று நேரம் மௌனத்துக்குப் பிறகு, ''அடுத்த வாரம் சொல்றேன்'' என்றார்.

''வெள்ளிக் கிழமை வரலாங்களா?''

''வரவேண்டாம். நானே சொல்லி அனுப்பிடறேன். இல்லே, நானே வரேன்.''

''எப்படிச் சௌகரியமோ செய்யுங்க' என்றார் நமச்சிவாயம்சற்று ஏமாற்றத்துடன்.

இதுவரை அவர் ஒரு வீட்டு வாசல் ஏறி காத்திருந்ததில்லே. அம்மாள் குழந்தையை பார்த்துக் கொண்டிருந்தாள். வாசலில் கார் புறப்படும் சத்தம் கேட்கும் வரை ஒருவரும் ஒன்றும் பேசவில்லை.

''போங்கடா. எல்லாரும் போய்ப் படுங்கோ.''

(இந்தத் தொடரை இந்த இடத்தில் சற்று நிறுத்தி சென்ற இதழ்களிலும் கதைச் சுருக்கங்களிலும் ஏற்பட்டுவிட்ட அச்சுப் பிழையைச் சுட்டிக் காட்டாவிட்டால் எனக்கு தூக்கம் வராது. 'பாரன் கப்பிள்' என் பதை 'ஃபாரின் கப்பிள்' என்று பலமுறை தப்பாக அடித்து விட்டார்கள். நமசிவாயம் பார்வதி தம்பதியர் நிச்சயம் 'ஃபாரின்' இல்லே. பாரன் (Barren) குழந்தை இல்லாத ஜோடி., அவ்வளவுதான்.)

மூன்று பிள்ளைகளும் கூடத்தில் போய்ப் படுத்தபோது பாப்பா வீட்டை விட்டுப் போகவில்லை என்பதில் சந்தோஷம். பாட்டியிடம் தனியாகக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்று மது தீர்மானித்தான். பாட்டியும் அப்பாவும் பேசிக் கொள்வதைக் கேட்க வேண்டும் போல இருந்தது. அப்பா பார்த்தால் செம்மையாக உதைப்பார். அடுத்த அறைக்குப் போய் ஜமக்காளத்தில் படுத்துக் கொண்டு அம்மா அம்மா என்று சொல்லி அழுது பார்த்தான், லேசாக.

பாட்டி, ''எனக்கு ஒண்ணுமே புரியலே'' என்றாள்.

''விஷயம் ரொம்ப சிம்பிள் பாட்டி. இந்தக் குழந்தையை அவா வெச்சுக்கிறேன்கறா''

''பிராம்மணாளா?''

''இல்லே.முதலியார் போலத்தோணறது.''

''வேண்டாம். குடுக்காதே. நான் பார்த்துக்கறேன். என்னலே முடியாட்டாலும் எப்படியோ திராணி இருக்கிற வரைக்கும் சமாளிச்சுடறேண்டாப்பா. நான் கண்ணை மூடினதுக்கப்புறம் மத்தவா கிட்ட கொடுக்கிறதோ என்னமோ செய். ஏண்டாப்பா, இதைவிடச் சுலபமா ஒரு வழி இருக்கே, அது ஏன் உனக்குத் தோண மாட்டேங்கறது?''

''என்ன பாட்டி?''

''இன்னொரு கல்யாணத்தைப் பண்ணிண்டுடு அக்கடான்னு.''

''சரிதான்! பாட்டி போகாத ஊருக்கு வழியைச் சொல்லாதீங்கோ.''

''அதெல்லாம் இல்லே. நம்ம சங்கரன் கிட்டச் சொன்னா ஊர்ப்பட்ட ஜாதகம் கொண்டு வந்து காட்டுவான்.''

''பாட்டி! அதெப் பத்தி எல்லாம் பேசறது இப்ப நாகரிகம் இல்லே. ஒரு வருஷத்துக்கு இந்தச் சனியனே எடுத்து வளத்தாகணுமே. உங்களாலே முடியுமா? இப்பவே தேச்சுத் தேச்சுண்டு முன்னூறு தடவை மூச்சுப் பிடிக்கிறது உங்களுக்கு. சமாளிக்க முடியுமா? அதான் கேள்வி. இப்ப.''

''சமாளிப்பேன்னுதாம்ப்பா தோணறது. இந்தக் குட்டிப் பிசாசு மூணையும் வேணக் கொடுத்துடு. எட்டூருக்கு நான் குழந்தையைப் பார்த்துப்பேன். இது என்ன சிரமம் கொடுக்கும்? ஏண்டி செல்லம்? ஏண்டி செல்லம்? இட்டேச்சு இட்டேச்சு! அத பார்ருடா சிரிக்கிறது. மூளைச்சு மூணு இலே விடலே...''

''சிரிக்கவும் இல்லே ஒண்ணும் இல்லே... பாட்டி எதையோ பார்த்துட்டுச் சொல்லாதீங்கோ. இட்டேச்சு இட்டேச்சு சொன்னா வளத்துர முடியுமா? இதை யோசிச்சுப் பார்க்கணும். நானும் என் ஃப்ரண்ட்ஸ் ஒண்ணு ரெண்டு பேரைக் கேட்டுப் பார்க்கறேன். வக்கீல் நடராஜய்யரையும் கேட்டுப் பார்த்துடறேன். எனக்கு ஒண்ணுமே புடிபடலே பாட்டி.''


''எல்லாம் நாளைக்குக் காத்தாலே பார்த்துக்கலாம் வா. வந்து தூங்கு. ஏண்டா, அந்தப் பொம்மனாட்டி போட்டிருந்தாளே அத்தனையும் வைரமாவா இருக்கும்?''

''அய்யோ அதெல்லாம் யார் பார்த்தா... பாட்டி போய்த் தூங்கறேன். நடு ராத்திரியில இந்தச் சனியன் விராட்டு விராட்டுன்னு கத்தும். தெருப் பூரா எழுப்பிடும்.''

அப்பா சாப்பிட்டு விட்டு மொட்டை மாடிக்குப் போய் காற்றையும் நிம்மதியையும் தேடி படுத்துக் கொண்டார். அடுத்த பேட்டையில் ஆரம்பிக்கப்பட்ட நிர். 15 சாராயக் கடையில் சீர்காழி கோவிந்தராஜன் பிளேட்டு வைத்துக் கொண்டிருந்தார்கள். அலுப்பு இருந்தும் தூக்கம் வரவில்லை. அம்மாவும் தானும் இங்கு வந்துசிலநாட்கள் பக்கத்தில் பக்கத்தில் படுத்துக் கொண்டிருந்தது நினைவுக்கு வந்து உறுத்தியது.

---

புளியை நீண்ட நாட்களுக்கு வைத்துக் கொள்ள வேண்டுமானல் புளியை பானையில் அடைக்கும்போது அடியில் புளியைப்போட்டு அதன் மேல் கொஞ்சம் உப்பைத் தூவ வேண்டும். இப்படிச் செய்தால் புளி கெடாமல் இருப்பதோடு, காய்ந்து போகாமலும் இருக்கும்.
—நூருன்னிஸா



'ஏண்டி விட்டுட்டுப் போயிட்டே' என்று நட்சத்திரங்களைப் பார்த்துக் கேட்டார். விழி யோரத்துக் கண்ணீர் தலையணை வரை உருண்டது. கனவில் அம்மா உயிரோடு வந்தாள். என்ன என்னவோ சம்பந்தமில் லாமல் எலெக்ட்ரிக் ட்ரெயினைப் பற்றி எல்லாம் பேசினாள்.

அது விடாமல் அழுது கொண்டிருந்தது. கவலையாக இருந்தது. 'என்னது, செத்துக் கித்து வைக்கப் போகிறதா' என்று எண்ணி அந்த எண்ணத்தை உடனே விரட்டினார். கீழே போனார். விளக்குப் போட்டார். பிள்ளைகள் ஆளுக்கொரு திசையாகப் படுத்து கொண்டிருந்தார்கள். சின்னவன் அம்மா வின் புடவையைச் சுருட்டிவைத்துக்கொண்டு விரல் போட்டுக்கொண்டிருந்தான். குழந்தை நிலைகொள்ளாமல் அழுது கொண்டிருந்தது. 'தாகமோ என்னமோ வென்னீர் போடட் டுமா'' என்றாள் பாட்டி. அப்பா அதை எடுத்துக் கொண்டார். தக்கையாக இருந் தது. தோளில் போட்டுக் கொண்டு ஆட்டி னார். ஓ...ஓ.. என்றார். நெடுக நடந்து பார்த்தார். காதருகே இன்னும் சின்னச் சின்ன வீறல்களாக அலறியது. 'கொண் டாடா' என்றாள் பாட்டி. கொடுக்கவில்லை.

அதை எடுத்துக் கொண்டு நடைக்கு வந் தார். அழுகை நிற்கவில்லை. ''மூதேவி, இப்ப நிறுத்தப்போறியா இல்லையா.''

''பால் வேணும் போட்டிப் பாருங்களேன்''

''இப்பத்தானே போட்டினேன்.'' போட் டியதையெல்லாம் பனியன் மேல் கக்கியது. ஒரு கணம் அப்பாவுக்கு அதை அப்படியே அழுத்திக் கசக்க வேண்டும் போல் ஆத்திரம் வந்தது. தூக்கி எறிந்துவிட வேண்டும் போலவும் இருந்தது. சற்று நேரம் தன்னில் இருந்து சற்றுத் தூரத்தில் பிடித்துக்கொண்டு அதையே பார்த்தார். கண்களை இறுக்கிக் கொண்டு அழுதுகொண்டுதான் இருந்தது. கை சற்றே இறுகியது. குழந்தை இரும ஆரம்பித்தது.

''கொண்டாடா, கொண்டாடா'' என்று பாட்டி அருகே வந்து பிடுங்கிக் கொண்டாள்.

''ஏண்டிம்மா, ஏண்டிம்மா என்ன பண்றது உனக்கு?'' என்றுசொல்லிக்கொண்டே உள்ளே எடுத்துச் சென்றாள். ''அப்பா அடிச்சாளா? மது அடிச்சானா?''

அப்பா அப்படியே பிரமை பிடித்தாற் போல் நின்று கொண்டிருந்தார். தீர்மா னித்துவிட்டார்! வெள்ளிக்கிழமை நமச்சி வாயம் மறுபடி காரைப்போட்டுக்கொண்டு வந்தார்.

மூத்தது இரண்டும் பள்ளிக்கூடம் போயிருக்க, பாட்டி புறக்கடையில் பாத் திரம் தேய்த்து அலம்பிக் கொண்டிருக்க அப்பா ஆபீசுக்குப் போகாமல் இன்னும் லீவில் இருந்தார்.

நமச்சிவாயம் செருப்பை உதறிவிட்டு வருவதைச் சலனமின்றிப் பார்த்தார்.

''நமஸ்காரங்க.''



எதிர்கால அரசி!

இளவரசி டயானா படித்தது ஸ்விட்ஸர் லாந்தில் உள்ள விட் மானெட்டில். அவரது ரிக்கார்டு பள்ளியில் சிறப்பானது. அவள் விளையாட்டுக் கலையில் ஈடுபாடு மிக்கவர். பனிச்சறுக்கலில் கெட்டிக்காரி.

சூப்பர் மார்க்கெட்டில் ஷாப்பிங் செய் வதிலும், டீ. வி. பார்ப்பதிலும் இவருக்கு விருப்பம் உண்டு. பியானோ வாசிப் பதிலும் சாஸ்திரீய சங்கீதத்திலும் அதிக நேரம் செலவழிப்பார்.

1980ம் வருஷம் பால் மோரலுக்குத் தன் சகோதரி ஜேனுக்கு உதவச் சென்றார். அவரது சகோதரி கணவர் ராபர்ட் பெல் லோஸ் ராணியின் உதவிக் காரியதரிசி. இதுவே டயானாவின் வாழ்க்கையில் பெரும் திருப்பம். அரச குடும்பத்தினரோடு பழக்கம் ஏற்பட்டு சார்லஸையும் சந்திக்கும் வேளை கிடைத்தது. சார்லஸும் டயானாவும் அடிக்கடி சந்தித்துக் காதல் பரிமாறிக்கொண் டனர். 1981ம் வருஷம் பிப்ரவரியில் அவர் களது திருமண அறிவிப்பு வெளிவந்தது.

இளவரசர் சார்லஸுக்குக் குதிரை ஏறிச் சவாரி செய்வதில் ஆசை. ஆனால் மிஸ் டயானாவுக்கோ குதிரை ஏற்றமென்றால் அலர்ஜி. ஒன்பது வயதில் மிஸ் டயானா கையை உடைத்துக் கொண்டார். ஒரு நரம்பை இழந்தார். இருந்தாலும் சார்ல ஸுக்குள்ள பிரியத்தினால் குதிரை யேற் றத்தில் கவனம் செலுத்துவார். ஆனால் கொஞ்சமாக, சிறிதளவே!

''ம்.''

''எங்க குழந்தைங்கள்ளாம்...? வந்து... ஏதாவது தீர்மானிச்சீங்களான்னு கேட்டுட் டுப் போகலாம்னு வந்தேன். அவசரப் படுத்தறதா நெனைச்சுக்காதீங்க.''

''அதெல்லாம் இல்லை.''

''ஏதாவது முடிவு பண்ணீங்களா?''

''பண்ணிட்டேன். சாயங்காலம் வந்து குழந்தையை எடுத்துட்டுப் போயிருங்க.''

நமச்சிவாயம் உடனே முகம் மலர்ந்து, ''அப்படியா, ரொம்பச் சந்தோஷமுங்க.''

''இருங்க — சொச்சத்தையும் கேட்டுருங்க. குழந்தையை நான் எப்ப வேணா வந்து பார்ப்

பேன். அதுக்கு உங்க வீட்டில அனுமதி வேணும். அப்புறம் குழந்தை என்னுது. எப்ப திருப்பிக் கேட்டாலும் கொடுத்து ரணும். ஒரு மாசமோ ஒரு வருஷமோ என்ன வேணாலும்....''

''அதுக்கென்னங்க, தாராளமா செஞ்சுட்டாப் போவுது.''

''என்னாலயும், பாட்டியாலயும் சமாளிக்க முடியலே. கொஞ்சம் பெரிசாயிட்டுதுன்னாச் சமாளிச்சுடலாம். அதுவரைக்கும்தான் உங்களை வளக்க அனுமதிக்கிறேன்.''

''சரிங்க. நீங்க எத்தனை நாள் சொல்றீங்களோ அத்தனை நா வெச்சு வளக்கறோம், கவலையே படாதீங்க. எப்ப வேணுமோ திருப்பிக் கொடுத்துறோம்.''

''எங்க வக்கீல் நண்பர் ஒருத்தரைக் கூட்டிண்டு வரப்போறேன். ஒரு காகிதத்தில நீங்க கையெழுத்துப் போட்டுக் கொடுக்கணும்.''

**யோசனை**

புது அரிசியை எப்படி ஜாக்கிரதையாக வடித்தாலும் குழைந்து விடும். சாதம் கொதிக்கும்போது ஒரு கரண்டி எண்ணெயை ஊற்றிக் கிளறினால் அரிசி பருக்கை ஒன்றோடு ஒன்று ஒட்டாமல் இருக்கும்.

வி. ராஜேஸ்வரி



''செய்துட்டாப் போவுது. பாருங்க, நீங்களும் நாங்களும் ஒரே சாதியிலயோ குடும்பத்திலேயோ பொறக்கலேன்னாலும், இன்னையிலேருந்து இந்த பாப்பாவினாலே ஒரே குடும்பமா ஆயிட்டதா வெச்சுக்கங்க. குழந்தை எங்களுதுங்கற பேச்சே இல்லே. அது உங்களுதுதான். எடுத்து வளக்கறம் அவ்வளவுதான். இப்ப எங்களால ஆன முயற்சி பண்ணிப் பார்க்கப் போறோம். எங்களாலயும் முடியலே, பேசாம உங்க கிட்டத்தான் திருப்பித் தந்துறப் போறோம், இல்லிங்களா? அய்யா இதை ஏதோ ஒரு வியாபாரமாவோ, விருப்ப மில்லாமலோ நாங்க செய்ய விரும்பலே. ஆசையினாலதான் செய்யறோம். அதுக்கு அதிர்ஷ்டங்க. ராசாத்தி மாதிரி வளக்கப் போறோம். புள்ளைங்களோ நீங்களோ என்னேரத்திலயும் வரலாம். எங்க வீடு உங்க வீடு மாதிரி. குழந்தைங்க சத்தம் கேட்டா அதை ஏதோ ஒரு பாக்கியமாத்தான் நாங்க கொண்டாடப் போறம். சாயங்காலம் எங்க வீட்டாண்டை வந்து பாருங்க. எவ்வளவு கோலாகலமா இருக்கப் போவுதுன்னு. எல்லாரும் வாங்க.''

''பசங்க இப்ப வேண்டாம் நமச்சிவாயம். அவங்க கிட்ட தற்காலிகமா ஏதாவது பொய் சொல்லித்தான் ஆகணும். நான் மட்டும் வரேன். மத்தியானமே வந்து எடுத்துட்டுப் போயிடுங்க. அவங்க ஸ்கூல்ல இருந்து வரதுக்குள்ள.''

''நான் எப்பவும் ரெடி. உடனே போய் சம்சாரத்துக்கிட்டச் சொல்லிட்டு வரேன். ரொம்ப வந்தனம் அய்யா. எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலே. மறுபடி சொல்றேன். இது வியாபாரமில்லே. வியாபாரம்கிற பேச்சே இல்லே. எங்கிட்ட நிறையப் பணம் இருக்கிறதென்னவோ நிஜம்தான். நீங்க பணம் எப்பக் கேட்டாலும் குடுக்கத் தயங்க மாட்டேன். ஆனா என்னைத் தப்பா நினைச்சுக்கக் கூடாது. பணத்துக்கு அப்பாற்பட்ட ஏற்பாடு இது. இந்தக் குழந்தைக்காக நான் பணம் தர முன்வரதா நீங்க நினைக்கவே கூடாது. குழந்தையோ இல்லையோ அது வேற பேச்சு!''

''எனக்குப் பணம் வேண்டாம். குழந்தையை நான் விக்கலேயே நமச்சிவாயம். இப்ப இருக்கிற நிலையில, பாட்டிக்கு இருக்கிற தள்ளாமையில, எங்களால இதை வளக்க முடியாது. வளக்கத் தெரியலே. அதனால உங்க கிட்டக் கொடுக்கறோம்.''

''புரியுதுங்க. நல்லாப் புரியுது.''

''கேக்கறப்பத் திருப்பிக் கொடுத்துடணும்.''

''நிச்சயம். அப்ப நான் வர்லாங்களா?''

''வாங்க.''

நமச்சிவாயம் காரில் ஏறிக்கொண்டு சென்றவர் ஒரு மெடிகல் ஷாப்பில் நிறுத்தி தம் மனைவிக்கு டெலிபோன் செய்தார்.

''பார்வதி! ஒத்துக்கிட்டாரு.''

''அட!''

''சாயங்காலம், ஏன் மத்தியானமே வந்து குழந்தையை எடுத்துக்கிட்டுப் போன்னு சொல்லிட்டாரு. நான் பாங்குக்குப் போய் காஷ் ஒரு ஐயாயிரம் எடுத்தாறேன். ஐயாயிரம் போதுமில்லே? கடைக்குப் போயி அதுக்கு வேண்டிய துணி மணி விளையாட்டுச் சாமான்க, பால் பவுடர் டின்னு மாத்திரை சொட்டு அது இதுன்னு நிறைய வாங்க வேண்டியிருக்கும். தயாரா இருக்கியா?''

''இருக்கங்க. இப்பவே தயாரா இருக்கேன்.''

''வந்துர்றேன்.''

தன்னைச் சுற்றி நிகழ்வது ஒன்றுமே அறியாமல் அப்போது அவள் உறங்கிக்கொண்டிருந்தாள்.

வெள்ளிக் கிழமை ராகு காலம் எமகண்டமில்லாமல் பார்த்து மத்தியானம் இரண்டு மணிக்கு நமச்சிவாயம் அவளைத் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்ல வந்தார்.

(தொடரும்)

# சாப்பாட்டு மேஜை விரிப்பு

நிர்மலா தேசிகன்

## தேவையான பொருட்கள்:

மதுரை கோட்ஸ் முறுக்கு நூல்
பச்சை (Moss) 7 சிட்டம் 0267
மயில் நீலம் (Placock Blue) 5 சிட்டம் 0169
மயில் நிறம் (Peacock) 3 சிட்டம் 0168
ரோஸ் (Pink) 1 சிட்டம் 052
சைகிளாமன் (Cyclamen) 089
பட்டர் கப் (Butter cup) 0297

விரிப்பு முழுவதும் நான்கு இழைகளாக உபயோகப்படுத்தவும்.

வெள்ளை லினன் ஒரே சமமாக நெய்யப் பட்டது (45.7 சி.எம்.) (149.57) அகலம்


ஒரு டேபஸ்பரி ஊசி (Tapestry needle)

துணியை மூன்று துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். (45.7 — 35.5 சி.எம்.) எல்லாத் துண்டுகளையும் நடுப் பாகத்தை இரண்டு பக்கமாகவும் ஒட்டுத் தையலால் குறிக்கவும். வேலைப்பாடு முழுவதையும் குறுக்குத் தையலால் செய்யவும். மேல் தையல்கள் யாவும் ஒரே திசையில் இருக்க வேண்டும்.

வேலைப்பாட்டின் கீழ் இடது கால் பாகம் வரை படமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நடுப்பாகம் காலியான அம்புக் குறிகளால் குறிக்கப்பட்டிருக்கிறது. இது ஒட்டுத் தையலுடன் இணைந்து இருக்க வேண்டும். வரை படத்தில் உள்ள ஒவ்வொரு சதுரமும் துணியில் உள்ள இரண்டு நூல்களைக் குறிக்கும். ஒரு நீளப் பக்கம் நம்மைப் பார்த்து வைத்துக் கொண்டு ஒட்டுத் தையலின் இடது பக்கத்தில் உள்ள 58 நூல்களுக்குப் பிறகு 2 நூல்கள் கீழே அம்புக் குறியிலிருந்து எம்பிராய்டரியை ஆரம்பிக்கவும். இதே மாதிரி ஒரு கால் பாகத்தைச் செய்யவும். மீதமுள்ள முக்கால் பாகத்தையும் அதே மாதிரி செய்யவும். துணியை மறுபக்கம் திருப்பி இஸ்திரி செய்யவும். திருப்பி (1.3 சி. எம்.) ஹெம் செய்து, எம்பிராய்டரியிலிருந்து 8வது தையலில் எல்லா பக்கத்திலும் நழுவுத் தையலால் முடிக்கவும்.

## வேறு விதமான நூல்கள்

மதுரை கோட்ஸ் பேர்ப் காட்டன் நெ. 8 10 கிராம் பந்து
மஜந்தா 1 பந்து 052 மற்றும்
சைகிளாமன் மயில் 0168,
மயில் நீலம் 0169,
பச்சை (Moss) 0267
பட்டர்கப் 0297 எல்லாம் ஒரு பந்துவீதம்.



# எப்போதும் பெண் 8

**கா**ர்த்திகை மாதம் பாட்டி செத்துப்போனாள். ஞாயிற்றுக் கிழமை எப்போதும் பாட்டி மத்தியானம் தூங்குவாள். தலைக்கு உசரக் கட்டையை அல்லது ஆயில் கிளாத் தலையணையை வைத்துக் கொண்டு ஹாலுக்கும் பின்புறக்கடைக்கும் இடை கழியில் சற்று காற்றோட்டமாக இருக்கும் என்று படுத்துத் தூங்கிப் போவாள். அப்பா வீட்டில் இருப்பதால் பையன்கள் விஷமம் செய்யாமல் அங்கங்கே மண்ணை அல்லது காரையை நோண்டிக் கொண்டு ஈர்க்குச்சியில் அடித்துக் கொண்டு பொழுதைப் போக்குவார்கள். அப்பா எப்படா மார்க்கெட்டுக்குப் போகப் போகிறார் என்று காத்திருப்பார்கள். மத்தியான வேளையில் பாட்டியின் குறட்டை ஒலி மட்டும் வீட்டில் கேட்கும். அன்று கேட்கவில்லை. பாட்டி சாதாரணமாக இரண்டு மணிக்கே எழுந்து விடுவாள். அப்பா லைப்ரரிக்குப் போய் பவான் ஜர்னல் படிக்கலாம் என்று புறப்பட்டபோது பாட்டி இன்னும் தூங்கிக் கொண்டிருப்பதைக் கவனித்து, 'பாட்டி என்ன உடம்பு சரியில்லையா? நான் வேணா காப்பி போட்டுமா?' என்று கேட்டதற்குப்பதில் கிடைக்காமல் போகவே அசதி போலிருக்கிறது ஓட்டலில் காப்பி சாப்பிட்டுக் கொள்ளலாம் என்று ஏறக்குறையப் புறப்பட இருந்தவர் பாட்டியின்குறட்டைஒலிகேட்காதது விநோதமாகப் பட திரும்பி வந்து படுத்திருப்பதைக் கவனித்தார். அந்தப் பக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டிருந்தாள். 'பாட்டி! பாட் பாட்டி!' என்று இரண்டு முறை கூப்பிட்டுப் பார்த்தார். பதில் கிடைக்காமல், மதுவைக் கூப்பிட்டுப் பாட்டியை எழுப்புடா என்றார். மது பாட்டியை விலாவில் இரண்டு கைகளாலும் பிடித்து அசைத்தான். சுருட்டி வைக்கப்பட்ட படுக்கை போல அசைந்தாள். அப்பா குனிந்து உட்கார்ந்து கொண்டு பார்த்தார். ''கண்ணைத் திறந்துண்டு தூங்கறாப்பா'' அப்பா கிட்டத்தில் பார்த்து ''மது நீ போய்ப் பக்கத்தாத்து ராமமூர்த்தி மாமாவைக் கூப்பிடு'' என்றார்.

''காதுல நூல் சுருட்டினா எழுந்திருவாப்பா''

''போடா ராஸ்கல்! ராமமூர்த்தியைக் கூட்டுண்டு வாடான்னா!''

மது பயந்து ஓடினான்.

பாட்டி ஒரு மணி நேரத்துக்கு முன்னாலேயே இறந்திருந்தாள். மத்தியானத் தூக்கத்தின் மத்தியில் அவளுக்கு நினைவா கனவா என்று சரியாகச் சொல்ல முடியாத வேளையில் கார்டியாக் அரஸ்ட் வந்திருக்கிறது. ஒரு கணம் அல்லது ஒரு யுகம் அவள் தன் ஏறக குறைய எழுபது ஆண்டுகளையும் வாழ்ந்தாள். தாத்தா, பெரியண்ணா, நாத்தனார்கள், குல்லாய் வைத்த மச்சினர் எல்லோருடனும் ஒரு நாள் போட்டோ பிடித்

**சுஜாதா**



துக்கொண்டதும், போத்தனூருக்கு ரெயிலில் போனதும், தாத்தா வேஷ்டியை படேர் படேர் என்று அடித்துதுவைத்ததும், குதிரை வண்டி ஒரு முறை குடை சாய்ந்ததும், மணலில் நாலு வாசல் வைத்து கோபுரம் கட்டியதும், எச்சுமி காவேரியில் போய்விட வண்டியில் கொண்டு வந்ததும், ரோட்டோரத்தில் பூப்பறித்ததும், பாபட்லாவில் தெலுங்கு பேசினதும், முத்துக்குமாரசாமி மடியில் பெல்டு பர்ஸுக்குள் வைரத்தைப் பொட்டலமாக வைத்திருந்ததும், எக்ஸிபிஷனில் சற்று நேரம் தொலைந்து போனதும் கமாஸ் ராகத்தில் மெல்ல வீணை வாசித்ததும், பிள்ளை செத்துப் போனதும், தீபாவளி வெடி கூடத்தில் வெடித்ததும் அடுக்கடுக்காக, ஞாபகமா அல்லது ஞாபகப் பிசகா என்று

✤✤✤✤✤✤✤✤✤✤-✤✤✤✤✤✤✤✤

நெய் அப்பம் செய்யும்போது ஒரு ஆழாக்கும் பச்சரிசியுடன் ஒரு டிஸ்பூன் உளுத்தம் பருப்பையும் சேர்த்து ஊறவைத்து அரைக்கவும். அப்பம் ரொம்ப மிருதுவாக வரும். அப்பக்காரலை உப்புப் போட்டுத் தேய்த்து அடுப்பில் ஏற்றி குழிகளைச் சிறிது நல்ல எண்ணெய் விட்டுத் துடைத்து பின் நெய் விடவும். இப்போது அப்பம் சுலபாக எடுக்க வரும்.



✤✤✤✤✤✤✤✤✤✤-✤✤✤✤✤✤✤✤

சொல்ல முடியாமல் அவளுக்குள் வரிசையாக உலவ எல்லா விளக்குகளையும் அணைத்து விட்டது போலவும் எலும்பெல்லாம் ரப்பர் போலவும், அல்லது வெறுமைக்குள் ஒரு ஒன்றுமில்லாத் தன்மைக்குள் கரைவது போலவும் உணர்ந்தாள். மது விஷமம் செய்வதும், ரோடில் ஈயம் பூசுபவனின் சப்தம் கூடக் கேட்டாற் போல் இருந்தது. அதன் பின் மூச்சுத் திணறலிலிருந்து விலகி எங்கோ சாஸ்வதத்தைப் பார்த்து மிதந்தாள். அதற்கப்புறம் அவள் இல்லை!

''பாட்டி! பாட்டி! என்ன பண்றது? என்ன பண்றது?'' என்று அப்பா கேட்டுக் கொண்டு நாடி பிடித்துப் பார்த்தார். ராமமூர்த்தி மெல்லத்தான் வந்தார். ''என்னய்யா'' என்றார்.

''இத பாருங்க... பாட்டி போய்ட்டாள்னு நினைக்கிறேன்.''

அவர் அருகில் குனிந்து பார்க்க, மது வாசற்பக்கம் வைத்திருந்த ஈர்க்குச்சியில் வில்லைப் பொறுக்கிக் கொள்ள ஓடினான்.

நமச்சிவாயம், தன் மனைவியைப் பார்த்து ''பாட்டி போயிட்டாங்களாம் பார்வதி'' என்றார்.

''அடடா!''

''நான் வேணாப் போயி விசாரிச்சுட்டு வந்துரட்டுமா?''

''எல்லாம் பத்து நா களிச்சுப் போய்க்கலாம். இப்ப என்ன அவசரம்?''

''எதுக்கும் ஒரு நடை போய் விசாரிச்சுட்டு வந்துர்றேன். நல்லா இருக்காது.''

''போயிட்டு அரை மணிலே வந்துருங்க. செக்கப்புக்குப் போவணும். பொண்ணு ராத்திரி இருமுது டண் டண்ணுனு. இரும்பால அடிச்ச மாதிரி சத்தம் கேக்குது.. போய்ட்டு அந்தப் புள்ளைகளை எதையாவது கூட்டுட்டு வந்துடாதீங்க. போன முறை வந்தபோதே கக்குவான் இருமல் அதுங்களுக்கு.''

''ஆனா அங்கே போனாப் பிடிச்சுக்கும் என்னை. தங்கச்சிப் பாப்பா எப்படி இருக்குன்னு.''

''தங்கச்சியுமில்லே. பாப்பாவும் இல்லை. அதெல்லாம் பழக்காதீங்க. என்னடி கண்ணு!'' என்று தொட்டிலிலிருந்து அவளை எடுத்துக் கொண்டாள். அவள் நன்றாக, புஷ்டியாக வளர்ந்திருந்தாள். முலைப் பாலிலிருந்து விலக்கியாகி விட்டது. சற்று கெட்டியான ஆகாரம் கொடுக்கத் துவங்கியாயிற்று. அவளுக்குள் இன்னும் அந்தக் குழப்பம் இருந்தது. அம்மா என்பதின் வடிவம் இன்னும் கிடைக்காத குழப்பம். அந்தக் கரிய முகந்தான் அம்மா என்று ஒரு வடிவமைத்து முடிப்பதற்குள் கரிய முகத்தைக் காணோம். வைரம் பளிச்சிடும் எப்போதும் என்னைப் பார்த்துச் சிரிக்கும், விளையாட்டுக் காட்டும் இந்த முகம்தான் அம்மாவோ? பல முறை அவள் மார்பை நாடியிருந்தும் அந்த உஷ்ணமும் போஷாக்கும் கிடைக்காமல் அவள் வாயில் ரப்பர் திணிக்கப்பட்டதில் அவளுக்கு ஆத்திரம் தான் வந்தது. இருந்தும் இந்த முகத்தைத் தவிர இப்போது அவள் அதிகம் வேறு எதையும் பார்ப்பதில்லை.

அவளுக்கு உயர்ந்த துணிகள் அணிவிக்கப் பட்டிருந்தன. தலை வாரப்பட்டு, நெற்றியில் பொட்டிடப்பட்டு, கன்னத்தில் திருஷ்டி இடப்பட்டு, அறை பூராப் பொம்மைகள் வாரி இரைக்கப்பட்டு உருத்தாத படுக்கையில் சிங்காரமாகத் தூங்கிப் போய் வளர்ந்திருந்த கன்னங்கள் எல்லாம் புஸு புஸுவென்று உப்பியிருந்தாள், மார்பிலும் வயிற்

றிலும் வளையம் வளையமாகச் சதைகள். உட்கார்த்தி வைத்தால் தன் கனத்திலேயே அமுங்கி விடுவாள் போலத் தோன்றினாள். அவளுடைய 'நான்' இப்பொழுது முழுவதும் உருவாகிவிட்டது. அவளுக்கென்று ஒரு பிம்பமும் உருவாகிவிட்டது. தன்னிலிருந்து வேறுபட்ட ஒரு தானை தனக்கு வெளியே அமைத்துக்கொள்ளும் உணர்வு பெற்றுவிட்டாள். இப்போது அவளை ஒரு நிலைக்கண்ணாடி முன் காட்டினாள், அது 'நான்' என்று எங்கோ உள்ளுக்குள் அடையாளம் கண்டு கொள்வாள். பேச்சுக்கு முன்னும் உருவான முதல் உணர்வுகளில் ஒன்று இது. ஆனால் இன்னும் தான் பெண் என்று தெரியாது. அதற்கான அடையாளங்கள் தன் உடலில் இருப்பதை அவளால் இனம் கண்டு கொள்ள முடியாது. இந்த ஆறு மாதத்தில் அவள் எப்போதும் தன் கூடவே இருக்கும் தாயையும், 'தகப்பனை'யும் அவர்கள் அசைவுகளையும் முயன்று பார்க்கத் துவங்கிவிட்டாள் என்றே சொல்லலாம். அவர்கள் அன்புப் பார்வையின் நிழலில் தன்னை ஒரு பொருளாகக் கருதத் துவங்கி விட்டாள். அவள் இப்போதே தன்னிச்சையான பிரஜை. வெளி உலகத்துக்குத் தயாராகிவிட்ட ஒரு சுயாட்சி சுந்தரி.

''என்னடி கண்ணு! என்னடி கண்ணு!'' என்று பார்வதி கொஞ்ச அதோ என்ன வசீகரமாகச் சிரிக்கிறாள் பாருங்கள்'' ''அப்ப நீங்க போயிட்டு வந்துருங்க. ஏதோ பாட்டி போயிருச்சு. அதும் நமக்கும் நல்லதுதான். வளக்கறதுக்கு இனி ஏது ஆளுங்க?''

நமச்சிவாயம் அப்பாவைப் பார்க்கப் போயிருந்தபோது வீட்டில் பாட்டியின் சுவடுகள் அத்தனையும் நீங்கிப்போய் வாயிற் பக்கத்து அறையில் மட்டும் தரையில் ஒரு அகல்விளக்கு எரிந்து கொண்டிருந்தது. பிள்ளைகள் அவரைப் பார்த்ததும் ''பாப்பா வல்லையா?'' என்றார்கள்.

''இல்லை தம்பி! பாப்பாவுக்கு உடம்பு சரியில்லேப்பா.''

''மாமா! நான் வந்து பார்க்கட்டுமா?'' என்றான் மது.

சின்னவன் உள்ளேயிருந்து சிரத்தையாக தூசியுடன், பச்சைத் திரவத்துடன் இருந்த பாட்டிலை எடுத்து வந்து, ''பாப்பாவுக்கு மருந்து'' என்றான்.

நமச்சிவாயம் சிரித்து, ''பொல்லாத பசங்களப்பா'' என்றார். அப்பா ஈரத் துணியுடன் வந்தபோது, ''என்னங்க! பாட்டியம்மா போயிட்டாங்களாமே!'' என்றார்.

''ஆமாங்க.''

''ரொம்ப நாள் படுத்திட்டிருந்தாங்களா?''

''இல்லேங்க நமச்சிவாயம், பொசுக்குனு போயிட்டா. புண்ணியவதி. ஜாஸ்தி ஸஃபர் பண்ணலை.''

''அப்பா, பாட்டி எங்கே போயிருக்கா?''

''மேலேடா.''

''அப்பா, நாம எல்லாரும் தங்கச்சிப் பாப்பாவைப் பார்க்கப் போறோமா?''

''பேசறதா மாமா?''



ஏலக்காய் பொடிக்கும்போது சிறிது சர்க்கரையுடன் பொடித்தால் நன்றாகப் பொடியும். எள்ளை வறுத்துப் பொடிக்கும்போது சிறிது உப்பைச் சேர்த்துப் பொடித்தால் கசக்காது.

''பேசலை. ஆனா நிறைய ஜாடை காட்டுது. நமக்குப் புரியாம நிறையச் சத்தம் போடுது.''

''சிரிக்கிறதா?''

''நிறைய.''

''அப்பா, வாப்பா பார்க்கலாம்.''

''ஏதாவது ஹெல்ப் வேணுங்களா?''

''என்னத்தைக் கேப்பேன் நமச்சிவாயம். பாட்டி இருந்துசமைத்துபோட்டுண்டிருந்தா! மூணு புள்ளைகளை வெச்சிண்டு எப்படிப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிச்சு எப்படி சமைச்சு....''

''நா வேணா ஒரு அய்யரு, சமையக்கார அய்யரைப் பார்த்து ஏற்பாடு பண்ணித்-தரவா?''

''பாருங்க, ஏகப்பட்ட செலவாகும்.''

''செலவு இருக்கட்டுங்க, சாப்பிட்டீங்களா?''

''...ம்... ராமமூர்த்தி ஆத்திலே கொண்டு வந்து கொடுத்தா...''

''அப்பா! பாப்பாப்பா!''

''இர்ரு எழவு பிடிச்சவனே... எப்படி இருக்கா குழந்தை?''

''நல்லாருக்குதுங்க. சாவகாசமா வந்து பாருங்க. நல்லா வளர்ந்திருக்கு.''

''ஊர்ல இருந்து யாரையாவது வரவழைச்சுத்தான் ஆகணும் போல இருக்கு.''

''பாட்டிக்கு நீங்க சுவீகாரங்களா?''

''அந்த மாதிரிதான். கடைசி காலத்திலே யாரும் இல்லாம எங்க கூட இருந்தா. கொஞ்சம் ஏக்கரா உண்டு. குத்தகைக்காரன் கிட்ட மாட்டிண்டு வருஷத்துக்கு ஒரு மூட்டை உளுந்து வரது. பாக்கி யெல்லாம் அவன் சாப்பிடறான். வித்துத் தொலைக்கவும் முடியாது. வீடு ஒண்ணு இருக்கு. பாட்டி ஏதோ உயில் மாதிரி எழுதி வச்சிருப்பாள்னு நினைக்கிறேன். இல்லேன்னா அதுக்கும் தகராறுதான். எல்லாத்தையும்இனிமேத்தான்பார்க்கணும்''

''நீங்க கவலைப்படாதீங்க. எல்லாத்தையும் நான் செட்டில் பண்ணி வெக்கறேன்.

''நமச்சிவாயம்... எனக்கு ஒரு சின்ன ஒத்தாசை செய்ய முடியுமா?''

''சொல்லுங்க. தாராளமா செஞ்சு தர்றேன்.''

''ஒண்ணுமில்லே. ஒரு பத்து நாளைக்கு இந்தப் பசங்களை உங்காத்திலே வெச்சுக்க முடியுமா? பர்மனெண்டா ஒரு ஏற்பாடு பண்றவரைக்கும் இவங்களை எப்படிச் சமாளிக்கறதுன்னு எனக்கு ஐடியாவே வல்லை. ஏண்டா மாமாவோட அவாத்திலே போய் இருக்கீங்களாடா? அவாத்திலே தங்கச்சிப் பாப்பாஇருக்கு. பொம்மைஎல்லாம்இருக்கு''

மூவரும் ''ஓ!'' என்று தலையாட்டினார்கள் உற்சாகம் கொப்பளிக்க.

சின்னவன் அப்போதே ஓடிப் போய் ஒரு ஸ்லேட்டையும், பாதி காய்ந்த டிராயரையும் எடுத்துக்கொண்டு ''அய்யா! பாப்பா... அய்யா! பாப்பா'' என்று குதிக்க ஆரம்பித்து விட்டான்.

நமச்சிவாயம் சற்றுத் திண்றிப்போய், ''நீங்க சொல்றது வாஸ்தவம்தான். எதுக்கும் அவகிட்ட ஒரு வார்த்தை கேட்டுக்கிட்டு உடனே வந்து தகவல் சொல்றேன்.''

''இல்லீங்க. கூட்டிட்டுப் போயிடுங்க... என்ன ஒரு பத்து நாள்தானே!''

''வாஸ்தவங்க. எதுக்கும் ஒரு முறை அவளைக் கேட்டுக்கிட்டு உடனே வரேனே!''

''சரி. மாட்டேன்னு சொல்லிராதீங்க.. எனக்குப் பெரிய ஒத்தாசை செஞ்சாப்பல இது.''

''இதோ வறேங்க.''

''மாமா கார்ல போப்பறமா?''

''இல்லேடா தம்பி, இத ஊட்டுக்குப் போயிட்டு உடனே வரன்!''

''என்னையும் கூட்டிக்கிட்டுப் போ மாமா!''

''கட்டாயம்! கொஞ்ச நேரம் இரு!''

''மருந்து?'' என்று சின்னவன் மறுபடி அழுக்குப் பாட்டிலைக் காட்டினான்.

நமசிவாயம், ''வீட்டுல நிறைய மருந்து இருக்குது தம்பி'' என்றார்.

சற்று வேகமாகவே புறப்பட்டு விட்டார்.

---

வெல்லத்தில் செய்யும் பாயஸம் ரொம்ப நீர்த்துப்போய்விட்டால் சிறிது கடலை மாவை ஒரு கரண்டி பாலில் கரைத்துவிட்டு நன்றாகக் கொதிக்க விடவும். பாயஸம் கெட்டியாவதுடன் மிகவும் மணமாகவும் இருக்கும்.



பின் வாசலில் நிறுத்தப்பட்டு, செருப்பு அலம்பப்பட்டு தலையில தண்ணீர் கொட்டப் பட்டபோது மனைவியிடம் சொன்னார்: ''பார்வதி, அந்தாளு ரொம்பத் தவிக்கிறாரு. புள்ளங்களைப் பத்து நா நாம வெச்சுக்கலாம்னு தோணுது.''

''என்னது! அந்த மாதிரி சொல்லிட்டு வந்திருக்கீங்களா?''

''இல்லே, பார்வதி! அவரேதான் கேட்டாரு.''

''நல்லா இருக்குது! அதெப்படி முடியும்?''

''ஏன்?''

''சாவு விழுந்த வீட்டுத் தீட்டு என்ன ஆறது?''

''என்ன பார்வதி! சின்னப் புள்ளைங்களுக்குத் தீட்டாவது ஒண்ணாவது? ஆசையா ஸ்லேட்டு பலபம் எல்லாம் எடுத்துக்கிட்டுத் தயாரா மூணும் நிக்குது!''

''எல்லாம் அப்பறம் பார்த்துக்கலாங்க. இப்ப வேணாம்.''

''அந்தாளு எனக்காகக் காத்துக்கிட்டு இருக்காரே பார்வதி!''

''போய் சொல்லிட்டு வந்துருங்க. குழந்தைக்கு உடம்பு சரியில்லே. சரியாப்போனப்புறம் ஒரு நா வேணு அழைச்சுட்டு வந்து காட்டறம்னு.''

''இல்லே பார்வதி. அவருக்கு இப்ப இக்கட்டான நிலைமையா இருக்கு. இந்தச் சமயத்தில உதவி பண்ண வேணுமில்லே! சாப்பாட்டுக்கே ஏற்பாடு பண்ண முடியாம தவிச்சுக்கிட்டு இருக்காரு. அவரு கேக்கறதிலே ஞாயம் இருக்கத்தான் செய்யுது.''

''சாப்பாட்டுக்குன்னு ஓட்டல் இல்லையா? அதெல்லாம் கதை. எப்படியாவது புள்ளைங்களை நம்மகிட்டத் தள்ளி விடலாம்னு பாக்கறாரு. ஐயரு லேசுப்பட்டவரு இல்லே. அவரு சொன்னதுக்கெல்லாம் தலையை ஆட்டிட்டு வந்துட்டீங்க. இப்ப அந்தப் புள்ளங்களை வெச்சுக்கிட்டு நான் என்ன செய்யறது? ஒவ்வொண்ணும் வாலு. குழந்தையைக் கசக்கிப் போட்டுரும்! வேண்டாங்க, நேரப் போய் நாங்க ஊருக்குப் போயிக்கிட்டிருக்கோம். பண்டிகைன்னு ஏதாவது சொல்லிட்டு வந்துருங்க.''

''என்ன பார்வதி!''

''இப்ப முடியாது! முடியாதுன்னா முடியாதுதான்!''

''பின்ன எப்ப முடியும்? நாளைக்கி வரச் சொல்லலாமா?''

''எப்பவும் முடியாதுன்னு சொல்லிருங்க. அவ்ளதான்.''

''என்ன பார்வதி? குழந்தை அவங்களது இல்லையா?''

''இல்லை. குழந்தை என்னுது! அவ்ளதான். அதுக்கு மேலே பேச்சில்லை!''

நமச்சிவாயம் திரும்பிப் போனபோது மணி பத்தாகியும் பிள்ளைகள் மூவரும் விழித்திருந்து வாசற்படியிலேயே நெருக்கமாகக் காத்திருந்தார்கள். (தொடரும்)

சுமதிக்கு அவள் பெற்றோர் இருக்கிறார்கள் வீட்டுப் பிரச்னை இல்லை. ஆனால், இதே சுமதி திருமணமாகி, தனிக் குடித்தனம் போன பிறகு பிரச்னைகள் பூதாகாரமாக உருவெடுக்கத் துவங்குமே? குழந்தைகளும் தோன்றிவிட்டால் கேட்கவே வேண்டாம்.

வருடாந்திர சாமான்களை நிர்மலாவைப் போலசேகரித்து வைக்கலாம். சுலபம்தான். அடிக்கடி கடைக்குப் போகும் தொல்லை இராது. காலை எழுந்ததும், சாமான் இல்லாமை இல்லை. சரி. ஆனால், வருடாந்திர சாமான்களைச் சேகரிக்கும்போது, அவற்றைச் சரிவர வைக்கும்படியான இடவசதி —இருக்கிறதா?

அவற்றை அடிக்கடி வெய்யிலில் உலர்த்தி, பாதுகாத்து திரும்ப எடுத்து வைக்க நேரம் இருக்கிறதா?

அவற்றை வருடா வருடம் பேரம் பேசி வாங்கிச் சேகரிக்கும் சாமர்த்தியமும், நேரமும் இருக்கிறதா?

என்ற பல விஷயங்களைக் கவனத்தில் கொண்டு வருவது அவசியம்.

எனக்குத் தெரிந்த ஒரு பெண், அவர்கள் கிராமத்திலிருந்து வருடாந்தர வடகம், வத்தல் என்று டின்—டின்னாகக் கொடுத்து அனுப்பியதைச் சரிவரக் கவனியாமல் இருந்து விட்டாள். காரணம், காலை எட்டு மணிக்கு வேலைக்குப் போனால் வீடு திரும்ப இருட்டி விடும். சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் ஓய்வு என்ற பெயரில் பகல் முழுவதும் தூங்குவாள். இரவு சினிமா பார்க்கப் போய் விட்டால், மறுநாள் காலை ஆபீஸ் அவசரம். முடிவு என்ன? வடகம், வத்தல் எல்லாம் பூச்சியடித்துப் போயின. இவற்றின் கதியே இப்படி. இவர்களைப் போன்றவர்கள் வருடாந்தர சாமான்களை எப்படிப் பாதுகாப்பார்கள்?

மற்றொரு பெரிய சிந்திக்க வேண்டிய பிரச்சினை இட நெருக்கடி.

தற்காலத்தில் வீடு கட்டுபவர்கள் 'சோபாகம் பெட்' என்ற ரீதியில் ஒன்றுக்குள் ஒன்றாக வீட்டைக் கட்டி விடுகிறார்கள். இதில் வருடாந்தரப் பொருட்களைச் சேகரித்து வைப்பது எப்படி?

ஒருத்திக்குக் கடைக்குப் போகும் தொல்லை இல்லையென்றால், மற்றொருத்திக்கு வாங்கின பொருட்களை வைக்க இடமில்லாத தொல்லை.

'பிரிட்ஜ்' வாங்க முடியாதவரால் மொத்தமாகச் சமைத்து வைக்க முடியாது.

தொல்லைகளைச் சமாளிக்கப்புத்திசாலித்தனமாகச் செயல்படுவதே சிறந்தது.

வீட்டு வேலைகளைச் சமமாகப் பங்கிட்டு, அவரவர் வேலையைச் செய்து முடிப்பது என்ற கட்டாயப் பணியாக வைத்துக் கொண்டு விடுவது நல்ல முறை.

மிக முக்கியமான விஷயம், ''எல்லாம் நானே செய்ய வேண்டி யிருக்குது, ஒரு கை அசைக்க மனுஷங்க இல்லே'' என்று அலுத்துக்கொள்ளாமல் இருப்பது.

''இப்பத்தான் ஆபீஸ்ல இருந்து அலுப்போடு வந்திருக்கேன். நாளைக்கு செஞ்சிட்டாப் போவுது'' என்று தள்ளிப் போடாமல் இருக்கும் சுபாவம்.

அவரவர் பங்கு வேலையை அன்றே செய்து முடிக்கும் சுறுசுறுப்பு.

இல்லா விட்டால் ஆபீஸ் மேஜை மீது ஃபைல்கள் குவியும். வீடு திரும்பினால், துணிகளும், இதர வேலைகளும் மலையாகக்குவியும்.

## இம்மாத இல்லத்தரசி போட்டி

பொருள் : வெங்காயம்

முடிவு தேதி : 15 - 12 - 81

### சமையல் கூபன்

இத்துடன் .......... என்ற தலைப்பில் சமையல் குறிப்புக்களை அனுப்பியுள்ளேன். இச்சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும் எந்தப் புத்தகத்திலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்



# ஆசைகள்

சுந்தரராஜன்

எவ்வளவு இனிமையான கனவு! விடியற்காலையில் கண்ட கனவு பலிக்குமாமே!

அம்மா எழுப்பியபோது கனவு கலைந்து விட்டதே என்று சற்று எரிச்சல் கிளம்பினாலும் கனவின் இனிமை கோபத்தைச் சாப்பிட்டு விட்டது. சுறுசுறுப்புடன் சியாமளா எழுந்து கொண்டாள்.

''ரொம்ப தேங்ஸ் அம்மா !''

அம்மாவை அப்படியே கட்டிக்கொண்டாள்.

''சீச்சீ.... என்னடி இது?''

பல் தேய்க்கையில், பாவாடையை எடுத்து பாத்ரூம் கதவில் தொங்க விடுகையில், தண்ணீரை எடுத்து மேலே விட்டுக் கொள்கையில், சோப்புப் போட்டுக் கொள்கையில், துவட்டிக்கொள்கையில்—

அந்தக் கனவே மனம் முழுவதும் நிறைந்து நின்றது.

புடவைத் தலைப்பை மேலே போட்டுக் கொள்கையில் அம்மா முணு முணுத்தாள்: ''சே, என்னடி தலையெழுத்து! நிம்மதியா..''

உற்சாகம் சட்டென்று, முள் குத்திய பலூனைச் சுருங்கிப் போக, கண்கள் சற்றே கலங்கிப் போக, அவள் அம்மாவின் பக்கம் திரும்பினாள். கனவின் இனிமையை, உண்மை நடப்பின் கனம் அழுத்தி விட்டது.

''என்னடி...?'' — அம்மா கவலையுடன் கேட்டாள். அவளும்தான் எவ்வளவோ கஷ்டப்பட்டுப் பார்க்கிறாள் — அனுவசியமாகப் பேசி அவள் மனத்தைப் புண்படுத்தக் கூடாதென்று. ஆனால் பெற்ற வயிற்றின் எரிச்சலுக்கு லாஜிக் எல்லாம் ஒன்றும் புரிவதில்லையே.

''குட்மார்னிங் சியாமளா...''

சியாமளா பல்லைக் கடித்துக் கொண்டாள். தன்னை நோக்கி வரும் வாழ்த்தின் பின் ஒளிந்துள்ள வக்ரம் அவளுக்குப் புரியாமல் இல்லை. அந்த வாழ்த்தின் தொனி, பேசியவனின் உள்ள எண்ணத்தை வெளிப்படுத்தாமல் இல்லை. வேண்டும் என்றே 'சியாமளா' என்று ஏதோ உரிமை உள்ளவன் போல...

சியாமளாவின் எண்ணம் தடைப்பட்டது. உரிமை உள்ளவன்...

மீண்டும் கனவின் ஞாபகம் வந்துவிட்டது. நினைவுமுகத்தில் மலர்ச்சியைப்பரவி விட்டது.

கோபாலன் கொஞ்சம் வியப்பும் கொஞ்சம் மகிழ்ச்சியும் அடைந்தான். வழக்கமாக அவளுக்கு வணக்கம் சொல்லும்போது, அவள் வெறுமனே முறைத்து விட்டுப் போவாள். 'கோரிக்கையற்றுக் கிடந்த வேரில் பழுத்த பலா'வின் மேல் அவனுக்கு ஒரு கண்!

சியாமளா தன் இடத்தில் அமர்ந்துகொண்டாள். தன் மேஜையின் உள்வைத்திருந்த நோட்டுப் புத்தகத்தை எடுத்து ஐந்துதடவை 'ஸ்ரீராமஜெயம்' எழுதினாள்.

எப்பவோ அம்மா சொன்னாள்: ''சியாமளா... மனசு குழம்பறச்சே எல்லாம், ஏதாவது. நியாயமான ஆசையா எழுந்துன்னு ஸ்ரீராமஜெயம் எழுதுடி...''

அவள் அந்த வருஷம் முழுப் பரிட்சைக்கு முன்னால் ஸ்ரீராமஜெயம் எழுத ஆரம்பித்தாள். அந்த வருஷம் முதல் மார்க் வந்தது.

அப்புறம் காலேஜில் இடம் கிடைக்க வேண்டும் என்று எழுதினாள்; இடம் கிடைத்தது.

பின்னால், மது வந்து பெண் பார்த்தபோது, மனதில் அவன் உருவம் ஏனென்று தெரியாமல் ஆழமாகப் பதிந்து போக, ஒரு வாரம் தொடர்ச்சியாக ஸ்ரீராமஜெயம் எழுதினாள்.

மதுவும் கிடைத்தான்.

ஆனால், இப்போது கிட்டத்தட்ட ஏழு மாதமாக தினமும் ராமஜெயம் எழுதியும் பயன் கிடைக்கவில்லை.

''ஒருவேளை, நான் படறது நியாயமான ஆசை இல்லையோ?' என்று அவள் எத்தனையோ தடவை எண்ணிப் பார்ப்பாள். எது நியாயமான ஆசை இல்லை? மனைவி கணவனுடன் இணைய வேண்டும் என்ற ஆசையா?

இனிமையான கனவுதான்.

அப்படி ஒன்றும் கனவு ரொம்ப நேரம் நீளவில்லை. ரொம்பச் சுருக்கமாக முடிந்து விட்டது.

கனவில் சியாமளா ரொம்பக் களைப்புடன் ஆபீஸில் இருந்து திரும்பி வந்தாள். வீட்டில் நுழையும்போது, ஹாலில் சோபாவில் யாரோ உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

யாரோ...

இல்லை, மது!

சியாமளா அப்படியே ஒரு விநாடி மேலே மிதந்தாள். கடைசியாக மதுவின் மனம் மாறிவிட்டதா? கடைசியாக அவள் கண்ட கனவுகள் பலிதம் அடையப் போகின்றனவா? கடைசியில் அவள் விட்ட பெருமூச்சுக்கள் எல்லாம் முடியப் போகின்றனவா?

மது திரும்பினான். சியாமளாவைக் கண்டதும் மெல்லச் சிரித்தான்.

அதே சிரிப்பு...

தனிமையில் இருவரும் அறையில் அடைக்கப்பட்டபோது இவள்உள்ளே நுழைந்தவுடன்

படுக்கையில் அமர்ந்திருந்த அவன் எழுந்து நின்று சிந்தினனே — அதே கவர்ச்சி நிறைந்த சிரிப்பு.

மெல்ல நடந்து அருகில் வந்தான்.

''ஐ அம் ஸாரி சியாமளி... ரொம்ப முரடனாய் நடந்துட்டேன் இல்லையா?...''

''என்னம்மா, ஏதோ யோசனையில் ஆழ்ந் துட்டே?''

நினைவுகளைக் கலைத்துக் கொண்டாள் சியாமளா. கனிவுடன் தன்னைப் பார்த்துக்கொண்டிருந்த ஹெட் கிளார்க் ரங்காச்சாரியைப் பார்த்தாள்.

''ம்...'' முன்னால் இருந்த ஃபைலில் தன் கவனத்தைச் செலுத்த முயன்றாள்.

முடியவில்லை.

மனமெல்லாம் ஒரு கணத்தில் எரிச்சல் பரவி விட்டது. இனிமை, எதிர்பார்ப்புகள் எல்லாவற்றையும் துரத்தி யடித்து, தான் மட்டும் இடம் பிடித்துக் கொண்டது.

'இன்னும் எத்தனை நாட்களுக்கு உன்னைக் கட்டி மாரடிக்க வேண்டும்?'

ஃபைலை மூடி விசிறி அடித்தாள்.

''என்னம்மா?'' — ரங்காச்சாரி வியப்புடன் திரும்பினார்.

''நோ!... இது என்னால் தாங்க முடியாது. நோ.... நான் என்றைக்கு நார்மல் உமனாகமாறப் போகிறேன்?''

அவள் மெதுவாகத்தான் முணுமுணுத்தாள்.





என்றாலும் அவள் பேச்சு ரங்காச்சாரியைத் தவிர வேறு இருவர் காதுகளிலும் விழுந்திருக்க வேண்டும். திரும்பிப் பார்த்தார்கள்.

''அம்மா... சியாமளி..., உடம்பு சரி இல்லையா?''

அவள் அவரை லட்சியம் பண்ணிய மாதிரி தெரியவில்லை. தொடர்ந்துபேசிக் கொண்டிருந்தாள்.

''எனக்கு இந்த ஃபைலிலேயே சமாதி கட்டுங்கள். ஆழப் புதையுங்கள்...''—அவள் சட்டென்று மேஜை மேல் சாய்ந்து கொண்டாள். குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தாள்.

ரங்காச்சாரி பதறிப்போனார்.

''அம்மா, குழந்தே! என்னம்மா இது?''

கொஞ்ச நேரத்தில் செக்ஷன் ஹெட்டே வந்து விட்டார்.

''மிஸஸ் சியாமளி... நீங்கள் வீட்டுக்குப் போகலாம். அதுதான் பெட்டர்னு நினைக்கிறேன்...''

''சியாமளா! நான் சொல்வதைக் கேளு! இப்பவே வேலையை ராஜினுமாப் பண்ணு. எனக்கு வர பென்ஷன்லே மூணு பேர் சாப்பிடலாம்.''

சியாமளா திரும்பினாள். அப்பாவின் தளர்ந்த உருவத்தைக் கண்டதும் மனம் கனிவில் இளகியது.

'சே, நான் இந்தப் பாழும் பெண் பிறவி எடுத்ததற்கு இவர்கள்என்ன செய்வார்கள்?'

''இல்லேப்பா... தப்பு என் மேலேதான். ரொம்பத் தீவிரமாப் பேசிட்டேன் இல்லையா? மன்னிச்சுடுங்கோ! ம்... ரொம்பத் தலைவலின்னு லீவு போட்டுட்டு வந்துட்டேன்...''

''காஃபி சாப்பிடறயாம்மா?''?— அம்மாவின் குரலில் நிஜமான கவலை இருந்தது.

''ம்.... போடும்மா..,''

சியாமளா உள்ளே போனாள். பின்னால் அம்மாவும் அப்பாவும் பேசிக் கொள்வது விழுந்தது.



## யோசனை

தேங்காய் அழுகிவிட்டது. கடைக்காரரும் திருப்பி வாங்கிக்கொள்ள மாட்டார் என்னும்பட்சத்தில் கவலையே படத் தேவையில்லை. அழுகல் தேங்காயோடு ஒன்றரை ஸ்பூன் கஸகஸாவையும் சேர்த்து மசிய அரைத்து, தலையில் தேய்த்து ஊறிய பின்னர் வெது வெதுப்பான நீரில் குளித்து வந்தால், எந்த நவீன ஷாம்பூ வகைகள் போட்டுக் குளித்தாலும் கிடைக்காத பளபளப்பு முடிக்குக் கிடைக்கிறது.

-பாத்திமுத்து

சியாமளி நிமிர்ந்து சுற்றும் பார்த்தாள். எல்லாரும் தன்னை ஏதோ ஒரு காட்சிப் பொருளாக ஆக்கிவிட்டிருப்பது தெரிந்தது.

''சாரி சார்...''

அவள் எழுந்து கொண்டாள்.

''துணை வேண்டுமா மேடம்?''

கேட்டது யார் என்றுகூடக் கவனிக்கவில்லை. அந்நிலையிலும் அது யார் எனத் தெரிந்தது. கோபாலனாகத்தான் இருக்க வேண்டும்.

''என்னடி இது சியாமளி?'' — அம்மா வியப்பும் கலக்கமும் அடையக் கேட்டாள்.

''ஏன் இன்னிக்குச் சம்பளம்'கட்'ஆகும்னு பயப்படறியா?'' — அவள் சுருக்கென்று குத்திய முள் அம்மா முகத்தைக் கன்றிப் போக வைத்தது.

''வாஸ்தவம்தாண்டி சியாமளி! இந்தத் துர்ப்பாக்கியவதிக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும்...''

அப்பாவும் வீட்டில் இருந்தார்.

''மாப்பிள்ளையைப் போய்ப்பார்க்கலையா?'' என்று அம்மா கேட்டுக் கொண்டிருந்தாள்.

''போகலாம்தான்! இவ வேலைக்குப்-போய்ச் சேர்ந்ததைப் பத்தி எழுதின கடிதத்துக்காவது பதில் போடுவார்னு நினேச்சேன்.'

சியாமளா அலுப்புடன் படுக்கையில் சாய்ந்தாள். மேலே ஃபேன் சுற்றினாலும், வியர்த்துக் கொண்டுதான் இருந்தது.

அப்பாவும் கிட்டத்தட்ட மாதத்துக்கு ஒரு தடவை, மாப்பிள்ளை ஊருக்குப் போய்ப் பார்த்துவிட்டுத்தான் வருகிறார். மாப்பிள்ளை மசிய வேண்டுமே....

ஆசைகள்தாம் மனிதர்களை எப்படி எல்லாம் மாற்றி விடுகிறது!

கல்யாணம் ஆனபோது மது சந்தோஷமாகத்தான் இருந்தான். அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு முதல் இரவில் என்னவெல்லாமோ பேசினான்.

''சியாமளா... நான் ஒண்ணும் ரொம்ப நிறையச் சம்பாதிக்கலேன்னாலும், நாம் ரொம்ப சௌகரியமாய் வாழலாம். வாழ்க்

கையில பணக்காரர்கள் அடைய வேண்டிய சௌகரியங்களுக்கு எல்லாம் நாம் ஆசைப் படக் கூடாது, என்ன?'' என்று அவன் கேட்டபோது, அவள் மனத்தில் அவன் உயர்ந்துபோனுன்.

''எனக்கும் ஃபிரிட்ஜ், டீ.வி., கேஸட் என்றெல்லாம் ஆசையே கிடையாது.''

''சந்தோஷம்!'' — அவன் அவளை அணைத்துக்கொண்டான்.

அவனுடைய வார்த்தைகள் நிலையாய் இருக்கும் என நினைத்தவள் ஏமாந்து போனுள். கல்யாணம் ஆகி எட்டே மாதங்களுக்குள் அவன் வார்த்தைகள் அவனுக்கே மறந்து போயின.

''சியாமளி... என் சிநேகிதாள் எல்லாரும் எவ்வளவு வசதியா வாழ்க்கையை அனுபவிக்கிறு, பார்த்தியா? நம்பளும் இரண்டு மூணு பேரோட பார்ட்டிக்குப் போயிட்டு வந்தாச்சு. நம்பளால ஒண்ணு கூடக் கொடுக்க முடியல்லே...''

''இனிமே நாம பார்ட்டிக்குப் போகாம இருக்கலாமா?'' என்ருள் சியாமளா அப்பாவியாக.

''சீ... இந்த யோசனையையா உங்கிட்டக் கேட்டேன்!'' — அவன் கோபத்துடன் விலகிப் போனுன்.

மதுவின் அம்மா ஒரு நாள் ஜாடையாய்ச் சொன்னுள். ''எனக்கு ஒரு அண்ணு உண்டு. அவனேட ஒரே பெண்ணைப் பண்ணிக்கோன்னு நான் சொன்னேன். இவன்தான் அழகு, அழகுன்னு அலைஞ்சு உன்னைப்பண்ணிண்டான். அவளைப் பண்ணிண்டு இருந்தா சௌகரியமாய் இருக்கலாம். கல்யாணத்தும்போதே டீ. வி.யும் ஃபிரிட்ஜும் வந்திருக்கும்....''

அவள் குரலில் ஒலித்த ஏக்கம், சியாமளாவின் மனத்திலும், வயிற்றிலும் கலக்கத்தைப் பரப்பியதோடு, மதுவின் மன மாற்றத்துக்கு யார் காரணமாக இருக்கக் கூடும் என்பதையும் புரிய வைத்தது.

ஏதோ ஒரு வெறியில் அப்பாவுக்கு எழுதினுள். அப்பா எப்படியோ அடுத்த வாரமே ஒரு டீ. வி.யோடு வந்து இறங்கினர்.

''மாப்பிள்ளை, எங்க ஊருக்கும் டீ.வி.க்கும் சம்பந்தமே கிடையாது. எனக்கும் ஒண்ணும் தெரியாது...''

மதுவும் அவன் அம்மாவும் அன்று என்னமாக மலர்ந்து போனுர்கள்! சியாமளா பெருமையிலும், கர்வத்திலும் தலையை நிமிர்திக்கொண்டாள். ஆனல், நிமிர்ந்த தலை அப்பாவுடன் பேசியபோது, அகஸ்மாத்தாகத் தெரிந்த உண்மையில், குற்ற உணர்வோடு, குனிந்து, மனதையும் அழுத்தியது.

இந்த டீ.வி.யை வாங்க அப்பா தன்னுடைய சாப்பாட்டுக்கு வழி செய்திருந்த நிலத்தை விற்க வேண்டி யிருந்ததாம்.

''யோசித்துப் பார்த்தேன்... வீடா, நிலமான்னு. நிலம்தான் போட்டுமே!''

சியாமளா துடித்துப் போனுள்.

''அண்ணு எல்லாம்.....''



அதிக உஷ்ணத்தால் நீர்க்கடுப்பு உண்டாகி சிறுநீர் கழிக்கும்போது எரிச்சல் ஏற்படுகிறதா? கொஞ்சம் புளியங்கொட்டைத் தோலை அரைத்துத் தண்ணீரில் கலக்கிக் குடியுங்கள். விரைவில் குணம் தரும் கை மருந்து இது. -மிஸஸ் கிரிஜானந்த்

அப்பா சிரித்தார்.

''அம்மா, நீ குழந்தை! ஒரே பொண்ணுன்னுலும் செய்யறதுல லிமிட் வேணுமான்னு அவர்கள் எழுதறதைப் புரிஞ்சுக்க முடியாது.''

அப்பாவை டீ. வி. வாங்கித் தரச் சொன்னது அனர்த்தத்தில் முடிந்தது.

மது தானுகவே மானத்தை விட்டுக் கேட்டான்:

''ஏன் சியாமளி, நம்பள்ட்ட ஒரு ஃபிரிட்ஜ் இருந்தா பார்ட்டி கொடுக்கச் சௌகரியமா இருக்கும் இல்லையா? உங்கப்பாவுக்கு எழுதறயா? ஒரே பொண்ணுதானே, நீ!''

மது சியாமளாவின் மனத்தின் மேல் தட்டிலிருந்து பொத்தெனக் கீழே விழுந்து விட்டான்.

அவள் பேசாமல் இருந்தாள். அவன் மூன்று முறை ஞாபகப்படுத்திப் பார்த்தான்.

''எழுத முடியாது.''

''என்னடி சொன்னே?''

அன்றுவரை மதுவை சாந்தம் மிக்க இராமனுகப் பார்த்தவள், நரசிம்மனுகக் கண்டாள்.

ஏதேதோ வார்த்தைகள் வீசப் பட்டன, அக்கினித் துண்டங்களாய், நெருஞ்சி முட்களாய்...

விஷயம் தெரிந்து அப்பா ஓடி வந்தார்.

''என்னம்மா வேணும்னு வீட்டை வித்துட்டு, அவாளுக்கு வாங்கித் தரலாமா?''

''முடியாதுப்பா. அப்புறம் நீங்க நடுத்தெருவில் நிற்பேள்!''

அப்பா கிளம்பியபோது, அவளும் கூடக் கிளம்பினுள். மது எதும் மறுப்புச் சொல்லாதபோது, அவள் மனத்தில் இருந்த கொஞ்ச நஞ்ச எதிர்பார்ப்புகளும் சுக்கு நூருக உடைந்து போயின.

அம்மாவும் அப்பாவும் என்னென்னவோ உபதேசித்தார்கள். பெண், பண்பாடு என்றெல்லாம் பேசினர்கள்.

சியாமளா அசையவில்லை.

அண்ணன்கள், ''உன் பெண்ணைச் செல்லம் கொடுத்துக் குட்டிச்சுவராக்கிட்டே!''

என்று அம்மாவைக் குற்றம் சாட்டியபோது, அவள் தனிமையில் அழுதாள்.

அவள் தீர்மானமாகச் சொன்னுள்:

''அப்பா, நான் பாரமாஇருந்தாச் சொல்லுங்கோ, ஆனு, தயவு செஞ்சு உங்க வீட்டை வித்து அவரோட என்னைச் சேர்க்க முயற்சி செஞ்சா சத்தியமா நான் உயிரோட இருக்க மாட்டேன்.''

சியாமளா பிடிவாதக்காரி!

''சியாமா, அவரோட பேசி, அவர் மனதை மாத்த முயற்சி செய்யவாவது அனுமதி உண்டாம்மா?''

தன்முன் குறுகிக்கொண்டு அப்பா கேட்ட போது, அவள், ''அப்பா!'' என்று அவர் கையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு உடைந்து போனுள்.

கொஞ்ச நாட்களில் வீட்டின் நிலைமை அவளை உண்மையை உணர வைத்தது. அப்பா சொல்லா விட்டாலும், தான் எவ்வளவு பெரிய பாரம் என்பதை உணர முடிந்தது, அவளால்.

அவளுக்குச் சட்டென்று ஞாபகம் வர—

மர பீரோவைத் திறந்து, மேலாக இருந்த தூசிகளை யெல்லாம் தட்டித் தேட ஆரம்பித்தாள்—

தன்னுடைய 'டிகிரி' சான்றிதழ்களை.

வழக்கம்போல் அம்மா காலையில் எழுப்பி விட்டாள்.

''என்னம்மா ஆபீஸ் போறயா? டயர்டா இருந்தா லீவு போடேன்.''

''சே, சே... எத்தனை நாள் லீவு போடறது? எனக்கென்ன கேடு?''

அவள் அப்போது 'கேடு' இல்லை என எண்ணினுள். ஆனுல், ஒன்பதரை மணி அளவில் அலுவலகத்தில் புகுந்து, தன் இருக்கையில் அமர்ந்து 'ஸ்ரீராமஜெயம்' எழுதி முடித்தபோது, மனத்தில் மீண்டும் எரிச்சல் கிளம்பி விட்டது.

'என்னத்துக்காக நான் வேலை பார்க்க வேண்டும்? என்ன தலையெழுத்து?'

தலை விண் விண்ணென்று வலித்தது. கை பெரிய பாரமாக, உயர்த்த முடியாமல் அழுத்திக்கொண்டிருந்தது.

'நோ... எனக்கு வேலை பார்க்க முடியாது. என்ன பிழைப்பு இது! காலை முதல் மாலை வரை இயந்திரமாக... எனக்கு எதுக்காக இந்தப் பிழைப்பு!''

அன்றும் போன உடனே வந்துவிட்ட தன் பெண்ணைப் பார்த்தபோது, அம்மா குழப்பத்தை அடக்கிக் கொண்டாள்.

'இன்றும் பிரச்னை தொடருமா?'

பயத்துடன்தான் சியாமளா அலுவலகத்தில் நுழைந்தாள். இருக்கையில் அமர்ந்து ஸ்ரீராமஜெயம் எழுதி முடித்ததும், ஃபைலை எடுத்துப் புரட்டுகையில், நல்ல வேளையாக பெரிய பிரச்னை எதுவும் தோன்றவில்லை.

'லஞ்ச் அவர்' வரை ஒன்றும் குழப்பம் இல்லாமல் ஓடியது.

'இறைவனே, விருப்பம் இல்லாவிட்டாலும், என் தலைவிதியை ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவம் தா!'

குழப்பம் 'லஞ்ச் அவரி'ன்போது வந்தது. ரங்காச்சாரி அன்று லீவு!

கோபாலன் எதிரில் வந்து உட்கார்ந்தான்.

''ஹல்லோ, மேடம்... ஹௌ ஆர் யூ நௌ?''

அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவன் குரலில் கவலை இருப்பது போலத்தான் பட்டது. ஒருவேளை கோபாலன் நல்லவன்தானே? அவள்தான் அவசரப்பட்டு விட்டாளோ?

''ஓகே! தாங்க் யூ...''

''மேடம்... உங்க மனப் பிரச்னை எனக்குப் புரியுது. வேலை பார்க்கறதுலே இருக்கற வெறுப்பு எனக்குத் தெரியுது. பெண்களோட

## திடீர் அடை மிக்ஸ்

அரிசி இரண்டு ஆழாக்கு
கடலைப் பருப்பு அரை ஆழாக்கு
உளுந்து இரண்டு டீஸ்பூன்
மிளகாய் வற்றல் பத்து
சுக்கு சிறு துண்டு
திட்டமான உப்பு

மாவு மிஷினில் கொடுத்து ரவையும், மாவுமாக அரைத்து வைத்துக் கொள்ளவும். ஒரு மாதம் தாங்கும். விருந்தாளிகள் வந்து விட்டார்களா? ஓர் ஆழாக்கு மாவில் தண்ணீர் ஊற்றி ஊற வைக்கவும். வெங்காயம் பொடியாக நறுக்கிப் போடவும். கருவேப்பிலை, கொத்தமல்லி கிள்ளிப் போடவும். வாணலியில் எண்ணெய் காய்ந்ததும் பஜ்ஜி மாவு திட்டத்திலிருக்கும் இந்த மாவைக் கரண்டியால் ஊற்றி, சிவந்ததும் எடுக்கவும்.

விருந்தாளிகள் இறக்கை கட்டிக்கொண்டு பறக்கிறுர்களா? சுடு நீரில், மாவை ஊற வைக்கவும். மூன்றே நிமிடங்களில் அடை மாவு நன்ருக ஊறிவிடும்.

ஹோட்டல் செலவும் மிச்சம்! ''எப்படி இவ்வளவு சீக்கிரம் தவலை அடை செய்தாய்?'' என்று விருந்தினர் வியப்படைவார்கள்.

-அரசு மணிமேகலை



பொறுப்பு இங்க இல்லே; வீட்லேன்னு நினைக்கிறது எனக்குப் புரியுது!''

அவன் அவள் இதயத்தைத் தொட்டு விட்டான்.

''ஓ... மிஸ்டர் கோபாலன்! தேங்க் யூ! என்னப்புரிஞ்சுக்கிற ஆத்மா இருக்குன்னு..''

''ஐ ஹேவ் எ சொல்யூஷன்...''

அவள் தன் மகிழ்ச்சியை நிறுத்திக் கொண்டு அவனைக் கூர்ந்து நோக்கினாள்.

''வாட் டு யூ மீன்?''

அவன் சுற்றிலும் பார்த்தான். அறையில் யாரையும் காணோம்.

''நீ வேலையை விட்டுரலாம்! என் கூட வரலாம்... சியாமளா, என்னோட பணத்துல உன்னை ராணி மாதிரி வச்சுக்குவேன்... என் குடும்பத்தைப்பத்திக் கவலைப்படாதே.''

''யூ....யூ...'' சியாமளா சட்டென்று எழுந்தாள்.

''உஷ்... பத்தினி வேஷம் போடாதே! உன் புருஷன் எதுக்காக உன்னை வீட்டை விட்டுத் துரத்தினான்னு எங்களால ஊகிக்க முடியாதா, சியாமளா?''

அவள் மேஜையில் இருந்த ஃபைலை எடுத்து அவன் முகத்தில் விசிறி அடித்தாள்.

''போடா.... பொறுக்கி! வேலை பார்க்க வந்தா, மானத்தை விட்டுத்தான் வரணுமா? போடா....'' — அவள் படபடவென்று பொரிந்து தள்ளினாள்.

சிறு கூட்டம் ஒன்று சேர்ந்தது.

அவன் சாவதானமாக எழுந்து கொண்டான்.

''இன்னும் இவங்களுக்கு உடம்பு சரியாகலேன்னு நினைக்கிறேன். பேசிண்டே இருந்தாங்க, திடீர்னு....''

அவன் ஃபைலை எடுத்து மேஜையின் மேல் சரியாக வைத்தான்.

''மேடம்... ப்ளீஸ், உங்க உடம்பைப் பாத்துக்கொள்ளுங்கள்....''

அவள் சுற்றிலும் பார்த்தாள். எல்லார் கண்களிலும் தெரிந்த அனுதாபம் அவளை வலுவற்றவளாக ஆக்கியது. தன் கைப்பையை எடுத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தாள்.

வீட்டில் நுழையும்போது, களைப்பாக இருந்தது. 'சீ, என்னவெல்லாம் பேசிவிட்டான், அவன்! மது, நீங்கள் இதைக் கேட்டிருந்தால்....'

சட்டென்று கனவின் ஞாபகம் வந்தது.

எவ்வளவு இனிமையான கனவு!

வீட்டில் நுழைந்தவுடன், ஹாலில் சோபாவில் யாரோ உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

யாரோ....

இல்லே, மது!

சியாமளா அப்படியே மேலே மிதந்தாள். கடைசியாக மதுவின் மனம் மாறிவிட்டதா?

''ஐ ஆம் ஸாரி சியாமளி... ரொம்ப முரடனா நடந்துட்டேன் இல்லேயா?''

தன் மாமனார், மாமியார் இருப்பதைக் கூட உணராதவன் போல, மது சியாமளாவின் தோள்களின் மேல் கைகளை வைத்துக் கொண்டான். அக்கைகளின்கீழ் தான்கரைந்து கொண்டிருப்பது அவளுக்குப் புரிந்தது.

அப்பா! இந்த அணைப்புக் கிடைத்து எத்தனை நாட்களாகி விட்டன!

சியாமளிக்குச் சந்தோஷம் பெருகியது. நாளைக்கே போய், கோபாலன் முகத்தில் மேஜைமேல் இருக்கிற ஃபைல்களை எடுத்து எறியலாம். மேனேஜர் முகத்தில் ராஜிநாமாக் கடிதத்தை வீசியடிக்கலாம்.

அவன் கைகளின் மேல் தன் கைகளை வைத்து அழுத்திக் கொண்டாள்.

''எனக்குத் தெரியும்... என் மேல ஏதாவது தப்பு இருந்தாலும், என் கணவர் என்னை மன்னிப்பார்னு தெரியாதா?''

''உங்கப்பா என் கிட்டப் பேச வரச்சே எல்லாம் ஒரு வார்த்தை கூடக் கேட்க மாட்டேன். போடற கடிதத்தைக் கூட அப்படியே கிழிப்பேன். அதனாலதான் நீ வேலை பாக்கறதைக்கூடத் தெரிஞ்சுக்காமப் போயிடுத்து....''

''பரவாயில்லேங்க! அதான் இன்னிக்கு நாம்ப சேர்ந்துட்டோமே!''

''ஆனா, சியாமளி! நீ ஏன் என்கிட்ட நீ வேலை பார்க்கலாம்கிற ஐடியாவைச் சொல்லவே இல்லே? எனக்கும் தோணாமல் போயிடுத்து. நீ அப்பவே வேலைக்குப் போயிருந்தா உன் அப்பாவைத் தொல்லைப் படுத்தியே இருக்க வேணாமே!''

அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

அவள் தோள் மேல் இருந்த அவன் கைகள் அக்கினித் துண்டுகளாய்த் தகிக்கத் தொடங்கின. அவன் பிடியில் இருந்து நழுவி, கீழே அமர்ந்து, விசிக்கத் தொடங்கினாள்.



வெங்காயச் சருகை ஒரு பழம் புடவையில் (தலையணை போல்) அடைத்துத் தலையணைத் திண்டாகச் செய்து அதன் மேல் உட்கார்ந்துகொண்டே இருந்தால் மூலம் சரியாகப் போய்விடும். (அனுபவத்தில் கண்ட உண்மை) -ஜெயலக்ஷ்மி

# எப்போதும் பெண்

9

நமச்சிவாயம் பிள்ளைகளைப் பார்க்க விரும்பவில்லை. மனதில் குற்ற உணர்ச்சி ஏற்பட்டது.

''மாமா! பாப்பாவைப் பார்க்கப் போறேமில்லையா?'' என்று மது அவரிடம் வந்து குழைந்தான்.

அப்பா நமச்சிவாயத்திடம், ''என்ன? அழைச்சுட்டுப் போறீங்களா?'' என்றார்.

''அது வந்துங்க... வீட்டில கொஞ்சம் சந்தர்ப்பம் சரியில்லைங்க.''

''என்ன?''

''இப்பத்தான் சாவு விழுந்திருக்கு. கொஞ்ச நாள் ஆகட்டுமேன்னு சம்சாரம் சொல்லிச்சு.''

''சின்னப் பசங்களுக்கு என்ன நமச்சிவாயம்? தீட்டாவது ஒண்ணாவது!''

''இல்லைங்க... எங்க ஜாதியிலே ஏதோ ஒரு நம்பிக்கை'' என்று மழுப்பினார்.

''அப்ப எப்பத்தான் அழைச்சுக்கிட்டுப் போவீங்க?''

''பதிமூணு நாள் ஆவட்டும்.''

''நீங்களா வந்து அழைச்சிட்டுப் போறீங்களா?''

''அ....ஆமாங்க....''

''ஏன் அப்பா இப்பப் போகலியா?''

''இல்லடா கண்ணு'' என்றார் நமச்சிவாயம்.

''ஊம்... நான் போய்த்தான் ஆகணும்'' என்று முனகினான் சின்னவன்.

''சும்மாருடா. போய்ப் படுத்துக்கங்கடா....''

''இல்லை. நான் இந்த மாமாவோட போறேன்.''

''இப்ப வந்தேன்னா பல்லைப் பேத்துருவேன்.''

''குழந்தைகளைக் கோவிச்சுக்காதீங்க. அவங்களுக்கு என்ன தெரியும்? அறியாப் புள்ளைங்க. இதப் பாரு தம்பி, நானே உங்களைக் கார்ல வந்து நாளைக்கு அழைச்சுட்டுப் போறேன். பாப்பா இப்ப தூங்கிப் போயிருச்சு. இப்ப நீங்க அதை எழுப்பினா அழும்.''

''எழுப்பாமப் பார்த்துண்டு இருக்கேம்.''

''இப்பப் போக முடியாதுடான்னா'' என்று அதட்டினார்.

''அப்ப நான் வரட்டுங்களா?''

''வாங்க. கட்டாயம் அழைச்சிண்டு போக வரணும். நான் ஞாபகப்படுத்தணும்னு எதிர்பார்க்காதீங்கோ.''

''இல்லீங்க. வரேன்!''

நமச்சிவாயம் தற்காலிகமாகத் தப்பி விட்ட திருப்தியில்தான் காரில் உட்கார்ந்தார். அவருக்கு அந்தத் துடியான பயல்களை அழைத்துப் போவதில் தயக்கமும் இல்லை. இருந்தும் மனைவிக்கு எதிராக அடித்துப் பேச முடியாத கோழையாக இருந்தார். நமச்சிவாயம் கல்யாண காலத்திலிருந்தே இந்த உரிமையை இழந்து விட்டவர். ஆரம்பத்திலேயே தன்னுடைய ராஜ்யத்தை நிலைநாட்டத் தவறி விட்டார். ஆரம்ப காலத்தில் பார்வதி பெருமளவு இல்லாமல் அழகாக இருந்தாள். அப்போது அவள் சொன்னதெல்லாம் வேத வாக்காக இருந்தது. காதலின், உடலுறவின் தீ கலந்த வேகத்தில் மற்றதெல்லாம் அப்போது அடிபட்டுப் போயிருந்தது. அப்போதிருந்தே பார்வதி அவரை ஆக்கிரமிக்கத் துவங்கி விட்டாள். பிடி நழுவிப் போன பின்பு அதை அவரால் திருப்பிப் பெறவே முடியவில்லை. போதாக் குறைக்கு குழந்தை இல்லாதது அவருக்குள் ஏதோ ஒரு குற்ற உணர்வை தந்து விட்டது.

அதற்குத் தன் இயலாமை ஒரு காரணமாக இருக்குமோ என்று உடல் சம்பந்தங்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துபோய் அவருடைய ஸ்வாரஸ்யமும் தீவிரமும் பணம் சம்பாதிப்பதிலும் திருவாசகம் படிப்பதிலும் திரும்பியபோது பார்வதி அவரை ஆக்கிரமிப்பதை ஒரு விதத்தில் விரும்பவே செய்தார். போகப்போக அதில் ஓர் இன்பமே ஏற்பட்டது அவருக்கு. எதிர்த்துப் பேசுவதும் அவள் விருப்பத்துக்கு மாறாக எதையும் செய்வதும் அவருக்கு ஒருவித அநாகரிகமாக ஆகி விட்டது.

அப்போதைக்குப் பிரச்னையைச் சமாளித்து விட்டாலும் பத்து நாளைக்கு அப்புறம்

சுஜாதா

மறுபடி தலைதூக்கப் போகிறது. அதற்குள் மனைவியின் மனம் மாறுகிறதா பார்க்கலாம். இல்லை அப்பன்காரன் மறந்துபோய்க் கேட்காமல் விட்டு விடலாம். இப்படியே மழுப்பி மழுப்பியே இழுத்துச் சென்றுவிடலாம் போலத் தோன்றியது. இருந்தாலும் சற்று அச்சமாகத்தான் இருந்தது. அவர் திரும்பி வீட்டுக்குச் சென்றபோது மனைவியும் பெண்ணும் உறங்கி இருந்தார்கள்.

அவர் எண்ணியது போல் அப்பா பத்து நாளைக்கப்புறம் பையன்களை அழைத்துச் செல்வதைப் பற்றி மறுபடி விசாரிக்கவில்லை. அதற்குக் காரணம் ஐ. ஸி. எஃப். காலனியிலிருந்து விசாரிக்க வந்த உறவினர் ஒருவர் அப்பாவுக்கு உதவி செய்ய முன்வந்தார். பையன்களைத் தற்காலிகமாக அழைத்துச் சென்று ஒரு வாரம் வைத்துக் கொள்வதாக உத்திரவாதம் தந்தார். அதற்குள்:

''உனக்கு என்ன வயசு இன்னிக்கெல்லாம்?''

''ஏன்? எதுக்குக் கேக்கறீங்க?''

''நாப்பத்தஞ்சு இருக்குமா? அட அம்பதாவது இருக்கட்டுமே... இது ஒரு வயசா?''

''எதுக்கு ஓய்?''

''இன்னொரு கல்யாணத்தைப் பண்ணிண்டிரும். பேப்பர்லே போட்டா ஆயிரம் பேர் பதில் போடுவா. இப்பல்லாம் முப்பது முப்பத்து அஞ்சு வயசில வேலைக்குப் போற பொம்மனாட்டிங்க நிறையப் பேர் இருக்கா, கல்யாணமாகாம. அன்னிக்குக்கூட ஒரு பி.எச்.டி. பொண்ணைப் பார்த்தேன். ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கறா. ஏதோ லாபரேட்டரியில இருக்காங்களாம்.''

''வேலைக்குப் போற பொம்மனாட்டியைக் கல்யாணம் பண்ணிண்டா என் ப்ராப்ளம் எப்படி ஸால்வ் ஆகும் ஓய்?''

''அதுகூடச் சரிதான். வேலைக்குப் போகாததா வேணுமா? பார்க்கலாம். நிறைய அம்படும்.''

''எதுக்கு இன்னொரு கல்யாணம்? பாட்டி இருக்கிறபோதே சொன்னா, அப்பவே வேண்டாம்னு சொல்லிட்டேன்.''

''அப்ப பாட்டி இருந்தா வேணுங்கலாம். இப்ப யார் இருக்கா ஓய்? மூணு பசங்களை வெச்சுண்டு எப்படிச் சமாளிக்கப் போறீர்? யார் அதுக்குப் பொங்கிப் போடறது? ஸ்கூலுக்கு அனுப்பறது? குளுப்பாட்டி விடறது? எப்படி நீர் ஆபீசுக்குப் போறது?''

''ஒரு சமையல்கார மாமியை வெச்சுக்கலாம்னு பார்க்கறேன்.''

''சமையல்கார மாமின்னா நூறு ரூபாய் சம்பளம் தரணும். அதைவிடக் கல்யாணம் பண்ணிக்கிறது சீப்புங்காணும்! உமக்கு என்ன ஒரு செலவா? வரதட்சிணை ஏதும் வாங்கப் போறதில்லை. உம்மை ஆளைப் பார்த்தா வயசானவர்னே சொல்ல முடி



யாது. கொஞ்சம் டை அடிச்சுட்டா முப்பது தான் சொல்லலாம் போல இருக்கு.''

''கேலி பண்ணுதீங்க.''

''நான் சொல்றேன் கேளும். பேசாம இந்த விவாகாரத்தை என்கிட்ட ஒப்படையும். இந்துவில மாட்ரி மோனியல்ல ஒரு இன்ஸர்ஷன் கொடுத்துர்றேன். ஸண்டே பேப்பர்லே என்ன?''

''யோசிக்கிறேன்.''

''யோசிக்காதீர். உம்முன்னு சொல்லும். ஏண்டா பசங்களா, உங்களுக்கு இன்னொரு அம்மா வேணுமாடா?''

அவர்கள் மூவரும் மௌனமாக இருந்தார்கள்.

இப்போது அவளுக்குத் தன் அம்மா யார் என்பதைப் பற்றிக் குழப்பமில்லை. அம்மா என்பது பார்வதிதான். அவள் ரத்தத்துக்குள் இருந்த அம்மா கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கப்பட்டு ஒரு பதில் பிம்பம் பொருத்தப்பட்டு விட்டது. பார்வதி! பார்வதியின் மடியிலிருந்துதான் அவள் சதா அவள் உலகத்தைப் பார்த்தாள். பார்வதியின் மூக்கைத்தான் தன் பிஞ்சு விரல்களால் திருகினுள். அவள் சிரிப்புத்தான் அவள் முகத்துக்கு எப்போதும் அருகில் இருந்தது. அவள் புடவையின் நுனி திரியை முகத்தில் துருதுருவென்று நிரடிக் கொண்டுதான் கட்டை விரல் சப்பினுள். பார்வதிதான் தினசரி அவளை உடைகளை உருவி அலம்பி விடுகிருள். தலை வாருகிருள் பவுடர் போடுகிருள். கன்னத்தில் பதிய முத்தம் முத்தமாக நிமிஷத்துக்கு இரண்டு தடவை அளித்து வருகிருள். பார்வதி பார்வதி பார்வதி என்று விழிக்கும் நேரமெல்லாம் பார்வதியைப் பார்த்துப் பார்த்து அவளுக்குத் தன் ஜனனத்தின் போது இருந்த குழப்பம் முழுவதும் கரைந்து மறைந்து போய் அம்மா அடையாளம் முழுமையாகி விட்டது. பார்வதிதான் அம்மா. வீட்டுக்கு யாராவது வந்து குழந்தையை எடுத்துக் கொண்டால் உடனே முகத்தைச் சுருக்கிக் கொண்டு பார்வதியின் பக்கம் தாவுவாள். நமச்சிவாயத்திடம் எப்போதாவது செல்வாள். மற்ற சமயங்கள் முற்றும் பார்வதியிடமே இருந்தாள்.

இப்போது அவள் வசீகரமாக இருந்தாள். புஷ்டியான ஆகாரம் மட்டும் அல்லாமல் அப்பாஅம்மாவின் முகஅமைப்புக்களிலிருந்து சில நல்ல விஷயங்களை வசீகரித்துக்கொண்டு பிறந்திருந்தாள். அப்பாவின் மூக்கு சற்று வளர்ந்தது. அம்மாவின் மூக்கு உள்வாங்கியது. இரண்டும் எப்படியோ சரிக்கட்டிக் கொண்டு இவள் மூக்கு நேராக இருந்தது. கண்களில் ஒரு பிரகாசமும் குறும்பும் தெரிந்தது. சுலபத்தில் மோகனமாகச் சிரித்தாள். இப்போது சிரிக்கும்போது அவள் ஓரிரு பால் பற்களைக் காட்டுகிருள். அவள் போடுவதில் அல்லது பேசுவதாகப் பண்ணும் சப்தங்களில், ஓரிரு வார்த்தைகள் வடிவடைந்திருக்கின்றன. புரிகின்றன. பேசுவதைத்தவிர அவளுக்குப் புரிந்து கொள்ளக் கூடிய வார்த்தைகள் அதிகமாக இருந்தன. 'பொண்ணு காணும்' என்று பார்வதி சொன்னுல் உடனே தவழ்ந்து போய் சோபாவின் பின்னுல் மறைந்துகொள்வாள்.

'இங்க இருக்காளே' என்று கண்டு பிடித்ததும் கடகடவென்று சிரிப்பாள் அவள். கீழே விட்டால் செருப்பை நோக்கித் தவழ்ந்து அதைக் கடிக்க ஆரம்பித்து விடுவாள். வீட்டில் தரை மட்டத்தில் இருந்து கூர்மையான சாமான்கள் அனைத்தும் நீக்கப் பட்டன.

சின்னதிலிருந்தே அவளைச் சுற்றி நிறைய பொம்மைகள் இருந்தாலும் இப்போது அவள் ஒரு பொம்மையைப் பிரத்தியேகமாக கவனிக்கத் தலைப்பட்டாள். இருப்பதற்குள்ளேயே சற்று அழுக்கான பொம்மை அது. இருந்தாலும் அது பிரத்தியேகமாக அவளுக்குத் தேவையாக இருந்தது. அதேபோல் ராத்திரி விரல் போட்டுக் கொள்ளும்போது நீலத்தில் ஒரு குறிப்பிட்ட டவல்தான் வேண்டும். அது இல்லையென்ருல் அழுது அட்டகாசம் பண்ணுவாள். அதே போல் அந்தப் பொம்மை.

அவளுடன் வளர்ந்து கொண்டிருந்த பிடிவாதத்தைப் பற்றிச் சொல்வதற்கு முன் அந்தப் பொம்மையைப் பற்றிச் சொல்லியாக வேண்டும்.

ஒரு பெண் அவள். பெண் குழந்தை. நினைவுகளின் ஆரம்பத்தில் அவளுக்கு அடித்தளத்தில் உலாவுவது ''தான் யார்'' என்று கேட்டு அடையாளம் தேடும் கேள்வி. அந்தக் கேள்விக்குப் பதில் ஆண் குழந்தையாக இருந்தால் அதன் சிறிய சின்னத்தில் கிடைத்து விடுகிறது என்று மனோ தத்துவ மருத்துவர்கள் சொல்லுகிருர்கள். ஆண் குழந்தைக்கு ஒரு வெளியுலகச் சின்னம் இருக்கிறது. பெண்ணுக்கு இல்லை. அதனுல் அவளுள் மஞ்சு படிந்தது போல் தனக்குள் இருப்

பது என்னதான் என்கிற குழப்பம் ஏற்படு கிறது. இது அவள் வாழ்நாள் முழுதும் இருக்கப் போகிறது.

முதலிலிருந்தே அவளுடைய 'தான்' அவள் பார்வைக்குச் சரியாகப் படாத ஒரு வஸ்து, இதனால் அவள் ஆரம்பத்திலிருந்தே ஜீவன் என்பதின் மர்மத்தில் அது என்ன என்கிற மர்மத்தில் அதிகமாக மூழ்கினவள் என்று சொல்லலாம். ஒரு ஆண் குழந்தைக்கு அவனுடைய சின்னம் ஒருவிதமான மற்றொரு 'தானாக' ஒருவிதமான 'ஆல்டர் ஈகோ'வாக வடிவம் பெறுகிறது. அதனால் அவனுக்கு ஒரு வெளிப்புறத் தன்மை கிடைக்கிறது. அதனால் அவனால் சீக்கிரமாகவே சுயாட்சி பெற முடிகிறது. ஆனால் ஒரு சின்னப் பெண்ணுக்கு தன் அங்கங்கள் எதிலும் தன்னை அடையாளம் கண்டுகொள்ள முடியாது. இதற்காக அவளுக்கு ஒரு வெளிப்புறப் பொருள் தேவையாக இருக்கிறது. பொம்மை! அதற்கு அவளைப் போல் முகம், கண், காது எல்லாம் இருக்கிறது. அது அவள் சொன்ன பேச்சைக் கேட்கிறது. அவளுடன் இருக்கிறது. அவளுக்கு அந்தப் பொம்மையில் தன்னை முழுவதும் அடையாளம் கண்டு கொள்ள முடிகிறது. அதைக் கடித்துப் பார்க்கிறாள். அதனுடன் பேசிப் பார்க்கிறாள். அதை அணைத்து முத்தம் கொடுக்கிறாள். எல்லாம் அவள் தன்னை அடையாளம் கண்டுகொண்ட சந்தோஷத்தின் வெளிப்பாடுகளே. அதனிடம் தான் புதிதாகக் கற்றுக் கொண்ட பாஷையைப் பிரயோகித்துப் பார்க்கிறாள். அவளுடைய தன்மை ஒருமைக்கு ஒரு ஸ்திரத்வம் கிடைத்து விட்டது.

அவள் பிடிவாதமும் இப்போது அதிகமாகிக் கொண்டு வந்தது. அட்டகாசமாகச் சத்தம் போட்டால் விரும்பினது நடக்கிறது என்பதை அவள் கண்டு பிடித்து விட்டாள். அவள் கையில் ஏதாவது கொஞ்சம் அபாயகரமான வஸ்து வைத்திருந்து அதை 'வேண்டாம்மா தாம்மா' என்று கவர்ந்தால் உடனே வீறிடுவாள். அழுகையல்ல. வீறிடல்! கோபம் கலந்த வீறிடல்! கவரப்பட்ட பொருள் கிட்டும்வரை அவள் ஒரு குட்டி ராட்சசி. அவ்வப்போது சின்ன விரல்களால் பார்வதியின் முகத்தில் கீறுவாள். புதிய பற்களால் கடிப்பாள். தூக்கி வைத்துக் கொண்டே இருக்க வேண்டும். கொஞ்சம் கீழே விட்டால் உடனே கூச்சல். ராத்திரி தூங்கும்வரை அவளை மார்பில் சாய்த்துக் கொண்டு நடக்க வேண்டும். நின்றால் போச்சு. ஒரே கத்தல். சிணுங்கல், விசும்பல், சிரித்தல் கை கொட்டுதல். எல்லாவற்றுக்கும் வெவ்வேறு பலன்கள் இருக்கின்றன என்பதை அவள் புரிந்து கொண்டு விட்டாள்.

பார்வதி அவளை வளர்த்து வரும் அலுப்பில் இப்போது சற்று இளைத்திருக்கிறாள்.

அப்பா சரியாகச் சம்மதம் கொடுக்கா விட்டாலும் ஐ.ஸி.எஸ்ப்.காரர் அப்பாவுக்கு



**வாய்ப் பாகத்தைச் சூடுகாட்டவோ, வெந்நீரில் முக்கவோ கூடாத பொருளுள்ள பாட்டில்களின் அடைப்பான் இறுகிக் கொண்டு திறக்க முடியாமலிருந்தால், ஒரு பட்டையான அழுத்தமான துணியை அடைப்பான் உள்ள பகுதியில் சுற்றி மோர் கடைவது போன்று முன்னும் பின்னுமாகச் சில நிமிடம் செய்து சூடேற்றிப் பிறகு திறந்தால் கைமேல் பலன்!**

**-பாத்திமுத்து**

மறுமணம் செய்வதற்கான ஏற்பாடுகளில் தீவிரமாக இறங்கி விட்டார். இந்துவில் விளம்பரம் கொடுப்பதற்கு முன் அதில் வரும் விளம்பரங்களை அலசினார்.

''குடும்பப் பொறுப்புள்ள 36 வயதான ஆரோக்கியமான பெண்ணுக்கு வாதூல கோத்ரமல்லாத தமிழ் பேசும் ஐயர் வகுப்பைச் சேர்ந்த மணமகன் தேவை. பத்தாம் வகுப்பு வரை படித்திருக்கிறாள். தையல் வேலையும், வீணையும் தெரியும். நம் சம்பிரதாயத்தில் அதிகப் பற்று உண்டு. ஜாதகம், மற்ற விளம்பரங்களுடன் விண்ணப்பிக்கவும் பெட்டி எண் 454.

''ஓய் இங்கே பாரும்! இதை விட்டா வேறே சான்ஸ் வராது! முப்பத்தாறு வயசு. அதிகம் படிச்சதும் இல்லை.''

''வயசு வித்தியாசம் ஜாஸ்தி இருக்கே.''

''என்ன அப்படி வித்தியாசம்?''

''ரெண்டாம் கல்யாணம்னு அவா ஒத்துப்பாளா?''

''கேட்டுப் பார்க்கிறது. ஒப்புத்துண்டா சரி. இல்லாட்டி நாம ஒரு விளம்பரம் கொடுக்கறது. எங்க உம்ம ஜாதகம்?''

''ஜாதகமெல்லாம் எங்கேயோ பறக்க விட்டுட்டேன்.''

''டேட் ஆஃப் பர்த்தாவது ஞாபகம் இருக்கா?''

''இருக்கு.''

''பொறந்த வேளை?''

''ராத்திரி பதினொரு மணின்னு எங்கம்மா எப்பவோ சொல்லியிருக்கா. எதுக்கு இதெல்லாம். சமையக்கார அம்மா போறுமேன்னு இப்பவும் எனக்குத் தோண்றது.''

''பேசாம இரும். உமக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி வைக்காட்டா எனக்குத் தூக்கம் வராது. உம் ஆம்படையா போறப்போ சொல்லிட்டுப் போயிருக்கா. அவரை நான் இல்லாதபோது நல்லா கவனிச்சுப்பேளான்னு கேட்டிருக்கா! முதல்ல உமக்குப் புதுசா ஜாதகம் கணிக்கலாம்.''

(தொடரும்)

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10-ந் தேதி 'மக்கள் உரிமை தினமாக' (Human rights day) ஐ.நா. சபை கொண்டாடுகிறது. அன்றைக்கு ஐ.நா. சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளில் இருந்து திறமைமிக்க கலைஞர்கள் அழைக்கப் படுகிறார்கள். இக்கலைஞர்கள் தங்கள் பண்பாட்டைக் கலையின் மூலம் உலகுக்கு நிரூபிக்கிறார்கள்.



இதற்கு முன் திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமியும், திருமதி வைஜயந்தி பாலியும் இவ்வாறு அழைக்கப் பட்டிருந்தார்கள். பத்தாண்டுகளுக்குப் பின் இவ்வருடம் தமிழகத்திலிருந்து திருமதி சுதாராணி ரகுபதி அழைக்கப்பட்டு இருக்கிறார். அவர் அமெரிக்காவிற்குப் புறப்படு முன் கொடுத்த பேட்டி —

# அட்டைப் படக் கட்டுரை

"**நா**ன் பரத நாட்டியம் மட்டுமே யல்லாமல் மேற்கத்திய நடனமும், இசையும் கூடப் பயின்றேன். உலக நடன வரலாற்றைத் தெரிந்து கொண்டிருக்கிறேன். ஆனால் நானறிந்த வரையில்உலகத்திலேயே வசீகரம் மிக்கதும், பாரம்பரியம் கொண்டதும், தலை சிறந்ததுமான நடன வகை பரத நாட்டியம் தான்."

என்று பெருமையுடன் கூறுகிறார் இவர். இந்தக் கலையில் இவ்வளவு ஈடுபாடு கொண்டுள்ள இவர் தன் கலையை எப்படி ஆரம்பித்தார்?

''மூன்று வயதிலேயே நான் பார்த்த சினிமாவில் வரும் நடனங்களை அப்படியே ஆடுவேனும். என் ஆர்வத்தைப் பார்த்த என் பெற்றோர்கள் முறையாகக் கற்பிக்க முடிவு செய்தார்கள்.

அப்போது நாங்கள் பெங்களூரில் இருந்ததனால் இங்கேயே ஒரு நட்டுவனாரை ஏற்பாடு செய்தார்கள். பிறகு நாட்டிய மேதை கிட்டப்பாவை பெங்களூருக்கு வரவழைத்தார்கள். அவரிடம் பல ஆண்டுகள் கற்றுக் கொண்டேன்.

இக்கலையை இலக்கண ரீதியாக, இன்றைய மேதைகளுக்கு ஏற்றவாறு மெருகூட்டி நாட்டியக் கலைக்குப் புத்துயிர் ஊட்டியவர்கள் 'தஞ்சாவூர் நால்வர்'தான். அவர்கள் வழி வந்த திரு கே. பி. கிட்டப்பா எனக்கு ஆசானாகக் கிடைத்தது நான் செய்த புண்ணியம்.

நாட்டியம் மட்டுமே கற்றுக் கொண்டால் போதாது. இசையும் முறையாகத் தெரிந்திருந்தால்தான், பாவங்களுக்குப் புது மெருகு ஊட்ட முடியும் என்று வயலின் சௌடய்யாவிடமும், மதுரை கிருஷ்ணனிடமும் கற்றுக் கொண்டேன்.

பிறகு நாட்டியத்தில் சிறு சிறு நுணுக்கமான அடவுகள், விளக்கங்கள், அபி நயங்கள் இவற்றை நாட்டிய திலகம் காலம் சென்ற கௌரி அம்மாளிடம் கற்றுக் கொண்டேன்.

கற்க கற்க இதற்கு முடிவே கிடையாது. இக்கலையைக் கற்க ஆரம்பித்து முப்பது ஆண்டுகள் ஓடிவிட்டன. இன்னும் நான் மாணவிதான்!''

என்று சிரிக்கிறார் திருமதி ரகுபதி.

## 10

அப்பா பெண் பார்க்கப்போனார். ஐ.ஸி. எஃப்.காரர்தான் அழைத்துப் போனார். பிள்ளைகளைப் புரந்தரதாஸர் சினிமாவுக்கு அனுப்பிவிட்டு, 23-பி பஸ்ஸில் ஏற்றி அப்பாவைப் பலி ஆடு மாதிரிதான் அழைத்துச் சென்றார். பஸ்ஸில் ஒரு பழைய நண்பர் பார்த்து 'எங்கே போறீங்க' என்று கேட்ட போது, அப்பா ''சும்மா! தோ மயிலாப்பூர் வரைக்கும்'' என்று மழுப்பினார். பஸ்ஸிலிருந்து இறங்கினதும் ஐஸிஎஃப், ''நிமிர்ந்து நடவும் ஓய். என்னமோ மாரியம்மன் கிடா வெட்டுக்குப் போற பிராணி மாதிரின்னா நடக்கிறீர்'' என்றார்.

''ஏம்பா என்னைப் போட்டு இப்படித் தொந்தரவு பண்றே? எனக்கு எதுக்குக் கல்யாணம்?''

''அட, சும்மா ஒரு காப்பி சாப்பிட்டுட்டு பேசிட்டுக் காத்தாட வந்துரலாமே. பொண் எஸ்.எல்.ஸியாம். பிடில் வாசிக்குமாம்... பிடிலா வீணையா?''

''சரிதான்.''

''சைதாப்பேட்டை ட்ரெஷரியில் எல்டிஸியா இருக்காம்.. குழந்தைகளுக்காக வேலையை வேணா விட்டுர்றேன் மாமான்னுது.''

''நீர் பார்த்தீரா பொண்ணை?''

''ஊம் பார்த்தேன், ஆப்படத்தான் இருக்கு. வயசு சொல்ல முடியல்லே. கச்சிதமாக் கோக்கோ கலர்ல புடவை உடுத்திண்டு நமஸ்காரம் பண்ணித்து. என்னை எப்படியாவது ஒப்பேத்திடுங்கோ மாமா. எங்கப்பாவும் அம்மாவும் தட்டிக் கழிச்சுண்டே வரா. ரெண்டாம் கல்யாணமா இருந்தா என்ன? என்னை இந்த இடத்தில இருந்து யாராவது அழைச்சுண்டு போனாச் சரின்னுது. பொல பொலன்னு கண்ல தண்ணி வந்துடுத்து.''

''அப்பா அம்மா கொடுமைப் படுத்தறாளா?''

''ஊகும், இல்லே. கல்யாணம் பண்ணித் தராமத் தட்டிக் கழிச்சுண்டு இருக்கா போலப் படறது. விளம்பரத்துக்கு இந்தப் பொண்ணே ஏற்பாடு பண்ணியிருக்கான்னா பாரேன்.''

''இந்தச் சிக்கல்ல என்னை மாட்டிவிட்டு வேடிக்கைப் பார்க்கணும்னு கங்கணம் கட்டிண்டு இருக்கேள்.''

''சேச்சே. நீ அவளைப் பார்த்ததும் பேசு. லட்சணமாத்தான் இருக்கா. ஆனா ஒரு காலு கொஞ்சம் இழுத்தாப்பல நடக்கிறா. லேசாத்தான் தெரியறது. அடக்கமா, பணிவா, லட்சுமிகரமா இருக்கா. வேற



# எப்போதும் பெண்

சுஜாதா

என்ன வேணும்? இரு கொஞ்சம் பழம் வெத்திலெ பாக்கு வாங்கிண்டு வரலாம்.''

''நிச்சயதார்த்தத்தை இப்பவே தீர்மானம் பண்ணிட்டேளா என்ன?''

''சேச்சே. மாப்பிள்ளை நீர்தானே. நீர் பார்த்துச் சரின்னு சொல்லிடணும்.''


மயிலாப்பூர் கச்சேரி ரோட்டை ஒட்டிய சந்தில் இருக்கிற மூன்றரை அடி அகலத்தில் கிரிக்கெட் ஆடிக் கொண்டிருந்தார்கள். அம்பாஸடர் கார் ஒன்று திணறிக்கொண்டு கடக்க முயற்சித்துக் கொண்டிருந்தது. மிருதங்க வித்துவான் என்று போர்டு போட்டிருந்தது. பால் பூத் குடைசாய்ந்திருந்தது. கம்பி போட்ட வீட்டில் ஒல்சேல் வியாபாரி ஒருவர் பனியன் பெட்டிகளாக அடுக்கியிருந்தார். இரண்டு இளைஞர்கள் படியவாரிக் கொண்டு இலக்கில்லாமல் நடந்து கொண்டு அடிக்கடி ஒரு வீட்டின் மாடியை நோக்கிக் கொண்டிருந்தார்கள். ''அம்மா பால்'' என்று தகரக் குவளையைப் பால்காரர் சப்தமிட்டுக் கொண்டிருக்க குறுகலாக இருட்டான அந்த வீட்டு நடையில் செருப்பை உதறிவிட்டு ''ராமாமிர்தங்கறது...'' என்று விசாரித்தார் ஐ.ஸி.எஃப்.

''நேரா நடந்து போங்கோ. கோடி போர்ஷன்.''

அப்பா தயங்கி குனிந்து வெட வெடப்புடன் அவர் பின் சென்றார்.

''வாரும்! ராகுகாலத்துக்குள் வந்துட்டேளே. சந்தோஷம். அடியே! வந்திருக்கா பாரு.''

## மைதா வடை



**தேவையான பொருட்கள்:**

உருளைக் கிழங்கு (பெரியது) 5
மைதா 200 கிராம்
மசாலா சாமான் -
உப்பு தேவையான அளவு
ஓ.கே. எண்ணெய் சிறிதளவு

**செய்முறை:**

மைதாவை நன்றாகச்சலித்துக்கொள்ளவும். உருளைக் கிழங்கை வேகவைக்கவும். வெந்த பிறகு உருளைக் கிழங்கைக் கையால் நன்றாக மசித்து, மைதா மாவுடன் சேர்த்து, மசாலா சாமான், உப்பு போட்டு, சிறிது தண்ணீர் விட்டுப் பிசையவும்.

பிறகு தோசைக் கல்லில் சின்னச் சின்ன வடைகளாகத் தட்டிப் போட்வும். ஐந்து அல்லது ஆறு வடைகளை ஒரே சமயத்தில் போடலாம். பின்னர், ஓ.கே. எண்ணெய் விடவும். வடைகளைத் திருப்பிப் போடவும். பக்குவம் பார்த்து வடைகளைஎடுத்துவிடலாம்.

சூடாகச் சாப்பிட்டால் வடைகள் நன்றாக இருக்கும்.

''பஸ் கிடைச்சு வர்றதுக்குள்ளே லேட்டாயிடுத்து.''

அந்த முதியவர் முதுகை விசிறியால் சொறிந்து கொண்டிருந்தார். சட்டைபோடவில்லை. பூணூல் அழுக்காக இருந்தது. ஒரே ஒரு அறை. அதன் ஓரத்தில் படுக்கை சுருட்டி வைத்திருந்தது. ஒரு ஈஸி சேர்தான் மொத்த ஃபர்னிச்சர். அந்த அம்மாள் பக்கத்துப் போர்ஷனிலிருந்து இரண்டு மோடா வாங்கிக் கொண்டு வந்து ''உட்காருங்கோ'' என்றாள். லேசாக உட்கார்ந்தார்கள். பெண்ணைக் காணவில்லை. ''காப்பிப் பொடி வாங்கிண்டு வரதுக்குப் போயிருக்கா. இப்ப வந்துருவா. இவர்தானா?'' என்று அப்பாவைப் பார்த்தார்.

அப்பா சற்றே நிமிர்ந்து அவரைப் பார்த்த நிலை அவருக்கு வயசு அறுபது இருக்கலாம் என்று தோன்றியது. முகத்தில் மூன்று நாள் நரை முட்கள் தெரிந்தன. கண்களில் சாம்பல் பூத்திருந்தது. கடுக்கன் அணிந்து கழற்றியிருக்க வேண்டும். காது தொங்கிப் போயிருந்தது. உடம்பு பூரா பெரிசு பெரிசாக மச்சப் பொட்டுக்கள்.

''இதோ வந்துருவா. உமக்கு ரெண்டாம் கல்யாணம்தானே?''

''ஆமா'' என்றார் ஐ.ஸி.எஃப். ''கடுதாசி எழுதியிருந்தேனே.''

''பார்த்தேன். பார்த்தேன். முதவ பிரசவத்திலே போயிட்டாளாமே.''

''ஆமாம்.''

''குழந்தை என்ன ஆச்சு?''

''அது வந்து வேற இடத்திலேவளர்றது''

''வேற இடத்திலேன்னா? இப்பக் கைல குழந்தை கிடையாதா?''

''இப்பக் கிடையாது. அப்பறம் வரவழைச்சுக்கலாம்.''

''எங்க வளர்றது? ஏதாவது ஹோம்லயா?''

''இல்லே. தெரிஞ்சவா கிட்ட.''

''உறவுக்காராளா?''

''இல்லை. தெரிஞ்சவா. மாமி! சம்பிரதாயமா ஒண்ணும் வேண்டாம். டிபன் எல்லாம் பண்ணிட்டுத்தான் வந்திருக்கோம். சும்மா பேசத்தான் வந்தோம்.''

''இருக்கட்டும்'' என்றது மாமி மூலை.

''என்ன பேசவே மாட்டேங்கறார் மாப்பிள்ளை!''

'மாப்பிள்ளை' என்றது உறுத்தியது. மூஞ்சியை எங்கேயாவது கொண்டு போய் மறைத்துக்கொள்ள வேண்டும் போல இருந்தது.

''இப்ப வந்துருவா. ஜாதகமெல்லாம் பார்த்தேன். சரியா கணிக்கலை போல இருக்கே. கடகம் முதல் ஆறும் ராசியில வியாழன். தீர்க்காயுசுதான்.''

''அண்ணா இதெல்லாம் அவசர ஜாதகம். முதல்ல அண்ணாவுக்கும் மாமிக்கும் சம்மதம் வேணும். அதான் முக்கியம்.''

''என் சம்மதம் என்ன ஓய்! பொண் தீர்மானிச்சுட்டா... ஏண்டி அவ வராளா?''

''வந்துருவா.''

பெண் வந்துவிடலாம் என்ற அவசரத்துடன் அவர் பேசுவதாகப் பட்டது.

''கல்யாணம் பண்ணிக்கிறேன்னு ஒத்தைக் கால்ல நிக்கறா. இப்ப ஸாரைப் பத்திப் பேச்சில்லே. எதுக்காக இரண்டாம் கல்யாணம் பண்ணிக்கணும்? நாங்க பாக்க மாட்டமா? எட்டுருக்குப்பாப்பமே! சொன்ன பேச்சைக் கேக்க மாட்டேங்கறுளே! என்ன வயசு? முப்பத்தி ஆறு ஒரு வயசா? இவளே தான் விளம்பரம் கொடுக்கணும்னு. நான் எழுதிக் கொடுத்தேனே ஒழிய விளம்பரம் கொடுக்கணும்னு ஒத்தைக் கால்லே நின்னது இவதான்.! பெரியவர் இப்போது அப்பாவை நேராகப் பார்த்து கைகூப்பிக் கொண்டு சொன்னுர். ''இத பாரும் சுவாமி! என் பொண்ணுக்கு உங்களைப் பிடிச்சிருந்தா பேஷாக் கல்யாணம் செஞ்சுக்கும். ஆனு எங்க ரெண்டு பேரையும் திராட்டில விட்டுராதேயும். என் ஸன் ஐதராபாத்திலே இருக்கான். மாதம் ஐம்பது ரூபா அனுப்பறுன். அவ்ளதான். இவ சம்பாத்தியத்தித்தால தான் இதுவரைக்கும் காலட்சேபம் பண்ணிண்டிருக்கோம். இவ கல்யாணம் பண்ணிண்டு வேலைய விட்டா நாங்க தெருவிலே தான் நிக்கணும். குடக்கூலியே ஐம்பது ரூபா. ரெண்டு கிழத்துக்கும் வேற போக்கில்லே. கண்ல காட்டராக்ட் வந்துருத்து. ஆப்பரேஷன் பண்ணிக்கணும். எங்களைக் கைவிட்டுராதேயும். அதான் நான் கேட்டுக்கறது.''

அப்பா பேசாமல் இருக்க ஐஸிஎஃப்தான்- ''அப்படியெல்லாம்நடக்கவிட்டுருவோமா?'' என்ருர்.

''அவரைச் சொல்லச் சொல்லும். அவர் பேசவே மாட்டேங்கருரே.''

இப்போது மவுனமாக அவர்கள் காத்திருக்க அப்பாவுக்குப் பேச வேண்டிய அவசியம் வந்து விட்டது. ''பொண்ணு வரட்டும். முதல்ல அவ இஷ்டத்தைக் கேட்டு வெச்சுக்கலாம்.''

''வருவா வருவா. அதுக்குள்ளே நான் சொல்ல வேண்டியதை சொல்லிட்டேன். என்னைவிட வயசிலே சின்னவர். கால்ல விழ முடியாது!'' அவர் சட்டென்று நிறுத்தி விட்டார். ''அவாள்ளாம் வந்தாச்சாப்பா'' என்று குரல் கேட்க அந்தப் பெண் உள்ளே நுழைந்தாள். ''வாங்கோ. டிகாக்ஷன் போட்டுட்டியாம்மா?''

உள்ளே வந்தவளுக்கு முப்பத்தாறு வயது சொல்ல முடியவில்லை. நெற்றியில் பெரிதாகக் குங்குமம் அணிந்திருந்தாள். உடம்பை அதிகமாகப் போர்த்தியிருந்தாள். சடை தெரிந்தது. அதில் ஒன்றிரண்டு நரை மயிர்கள் தெரிந்தன. முகத்தில் லேசாக, மிக லேசாக அம்மை வடுக்கள் தெரிந்தன. உள்ளே வரும்போது கால் நொண்டல் கொஞ்சம் தெரிந்தது. மஞ்சளில் சாதாரண வாயில் புடவை உடுத்தியிருந்தாள். தோற்றத்தில் ஓர் ஆயாசமும் இருந்தது. பெண் என்கிற ரீதியில் எவரையும் கவர்பவளாகத் தோன்றவில்லை. எதிரே ஸ்வாதீனமாக தரையில் பாய் போட்டுஉட்கார்ந்தாள். ஐஸிஎஃப்,

''இதோ இவர்தாம்மா'' என்ருர். ஒரு முறை சகஜமாக அப்பாவைப் பார்த்தாள்.

''எல்லாம் சொல்லிட்டிங்களா மாமா?'' என்ருள்.

''சொல்லிட்டேம்மா.''

''குழந்தைகளை அழைச்சுண்டு வரலையா?''

''இல்லை'' என்று அப்பா தலையாட்டினுர்.

பொதுவாக யாரையும் பார்க்காமல் பேசினுள். முகத்தில் அதிக சலனமில்லாமல் தன் கைவிரல்களைப் பார்த்துக் கொண்டே சொன்னுள். ''பதினேஞ்சு வருஷம் கவர்ன்மெண்டு உத்தியோகம் பார்த்திருக்கேன். கல்யாணம் இல்லாமலேயே என்னுல வாழ்நாள் முழுதும் இருந்துவிட முடியும். அதுக்கு எனக்குத் தைரியமும் இருக்கு. அப்பா அம்மாவை வெச்சுண்டு தினப்படி ஆபீசுக்கும் கோயிலுக்கும் போயிண்டு இன்னும் வயசாகி, எல்லாம்நின்னு போறவரைக்கும் என்னுல தொடர முடியும். இப்பக்கூட நான் செய்யறது பைத்தியக்காரத்தனமான செயலோன்னு தோணறது. அப்பா அம்மாவை யார் பார்த்துப்பாங்கற கேள்விக்கு இன்னும் விடை கிடைக்கலே. ஒரு வேளை நான் உங்க ஆத்துக்கு வந்தா இவ்ளை யும் கூடக் கூட்டிண்டு வர்ற ஸ்திதி ஏற்படலாம். அது ஏற்படக் கூடாதுன்னு விரும்பறேன். எனக்கு ஒரு அண்ணு இருக்கான், ஐதராபாத்திலே. செயலா இருக்கான். அவனைப் படிக்க வைத்தது இவர். அம்பது ரூபா அனுப்பறுன். அதோட அவன் கடமை ஓஞ்சு போனதா நினைச்சுண்டிருக்கான். ஏன்னு, வாழ்க்கை பூரா இவாளை வெச்சுக்கறதுக்கு, சம்பாதிச்சுச் சோறு போடறதுக்கு நான் இருக்கேன். நான் இவாளை விடமாட்டேன். தெரியும். அதான் கண்டுக்காம இருக்கான். இவாளுக்கும் அங்க சரிப்பட்டு வரலே. மாட்டுப் பொண்ணேடை ஒத்துப் போகலே. அதுக்காக நான் வாழ்நாள் பூரா தியாகம் பண்ணணுமான்னு மலைப்பா இருக்கு. ஆரம்பத்திலே எனக்குக் கல்யாணம் பண்ணி வைக்க இவாளும் எத்தனையோ முயற்சி பண்ணிப் பார்த்தா. ஆனு இந்தப் பாழாப் போற காலு, இதுக்கே பத்தாயிரம் ரூபா கேட்டா. இப்ப ரேட்டு என்னவோ தெரியலே. எல்லாம் ஏறிப் போய்த்தான் இருக்கும். என்க்கு இவா கல்யாண முயற்சியை விட்டு ஆறு வருஷம் ஆயிடுத்து. நான் இவாளைக் குற்றம் சொல்லலே. ஆனு இந்த வருஷம் தீர்மானிச்சுட்டேன். அண்ணன், அவன் பொறுப்பை உணர்ந்து இவாளை அழைச்சுண்டு போய்த்தான் ஆகணும். நான் என்ன அடிமாடா? எனக்கு விலங்கு போட்டு எந்த நாளும் இவாளுக்கு சிசுருஷை பண்ணணும்னு எந்த சாஸ்திரத்திலே எழுதி வச்சிருக்கு? வேற வழியே இல்லேன்னு நான் செஞ்சுதான் ஆகணும். .....யேத் தேச்சுண்டு குத்துக்கல்லாட்டாம்

உக்கார்ந்திருக்கான். மணி ஆர்டர்ல கூட சௌக்கியமா இருக்கியான்னு கேக்கறது கிடையாது. எத்தனை நாளைக்கு நானும் தியாகம் பண்ணிண்டு இருப்பேன்? அதான் பார்த்தேன். தீர்மானிச்சுட்டேன். எனக்கு கல்யாணம் ஆயிடுத்துன்னு அவன் அழைச்சுண்டு போய்த்தானே ஆகணும்? பாத்துரலாம்! எதோ நான் அப்பட்டமாப் பேசறேனேன்னு நினைச்சுக்காதேங்கோ. நான் சண்டைக்காரி இல்லே. எனக்குக் கொஞ்சம் வெளிச்சம் வேணும். வேற மனுஷா, வேற இடம் வேணும். உங்க பிள்ளைகளை யெல்லாம் நான் பேஷாப் பார்த்துப்பேன். நன்னாவே சமைப்பேன். வர்ணம்வரைக்கும் வீணை வாசிக்கப் பழகியிருக்கேன். வேலையை விட்டுர்றேன். என்னை ஏத்துக்குங்கோ.'' என்று அப்பாவை நிமிர்ந்து பார்த்துக் கேட்டாள். அப்போது அந்தப் பெண்ணின் கண்களில் கண்ணீர் லேசாகத் திரையிட்டிருந்தது.

''உங்க பிள்ளைகள் பேர் கூட எனக்குத் தெரியும், கேட்டு வெச்சுண்டுட்டேன்.''

அந்தப் பெண்ணின் தாயார் முக்கால் முக்காலாக மூன்று டம்ளரில் காப்பி கொண்டு வந்து வைத்தாள். அப்பா பெரியவரைப் பார்த்தார். அவர் கண்களில் ஒரு சரித்திரமே தெரிந்தது. வேண்டாம் என்று கெஞ்சுவது போல் இருந்தது.

''உன் பேர் என்னம்மா?''

''காமாட்சி! பேரையாவது சரியா வெச்சாளா?''

அப்பா காப்பியை எடுத்து லேசாக உதட்டால் தொட்டுப் பார்த்தார். அவர் பதிலுக்காகத்தான் எல்லோரும் காத்திருந்தார்கள்.

ஒரு முழுங்கு முழுங்கிவிட்டு, ''வேணும்னா தாத்தாவும் பாட்டியும் உங்க கூட வந்து எங்காத்திலே இருக்கலாமே'' என்றார்.

''அந்தப் பேச்சே எடுக்காதேங்கோ. ஏன், அவன் வந்து கூட்டிண்டு போகட்டுமே. அவன் செய்யக் கூடாதா? வேத்து மனுஷனா? பிள்ளையில்லே நீ? உனக்காகக் கிழம் கடன் வாங்கிப் படிக்க வைக்கலே? திருவிடை மருதூருக்கு நடையா நடக்கலே? தாலுக்கா பீஸ்லே ரிடையர் ஆனதும் மருந்துக் கடையில கணக்கெழுதலே?...

''அவர் சொல்றதை முழுக்கக் கேக்கலாமேம்மா'' என்றார் பெரியவர்.

''ஸார், இத பாருங்க, என்னை மட்டும் தான் நீங்க கல்யாணம் பண்ணிக்கப் போறீங்க. எங்க அப்பா அம்மாவையும் சேர்த்து இல்லே!''

''நான் சொல்ல வந்ததுஎன்னன்னா பெரியவருக்கு இந்தக் கல்யாணத்துனால நாதி இழந்து போயிடாதுன்னு....''

''அது வேற விஷயம். புள்ளை இருக்கிறவரைக்கும் இவாளுக்கு அங்க உரிமை இருக்கு, நான் சொல்றது சரியா இல்லையா?''

''சரி'' என்றார், (தொடரும்)

அற்புதமான ஸுமீத்! இதன் வகையில் இந்தியாவிலேயே முதலாவது. நாடெங்கிலும் மேன்மேலும் அதிக இல்லத்தரசிகளுக்கு வியப்பூட்டி வருகிறது.

ஸுமீத்தில் மட்டுமே, எல்லா வேலைகளுக்கும் பயனுரும், விசேஷமாக வடிவமைக்கப்பட்ட, பல்–பயனுள்ள ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஜாடி. அதன்மீது உள்ளே பார்க்கக் கூடிய அக்ரிலிக் மூடி. எனவே ஸுமீத் இயங்குவதைக் கண்ணெதிரில் காணலாம்.


பல்வேறு வேலைகளை விரைவிலும் எளிதிலும் செய்து முடிக்க, இப்போது இதில் 4 அலகு அமைப்பு பாகங்கள்:

ஈரப் பண்ட அரைவைக்காக.
உலர் பண்ட அரைவைக்காக.
கடைய, கலக்க, சாறு பிழிய.
மாமிசத்தை அரிக்க,
காய்கறிகளை நறுக்க.

இவை தவிர, சப்பாத்தி, பூரி மற்றும் அப்பளத்துக்காக மாவை விழுதுபோல் பிசைய விசேஷ இணைப்புப் பாகம். அதோடு கேக் மாவை நன்ருகக் கலவை செய்ய விசேஷ 'ஹுக்'...

இவை மட்டுமா? ஸுமீத்தில் 30 நிமிட்ங்கள் வரை நிற்காமல் ஓடக்கூடிய ஹெவி ட்யூட்டி மோட்டார்.

அற்புதமான ஸுமீத் ஒன்றுதான் முழுமையான கிட்சன் மெஷின். இதை அடைய எத்தனை நாள் வேண்டுமானுலும் காக்கலாம்.



ஈர அரைவை—வடை, இட்டிலி, தோசைக்காக உளுத்தம் பருப்பு மற்றும் அரிசியை அரைக்க—3½ நிமிடங்களில்.




உலர் அரைவைக்காக—எல்லா வித மசாலாக்கள்—மிளகாய் வற்றல், மிளகு, மஞ்சள், கொத்துமல்லி விதை ஆகியவற்றை அரைக்க.



பொடிக்க—1 நிமிடத்தில் மாமிசத்தைப் பொடிக்க. காரெட், வெங்காயம், தேங்காய், மற்றும் கொட்டைகளை நறுக்க—விஞடிகளில்.



அரைக்க—2 நிமிடங்களில் தேங்காய் சட்னி அரைக்கலாம். அல்லது விஞடிகளில் கொத்துமல்லி சட்னி அரைக்கலாம்.



கடைய—லஸ்ஸி/மில்க் ஷேக் ஆகியவற்றை ஒரே நிமிடத்தில் தயாரிக்க அல்லது நிமிடங்களில் மயோன்னஸ் தயாரிக்க, வீட்டிலேயே வெண்ணெ கடையலாம்.



மாவு பிசைய—சப்பாத்தி, பூரி, ஞன் தயாரிக்க 2 நிமிடங்களில் மாவு பிசையலாம். கேக் மாவை மிகவும் சன்னமாகப் பிசையலாம்—3½ நிமிடங்களில்.

# ஸுமீத்®

## இது ஒன்றே முழுமையான கிட்சன்மெஷின்

இது தவிர கிடைக்கிறது ஸுமீத் டொமஸ்டிக் (பிசையும் இணைப்பு இல்லாமல் கிடைக்கிறது. அதை தனியாகவும் வாங்கிக கொள்ளலாம்.)

அற்புதமான ஸுமீத் பரவலாகப் பல்வேறு பணிகளைச் செய்கிறது—மற்ற எல்லா வீட்டுபயோக மிக்ஸர்களை விடச் சிறப்பாக.

எப்போது நாங்கள் இலவசமாக இயக்கிக் காட்டுகிரேம் என்பதைக் கவனித்து வாருங்கள். உங்களுக்கெனவே ஸுமீத சிறபபாக இயஙகுவதைக் காணுங்கள் !

தயாரிப்பாளர்கள் : பவர் கண்ட்ரோல் அண்ட் அப்ளையன்ஸஸ் கம்பெனி,
F/11 இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை 600 058, இந்தியா
போன் : 633 340
வெளிநாட்டு அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள் :
மெஸர்ஸ் எலேட் ரேடியோ அண்ட் எஞ்ஜினியரிங் கம்பெனி லிமிடெட்,
26, கெய்ஸர் ஸ்ட்ரீட், கொழும்பு, ஸ்ரீலங்கா, போன் : 29744
மெஸர்ஸ் டொமஸ்டிக் அப்ளையன்ஸஸ் இன்டர்நேஷனல், ஸுமீத் அப்ளையன்ஸ்
சென்டர், 401, டான்லாண்ட்ஸ் அவின்யூ யூனிட் நெ. 14, டோரோன்டோ,
ஒன்டாரியோ, கெனடா M4J-3S2, போன் : (416) 421-2997.
பவர் கண்ட்ரோல் அண்ட் அப்ளையன்ஸஸ (மலேசியா) Sdn, bhd., 5எ. ஜாலன் 8/1டி,
ஜாலன் சுல்தான், பெட்டலிங் ஜாயா, மலேசியா, போன்: 561347/561549
பெகாஸஸ் பிரைவேட் லிமிடெட், 528, ஆர்ச்சர்ட் டவர்ஸ், 400, ஆர்ச்சர்ட் ரோட்,
சிங்கப்பூர் 9. போன்: 2351146

OBM/5628 R /1 TM



## 11

கல்யாணம் அடக்கமாக நடந்தது, பெண் வீட்டில்தான் பத்துப் பேர் வந்திருந்தார்கள். அப்பா ஸைடிலிருந்து கல்யாணத்துக்குக் காரண கர்த்தரான ஐஸிஎஃப் காரர், அவர் மனைவி, பக்கத்து வீட்டுக்காரர், அப்பாவிடம் எப்படியாவது ஒரு இன்சூரன்ஸைத் தலையில் கட்டிவிட வேண்டும் என்று துரத்துகிற நாக ராஜ ராவ் இவ்வளவு பேர்தான். குழந்தைகளை என்ன செய்வது என்று புரியாமல் தவித்துவிட்டு அழைத்துச் செல்வது என்று தீர்மானித்து விட்டார். ''யாருக்கப்பா கல்யாணம்'' என்றான் மது.

''எல்லாம் உங்கப்பாவுக்குத்தாண்டா'' என்றார் ஐஸிஎஃப். ''உங்களுக்கெல்லாம் புதுசா ஒரு அம்மா வரப்போறா.''

''அம்மா ஊருக்குப் போயிருந்தா திரும்பி வரப் போறாளா?''

''சே, இவனைப் பார்ரா! இது வேற அம்மாடா'' என்று மது சின்னவனைப் பரிகசித்தான்.

''அம்மா செத்துப் போயிட்டாடா.''

''இந்தா கண்ணு வாழைப் பழம்'' என்று பெண் வீட்டார் யாரோ மதுவுக்குக் கொடுக்க அவன் தயக்கத்துடன் வாங்கிக் கொண்டான். ''ஐயோ பாவம். தாயில்லாக் குழந்தைகள் ஏங்கிப் போயிருக்கு. எல்லாம் நம்மாத்துப் பொண்ணு எட்டூருக்குப் பார்த்துப்பா. அதும் பதவிசும் காரியமும் யாருக்கு வரும்?''

கொஞ்சம் குரலைத் தழைத்து ''ஆமா, கிழங்களை என்ன பண்ணப் போறா வெச்சுக்கப் போறாளா இல்லை புள்ளை கிட்ட அனுப்பிச்சுறப் போறாளா?''

''புள்ள வரலியாமே! தங்கை கல்யாணத்துக்கு வராம என்ன தலை போற காரியம்?''

''அவனுக்கு இந்த இரண்டாம் கல்யாணத்துல இஷ்டமே இல்லையாம்.''

அப்பா சரிகை வேட்டி கூட உடுத்திக் கொள்ளவில்லை. எப்படியாவது அதிகப்பேர் பார்க்காமல் சீக்கிரம் கல்யாணம் முடிந்து விட்டால் போதும் என்று உணர்ந்தார். கல்யாணம் எழும்பூரில் ஒரு சந்தில் பெருமாள் கோயிலில் நடந்தது. நாயனம் கூட அடங்கித்தான் வாசித்தார்கள். அதிகாலை முகூர்த்தம். எல்லோரும் எட்டு மணிக்குச் சாப்பிடத் துவங்கி விட்டார்கள். பிள்ளைகள் வாசலில் பக்கத்து வீட்டில் இடித்துக் கட்டிக் கொண்டிருந்த இடத்தில் மணல் கொட்டியிருந்தது. அதில் சண்டை போட்டுக்கொண்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். உற்சாகமாகத்தான் இருந்தார்கள். சதாசிவத்துக்கும் பத்திரிகை போயிருந்தது.

''என்னது இது! கிளவன் மறு கல்யாணம் பண்ணிக்கப் போறானுமே. என்ன பார்வதி போயிட்டு வந்துரலாமா?''

# எப்போதும் பெண்

## சுஜாதா



''அங்க எதுக்குங்க நாம போவணும்? நமக்கும் அவங்களுக்கும்தான் சம்பந்தமே இல்லேன்னு ஆயிருச்சே. இப்ப போயி ஒட்டிக்கிட்டா பொண்ணைக் கொண்டான்னு கேப்பாங்க. எதுக்கு வம்பு?''

''இது போயிருமா? உன்னே விட்டு அசங்க மாட்டேங்குதே!''

''வாடி என் கண்ணே!'' என்று அவள் அழைத்தாள். ''இதை விட்டுட்டு நான் உயிரோட இருக்க முடியுமா?''

''இப்பப் புதுப் பொண்டாட்டி வந்து புள்ளையைக் கொண்டான்னு கேட்டாக்க என்னதான் சொல்றதாம்?''

''அதெல்லாம் கேட்க மாட்டாங்க. அவங்க நம்ம செல்லத்தை மறந்து போயாச்சு இல்லே கண்ணு?'' என்று அவளைக் கேட்டாள். இப்போது அவள் பார்வதியை முழுமையாகத் தன் தாயாகக் கொண்டு விட்டாள். அவள் மன விளிம்பில் எங்கோ ஒரு மூலையில் இனந்தெரியாது பதிந்திருந்த மூன்று சிறுவர்கள், ஒரு வயதான முகம் இதெல்லாம் அழிந்துபோய் விட்டது. அல்லது அமிழ்ந்து போய்விட்டது. அவளுக்கு இப்போது படிப்புச் சொல்லிக் கொடுத்து, சினிமாப் படங்கள் பார்க்க வைத்து துக்கம் என்றால் என்ன, தாயை இழப்பது என்றால் என்ன என்று சொல்லிக் கொடுத்தால்தான் தன் பிறப்பில் நிகழ்ந்த அதிர்ச்சி தரும் விஷயங்கள் அவளுக்கு முக்கியமாகும். இப்போது அவள் மேல் அந்தப் போர்வை முழுவதும் மூடப்பட்டு விட்டது.

அவளைச் சுற்றி ஏராளமான, அவள் வயதுக்குப் பெரும்பாலும் ஒவ்வாத பொம்மைகள் இருந்தன. சாவி கொடுத்தால் சாகசங்கள் செய்யக் கூடிய பொம்மைகள் அவளைக் கவருவதில்லை. ஒரு அழுக்குத் துண்டு ஒரு குறிப்பிட்ட துண்டு வைத்துக் கொண்டு அதன் நுனியில் ஒரு நூல் தேர்ந்தெடுத்து அதைத் தன் மூக்கில்லேசாகநிரடிக்கொண்டே கட்டை விரல் சப்புவாள். இதாலேயே அவளுக்குப் பேச்சின் ஆரம்ப வார்த்தைகள் வரத் தாமதமாகும் என்று கொஞ்ச நாள் விரலுக்கு உறை வைத்துப் பார்த்தார்கள். வேப்பெண்ணை தடவிப் பார்த்தார்கள். எதற்கும் அவள் மசியவில்லை. ரப்பர் சூப்பிக்கு இதுவே பரவாயில்லை என்று விட்டு விட்டார்கள். ''எல்லாம் வயசானு சரியாயிடும்''

ஒரு தாய்க்கும் மகளுக்கும் ஏற்படும் உறவு சிக்கலானது. பார்வதி ரத்த சம்பந்தமில்லைதான். இருந்தாலும் அந்தத் தயக்கம் எப்போதோ அவளிடமிருந்து விலகிப் போய், அவள் தாய், தான் மகள் என்பதைப் பற்றி அவளுக்கு இப்போது சந்தேகமே இல்லைதான்.

பெற்ற தாயும் மகளும் போலத்தான் வளர்ந்தது. புதியவளுக்கு அம்மா என்பவள் எந்த விதத்திலோ தன்னைப் போல ஒரு பெண், தன்னைத் தன் சுதந்திரத்தை இச்சைகளை ஒழுங்குபடுத்தி அவளுடைய கொள்கைகளைத் தன்மேல் திணிக்கப் போகிறவள் என்பது பதிந்து, ஒரே சமயம் அவளுக்கு அந்த அம்மாவின் பேரில் வெறுப்பும் விருப்பும் ஏற்பட்டது. பார்வதிக்கு அவளை முழுமையாகத் தன்போல் ஆக்கிவிட வேண்டும், தன் பழக்கங்கள், நம்பிக்கைப் பேச்சுக்கள் எல்லாம் அவளுக்கும் வரவேண்டும், அவளுடைய பழைய அடையாளங்கள் முற்றிலும் மாறிட வேண்டும் என்று ஆவல். பிரயத்தனப்பட்டாள். அந்தச் சிறு பெண் வளர்ந்த சூழ்நிலையில் எப்போதும் பெண்களே சுற்றியிருந்தனர். பெண்மை மிளிரும் விஷயங்களே, அனுபவங்களே அவளுக்குத் தரப்பட்டன. சுற்றிலும் பெண் குழந்தைகளே பரவியிருந்தனர். வாசலில் அவளை மடியில் வைத்துக் கொண்டு வேடிக்கை காட்டும் போது, பெண்களின் பாண்டி விளையாட்டுத் தான் காட்டப் பட்டது. 'பொண்ணு' என்றே கூப்பிட்டு அவள் பெண்மை சதா ஸ்திரப்படுத்தப்பட்டது. அந்தச் சின்ன வயசிலேயே அசௌகரியமான பட்டுப் பாவடையும் சட்டையும் அணிவிக்கப் பட்டாள். ஒரு மணி நேரம் வாரிப் பின்னப் பட்டாள். அடிக்கடி கண்ணாடி காட்டப்


பட்டாள். நீ ஒரு பெண் ஒரு பெண் என்கிற பாடம் அவளுக்குத் திருப்பித் திருப்பி பல்வேறு தினுசுகளில் அளிக்கப்பட்டது. அவள் தக்கா பிக்கா வென்று நடக்க முற்பட்டபோதும் அங்கே பிச்சைக்காரன் போலீஸ்காரன் பூச்சாண்டி முதலியோர் இருக்கிறுர்கள் என்று சொல்லப்பட்டாள். 'தூங்கிப் போயிடு. பூச்சாண்டி வந்து பொண்ணு தூங்கிட்டாளான்னு கேட்கும். சும்மா இருக்கியா சுருவத்தைக் காட்டட்டுமா சொல்லும்!'

ஒரு பெண் குழந்தை இந்த வளர்ப்பு முறைக்கு ஆளாகும்போது அவள்ஒருவிதமான கனவுலகில் சஞ்சரிக்கத் தொடங்குகிறுள் அந்தக் கன்வுலகில் அவளுடைய பெண்மை வடிவம் பெறுகிறது. அவளுடைய குழந்தை உலகத்தில் தாய் என்பவள் தந்தையை விட முக்கியமானவளாகிறுள். அவளுடைய தாய் வழி உலகத்தில் எல்லா செயல்களிலும் அவள் தன் தாயைத்தான் பின்பற்றுகிறுள். தன் பொம்மையுடன் பேசும்போது, அல்லது அதற்கு அலங்காரங்கள் செய்யும்போது, அதைத் திட்டும்போதெல்லாம் அவள் தன் தாயின் பாத்திரத்தைத்தான் ஏற்று நடிக்கிறுள். இப்போது அவளிடத்தில் தாய் மகள் என்கிற இரட்டை வேடங்கள் இருக்கின்றன. தன் பொம்மையைச் சில வேளைகளில் கையைக் காலைப் பிய்த்துத் தண்டிக்க முற்படும்போது அவள் தாயாகவே மாறுகிறுள். தன்னையே தண்டித்துக் கொள்கிறுள்.

**ம**துவுக்குப் புதிதாய் வந்தவளைப் பிடிக்கவில்லை. இவள் ஒன்றும் அம்மா போலவே இல்லை. சின்னதாகக் கச்சலாக இருக்கிறுள். அம்மாவைத் தொட்டுக் கொண்டே இருக்க வேண்டும் போல் இருக்கும். இவள் கிட்டப் போகவே பிடிக்கவில்லை. அப்பாவும் அவளும் கதவைச் சாத்திக் கொண்டு படுத்துக் கொள்வது உவ்வே! ச்சீ!

''மது இங்கே வா'' என்று கூப்பிட்டால் பேசாமல் இருப்பான். மூன்று தடவை கூப்பிட்டு, ''ஏண்டா அவ கூப்பிடறது காதில விழலே!'' என்று அப்பா அதட்டினதும் போய் ''என்ன?'' என்பான். அவளை நேராகப் பார்க்க மாட்டான்.

> பால் பொங்காமல் இருக்க பாத்திரத்தில் கண்ணுடி கோலிகளைப் போட்டு வைக்கலாம்
>
> - ஜனனி முரளி



''சமத்தோல்லியோ... கோடிக் கடைக்குப் போய் ஒரு டீ பொட்டலம் வாங்கிண்டு வா.''

''மாட்டேன் போ!''

''போடா கண்ணு! சொல்றதைக் கேட்டா காட்பரீஸ் சாக்லேட் அன்னிக்குப் போல வாங்கிண்டு வருவேன்.''

''எனக்குக் காட்பரீஸ் ஒண்ணும் வேண்டாம்.''

''பின்ன என்னடா வேணும்?''

''நீ உங்காத்துக்குப் போயிடணும்.''

''ஏண்டா அப்படிச் சொல்றே? இதாண்டா எங்காம்.''

''இல்ல. உங்காம் மயிலாப்பூர்ல இருக்கு. அங்க யாரோ தாத்தா இருக்கா. அங்க போ.''

''என் என்னைக் கண்டா பிடிக்கலையா உனக்கு?''

''நீ நொண்டறே! நொண்டி! நொண்டி!'' அப்பா பக்கத்து அறையிலிருந்து வந்து ''என்னடா சொன்னே'' என்று குனிய வைத்து முதுகில் சாத்தினுர்.

காமாட்சி தடுத்தாள். ''அடிக்காதீங்கோ. அப்புறம் நான்தான் காரணம்னு சொல்லிட்டு என்கூட ஒட்டவே மாட்டான். இந்த மதுதான் கொஞ்சம் பிடிவாதமா இருக்கான். கொஞ்சம் விவரம் புரியறது. ரெண்டுங்கெட்டான் அதான், கொஞ்ச நாளில சரியாப் போயிடும். மது இங்க வா! நொண்டினு பாவமில்லேடா! அவாளைக் கேலி பண்ணலாமா அது தப்பில்லையா?''

இப்போது சின்னவன் சேர்ந்து கொண்டு ''நொண்டி, நொண்டி'' என்று நொண்டிக் கொண்டே அறை முழுவதும் சுற்றி வந்தான். ''நொண்டி நொண்டி நொடிச்சுக்கோ வெல்லம் தரேன் கடிச்சுக்கோ!''

''போங்கடா எல்லாரும் வாசலுக்கு'' என்று அப்பா துரத்திவிட்டு தன் மனைவியைப் பார்த்தார்.

''கிட்டயே வர மாட்டேங்கறு மூணு பேரும்.''

''இதிலெ அந்தப் பொண்ணை வேறே கூப்ட்டு வெச்சுக்கணும்கிறே.''

''வெச்சுண்டுதான் ஆகணும். அது நம்மாத்துக் குழந்தை இல்லையா?''

''பொறந்தது லேர்ந்து அங்கதான் வளர்றது.''

''நல்ல அழகா இருக்குமாமே. நாம போய் ஒரு தடவை பார்த்துட்டு வரலாமா?''

''முதல்ல இந்த ராட்சசன்களச் சமாளி.''

''சமாளிச்சுடுவேன். கவலைப்படாதீங்கோ. சின்னது பரவாயில்லே. ஒரு வழிலே சேர்த்துக்கலாம்.''

''மூணையும் நாலு மொத்து மொத்து. எல்லாம் சரியாப் போயிடும்!''

''உம்ஹூம். அவங்களை நுனி விரலாலே தொட மாட்டேன்.''

''எதுக்குச் சிரிக்கிறே?''

''இளையா குழந்தைகளைப் படுத்துவாம்பா. இங்கே தலைகீழா இருக்கு.' (தொடரும்)

12

காமாட்சிக்கு எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டு ஓடிப்போய்விடலாமா என்று தோன்றியது. இந்தக் குழந்தைகள் மூன்றும் அவளைத் தண்ணி காட்டின. மதுவைச் சமாளிக்கவே முடியவில்லை. அவன் மன ஆழத்தில் இருந்த வெறுப்பை அவளால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. அழைத்தால் வரவே மாட்டான். வந்தால் நேராகப் பார்க்க மாட்டான். சொன்னதைச் செய்ய மாட்டான். ஒவ்வொன்றுக்கும் அப்பா வரும் வரை காத்திருக்க வேண்டும். இதற்காக மூலையில் உட்கார்ந்து கொண்டு அழுவது பிரச்னையை எந்த விதத்திலும் தீர்க்காது என்று தெரிந்திருந்தும் சில சமயங்களில் அழத்தான் செய்தாள்.

முதல் மனைவியின்போட்டோவைத் தேடிப் பார்த்தாள். கல்யாணப் போட்டோ ஆல்பத்திலிருந்து அவள் தின வாழ்க்கையில் எப்படித் தோற்றமளித்தாள் என்று கண்டு கொள்வது சிரமமாக இருந்தது. காமாட்சி ஒருவிதத்தில் முதல் மனைவியைப் போல வேஷம் போட்டுக் கொண்டு தோற்றமளிக்க விரும்பினாள். தன் ஆபீஸ் சினேகிதிகளிடம் குழந்தைகளை எப்படிச் சமாளிப்பது என்று சந்தேகம் கேட்டுப் பார்த்தாள். குழந்தைகளின் மனோ தத்துவம் பற்றிப் புத்தகங்கள் படித்துப் பார்த்தாள். புரியவே இல்லை. மூவரும் சதி பண்ணிக் கொண்டு அவளைப் புறக்கணித்தார்கள். பல மாதங்கள் ஆகியும் வழிக்கு வருகிறவர்களாகத் தெரியவில்லை.

சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவளை நொண்டி என்றார்கள். வீட்டுக்குப் போ என்றார்கள். அவளுக்கு அந்த இளம் உலகில் அனுமதி கிடைக்கவே இல்லை.

இந்த அழகில் இன்னொரு வீட்டில் பிறந்ததிலிருந்தே வளரும் பெண் குழந்தையை வேறு கூட்டி வைத்துக் கொண்டால் இன்னும் சிக்கல் அதிகமாகும் என்று அந்தப் பிரச்னையை அவள் எழுப்பவே இல்லை.

அந்தப் பெண்தான் அந்தப் பிள்ளைகளின் உலகத்தின் அனுமதிக்கு வாசல் என்பது அவளுக்கு ஒரு நாள் தற்செயலாகத் தெரிந்தது.

மது தன் தம்பிகளுடன் ஒரு தினம் வாசல் அறைக்குள் கதவைத் தாளிட்டுக் கொண்டு ஏதோ குசுகுசுவென்று பேசிக் கொண்டிருப்பதை உணர்ந்து சன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள். மூன்றும் சுவர் ஓரமாக உட்கார்ந்து கொண்டு மந்திராலோசனை போல் தாழ்வாகப் பேசிக் கொண்டும், ஒரு காகிதத்தில் மது ஏதோ வரைந்து கொண்டும் இருக்க மற்றது இரண்டும் ஆர்வமாக அவன் வரைவதைப் பார்த்துக் கொண்டிருந்தன.

ஏதோ தன்னைப் பற்றிப் பரிகாசமாக எழுதுகிறார்கள் என்று எண்ணிக் கொண்டு விலகிவிட்டாள். சற்று நேரத்தில் அவர்கள்



# எப்போதும் பெண்

## சுஜாதா

வாசலில் கிரிக்கெட் ஆடப் போனதும் அறைக்குச் சென்று என்ன எழுதியிருக்கிறார்கள் என்று பார்த்தாள். காகிதப் பென்சிலில் நோட்டுப் புத்தகத்திலிருந்து கிழித்த பக்கத்தில் மது தனக்குத் தெரிந்த வரை ஒரு சின்னப் பெண்ணின் படம் வரைந்திருந்தான். அவளுக்கு இரட்டைப் பின்னல் இருந்தது. கோணலான வகிடு, நெற்றியில் பொட்டு, காதில் ஏதோ ஜிமிக்கி போல தொங்கல், கழுத்தில் நகைகள், பூப்போட்ட சட்டை, பாவாடை அதைக் கலராக்கும் முயற்சி. பயாலஜி படம் போல அங்கங்கே கோடிழுத்து 'இந்தச் சட்டை மது கொடுத்தது' ''மை ஸிஸ்டர்'' என்று பெரியஎழுத்திலும் சின்ன எழுத்திலுமாக ஆங்கிலத்தில் எழுதியிருந்தது. காமாட்சிக்கு தன் பிரச்னைக்கு ஒரு தீர்வு கிடைத்துவிட்டது போலத் தோன்றியது.

சாயங்காலம் அப்பா வந்ததும், ''உங்க பொண்ணைக் கடைசியா எப்பப் பார்த்தீங்க'' என்றாள்.

''எம்பொண்ணு?''

''உங்களுக்கு ஒரு பொண்ணு இருக்கே தெரியுமோல்லியோ மறந்து போச்சா?''

''ஓ அதுவா? சமீபத்தில் பார்க்கலை. ஒரு தடவை சூப்பர் மார்க்கெட்டில் சதா

சிவத்தின் காரண்டை நின்று கொண்டிருந்தது, தங்கச் சங்கிலியெல்லாம் போட்டுண்டு; பாவாடை சட்டை போட்டுண்டு...''

''அதை எப்பத் திருப்பிக் கூட்டிண்டு வரதா உத்தேசம்?''

''திருப்பியா? அது எதுக்கு? இப்ப அதான் சொகுசா அவாகூட இருந்திண்டிருக்கே.''

''அது உங்க பொண்ணு இல்லையா?''

''அது என் பொண்ணு இல்லே.! மூத்தவளைப் பழிவாங்கிடுத்து!''

''நிசமாச் சொல்லுங்கோ. உங்க முதல் மனைவி இறந்து போனதுக்கு அந்தப் பொண் காரணமா? எங்கேயாவது புதுசா ஜனிக்கிற ஒரு சின்னக் குழந்தை மனசில அம்மாவைப் பழிவாங்கிட்டுத்தான் பொறக்கணும்னு தீர்மானிச்சுக்க முடியுமா? நீங்க பேசறது எத்தனை அபத்தமா இருக்கு பாருங்கோ! உங்களால சமாளிக்க முடியலே, வித்துட்டீங்க?''

''விக்கலேடி மூதேவி! சதாசிவத்துக்கிட்ட ஒரு பைசா வாங்கலே!''

''ஏதாவது பத்திரம் கித்திரம் கையெழுத்துப் போட்டிருக்கேளா?''

''அதெல்லாம் இல்லே.''

''பின்ன அந்தக் குழந்தை அந்த வீட்டில என்ன பண்ணிண்டிருக்கு! கூட்டிண்டு வந்துடலாம். கூழோ கஞ்சியோ நம்மகிட்ட வளர்றதுதான் நியாயம்.''

''இப்ப எதுக்காக அதைக் கூட்டி வச்சுண்டு சிக்கல் பண்ணிக்கணும்கிறே. இந்தக் குரங்குகளைச் சமாளிக்க முடியாம திணறிண்டிருக்கே. மூணும் உன்னைப் பாடாப் படுத்திண்டிருக்கு....''

''குரங்குகள் சந்தோஷமா இல்லாததற்கு காரணம் அம்மா செத்துப் போனது மட்டும் இல்லே. நீங்க அந்தப் பொண் குழந்தையைக் கொடுத்துட்டது ஒரு பெரிய வடுவா ஆழமா இவா மனசிலே பதிஞ்சிருக்கு. அந்தச் செயலை எதிர்த்து அவங்களால அப்ப ஒண்ணும் சொல்ல முடியாமல் போயிருக்கலாம். ஆனா மனசை நிச்சயம் பாதிச்சுத்தான் இருக்கும். உள்ளே ஒரு ஏக்கம், தவிப்பு இருக்கும்.''

''எதுக்காக?''

''யோசிச்சுப் பாருங்க. அந்தப் பொண் ஒண்ணுதான் அவாளுக்கும் இறந்துபோன அம்மாவுக்கும் உள்ள தொடர்பு. செத்துப் போறதுக்கு முன்னால அவ, இவா கிட்ட ஞாபகார்த்தமாக் கொடுத்துட்டுப் போயிருக்கா... அதைப் பிடுங்கி வேறே வீட்டில வெச்சிட்டீங்க நீங்க.''

''இப்ப என்ன பண்ணணும்கிறே?''

''இந்த க்ஷணமே நம்ம பொண்ணை நம்ம மாத்திலே திருப்பிக் கொண்டு வர முயற்சி பண்ணியாகணும்.''

''நீ போய் வேணுக் கேட்டுப் பாரேன்.''

''கேட்கத்தான் போறேன். சாம தான பேத தண்டம் எல்லாத்தையும் செய்யத்தான் போறேன்.. சாயங்காலம் ஆபீசில் இருந்து வந்த உடனே பெண்ணைப் பார்க்கத் தான் போறேன்.''



''என்னமோ செய்யி! என்னை நிம்மதியா இருக்க விடு. சதாசிவம் ஒத்துப்பான்னு தோணலே.''

''ஒத்துக்கறதாவது? என்ன பைத்தியம் மாதிரி பேத்தறேள்! அந்தக் குழந்தை நம் முது. அதை எப்படி அவாளாலே வெச்சுக்க முடியும்? திருப்பிக் கொடுக்காமப் போயிடுவாளா?''

''அவ்வளவு சுலபமில்லே காமாட்சி.''

''பார்த்துரலாமே.''

சாயங்காலம் பையன்கள் பள்ளிக்கூடத்திலிருந்து வந்து காப்பியை மடக் மடக்கென்று குடித்துவிட்டு வீதிக்கு ஓடத் தயாராவதன்முன் காமாட்சி பொதுவாக ''நான் இன்னிக்கு பாப்பாவைப் பார்க்கப்போறேன். யார் என்கூட வரப்போறு?'' என்ருள்.

யாரும் பதில் சொல்லவில்லை. மது மட்டும் சிறறத் தயக்கத்துடன் ''பாப்பான்னு'' என்ருன்.

''நம்ம தங்கச்சிப் பாப்பா! அவாத்தில வளர்றதே, லட்சுமி மாதிரி இருக்குமே! செக்கச் செவேல்னு பொம்மை மாதிரி இருக்கும். மது மாதிரி மூக்கு,சின்னவன் மாதிரி கண்ணு, அம்மா மாதிரி மூஞ்சி.''

''சித்தி! சித்தி! நானும் வரேனே.''

''சித்தி நானும்!''

''சித்தி நானும்'' — சின்னவன் அவள் புடவைத் தலைப்பில் வந்து ஒட்டிக் கொண்டான். முதல் முறையாகச் சின்னவனைத் தூக்கி எடுத்துக் கொண்டாள். முகத்தைத் துடைத்து விட்டாள். கோழிக் கிராப்பைத் தள்ளி நெற்றியைப் பார்த்தாள். ''என்னைச் சித்தின்னு கூப்பிட்டா நான் கேக்க மாட்டேன். நான் அம்மா. உங்க எல்லாருக்கும் அம்மாதான். எங்க சொல்லு! அம்மா!''

''என்னையும் அழைச்சுண்டு போறயா?''

''அம்மான்னு கூப்பிடு முதல்லே.''

''அம்மா! என்னை அழைச்சுண்டு போயேன்.''

மது மூலைக்குப் போய் சுவர்ப் பக்கமாகத் திரும்பிக் கொண்டான். ''நானும் இவனும் மட்டும் போப்போறேம். நன்ளு டிரஸ் பண்ணிண்டு பாப்பாக்கு சாக்லேட்டு எல்லாம் வாங்கிண்டு.''

''நானு?'' என்ருன் நடுவன்.

''என்னை அம்மான்னு யார் யார் கூப்பிடுருளோ அவாளை எல்லாம் அழைச்சிண்டு போவேன்.''

மது கொஞ்ச நேரம் காரையைப் பெயர்த்துக்கொண்டு இருந்து விட்டு மனசுக்குள் சொல்லிக் கொள்வது போல் ''அம்மா'' என்ருன்.

சாயங்காலம் மூன்றையும் தலை வாரிப் பவுடர் போட்டு பஸ்ஸில் அழைத்துக் கொண்டு சதாசிவத்தின் வீட்டுக்குப்போனுள். வாசலில் கார் காத்திருக்க வேலைக்காரி பிரப்பங் கூடையை எடுத்துப் பின் சீட்டில் வைத்துக் கொண்டிருந்தாள். மர நிழலில் டிரைவர் பீடி பிடித்துக் கொண்டிருந்தவன் மிதித்து அணைத்தான். காவல்காரன் உள்ளே விட மறுத்தான்.

''இந்த வீட்ல ஒரு பொண்ணு வளர்ற தில்ல? அதும் அம்மாவும் அண்ணங்களும் வந்திருக்கிறதாச் சொல்லு. உள்ள விடாட்டால் வாசல்லே நின்னுண்டு சத்தம் போடுவோம்னு சொல்லு.''

பார்வதி மாடியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தாள். எதிரே 'அவள்' படுக்கையில் உட்கார்ந்து கொண்டு பிளாஸ்டிக் வண்ண வண்ணத் துண்டுகளை வைத்துக் கொண்டு வீடு கட்டிக் கொண்டிருந்தாள். பெண் இப்போது நன்ருக வளர்ந்திருந்தாள். பேச்சு வந்து விட்டது. கண்களில் குறும்பும், அழகும் சேர்ந்து கொண்டு பாவாடை சொக்காயுடன் பெரிய மனுஷி போல இருந்தாள். அதிக ஊட்டத்திஞல் வளர்த்தி ஜாஸ்தியாக இருந்தது. கை நிறையத் தங்க வளையல்

*The following particulars regarding the ownership of 'MANGAYAR MALAR' the Tamil monthly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.*

FORM IV

1. *Place of Publication*: Madras
2. *Periodicity of Publication*: Monthly
3. *Name of Printer*: V. Murali
   *Nationality*: Indian
   *Address*: AA-117, Shanthi Colony
   Anna Nagar
   Madras-600 040
4. *Name of Publisher*: V. Murali
   *Nationality*: Indian
   *Address*: AA-117, Shanthi Colony
   Anna Nagar
   Madras-600 040
5. *Name of Editor*: V. Murali
   *Nationality*: Indian
   *Address*: AA-117 Shanthi Colony
   Anna Nagar
   Madras-600 040
6. *Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital:* Bharathan Publications Private Limited (Lessees) 84/1-C, Race Course Road, Guindy, Madras-600 032

V. Murali
*Publisher*

1-3-1982

போட்டிருந்தாள். இன்னும் அவளுக்கும் 'பாய்ஸ்'க்கும் -கர்ள்ஸ'க்கும் வித்தியாசம் கண்டு பிடிப்பதில் சிரமம் இருந்தது. உறுப்புக்கள் பையன்களுக்கு வித்தியாசமானவை என்பது அவளுக்குத் தெரியாது. காது வளையங்கள் போட்டிருப்பவர்கள் பெண்கள் என்று நம்பினாள். அவளுக்குக் கிடைத்த சினேகிதிகளுடன் அவள் கல்யாண விளையாட்டும் டாக்டர் விளையாட்டும் விளையாடும் போது டாக்டரும் மாப்பிள்ளையும் அந்த நாடகத்தில் பெண்களாக இருந்ததால், உண்மையான வித்தியாசங்கள் அவளுக்கு இன்னும் தெரிந்திருக்கவில்லை. ஒரு முறை அவர்கள் தூரத்து உறவுக்காரப் பையன் ஒருத்தன் ரெண்டு நாள் வந்திருந்தபோது அவன் சுவரை நோக்கிச் சுலபமாக என்னவோ செய்தது அவளை வசீகரித்தது. 'என்ன சௌகரியம்' என்று எண்ணிக்கொண்டாள். எனக்கு அந்த மாதிரி சௌகரியம் இருந்தால் எத்தனை நன்றாக இருக்கும் என்று நினைத்துப் பார்த்தாள். அதே சமயம் அப்படி நினைப்பதில் 'சீ தூ' என்று ஏதோ இருப்பதாகவும் அவளுக்குப் புலப்பட்டது.

பார்வதி சன்னல் வழியாக அவர்கள் வருவதைப் பார்த்து ''பொண்ணு ரூமுக்குள்ள போய்ப் படுத்துக்கிடும்மா'' என்றாள்.

''மாட்டேன்'' என்றாள் ஆட்டத்தில் கவனமாக.

''சொல்றதைக் கேளும்மா. உன்னைப் புடிச்சிட்டுப் போயிருவாங்க.''

''யாரு'' என்றாள் நிமிர்ந்து.

''பூச்சாண்டி. நாலு பூச்சாண்டி வரது: ரூமுக்குள்ள போயிரு.''

அவள் முனகிக்கொண்டே அறைக்குள் சென்று அங்கிருந்து சன்னலில் எட்டிப் பார்த்தாள். மூன்று 'பாய்ஸ்'. அந்தப் பையன்களை ஆர்வத்துடன் பார்த்தாள். படியத் தலை வாரிக் கொண்டு சற்றே வெட்கத்துடன் தத்தம் கைகளைப் பார்த்துக்கொண்டு, சுற்று முற்றும் பார்த்துக் கொண்டு... அம்மா பொய் சொல்லியிருக்கிறாள். இவர்கள் பூச்சாண்டி இல்லை. அவர்களில் பெரியவனாக இருந்தவன் அகஸ்மாத்தாக மேலே பார்க்க இவளைச் சந்தித்து விட்டான். தம்பிகளிடம் காட்டினான். அவர்களுக்குள் சின்னதாகப் பேச்சு வார்த்தை நடந்தது. மூன்று பேரும் தன்னைப் பார்ப்பதையும் பார்த்து ரொம்ப சிரிப்பதையும், கையைக் காட்டுவதையும், கையில் வைத்திருந்த பொட்டலத்தைக் காட்டுவதையும் கவனித்தாள். அவர்களைக் கீழே போய்ச் சந்திக்க வேண்டும் போலிருந்தது.

(தொடரும்)

# ✻ நட்சத்திர வாழ்க்கை: [விஜயப்ரியா]



சிலர் வாழ்க்கையின் அடித்தளத்திலிருந்து கஷ்டப்பட்டு, எதிர் நீச்சல் அடித்து முன்னுக்கு வருகிறார்கள். சிலர் பிறக்கும் போதே 'வெள்ளி ஸ்பூனோடு பிறந்தார்கள்' என்று சொல்வார்களே அது போல மேன்மையாகப் பிறந்து உயர்ந்த நிலைக்கு வருகிறார்கள். சிலரை அவர்களுடைய சுற்றுப்புறச் சூழ்நிலை உயர வைக்கிறது.

இதிலே எந்த ரகம் விஜயப்ரியா?

''நான் நாடக உலகுக்கு வரவேண்டும் என்று நினைக்கவில்லை. அப்பா மணிவாசகம் திரைப்படக் கதாசிரியர். அதனால் இந்தப் பேச்சுக்களின் நடுவேதான் வளர்ந்தேன். எங்களுடைய குடும்ப நண்பர் ஜி. சகுந்தலா ஒரு நாடகக் குழுவை நடத்திக் கொண்டிருந்தார். அவருடைய நாடகம் ஒன்றுக்குப் பதினாறு வயதுப் பெண் தேவைபட்டாள். எங்களிடம் அதைப் பற்றிச் சொன்னார். அவர் முதலில் என்னை அழைத்தாரா அல்லது நாங்களே

## பிறந்த வீடா
## புகுந்த வீட

3



4




5



இது 6'' ஆனால் விட்டம் 6 அங்குலமாயிருத்தல் வேண்டும்.

இப்போது அந்த வட்டத்தை எடுத்து கேக்கின் மேல் கவிழ்க்க வேண்டும். இது பாவாடை போலத் தோன்றும்.

6




பாவாடையின் மேற்புறமாக 1'' அகலத்தில் ஒரு வட்ட வடிவக் குழி வெட்டி அதனுள் பொம்மையைச் சொருகவும். இடைவெளிகளை கேக் துண்டங்களால் நிரப்பவும். மீதி பாச்மெண்ட் ஐஸிங்கில் பொம்மைக்குத் தொப்பி வெட்டவும்.

7




வட்ட வடிவ பிஸ்கட் கட்டரை எடுத்து சப்பாத்தி போல் இட்ட ஐஸிங்கை வெட்டவும். அதை ஒரு வெனிலா பாட்டில் மேல் கவிழ்த்துக் காய விடவும். காய்ந்ததும் அது தொப்பி போல் குழிவான தோற்றம் தரும்.

இனிபொம்மைக்கு மேல் சட்டைபொருத்த வேண்டும். அதற்கு மிருதுவான பட்டர் ஐஸிங் சுமார் 100 கிராம் கலந்தெடுக்கவும். 5ம் நம்பர் நட்சத்திரக் குப்பியால் பிளவுஸ் போல நட்சத்திரங்களைப் பிழிந்து கொள்ளவும்.

8



பாவாடையின் மீதும் மும்மூன்று பூக்களாக பிளவுஸ் கலரில் பிழியவும். பாவாடை இளம் சிவப்பானால் (Pink) பிளவுசும் பூக்களும் சிகப்புக் கலரில் போடலாம். பாவாடை பார்டருக்கு நம்பர் 11 ரோஜா இதழ்க் குப்பியினால் வரிசையாக பிரில்களைப் போடவும்.



9

இது பெண் குழந்தைகளின் பிறந்த நாள் விழாக்களுக்குச் செய்து மகிழலாம்.

## 13

அவளுக்குக் காத்திருந்தவர்களைப்போய்ப் பார்க்க வேணும்போல இருந்தது. அம்மா வாசலிலேயே அவர்களை விசாரிப்பது தெரிந்தது. மேலும் அம்மா அந்தப் பையன்களோடு வந்திருந்த பெண்ணுடன் கைகளை வேகமாக அசைத்துப் பேசுவதும் தெரிந்தது. மெல்ல நடந்து மாடிப் படிகளில் இறங்கி வாசலுக்கு வந்தாள். அம்மா பேசுவது கேட்டது.

''அதெல்லாம் பார்க்க கீர்க்க முடியாது.''

''பார்த்தா என்ன தப்பு? எங்கேயாவது பொண்ணு கொள்ளை போய்டுமா?''

''முடியாதுன்னு முடியாதுதான். கண்ட நேரத்திலே வந்தா எப்படி?''

''உடம்பு சரியில்லையா குழந்தைக்கு?''

''ஆமாம், இல்லே! அது எப்படி இருந்தா உனக்கென்ன?''

''என்ன பேசறீங்கம்மா? அந்தப்பொண்ணு மேலே எங்களுக்குப் பாத்தியதை இல்லையா? இதப் பாருங்க மூணையும். தங்கச்சிக்காக ஏங்கிப் போயிருக்கு!''

''அப்பாவை வரச்சொல்லி, பெரியவங்க பேசி முடிவெடுக்கட்டும். எனக்கு ஒண்ணும் தெரியாது.''

''ரொம்ப சிம்பிளான விஷயத்தை ரொம்பச் சிக்கல் பண்றிங்க.''

''என்ன சிக்கல்? எல்லாம் சரியாத்தா[ன்] இருக்கு.''

''அப்ப குழந்தையைக்காட்டமாட்டீங்க!''

''மாட்டேன். அவ்வளவுதான்.''

''வாங்கடா போகலாம். மயிலே மயிலேன்னு இறகு போடாது!''

''சித்தி! அதோ வரது பாரு!''

''வாடி என் ராசாத்தி! இவாள்ளாம் யாரு தெரியுமா? உன் அண்ணா! எங்கே சொல்லு அண்ணா!''

''பொண்ணு! உள்ளே போ!'' என்று பார்வதி அதட்டினாள்.

''வாவா உனக்குச் சாக்லேட்'' என்றான் சின்னவன்.

''பொண்ணு! உள்ளே போ!''

தயங்கினாள். அம்மா சொல்வதைக் கேட்டாக வேண்டும் என்பது அவள் கோபமாக விரட்டியதிலிருந்து தெரிந்தாலும் ஏதோ ஒரு ஆசை அவளை நிற்க வைத்தது.

''இவங்கல்லாம் யாரும்மா?''

''அடப் பாவமே! சொந்த அண்ணங்களை இவாள்ளாம் யாருன்னு கேக்கறபடி வளர்த்துட்டீங்களே! இத பார் இவாள்ளாம் உன் அண்ணாக்கள்! எங்கே சொல்லு அண்ணா... அண்ணா!''

''பிரதர்! பிரதர் சித்தி! அது இங்கிலீஷ் பாப்பா'' என்றான் சின்னவன்.

''பொண்ணு! நீ இப்ப உள்ள போகப் போறியா இல்லையா? துரை! எங்கே போயிட்டான் இந்த துரை!''

''உன் பேர் என்ன?'' என்றான் சின்னவன்.

''இங்க வா!'' என்று கேட்டைப் பிடித்துக்கொண்டு கூப்பிட்டான் நடுவன்.

''டேய்! பின்னல் எல்லாம் ஷோக்கா வெச்சுண்டிருக்குடா. மூஞ்சில பவுடர் பொட்டு, சித்தி இதெல்லாம் தங்கமா?'' இதற்குள் சின்னவன் கேட் மேலே ஏறி தலையைச் சாய்த்



துப் பார்த்து ''பத்தியா பத்தியா'' என்று தொங்கிக் காட்டினுன். மது, ''கிட்டவா சாக்லேட் வாங்கிக்கோ!''

''வாங்கிக்கோம்மா. ஒண்ணும் கொறஞ்சு போய்டாது.''

''பொண்ணு இப்ப ஒரு அடி எடுத்து முன்னுல வச்சே தோலே உரிச்சுருவேன்!''

''அய்யய்யோ! குழந்தையை அடிக்கி றீங்களா?''

''போடி உன்வேலையைப்பார்த்துக்கிட்டு!''

''இத பாருங்க! என் வேலை இந்தப் பொண்ணை மீட்டுண்டு போறதுதான்!''

''இப்பப் போப்போறியா, போலீஸைக் கூப்பிடச் சொல்லட்டுமா? துரை! எங்க போய்த் தொலேஞ்சே... இவங்களே முதல்ல விரட்டு. அய்யா எங்கே? வந்தா போலீ சுக்குப் போன் பண்ணச் சொல்லு.''

''அம்மோவ்! யார் நீங்கள்ளாம்? என்ன கலாட்டா?'' என்ருன் துரை.

''இத பாருப்பா.. நாங்க ஒண்ணும் அன் னியப்பட்ட மனுஷா இல்லே. இந்தப் பிள் ளேங்கள்ளாம் இந்தப் பொண்ணோட அண் ணுக்கள். எங்க வீட்டுப் பொண்ணு அது!''

''உங்க வீட்டுப் பொண்ணு? என்ன கதை இது? சரித்தான்!''

''துரை முதல்லே இவங்களே விரட்டு. வா கண்ணு'' என்று அவளே அழைத்தாள்.

''எப்ப அனுப்பப் போறீங்க சொல்லுங்க'' என்ருள் காமாட்சி.

''எப்ப அனுப்பறதா?''

''எங்க வீட்டுப் பொண்ணில்லேயா இது?''

''ஒருக்காலும் முடியாது. துரை கேட்டை சாத்து. முதல்ல ஒரு நாயை வாங்கிட்டு வர ணும். இந்த மாதிரித் தொல்லே யெல்லாம் வரும்னு எதிர்பார்க்கலே.''

''இத பாருய்யா, என்னேயோ இந்தக் குழந்தைகளேயோ தொட்டே, ஊரைக் கூட்டி ஊளேயிடுவேன். தெரியுமா? என்ன நினேச்சுக்கிட்டிருக்கீங்க எல்லாரும்? இத பாரும்மா நான் ஒண்ணும் சண்டைக்கு சளேச்சவ இல்லே. நாளேக்கே வக்கீல் நோட் டீஸ் விட்டு இந்தக் குழந்தையைக் கோர்ட்டு மூலம் கூட்டிட்டுப் போகலேன்னு என் பேர் காமாட்சி இல்லே!''

''சரித்தான் போம்மா.''

''வாங்கடா டேய்!''

மது பிரிய மனமில்லாமல், ''பாப்பா இங்க வா. உனக்காகச் சாக்லேட் வாங் கிண்டு வந்திருக்கேன்'' என்ருன். அவள் புரிந்து கொண்டு கேட்டருகே வந்தாள். மது அவளிடம் அவசரமாகச் சாக்லேட் பாக் கெட்டைக் கொடுத்துவிட்டு அவள் கையைத் தொட்டுப் பார்த்தான். ''ஐய்யா! கையைத் தொட்டுட்டேன்'' என்ருன். ''நானு!... நானு!'' என்று மற்ற இருவரும் வர மூடி யிருந்த கதவுக் கம்பிகளின் ஊடே இரு வரும் போட்டி போட்டுக் கொண்டு அவள் மிருதுவான கரத்தைத் தொட்டுத் தொட்டுப் பார்க்க அவளுக்குப் பிரமிப்பாக இருந்தது. எதுவுமே புரியவில்லே. அதற்குள் அம்மா அவளே மூர்க்கத்தனமாகப் பறித்துக்- கொண்டு தூக்கிச் சொல்ல, ''விடுவிடு'' என்று கையைக் காலே உதறிக்கொண்டு, அவர்களே அழாக் குறையாகப் பார்த்துக் கொண்டே சென்ருள். மறுபடி மாடிக்கு எடுத்துச் செல்லப்பட்டு படுக்கை மேல் கிடத்தப்பட்டாள்.

''இனி என்னேக் கேக்காம எதாவது சக வாசம் வச்சுக்கிட்டே, பொளந்திருவேன்! ஆஹா... என்ன தைரியம் வந்துருச்சு! தனியா போயிருவியோ? எங்களே யெல்லாம் விட்டுட்டுப் போயிருவியோ?''

''அவங்கள்ளாம் யாரும்மா?''

''யாரோ கெட்டவங்க. சீ! பன்னுடை, சாக்லேட்டைக் காட்டினதும் ஓடுறியே! உன் புத்தி எங்க போகும்? வீட்டில இல்லாத சாக்லேட்டா? வரட்டும் உங்கப் பன்!''

அவளேத் தனியாக விட்டு விட்டு டெலிபோன் பண் ணப் போய்விட்டாள் பார் வதி. இவளுக்கு நிஜமாகவே எதுவும்புரியவில்லே. அண்ணு! அண்ணு என்ருல் யாரு? பார்கவிஒருதடவைஅண்ணு



சுஜாதா

வைக் கூட்டி வந்தாளே விளையாட, அந்த மாதிரியா?

'அண்ணு' என்றுலே ரெண்டு பேருக்கும் ஒரே அம்மா என்பது அவளுக்குத் தெரிந் திருந்தது. அவள் படிக்கும் புத்தகங்களில் அண்ணுக்கள் வருகிருர்கள். அண்ணுவும் தங்கையும் ஒரே தாயை 'அம்மா' என்று கூப்பிடுகிருர்கள். ஏதோ ஒரு தினுசில் அவளுக்கு விளையாட்டுக்களின் மூலமும், பெரியவர்களுடன் பழகுதல் மூலமும் தனக்குப் பிற்காலத்தில் ஒரு பெண் பாத் திரம் காத்திருக்கிறது என்பது லேசாகத் தெரிந்திருந்தது. அதனுல் அவளுக்குத் தனக்குள் என்ன என்பதைப் பற்றி ஓர் ஆர்வம் அதிகமாகவே இருந்திருக்கிறது.

சிருஷ்டியின், குழந்தையின், பிறப்பதின், மர்மத்தைப் பற்றி அவளுள் ஓர் ஆர்வம் விதைக்கப்பட்டிருக்கிறது. கொஞ்ச நாள் குழந்தைகளை லேடி டாக்டர் தன்னுடைய கையில் கொண்டு வந்து கொடுக்கிருள் என்று நம்பிக்கொண்டிருந்தாள். இப்போது அப் படி யாராவது சொன்னுல், 'அய்யே' என்று சிரிப்பாள். தன் சின்ன வாழ்க்கையில் கூட அவள் பார்த்துவிட்டாள். சினிமா, டெலி விஷன், பொம்மைப் புத்தகங்கள், கதைகள் எல்லாவற்றிலும் அம்மாவின் வயிறு பெரி சாவதைப் பார்த்திருக்கிருள். எப்படியோ அம்மாவின் உடம்பிலிருந்து குழந்தைகள் ஏற்படுகின்றன என்பதைத் தெரிந்து கொண் டாள். இதனுல் அவள் பயப்படவில்லை. அதில் ஆச்சரியம்தான் இருந்தது. இது ஏதோ 'மாஜிக்' போலத்தான் தோன்றியது.

பிறப்பிலுள்ள உடற்கூறு சம்பந்தங்கள் அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை. மேலும் இதில் அப்பாவின் பாகம் என்ன என்பது பற்றி அவளுக்கு நிறையச் சந்தேகங்கள்இருந் தன. சினிமாக்களில் 'அப்பா'க்களும் 'அம் மா'க்களும் அருகருகே படுத்துக்கொள்வதை பார்த்திருக்கிருள். அதனுல் அம்மாக்கள் எதையோ சாப்பிடுவதால் குழந்தை பிறக் கிறது என்று நினைத்தாள். வயிற்றில் தானே பெரிசாக இருக்கிறது? இந்த மாதிரி எண் ணங்கள் அவளுடைய கற்பனைக்கு ஊட்டம் கொடுத்துக் கொண்டிருந்தன. பலமுறை அவள் குழந்தைகள் எங்கேயிருந்து வரு கிருர்கள் என்று கேட்டிருக்கிருள். அதற்கு அம்மா கடவுள் அனுப்புகிருர் என்று சொல் வதை அவள் நம்பவில்லை.

''நான் உன் வயித்திலிருந்து வந்தே னும்மா?''

''ஆமாண்டி கண்ணு! என் வயத்தில இருந்துதான் வந்தே!''

''அப்ப அப்பா என்ன செய்தாங்க?''

''பார்த்துக்கிட்டு இருந்தாங்க.''

எப்படியோ உள்ளுணர்வில் எல்லாமே பொய் என்பதும் அவளுக்குத் தெரிந்திருந் தது. அது தன் பிறப்பைப் பற்றி அவள் அடி மனதில் ஊறிவிட்ட ஓர் உணர்வினுல் பல முறை அவள் தன் கவுனுக்குள் சின்ன தலையணையை மறைத்து வைத்துக்கொண்டு அலைந்திருக்கிருள். அப்புறம் தன் பொம் மையை இடுப்பில் வைத்துக் கொண்டு சின்னத் தொட்டிலில் இட்டு ஆட்டியிருக் கிருள். ஏன், பொம்மைக்குப் பால் கொடுக் கும் ரீதியில் தன் மார்பில் அதை ஒட்ட வைத்திருக்கிருள். எல்லாக் குழந்தைகளுக் குமே ரகசியமாகப் பொதிந்துள்ள விஷயங் களைப் பற்றி ஒரு வசீகரமான கற்பனைகள் சுலபமாக ஏற்படும். பெட்டிக்குள் பொதிந்து இருக்கும் பட்டுத் துணி, முட்டைக்குள் இருக்கும் கோழிக் குஞ்சு, மொட்டுக்குள் இருக்கும் புஷ்பம் எல்லாவற்றிலும் அவர் களுக்கு ஒரு கவர்ச்சி இயற்கையாகவே இருக்கும்.

இந்த ரீதியில் அவளுக்குக் குழந்தைகள் ஜனனம் பற்றியும், அண்ணன் தங்கைகள் என்பவர்கள் ஒரே வயிற்றிலிருந்து வெவ் வேறு சமயத்தில் வந்து உதித்தவர்கள் அல்லது குதித்தவர்கள் என்கிற ஏகதேசமான அபிப்பிராயம் இருந்தது. இப்போது யாரோ வாசலில் இரண்டு மூன்று பேர் வந்து அந்தச் சின்னப் பையன்களைக் காட்டி இதெல் லாம் உன் அண்ணு என்று சொன்னபோது அவளுக்குச் சில ஆதாரமான நம்பிக்கைகள் குழம்பிப் போயின. ஏராள படுக்கையில் விரல் போட்டுக் கொண்டு சற்று நேரம் ஒரே திசையைப் பார்த்துக் கொண்டு யோசித்துக் கொண்டே இருந்தாள். தூங்கிப் போனுள்.

பார்வதி அவள் தூங்கினதும் அவளை முத்தமிட்டு, ''என் கண்ணே! என் உயிர் போனுலும் உன்னை நான் விட்டுர மாட் டேன்'' என்ருள்.

அதே சமயம் சித்தி அப்பாவிடம் ''உயிரே போனுலும் சரி அதை விடக் கூடாதுன்னு! என்ன அக்கிரமம் இது! எவ்வளவு அழகான குழந்தை! முதல்ல ஒரு வக்கீலைப் போய்ப் பாருங்கோ'' என்ருள்.

(தொடரும்.)

மிக்ஸியில் தயிர் சிலுப்பி வெண்ணெய் எடுத்தபின்பு மிக்ஸியைக் கழுவ சிரமப் படத்தேவையில்லை. இரண்டு தக்காளியை அரை டம்ளர் வெது வெதுப்பான நீருடன் அந்த மிக்ஸியிலிட்டு ஜூஸ் எடுத்து தக் காளி ரஸம் வைத்தால் ரஸமும் மணமாக இருக்கும், மிக்ஸியின் வெண்ணெய்ப் பிசுக்கும் அகன்றுவிடும்.

எஸ். இந்துமதி

# வேலைக்குப் போகும் பெண்களுக்கான போட்டி



இன்றைக்கு ஆணுக்குச் சரிநிகர் சமானமாகப் பெண்களும் வேலைக்குச் செல்கிறார்கள். வீட்டிலுள்ள கஷ்ட சுகங்களையும் கவனித்துக் கொண்டு அலுவலகத்திலும் பல பொறுப்புக்களை ஏற்கிறார்கள். அவர்கள் வாழ்க்கையில் பல சுவையான சம்பவங்கள் ஏற்பட்டிருக்கும். அவர்களுக்காக இந்தப் போட்டி.



## 'அலுவலகத்தில் உங்கள் முதல்நாள் அனுபவம்'

இந்தத் தலைப்பில் கட்டுரை அனுப்புங்கள். இப்போட்டி இம்மாதத்துடன் முடிவடையாது. ஜூன், ஜூலை மாதங்களுக்கு வேறு தலைப்புகள் அறிவிக்கப்படும். ஒவ்வொரு தலைப்பிலும் சிறந்த இரண்டு கட்டுரைகளுக்கு—

முதல் பரிசு: **புடவை**

இரண்டாம் பரிசு: **கைப்பை**

இம்மாதப் போட்டிக்கான
கடைசித் **தேதி: 20-5-82**

- ஆசிரியர் தீர்ப்பே முடிவானது
- தனிப்பட்ட கடிதப் போக்குவரத்து கிடையாது.
- கட்டுரைகளைத் திருப்பி அனுப்ப இயலாது.

# எப்போதும் பெண்



## சுஜாதா

### 14

ஜி.எஃப்.காரரும் அப்பாவும்தான் வக்கீலைப் பார்க்கப் போயிருந்தார்கள். மாம்பலத்தில் மகாலட்சுமி தெருவில் வாசலில் கஜானந்த் பிக்சர்ஸ் என்று போர்டு போட்டு ஒரு டீசல் வண்டி காத்திருந்த வீட்டில் பின்புறம் வக்கீல் இருந்தார். தட்டிப்போட்டு ஜாலி அடித்து ஒரு புராதனமான மின்விசிறியின் கீழ் பனியனுடன் உட்கார்ந்திருந்தார். பேத்திக்கோ யாருக்கோ தமிழில் கணக்கு சொல்லிக் கொண்டிருந்தார். பக்கத்தில் ஒரு பெண் காய் நறுக்கிக் கொண்டிருந்தாள். ஒரு குழந்தை விளையாடிக் கொண்டிருந்தது.

''உக்காருங்கோ காப்பி சாப்பிடறேளா''

''இப்பத்தான் சாப்பிட்டோம் பாலு. போட்டாச்சுன்னு வேண்டாம்னு சொல்லப் போறதில்லே.''

''என்ன கேஸு?''

''ஒண்ணுமில்லே. இவர் பொண்ணு ஒண்ணு இருக்கு. அது ஒரு வீட்டிலே வளர்றது. அதைத் திருப்பிக் கேட்டாக் குடுக்க மாட்டேங்கறான்.''

''கோர்ட்டிலே போட்டுத் திருப்பி வாங்கணும். அவ்வளவுதானே?''

''ஆமாம் பாலு.''

''ஸ்வீகாரம் கொடுத்தீங்களா?''

''இல்லே.''

''பொண்ணை எடுத்து வளக்கறானே உறவுக்காரனா?''

''இல்லே.''

''பின்னே எப்படிக் கொடுத்தேள்?''

''அது பெரிய கதை. பொண்ணைப் பெத்துட்டு அம்மாக்காரி போயிட்டா. மூணு பசங்க. சின்னக் குழந்தையை எடுத்து வளர்க்க நாதி இல்லாம இருந்தப்ப இவா வந்து அப்ரோச் பண்ணியிருக்கா. இவர் கொடுத்துட்டார்.''

''பணம் வாங்கினீங்களா?''

''சேச்சே. இல்லே.''

''சும்மா பச்சைக் குழந்தையைக் கைல எடுத்துக் கொடுத்துட்டேளா? பேஷ்!''

''என்ன பண்றது அந்தச் சூழ்நிலையில?''

''புரியறது. பொண்ணுக்கு என்ன வயசு?''

''அஞ்சு ஆகியிருக்கும்.''

''நார்மலாத்தானே இருக்கு. பேசக் கொள்ள எல்லாம் செய்யறதோ இல்லியோ?''

''பேஷா.''

''தத்த ஹோமம் எதுவும் நடக்கலைதானே?''

''தத்த ஹோமம்னா?''

''அதான் ஸ்வீகார காரியம். இந்து கஸ்டம்படி.''

''இல்லே சார். அதெல்லாம் ஒண்ணுமே கிடையாது.''

''பணம் எதுவும் வாங்கலை. பேப்பர்ல எதிலயும் கையெழுத்துப் போடலை.''

''இல்லே.''

''பொண்ணு உம்மகிட்ட வந்து இருக்குமா?''

''வந்துதான் ஆகணும். பெத்த தகப்பனார் இல்லையா இவர்?''

''இல்லே ஸ்வாமி. பொறந்ததுலேருந்து அவா கிட்ட இருக்குன்னு நீங்க வேத்து மனுஷா இல்லையா? அது வரமாட்டேன்னு சொல்லிடுத்துன்னா?''

''அதை யார் போய்க் கேக்கப் போறா?''


''கேப்பா. உங்களுக்கு கோர்ட்டுகளையும் ஜட்ஜுகளையும் பத்தித் தெரியாது. இருந்தாலும் உங்களுக்குக் கேஸ் இருக்கு. ஸூட்டைப் போட்டுற வேண்டியதுதானே. நேர ஹைகோர்ட்டிலேதான் போடணும். அடாப்ஷன் அண்ட் மெயின்டனன்ஸ் ஆக்ட் செக்ஷன் 11ம்படி வயலேஷன்.''

''பொண்ணு திருப்பிக் கிடைச்சுருமா?''

''கிடைக்காமப் போயிடுமா? பாலு கிட்ட வந்துட்டீர். இனிமே என்ன ஜமாய்ச்சுடலாம்.''

''ரொம்ப பீஸ் ஆகுமோ ''

''அதைப் பத்தி ஏன் கவலைப்படறீர்? கேஸ் ஜெயிச்சதும் பணம் கொடுமேன்.



மத்தியானம் ஆபீசுக்கு வாரும். இன்னிக்கே பிராது கொடுத்திரலாம்.'' வக்கீல் அப்பாவைப் பார்த்து ''எதுக்காகப் பச்சைக் குழந்தையைப் போய்க் கொடுத்தீர்? அதை எடுத்து வளர்க்கிறதைத் தவிர வேற என்ன வேலை ஓய் உமக்கு.''

''எனக்கு இப்பக்கூட அந்தப் பொண்ணு அவாத்திலே இருக்கிறதுதான் பெட்டர்னு தோண்றது. என் ஆம்படையாதான் பிடிவாதம் பிடிச்சு அதைத் திருப்பி வாங்கணும்னு சொல்றா.''

''ஆம்படையான்னு, மறு கல்யாணம் பண்ணிண்டுட்டீரா. சரிதான்! அதுக்கு எத்தனை குழந்தை.''

''இல்லை ஸார்'' என்று அப்பா நகத்தைப் பார்த்துக் கொண்டார்.

''போயிட்டு வாங்கோ. கவலையே படாதேங்கோ. பேத்துரலாம். சொந்த பேரண்ட் குழந்தைக்குப் பிரதர்ஸ் இருக்காங்க சொந்த ரத்தத்தோட வளர்றதுதான் ப்ராப்பர். அப்பப்போ குழந்தையைத் திருப்பித் தான்னு கேட்டுண்டு இருந்தேளோல்லியோ?''

''இல்லை ஸார்.''

''இதப் பாரும். இதையெல்லாம் கோர்ட்டிலே சொல்லக் கூடாது. இதுக்கு முன்னாலே சொன்னிரே, அவாகிட்ட இருக்கிறது தான் பெட்டர்'னு அதையெல்லாம் கோர்ட்டுலே உளறிடாதேங்கோ. நான் சொல்றபடி சாட்சி சொல்லுங்கோ. நிச்சயம் நம்ம பக்கம்தான் ஜெயம்'' என்றார் வக்கீல்.

ஏறக்குறைய அதே சமயம் சதாசிவத்தின் வீட்டில் ஒரு வக்கீல் ஹாலில் காப்பி உறிஞ்சிக் கொண்டு ''சான்ஸே இல்லைங்க அவங்களுக்கு நிச்சயம் நம்ம பக்கம்தான் ஜெயிக்கும்'' என்றார்.

''குழந்தை அவங்களது இல்லீங்களா?''

''இருந்தா என்ன? பிறந்ததில இருந்து ஒரு நிமிஷம் அவங்க கூட வளர்ந்திருக்கா?''

''அதானே?'' என்றாள் பார்வதி.

''இப்ப உங்க ரெண்டு பேரைத்தானே அப்பா அம்மான்னு கூப்பிடுது?''

''பின்ன? பொண்ணு! இங்க வாம்மா!''

''என்னம்மா'' என்று அவள் பார்வதியின் மடியில் ஏறிக்கொண்டாள். பார்வதி அவளை உச்சி மோந்து தடவிக்கொடுத்து''பொண்ணு நான் யாரும்மா உனக்கு?''

''அம்மா.''

''இது?''

''அப்பா.''

''பாத்தீங்களா?''

''ரொம்ப ஒட்டிக்கிட்டுத்தான் இருக்குது. ஏதாவது பணம் கொடுத்தீங்களா ஸார்?''

''இல்லையே.''

''புடவை, நகை, பண்டிகைக்கு ஏதாவதுன்னு வாங்கிக்கிட்டு இருக்காங்களா?''

''இல்லையே.''

''எதும் லெட்டர் கிடையாது. எழுத்து மூலமா ஒண்ணும் கிடையாது?''

''இல்லீங்களே.''

''ஹும்'' என்று பெருமூச்சு விட்டார்.



''என்னங்க தோத்துப் போயிருங்களா?''

''ப்ச! அதுக்கில்லை. கிரமப்படி சாட்சியமா டாக்குமெண்டா ஏதாவது இருந்தாக் கொஞ்சம் ஸ்ட்ராங்கா வாதாடலாம். உங்களை அறிமுகப்படுத்தி வைச்சாங்களே நர்ஸம்மா அவங்க எங்க இருக்காங்க தெரியுமா?'

''தேடிக் கண்டு பிடிச்சுடலாங்க'' என்றார் சதாசிவம். ''ஆனா கோர்ட்னு வந்தா பெற்றோர்களுக்குச் சாதகமாகத்தானே தீர்ப்பு ஆகும்? அவங்கதானே முறைப்படி வளர்க்க வேண்டியவங்க?''

''இதப்பாருங்க. இதை யெல்லாம்கோர்ட்டிலே போய்ச் சொல்லி வைக்காதிங்க. கேஸ் கவுந்துக்கும். நீங்க ஏன் கவலைப்படறீங்க? நான் இதை ஜெயிச்சுக் காட்டறேன் உங்களுக்கு. இதை எப்படி வாதாடப் போறோம்னா... பொண்ணு நீ போம்மா, உள்ள போய் விளையாடு. இந்தப் பொண்ணோட வெல்ஃபேர் படிக்கு இதை ரொம்பச் சௌகரியமா வீட்டிலே வெச்சு முறையா புஷ்டியா வளர்த்திருக்கீங்க. சின்ன வயசிலிருந்தே, ஏன் பொறந்ததிலேருந்தே இப்படியே எதுக்காக வளர்த்தீங்க? அவங்க இதை உங்களுக்குக் கொடுத்து விட்டதினால தான். மனப்பூர்வமா வளன்னு கொடுத்ட்டாங்க. பாசம், அன்பு, பரிவு எல்லாம் காட்டி வளர்த்திட்டிங்க. அதும் அஞ்சு வருஷம். இப்பப் போய் இரண்டாம் கல்யாணம் பண்ண இடத்திலே அன்றாடம் காய்ச்சிக் குடும்பத்திலே கொஞ்சம் கூட அவங்க கூட வளராத குழந்தையைச் சேர்க்கிறது பொண்ணோட வெல்ஃபேருக்கு நல்லதில்லை. இது ஒரு ஆங்கிள். இந்த மாதிரி கோணத்திலே சில கேஸ் ஜெயிச்சிருக்கு. குறிப்பா ஜே. கிருஷ்ணமூர்த்தியோட கேஸ்! அதுமட்டுமல்லாம இந்தப் பொண்ணையே கேட்டாலும் கேப்பாங்க. அது என்ன சொல்லும்?''

''என்னது? பொண்ணையே கேப்பாங்களா?''

''சாத்தியம்தான் ஸார். கேட்டாக்க என்ன சொல்லும்?''

''நிச்சயம் எங்க கூடத்தான் இருக்கேன்னு சொல்லும். பெண்ணை சாட்சிக் கூண்டிலே போடுவாங்களா?''

''ஓ எஸ். சாட்சிக் கூண்டில வரதுக்குப் பயப்பட்டுதுன்னா ஜட்ஜ் சேம்பர்ல கூப்ட்டு விசாரிப்பாரு. நீங்க என்ன பண்றீங்க. இப்பவே அதை ஒரு மாதிரி தயார் பண்ணிடுங்க. இந்த மாதிரி ஒரு மாமா நீ எங்க போறேன்னு, யாரோட இருக்கேன்னு கேப்பாரு, அதுக்கு நான் அம்மா கிட்டத்தான் இருப்பேன்னு சரியாப் பதில் சொல்லும் படிக்கு. அப்புறம் ஏதாவது லெட்டர் கைப்பட எழுதின கடுதாசி எதுவுமே கிடையாதா?''

''இல்லையே ஸார்.''

''பரவாயில்ல. அப்படி ஏதாவது ஆச்சுன்னா அஞ்சு வருஷம் வளர்த்ததுக்கு பில் போட்டுக் கொடுத்து 'வை காஸை'ன்னுற வேண்டியதுதான். இல்ல, அப்பீல் போட்டுத் தள்ளிரலாம். கவலையே படாதீங்க. எப்படி இருந்தாலும் ஜயம் நம்ம பக்கம்தான். முதல்ல கேஸ் வரட்டும். பாலு அய்யர்தான் போடப் போறதாக் கேள்விப்பட்டேன். அவர் நமக்கு ரொம்ப வேண்டியவர்.''

''இதப் பாருங்க.'' பார்வதியை வக்கீல் பார்த்தபோது அவள் கண்களில் நீர் நிரம்பியிருந்தது. ''இந்தப் பொண்ணை விட்டுட்டு என்னால மேற்கொண்டு உயிர் வாழ முடியாது. எங்கிட்டருந்து இதப் புடுங்கிக்க முடியாது. நீங்க கோர்ட்டுக்குப் போங்க, பிராது கொடுங்க. என் செல்வத்தை நான் விட மாட்டேன். என் பொண்ணு அது... என் கண்ணு! என் உயிர், என் மூச்சு அது!''


''வெரி குட்! இதையே கோர்ட்டிலே சொல்லலாம். நீங்க கவலையே படாதீங்க''

தன்னைச் சுற்றி, தன்னைப் பற்றி நடப்பதெல்லாம் ஒன்றுமே தெரியாமல் அவள் அடுத்த அறையில் படுத்துக்கொண்டு கொஞ்ச நேரம் விரல் போட்டுக் கொண்டு விட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் மனத்துக்குள் அந்த மூன்று முகங்கள் தோன்றி மறைந்தன. ஏதோ பயமாக இருந்தது. அம்மாவிடம் ஓடிப்போய் கட்டிப் பிடித்துக்கொள்ள வேண்டும் போல் இருந்தது. அதே சமயம் ஓட வேண்டாம் போலவும் இருந்தது.

(தொடரும்)

**ஒரு பெண்ணின் கண்ணீரில் அதைப்போல ஆறுயிரம் மடங்கு தண்ணீரைக் கலந்த பின்னரும் கூட, ஏராளமான நுண்கிருமிகளை அழிக்கும் சக்தி அதற்கு உண்டாம்! கண்ணீரில் 'லைஸோஸைம்' என்னும் கிருமி நாசினிப் பொருள் இருப்பதே இதற்குக் காரணமாம்!**

**ஆகவே அழுவது பெண்களுக்கு நல்லது என்கிறார்கள் விஞ்ஞானிகள்! – இந்திரா**





Visit Temples
ALWAYS
WITH A PACKET OF
BKR
PERFUMERY
Scented Bathies
B.K.R. PERFUMERY, COIMBATORE-1.
TRADE BKR MARK
லெவண்டர்
பத்திகள்
சுகந்தப்ரியா
B.K.R. PERFUMERY
B.K.R. PERFUMERY, RAJA ST., COIMBATORE-1.
முல்லைப்பூ
பத்திகள்
VARIETIES TO CHOOSE
THALAMPOO
MULLAIPOO
ROJAPOO
LAVENDER
KADAMBAM
SUGANDA PRIYA
AGARBATHIS
B.K.R. PERFUMERY, RAJA ST., COIMBATORE-1.
THALAMPOO
BATHIES
தாழம்பூ
பத்திகள்
PHONE: 25283
TRADE BKR MARK
MEANS
FLOWERY FRAGRANCE
Mfrs:-
B·K·R·PERFUMERY
COIMBATORE-2. (S. INDIA)

# எப்போதும் பெண்

15



சுஜாதா

ஒரு நாள்காலை அவளை சீக்கிரமே எழுப்பி விட்டார்கள். மறுபடி தூங்கப் போனவளை முகத்தில் தண்ணீர் அடித்தார்கள்,

''என்ன்ம்மா!''

''நாமெல்லாம் வெளியே போகப் போகிறோம்டி பெண்ணே!''

''பீச்சுக்கா?''

''இல்லை. கோர்ட்டுக்கு. உன்னை ஒரு பெரியவரு கேப்பாரு... என்ன கேப்பாரு? நீ யார் கிட்ட இருக்கப் போறேன்னு, யார் கிட்ட உனக்கு இஷ்டம்னு. அதுக்கு கண்ணு என்ன பதில் சொல்லணும்?''

''உம்...,எனக்குத் தூக்கம் , வருது.''

''தூங்காதம்மா. இன்னிக்கு உன் வாழ்க்கையிலேயே முக்கியமான நாள். அவங்க கேட்டா என்ன சொல்லுவே?''

''எனக்குத் தெரியாது.''

''இத பாரு பொண்ணு உனக்கு இந்த அம்மாவை விட்டுப் போக இஷ்டமா.''

''அம்மாவை விட்டுட்டுத்தானே ஸ்கூல் போறேன்.''

''அப்படி இல்லை. எப்பவுமே அப்புறம் அம்மாவைப் பார்க்கவே முடியாது.''

''ஏதாவது பூச்சாண்டி தூக்கிட்டுப் போயிருவாங்களா?''

''அப்படித்தான். அவங்கல்லாம் சதி பண்ணி அவங்க வீட்டுக்குக் கூட்டிட்டுப் போயிருவாங்க. அப்புறம் நீ அம்மாவைப் பார்க்கவே முடியாது.''

''அந்தப் பையங்கல்லாம் யாரு?''

''எல்லாம் அராதல். உன்னைக் கிள்ளுவாங்க. காலைல காப்பித் தண்ணி கூடக் கிடைக்காது உனக்கு. இத பாரு பொண்ணு என் கண்ணில்ல, உனக்கு அம்மா வேணுமா வேண்டாமா!''

''வேணும்தான்.''

''அந்த மாமா கேட்டா என்ன சொல்வே? யார்கிட்டே இருப்பேன்னு கேட்டா என்ன சொல்வே?''

''உங்கிட்டத்தான்.''

''அதாண்டி வேணும் என் கண்ணு!''

''என்ன எல்லாம் தயார் பண்ணியாச்சா? இத பாரு'' என்று கருப்புக் கொட்டு மாமா சென்ற இரண்டு மாதங்களாகவே தினப்படி வந்தவர், ''என்னம்மா பொண்ணு தைரியமா பதில் சொல்வியா? உனக்கு சாக்லேட் வேணுமா.. ஐஸ்கிரீம் வேணுமா'' என்று அவளைத் தூக்கி வைத்துக் கொள்ளப் பிரயத்தனம் செய்தார். அவரிடம் ஏதோ வாசனை அடித்தது. முத்தமிட்டபோது முள் குத்தியது. ''பாலு அய்யர் என்ன டெஸ்பரேட்டா இருக்கார் பாருங்க. நேத்திக்கு அயனை பாய்ண்ட் கொண்டு வந்தனு இல்லையா? சதாசிவம் என்ன சொல்றீங்க?''

''ஜட்ஜ் அவர் கூடச் சிரிச்சுக்கிட்டே பேசுறாரே!''

''வி. ஆர். ஜி.யை உங்களுக்குத் தெரியாது. சிரிச்சுக்கிட்டே இருப்பார். ஜட்ஜ் மெண்டில் பொடி வச்சுருவார். எவ்வளவு ப்ரிஸிடெண்ட் கோட் பண்ணியிருக்கேன். அப்பறம் பாருங்க, அவனுக்கு லா பாயிண்டே இல்லை. என்னவோ நேச்சுரல் பாரண்ட்ஸ் நேச்சுரல் பாரண்ட்ஸ்னு திருப்பித் திருப்பிச் சொல்றான். நடுவிலே நீ ஒரு தடவையாவது வந்து பாத்திருக்கியா? ஒரு தடவையாவது க்ளெயிம் பண்ணியிருக்கியா? வருஷக்கணக்கா அதைச் சீந்தவே இல்லை. இப்ப என்ன உனக்கு திடீர் அக்கறை? இது என்ன ஹாஸ்டலா?''

''அதானே?''

''எப்படியோ வக்கீல் அய்யா, ஜெயிச்சுக் கொடுக்க வேண்டியது உங்க பொறுப்பு.''

''ஜெயிக்காமப் போயிருமா? சரி புறப்படுங்க. நாழியாயிருச்சு. நல்ல சட்டையா போடுங்க. நகை செய்திருந்தா எல்லாம் போட்டு ஜம்முன்னு கொண்டு வாங்க. அப்புறம் உங்க மடியை விட்டுப் பெண்ணை எடுக்காதீங்க. உங்ககிட்ட எப்பவும்ஒட்டிக்கிட்டே இருக்கட்டும். பொண்ணு அப்பப்போ கழுத்தைக் கட்டிக்கிட்டிப் பண்ணித்துன்னு எஃபக்ட் இருக்கும் என்ன?''

காரில் வேடிக்கை பார்த்துக்கொண்டே சென்றாள். வீட்டு வாசலில் ஸ்கூல் பஸ்ஸுக்காகக் காத்திருந்த யூனிஃபார்ம் பள்ளிப் பிள்ளைகளைப் பார்த்தாள். கிரிக்கெட் ஆடும் சிறுவர்களை கார் துடைக்கும் சிறுவர்களை மரத்தடியில் சண்டை போடும் சிறுவர்களை சுவரொட்டிகளைக் கவனமாகக் கிழிக்கும்

சிறுவர்களை. அம்மா அவளை அனுவசியமாக இறுக்கிக் கட்டிக் கொண்டிருந்தாள்.

டிராபிக் விளக்குகளுக்காக நிற்கும்போது ஒரு பையன், ''ஸார், பத்து லட்சம் சார். நாளைக்குக் குலுக்கல்'' என்று டிக்கெட்டை ஜன்னலில் துருத்திக் கெஞ்சினன்.

செக்கச் செவேல் என்ற கட்டிடத்தில் பலபேர் காரிடார்களில் அலைந்துகொண்டிருந்தார்கள். பின்னல் வைத்த மாமி கருப்புக் கோட்டு அணிந்து கொண்டிருக்க, ஒருவர் கவலையுடன் சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தார். ஒரு குரங்கைத் தோளில் வைத்துக்கொண்டு ஒருவன் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தான். ஓடுகிற பஸ்ஸில் அபாயகரமாகத் தொற்றிக் கொண்டு சென்றார்கள். பெரிய கட்டிடத்தில் ஒரு அறையில் பெஞ்சு போட்டுக் காந்தித் தாத்தாவுக்குக் கீழே நாற்காலி காலியாக இருந்தது. ஓரத்தில் அவர்கள்எல்லோரும்உட்கார்ந்திருந்தார்கள். அம்மா அவள் கன்னத்தைத் திருப்பிக் கொண்டு பெஞ்சில் உட்கார்ந்தாள். கருப்புக் கோட்டு மாமாக்கள் நிறையப் பேர் உட்கார்ந்திருந்தார்கள். டைப் அடித்தார்கள். காலி நாற்காலியில் தாத்தா போல் ஒருத்தர் வந்து உட்கார்ந்து கொண்டு, ''இஸ் தி சைல்ட் இன் கோர்ட்?'' என்றார்.

''எஸ் யுர் ஆனர்.''

''பாலு, நீங்க ஏதாவது சொல்ல வேண்டியிருக்கோ?''

''இதுதான் யுவர் ஆனர். அந்தப் பெண்ணை நீங்க எக்ஸாம் பண்றதா இருந்தா யாருடைய இன்ஃப்ளுயென்ஸும் இல்லாம விசாரிக்கணும்.''

''அதைப் பத்திக் கவலைப்படாதிங்க.''

''முடிஞ்சா அதைத் தனியா யாருடைய பாதிப்பும் இல்லாம ஒரு நாள் ஸப்பரேட்டா வெக்கறதுக்கு ஏற்பாடு பண்ணிட்டா நல்லது. அதுக்கப்புறம் விசாரிச்சா நல்லது. எங்களுக்கு என்ன கவலைன்னு பெண்ணை நல்லா ட்யூட்டர் பண்ணி யிருப்பாங்க.''

''அதுக்குத் தேவையிருக்கான்னு நான் தீர்மானம் பண்ணிர்றேன்.''

இந்தப் பேச்செல்லாம் அவளுக்கு ஸ்வாரஸ்யம் அளிக்கவில்லை. அம்மாவின் மடியில் காலையாட்டிக் கொண்டு சுற்றிலும் பார்த்த போது அந்த மூன்று பையன்களும் தன்னையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. இவள் பார்வையைச் சந்தித்ததும் மூவரும் சிரிப்பதும் தெரிந்தது. ''இங்க வா'' என்று அங்கிருந்து கையைக் காட்டினர்.

அவள் தலையை மாட்டேன் என்று ஆட்டினாள். ரகு, ''நான் அங்கே வரவா'' என்று விசாரித்தான். இவளுக்குத் தீர்மானிக்க முடியாமல் அம்மாவின் முகத்தை அண்ணாந்து பார்த்தாள். அம்மா அங்கெல்லாம் பார்க்கக் கூடாது என்று அவள் முகத்தை மார்பில் சாத்திக் கொண்டாள்.

''குழந்தையை விட்டுருங்கம்மா. ரொம்ப அமுக்கி வெச்சுக்காதீங்க. அது பாட்டுக்கு இருக்கட்டும்.'' என்றார் ஜட்ஜ். ''சுதந்திரமா இருக்கட்டும். லெட் அவர் சில்ட்ரன் அட்லீஸ்ட் பி ஃப்ரீ!''

''யுவர் ஆனர் குழந்தையின் ரத்த சகோதரர்கள் மதுஸூதன், ரவிச்சந்திரன், ரகுராமன் மூவரும் கோர்ட்டில் இருக்கிறார்கள். அந்த அன்பான சகோதரர்களையும் நீங்கள் பார்வையிடவேண்டும் என்றுவிரும்புகிறேன்''

''எதற்கு?''

''முக ஒற்றுமையை விசேஷமாகக் கவனிப்பதற்கு. இந்தப் பையன்களின் இயற்கையான சகோதர சூழ்நிலையில் குழந்தை



வளர்வதில் ஒருவிதமான தடையும் சிக்கலும் இருக்காது என்று நிரூபிப்பதற்கு. குழந்தையின் மாற்றாந்தாய் இந்த மூவரையும் திறமையாக எடுத்து வளர்க்கும்போது இந்தக் குழந்தையையும் சேர்த்து வளர்ப்பதில் எந்த விதமான சிரமமும் இருக்காது. இந்தக் கேஸைத் துவங்கச் சொன்னதே அந்த மாதுதான். யுவர் ஆனர், இந்த வேண்டுகோளில் எங்கள் கட்சிக்காரருக்கு எந்தவிதமான பண ஆசையும் இல்லை என்பது உங்களுக்குக் காட்டப்பட்டது. பெற்றவர்களுடனும், உடன் பிறந்தவர்களுடனும் வளர வேண்டியதுதான் அந்தக் குழந்தைக்கு ஆரோக்கியம். அது தான் உரிமை கூட. இதுவரை "என் கட்சிக்காரர் அந்தக் குழந்தையைப் பொறுப்புடன் கூட்டி வந்து வளர்க்க முடியாத நிலையில் இருந்தார். மறு மணம் செய்து கொண்ட பின் இந்த நிலையில் இருக்கிறார். மறு மணத்தின் நோக்கமே அது தான். அதனால்தான் குழந்தையைத் திரும்பக் கேட்பதில் தாமதம் செய்திருக்கிறார்.

**யோசனை**

**பெருங்காயத்தை உளுத்தம் பருப்புக்குள் போட்டு வைத்தால் நாளடைவில் கெட்டிபடும். பிறகு தூளாக இடிக்க முடியும். பெருங்காயமும் கொஞ்சமாகச் செலவழிக்கலாம்.**

**— வி. காமாக்ஷி**

வளர்க்க முடியும் என்று தீர்மானித்த மறு கணமே குழந்தையைத் திரும்பக் கேட்கப் போயிருக்கிறார்கள். அப்போது குழந்தையைப் பார்க்கக் கூட அனுமதிதராமல் நாய் போல விரட்டப்பட்டிருக்கிறார்கள். சொந்தச் சகோதரர்கள், சொந்த ரத்தம். இந்த உலகத்தில் இதை விட வேறு விநோதமான நிகழ்ச்சியை நீங்கள் சந்தித்திருப்பீர்களா? தகப்பனாருக்குக் குழந்தையைப் பார்க்க அனுமதி இல்லை! இதனால் என் கட்சிக்காரருக்கு ஏற்பட்ட மன அலைச்சலும் கவலைகளும் அளவில்லாதவை. ஷேக்ஸ்பியர் சொன்னது போல்....''

''ரொம்ப வளவளா ஆசாமிய்யா நீர் பானு! சுருக்கமாக சொல்லும். உமக்கு... யு வாண்ட் தி சைல்ட் பேக்! அவ்ளதானே! பிரதிவாதிக்கும் அதேதான்! தே வாண்ட் தி சைல்ட். யாருக்குன்னு நான் தீர்ப்புச் சொல்லணும். அதுக்குப் போய் ஷேக்ஸ்பியர் எல்லாம் கோட் பண்ணிண்டு! பாப்பா, இங்க வாம்மா! அந்தப் பொண்ணைக் கொஞ்சம் என் சேம்பருக்கு தனியா அனுப்புங்கோ.''

அம்மா கண்ணை அடிக்கடி துடைத்துக் கொண்டிருந்தாள். ''போம்மா மாமா கூப்பிடறார் பாரு!''

வக்கீல் அதை அழைத்துக் கொண்டு செல்ல ''நீர் இரும். வாம்மா ஊம் பேரு என்ன?''

''பொண்ணு.''

''பொண்ணுவா பொன்னா?''

''பேர்கூடச் சரியாவைக்கலே யுவர்ஆனர்!''

''ஏன்? பொண்ணு நல்ல பேர்தான். பயப்படாதே பொண்ணு எங்ககூட வா. ரூமுக்குள்ள சின்னதா அழகா ஒரு நாய்க்குட்டி இருக்கு. வவ் வவ்னு கத்தும்! வந்து பாக்கறியா?''

அவள் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே போனாள். உயரமான அறையில் பெரிசாக மேசை இருந்தது. சன்னல் எல்லாம் திறந்திருந்தது. மேசை மேல் பிளாஸ்க் வைத்திருந்தது. ''கோக்கோ சாப்பிடறியா?''என்று அந்த மாமா தன் கோட்டை உதறி ஸ்டாண்டில் மாட்டினார். ''உக்காந்துக்க''.

''எத்தனாவது படிக்கிறே?''

''ப்ரைமரிலேருந்து ஃபர்ஸ்ட் போறேன்.''

''உக்காரு. உனக்கு ரைம்ஸ் தெரியுமா?''

''ஓ, தெரியுமே!''

''ஏதாவது சொல் பார்க்கலாம்.''

''டிங்கிள் டிங்கிள் லிட்டில் ஸார்
அவ்வை ஒண்டர் வாட்யூவார்!''

''டேபிள்ஸ் தெரியுமா?''

''டு ஒன்ஸ் ஆர் டூ'' சொன்னாள்.

''வெரி குட்! ரொம்பக் கெட்டிக்காரப் பொண்ணுதான். டான்ஸ் ஆடுவியோ?''

''பாட்ட கேக் பாட்ட கேக் பேக்கர்ஸ் மான்'' என்று சொல்லிக் கையால் அபிநயித்தாள்.

''தமிழ்ல ஏதும் தெரியாது போல இருக்கு! இதபாரு பொண்ணு! கோர்ட்டிலே அந்தப் பெரிய ரூமில மூணு பசங்க உக்காந்திருந்தாங்களே, அவங்கள்ளாம் யாரு?''

''பாய்ஸ்'' என்றாள்.

''அந்த பாய்ஸ் உனக்கு என்ன ஆகணும்?''

''பிரதர்ஸ்'' என்றாள்.

''அட! எப்படித் தெரியும்?''

''அன்னிக்கு மூணு பேரும் வந்திருந்தாங்க. அந்த ஆண்டி சொன்னாங்க. அம்மாதான் அவங்களைப் போன்னு சொல்லிட்டாங்க.''

''உங்கப்பா யாரு?''

''கூட்டியாரேன்'' என்று கிளம்பினாள்.

''வேண்டாம். உங்கப்பா பேரு என்ன?''

''சதாசிவம்.''

''அப்படியா? இத பாரு பொண்ணு நான் சொல்றது உனக்குப் புரியறதோ இல்லையோ, சதாசிவம் உங்க அப்பா இல்லை. அந்த மூணு பையன்களோட இருந்தாரே ஒரு மாமா.

அவர்தான் உன் அப்பா. உன் அம்மா வந்து, உன் அம்மா வந்து, இறந்து போயிட்டாங்க. நிஜம் அம்மா இல்லே. நிஜம் அம்மா இறந்து போயிட்டாங்க. இதை யாராவது சொல்லியிருக்காங்களா உனக்கு?''

''நாய்குட்டி எங்க?''

''அது அம்மாவைத் தேடிண்டுபோயிருக்கு. உனக்கு ஒருத்தரும் சொல்லலே?''

''நாய்க் குட்டி என்ன கலர்?''

''இத பார் பாப்பா, உனக்கு அந்த பாய்ஸைப் பிடிச்சிருக்கா?''

''ம்.''

''உனக்கு யாரோட இருக்கணும்? அம்மா கிட்டவா இல்லே அந்த பாய்ஸ் கூடவா?''

''பாய்ஸ்கூட கொஞ்ச நேரம் இருந்துட்டு அம்மா கிட்ட வந்துர்றேன்.''

''ரெண்டு பேர் கிட்டயும் நீ இருக்க முடியாதும்மா. அது உங்கம்மா இல்லே. நீ சின்ன குழந்தையா இருக்கறப்போ உன் நிஜம் அம்மா செத்துப் போயிட்டாங்க. இவங்க உன்னே எடுத்துக்கிட்டு வந்து வளத்தாங்க. உனக்கு நான் சொல்றது புரியுதா?''

''நாய்க்குட்டி எப்ப வரும்?''

''சரியாப்போச்சு! நாய்க் குட்டியை எதுக்குத்தான் சொன்னேனோ! தபாரு நீ இப்ப இருக்கிற வீட்டில இருந்து அந்த பாய்ஸ் இருக்கிற வீட்டுக்குப் போறியா?''

''போறேனே! அம்மாவும் வருவாங்க இல்லே?''

''அம்மா வரமாட்டாங்க. தனியாத்தான் போகணும்.''

''ரெண்டு நாள் பத்து நாள், அந்த பாய்ஸ் கூட விளையாடிட்டு அம்மா கிட்ட வந்துர்றேன்.''

நீதிபதி கோவிந்தராசன் சற்று நேரம் யோசித்தார். ''சரி நீ போம்மா'' என்றார்.

கோவிந்தராசன் சிறு வயதிலேயே தாய் தந்தையரை இழந்து மாமா வீட்டில் வளர்ந்தவர். அவருடைய தீர்ப்பை இரண்டு கட்சிகளுமே எதிர்பார்க்கவில்லை! அதில் ஒரு பகுதி:

''குழந்தை தன் சொந்தத் தகப்பனுடனும் சகோதரர்களுடனும் வளர்வதுதான் முறை, சம்பிரதாயம் எல்லாமே. இந்தக் குழந்தை ஏறக் குறைய பிறந்த தினத்திலிருந்து சதாசிவம் தம்பதியினரிடம் வளர்ந்து இருவரையும் பரிபூர்ணமாக தந்தை, தாய் என்று அடையாளம் கண்டு கொண்டு விட்டிருக்கிறது. இடைக்காலத்தில் வாதியின் தரப்பு வாதங்களின்படி பல தடவை குழந்தையைத் திருப்பிப் பெற முயற்சித்ததாகச் சொல்லப்பட்டாலும் அது ஊர்ஜிதமாக நிரூபிக்கப்படவில்லை. மனைவி இறந்ததும் குழந்தையை வளர்க்க இயலாமல் இவர்கள் வந்து அன்புடன்கேட்க அதைக் கொடுத்து விட்டதும், அதைப் பற்றிப் பல வருடங்கள் கவலைப்படாமல் இருந்ததும் தான் உண்மை என்று நம்ப இடமிருக்கிறது. ஆனால் தத்த ஹோமம் போல சம்பிரதாயங்கள் ஏதும் நிகழவில்லை. இந்த வயதில் குழந்தையின் இந்த மனோநிலையில் இடப்பெயர்ச்சி செய்வது அவள் மன ஆழத்தை எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பது தீர்மானிக்க இயலாத ஒன்று. இருந்தும் வாதி குழந்தையைத் திரும்பக் கேட்பதில் எந்த வியாபார நோக்கமும் இருப்பதாகத் தெரியவில்லை. குழந்தையைக் கொடுத்தபோதோ, அதன் பிறகோ சதாசிவத்திடமிருந்து ஏதும் பணம் பெற்றுக் கொண்டதாகவும் சாட்சியங்கள் இல்லை. ஒருவித இயலாமை, சோகம் இதனால்தான் குழந்தையைக் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. இந்த அளவில் இரண்டு கட்சிகளும் குழந்தையின் நல்வாழ்வைப் பற்றி எதுவும் அக்கறைக் குறைவு இருப்பதாகச் சொல்ல இயலாது. குழந்தையை இது நாள்வரை வளர்த்ததற்காக எந்த விதத்தில் வாதி பிரதிவாதிக்கு நஷ்ட ஈடு, அதை நஷ்ட ஈடு என்று குறிப்பிட முடியும் எனில், தர முடியும் என்பது இந்த வழக்கின் ஆதார நோக்கங்களுக்குப் புறம்பட்டது. அந்த அளவில் பிரதிவாதிக்கு நஷ்ட ஈடு தேவையென்றால் இதற்கென்று சட்ட ரீதியில் அணுக வாய்ப்புக்கள் உள்ளன. இந்த வழக்கு இந்தக் குழந்தை இனி யாரிடம் வளர வேண்டும் என்று தீர்மானிப்பதற்கே. என்னுடைய தீர்ப்பில் ஒரு குழந்தை தன்னைப் பெற்றவர்களுடன் தன் சொந்த ரத்தக்காரர்களுடன்தான் வளர வேண்டும் என்பதைப் பற்றிச் சந்தேகமில்லை. ஆனால் இந்தப் பிரத்தியேக உதாரணத்தில் குழந்தைக்கு வளர்த்தவர்களிடம் ஆழமான பாசம் இருப்பது புலனாவதால் பரீட்சார்த்தமாகக் குழந்தை ஒரு ஆறு மாதம் அவள் பெற்றவர்களின் குடும்பத்துடன் போய் வாழ வேண்டுமென்றும், இந்த ஆறு மாதத்தை ஒரு ப்ரொபேஷன் போலக் கொண்டு அதன் பின் குழந்தையை இந்தக் கோர்ட்டில் கொண்டு வந்து விசாரிக்குமாறு வாதி தரப்பில்ஏற்பாடுசெய்ய வேண்டும். அதன் பின் குழந்தையை விசாரித்து முடிவாகத் தீர்மானம் அளிக்கப்படும்.''

(தொடரும்)

சிறு குழந்தைகளுக்கு வரும் சின்னவியாதிகளுக்கு:

துளசி இலைச்சாற்றை அரை டீஸ்பூன் எடுத்து, சிறிது தேனில்கலந்து உள்ளுக்கு கொடுத்தால், சிறு குழந்தைகளுக்கு வரும் கபம், மார்புச்சளி குறையும். - பத்மா

# படித்துவிட்டு என்ன செய்கிறார்கள்?

சாதாரணமாக எல்லோருமே பள்ளிக்குச் சென்று படிக்கிறோம். ப்ளஸ் டு, பி. யூ. சி., பி. ஏ. இப்படி அனைவருக்கும் தெரிந்த கல்வி தான். ஆனால் படித்த பிறகு லட்சக் கணக்கான வேலையில்லாப் பட்டதாரிகளில் ஒருவராகி, எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் பதிவு செய்து கொண்டு மீண்டும் மீண்டும் புதுப்பித்துக் கொண்டு... இப்படியே காலம் போகிறது.

ஆனால் ஓரளவு படித்த பிறகு, வெறும் படிப்போடு நிற்காமல், தொழில் துறை சம்பந்தப்பட்ட ஏதேனும் ஒன்றைக் கற்பவர்களுக்கு எளிதில் வேலை கிடைக்கிறது. பல இடங்களில் வேலை காலியிருந்தும் தகுதியான ஆட்கள் கிடைப்பதில்லை என்ற விஷயம் உங்களுக்குத் தெரியுமோ?

இப்படி, ஒரு பக்கம் வேலையில்லாத் திண்டாட்டம்; மற்றொரு பக்கம் திறமையாக வேலை செய்பவர்கள் கிடைக்காத அவதி. இப்படி ஒரு அதிசயிக்கத்தக்கநிலை இருப்பதற்குக் காரணம், சரியாக வழி காட்டுபவர்கள் இல்லாததே.

பல்வேறுபட்ட நிறுவனங்கள் டிப்ளமா கல்வியைச் சொல்லித் தருகின்றன. எஸ்.எஸ்.எல். சி. படித்தவர்களிலிருந்து எம். ஏ. படித்தவர்கள் வரை அவரவருக்கு ஏற்ற பல வித வகுப்புக்கள் இருக்கின்றன. ஒருவருடம், இரண்டு வருடப் படிப்புக்களே இவை. படித்தவுடன் வேலை வாய்ப்புக்களும் நிறைய இருக்கின்றன. பட்டத்தோடு கூட வேறு சில தகுதிகளும் வேண்டுமே என்று, பத்திரிகை விளம்பரங்களின் மூலமோ பிறர் சொன்னார்கள் என்பதற்காகவோ ஏதோ ஒரு நிறுவனத்தில் சேர்ந்து படிப்பது தவறு. வியாபார நோக்குடன் அவை நடத்தப்படுவதால் ஏராளமான பணம்தான் செலவழியும். எனவே அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பொதுச் சேவை நிறுவனங்களில் சேர்ந்து படித்தீர்களானால், நீங்கள் வேலைக்கு அப்ளை செய்யும் கம்பெனிகளும் உங்களுடைய டிப்ளமாவை ஏற்றுக் கொள்ளும்.

வேலை வாய்ப்பு அதிகமுள்ள சில துறைகளைக் கீழே தந்துள்ளோம். முழுமையாகத் தந்திருக்கிறோம் என்று சொல்ல முடியாது. ஓரளவுக்கு வெளியாகியுள்ள இவற்றை வைத்துக்கொண்டு நீங்கள் மேற்கொண்டு தகவல் சேகரிக்கலாம்.

இங்கு தரப்பட்டிருக்கும் தகவல்கள் பஞ்சாப் அஸோசியேஷன், பாரதீய வித்யா பவன், எஸ். சி. எஸ். கோதாரி பெண்கள் அகாடமி, பெண்கள் பாலிடெக்னிக் முதலிய நிறுவனங்களிலிருந்து சேகரிக்கப்பட்டவை.

வேலை வாய்ப்பு நிறுவனங்கள் நமக்குப் பதிவு செய்ய மட்டுமே இல்லை. அங்கேயே இது போன்ற தகவல்களைத் தரும் வழிகாட்டி நிலையங்களும் உள்ளன. அவற்றை அணுகுங்கள்.

| படிப்பு | தகுதி | கால அளவு | வேலை வாய்ப்பு | சிறப்பு |
|---|---|---|---|---|
| 1. செக்ரட்டேரியல் கோர்ஸ் | எஸ்.எஸ்.எல்.சி. | ஓராண்டு அல்லது இரண்டு ஆண்டுகள் | கம்பெனிகளிலும் அலுவலகங்களிலும் | இந்தியா தொழில் துறையில் வளரும் நாடாக இருப்பதால் தினமும் தொழில் துறை நிறுவனங்கள் திறக்கப்படுகின்றன. எல்லா இடங்களுக்கும் செக்ரட்டரிகள் தேவைபடும். |
| 2. போட்டோகிராபி | எஸ்.எஸ்,எல்.சி. | ஓராண்டு | சுயவேலை வாய்ப்பு அதிகம். பத்திரிகைகளில், பிரஸ்களில் | பெண்கள் அதிகம் இத்துறையில் இல்லாததால் வாய்ப்புக்கள் ஏராளம். |
| 3. கம்போஸிங், ஃப்ரூஃப் ரீடிங் | எஸ்.எஸ்.எல்.சி. | ஓராண்டு | ,, | பெண்கள் இத்துறைக்கு நிறைய வந்து கொண்டிருக்கிறார்கள். |
| 4. டெய்லரிங் கோர்ஸ் | ஓரளவு படிப்பு | ஓராண்டு | சுயமாகச் சம்பாதிக்கலாம். துணி ஏற்றுமதி வியாபாரக் கம்பெனிகளில், தனியார் கடைகளில். | துணி ஏற்றுமதி வியாபாரம் இன்றைக்கு இந்தியாவின் முக்கியமான தொழிலாகி விட்டது. எனவே, நிறைய வாய்ப்புக்கள் உண்டு. |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. மனையியல் | ப்ளஸ் டூ அல்லது பி.யூ.சி. | ஓராண்டு. மூன்று மாதத்திற்குள் சில பாடங்கள் சொல்லித் தரப்படுகின்றன. | சுயமாக கேக் போன்றவற்றைச் செய்து விற்கலாம். ஹோட்டல்களில், மருத்துவ மனைகளில் கிடைக்கும். | இதிலேயே முதுநிலை (post graduation படிப்பும் உள்ளது. வீட்டு நிர்வாகம். முழுவதும் சொல்லித் தருவதால் பல விதங்களில் சுயவேலை வாய்ப்பிற்கு இடம் இருக்கிறது. |
| 6. புகுமுக பள்ளிக் கல்வி Pre-School Teacher Trainning Course | ஏதேனும் ஒரு பட்டம் (பி. ஏ. போன்றவை) | 9 மாதங்கள் | வசதி இருப்பவர்கள் தரமான பள்ளிகளை நிறுவலாம். | குழந்தைகளின் மனோதத்துவம், மான்டிசெரி, கிண்டர் கார்டன் போன்ற ஆரம்பநிலைக் கல்வி பற்றிய முழு விவரங்களும் சொல்லித் தரப் படுகின்றன. |
| 7. இந்தி அல்லது பிரெஞ்சு போன்ற பல மொழிகள் | எஸ்.எஸ்.எல்.சி. | 9 மாதங்கள் அல்லது ஓராண்டு | கற்ற மொழிக்கு ஏற்ப வேலைகள் கிடைக்கும். | தமிழ், ஆங்கிலம் மட்டுமே போதாது. இந்தி, பிரெஞ்சு போன்ற மொழிகளைக் கற்பதால் அதை வரவேற்க நிறைய நிறுவனங்கள் உள்ளன. |
| 8. பெயிண்டிங், பதிக் ஓவியம், பல்வேறு கைவேலைகள் | ஓரளவு படிப்பு | மூன்று மாதங்கள் | சுய வேலைவாய்ப்புக்கு நிறைய வாய்ப்புக்கள் | குறிப்பாக பதிக் ஓவியங்களை வெளி நாட்டினர் மிகவும் விரும்புவார்கள். நிறைய வருமானத்திற்கு வழியுண்டு. |
| 9. Diploma in Business Administration<br>Diploma in Business Management<br>Financial Management<br>office Management<br>Marketing Sales Managegement | ப்ளஸ் டூ<br>பட்டதாரி<br>பட்டதாரி<br>பட்டதாரி<br>ப்ளஸ் டூ | ஒன்றரை ஆண்டு<br>ஓராண்டு<br>ஒன்பது மாதங்கள்<br>ஓராண்டு<br>ஓராண்டு | வியாபார நிறுவனங்களில் இத்தகைய டிப்ளமாக்கள் வரவேற்கப்படுகின்றன | வெறும் பட்டதாரியாக மட்டுமில்லாமல் ஆபீஸ் நிருவாகம் நன்றாக இந்த டிப்ளமாக்கள் மூலம் பயின்று விடுவதால் வியாபார நிறுவனங்களில் வேலை வாய்ப்புக்கள் மிக அதிகம். |
| 10. பொதுமக்கள் தொடர்பு Public Relations | பட்டதாரி | 6 மாதங்கள் | பி.ஆர்.ஓ. எனப் பல நிறுவனங்களில், கம்பெனிகளில் தேவைப்படுகிறார்கள். | பெண்கள் இவ்வேலைக்கு வருவதை அனைவருமே வரவேற்கிறார்கள். |
| 11. மருத்துவமனை நிருவாகம் (Hospital Administration) | பட்டதாரி | ஓராண்டு | மருத்துவ மனைகளில் | பொதுமக்கள் இம்மாதிரி இடங்களில் வருகிறார்கள். பெண்கள் இவர்களைச் சந்தித்துச் சுமுகமாகப் பிரச்னைகளைத் தீர்ப்பார்கள்என்பதால் பெண்களுக்கு முன்னுரிமை தருகிறார்கள். |

| படிப்பு | தகுதி | கால அளவு | வேலைவாய்ப்பு | சிறப்பு |
|---|---|---|---|---|
| 12. D. Pharm | விஞ்ஞானப் பட்டதாரி (BS.C.) | ஓராண்டு | பார்மசி வைக்கலாம். அல்லது மருந்துக் கடைகளில் வேலை | அதிகமாக இத்துறையில் பெண்கள் இல்லை. |
| 13. D.M.T | பி.எஸ்.ஸி. | ஓராண்டு | மருத்துவ மனைகளில், பரிசோதனை நிலையங்களில். | நிறைய வாய்ப்பு உண்டு. இரத்தம், சிறுநீர் பரிசோதித்தல், எக்ஸ்ரே போன்ற மருத்துவ சம்பந்தப்பட்ட ஏராளமான வேலைகளுக்கு வாய்ப்பு இருக்கிறது. மருத்துவக் கல்லூரிகளிலும் சில குறிப்பிட்ட மருத்துவ மனைகளிலும் இவ்வகுப்புகள் நடக்கின்றன |
| 14. பத்திரிகைத் துறை கல்வி(Journilasm) | பட்டதாரி | ஓராண்டு | பத்திரிகைகளிலும் சுயமாகவும். | நிறைய வாய்ப்புக்கள் உண்டு. |
| 15. சிவில் இன்ஜினீயரிங் | எஸ்.எஸ்.எல்.சி. | மூன்றுண்டுகள் | பி.டபிள்யூ.டி.., ஹவுஸிங் போர்டு, ரயில்வே, டவுன்ஷிப் பிளானிங் எனஏராளமான வாய்ப்புக்கள். | இந்தக் கல்விக்கு விசாலமான வேலை வா7ய்ப்பு இருக்கிறது. ஜூனியர் இன்ஜினியராகப் பல இடங்களில் வேலை கிடைக்கும். |
| 16. எலக்ட்ரானிக்ஸ் என்ஜினீயரிங் | எஸ்.எஸ்.எல்.சி. | மூன்றுண்டுகள் | ஹிந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ், சென்ட்ரல் லெதர் இன்ஸ்டிடியூட், போஸ்ட் அன்ட் டெலிகிராஃப், ஆல் இந்தியா ரேடியோ இன்னும் பல. | ஏராளமான வேலை வாய்ப்புள்ள இக் கல்வியை அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது பாலி டெக்னிக் கல்லூரிகளிலேயே கற்கவேண்டும். வளமான வாய்ப்புகள் உண்டு. |
| 17. ஆர்க்கிடெக்சுரல் அசிஸ்டென்ட்ஷிப் | எஸ்.எஸ்.எல்.சி. | மூன்றரை ஆண்டுகள் | மத்திய, மாநில அரசுத் துறைகளில், டவுன் பிளானிங் துறை, தபால் தந்தி இலாகா இன்னும் பல. | நமது நாடு தொழில் துறையில் வளர்ந்து வருவதால் நாளும் கட்டிடங்கள், அதன்மூலம் நகரங்கள் விரிகின்றன. வேலைவாய்ப்புக்களும் இத் துறையில் பெருகிக்கொண்டே வரும். |
| 18. Instrumental Technology | எஸ்.எஸ்.எல்.சி. | மூன்றுண்டுகள் | எலக்ட்ரானிக்ஸ் இன்சினியரிங்கிற்குச் சொல்லப்பட்டது போல. | இதில் எலக்ட்ரானிக்ஸ், சிவில், ஆர்கிடெக்சுரல் என அனைத்துமே வந்து விடுகிறது. தொழில் துறையில் மிக முக்கியமான கல்வியும் கூட. |

| | | | | |
|---|---|---|---|---|
| 19. டி. காம் | எஸ்.எஸ்.எல்.சி. | மூன்றுண்டுகள் | பி. காம் பட்டத்திற்குக் கிடைக்கும் வேலைகள் அனைத்தும். | பி. காம் பாடங்களோடு இதில் டைப் ரைட்டிங்,ஷார்ட்ஹாண்ட்சொல்லித் தருவதால் பல நிறுவனங்கள் டிப்ள மாவையே வரவேற்கின்றன. |
| 20. காஸ்ட்யூம் டிசைனிங் அன்ட் டிரெஸ் மேக்கிங் | எஸ்.எஸ்.எல்.சி. | மூன்றுண்டுகள் | சுயவேலைவாய்ப்பு அதிகம். தையல், எம்ப்ராய்டரி என நிறைய வாய்ப்புக்கள் உண்டு. | நாகரிகம் வளர வளர வித விதமான ஃபேஷன் மாறுகிறது. அதற்கேற்ப நிறைய கற்பனைத் திறனுடன் செய்து சுயவேலைவாய்ப்பு ஏற்படுத்திக்கொள் ளலாம். பல்வேறு துணிகள் சம்பந்தப் பட்ட நிறுவனங்களில் உயர் பதவி கிடைக்கலாம். |
| 21. அழகுத் துறைக் கல்வி Diploma in Cosmetology | எஸ்.எஸ்.எல்.சி. | ஓராண்டு | பியூட்டி கிளினிகில். சுயவேலைவாய்ப்பு அதிகம் | பெண்களுக்கு மிகவும் ஏற்ற படிப்பு. நாகரிகமாகத் தன்னை அலங்கரித்துக் கொள்ள பியூட்டி பார்லருக்கு வரு பவர்கள் அதிகம். |
| 22. Data processing | சிவில் இன்சினீயரிங் (அ)எலக்ட்ரானிக்ஸ் அ)இன்ஸ்ட்ருமென்ட் டெக்னலஜி(அ)டி. காம்(அ)ஆர்க்கிடெக்சுரல் அசிஸ்டென்ட்ஷிப் | ஓராண்டு | கம்ப்யூட்டர் சென்டர்களில், யூனிட் ரெகார்ட் சென்டர் களில் பல்வேறு பெரிய வியா பார நிறுவனங்களில். | கம்ப்யூட்டர்கள் மிக வேகமாக வியா பார நிறுவனங்களைப் பிடித்து வரும் அளவுக்குத் தகுதி வாய்ந்த ஆட்கள் இத்துறையில் இல்லை. எனவே அதிக வேலைவாய்ப்பு இருக்கிறது. |

**பிறந்ததிலிருந்து இறக்கும் வரை நாம் ஏதோவொன்றைக் கற்றுக் கொண்டேதான் இருக்கிறோம். கல்விக்கு முடிவேது? ஆனல் அதிலும் அன்னைக்குத்தான் முதலிடம். ஏனென்றல் ஒவ்வொருவருக்கும் முதல் ஆசான் அன்னைதானே!**




அட்டை வண்ணப்படம்: **பி. ஈ. ரமணன்**

## இனாம்! இனாம்! இனாம்!

**கீழ்க்காணும் கட்டங்களில் ஒரு கட்டத்தில் உள்ள எவர்சில்வர் பாத்திரத்தை ரூ. 12-00 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். மற்ற விபரங்களுக்கு தபால் மூலம் தொடர்பு கொள்ளவும். பாத்திரத்தின் மதிப்பு தங்கள் முதலீட்டைப் போல் பல மடங்கு பெறுமானவை**



101



102



103


104


105


106



107


108


109


110


111


112

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் பெயர்பெற்ற உன்னத ஸ்தாபனம் **மெரி எண்டர்பிரைசஸ்**. இது **மெரி கோல்டு கவரிங் ஒர்க்ஸின்** துணை நிறுவனம். மெரி கோல்டு கவரிங் ஒர்க்ஸ் 30 ஆண்டுகளாக கோல்டு கவரிங் நகை வியாபாரத்தில் பெயர் பெற்ற ஸ்தாபனம்.

# மெரி எண்டர்பிரைசஸ்

P.B. No:1446. 14, ரங்கநாதன் தெரு, தி.நகர், சென்னை-600 017


"ஸ்..ஸ்..பாரும்மா,
ரொம்ப அரிக்குது..எரியிதும்மா."
உபயோகியுங்கள்
நைஸில்.
உடனடி நிவாரணம்
அளிக்கும்
வியர்க்குரு பவுடர்.
2 தினுசு
டப்பாக்களில்
கிடைக்கிறது
'நீலம்' மற்றும்
'சந்தனம்'.
Glaxo
nycil
வாங்குவீர்
நைஸில்
விரட்டுவீர்
வியர்க்குருவை.
மருந்துப் பொருட்கள்
அடங்கிய—நைஸில்:
1. அதிக வியர்வையைத் தவிர்க்கிறது.
2. வியர்வையை உறிஞ்சுகிறது.
3. துர்நாற்றம் ஏற்படுத்தும் கிருமிகளை அழிக்கிறது.
4. சருமத்திற்கு இதமளிக்கிறது.
CASGLN-4-182 TAM

# எப்போதும் பெண்

## 16

வீட்டில் எல்லா விளக்குகளும் போட்டு எக்ஸிபிஷன் மாதிரி இருந்தது. வாசலில் பளிச்சென்று கோலம் போட்டிருந்தது! காமாட்சி பாயசமும் கேசரியும் பண்ணியிருந் தாள். நொறுக்குத் தீனிக்குத் தேன்குழல் செய்திருந்தாள். அவளுக்கென்று ஒரு அறை பிரத்தியேகமாகத் தயாரிக்கப் பட்டது. புதுசாக குப்பம் க்வில்ட் வாங்கியிருந்-தார்கள். பையன்கள் மூன்று பேரும் இப் போதே அவள் பக்கத்தில் யார் படுத்துக் கொள்வது என்று சண்டை போட்டுக் கொண் டார்கள். அவள் வரப் போகிறுள்.

அப்பாவும் ஐ.சி.எஃப். காரரும் சதாசிவத்தின் வீட்டுக்கு டாக்ஸி எடுத்துக் கொண்டு போயிருந்தார்கள். ராகுகாலமில்லாமல் பார்த்துச் சென் ஞர்கள். ஜட்ஜ் தீர்ப்பானதும் உடனே குழந்தையை அவர்கள் கையில் கொடுக்க வில்லே. காமாட்சிக்கு இதிலேயே கோபம். மறைமுகமாகத் தகவல் சொல்லி, இன்று நாள் நன்ருக இல்லே. வெள்ளிக் கிழமை அனுப்புகிருேம் என்று சொல்லி அனுப்பி ஞர்கள். வெள்ளிக் கிழமை உடம்பு சரி யில்லே என்று தட்டிக் கழித்தவர்கள் இந்த மாதிரியே போய்க் கொண்டிருந்தால் இப் படியே ஆறு மாசமும் போக்கி விடுவார்கள் என்று காமாட்சியின் நச்சல் பொறுக்க முடி யாமல்தான் அப்பா கிளம்பிஞர். பக்க பலத் துக்கு ஐ. சி. எஃப். காரர் தேவையாக இருந்தது. ''குடுக்கலேன்னு எனக்குத் தகவல் சொல்லி அனுப்புங்கோ. குடுக்காமப் போயிடு வாளா பார்க்கலாம்.''

எதிர்பார்த்தபடி சதாசிவத்தின் வீட்டில் அவர்களுக்கு வரவேற்பு பலமாக இருந்தது. சதாசிவம் சிரித்த முகத்துடன் ''வாங்க உக் காருங்க'' என்று நடுக் கூடத்தில் சோபாவில் உட்கார வைத்தார். அப்பாவைப் பார்த்து அடிக்கடி சிரித்தார். ஐ. சி. எஃப்.காரரை யாரு என்று விசாரித்தார். ''குழந்தையைக் கூட்டிப் போக வந்தீங்களா?''

''ஆமாங்க.''

''அழைச்சிக்கிட்டுப் போங்க, அழைச்சுக் கிட்டுப் போங்க. கோர்ட்டில தீர்மானிச் சிருக்கிறத நாம மீற முடியுமா?'' இப்போது பார்வதி அவருடன் வந்து சேர்ந்து கொண் டாள். ''சொல்லிட்டிங்களா?'' என்ருள்.

''இரு, பார்வதி, இப்பத்தான் வந் திருக்காங்க.''

''நீங்க தாராளமா அழைச்சிக்கிட்டுப் போங்க. அதைப் பத்தி எங்களுக்கு எந்தவித ஆட்சேபணேயும் இல்லே.''

''எமவுண்டை மட்டும் செட்டில் பண் ணிடுங்க.''

''எமவுண்டா?''

''இதைப் பாருங்க. இவ்வளவு வருஷமா இதனே வளர்த்ததுக்கு ஆன செலவுக் கணக்கு.''

அப்பா தயக்கத்துடன் அந்த நீட்டமான பட்டியலேப் பார்த்தார். பாபா ஸூட், பால் பவுடர், பேபி கொசுவலே என்று என்ன என்னவோ எழுதியிருந்தது. கடைசியில் கூட் டிப் போட்டிருந்த தொகையைக் கலவரத் துடன் கவனித்தார். பதினெட்டாயிரத்துச் சொச்சம் என்றிருந்தது. அப்பா ஐ.ஸி.எஃப் காரரை ''என்ன ஓய்'' என்று பார்த்தார்.



''தாராளமாக் குழந்தையை அஃளச்சிக் கிட்டுப் போங்க. இந்த எமவுண்டை செட்டில் பண்ணிட்டீங்கன்னுப் போதும்.''

''என்ன ஸார் இது? வியாபாரமா?''

''வியாபாரம் எதுவும் இல்லே. நீங்க இத்தனே வருஷமா அவஃள வளத்திருந்தீங் கன்னு இந்தச் செலவு ஆகியிருக்குமில்லே?'' என்ருள் பார்வதி.

''அது வேற விசயம்மா'' என்ருர் ஐ.ஸி. எஃப்.காரர். ''அதுக்கு வேணும்னு ஒரு ஸூட்டைப் போட்டு வாங்கிக்கோங்கோ. இப்ப கோர்ட் ஆர்டரை மீர்றது உங்களுக்கு நல்லதில்லே.''

''என்னய்யா நல்லதில்லே? நாங்க என்ன இளிச்ச வாயங்களா? பச்சைக் குழந்தையை இஷ்டப்பட்டபோது கொண்டு தள்ளுவீங்க. இஷ்டப்பட்டபோது திருப்பி வாங்கிப்பீங்க! பிடுங்கிட்டுப் போவிங்க! நாங்க என்ன ஆஸ்ட்லா நடத்தரேம்? இதுக்கு இத்தனே வருஷமா பீவாரி மூத்திரம் துடைச்சு இதுக்கெல்லாம்....''

''நிசமாச் சொல்லுங்க பார்வதி அம்மா! நாங்க இந்தக் குழந்தையை உங்க கிட்ட தள்ளினேமா? நாக்கில நரம்பில்லாமப் பொய் சொல்றீங்க! நீங்க வந்து திரும்பத் திரும்பக் கெஞ்சிக் கேட்டபோதுதானே தந்தம்? அதே போலத் திருப்பிக் கேட்டாத் தர்றதா நீங்க சொல்லலியா?''

''சொல்லலே'' என்ருள் அழுத்தமாக.

''என்ன ஓய்?'' என்ருர் அப்பா.

''நீங்க இவாளோட பேசாதேங்கோ. கோர்ட் ஆர்டரை மீர்ரு. கிரிமினல் கேஸ் ஆயிடும்.! இதுக்காக ஜெயிலுக்குப் போகப் போரு. நமக்கென்ன, போலீசை வைச்சுத்தான் இறகுபோட வைக்கணும்.உம்மகிட்ட ஜட்ஜ்மெண்ட் காப்பி இருக்கில்லே?''

''அதுக்கு அப்பீல் போட்டிருக்கமே.''

''அப்பீலாவது புடலங்காயாவது... ஐகோர்ட்டுக்கு மேலே அப்பீல்னு சுப்ரீம் கோர்ட் போகணும். இந்தச் சுண்டைக் காய் கேஸெல்லாம் சுப்ரீம் கோர்ட் எடுத்துக்காது. வாரும் ஓய். நீர் வாசல்லேயே இரும். நான் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் இன்ஸ்பெக்டரைக் கூட்டிண்டு வரேன். இவாளுக்கு மரியாதையா நடந்துக்கத் தெரியாது போல இருக்கு. சந்தி சிரிக்கணும்னு பார்க்கரு. சிரிக்க வைக்கலாம். முனிசிபாலிடி மாதிரி பொண்ணே இழுத்துண்டு போகணும்னு செஞ்சுர்றது! இத பாருங்கம்மா சுமுகமா இதைச் செய்ய விருப்பமில்லே உங்களுக்கு. எங்க கூட ராஜியா இதச் செஞ்சாக்க உங்களுக்குப் பொண்ணே ஆறு மாசத்துக்குள்ளே ரெண்டு மூணு தடவை கொண்டு வந்து காட்டலாம்னு கூட இருந்தோம். இப்ப ரொம்ப முரண்டு பண்றேள். அந்த சான்சும் போச்சு. வாரும்!''

''இருங்க. இப்ப எங்க போறீங்க?'' என்ருர் சதாசிவம். அவருக்குப் போலீஸ் என்ருல் ஆகாது. போலீசுக்குப் பயப்பட வேண்டிய பல விஷயங்கள் அவர் வியா



பாரத்தில் இருந்தது. வீட்டில் கணக்குக்கு வராத ரொக்கம் நிறைய இருந்தது! அவர் மனச்சாட்சி அவ்வளவு சுத்தமில்லை.

''எங்க போறேம். போலீஸ் ஸ்டேஷனுக்குத்தான்.''

''இருங்க இருங்க. அவசரப்படாதீங்க. இந்தப் பணத்துக்கு என்னதான்சொல்றீங்க?'

சொந்தக் கட்சி ஓங்குகிற தைரியத்தில் ஐ.ஸி.எஃப்.காரர் ''அதை நீங்க கோர்ட்டில போட்டு கிளெய்ம் பண்ணிக்கோங்கோ. வாரும்.''

''இருங்க.''

''அவங்க போகட்டுங்க'' என்ருள் பார்வதி.

''இரு பார்வதி. உனக்கு ஒண்ணும் தெரியாது. இத பாருங்க. நீங்க சொல்ற மாதிரி இதைச் சுமுகமா வெச்சுக்கலாம். எதுக்கு அநாவசியச் சண்டை? ரெண்டு பேருக்குமே அந்தப் பெண் பேரிலே இஷ்டம். இதுக்கு நீங்க சொல்ற மாதிரி வாரம் ஒரு நா இங்க கொண்டு வந்து விட்டாக்கூடப் போச்சு. என்ன சொல்றே பார்வதி?''

''என்னுல் விட முடியாது!''

''தத்துப்பித்துன்னு உளருதே. போலீஸ்காரங்க வீட்டுக்குள்ளாற வந்து ரகளையாகணுமா? எதுக்கு அது?''

''ஊஹூம். மாட்டேன்.''

''பார்வதி இப்படித் தனியா வா'' என்ருர் சதாசிவம். அவர்கள் ஹாலை விட்டு விலக,ஐ.ஸி.எஃப். ''பார்த்தீரா? இந்த மாதிரி தான் சத்தாயிக்கணும்'' என்ருர்.

இப்போது அவள் ஹாலுக்குள் எட்டிப் பார்த்து ''அம்மா எங்கே?'' என்ருள்.

''வாம்மா'' என்ருர் அப்பா. அவள் தன் நிஜத் தந்தையைப் பார்த்தாள்,

''இப்ப என்கூட வரியா?''

''எங்க கூட வரப் போறே.''

''எங்கே?''

''அங்க அண்ணு எல்லாம் இருக்கா. பூனைக் குட்டி, நாய்க்குட்டி. எல்லாம் இருக்கு. விளையாட நிறைய ஃப்ரெண்ட்ஸ் இருக்கா.''

''நேத்திக்கு வரேன்.''

''இல்லேம்மா. இன்னிக்கே வந்தாகணும்'' என்ருர் அப்பா.

''இருய்யா. உமக்கு ஒண்ணும் தெரியாது. பொண்ணு! எங்க கூட இப்ப வந்தேன்னு உனக்கு என்ன பிடிக்கும் சொல்லு. சாக்லேட்? உப்புக் கடலை வேணுமா உப்புக் கடலை? மாடு எப்படிக் கத்தும்? ம்பாஆ! ஆடு? ...ம்மே! குருவி?'' என்று ஐ.ஸி.எஃப்.காரர் தனக்குத் தெரிந்த தினுசில் மிமிக்ரி பண்ண அவள் சுவாரஸ்யமாகக் கவனித்தாள். அதன் பின் ஐ.ஸி.எஃப். ஒரு ஸ்டூலில் மறைந்திருந்து வெளிப்பட்ட போது சிரித்தாள்.

''அந்தப் பையன்களெல்லாம் உம் பிரதர்ஸ் உம் பிரதர்ஸ்! நான் உன் அப்பா'' என்று அடிக்கடி அப்பா சொல்லிக் கொண்டிருக்க பார்வதி அழுது கொண்டே வெளியே வந்தவள் சட்டென்று மாடியை நோக்கிச் செல்ல சற்று நேரத்தில் சதாசிவம் வந்து ''அழைச்சிக்கிட்டுப் போங்க. அடுத்த வாரம் ஒரு நாளாவது கொண்டு வந்து காட்டுங்க. உபகாரமா இருக்கும். ரொம்ப அழறு'' என்ருர்.

''போம்மா, அவ சாமான்கள் எல்லாம் அப்பறம் எடுத்துக்கலாம். எல்லாத்தையும் கொண்டு வந்து கொடுக்கச் சொல்றேன். பொண்ணு இவங்க கூடப் போறியாம்மா''

''அங்க அந்த பாய்ஸ் எல்லாம் இருக்காங்களாம். கிளி இருக்காம் இந்த மாமா சொன்னர்.''

அவளுக்கு எதுவும் சரியாகப் புரியவில்லை. அந்த மாமா கூடப் போவதில் அவளுக்குத் தயக்கம் எதும் தோன்றவில்லை. ஏதோ அவர்களுடன் காரில் போய்க் கொஞ்ச நேரத்தில் திரும்பி வந்து விடப் போறோம் என்ற எண்ணத்தில்தான் அவள் போனுள். இன்னெரு மாமாவையும் அவர் செய்யும் வேடிக்கைகளையும் அவளுக்குப் பிடித்திருந்தது. அந்த மாமா அவளைக் கூப்பிடும் விதம் அவளுக்குக் கவர்ச்சிகரமாக இருந்தது. மனத்தின் ஓரத்தில் அந்தப் பையன்களைப் பார்க்கப் போகிறோம் என்கிற நினைப்பும் இதமாகத்தான் இருந்தது.

தயக்கமில்லாமல் அப்பாவின் பின் சென்ருள். சீக்கிரமே திரும்பி வந்துவிடப் போகிறோம் என்னும் எண்ணத்துடன்தான்.

வீடு பூராவும் குதூகலம் ததும்பியது. மது,ரவி, ரகு மூவரும் தமக்குத் தெரிந்த வித்தைகளை யெல்லாம் அவளுக்குக் காட்டினர்கள். மது தலை கீழாக நடந்தான். ரவி தன் சுண்டு விரலை வளைத்து மடித்தான் முழங்காலில் நடந்து வேடிக்கை காட்டினன். காமாட்சி அவ்வப்போது இவள் வாயில் பருப்பு சாதத்தை ஈஷினள். மது பக்கத்து வீட்டு டாமி நாயை எடுத்துக் கொண்டு வந்து அதன் காதைப் பிடித்துத் தூக்கி அது வீல்வீல் என்றுகத்துவதைக்காட்டிசுரணை இருக்கிறது என்ருன். ரேடியோவைக்கத் தெரியும் என்ருன் ரவி. சைக்கிள் ஓட்டத் தெரியும் என்ருன் ரகு. சின்னவன் கூடத்திலேயே மூணு சக்கர சைக்கிள் ஒட்டிக் காட்டினன். மூவரும் ஒருவரை யொருவர் முந்திக் கொண்டு சண்டை போட்டு கொண்டு ராத்திரி யார் பக்கத்தில் படுத்துக் கொள்ளப் போகிருள் என்ற சர்ச்சை ஏற்பட்டது. மணி பத்து வரைக்கும் அவர்களது கோமாளித்தனங்கள் ரசித்தது. அதன் பின் ''அம்மா எங்கே?'' என்ருள். மது காமாட்சியைக் காட்டினன்.

''அது இல்லே. எங்கம்மா எங்கே?''

''உங்கம்மா இவதான். எங்கம்மாவும் இதான். அப்பா அந்த ரூம்ல இருக்கா.''

இதெல்லாம் புரியாமல் அவள் ''அம்மா கிட்டப் போகணும்'' என்ருள். கொஞ்ச நேரத்தில் ''அம்மா கிட்டப் போகணும்'' என்பதை அடிக்கடி சொல்ல ஆரம்பித்தாள். ஒரு கட்டத்தில் லேசாக அழ ஆரம்பித்தாள். காமாட்சி வந்து அவளை அபரிமிதமாகக் கொஞ்சி ''இத பாரும்மாகண்ணல்ல. இருட்டிப் போச்சோல்லியோ. அதனுலே நாளைக் கார்த்தாலே கொண்டு விடறோம். படுத்துண்டு தூங்கிடுவியாம். ஏண்டா இவளுக்கு காக்கா கதையெல்லாம் சொல்லலாமாடா நரிக் கதை, காண்ட மிருகம் கதை...''

அதெல்லாம் அவளுக்கு இப்போது உரைக்கவில்லை. விசித்து அழ ஆரம்பித்தாள் மூன்று பேரும் அவள் எதிரில் உட்கார்ந்து கொண்டு அவள் அழுவதையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். சின்னவனுக்குத்தான் அவளுடன் சேர்ந்து அழ வேண்டும் போல இருந்தது. காமாட்சிக்கு நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்று தெரியவில்லை. அப்பா உள்ளே வந்து அவள் அழுவதைச் சற்று நேரம் பார்த்திருந்து விட்டு ''அழாதேம்மா அழாதேம்மா'' என்று சொல்லிப் பார்த்துப் பிரயோசனமில்லாமல் போய் விட்டார்.

''பேசாமக் கொண்ட விட்டுட்டு கார்த்தாலே கூட்டிண்டு வரலாமா?''

''நாளைக்கும் இதே பிராப்ளம்தான் வரும். எப்படியும் இதைச் சமாளிச்சாகணும்.''

அவள் இப்போது பயம் கலந்து அலற ஆரம்பித்தாள். அப்பா சன்னலைச் சார்த்தி ''பேசமரு!'' என்று அதட்ட இரைச்சல் அதிகமாகி விட்டது.

''அவசரப்படாதிங்கோ. ஆரம்பத்திலயே பயம் காட்டாதேங்கோ. அப்புறம் ஒட்டவே ஒட்டாது. ஏய் மது நீ போய் அவாத்துக்குப் போய் இவ அம்மாவைக் கூட்டிண்டு வாடா போடா!''

''ஊம் நான் மாட்டேன்'' என்ற மதுவைப் பார்த்துக் கண்ணைக் காட்டினள், மது, ''சரி, அப்படியே ஆகட்டும்மா'' என்று சைக்கிளைத் துடைப்பவன் போலவும் காத்தடிப்பவன் போலவும் பாசாங்கு செய்து நேரம் தாழ்த்தினன். அவன் செய்கைகளையும் சற்று நேரம் அழுகையை மறந்து பார்த்துக் கொண்டிருந்தாள். மறுபடி அழ ஆரம்பித்தாள். இப்போது சுரத்து அதிகமாக இருந்தது. என்ன செய்யலாம்? வாசலில் போய் கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்தாள்.

''அம்மா வருவா வருவா'' என்று சொல்லிக்கொண்டே அதை மெல்ல சமாதானம் செய்து தூக்கம் வரும் வரை சமாளித்துவிடலாம் என்று பிரயத்தனப்பட்டபோது வீட்டு வாசலில் கார் வந்து நின்றது. (தொடரும்)

**சிலருக்கு மூக்கிலிருந்து தண்ணீராகவடியும். சளி இருக்காது. இதை நீர்ச்சளி என்பார்கள்.**

**சூடாக டிக்காஷன் போட்டு அதில் பால் சேர்க்காமல் சர்க்கரையும் போடாமல் ஒரு கரண்டி தேன் மட்டும் விட்டுக் கலக்கிக் குடித்தால் நீர்ச்சளி நின்று விடும்.**

**-விஜயா ஸ்ரீனிவாசன்**

# திருமண மலர்

**இப் பகுதியில் திருமண விளம்பரம் செய்ய கட்டணம் ரூ. 20/- மட்டுமே. தொகையை 'மங்கையர் மலர்' என்ற பெயருக்கு போஸ்டல் ஆர்டராக மட்டுமே அனுப்ப வேண்டும். ஒரு விளம்பரத்தில் ஒருவருக்கு மட்டுமே, 30 வார்த்தைகளுக்குள் விவரங்கள் தரவேண்டும். பதில் அனுப்புபவர்கள் பெட்டி எண்ணுக்கே அனுப்பவேண்டும். தனிப்பட்ட கடிதப் போக்குவரத்து கிடையாது.**

சோழியவேளாளர். பி.ஏ. படித்து அரசாங்க வேலையில் ரூ. 500 சம்பாதிக்கும் 24 வயதுப் பெண்ணுக்கு அரசாங்க அல்லது வங்கி வேலையில் உள்ள அதே வகுப்பைச் சேர்ந்த வரன் தேவை.

பெட்டி எண் 381

நல்ல உயரமும் அழகும் சொத்தும் உடைய அரசு வங்கியில் வேலை பார்க்கும் சைவ வேளாள பிள்ளை பட்டதாரி வரனுக்கு, சைவ வேளாள பிள்ளை, முதலியார், செட்டியார் குலத்திலிருந்து வசதி மிக்க அல்லது வேலை பார்க்கும் மணமகள் தேவை. முழு விவரங்களுடனும் தொடர்பு கொள்க.

பெட்டி எண் 382

ஔபமன்ய கோத்ரம், வாத்யமா, பட்டதாரி, கேரள ஐயர் வகுப்பைச் சேர்ந்த 28 வயது பேங்கில் உத்தியோகம் பார்க்கும் பெண்ணுக்கு படித்த, நல்ல வேலையில் இருக்கும் மணமகன் தேவை.

பெட்டி எண் 383

33 வயது வடமாள் பையன் பி.யூ.சி. பம்பாயில் மாதம் ரூ. 1000 சம்பளம். சொந்த (தகப்பனுர்) ஃபிளாட்டில் வாசம். பம்பாயிலோ அல்லது அங்கு மாற்றலாகக் கூடிய வேலையிலோ உள்ள பெண் தேவை. ஜாதகம், விவரம் அனுப்ப வேண்டியது

பெட்டி எண் 384

28 வயதுள்ள அழகான சைவ வேளாள பிள்ளை வகுப்பைச் சேர்ந்த எம்.எஸ்ஸி படித்த பெண்ணுக்கு சைவ வேளாளப் பிள்ளை இனத்தைச் சேர்ந்த மணமகன் தேவை. ஜாதகம் இருந்தால் அனுப்பவும்.

பெட்டி எண் 385

பாரத்வாஜ கோத்ரம், தமிழ் வடமாள் பிரிவைச் சேர்ந்த மனைவியை இழந்த 8, 10 வயதில் இரண்டு குழந்தைகளை உடைய, மாதம் ரூ. 1800 வருமானம் உள்ள 39 வயதுடைய மத்திய சர்க்கார் ஆபீஸருக்குப் பொருத்தமான மணமகள் தேவை. ஏழ்மை பொருட்டல்ல. ஆசிரியர் பயிற்சி பெற்ற பெண்ணுயிருந்தால் நலம். ஆனுல் கட்டாயமில்லை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும்.

பெட்டி எண் 386

29 வயது எம். எஸ்ஸி பட்டதாரி. அஸிஸ்டன்ட் மானேஜராக தேசியமயமாக்கப்பட்ட பாங்கில் பணி புரியும் பெண் விசாகம் நட்சத்திரம். ஆத்ரேய கோத்ரம், வடமாள். தகுந்த மணமகன் தேவை. ஜாதகம், குடும்ப விவரம் அனுப்பவும்.

பெட்டி எண் 387

சோழிய வேளாளர் பிள்ளை வகுப்பைச் சேர்ந்த மத்திய அரசு நிறுவனத்தில் ரூ. 900 மாத வருமானமுள்ள செவ்வாய் தோஷமுள்ள குடும்பத்தில் ஒரே பையனுன வரனுக்குப் பொருத்தமான மணமகள் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும்.

பெட்டி எண் 388

31 வயது நிரம்பிய வடமாள் சங்க்ருத கோத்ரத்தைச் சேர்ந்த பெண்ணுக்கு அதே பிரிவை அல்லது வேறு பிரிவுகளைச் சேர்ந்த மாப்பிள்ளை தேவை.

பெட்டி எண் 389

வடமாள் ஆத்ரேய கோத்ரம், வயது 35 தனியார் கம்பெனியில் டைப்பிஸ்ட் மூன்று வருஷமாக தற்காலிகம், கூடிய சீக்கிரம் வேலை நிரந்தரமாக வாய்ப்புள்ளது. பாங்க் வட்டிக்கு மாதம் சுமார் ரூ. 400 கிடைக்கும் மூலதனமும், சொந்த வீடும் உள்ள சென்னையிலிருக்கும் பையனுக்கு 26-27 வயதுக்கு மேற்படாமலும், சென்னையில் நிரந்தரமான வேலை இருக்கக் கூடிய பெண் தேவை. ஜாதகம் இல்லை.

பெட்டி எண் 390

37 வயது நிரம்பிய வடமாள், கௌசிக கோத்ரம், பூராடம், அரசாங்க வேலையில் (சம்பளம் ரூ. 450) ஐயர் குடும்பத்தைச் சேர்ந்த பையனுக்கு வேலை பார்க்கும் பெண் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். உட்பிரிவுகள் வேறு இருந்தாலும் பரவாயில்லை.

பெட்டி எண் 391

கௌசிக கோத்ரம், வடமாள், சுவாதி நட்சத்திரம், வயது 30. பிரபல வங்கியில் ரூ. 1300 சம்பாதிக்கும் கால் ஊனமுள்ள எம். ஏ. பட்டதாரிக்கு அதே வகுப்பைச் சேர்ந்த படித்த, குடும்பப் பாங்கான மணமகள் தேவை. விவரங்களுடன் ஜாதகம் அனுப்பவும்.

பெட்டி எண் 392


"ஸ்..ஸ்..பாரும்மா,
ரொம்ப அரிக்குது..எரியிதும்மா."
உபயோகியுங்கள்
நைஸில்.
உடனடி நிவாரணம்
அளிக்கும்
வியர்க்குரு பவுடர்.
2 தினுசு
டப்பாக்களில்
கிடைக்கிறது
'நீலம்' மற்றும்
'சந்தனம்'.
Glaxo
nycil
PRICKLY HEAT
POWDER
வாங்குவீர்
நைஸில்
விரட்டுவீர்
வியர்க்குருவை.
மருந்துப் பொருட்கள்
அடங்கிய —நைஸில்:
1. அதிக வியர்வையைத்
தவிர்க்கிறது.
2. வியர்வையை
உறிஞ்சுகிறது.
3. துர்நாற்றம்
ஏற்படுத்தும்
கிருமிகளை
அழிக்கிறது.
4. சருமத்திற்கு
இதமளிக்கிறது.
CASGLN-4-182 TAM

## 17

**பா**ர்வதியைக் கண்டதும் அவள் பாய்ந்து ஓடிப்போய்க் கட்டிக் கொண்டாள். ''அம்மா அம்மா! வீட்டுக்குப் போவோம். இனிமே இங்க வரவேண்டாம்'' என்று அவளுடன் அழுந்த ஒட்டிக்கொண்டாள். பார்வதிஅப்பாவையும், காமாட்சியையும் பரிதாபமாகப் பார்த்து, ''எதுக்காகக் குழந்தையை ஏங்க அடிக்கிறீங்க? பாத்திங்களா? என்னை விட்டுட்டு இருக்குமா இது? ஒரு மினிட்டுக்கூட இருக்காதுங்களே. ஏங்கிப் போயிருங்க குழந்தை. எவ்வளவு வாடிப் போயிடுச்சு. உன்னை ஒருத்தரும் ஒண்ணும் செய்ய மாட்டாங்க செல்லம்'' என்று பலவிதமாக அவளைக் கொஞ்சினாள். அதைக் குழந்தைகள் மூவரும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க சின்னவன், ''பாப்பா எங்க வீட்டுது. நீ வீட்டுக்குப் போ'' என்று அதட்டினான். காமாட்சி பார்வதியின் அருகில் வந்து ''இத பாருங்கம்மா. நீங்க இந்த வேளையிலே அழையாத விருந்தாளியா எங்க வீட்டுக்கு வந்து ஏற்கனவே சிக்கலா இருக்கிற விஷயத்தை இன்னும் சிக்கலாப் பண்றிங்க. உங்களை மூஞ்சில அடிச்ச மாதிரி வீட்டை விட்டு வெளில போன்னு ஒரு வார்த்தை சொல்றதுக்கு எங்களுக்கு எத்தனை நாழியாகும்?'' என்றாள்.

பார்வதி எந்த அவமானத்தையும் தாங்கிக் கொள்ளும் நிலையில் இருந்தாள். அவள் கண்கள் கெஞ்சின. ''இதப் பாருங்கம்மா. என்னை என்ன வேணா சொல்லுங்க. உங்களுக்கு நான் கொஞ்சம் அடாவடியாப் பேசினதாலே கோபமாகக் கூட இருக்கலாம். அதுக்காகக் குழந்தையை எங்கிட்ட இருந்து பிரிக்காதீங்க. ரொம்ப எங்கிட்ட ஒட்டிக்கிச்சு. இதை விட்டு என்னாலயும் என்னை விட்டு இதாலயும் இருக்கவே முடியாது. செத்துப் போயிருவேன்ம்மா! தயவு பண்ணி குழந்தையை எங்கிட்டக் கொடுத்திருங்க. உங்களுக்கு என்ன பணம் வேணா தரேன்.''

''அடச்சே! உங்க பணக்காரப் புத்தி இன்னும் போகலையே. உங்க பணத்துக்கு ஆசைப்பட்டா இவ்வளவு தூரம் கோர்ட்டிலே மல்லாடி செயிச்சோம்? குழந்தை இந்தக் குடும்பத்துது. இந்தக் குடும்பத்திலேதான் வளரணும். அது என்ன கத்துக் கத்தினாலும் சரி, கொஞ்ச நாளில எல்லாம் சரியாப் போயிடும். ஆனா இந்த வீட்டை விட்டுக் குழந்தை பேரக் கூடாது. உங்களுக்குக் குழந்தை மேலே அத்தனை அக்கறை இருந்தா எதித்தாப்பலேயே வீடு பார்த்துண்டு வந்திருங்கோ. ஆனா இவ இங்க சொந்த அண்ணங்களோட வளர்ந்து பழகியாகணும். அதுக்கு மேல் பேச்சே இல்லை. சும்மா சும்மா வந்து கெஞ்சிண்டிருக்காதீங்கோ. உங்களுக்குத்தான் ஏராளமாய்ப் பணம் இருக்கு. எத்தனையோ இல்லங்கள் எல்லாம் இருக்கு. அங்க வளர்ப்பாரற்ற எத்தனையோ குழந்தைகள் இருக்கு. இதுக்கு பதிலா இன்னொண்ணை எடுத்து வளங்களேன்? இது

# எப்போதும் பெண்

## சுஜாதா



ஒண்டிதான் லோகத்திலே குழந்தையா? அதும் ரொம்பச் செல்லம் கொடுத்து வளர்த்திருக்கேள். உடம்பு பூரா பிடிவாதமா இருக்கு. ரொம்ப முரண்டு பண்றது. எல்லாத்தையும் சரிபண்ணணும்.''

''குடுக்க மாட்டீங்களா?'' என்று கடைசி முறையாகக் கெஞ்சினாள் பார்வதி.

''என்னம்மா அடிச்சு விரட்டணுமா? கொடுங்கோ குழந்தையை. நீங்க பண்றது நன்னாவே இல்லே. என்ன பார்த்துண்டு இருக்கேள். வாங்கி வச்சுக்கங்கன்னா! அது உங்க பொண்ணு! குட்டி, இடுப்பை விட்டு இறங்குடி. பாச்சை மாதிரி வேத்து ஜாதி மனுஷா கிட்ட எல்லாம் ஒட்டிண்டு! இப்ப எறங்கப் போறியா இல்லேயா? ஏம்மா குழந்தையைக் கீழே வையுங்கோ! மரியாதையாச் சொன்னா கேட்க மாட்டீங்க?''

பார்வதி அவளை இறக்கி வைக்க, அவள் புடவையைப் பிடித்து இழுத்து அழுது கொண்டே அமர்க்களம் செய்ய, காமாட்சி அவள் அருகில் வந்து புஜத்தைப் பிடித்துத் தரதரவென்று அலற அலற இழுத்துச் சென்று வாசல் பக்கம் ரூமில் செலுத்தி தானும் உள்ளே சென்று கதவைச் சாத்திவிட்டாள். உள்ளேஅவள் அலறுவதும் காமாட்சி ''பேசாம இருக்கியா, அழாம இருக்கியா மூச்!'' என்று தரையில் ஒரு கம்பை வைத்துத் தட்டுவதும் அவள் அலறல் இன்னும் அதிகரிக்கக் காமாட்சியின் குரலும் வலுப்பெற, பட்டென்று சத்தம் கேட்க சப்த நாடியும் ஒடுங்கினாற்போல் அவள் அழுகை நின்றுபோக, காமாட்சி சன்னல் வழியாக ''ஏன்னா அவங்களைப் போகச் சொல்லுங்கோ. நாம பார்த்துக்கலாம்'' என்றாள்.

சதாசிவம் காரிலிருந்து ''பார்வதி வா, போகலாம்.''

''அடிக்காதீங்கம்மா, அய்யோ அடிக்காதிங்கம்மா.''

''அடிக்கவும் இல்லே, கடிக்கவும் இல்லே. அதட்டிப் பயப்படுத்தி அடக்கி வைச்சிருக்கேன். நீங்க போங்கம்மான்னா. நான் பார்த்துப்பேனில்லே. போங்க. குழந்தை வேணும்னா நாங்க சொல்ற மாதிரி செய்யுங்க'' என்றாள்.

பார்வதி அழுதுகொண்டே காரில் ஏறிக் கொண்டாள்.

**பா**ர்வதி அதற்கப்புறம் எட்டு மாதம் உயிருடன் இருந்தாள். ஏற்கனவே பாரியான சரீரம். டயபட்டீஸ் வேறு. அதை ஒருவாறு கட்டுப்படுத்தி வைத்திருந்தவள், குழந்தையை இழந்த பின் சாப்பாட்டில் அக்கறையோ கட்டுப்பாடோ காட்டாமல், நிறையத் தின்றாள். எதிலும் ஈடுபாடு இல்லாமல் விசித்திரமாக நடந்து கொண்டாள். காமாட்சி சொன்ன மாதிரி ஒரு தடவை அனாதைக் குழந்தைகள் இல்லத்துக்குக் கூடப்போய் வந்தாள். அழகாக ஏக்கத்துடன் பிரேமைக்குத் தவித்துக் கொண்டு இருக்கும் பல குழந்தைகளைப் பார்த்தாள். ஆனால் அவளுக்கு என்னவோ எங்க பொண்ணுக்குஇனிமே ஈடா யாரும் வர முடியாதுங்க. பாத்தீங்களா. பாப்பார சனங்க கொஞ்சமாவது நன்னி விசுவாசம் காட்டுவாங்கன்னு பார்த்தேன். ஒரு நாக் கூட கொண்டு காட்டலேயே! செல்லம் என்ன செய்யுதோ? எங்ஙன வாடிப் போவுதோ? ஏங்கிப் போவுதோ? நீங்கதான் போயி விசாரிச்சுக் கூட்டியாங்களேன். ஒரு நாளைக்குத் தரமாட்டாங்களா?''



''இனி அவன் வீட்டு வாசப்படி மிதிக்க எனக்கு விருப்பமில்லே. என்ன பேச்சுப் பேசினுங்க.''

''பேசினுப் பேசிட்டுப் போகட்டுங்க. நமக்குக் குழந்தை முக்கியமில்லேயா?''

''செத்துப்போச்சுன்னு வச்சுக்க!''

மயக்கமா வருகிறாற்போல இருக்கிறது என்று டாக்டரிடம் காட்டியதில் அவர் பிபி, யூரின் ஷுகர் எல்லாமே இருப்பதைக் கவனித்து எச்சரிக்கையாகி உடனே ஆஸ்பத்திரியில் அட்மிட் பண்ண வேண்டும் என்று சொன்னுர். ஆஸ்பத்திரிக்குப் போகாமல் ஒரு நர்ஸிங் ஹோமில் கொஞ்ச நாள் இருந்துவிட்டுச் சரிப்பட்டு வராமல் வீட்டுக்குத் திரும்பி வந்து பராமரிப்பும் கவனிப்பும் போதாமல் உணவில் கண்டிப்பு இல்லாமல் தன் வியாதியின் பரிபூரண அபாயம் தெரியாமல் ஒரு நாள் திடீரென்று தலை சுற்றல் அதிகமாகி கண் மூடிப் படுத்தவள் நினைவு திரும்பி எழுந்திருக்கவில்லே. கோமா என்ருர்கள்.

மூன்று மாசம் அந்த நிலேயில் படுத்திருந்தாள். முகத்தில் புன்னகையோ வேதனையோ ஏதும் இன்றி சுவாசம் இயந்திரமாகத்தான் படுத்திருந்தாள். அந்த மனத்துக்குள் என்ன என்ன எண்ணங்களோ? எத்தனை முறை அவள் தான் வளர்த்த பெண்ணைச் சந்தித்திருப்பாள்? என்னென்லாம் பேசியிருப்பாள்? எங்கே கொண்டு போய்எண்ணத் தொடராக அவளைச் செருகியிருக்கும்? எதையும் ஊகிக்க முடியாமல் அதே மாதிரி அச்சடித்தாற்போல கிடந்தாள். வெளியே வேலைக்காரியும் நர்ஸும் வந்து அவளே அலம்பித் துடைத்து தினசரி பொட்டிட்டார்கள். மூக்குக் குழாய் வழியாகக் காம்ப்ளான் கரைத்துக் கொடுத்தார்கள். ஸிலிண்டர் ஸிலிண்டராக ஆக்ஸிஜன் கொடுத்தார்கள். பிளாஸ்டிக் பைகளில் சிறுநீரைச் சேகரித்தார்கள். நினைவு திரும்பாமலேயே தன் பெண்ணை அப்புறம் பார்க்காமலேயே பார்வதி இறந்து போனுள்.

பார்வதி இறந்துபோன செய்தி இந்தக் குடும்பத்தில் யாருக்கும் தெரியவில்லே. யாரும் தகவல் சொல்லவும் இல்லே. இப்போது அவள் கொஞ்சம் ஒல்லியாக உயரமாக வளர்ந்திருந்தாள். காமாட்சி தலைப் பின்னலுக்கெல்லாம் நேரம் இல்லே என்று பசங்களைப் போல் கிராப் அடித்து விட்டாள். அவள் தன் புதிய விதியுடன் ஒருவாறு உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டு விட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும். அந்தக் கட்டாயப் பிரிவு அவள் உள் மனத்தை எவ்வாறு பாதித்திருக்க வேண்டும் என்பது பின்னுல்தான் தெரியும். இப்போது அவள் தன் சகோதரர்களுடன் விளையாடுகிருள். அதுவும் சின்னவனிடம் கொஞ்சம் அருகாமை அதிகம்தான். கொஞ்சம் கிட்டப் போய்க் கவனிக்கலாம்.

மது ரகு ரவி மூவரும் வீட்டை விட்டு கிரிக்கெட் சாதனங்களுடன் வெளியே வருகிருர்கள். மது இப்போது உயர்ந்திருக்கிருன். அவன்தான் தலைவன் என்பது சொல்லாமலே தெரிகிறது. ரகு அவனுடைய பரம பக்தன் என்பதும், ரவி அவ்வப்போது முறைத்துக் கொள்வான் என்பதும் தெரிகிறது. வீட்டு வாசலுக்கு வந்து பூமியை நனைத்து ஸ்டம்ப் நடுகிருர்கள். பக்கத்து வீட்டு வெங்கட் சுப்பையா எல்லாரும் வருகிருர்கள். இவள் ஓரத்தில் மண்ணை நோண்டிக் கொண்டு தனக்குள் நிறையப் பேசிக் கொள்ளுகிருள். பள்ளிக்கூட டீச்சராகத்தான் நிறையப் பேசுகிருள். கையில் குச்சி வைத்துக் கொண்டு தெருத் திண்ணை விளிம்புகளை யெல்லாம் ''ஏன் ஹோம் ஒர்க் செய்து வரவில்லே?'' என்று தண்டிக்கிருள். மது, ''ஏய் சின்னு! அவளுக்கு இந்த வீட்டில் செல்லப் பேர்— ''உள்ளே போய், அப்பா பச்சைப் பெட்டி இருக்கு பாரு. அதும் பின்னுலே கவர் பந்து இருக்கு எடுத்துண்டு வா'' என்று அதட்டுகிருன்.

''என்னைச் சேர்த்துக்கிறியா?''

'நீ எடுத்துண்டு வாயேன்,''

---

**சத்துக்களைப் பாதுகாக்கும் முறை**

- காய்கறிகளை வாங்கியவுடன் உபயோகிக்க வேண்டும்.
- காய்கறிகளை நறுக்கியதும் தண்ணீரில் ஊறவைக்கக் கூடாது. இதனுல் வைட்டமின் சத்துக் குறைகிறது.
- காய்கறிகளை அரியும் முன்பே கழுவ வேண்டும்.
- காய்கறிகளைப் பெரிய துண்டுகளாக நறுக்குதல் நல்லது.
- காய்கறிகளை அதிகமான நீரில் வேகவைக்கக் கூடாது.
- காய்கறிகளை வேகவைக்கும்போது பாத்திரத்தை மூடிவைக்க வேண்டும்.
- காய்கறிகளைக் குறைந்த நேரம் வேகவைப்பதால் ஊட்டச் சத்துக்களைப் பாதுகாக்கலாம். நீரை முதலில் கொதிக்க வைத்துப் பிறகு கொதி நீரில் காய்கறிகளை வேக வைக்க வேண்டும்.
- சமைக்கும்போது சோடா மாவு சேர்ப்பதால் வைட்டமின் 'பி' அழிக்கப்படும்.
- காய்கறிகளைக் குளிர்ச்சியான ஈரப்பசையுள்ள இடத்தில் வைக்க வேண்டும்.
- ஒருமுறை சமைத்த காய்கறிகளை மறுபடியும் சூடாக்கக் கூடாது. இதனுல் உயிர்ச் சத்துக்கள் அழிகின்றன.

கௌசல்யா சிவம்.

''சேத்துக்கறதா இருந்தா எடுத்துண்டு வரேன்.''

''சேத்துக்கரேம் சின்னு!'' என்ருன் ரகு.

''அதெல்லாம் காப்டன் சொல்லாம முடியாது. பார்க்கலாம். போய் எடுத்துண்டு வாயேன்!''

சின்னு உள்ளே ஓடுகையில் வழி மறித்த காமாட்சியிடம், ''அம்மா! பாரும்மா என்னையும் சேத்துக்கச் சொல்லும்மா.''

''ஏண்டி கல்யாணி வரலையா பாண்டியாட?''

''ஊஹூம். தப்பாட்டம் ஆடிட்டு என்னைக் கிள்ளுரு. சேததுக்கச் சொல்லும்மா''

''டேய் மது! குழந்தையையும் சேத்துக்கடா!''

''ப்ச்! அவ பொண்ணு. எப்படிச் சேத்துக்கறதாம்? அவ ஃப்பிரண்ட் கூடப் போய் ஆடட்டும்.''

பந்தை எடுத்துக் கொடுத்துவிட்டுத் தனியாகத் தனக்குள் பேசிக்கொண்டு கிளம்பி விடுகிருள்.

'அவ பொண்ணு. எப்படிச் சேத்துக்கறதாம்?'

பழையபடி அவளுக்கு இந்தக் கேள்விகள் உள்ளுக்குள் எழுந்தன. முழுக்க முழுக்க மூன்று பையன்களின் மத்தியில் ஒரே ஒரு பெண்ணுக வாழ்வதில் அவளுக்கு விசித்திரமான அனுபவங்கள் இருந்தன. எப்போதும் அம்மா உடன் இருக்க முடியவில்லை. இந்த ரவி இருக்கிருனே ரொம்பப் பொல்லாதவன். கேலி பண்ணுவான். சாக்லேட் முதலியவற்றில் அவனுக்கு அதிகம் பங்கு கிடைப்பதில்லை. ஆனல் அவ்வப்போது பொருமை ஏற்படும். மேலும் நடு ஆசாமியாக இருப்பதால் அம்மா அப்பா இரண்டு பேரும் அவனைத்தான் மொத்துவார்கள். உள்ளூர இந்த அநியாயம் வெவ்வேறு விதங்களில் குறும்பாகவும் வெறுப்பாகவும் வெளிப்படும். ஒரு நாள் புறக்கடையில் அவள் பல் தேய்த்துக்கொண்டிருக்கும்போது ரவியும் அப்போதுதான் எழுந்து தூக்கக் கலக்கத்துடன் நேராகச் சாக்கடைக்கு வந்து நின்றுகொண்டே சுவரின் மேல் சிறுநீர் போக்கினன் சுவரின் மேலும் கீழும் படம் வரைவது போல, அல்லது தோட்டத்துக்கு நீர் பாய்ச்சுவது போல செய்து காட்டி, ''சின்னு பாத்தியா, பாத்தியா?'' என்றுபெருமைப்பட்டுக் கொண்டான்.

அவள் அப்போதுதான் முதன் முறையாக அதைப் பார்க்கிருள். அது அவளை மிகவும் வசீகரித்தது. ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசங்களைப் பற்றிய அவள் அறிவு மேம்போக்காகத்தான் இருந்து வந்திருக்கிறது. 'பாய்ஸ் ஆர் டர்ட்டி! அவர்கள் மூக்கு வேறு விதமாக இருக்கும். அல்லது காதில் ஜிமிக்கி போட்டுக் கொள்ள மாட்டார்கள் என்று தான் பாகுபடுத்திக் கொண்டிருந்தாள். இப்போது ரவி அதைப் பார் என்று காட்டியதும் அவளுக்கு ஆர்வமும் குதூகலமும் அதே சமயம் அய்யய்ய தப்பு! என்கிற உணர்ச்சியும் உண்டாயிற்று. ஆனல் அது அவளுக்கு முற்றிலும் புதிதாக இருந்தது.

''ரவி, என்னடா அது?'' என்று கேட்டாள்.

''உனக்கு இல்லியோல்லியோ? உனக்கு இல்லியோல்லியோ?'' என்று ரவி அவள் ஸ்கர்ட்டை உயர்த்தினன். அவள் வாரி மடக்கிக்கொண்டு ''அய்யய்யோ! அம்மா கிட்டச் சொல்வேன்'' என்ருள்.

''தொட்டுப்பார்க்கிறயாதொட்டுப் பார்க்கறயா'' என்ருன் ரவி.

அவளுக்குத் தொட்டுப் பார்க்க வேண்டும் போலத்தான் இருந்தது. அந்த அதில் தப்போ, பாவமோ என்று பெரியவர்கள் சொல்லிக் கொடுப்பதற்குள் அதன் சௌகரியம்தான் அவளை வசீகரித்தது. சே, நமக்கும்

> குளிப்பதற்கு வெந்நீர் வைக்க வேண்டுமென்றல் வேறு பாத்திரங்களைப் பயன்படுத்துவதைவிட குக்கரையே பயன்படுத்தலாம். விரைவில் நீர் சூடாக குக்கர் உதவுகிறது. குக்கரில் நீரை ஊற்றி 'காஸ்கட்' போடாமல் மூடியை மூடிவிட்டால் மற்ற பாத்திரங்களில் நீர் சூடாவதை விட குக்கரில் நீர் விரைவில் சூடாவதைக் காண்பீர்கள்.
>
> —கீதா பஞ்சு

இதுபோல் இல்லையே என்று ஒருவிதமாகக் குறையாகவும் இருந்தது.

''ரவி!'' என்று அம்மா கூப்பிட, அவன் அவளிடம் ''அப்புறம் பார்க்கலாம்'' என்று சொல்லிவிட்டுஉள்ளேஓடிவிட்டான். கொஞ்ச நேரம் அவளுக்குத் திகைப்பாக இருந்தது ஆனல் பெண்ணுக்கும் பையனுக்கும் வித்தியாசம் உண்டு என்பது தெளிவாகப் புரிந்து விட்டது. அது ஏன் என்பது பற்றித்தான் குழப்பம் இருந்தது. போன வருஷம் கவுனுக்குள் தலையணையை மறைத்து வைத்தும் பொம்மைக்குப் பால் கொடுத்தும் விளையாடின விளையாட்டுக்களிலிருந்து அவள் ஞானம் இப்போது முதிர்ச்சி யடைந்து விட்டதாகச் சொல்ல முடியாது. இருந்தும் அப்போதைக்கு இப்போது சிருஷ்டி பிறப்பு இவைகளைப் பற்றிய அவள் குழந்தைக் கற்பனைகளில் சற்றே தெளிவு ஏற்படத் தொடங்கியது. இனி அவள் குழந்தை இல்லை.

(தொடரும்)


மிகக் குறைந்த விலையில்
துணிகளுக்கு வெண்மை ஊட்டிட..
உங்கள் ஆடைகள் அனைத்தும்
புத்தொளி பெற்றிட...
விலையில் குறைந்த,
தரத்தில் உயர்ந்த
GOPURAM
WASHING SOAP
கோபுரம்
சலவை சோப்பு
லாப நோக்கின்றி மக்கள் நலனுக்காகத்
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
தயாரிக்கும் ஒரு அற்புத சலவை சோப்பு.
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
சென்னை-600 001.
காதி கிராப்டுகளிலும், கடைகளிலும் கிடைக்கிறது

# 3 போட்டிகள் பரிசுகள்!

பெண்ணின் வாழ்க்கையில் முக்கியமான மூன்று கட்டங்கள் — மகள், மனைவி, தாய் என்பதே. இதிலேயே ஒருபெண்மை முழுமை அடைகிறது எனலாம். இந்த மூன்று நிலைகளில், ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொரு பெண் சிறந்து விளங்கி யிருக்கலாம்.

ஒரு மகள் என்ற முறையில் தன்னுடைய பெற்றோருக்கு மிக நல்ல பெயரை வாங்கித் தந்திருக்கலாம். (நேருவின் மகள் இந்திரா காந்தி என்று பெருமைப் படலாம்.) ஒரு மனைவியாகத் தன் கணவன் பெரும் சாதனை புரிய வழி வகுத்திருக்கலாம். (கைகேயி தன் கணவன் போரில் வெற்றி பெற தன் கையையே அச்சாணி ஆக்கினாளாம்!) ஒரு தாயாகத் தன் குழந்தைகள் பெரும் புகழ் பெறும்படி செய்திருக்கலாம். (சிவாஜியின் தாய் முதல் விஜய் அம்ருதராஜின் அம்மா வரை இவர்களின் வெற்றிக்கு அன்னைகள் அல்லவோ காரணம்!)

இந்த மூன்று நிலைகளில் நீங்கள் ஏதேனும் சாதனை புரிந்திருக்கிறீர்களா? எழுதுங்கள்.

(1) நான் ஒரு சிறந்த மகள்
(2) நான் ஒரு சிறந்த மனைவி
(3) நான் ஒரு சிறந்த தாய்

இந்த மூன்றில் ஏதேனும் ஒரு தலைப்பில் எழுதலாம். வரும் மூன்று வகைக் கட்டுரைகளிலும் சிறப்பானதெனத் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று முதல் பரிசு பெறும் கட்டுரைகளுக்கு வெள்ளிப் பொருள்கள் பரிசாக அளிக்கப்படும்.

கட்டுரைகள் அனுப்ப கடைசித் தேதி: 5–10–1

1. நடுவர்களாக மூன்று பிரபல பிரமு இருந்து தேர்ந்தெடுப்பார்கள்.
2. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது
3. கட்டுரையைத் திருப்பி அனுப்ப இயலா

பரிசளிப்பவர்கள்:

**உம்மிடி பங்காரு செட்டி டிரஸ்ட்**

(நகைகள் & வைர வியாபாரிகள்)

11, நாகேஸ்வரராவ் ரோடு,
பனகல் பார்க், தி. நகர்,
சென்னை-600 017



## 18

சின்னு! அந்தப் பெயர் இப்போது அவளுக்கு நிலைத்து விட்டாலும் இனி அவள் சின்னவள் இல்லை. இதுவரை அவள் விநோதமான குழந்தைப் பருவம் முழுவதும் அவள் வளர்ந்த விதம் இதைச் செய்யாதே, அதைச் செய்யாதே என்கிற கட்டுப்பாடுகளின் மூலம் தான். பார்வதியுடன் இருக்கும்போது எட்டிப்பார்க்காதம்மா, ஓடாதம்மா, தொடாதம்மா, கண்ல அடிபட்டும் இப்படியெல்லாம் தடை விதிகள்தாம்!

புதிய வீட்டில் அத்தனை கட்டுப்பாடு இல்லாவிட்டாலும், ஒரு ஆண் குழந்தைக்குக் கிடைக்கும் பரிபூரண சுதந்திரம் அவளுக்கு கிடைக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். கட்டுப்பாடு இருந்தும் அவள் தனக்குள் ஒரு ராணியாகத்தான் இருந்தாள். அவளுக்கென்று ஒரு சுயாட்சி இருந்தது. அந்த ராஜ்ஜியத்தின் விதிகள் எல்லாம் அவளே அமைத்துக் கொண்டவை. தனியாக உட்கார்ந்து கொண்டு மணிக் கணக்கில் தனக்குத் தானே பேசிக் கொண்டிருக்கும் போது அந்த விதிகள் உருவாயின. அதில் விநோதச் சடங்குகள், தண்டனைகள், சந்தோஷங்கள் அமைந்தன.

இருந்தும் சமூகம் அவளை எதிர்காலத்தில் அவள் ஏற்றுக்கொள்ளப் போகும் இரண்டாம்தரப் பாத்திரத்துக்குத்தான் தயார் பண்ணிக் கொண்டிருந்தது. எதிர் காலத்தில் நீ ஒரு மனைவி, ஒரு தாய், வீட்டு மிருகம் என்பதாகத்தான் அவர்கள்மீண்டும் மீண்டும் மறைமுகமாக வலியுறுத்திக் கொண்டிருந்தார்கள்.

ஒரு ஆண் குழந்தைக்கு வளரும்போது முன் கிடைக்கும் ஆரோக்கியமான விளையாட்டுக்களும் அனுபவங்களும் அவளுக்குத் தரப்படவில்லை. ஒரு பெண் குழந்தையைப் பொறுத்தவரையில் பிற்பாடு வரும் பாத்திரத்துக்குக் காத்திருக்கும் நேரம் போலத்தான் இருந்தது. இடை நாட்கள் முழுவதும் சமூகம் அவளைக் காத்திருக்கச் சொல்கிறது. அவளுடைய கணவனுக்காக!

பருவம் எய்தாப் பையனும் தனக்கு வரப் போகும் பெண்ணைப் பற்றி ஒருவிதமான கனவுகளை சேகரிக்கிறான். ஆனால் அது அவனுடைய தின வாழ்க்கையின் மையமான விஷயமில்லை. பம்பரம் ஆடும்போது அல்லது கிரிக்கெட் ஆடும்போது அல்லது பிக்னிக் போகும்போது எல்லாம் அவன் தன் எதிர்கால மனைவியைப் பற்றி நினைப்பதே இல்லை. எப்போதாவது ''அம்மா! ஏன் இன்னிக்கு டிபன் பண்ணலை'' என்று அதட்டும்போது ''எல்லாம் உன் பொண்டாட்டி வருவா! பண்ணித் தருவா! அப்ப அதட்டிக்கோ'' போன்ற அன்றாட உரையாடல்களில் அவனுக்கு வரப்போகும் பெண்ணை ஒருவிதமான அடிமை ரூபத்திலேயே அறிமுகப் படுத்தப்படுகிறாள்.

ஆனால் பெண்ணைப் பொறுத்த வரையில், வாழ்வின் ஆரம்பத்திலேயே அவளுக்கு வர போகிறவன் ஒருவிதமான விடுதலைக்காரன், அவளை விட உயர்ந்தவன், திடமானவன்; ஆண் வர்க்கத்தின் உயர்வைப் பற்றி அவள் இளமைக் காலத்தில் சந்தேகத்துக்கு எந்த விதமான சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டதில்லை. ஆண் வர்க்கத்தின் மேன்மையின் பொருளாதார சமூக அஸ்திவாரங்கள் அனைத்தும் அவளுக்குச் சம்பிரதாயமாக சின்னச் சின்ன வழிகளில் போதிக்கப்பட்டு வருகின்றன. அவள் பருவ காலத்தில் அடியெடுத்து வைப்பதற்கு முன் அவள் உள் மனத்தில் ஆணுக்கு அடிமையாக இருப்பதுதான்அவள் உயிர் வாழ்வுக்கு உத்தமம் என்பது விதைக்கப்பட்டு விடுகிறது. அப்பாவும் அம்மாவும் அதைத் தான்சொல்கிறார்கள். மற்றபேரும் அதைத் தான் சொல்கிறார்கள்.



# எப்போதும் பெண்

சுஜாதா

''எங்க சின்னு என்ன நன்னு வீடு பெருக்கறு பாரு! ஒரு பாத்திரம் தேய்ச்சுதுன்னு பளிச்சின்னு இருக்கும் மாமி! இத்தனை சின்ன வயசுக்கு இத்தனை பதவிசா காரியம் செய்றது!'' இப்பவே புடிச்சு இதுக்கு நகைய சேர்த்திருக்கோம். ஜோசியன் சொல்லியிருக்கான் மாமி! இந்தப் பொண்ணு ஜாதகத்தைப் பார்த்துட்டு இந்தப் பொண்ணு ஒரு கலெக்டர் மனைவியாவோ, ஒரு பெரிய ஜட்ஜ் மனைவியாவோ ஆவதற்கு எல்லா அறிகுறிகளும் இருக்குன்னு...''

கலெக்டர் அல்லது ஜட்ஜ் மனைவியாக! கலெக்டரோ அல்லது ஜட்ஜோ அல்ல.

திரும்பத் திரும்ப அவளுக்கும் தினம் ஒரு முறையாவது கல்யாணம், மனைவியாதல், பிள்ளை பெறுதல், போன்ற விஷயங்கள்தான் வலியுறுத்தப்படுகின்றன. கல்யாணம் என்பதுதான் எல்லாவற்றுக்கும் உயர்த்தி, அதுதான் சுலபமானது! அதில்தான் சமூக அந்தஸ்து!

''அந்தப் பொண்ணுக்கு என்னவோ கோளாறு மாமி. முப்பது வயதாகியும் இன்னும் கல்யாணம் ஆகல்லைன்னு''

மனைவி அதற்குத்தான் தயார்ப்படுத்தப்படுகிறாள். எனவே, கணவன் கிடைப்பது, அல்லது அவளுடைய எஜமானன் கிடைப்பது என்பது அவள் வாழ்வின் மிக முக்கியமான ஒன்று என்று வலியுறுத்துகிறார்கள். ஆண் என்பது ஒரு முக்கியமான எதிர்த் தேவை. அவள் தன் பெற்றோர்களிடமிருந்து ஒரு நாள் விலகிப் போகத்தான் வேண்டும். அவள் எதிர் காலத்தைத் திறக்க வேண்டும். எப்படி? விடுதலை பெற்றல்ல! ஒரு புதிய எஜமானனுக்குத் தன்னைக் கொடுப்பதன் மூலம். இந்த வகைக் கருத்துக்கள் தலைமுறை தலைமுறையாக வரும் ஒரு தொடர்ந்த சம்பிரதாயத்தில் அவள் மனத்தின் ஆழத்தில் பலப்பல மறைமுகச் செயல்கள் மூலம் விதைக்கப்படுகின்றன.

ஆண்களுடன் அவளுடைய போட்டி ஆரம்பத்திலேயே தோற்றுப் போய் விட்டது!

நீ பொண்ணு, பொண்ணு என்று எத்தனையோ வாசல்கள் அவளுக்கு மூடப்படுகின்றன.

கொஞ்சம் கொஞ்சமாக அவள் சகோதரர்கள் வளர்ந்து கொண்டே வர, இதுவரை அவளை விளையாட்டில் ஓரளவேனும் சேர்த்துக் கொண்டிருந்தவர்கள் இப்போது ஒதுக்கத் துவங்கி விட்டார்கள். நீ எங்கடி எங்க





கூட ஓடுவியா! கிரிக்கெட் பால் பட்டுதுனு சுருண்டு விழுந்துருவே! இந்தப் பாவாடையை வெச்சுண்டு எப்படி ஓட முடியும்? பம்பரத்தில கோஸ் எடுப்பியா? கயிறு சுத்தவே உனக்கு வரலேயே! பேசாம வீட்டில இருந்துண்டு கோலம் போடு. பலிங் சப்ளாம் விளையாட முடியுமா? பேசாம பாண்டியாடு! நொண்டிப்ளே எல்லாம் ஆம்பிளைங்க ஆடமாட்டா...''

ஆண் உலகத்தில் தவிர்க்க முடியாமல் விரவும் மூர்க்கத்தை அவளால் ஓரத்திலிருந்து வேடிக்கைதான் பார்க்க முடியும். ஒரு தடவை பக்கத்து வீட்டுப் பையன் ஒருவன் அவளை வம்புக்கு இழுத்து பாவாடையைக் கிழித்து விட்டான். வந்த ஆத்திரத்தில் அவனைக் கடிக்க ஓடினாள். அவன் சுவர் தாண்டிக் குதித்து அங்கேயிருந்த மொட்டை மாடியிலிருந்து எட்டிப் பார்த்து கேலி பண்ணுகிறான். 'இப்ப என்ன செய்வே?' என்று பாடுகிறான். கையை ஒரு மாதிரி காட்டுகிறான். ரகுவிடம் சொல்லப் போய், ரகு அப்படியா செஞ்சான் என்று கிரிக்கெட் ஸ்டம்பை எடுத்துக்கொண்டு அவனைத் துரத்தித் துரத்தி அடித்து சிண்டை பிடித்து இழுத்து வந்து, ''சொல்லுடா! ஸாரி சொல்லுடா'' என்று அதட்ட அவன் மாட்டேன் என்று பிடிவாதிக்க, அவன் மூக்கில் சப்பென்று ஒரு குத்து விட்டதில் உள் மூக்கு உடைந்து ரத்தத்தைப் பார்த்துப் பயந்து விட்டாள்.

அப்போதிலிருந்து அவள் பாய்ஸ் கூட ஆடுவதே இல்லை. கொஞ்சம் கொஞ்சமாக தன் சகோதரர்களிடமிருந்தும் விலக ஆரம்பித்தாள். அவர்களும் இவள் இருப்பதை லட்சியமே பண்ணமல் இஷ்டத்துக்கு வந்து போய்க் கொண்டிருந்தார்கள். ரவிதான் அவளுடன் கொஞ்சம் ஒட்டிக் கொண்டிருந்தான். இருந்தாலும் ரவியைக் கண்டால் சில வேளைகளில் பயமாக இருந்தது. ரவி திடீர் என்று என்னவோ கெட்டதெல்லாம் சொல்ல ஆரம்பித்து விடுவான். அவன் சொல்வதெல்லாம் கேட்க வேண்டும் போலவும் இருக்கும், கேட்க வேண்டாம் போலவும் இருக்கும். திடீர் திடீர்என்று ரவிக்கு அவளுடைய உடலமைப்பின் மேல் ஆர்வம் வந்து விடும். ஓடிப்போய்விடுவாள்.

சின்னப் பெண் தீவாக வளர்ந்தாள். கற்பனை உலகில்தான் அதிகம் சஞ்சாரம் செய்தாள். தனியாகத்தான் இருந்தாள். அம்மா என்று காமாட்சியுடன் அவளால் ஒட்டிக்கொள்ள முடியவில்லை. 'அந்த அம்மா' எங்கே என்கிற கேள்விக்குப் பதில் கிடைக்காமலே மழுங்கிக்கொண்டிருந்தது! சில நாட்கள் காரணமில்லாமல் பெரிதாக அழுவாள். என்ன ஏது என்று யாராலும் கண்டு பிடிக்க முடியாது.

பெண் சினேகிதிகளும் அவளுக்கு அதிகம் இல்லை. பள்ளிக்கூடத்தில் அனுபமா எதற்கெடுத்தாலும் சிரிப்பாள். 'பாய்ஸ்' என்றாலே போதும். சிரிப்பு வந்து விடும். டீச்சரைக் கண்டால் சிரிப்பு, பியூனைக் கண்டு சிரிப்பு. அனுபமா இத்தனைக்கும் இவளைவிடப் பெரியவள். உயரமானவள். இவள் யூனிஃபாரம் கவுன்தான் போட்டுக் கொள்கிறாள். அனுபமா பாவாடை தாவணி. இருந்தும் சிரிக்க ஆரம்பித்தால் அசிங்கமாகப் பல் தெரிய ரொம்பச் சிரிக்கிறாள். அனுபமா சில வேளைகளில் அவளை ரகசியமாக அழைத்துச் சென்று கம்மர்கட்டு காக்கா கடி கொடுத்து ''நான் பாடி போட்டுக்கறேன். நீ போட்டுக்கிறயோ?'' என்பாள். அப்புறம் சைக்கிளில் ஒரு பையன் கூட பள்ளிக்கூடம் வருவதையும் அவன் ஒரு தடவை பென்சில் வாங்கித் தந்ததையும் சொல்லி இருக்கிறாள். அவள் அக்கா பூர்ணிமாவுக்கு ஒரு பையன் லெட்டர் எழுதினதையும், அதைத் தான் படித்ததையும் தலையில் அடித்து சாமி பேரில் யாருக்கும் சொல்லாதே என்று சத்தியம் வாங்கிக் கொண்டு சொல்லி யிருக்கிறாள். அதை ஒரு நாள் திருடி வந்து காட்டுவதாகவும் சொல்லி யிருக்கிறாள். மேலும் ஒரு போட்டோ காட்டுவதாகச் சொல்லி யிருக்கிறாள்.

சின்னுவுக்கு இதெல்லாம் ஒருவிதமான குழப்பங்களையே ஏற்படுத்தின. அனுபமா சொல்வதெல்லாம் நல்லதல்ல என்றஒட்டு மொத்தமான அபிப்பிராயம் இருந்தாலும் அனுபமாவின் சிநேகத்தை அவள் தவிர்க்க விரும்பியதில்லை.

பருவத்தின் வாசல் கொஞ்சம் கொஞ்சமாக அவள் உடம்பை மாற்றிக் கொண்டிருப்பதையும் பாத்ரூமில் பார்த்துக் கொண்டிருக்கிறாள். பெண்ணுக்கு உரியபாகங்கள் அத்தனையும் மென்மையானவை, தொந்தரவானவை, கொஞ்சம் கொஞ்சமாக அவள்

---

**யோசனை இரண்டு**

அடிப் பிடித்த பாத்திரங்களை சுத்தம் செய்ய ஒரு வெங்காயத்தை வெட்டிப் போட்டுக் கொஞ்சம் தண்ணீர் ஊற்றிவேக வைத்துப் பிறகு தேய்த்தால் பாத்திரம் எளிதில் சுத்தமாகி விடும்.

துணிகளில் வெற்றிலைக் கறை பட்டால் சிறிது தயிரையோ, எலுமிச்சம் பழச் சாற்றையோ எடுத்துஅழுத்தித்தேய்த்துதுவைத்தால் கறை போய்விடும்.

—ரமா ராமநாதன்

---

மார்பில் மொட்டுப் போல் உண்டாவதை அவள் விந்தையுடன் பார்த்திருக்கிறாள். அது தரும் உணர்ச்சிகளிலும் ஒரு சிரமம் இருந்தது. அதிகம் ஸ்கிப்பிங் ஆடினால் அது கொஞ்சம் வலித்தது. துடித்தது. இது எதற்கு என்பது தெரியவில்லை. எதிர்காலத்தில் அவள் தசைநார்களின் அமைப்பு சக்தி எல்லாம் ஒரு ஆணுக்கு உள்ளதை விட குறைபட்டுத்தான் இருக்கப் போகிறது.

ஒரு நாள் தலை வலித்தது. என்னவோ போல் இருந்தது. களைப்பாக இருந்தது. எதுவுமே வேண்டாம் போல இருந்தது. 'வயத்து வலி' என்று அம்மாவிடம் சொன்னாள். ''எங்க வலி'' என்று கேட்டால் சரியாகச் சொல்லத் தெரியவில்லை. என்னமோ எல்லாம் கனமாக அவள் மேல் அழுத்துவது போல் இருந்தது. ரவி வந்து எதோ கேட்டபோது விட்டேர்த்தியாகத்தான் பதில் சொன்னாள். கோபம் கோபமாக வந்தது.

அம்மா அவளைத் தனியாக பாத்ரூமுக்கு அழைத்துப் போய் அவள் உடைகளை எல்லாம் கவனமாகப் பார்த்தாள். ''சரி போடி! ஒன்னும் வல்லை. வந்துரும்னு நினைக்கிறேன். என் கண்ணு பயப்படாதேம்மா... பயப்படவே கூடாது.''

''என்னம்மா எனக்கு?''

''கவலைப்படாதேம்மா. உனக்குக் கல்யாணம் மாதிரின்னு நெனைச்சுக்கோ. நீ இனிமே குழந்தை இல்லை. பெரிய மனுஷி ஆகப்போறே'' என்றாள். புரியவில்லை.

அப்பாவிடம் ''பதிமூணு வயசுக்குக் கொஞ்சம் சீக்கிரம்தான்'' என்று சொன்னதும் புரியவில்லை.

அனுபமாவிடம் கேட்டபோது அவள் பெருமையுடன் ''போன வருஷமே எனக்கு வந்துடுத்தே'' என்றாள். ''ஒரு மாதிரி இருக்கும். ஒண்ணும் பண்ணாது. பயமாத்தான் இருக்கும். எனக்கு ஸ்கூல்லயே ஆயிடுத்து. அலறி அடித்துக் கொண்டு மிஸ்கிட்ட வந்து சொன்னேன். இனிமேதான் ஜாக்கிரதையா இருக்கணும். பாய்ஸைத் தொட்டாலே ஒட்டிக்கும்!''


''என்ன ஆகும்?''

''வயத்துக்குள்ளே பாப்பா வந்துரும்.''

''அய்யோ பிரதர்ஸ் தொட்டாக்கூடவா?''

''பிரதர்ஸ் தொட்டா ஒண்ணும் ஆகாது! மத்தவங்க தொட்டாலும் உடனே அந்த எடத்தில எச்ச துப்பி துடைச்சு உட்டுடு. அப்படிப் பண்ணலே போச்சு!''

அன்றைக்குச் சாயங்காலம் அவள் பெரிய மனுஷியானாள். (தொடரும்)



ஒவ்வொரு துளியிலும் தேர்ந்தெடுத்த தேங்காய்களின் நறுமணம்
Yendelux
coconut oil
என்டீலக்ஸ்
தேங்காய் எண்ணெ
15, 4 லிட்டர் டின்களிலும் 1 Litre 500, 200 ml பாலிதீன பாட்டில்களிலும் கிடைக்கிறது.
மு. மு. நாகலிங்க நாடார் சன்ஸ்
கொல்லம்—கேரளா
போன் : ஆபீஸ் : 2244, 4484, மில்ஸ் ; 2266, 4611
DISTRIBUTORS FOR TAMIL NADU
M. M. NAGALINGA NADAR
VIRUDHUNAGAR, Phone : 3107, 3745.

# உங்கள் குழந்தைக்கு 3 மாதம் ஆகி விட்டதா?

அவனுக்குத் தேவையான இரும்புச்சத்து பாலிலிருந்து மட்டும் கிடைப்பதில்லை.



## அவனுக்கு அளிப்பீர் இரும்புச்சத்து நிறைந்த ஃபாரெக்ஸ்

''தாயிடமிருந்து ஏராளமான இரும்புச் சத்தைப் பெற்று குழந்தை பிறக்கிறது. பிறந்த பிறகு மெல்ல மெல்ல இரும்புச் சத்தின் அளவு குறையத் தொடங்குகிறது. பால் நல்ல உணவாயிருப்பினும் இரும்புச்சத்துப் பற்றுக் குறையினால் அது முழுமையாவதில்லை. ஆகவே, குழந்தைக்கு இரும்புச் சத்து அடங்கிய திட உணவு தேவைப் படுகிறது''.

டாக்டர் சுபாஷ் C. ஆர்யா.




டாக்டர்கள் சிபாரிசு செய்வது—

**ஃபாரெக்ஸ்**

CASGLF-32-203 TAM

## 19

அம்மா 'ஒன்றுமில்லைஒன்றுமில்லை கவலைப் படாதே' என்றுதான் சொன்னாள். இருந்தாலும் அவளைத் தனியாக நாடாக் கட்டில் வாசலில் அமைத்து அதன் மறைவில் இருக்கும்படி சொன்னதும், பாவாடை, சொக்காய் போட்டுக் கொண்டிருந்தவளை தாவணி அணியச் சொன்னதும் தனியாக அவளுக்கென்று வெண்கல டம்ளர் வைத்ததும் தனியாக அவளுக்குத் தட்டில் சோறு வைத்து அவள்பால் தள்ளியதும் அவள் தீட்டு என்று சொன்னதும் மாடி வழியாகப் புறக்கடைப் பக்கம் போகச் சொன்னதும் அவளுக்கு மிக அதிகமாக வெட்கத்தைத்தான் தந்தன.

அவள் உடம்பு முழுவதுமே அப்போது ஒரு வெட்கத்துக்குரிய சமாசாரம் போல அவளுக்குத் தோன்றியது. தனக்குள் என்ன என்கிற குழந்தைப் பருவத்திலிருந்தே கிளம்பிய கேள்விக்கு இப்போது கிடைத்திருக்கும் விடையில் அவமானம்தான் அதிமாகியிருந்தது. வெறுப்புத்தான் ஏற்பட்டிருந்தது. இரண்டு மூன்று நாட்கள் அவள் மேல் ஒரு அடிமைத்தனம் படர்ந்து விட்டதாகத்தான் உள்ளுணர்வு சொன்னது. அதனால் ஒரு விதமான இனம் புரியாத பயமும் ஏற்பட்டிருந்தது. இனிமேல் தான் அத்தனை சுதந்திரமாக ஓட முடியாது. பள்ளியில் எக்ஸ்கர்ஷன் போக முடியாது. நடுவில் இது வந்து விட்டால் யாரிடமாவது சொல்ல வேண்டி யிருக்கும். அவமானத்தில் கூனிக் குறுகிப் போய்விட வேண்டி வரும். பாண்டி ஆட முடியாது. தாண்ட முடியாது. என்ன என்னவோ முடியாதுக்களை யெல்லாம் கற்பித்துக் கொண்டாள். இந்தப் பயம் அவள் உடல், மனம் எல்லாவற்றையும் ஊடுருவி அவள் குண அமைப்பில் ஒரு ஸ்திர மாறுதலை ஏற்படுத்திவிடும் என்றுதான் தோன்றியது.

ஓர் இளம் பெண்ணின் உடல் என்பது ஒருவிதமான உணர்ச்சிப் புயல் வடிவம் எனச் சொல்லலாம். மனத்தில் வாழும் வாழ்க்கையும், உடல் மாறுதல்களும் சற்று ஒன்றிப்போகும் அந்த வயசில் அந்தச் சமயத்தில் அவளுடைய மனத்தில் தன் உடலைப் பற்றிச் சில சந்தேகங்கள் எழுகின்றன. பிள்ளைபெறுவதற்கு தான் எப்படியோ தயார் செய்யப்படுகிறோம் என்பது உள் மனத்தில் விதைக்கப்பட வெளியில் அது ஒரு சோகமாக பயமாக மலருகிறது. உடம்பே சந்தேகத்துக்கு இடமாகிறது. தான் ஒரு பெண்ணாகி விட்டோம். உலகத்தில் தன்னுடைய பாத்திரம் ஊர்ஜிதமாக்கப்பட்டு விட்டது என்கிறதில் ஏற்படும் பரபரப்பு அவள் உடலை மன ஆரோக்கியத்தை இரண்டையும் பாதிக்கிறது.

இந்த மாதாந்திர அவஸ்தை அவளைப் பற்பல காரியங்களுக்கு லாயக்கில்லாமல் செய்துவிடப் போகிறது. இது ஒரு சாபம் தான் என்று அவள் தன்னைத் தயார் செய்து கொள்கிறாள். ஓட்டப் பந்தயத்துக்குப் பெயர் கொடுத்திருந்ததை ரத்து செய்ய வேண்டும். ஆண் வேறு பெண் வேறு என்பது அழுத்தமாக அவளுக்கு ஸ்தாபிக்கப்பட்டு விட்டது.

ரவிதான் விசாரித்தான். ''சின்னு, என்னடி உனக்கு?''

''போடா உன் வேலையைப்பார்த்துண்டு''

''சின்னு நான் உன்னைத்தொடக்கூடாதா? அம்மா சொன்னாளே?''

''ஆமாம். போடா.''



சட்டென்று ஓடிவந்து தொட்டுவிட்டு ''இப்ப என்ன சொல்றே?'' என்றான்.

''அய்யோ...அய்யோ அம்மா...'' என்று அலறினாள். ''பாரும்மா இந்த ரவியை.''

''ரவி, என்ன அங்கே?''

''என்னை வந்து தொடறேன்கிறும்மா''

அம்மா வந்து ரவி முதுகில் ஒன்று சாத்த விரும்பி, ''பொம்மனாட்டி பின்னாலேயே அலையக் கூடாதுன்னு சொல்லி இருக்கேனா இல்லையா?'' என்று அவனைத் துரத்தப்போக அவன் தாண்டிக் குதித்துக் கொண்டு தெருவில் ஓடினான்.

''கடன்காரக் கட்டைல போறவனே, உன்னால எனக்குப் பிற்காலத்தில் ரொம்பச் சங்கடம் இருக்கு. நீ வாடிம்மா கண்ணு! உனக்கு ஒண்ணும் இல்லை. பருப்பு சாதம் சாப்பிடு. நான் சொன்ன மாதிரி மாத் திண்டியா?''

''மொள்ளப் பேசும்மா! யாருக்காவது கேட்டுறப் போறது!''

''கேட்டா என்னடி? எல்லாராத்திலயும் நடக்கறதுதானம்மா இது. சின்னக் கண்ணு நீஇனிமேபேபி இல்லே பொண்ணு.''

''என்னடி சின்னு? பெரியவளாயிட்டியா?'' என்று பக்கத்து வீட்டு மாமி கேட்க, கட்டிலுக்குள் ஒளிந்து கொண்டாள்.

''மூஞ்சில ஒரு தேஜஸ் வந்துடுத்து பாருங்கோ, ஒரு பளபளப்பு! நான் சொன்னேனே இல்லியோ இந்த மாசம் ஆயிடுவான்னுட்டுகாமாட்சி ஒரு பாயசமாவது வெச்சியோல்லியோ?''



சின்னுவுக்கு எதற்காகப் பாயசம் வைக்கிறார்கள், எதற்காகப் பிரபலப்படுத்துகிறார்கள் என்று கோபம் கோபமாக வந்தது.

''அய்யோ அய்யோ போம்மா இங்கிருந்து!''

''சரிதாண்டி, ரொம்பப் பிகு பண்ணிக்காதேடி. ராத்திரி பாலுஞ் சாதம்தான் சாப்பிடணும் தெரியுமா? நெத்திக்குப் பொட்டு இட்டுக்க வேண்டாம். நான் சொன்ன மாதிரி எல்லாத்தையும் தனியாக் கழட்டி வைச்சுட்டியா கண்ணு?''

''அய்யோ அம்மா போயேன். வாசல்ல நின்னுண்டு ரகளை பண்ணுதேயேன்!''

''எப்படிப் பேசறது பார்த்தேளா?''

''எப்பக் குளிக்கிறே சின்னு?''

அவளுக்கு அழுகையே வர, அம்மாவும் பக்கத்து வீட்டு மாமியும் சிரிப்பாகச் சிரித்தார்கள்.

ஸ்கூலுக்குப் போனபோது அனுபமா ரொம்ப விவரமாக விசாரித்தாள். எப்படி இருந்தது, கத்திரி போல வலிச்சுதா என்றெல்லாம் கேட்டாள். சின்னுவுக்கு இன்னும் வெட்கமாக இருந்தது. ''இனிமேலத்தான் ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும்.'' என்று மறுபடி ஆண்பிள்ளைகள் தொட்டால் அந்த இடத்தில் எச்சில் வைத்துத் துடைக்க வேண்டிய அவசியத்தைப் பற்றிச் சொன்னாள். சின்னுவுக்கு உள்ளுணர்வில் இதை நம்பக் கூடாது என்று தோன்றினாலும் பயமாகவும் இருந்தது. ஆண்பிள்ளைகள் என்று இதுவரை தனித்துப் பிரித்துப் பார்த்திருந்தாலும் அவர்களுக்குப் புதுசாக ஒரு எச்சரிக்கைப் பரிமாணம் ஏற்பட்டு விட்டது.

அனுபமா ஒரு நாள் அவள் அக்காவுக்கு வந்த காதல் கடிதத்தைக் காட்டினாள்.

காதலி ஸ்வேதாவுக்கு உன் காதலன் வரையும் காதல் கடிதம் என்றெல்லாம் தத்துப் பித்து என்று இருந்தது. தமிழ்கூட பிழை நிறைந்ததாக இருந்தது. இருந்தாலும் அது ஒரு நிசமான காதல்கடிதம் என்பதில் அதற்கென்று ஒரு பிரத்தியேகமான மதிப்பு இருந்தது. பத்திரிகைகளில் அவள் இதுவரை அம்புலி மாமா ரத்ன பாலா என்றெல்லாம்தான் படித்துக் கொண்டிருந்

---

குழந்தைகளுடைய வயிறு சம்பந்தமான வியாதிகளுக்கும், சத்துக் குறைவால் உண்டாகும் சுகக் கேடுகளுக்கும், இரத்தக் குறைவால் வெளிறிப் போயிருக்கும் குழந்தைகளுக்கும் தேன் ஒரு வரப்பிரசாதம்! அவர்களுடைய உணவில், அவர்களுடைய வயதுக்குத் தக்க அளவு தேன் சேர்த்து வந்தால் சொஸ்தமடைகிறார்கள்.

எளிதில் ஜீரணமாகும் தேன் லேசான மலமிளக்கும் தன்மையைப் பெற்றிருப்பதால் பல நோய்களின் தாயான மலச் சிக்கலைத் துரத்தியடிக்கிறது. —எஸ். இ. பாத்திமா

---

**பித்தவாந்திக்கு சிறந்த மருந்து**

**கல்யாண முருங்கை இலையை அம்மியில் வைத்து நன்கு அரைத்து அதன் சாற்றைப் பிழிந்து குடித்தால் பித்த வாந்தி உடனே நிற்கும். இது என் அனுபவம்.**

**எஸ். புஷ்பம்**

தாள். காமிக்ஸ் கூட வால்ட் டிஸ்னியின் விநோத மிருகங்களைத்தான் கனவில் சிரித்துத் துரத்திக் கொண்டிருந்தாள். முதல் தடவையாக அனுபமா கொடுத்த ஆங்கிலப் புத்தகத்தை எடுத்துப் படித்தபோது அவள் மனசுக்குள் உடலுக்குள் என்னவோ செய்தது. அதில் ஹெர்மீனியாவை ஜான் முத்தம் கொடுப்பதை ஒருபாரா எழுதியிருந்தது. அதைப் படித்தபோது அவளுக்கு அடிவயிற்றில் என்னவோ பண்ணியது.

தன்னுடைய சுதந்திரம் கொஞ்சம் கொஞ்சமாகப் பாதிக்கப்படுவதையும் சின்னு உணர்ந்தாள். ரோடில் தனியாக நடக்கும் போது மற்ற பேர் அவளை வெறித்துப் பார்ப்பதைக் கவனித்தாள். குறிப்பாகப் பையன்கள். கடைக்காரர்கள் நூறு கிராம் காப்பிப் பொடி தரும்போது கையைப் பிடித்துக் கொடுப்பது இப்போது வேறு மாதிரி இருந்தது. அதே சமயம் அவள் மார்பை மட்டும் குறிப்பாகச் சிலர் பார்ப்பதையும் கவனித்தாள். சாலையில் ஓட முடியாது. தம்பிமார் கூட அண்ணன்மார் கூட இருந்தால் கூட அவர்கள் அட்டகாசமாகச் சாலையில் சிரித்துக் கொண்டே ஓட இவளால் மெல்லத்தான், பவ்வியமாகத்தான் போக முடியும். ஒரு தடவை முகம் தெரியாத ஒருவன் சற்றும் எதிர்பாராத விதமாகக் கூட்டத்தின் ஊடே நடக்கும்போது அவளுடைய பின் பக்கத்தை முழுசாகப் பிடித்து விட்டதை உணர்ந்து உள்ளுக்குள் பிரமித்துப் போயிருக்கிறாள். மற்றொரு சமயம் பஸ்ஸில் அவசரமாக ஏறும்போது யாரோ ஒருவன் அவள் சின்ன மார்பை ரொம்ப வலிக்கிற மாதிரி அழுத்திவிட்ட போது அழுதாள்.

''என்னடி, எதுக்கு அழறே?''

''அவன்...அவன்....''

''என்ன செஞ்சான்?''

''அடிச்சான்'' என்றுதான் சொல்ல முடிந்தது.

ரவி அவள் குறிப்பிட்ட ஆளின் ஆகிருதியைப் பார்த்து ஏதும் செய்ய முயற்சிக்காமல் இருந்தது வேறு விஷயம்.

கொஞ்ச நாள் அவளுக்கு எல்லாம் 'போர்' ஆக இருந்தது. அனுபமாவை அதிகம் பிடிக்கவில்லை. சினேகிதிகளை மாற்றிக் கொள்ள வேண்டும் போல இருந்தது. பெரிய விஷயங்களெல்லாம் ஆண்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது அவளுள் படிந்துவிட்டது. நன்றாக ஆடுபவர்கள், பெரிசாகத் தாண்டிக் குதிக்கிறவர்கள், பெரிய பெரிய பிளேன் ஓட்டுபவர்கள் எல்லாம் ஆண்பிள்ளைகளாகத்தான் இருந்து தொலைக்க வேண்டியிருக்கிறது. எப்போதும் பையன்கள் 'பெட்டர்' தான். இதனாலேயே அவளுக்கு ஒரு சோம்பேறித்தனமும் அதிகம் சாதிக்க வேண்டும் என்ற ஆசை இல்லாத தன்மையும் ஏற்பட்டு விட்டது என்று சொல்லலாம். அடிக்கடி தன் சினேகிதிகளை மாற்றிக்கொள்வதில், ஆண்களைப் பற்றிப் புதிய செய்திகள் சேகரிப்பதற்குச் சௌகரியமாக இருக்கும். அவர்களாகவே சொல்வார்கள். அல்லது சிலவேளை கேட்பார்கள்.

அனுபமா கொஞ்சம் நெருக்கம் கொஞ்சம் தூரம் என்றிருந்தாள். அவள் ஆனால் ஸ்திர சிநேகிதி, விடாத சிநேகிதி.

(தொடரும்)

---

**இம்மாத இல்லத்தரசி போட்டி**

பொருள் : முட்டை

முடிவு தேதி : 15 - 10 - 82

**சமையல் கூப்பன்**

............ என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இத்துடன் அனுப்பியுள்ளேன். இச்சமையல் குறிப்பு இது வரை எந்தப் பத்திரிகையிலும், எந்தப் புத்தகத்திலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

-----------------------------

கையொப்பம்

ஒரு கூபனுக்கு ஒரு சமையல் குறிப்பே அனுப்ப வேண்டும்.

அரசு பலம் பொருந்தி இருக்க வேண்டும். மக்கள் வாழ்க்கை வளம் பொருந்தி இருக்க வேண்டும். ஒன்று மற்றொன்றைச் சார்ந்திருக்கும். ஒளிக்கு ஆதாரம் அக்னி. பலத்திற்கு ஆதாரம் இந்திரன். ஒளிமயமான வாழ்க்கை, பலம் பொருந்திய அரசு, இவ்விரு நல்ல எண்ணங்களை மனதில் கொண்டு அதற்குப் பிரதிநிதியான இரு தெய்வங்களை வணங்குகிறான் வேத கலாசாரத்தை வரவேற்கும் பாரதக் குடிமகன்.

[த்ருவம் த இந்த்ர: சாக்னி: ச ராஷ்டிரம் தாரயதாம் த்ருவம்]

இந்திரன் அக்னிஎன்ற இரு தெய்வங்கள் அரசை ஸ்திரமாக வைக்க வேண்டும் என்ற நாட்டு பாடலோடுதான் வைதிகச் சடங்குகள் அத்தனையும் ஆரம்பமாகின்றன.



'த்ருவம்' என்ற ஸம்ஸ்கிருதச் சொல் 'நிச்சயம்' என்ற பொருள் உடையது. ஸ்திரத் தன்மை வாய்ந்த அரசு வேண்டும். குடிமக்களின் வாழ்க்கை ஸ்திரத் தன்மை பொருந்தியிருக்க வேண்டும்' — என்று வேதம் நம்மை வேண்டிக் கொள்ளச் சொல்கிறது. புது மணத் தம்பதிகள் ஸ்திர மான வாழ்க்கையை வேண்டிக் கொண்டு ஆகாயத்தில் த்ருவநட்சத்திரத் தைப் பார்ப்பது சம்பிரதாயமாக உருவெடுத்திருக்கிறது.

பூமி சுற்றிக் கொண்டிருக்கிறது. சூரியனும் வலம் வருகிறான். துருவத்தின் ஈர்ப்பு சக்தி அவைகளை அளவோடு இயங்க வைக்கிறது. எந்த ஈர்ப்புச் சக்திக்கும் கட்டுப்படாதது — அசையாமல் இருப்பது த்ருவ பிண்டம் என்பது ஜோதிடத்தின் கணிப்பு. அசையாமல் ஸ்திரமாக இருந்துகொண்டு தனது ஈர்ப்பு சக்தியால் உலக நன்மைக்கு உதவுகிறது த்ருவம். அதுபோல் குடும்ப வாழ்க்கையில் ஸ்திரத் தன்மையோடு இருந்துகொண்டு தனது குடும்ப நலனோடு நின்று விடாமல் சமுதாய நன்மைக்குப் பயன்படும் ஸ்திரத்

# நமது கலாசாரம்



தன்மை அமைய வேண்டும் என்று த்ருவனைத் தரிசிக்கும் வேளையில் எண்ண வேண்டும் தம்பதிகள். இயற்கையின் மாறுபாட்டிலும் மாறுதலை அடையாமல் என்றும் வடக்கில் நிரந்தரமாக ஒளி விட்டுக்கொண்டிருக்கும் த்ருவ நக்ஷத்திரத்தைச் சுட்டிக் காட்டி செயல் விளக்கம் அளிக்கிறான் மணமகன் மணமகளுக்கு.

அம்பாளின் திருமணம். அம்பலவாணன் அன்புக் கரம் பற்றி ஆகாயத்தைச் சுட்டிக் காட்டி, 'அதோ! வடக்கில் த்ருவனைப் பார்த்தாயா?'' என்று அன்னையிடம் கேட்கிறார். தலை நிமிர்ந்து த்ருவனைப் பார்த்துவிட்டு, 'ஆமாம், த்ருவனைப் பார்த்துவிட்டேன்' என்று பதில் உரைக்கிறார் அன்னை என்று காளிதாஸன் தனது குமாரஸம்பவத்தில் கூறுகிறார். (த்ருவேண பர்த்ரா த்ருவ தர்சனாய)

உலகத்தின் தாய் தந்தையர்கள் கல்யாணத்தில் த்ருவனைப் பார்க்கிறார்கள். அழிவற்ற சக்தி ஆதி தம்பதி. அவர்கள் இரு த்ருவங்களாக இல்லை. ஒரு த்ருவம். அவர்கள் பார்ப்பதாக சித்தரித்திருப்பது பண்பான அந்தச் சடங்கை மற்றவர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்காக என்பது ஒத்துக்கொள்ளக் கூடியதே.

படுக்கை அறைக்கு உறங்கச் செல்கின்றான் சிறுவன். பழைய கலாசாரத்தில் பற்றுடைய பாட்டி 'வடக்கு நோக்கித் தலை வைத்துப் படுக்காதே!' என்று சிறுவனை அறிவுறுத்துகிறாள். த்ருவத்தின் ஈர்ப்பு சக்தி அவனுக்குப் பாதகமாக அமையக் கூடாது என்பது பாட்டியின் எண்ணம். புரியும் அளவுக்கு பாலகனின் புத்தி பக்குவமடைந்திருக்காது என்பது அவளுக்குத் தெரியும். விளக்கம் கூறாமலே விடாப்பிடியாக அவனைத் தன் விருப்பத்திற்கு இணங்க வைக்கிறாள். பொருள் பொதிந்த பழைய சம்பிரதாயங்கள் பொறுமையோடு கடைப்பிடிக்க வேண்டும். வேளையும் வேகமும் வரும் பொழுது விளங்க ஆரம்பித்து விடும்.

# எப்போதும் பெண்

**20**

அனுபமா மாடிக்கு வந்ததும் கண்ணுடி முன் ஸ்டைல் போடுவாள். ''எப்படி இருக்கேன் பாத்தியா?என்னைத் தொட்டுப் பாரு. எவ்வளவு ஸாஃப்ட்டா இருக்கேன் பாரு'' என்று சின்னுவின் கையைப் பிடித்துத் தன் மேனி மேல் தடவிக் கொள்வது அவளுக்குப் பிடிக்கவே பிடிக்காது. அவளுக்கு இப்போதெல்லாம் தனிமை ரொம்பப் பிடித்தது. இருந்தும் அனுபமாவின் துணை அவளுக்குத் தேவையாகவும் இருந்தது. அவளிடம்தான் தன் மனத்தில் இனம் புரியாத கவலைகளை பகிர்ந்து கொள்ள முடியும் என்று தோன்றியது. மற்றொரு வடிவத்தில் அவளுக்குப் பள்ளிக்கூடத்தில் தமிழ் டீச்சர் எழிலரசியைப் பிடித்திருந்தது. அந்த டீச்சரின் குரல், கச்சிதமான உருவம், கண்ணுடி போட்டிருந்தாலும் அதன் ஊடே சிரிக்கும் கண்கள் எல்லாம் அவள் மேல் ஒரு காதலை ஏற்படுத்தியது. ஸாரி எப்போதும் இஸ்திரி போட்டு முரமுரப்பாக இருக்கும். வியாசங்களைத் திருத்த வரும்போது அவளருகில் மருந்தும், சந்தனமும், செண்டு வாசனையும் சேர்ந்து வீசும். விரல்கள் பழுதில்லாமல் இருக்கும். கையெழுத்து அழகாக இருக்கும். தமிழ் டீச்சர் அவளுக்கு ஒரு வகையில் வயது வந்த பெண்மையின் ஆதர்சமாகத் தோன்றினாள். தமிழ் டீச்சரிடம் அசிங்கமாக எதுவுமே இருக்காது என்று தோன்றியது. எந்த விதமான துர் வாசனைகளும் இருக்காது என்று தோன்றியது.

''உனக்கு யார்பேர்வெச்சா கண்ணம்மா''

''எங்கப்பாதான் டீச்சர்.''

''சரியாப் பெர் வெச்சிருக்கவேண்டாமா? இதென்ன பேரு!'சின்னு'வும் பன்னுவும் நல்லால்லே. உனக்கு நான் இந்த கிளாஸில மாதவின்னு பேர் வெச்சிருக்கேன். மாதவி மாதிரிதான் இருக்கே. நீ என் மனசில இருக்கிற மாதவி மாதிரி. மாதவி கெட்டவ இல்லே தெரியுமா? அவளும் ஒரு விதத்தில நல்ல பெண் பிள்ளைதான் தெரியுமோ?'' என்று சொல்லிவிட்டுச் சிலப்பதிகாரத்திலிருந்து பேச ஆரம்பித்து விடுவாள். வேனிற் காதையில் இன்று மாலை வாராராயினும் நாளைக் காலை வருவார் என்று வசந்தமாலையிடம் மாதவி சொன்னதைச் சுவைபடச் சொல்வாள். சின்னு அவள் உதடுகளையே பார்த்துக் கொண்டிருப்பாள். உதடுகளுக்குள் ஒழுங்காகத் தெரியும் பற்கள். செக்கச் சிவந்த வாய்.

சின்னுவுக்குத் தமிழ் டீச்சர் தன் ஜாதியில்லையே என்று வருத்தமாக இருந்தது.

''டீச்சர், டீச்சர்! நீங்க இருக்கிறபோது எனக்கு என்ன ஆறதுன்னே தெரியலே. உங்க கூடப் பேசத் தயக்கமா இருக்கும். நீங்க இல்லாதபோது உங்க பீரியட் எப்ப வரும் எப்ப வரும்னு காத்திண்டிருப்பேன். உங்களைப் பத்தி அடிக்கடி நினைச்சிருக்கேன். நீங்க வந்து உங்களைப் பார்க்கறப்போ எனக்கு கண்ணில் ஜலம் வரும். உங்களைப் பார்த்தா எனக்கு ஒண்ணும் புரியாது. உங்களுக்குத்தான் எத்தனை தெரிஞ்சிருக்கு! நீங்க என் கூடப் பேசினு எனக்குக் கொஞ்சம் வெட்கமாகக் கூட இருக்கு. உங்க குரல் தேவதை குரல் மாதிரி இருக்கு. நீங்க பாடினு நல்லாவே இருக்கும். நீங்க செய்யற சின்னச் சின்ன விஷயங்களையும் நான் கவனிக்கிறேன். அதனுல உங்க கூடப் பேசறப்ப எனக்கு முன்னப் பின்ன ஆயிடறது. சரியா பேசவே வரதில்லே. நீங்க என்னைப் பைத்தியம்னு கூட நினைக்கலாம். ஆனு எனக்கு உங்க மேலே ரொம்ப ஆசை தெரியுமா?''

இவ்வாறு ஒரு காகிதத்தில் எழுதி ஒளித்து வைத்திருக்கிறுள்.

சுஜாதா



அனுபமா வீட்டுக்கு வந்தபோது ரொம்ப குடைவாள். அவள் இல்லாதபோது அந்த காகிதத்தைப் பார்த்து விட்டாள். நேராக அதை எடுத்துச் சென்று தமிழ் டீச்சரிடம் கொடுத்து விட்டது சின்னுவுக்குத் தெரியாது.

கிளாஸ் முடிந்ததும் ''சின்னு இங்க வா' என்று தமிழ் டீச்சர் கூப்பிட சின்னுவுக்கு உடல் பூரா வியர்த்து விட்டது. ''நீங்கள் ளாம் போங்க. சின்னு இரு'' அனுபமா தயங்கி, ''டீச்சர், வேண்டாம் டீச்சர், சொல்லாதீங்க டீச்சர்!'' என்றுமன்றுடுவது சின்னுவுக்குப் புரியவில்லை.

''நீ போ செல்லம், நான் பார்த்துக் கறேன்.''

எல்லாரும் போனதும் டீச்சர் அவளை நேராகப் பார்த்தாள். ''மாதவி, என்னைப் பத்தி என்ன சொல்லுது பார்க்கலாமா?'' என்று தன் கைப் பைக்குள்ளிருந்த அந்த காகிதத்தை எடுத்தபோதும் அவளால் அதை அடையாளம் கண்டு கொள்ள முடிய வில்லை.

''மாதவி, இது நீ எழுதின தாளா?''

முதன் முதலாக அதை டீச்சர் கையில் பார்த்து அதிர்ந்து போய் பேசாமல் இருந் தாள்.

''சொல்லம்மா. உன் கையெழுத்துத் தானே?''

மௌனம்.

''பரவாயில்லை. நான் உன்னை அடிக்க மாட்டேன் சொல்லு.''

''தெரியாம... தெரியாம....''

''நீ எழுதியிருக்கியே, இதுக்கெல்லாம் அர்த்தம் தெரியுமா உனக்கு?''

மௌனம்.

''இதை யாராவது பார்த்தாங்கன்னு என்னநினைச்சுப்பாங்க,அதாவதுதெரியுமா?''

தலையாட்டினாள். தெரியாது.

''இதில எழுதி யிருக்கிறதெல்லாம் நிசமா?''

தலையாட்டினாள். ஆமாம்.

டீச்சர் நிதானமாக அதை மறுபடி படித்து ''என் மாதவி'' என்று அவளைக் கிட்டத்தில் வந்து கட்டிக் கொண்டு ''வா என்கூட. உனக்கு ஒண்ணு காட்டணும்'' என்றாள்.

''வீட்டுக்குப் போகணும்.''

''நான் கொண்டாந்து விடறேன். என் பின்னடி வா.''

''டீச்சர்! அம்மா கிட்ட, அப்பா கிட்டச் சொல்லாதீங்க டீச்சர்.''

''சேச்சே, சொல்ல மாட்டேன். அனுப மாவையும் கவனிச்சுக்கிறேன். பயப்படாதே. வா. உன்னை எனக்குப் புரியலை. உங்கூடப் பேசணும் வா'' என்று பரிவுடன் அவள் தலையைத் தடவி அழைத்துக் கொண்டு சென் றாள். டீச்சர் வீடு பள்ளிக்கூடத்திலிருந்து பஸ் ஏறிப் போய் கொஞ்ச தூரம் நடந்து மாடியில் இருந்தது. வந்ததும் ஒரு நாய்க் குட்டி வந்து வாலாட்டியது. கதவைத் திறந் ததும் ரூமுக்குள் வாசனை அடித்தது. மணித் திரைசிலுங்கியது. ரேடியோ பெட்டி, ஐஸ் பெட்டி எல்லாம் வைத்திருந்தது. டீ.வி. கூட இருந்தது. அதன் மேல் பீங்கானில் புதிய பூக்கள் வைக்கப் பட்டிருந்தன. பக்கத்தில் போட்டோ இருந்தது.

''உக்காரு மாதவி. உங்கம்மா பேர் என்ன?''

''காமாட்சி.''

''உனக்கு எத்தனை பிரதர்ஸ், ஸிஸ்டர்ஸ் எல்லாம்?''

''மூணு பேர் அண்ணா.''

''அனுபமாவைத் தவிரசினேகிதங்ககிடை யாதா?''

''இல்லைடீச்சர்.ராதா,தமிழரசி,ரெஜினா''

''அவங்க கூட எல்லாம் அதிகம் பேசி நான் பார்த்ததில்லையே.''

''பேசுவேன் டீச்சர். உங்க பீரியட்லே...''

''என்னையே பார்த்துக்கிட்டு இருப்பே, அதானே?'' என்று சிரித்தாள். ''ஏன் என் கிட்ட என்ன இருக்குன்னு... நீ பாரு. என்னை விட அழகாவே இருக்கே. கொஞ்சம் சதை போட்டா நல்லாவே இருப்பே. என்ன சாப்பிடறே வீட்டில? வெறும் சோறு அப்டளம் அவ்வளவுதானே?''

''உம்.''

''பச்சைக் காய்கறிகள் நிறையச் சாப்பிடு. காலைல ஒரு முட்டை சாப்பிடு.''

''அதெல்லாம் எங்க வீட்டில கொடுக்க மாட்டாங்க.''

''பச்சைக் காய்கறி கூடவா?''


''சாப்பிடுவேன் டீச்சர்.''

'சாப்பிட்டா மாதிரி தெரியலையே. எத் தனை பலவீனமா இருக்கே பாரு. ஏதாவது உடம்புல கோளாறு?வயசுக்கு வந்துட்டியா?'

பேசாமல் இருந்தாள், ''நான் எழுதின தில ஏதாவது தப்பு இருந்தா மன்னிச்சுடுங்க டீச்சர். மனசில ஒரு நாள் தோணினதை...'

''இதில் ஒண்ணும் தப்பில்லை. நானும் உன் வயசில இப்படித்தான் இருப்பேன். எனக்கு ஞாபகம் வருது. உன் வயசில இருக்கிறப்ப என் சினேகிதி ஒருத்தி கூட சண்டை போட்டிருக்கேன். எதுக்குன்னு எங்க

## டாக்டர் தரும் அட்வைஸ்



● பட்டாஸ், மத்தாப்பு வெடித்துத் தீக் காயம் பல வீடுகளில் கட்டாயம் ஏற்படும். அன்று பார்த்து டாக்டர் கிளீனிக் மூடி யிருக்கும். (அவர் வீட்டிலும் தீபாவளி இல்லையா!) முன் பாதுகாப்பாக நல்ல கிரீம் ஏதாவது 'Betadine Cream' போன் றவை தீப்புண்ணுக்கு உகந்தது. வாங்கி வைக்கவும். அதிகம் நெருப்புக் காயமா னால் உடனே அடுத்துள்ள மருத்துவமனைக் குப் போகவும். தாமதிக்காதீர்.

டீச்சர் ஒருத்தி டிபன் பண்ணிட்டுப் போட்டிருந்த காகிதத்துக்கு! அவ வச்சிருந்த பஸ் டிக்கெட்டுக்கெல்லாம் சண்டை போடுவோம். அதை யெல்லாத்தையும் சேர்த்து கூட வெச்சிருக்கேன். அதெல்லாம் இப்ப உன் கடுதாசியைப் பார்த்ததும் ஞாபகம் வந்தது. ஒரு விதத்தில் நான் உனக்கு ஒரு ஆம்பிளையாத்தான் தோண்றேன். ஆம்பிளைங்களைக் கண்டா உனக்கு ஒரு மாதிரி பயம் இருக்கலாம். ஆம்பிளைங்கன்னு உனக்கு பிடிக்குமா பிடிக்காதா?''

கொஞ்சம் தயங்கி ''பிடிக்காது டீச்சர்'' என்றாள்.

''ஏன்?''

''பயம்.''

''என்ன பயம்?''

''தெரியலை. அவங்க வந்து... அவங்க வந்து.... இல்லை டீச்சர் சொல்ல மாட்டேன்....''

''சொல்லு, பரவாயில்லை. நானும் நீயும் ஃபிரெண்ட்ஸ் இல்லையா? என்கிட்டச் சொல்லு. என்ன தயக்கம் உனக்கு?''

''அவங்க வந்து தொட்டா வந்துஅசிங்கமாயிருவோம்.''

''யாரு?''

''நாமெல்லாம்.''

''இது யார் சொன்னு உனக்கு? அனுபமாவா?''

''எல்லா கர்ள்ஸும் சொல்றுங்க அப்படித்தான்.''

''இரு.'' – டெலிவிஷன் பெட்டிக்கு மேல் வைத்திருந்த போட்டோவை எடுத்துக் காட்டினாள். அதில் ஒரு ஆண் பிள்ளை டீச்சரை தோளில் தொட்டு அணைத்துக் கொண்டிருந்தான். அவனுக்குப் பெரிசாக மீசை இருந்தது. சின்னு அதைப் பார்த்தவுடன் கண்களைத் தழைத்துக் கொண்டாள். ''இது யாரு தெரியுமா? என் கணவன். இப்ப வருவாரு. சந்திக்கிறியா?''

''இல்லை டீச்சர். நான் போயிடறேன். அம்மா கவலையா இருப்பாங்க. ரொம்ப நாழியாயிடுத்து.''

''பயப்படாதே பொண்ணு. ஆம்பிளைங்களைக் கண்டா பயப்படக் கூடாது. அவங்க உன்னை ஒண்ணும் செய்ய மாட்டாங்க. அவங்களோட பேசினு எதுவும் ஆயிடாது. இப்ப உன் அண்ணன் கூடப் பேசலியா? உன் வயசுக்கு இந்த விஷயங்களில் உனக்கு அறிவு பத்தாது. உங்கம்மா எதுவும் சொல்லி தர மாட்டாங்களா?''

''அதெல்லாம் சொல்ல மாட்டாங்க.''

''இரு ஒரு புஸ்தகம் காட்டறேன்'' என்று டீச்சர் உள்ளே போனுள். (தொடரும்)

## டாக்டர் தரும் அட்வைஸ்

- மறக்காமல் வேண்டப்பட்ட நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் தீபாவளி வாழ்த்துக்கள் அனுப்புங்கள். இந்தச் சிறிய செய்கை அன்பின் அடையாளம்.
- உங்களுக்கு ரொம்ப வேண்டப்பட்ட, அதிகம் வசதியில்லாத நண்பருக்கோ, உறவினருக்கோ ''தீபாவளி ஸ்பெஷல்'' அல்லது தீபாவளி மலர் வாங்கிப் பரிசளியுங்கள். பாருங்கள் ஆனந்தத்தை.
- வீட்டில் வளர்க்கும் நாய், பூனை முதலியவை பட்டாஸ் சப்தத்தைக் கேட்டுப் பயப்படும். பெரிய குரலெடுத்து அழும் அவைகளைச் சற்றுச் செவி சாய்த்து பத்திரமாகக் கவனித்துக் கொள்ளவும். அதிகம் சப்தம் செய்யும் வெடிகளையோ விடாமல் வெடிக்கும் சர வெடிகளையோ வைக்க வேண்டாம்.
- நாய், பூனை, முதலியவை வெடித்த பட்டாஸ், பூச்சட்டி வாணம் முதலியவைகளைத் தின்று, அதனுல் வாய்ப் புண் வரலாம். உடனுக்குடனே பெருக்கி எடுத்து விடவும்.
- எக்காரணத்தைக் கொண்டும் வீட்டின் உள் அடுக்களையில் (காஸ் அல்லது ஸ்டவ் விலோ மத்தாப்பு, வாணம் முதலியற்வைறைக் கொளுத்தச் சம்மதிக்க வேண்டாம். open fire காஸ், கிரோஸின் முதலியவை இருக்கும் இடத்தில் பதுங்கியிருக்கும் எமன்.
- தின்பண்டங்களை வேலைக்காரி, தோட்டக்காரன், மற்றும் ஏழைகளுக்குக் கொடுத்து விடுங்கள் அன்றே. அவை பழசாகிஊசிப் போகும் வரை காத்திருந்து கொடுக்க வேண்டாம்.
- நம் வீட்டிலேயே மிதமிஞ்சி எண்ணெய்ப் பலகாரங்களைத் திங்க வேண்டாம். பிறகு வீடு வீடாகச் சென்று கொஞ்சம் கொஞ்சம் தின்பதற்குள் வயிறு கட்டாயம் கஷ்டப்படும்.

இரண்டு தினங்களுக்குள் கட்டாயம் வயிற்று வலி, வாந்தி பேதி ஏற்படக் கூடும். அதனுல் அன்றே மிதமாக உண்டு உடனே ஏதாவது ஒரு ஜீரணமருந்து வேண்டுமானுல் சாப்பிடவும். தீபாவளி அன்று இரவும், முதலிரவும் குறைத்து உண்டோ அல்லது லங்கணம் ஆகவோ இருந்தால் வயிறு பிழைக்கும். டாக்டருக்குச் செலுத்தும் ஃபீஸ் மிச்சப்படும்.

– டாக்டர் சுந்தரி மேனன்

# நீங்களும் இதுபோலத் தைக்கலாமே!









**'ரெடிமேட் டிரெஸ்'களை வாங்குவது நல்லதா? துணி வாங்கித் தைப்பது நல்லதா? என்று நாயுடு ஹால் உரிமையாளரைக் கேட்டபோது–**

''சாதாரணமாக நிறைய பேர் 'ரெடிமேட் டிரெஸ்' தான் வாங்குகிறார்கள். அதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. போனஸ்

## 21

டீச்சர் காட்டிய புத்தகத்தில் என்னென்னவோ அய்யய்யே படங்கள் எல்லாம் போட்டிருந்தது.

''இத பார், இதான் ஃபாலோப்பியன் ட்யூப். இங்கதான் பாப்பா உற்பத்தியாறது இதபார், இதான் க்ரோமோஸோம்னு பேரு'' என்று கலர் கலராப் படங்கள் இருந்ததைக் காட்டக் காட்ட அவளுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. ''வேண்டாம் டீச்சர். நான் போறேன்.''

''இதபாரு, இந்த வயசில நீ அறியாத பெண்ணு இருக்கக் கூடாது. இதெல்லாம் தெரிஞ்சே ஆகணும் உனக்கு. ஏதாவது சந்தேகம் இருந்தா கேளு. நீ ஒரு பெண். உனக்கு சிருஷ்டியில் ஓர் அங்கம் இருக்குது. கேளும்மா என்ன வேணுமின்னுலும் கேளு.''

அவள் மௌனமாக இருந்தாள்.

''என்னமா சிவந்துக்குது பாரு உன் கன்னம்! இதுக்கே கூட சிருஷ்டியில் ஒரு காரணம் இருக்கு கேளும்மா.''

''அனுபமா .... வந்து..... வந்து. சொன்னு. பாய்ஸ் தொட்டா, வந்து... பாய்ஸ் தொட்டா என்ன ஆகும் டீச்சர்?''

டீச்சர் சிரித்து, ''ஒண்ணுமே ஆகாது. இவ்வளவு தூரம் படிச்சுப் படிச்சு சொன்னேனே தெரியலே?''

''தொட்ட இடத்தில எச்சில் துப்பிட்டாச் சரியாப் போயிடுமா?''

''அய்யோ பைத்தியமே, இதெல்லாம் உனக்கு யார் சொன்னது?''

''அனுபமாதான்.''

''அனுபமாக்கு எல்லாம் தெரியும். உன்னைக் கலாட்டாப் பண்ரு. பாய்ஸ்னுப் பயப்படாதே. உங்க அண்ணன் எல்லாம் பாய்ஸ் இல்லையா?''

''அவங்க தொட்டா மட்டும் ஒண்ணும் ஆகாதாம்,''

''முதல்ல இந்த அனுபமா சினேகிதத்தை விடு. அவ உன்னைப் பைத்தியமா அடிக்கிரு. இதபாரு, உனக்கு வயசாகிக்கிட்டு வருதில்லே? உடம்பில் எத்தனை மாறுதல் ஏற்படுது, நீயே கண்ணாடில பாத்துக்கற இல்லே? எல்லாம் உன்னை ஒரு பருவத்துக்குக் கடவுள் தயார் பண்ற மாதிரித்தான். இது இயற்கையா சாதாரணமா மனித குலத்துக்கே நிகழுது. எந்த ஊர்லயும் இதுதான் நிகழுது. இதைக்கண்டு பயப்படவேண்டியதில்லே. கூச்சப்பட வேண்டியதில்லே. இதெல்லாம் ஆரோக்கியமான நிகழ்ச்சிகள். ஒண்ணே ஒண்ணு சொல்வேன். கன்னு பின்னு சினிமாவெல்லாம் பார்க்காதே. பாத்தாக்கூட அதெல்லாம் நிஜம்னு நினைச்சுக்காதே. கதை படிப்பியா? கல்கி, விகடன்?''

''பொம்மை பார்ப்பேன் டீச்சர்.''

''பொய் சொல்லாதேகதையெல்லாம் படிப்ப இல்லே?''

''இல்லே. காட் பிராமிஸ்.''

''படிச்சா ஒண்ணும் தப்பில்லே. ஆனு அதெல்லாம் கதை. நம்ம வாழ்க்கைங்கறது வேற. அதனுடை விதிகளே வேற. அதை அப்பப்ப ஞாபகப்படுத்திக்கிட்டன்னு சரி.''

''சரி டீச்சர். நான் போயிட்டு வரட்டுமா?''

''போய் வாம்மா. இனிமே பாய்ஸ்னு பயப்படாதே. அவங்க கூடப் பேசலாம். அவங்க ஒண்ணும் செய்துற மாட்டாங்க. என்ன?'' என்று சிரித்தாள்.

# எப்போதும் பெண்

## சுஜாதா



''புஸ்தகம் காட்டினதை யார் கிட்டயும் சொல்லலே.''

''யார் கிட்டயும் சொல்லலாம். இதுல ஏதும் ரகசியமில்லே, சரியா.''

''சரி.''

''வீட்டு வரைக்கும் கொண்ட விடட்டுமா, தனியாப் போவியா?''

''இல்லே டீச்சர். தெருக் கோடில கடைல எங்கண்ணன் இருப்பான். அவங்கூடப் போயிடுவேன்.''

''போய் வாம்மா.''

தெருக் கோடிக் கடையில் மது அவசர அவசரமாகச் சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தான். இவளைப் பார்த்ததும் உடனே கீழே போட்டுத் தேய்த்து அணைத்து ''ஒரு அசோகா கொடு துரை'' என்றான்.

''என்னடிதிடீர்னு இங்கே வந்துநிக்கறே''

''டீச்சர் வீட்டுக்குப் போயிருந்தேன். நீ ஆத்துக்குத்தானே போறே?''

''ஆமாம்'' என்றான். அவளைச் சற்று சந்தேகத்துடன் பார்த்தான். தனக்கு ஒன்றுமே தெரியாதது போல் விழித்தாள். மது சிகரெட் குடித்ததை பிற்பாடு எப்போதாவது உபயோகிக்க வேண்டும். இப்போது யாரிடமும் சொல்லக் கூடாது.

''மது இது யாருது?''

''என் ஸிஸ்டர்'' என்றான் மது நேர் பார்வை பார்த்துக் கொண்டு.

அந்தப் பையன் மதுவை விட உயரமாக இருந்தான். பளபளவென்று சைக்கிள் வைத்திருந்தான்.

அவளை ஒரு கணம் ஏறிட்டுப் பார்த்து விட்டு, ''வா போகலாம் மது'' என்றாள்.

சைக்கிள்காரனும் கூட வந்தான்.

அவள் அந்தப் பக்கம், நடுவில் மது, இவன் இந்தப் பக்கம்.

''ரெண்டு பேரும் ஏறிக்கங்களேன் கொண்ட விட்டுர்றேன்.''

மது, ''வேண்டாம் பாஸ்கர். நடந்தே போயிருவோம். நாளைக்குப் பார்க்கலாமா?''

''உங்க வீட்டில காரம் போர்டு இருக்கில்லே?''

''இருக்கு. அப்பா இப்ப ஆடினுத் திட்டுவாரு. வரட்டுமா?''

''நானும் அந்தப் பக்கம்தான் வரேன்.'' என்றுஸ்டைலாகச்சைக்கிளில்ஏறிக்கொண்டு மெல்ல ஓட்டினன்.

சின்னு தரையைப் பார்த்துக் கொண்டே நடந்தாள். அந்த முன் சக்கரம் நெளிந்து திண்டாடுவது தெரிந்தது.

வீட்டுக்குப் போனபோது அம்மாவும் அப்பாவும் கோவிலுக்குப்போயிருந்தார்கள். அந்த பாஸ்கர் பிடிவாதமாக வாசலில்,



கேரம் போர்டைப் பரத்தி பவுடர் போட்டு ''டபிள்ஸ் ஆடலாம்'' என்றான். ரவி, ரகு மது அந்த பாஸ்கர் நால்வரும் ஆட ஓரத்தில் நின்று கொண்டு பார்த்துக் கொண்டிருந்தாள்.

''போடி உள்ள'' என்றான் ரகு.

''ஏன் அவ பாட்டுக்கு இருந்துட்டுப் போறா'' என்று பாஸ்கர் ரெட்டையும் போட்டுவிட்டு ஃபாலோவும் போட்டு அவளை ஒரு முறை பார்த்துக் கொண்டான். சிரித்தான். ரவி இதைப் பற்றிக் கவலைப் படாமல் கைதட்டினான். ஒரு போர்டு முடிந்ததும் ''ரவி நீ கொஞ்சம் விலகிக்கோ. நீ ஆடறியா?'' என்று கேட்டான்.

''ம்ஹூம்'' என்று உள்ளே ஓடிவிட்டாள்.

அந்தப் பையன் தினம் சாயங்காலம் வீட்டுக்கு வர ஆரம்பித்தான். ரவியுடன் பேசிக் கொண்டிருப்பான். அம்மாவுடன் ரொம்ப ஃப்ரண்டு. அப்பாவுக்கு இங்க் பாட்டில், சாத்துக்குடி, மூக்குப் பொடி எல்லாம் வாங்கிக் கொண்டு வருவான். இவளைப் பார்த்துச் சிரிப்பான். உள்ளே ஓடிப்போய்விடுவாள்.

''மாமி உங்காத்து சின்னு ஏன் பேசவே மாட்டேங்கறா?''

''வெக்கப்படறா! ஏய் என்னடி வெட்கம் அவன் என்ன கடிச்சா சாப்பிட்றுவான்? நம்ம ரவி, மது மாதிரித்தாண்டி அவனும்.''

அவளுக்குப் புரியவில்லை.

அவளுடைய விநோதமான இளம் வாழ்க்கையின் நிகழ்ச்சிகளால் அவளுக்குள் ஒருவிதமான எதிர்ப்பு இருந்துகொண்டே இருந்தது. இதெல்லாம் தப்பு தப்பு என்று தோன்றும். எதெல்லாம் என்று தெளிவாகத் தெரியாது. பாவத்தைக் கண்டால் பயமாக இருக்கும். பாவம் என்றால் என்ன என்று தெரியாது. என்னமோ ஒரு பொக்கிஷம் தனக்குள் இருப்பதாக மட்டும் தெரிந்தது. அது அவளுடைய கன்னித் தன்மை என்பது அவளுக்குச் சொல்லத் தெரியவில்லை. மாறுதல்களே அவளுக்கு அவஸ்தையாக இருந்தது. தன் உடம்பில் சில பாகங்கள் மற்றவர் கவனத்தைக் கவர்கின்றன என்பதில் வெட்கமும் கூச்சமும் இருந்தது. அதே சமயம் அதில் ஒரு விருப்பமும் பெருமையும் இருந்தது. எப்படியோ ஒரு கற்பனை உலகத்திலிருந்து விடுபட்டு சில நிஜங்களைச் சந்திக்க அவள் தயார் படுத்தப்படுவதை அவள் உணர்ச்சி பூர்வமாக அறிந்தாள். அவள் தன்னை வெளிப் படுத்திக் கொள்ள தான் விகசிக்க ஒரு ஆண் உடல் தேவை என்பது மட்டும் மஞ்சு படிந்த குழப்பமாக அவளுக்குத் தெரிந்திருந்தது. எல்லாப் பெண்களும் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும். கல்யாணம் பண்ணிக் கொள்ளாதது ரொம்ப சோகம். பெண்கள் கல்யாணம் பண்ணிக் கொண்டால் அவர்களுக்கு ஒரு வீடு கிடைக்கும். ஒரு விளக்கு, ஒரு ஆண், அவன் தினம் சாயங்காலம் வீட்டுக்கு வருவான். அப்புறம் கொஞ்ச நாளில் பாப்பா வரும்.

மற்றவர்கள் சொல்லிச் சொல்லி அவளுக்குக் கல்யாணம் செய்து கொண்டு ஒரு கணவன் கிடைப்பது என்பது வாழ்க்கையில் மிக முக்கியமானதாகப் பட்டது. இதனால் பெண் சிநேகிதம் அவளுக்குக் குறைந்துவிடும் என்றுகூடத் தோன்றியது. ஆண்களிடம் பேசுவது தப்பு என்று ஒரு



மூலையில் எச்சரிக்கை செய்தது மனம். மற்ற பெண்கள் எல்லோரும் போட்டிக் காரிகள் போலத் தோன்றியது. அவர்கள் கொஞ்சம் அழகாக அவளை விடப் பெரிய வளாக இருந்தால் அவர்கள் மேல் பொரு மையாக இருந்தது.

அனுபமாவிடம் ரொம்ப நாள் அந்த பாஸ்கரைப் பற்றிச் சொல்லவில்லை. ஒரு நாள் அனுபமா நோட்ஸ் வாங்கிக் கொள்ள வந்திருந்தபோது வழக்கம்போல் பாஸ்கர் வந்திருந்தான். அனுபமாவைப் பார்த்து, ''இது யாரு?'' என்றான்.

''நான் யாராயிருந்தா உனக்கென்ன?'' என்றாள் அனுபமா. உடனே சிரித்தாள்.

பாஸ்கர், ''நீ கேரம் போர்டு ஆடுவியா?'' என்றான்.

''ஓ! ஆடுவேனே.''

இரண்டு பேரும் ஆடினார்கள். அனுபமா முழங்காலைத் தரையில் மடக்கிக் கொண்டு இடது கையால் ஆடினாள்.

''லெஃப்ட் ஹாண்டா நீ?''

''ஆமா.''

''எங்கே காட்டு, கைல ரேகை பார்க்க லாம்.''

''உனக்கு ரேகை பார்க்கத் தெரியுமா?''

''இது ஹார்ட் லைன், இது ஃபேட் லைன்'' என்று ஏதோ சொன்னான். அனுபமா ''எல்லாம் தப்பு'' என்றாள். ''உன் கையைக் காட்டு சின்னு'' என்றாள் அனு பமா. அவள் மாட்டேன் என்று உள்ளே ஓடிப்போய் விட்டாள். மறுபடியும் வெளி யில் அவர்கள் கேரம் போர்டு ஆடும் சப்தம் கேட்க அண்ணா, தம்பி மூன்று பேரும் அந்த பாஸ்கருடன் சேர்ந்து கொண்டு அனுபமாவைக் கலாட்டாப் பண்ண அவளுக்கு வயிற்றில் பொறாமையும் கோப மும் கலந்த ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது. உள்ளே போய்ப் பேசாமல் படுத்துக் கொண்டாள். அவர்கள் எப்போது ஆட் டத்தை முடித்து விட்டுப் போகப் போகி றார்கள் என்று காத்திருந்தாள். ''என்னடி அவாள்ளாம் விளையாடிண்டிருக்கா. நீ மட்டும் இங்கே படுத்துண்டு இருக்கே!''

''போம்மா.''

அம்மா சிரித்ததும் எரிச்சலாக இருந்தது. அனுபமாவிடம் இனிப் பேசுவதில்லை என்று தீர்மானித்து விட்டாள். அவர்கள் எல்லோரும் உள்ளே வந்து பார்த்தபோது தூங்குகிறாற்போல் பாவனை செய்தாள்.

(தொடரும்)



# அழகுக்கு அழகூட்ட ...

சரஸ்வதி சுந்தரேசன்

ஒருவர் அழகாகத் தோற்றமளிக்க முகம் மாத்திரம் அழகாக இருந்தால் போதாது. கூந்தல் அலங்காரமும், கை கால்களும், உடையும் அழகாகவும், வசீகரமாகவும் அமைய வேண்டும். முகப் பராமரிப்பை சென்ற மாதம் பார்த்தோம். நம் அழகிய தோற்றத்துக்கு கை கால்களும் இன்றியமையாத உறுப்புக்கள். வீட்டு வேலைகள் செய்து கைகளும் கால்களும் சொர சொரப்பாகவும் சிலருக்கு தோலும் உரிந்து விடுகிறது. நகத்தில் அழுக்குச் சேர்ந்து கடினமாகவும் ஆகி விடுகிறது. தண்ணீரில் வேலை செய்வதனால் வெடிப்பும் ஏற்படுவதைக் காண்கிறோம். ஆகையால் வாரம் ஒரு முறையாவது அரை மணி நேரம் கைகால்களின் பராமரிப்பில் கட்டாயமாகச் செலவழிக்க வேண்டும். அதேபோல் கூந்தல் பராமரிப்பும் அவசியம்.

**கால்களின் பராமரிப்பு:**

கால் ஒரு மென்மையான உறுப்பு. இருபத்தி ஆறு சிறிய எலும்புகளினால் ஆன இந்த உறுப்பில் சில எலும்புகள் பென்சிலில் உள்ள 'லெட்' அளவே உள்ளது. நம் உடலின் பாரத்தைத் தாங்குவதால் கால்கள் விரைவாகத் தளர்ச்சி அடைகிறது. இந்தத் தளர்ச்சியை நீக்கக் கால்களை மிருதுவாகவும் சுத்தமாகவும் வைத்துக் கொள்வது மிகவும் அவசியம். வீட்டு வேலைகளில் அதிகமாக ஈடுபடும் பெண்களுக்கும் நாட்டியம் ஆடுபவர்களுக்கும், ஓட்டப் பந்தயம், பேட்மிட்டன் முதலிய விளையாட்டுக்களில் ஈடுபடும் வீராங்கனைகளுக்கும் மேலும் நின்று கொண்டே வேலைகளில் ஈடுபடும் டீச்சர்கள் ஹோட்டல் ரிஸப்ஷனிஸ்ட் முதலியோருக்கும் கால்களின் பராமரிப்பு மிக மிக அவசியம்.

கால்களின் பராமரிப்புக்காக செயற்கை உபகரணங்களையோ அல்லது மருந்து வகைகளையோ தேடி அலைய வேண்டாம். வீட்டில் தினசரி உபயோகிக்கும் பண்டங்களினால் நாம் பராமரிப்புச் செய்து கொள்ளலாம்.

கால்களைக் குறைந்தது பத்து நிமிடங்கள் வெது வெதுப்பான 'சோப்' தண்ணீரில்



# காரணம், குழந்தைகளின் விரைந்த முழுவளர்ச்சிக்கான அதிக ஊட்டச்சத்துள்ள திட உணவாகும் ஃபாரெக்ஸ்.

ங்கள் குழந்தையின்
வளர்ச்சிக்குத் தேவையான
ரதச்சத்து நிரம்பியதாகும் ஃபாரெக்ஸ்.

ரதச்சத்துப் பற்றுக்குறையிலிருந்து
ழந்தையைப் பாதுகாப்பதற்கென்றே
லக உடல்நலக் கழகம் பிராண்டு
செய்யப்பட்ட திட உணவுகளில்
டங்கி இருக்கவேண்டிய புரதச்
த்தின் அளவு பற்றி சில தர
ர்ணயங்கள் விதித்துள்ளது. சிபாரிசு
செய்துள்ள முறையைப் பின்பற்றி
பாரெக்ஸ் திட உணவைத் தயாரித்து
அளித்தால் அது உங்கள் குழந்தையின்
வளர்ச்சிக்கு அத்தியாவசியமான
புரதச்சத்து செறிந்ததாகும்.

ஆரோக்கியமான இரத்தத்திற்கென
கூடுதல் இரும்புச்சத்து
அடங்கியதாகும் ஃபாரெக்ஸ்.

'தாயிடமிருந்து ஏராளமான இரும்புச்
சத்தைப் பெற்று குழந்தை பிறக்கிறது.
பிறந்த பிறகு மெல்ல மெல்ல
இரும்புச்சத்தின் அளவு குறையத்
தொடங்குகிறது. பால் நல்ல
உணவாக இருப்பினும், இரும்புச்சத்துப்
பற்றுக்குறையினால் அது முழுமை
யாவதில்லை. ஆகவே, குழந்தைக்கு
இரும்புச்சத்து அடங்கிய திட உணவு
தேவைப்படுகிறது.''

—டாக்டர் சுபாஷ் C. ஆர்யா

குழந்தையின் இரத்தத்திற்கும்,
தொற்று நோய் எதிர்க்கும் சக்திக்கும்,
அவனது பொது ஆரோக்கியம்
மற்றும் வளர்ச்சி இவற்றுக்குத் தேவை
இரும்புச்சத்து. அதனால்தான்
ஃபாரெக்ஸில் வேறு எந்த பிராண்டு
செய்யப்பட்ட திட உணவைக்
காட்டிலும் அதிக இரும்புச்சத்து
அடங்கியுள்ளது.

உங்கள் குழந்தையின் பற்களுக்கும்
எலும்புகளுக்கும் அத்தியாவசியமான
கால்ஷியம் மற்றும் ஃபாஸ்ஃபரஸ்
சரியான விகிதத்தில்
அடங்கியுள்ளதாகும் ஃபாரெக்ஸ்.

உங்கள் குழந்தையின் பற்கள் மற்றும்
எலும்புகளின் சீரான வளர்ச்சிக்குத்
தேவை கால்ஷியம் மற்றும்
ஃபாஸ்ஃபரஸ். ஆனால் 2:1 என்னும்
விகிதத்தில் இவை ஒன்று சேர்ந்திருந்
தால்தான் குழந்தைக்கு மிகச்சிறந்த
பயனளிக்கும். இந்த இரண்டு
அத்தியாவசியமான உட்பொருள்களும்
உன்னதமான விகிதத்தில் அடங்கிய
தாகும் ஃபாரெக்ஸ். அது உங்கள்
குழந்தை மிக ஆரோக்கியமான எலும்பு
களையும் மிக திடமான பற்களையும்
பெறுவதை உறுதி செய்கிறது.

தவிர, ஃபாரெக்ஸ்
எளிதில் செரிக்கக்கூடியதாகும்.

குழந்தையின் மென்மையான
செரிக்கும் சக்திக்கேற்றவாறு
விசேடமாக முன்கூட்டியே பக்குவம்
செய்யப்பட்டதாகும் ஃபாரெக்ஸ்.






டாக்டர்கள் சிபாரிசு செய்வது

**ஃபாரெக்ஸ்®**

வழங்குவோர் க்ளாக்ஸோ

CASGLF-39-206 TAM

## 22

நவராத்திரி கொலுவுக்கு அவளுக்குமுதல் முதலாக காமாட்சி புடவை கட்டிவிட்டாள். கட்டிவிட்டு, 'அட, என் கண்ணே பட்டுடும் போல இருக்கே' என்று கன்னத்தின் ஓரத்தில் திருஷ்டி பொட்டு இட்டாள். ரவி உள்ளே வந்து, ''ஹாய், நன்னு இருக்கேடி !'' என்றான். தன்னைக் கண்ணுடியில் பார்த்துக் கொண்டபோது அவள் இதயம் படபடத்தது. அந்தக் கணத்தில் அவள் தன்னுடைய பெண்மையை ஒத்துக் கொண்டது போலத் தோன்றியது. அதில் ஒரு புதிய சந்தோஷம் இருந்தது அவளுக்கு. இந்த நாட்கள் சுவாரஸ்யமும் எதிர் பார்ப்பும் தந்தன. எதனுல் சுவாரஸ்யம், எதற்கு எதிர் பார்ப்பு என்பது புரியவில்லை. எதிர்காலத்தில் அவளுக்கு ஏதோ பிரத்தியேகமாகநிகழப்போகிறது என்பது தெரிந்தது. இதெல்லாம் அதற்கு ஒரு விதத்தில் தன்னை ஜோடித்துக் கொள்வது போல் இருந்தது.

அந்த அறையின் மெலிதான இருட்டில் அவள் ஜொலித்தாள். பட்டு அவள் உடம்பைத் தடவும்போது அதில் ஒரு சந்தோஷம் இருந்தது. அதன் தடவலில், அதன் வாசனையில் அந்த வாசனையுடன் அம்மா சூட்டிய கதம்ப வாசனை, கழுத்தில் புஸ்ஸென்று அடித்த பர்ஃப்யூம் வாசனை, பவுடர் வாசனை அம்மா தன் பச்சைக் கல் நெக்லஸை அவள் கழுத்துக்குப் போட்டிருந்தாள். தொண்டையில் சில்லென்றிருந்ததுகூடப் பிடித்திருந்தது. அவள் அழகுபடுத்தப்படுகிறுள். தலை மயிர் ஒழுங்காக வாரிப் பின்னப்பட்டிருக்கிறது. வகிடுதான் எத்தனை நேர். உதட்டில்தான் எத்தனை சிவப்பு! அவள் மெல்ல மலர்கிறுள்! அவளுக்குள் கிணற்றில் ஜலம்போல சாத்தியங்கள் ஊறுகின்றன. சந்தோஷமாக இருக்கிறுள். பயப்படுகிறுள். நதிபோல் பிரவாகிக்கிறுள். இதோ இந்த அறையைவிட்டு வெளியே போகும்போது அவள் உண்டாக்கப் போகும் படபடப்பைப் பற்றி ரகசியமாக தெரிந்து கொண்டுதான் போகிறுள்.

கொலு பார்க்க பாஸ்கர் நிச்சயம் வருவான். அனுபமாவின் அக்கா பையன் வருவான். கொலுவுக்கு அழைக்கப்போகும் போது வீதியில் பல பையன்கள் அவளைப்பார்ப் பார்கள். அவர்கள் பேசிக்கொண்டிருப்பது பாதியில் நின்றுபோய்விடப் போகிறது. அவள் சிநேகிதிகளே அவளை இன்று வித்தியாசமாகப்பார்ப் பார்கள். அவர்கள் கண்களில் பொருமை இருக்கும். பாடச் சொல்லுவார்கள். பிகு பண்



ணிக் கொள்ளப் போகிருள். பாய் போட்டு முழங் காலே அழகாக மடக்கிக் கொண்டு ஒரு கையை ஊன்றிக் கொண்டு அவள் அதிகம் பேசாமல் எல்லாவற்றையும், ஒருவிதமான வரவழைத்துக் கொண்ட ஆர்வத்துடன் அறியாமையுடன், கவனிக்கப் போகிருள். அவளைப் பற்றி மற்ற பேர் பேசிஞல் அவள் சிரித்துக் கொண்டு சும்மா இருப்பாள்.

பாஸ்கருக்கு அக்கா வயிற்றைச் சாய்த்துக் கொண்டு பிள்ளையாண்டிருந்தாள். அதனுல் பாஸ்கரே வந்து கொலுவுக்கு அழைத்து விட்டுப் போனுன். ''மாமி, சின்னுவையும் கட்டாயம் கூட்டிண்டு வாங்கோ! அக்கா படிச்சுப் படிச்சு சொன்னு.''

சின்னு அம்மா பின்னுல் பாஸ்கர் வீட்டுக்குப் போயிருந்தபோது பாஸ்கர் அவள் சைக்கிளைத் துடைத்துக் கொண்டிருந்தவன் சட்டென்று எல்லாவற்றையும் கீழே போட்டு விட்டு உள்ளே ஓடினுன். சற்று நேரத்தில் பளிச்சென்று சொக்காயும் பாண்டும்போட்டுக் கொண்டு, ''வாங்கோ'' என்றுன்.

''சின்னு, முதல் தடவை எங்க வீட்டுக்கு வர இல்லே? அம்மா! அம்மா!'' என்று உள்ளே கூப்பிட்டான். அவன் அம்மாவும் அக்காவும் வந்ததும், ''போடா, பொம்மனுட்டி பண்டிகையில் உனக்கு என்னவேலே?'' என்று துரத்தினபோது பாஸ்கர் வெளியே போகாமல் வாசல் அறைக்குள்போய் உட்கார்ந்து கொண்டு, அங்கே டேப் ரிக்கார்டரைப் போட்டுப் பாட்டுக் கேட்டான். அவன் அறையில் இல்லாமலிருந்தும் அவன் இருப்பதை அடிக்கடி உணர முடிந்தது. பேனுவுக்கு இங்க் போடுவது போல் வந்து அலமாரியைக் குடைந்தான். ரேடியோவில் இங்கிலாந்து காமெண்ட்ரி வருகிறதா என்று நிரடிப் பார்த்தான. ஒரு முறை, ''மாமி, இந்த வாரம் கெரஸின்வாங்கிட்டீங்களா?'' என்று விசாரிக்க வந்தான். ''உங்க கிட்டத்தான் கிரஸின் எல்லாம் வாங்கித் தரான்.

ஆத்திலே ஒரு காரியம் சொன்னு செய்ய மாட்டான். குறவன்! எப்பப் பார்த்தாலும் சைக்கிளே எடுத்துண்டு சுத்தறது! படிப்புங்கறது கிடையவே கிடையாது!''

''என்ன பாஸ்கர், அம்மா சொல்றது நிசமா? நாளைக்கு உனக்குப் படிப்பில்லேயானு யாரும் பெண் கொடுக்கமாட்டாளே''

# சுஜாதா



''அதெல்லாம் பொய், மாமி! மதுவைக் கேளுங்கோ, நான் எப்படிப் படிப்பேன்னு!''

''என்ன கிழிச்சியோ போ!''

வீட்டிலிருந்து திரும்பும்போது, ''நான் தெரு கோடி வரைக்கும் கொண்டுவிடறேன், மாமி! விளக்கில்லே பாருங்கோ!''

''பரவாயில்லேப்பா, நாங்க போய்க்கறோம். அப்படி ஒண்ணும் பயமில்லே.''

''உங்களுக்குத் தெரியாது, மாமி!'' என்று சைக்கிளை எடுத்துக் கொண்டு உடன் வந்தான்.

''ரொம்ப நல்ல பையன்! ரொம்ப ஒத்தாசை. நம்ம மது ரவி ஏன் இப்படி இருக்க மாட்டேங்கறு?''

தெரு மூலையில் இருட்டில் ஒரு தடவை பாஸ்கர் அவளை முதுகில் தொட்டான். அவளுக்கு உடம்பெல்லாம் சில்லென்று ஆகி விட்டது.

> சிலருக்குக் கண்ணைச் சுற்றிலும் கருவளையம் காணப்படும். இது பலவீனம் காரணமாக ஏற்பட்டதாகும். சிறிதளவு தேங்காய் எண்ணெயுடன் மஞ்சள் பொடியைக் குழைத்து நன்கு காய்ச்சி அதனைத் தினமும் குளிப்பதற்கு முன் கண்ணைச் சுற்றிலும் தேய்த்துப் பின் பத்து நிமிடம் ஊறி, தொடர்ந்து சில நாட்கள் குளித்தால் பலன் கிட்டும்.
>
> —அகிலா கோபால்

காமாட்சியின் தம்பி, பட்டு மாமா என்று அவரைப் பேர் சொன்னார்கள். அவருடைய மனைவியுடன் வந்திருந்தார். பட்டு மாமா அம்மாவைவிட வயசில் சின்னவர். முன் மண்டையில் வழுக்கை இருந்தாலும், பட்டு மாமா பார்க்க தமாஷாகத்தான் இருந்தார். அதற்கேற்றாற்போல் தமாஷாகவும் பேசினார். அவர் மனைவி நளினியை எப்போதும் அழுகை வரும் வரைக்கும் கிண்டல் பண்ணிக் கொண்டு இருந்தார். இவர்கள் எல்லோரையும் பல இடத்துக்குக் கட்டாயமாக அழைத்துச் சென்றார். அவர் வடக்கே ஏதோ ஃபாக்டரியில் இருப்பதால் தமிழ்ப் படங்கள் பார்க்க வாய்ப்பில்லாததால் தினப்படிக்கு ஒரு படமாக பார்த்துத் தள்ளிக் கொண்டிருந்தார். நளினிக்கு அலுத்துப் போனாலும் பட்டு மாமா இவர்களை கூட்டிக் கொண்டு இருக்கிற இருப்பையெல்லாம் பார்த்தார். பட்டு மாமாதான் இவளைப் பார்த்து, ''காமாட்சி உம் பொண்ணு. சினிமா ஸ்டார் மாதிரி அழகா இருப்பா பாரு. இந்த வயசிலேயே என்ன தளதளன்னு இருக்கா பாரு, இவளால் ரொம்ப பிராப்ளம் வரப்போறது. இப்பவே ரெளடிப் பசங்கள்ளாம் சுத்துவாங்களே!''

''ஏன், ரொம்ப அனுபோகமோ?'' என்று நளினி கேட்க—

''அனுபோகந்தான். மாலதின்னு வடக்கு மாசி வீதிலே ஒரு பொண்ணு. நான் எஸ்.எஸ்.எல்.ஸி. படிச்சிண்டிருந்தபோது இருந்தா. அம்பது வயசுக்கு மேற்பட்டவா எல்லாரும் சுத்திண்டு இருந்தா. நான் வாடகை சைக்கிள் எடுத்து அவ வீட்டுக்கு முன்னுலேயே நூறு ரவுண்டு அடிச்சி இருக்கேன். இப்ப அந்தத் தேவதை எங்கே இருக்காளோ?''

இப்படியெல்லாம் பெண்டாட்டியிடம் பட்டு மாமா பேசுவது சின்னுவுக்கு ஆச்சரியமாக இருந்தது. நளினி கோபித்துக்கொள்கிற மாதிரி பேசினாலும் உள்ளூர கோபமில்லை என்பதும் தெரிந்தது. பட்டு மாமா அவளுக்குத் தங்கத்தில் ஒரு நகை வாங்கிக் கொடுத்தார். அதை அவரே போட்டுவிட்டு, ''இந்தப் பொண்ணுக்கு சதிர் ஏதாவது சொல்லித் தர்றதுதானே! பொம்மை மாதிரி இருக்கே!'' என்று அவள் கன்னத்தில் முத்தம் கொடுத்தார். அதே சமயம் அவளை பின் பக்கத்தில் சதையை அள்ளிக் கிள்ளினார். புஜத்தில் அழுத்தினார்.

பட்டு மாமா ஊருக்கு இரண்டு தினங்களில் கிளம்பிவிடப் போகிறாரே என்பதில் எல்லாருக்கும் வருத்தமாகத்தான் இருந்தது. சின்னுவுக்கு நளினியைப் பிடித்துப்போயிருந்தது. அவள் டிரஸ் பண்ணிக்கொள்ளும்போது சின்னுவையும் சேர்த்துக்கொள்ளுவாள். உள் பாவாடையில் ரொம்ப நேரம் கண்ணாடிக்கு முன் நின்று கொண்டு சட்டென்று ரவிக்கை மாற்றிக் கொள்ள பட்டன்களைக் கழற்றிப் பாதியில் நிற்பாள். இந்தப் பக்கம் அந்தப் பக்கம் திரும்பித் திரும்பி கண்ணாடியில் பார்த்துக் கொள்ள சட்டென்று பாடியையும் கழற்றி சுதந்திரமாகி பாவாடை நாடாவைத் தளர்த்தி மார்பை மூடிக் கொள்வதற்குள் சற்று நேரம் நளினியின் இரண்டு மார்பகங்களும் தெளிவாகத் தெரிவதை சின்னு கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பாள். சின்னுவுக்கு மருதோன்றி அழகாக இட்டுவிடுவாள். அவளுக்குப் பவுடர் எப்படிப் போட்டுக் கொள்ள வேண்டும். காம்பாக்ட் மேக் அப் என்றால் என்ன, லிப்ஸ்டிக்கூட இலேசாக தீற்றிவிட்டாள்.

''என்னடி பாடி இது, உங்கம்மா தெச்சதா?''

''ஆமாம், மாமி, வடாம் வத்தல் மாமி கிட்டே அளவு கொடுத்துத் தெச்சுண்டது.''

''இதபாரு, இது எனக்கு சின்னதாப் போச்சு. அதை நீ வெச்சுக்கோ!''

''அய்யோ, அம்மா திட்டுவா மாமி!''

''என்னை மாமின்னு கூப்பிடாதே, ரொம்ப வயசாயிட்ட மாதிரி இருக்கு. நளினின்னே கூப்பிடு. அம்மாகிட்டே எதுக்கு காட்டறே? பொட்டிக்குள்ளே வைச்சுக்கோ. எப்பவாவது சினிமா போனு போட்டுக்கோ. திம்முனு இருக்கும். இப்பவே யாரும் பார்க்க மாட்டா. போட்டுண்டு பாரு !''

''அந்தப் பக்கம் திரும்பிக்குங்கோ !''

''என்னடி வெக்கம் ? நானும் கல்யாணத்துக்கு முன்னுடி வெக்கப் பட்டுண்டு தான் இருந்தேன். அம்மாவை எண்ணெய் தேய்க்க விடமாட்டேன். முதுகில் இருக்கிற மச்சம்கூடத் தெரியக்கூடாது. ரொம்ப ரகளை பண்ணுவேன். இப்ப எல்லாம் மரத்துப் போச்சு.''

'' ஏன் ?''

''ஏன்னு உனக்குக் கல்யாணம் ஆனப்புறம் தெரியும் '' என்ருள். இந்தா செண்ட்டு இதையும் வெச்சுக்கோ. இது ஃபாரின் பவுடர்'' எல்லாம் கொடுத்து அவள் கன்னம் காயம் படும்படியாக முத்தம் கொடுத்து, ''அடுத்த லீவுக்கு சிந்திரிக்கு வா. எனக்கு ஏதாவது வேணும்னு லெட்டர் போடு.... என்ன சின்னு ?''

'' சரி, நளினி !''

நளினி இப்போது பெருமைக்குரிய சிநேகிதி மாதிரித்தான் தோன்றினுள். நளினி, தன்னை அந்தரங்கத்துக்குள் அழைத்துக்கொண்டு விட்ட நளினி. அம்மாவிடம் சொல்லாததை கூட நளினியிடம் சொல்லலாம்போல் இருக்கிறது. அம்மாவிடம் சொல்லாதது என்ன இருக்கிறது என்று யோசித்துப் பார்த்தாள். ஒன்றும் தென்படவில்லை.

சாயங்காலம் நாலு மணிக்கு பள்ளிக்கூடத்தில் வாலண்டியராக இருந்தபோது கொடுத்த பாட்சை நளினிக்குக் கொடுக்கலாம் என்று தோன்றி நளினியைத் தேடிச் சென்ற போது கூடத்தில் யாரும் இல்லை. அம்மா ஸ்டோருக்குப் போயிருந்தாள். அப்பா ஆபீஸிலிருந்து வரவில்லை. மூணு பேரும் விளையாடப் போயிருந்தார்கள். ஹாலே வெறிச்சென்று இருக்க சத்தம் போடாமல் போய் நளினி கண்ணைப் பொத்த வேண்டும் என்கிற ஆசை அவளுக்கு உதயமாகி, மாடிக்குப் போனுள். படிகளில் பாதம் ஒத்தும்போது கவனமாக நடந்தாள். மாடி அறைக் கதவை மெல்லத் திறந்து எட்டிப் பார்த்தாள்.

அங்கே பட்டு மாமா நளினியை...

அந்தக் காட்சியைப் பார்த்ததும் அவள் தனக்குள் ஒன்றைப் பரிபூரணமாக இழந்தாள்.

(தொடரும்)

# இம்மாத இல்லத்தரசி போட்டி

**பொருள்:** கோஸ் (அ) காலிபிளவர்

**முடிவு தேதி:** 15 - 1 - 83

## சமையல் கூப்பன்

................ என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இத்துடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும், எந்தப் புத்தகத்திலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

பிராமணர், வடமாள், கௌண்டின்ய, ரேவதி, 30 வயது, பி.யு.சி. படித்துசென்னையில் புகழ் பெற்ற கம்பெனியில் பணி செய்து மாதம் ரூ. 1500 சம்பளம் பெறும் இளைஞருக்கு மாநில அரசாங்கத்திலோ, அல்லது மத்திய அரசாங்கத்திலோ பணியாற்றும் பிராமண வகுப்பைச் சேர்ந்த பெண் தேவை. பெட்டி எண் 606

கார்காத்த வெள்ளாளர் பிள்ளை வகுப்பைச் சேர்ந்த குடும்பப் பாங்கான மணமகளுக்கு அதே வகுப்பைச் சேர்ந்த வரதட்சிணை எதிர் பார்க்காத முற்போக்கு எண்ணம் கொண்ட நல்ல வேலையில் இருக்கும் மணமகன் தேவை இரண்டாம் தாரமாயினும் பரவாயில்லை. வயது முப்பதுக்குள் இருக்க வேண்டும்; குழந்தைகள் இருக்கக் கூடாது. பெட்டி எண் 607

சொத்தும் வசதியும் உள்ள B.E. TNHBயில் A.E.ஆகரூ.1000க்குமேல் சம்பளம், வயது25 உடைய பிள்ளைக்கு சொத்தும் வசதியுமுள்ள சைவ உணவு சமைக்கத் தெரிந்த, குடும்பப் பாங்கான முதலியார், பிள்ளை, துளுவ வேளாளர், வெள்ளாள நாயக்கர் இவர்கள் வழிகளில் அழகுள்ள குணமுள்ள பெண் தேவை. பெட்டி எண் 608

25 வயது முதலியார் (அசைவம்) வகுப்பைச் சார்ந்த பிரபல பத்திரிகைக்குஏஜண்டாக இருக்கும் பிள்ளை மாதம் ரூ. 1500க்கு மேல் வருமானம் பெறும் ஒருவருக்கு எஸ்.எஸ் எல்.சி. வரை படித்த 18--20 வயதுக்குள் முதலியார் வகுப்பைச்சேர்ந்த பெண் தேவை. முதலியாரில் எந்தப் பிரிவாயிருந்தாலும் சரி பெட்டி எண் 609.

அரசு வங்கி யொன்றில் அலுவலராகப் பணியாற்றும் 25வயதுள்ள வடகலை சித்திரை நட்சத்திரம், நைத்ரப காச்யப கோத்ரம் பெண்ணுக்கு 29 வயதுக்குள் சி.ஏ. படித்துள்ள சென்னையில் வசிக்கும் வடகலை மணமகன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். போட்டோ இருப்பின் நலம். பெட்டி எண் 610

கௌண்டின்ய கோத்ரம், வடமாள், எஸ். எஸ். எல். சி. படித்து தனியார் இலாகாவில் வேலை, ரூ. 800 சம்பளம். அஸ்தம், வயது 31, பிராமணாள் வகுப்பைச் சேர்ந்த கவர்ச்சியான பையனுக்கு அரசு பணி அல்லது வங்கியில் வேலை பார்க்கும் 26 வயதுக்குட்பட்ட உயரமான அழகிய பெண் தேவை. ஜாதகம் இல்லை. மலர் தேர்ந்தெடுத்தல் போதுமானது எதுவும் எதிர்பார்க்கப்படமாட்டாது. பெட்டி எண் 611.

பிஜி தீவில் பிறந்து அங்கு நிரந்தரக் குடி உரிமை பெற்றுச் சொந்தத் தொழில் நடத்தி வரும் கொங்கு வெள்ளாளக் கவுண்டர் 30 வயது அழகிய படித்த லட்சாதிபதி மணமகனுக்கு இந்தியாவில் தமிழ் ஆங்கில மொழி நன்கு பேச, எழுதத் தெரிந்த 30 வயதுக்குக் கீழ் உள்ள நல்ல குடும்பத்தைச் சேர்ந்த குணமுள்ள அழகிய மணமகள் தேவை. வரதட்சிணை தேவையில்லை. எம்மதமும் சம்மதம். புகைப்படத்துடன் எழுதவும். பெட்டி எண் 612.

சிறந்த உத்தியோகத்தில் இருக்கும் 31 வயதான சட்ட பூர்வமாய் விவாஹரத்து பெற்ற குழந்தைகள் இல்லாத ஐயர் பெண்ணுக்கு பரத்வாஜ கோத்திரம் அல்லாத மணமகன் தேவை. பெட்டி எண் 613.

# திருமணமலர்

கௌசிக கோத்ரம், பூச நட்சத்திரம், 26 வயது தனியார் துறையில் பணி புரியும் பி.ஏ. பட்டதாரி ஐயர் பெண்ணுக்கு சென்னையில் தனியார் துறை அல்லது அரசாங்கத்தில் பணிபுரியும் மணமகன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் 614.

பாரத்வாஜ ஐயர், வடமாள், வயது 31, அனுஷம். பிரபல தனியார் நிறுவனத்தின் திருவனந்தபுரம் கிளையில் வேலை. மாத வருமானம் ரூ. 850. அழகும், தெய்வ சிந்தனையும் உள்ள பெண் தேவை. வேலையில் இருந்தால் நல்லது. ஜாதகம், போட்டோவுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் 615

காச்யப கோத்ரம், வாத்யமா வயது 35 திருவோணம் B.sc., B.Ed பட்டதாரியான தமிழ் நாட்டில் கணித ஆசிரியை வேலை பார்க்கும் நல்ல குடும்பத்தில் உள்ள ஐயர் பெண்ணுக்குத் தகுந்த வேலையில் உள்ள ஐயர் மணமகன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். குடும்ப விவரத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் 616.



ரசிப்புகள் பல விதம்... ஆனால்...
அ...அ...அ!
ஆ...ஆ...ஆ!
இ...இ...இ..!
ஈ..ஈ..ஈ..ஈ...!
உ..உ..உ!
ஊ...ஊ...ஊ!
எ..எ...எ...!
ஏ...ஏ...ஏ..!
ஐ...ஐ...ஐ..!
ஒ...ஒ...ஒ..!
ஓ...ஓ...ஓ...ஓ..!
ஔ...ஔ...!
எல்லோரும் ஒரே விதமாய் ரசிப்பது
நரசுஸ் காபி!
ஜீவனுள்ள ஒரே காபி!
நரசுஸ்
"தெர்மலோ" காபி!
நரசுஸ்
காபி கம்பெனி
சேலம் 636 007.
கிளைகள்: தமிழ்நாடெங்கும்.
ADWAVE/NCC/2166

## 23

அந்தக் காட்சியை மேலும் பார்க்க விரும்பாமல் உடனே விலகி வந்துவிட்டாள். அதன் பின் அவள் திருப்பமில்லாமல் மாறி விட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும். ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள வித்தியாசங்கள் சட்டென அவளுக்குப் புலப்பட்டு விட்டது போல. ஆண் என்பவன் தாக்குபவன். பெண் தாங்குபவள். ஆண் குறுக்கிடுபவன். பெண் சகித்துக் கொள்பவள். ஆண் மேலே இருப்பவன். பெண் கீழ்நிலே.

அதன் அர்த்தமும் ஒருவாறு அவளுக்கு விளங்குவது போல்தான் தோன்றியது. இதில் ஏதோ எதிர்பார்ப்பும் பரபரப்பும் இன்பமும் வேதனையும் இழப்பும் சோகமும் தவிர்க்க முடியாத தன்மையும் இருப்பதாகத் தோன்றியது. மனித ஜாதியில் பெண் என்பவள் தாக்கப்படக் காத்திருக்கும் பேதை, அவள் ஒரு வகையில் தன் அத்தனையையும் இழப்பதை எதிர்பார்த்திருக்கிறாள். எவனோ வருவான், ஆக்கிரமிப்பான்!

சின்னுவுக்குக் கடந்த நாட்களுடன் இருந்த சங்கிலி ஒன்று வெட்டுப்பட்டுப் போய்விட்டது போலத்தான் ஆகிவிட்டது. அவள் அந்தச் சம்பவத்துக்குப் பின் இன்னும் மௌனமாகிவிட்டாள். குறிப்பாகத் தனக்கு என்ன நடக்கப் போகிறது என்பதைப் பற்றி அவளுக்குக் குழப்பமாகவே இருந்தது. அவளுக்கு முரட்டுத்தனமான விஷயங்கள் பிடிக்கவில்லே. முரட்டுத் துணியோ, கான்க்ரீட்டின் உரசலோ, கைப்பான சுவைகளோ காட்டமான மணங்களோ பிடிக்கவில்லே. மாறுக ஸாட்டின் சில்க், பூனைக் குட்டியின் முதுகு, மலரின் மிருது தன் உடலில் சில மென்மையான பாகங்கள் எல்லாம் பிடித்திருந்தது.

ஆண்கள் ரொம்ப முரட்டுத்தனமானவர்கள், மாமாவைப் போல தொடும்போதெல்லாம் வலிக்கும் தொடுகைக்காரர்கள் ஆண்கள் ஏதோ ஒரு விதத்தில் பெண்களே மிதிக்கக் காத்திருக்கிறார்கள். அது தேவையா இல்லையா அதிலிருந்து தப்பிக்கத்தான் முடியுமா தெரியவில்லே.

அவர்கள் எல்லோரும் கழுகுகள், வல்லூறுகள். டீச்சர் காட்டிய பொம்மைகள் அவளுக்கு ஞாபகம் வந்தன. அவர்கள் எல்லோருக்கும் தெரியும். பெண் என்பவள் யார், அவளுக்கு என்ன பொறுப்பு என்பதெல்லாம். ஆனால் யாரும் சொல்ல மாட்டார்கள். யாரும் அவளுக்குப் போதிக்கப் போவதில்லே. பத்திரிகைகளில் எல்லாம் பெண்கள் படம், டி. வி.யில் ஆண்கள் பெண்களே வாசனை பார்க்கிறார்கள். காதல் என்கிறார்கள். கை கோர்த்துக் கொள்கிறார்கள். ஓடிப் பிடித்துக் கொண்டு சூரிய ஒளியில் கரைகிறார்கள். எதற்கு? அன்று பார்த்த ஒரு காட்சிக்காகவா? அதுதான் லட்சியமா? அவ்வளவு அசிங்கமா? எல்லாமே எத்தனே வேஸ்ட்! என்று எண்ணிக்கொண்டாள்.

பரிட்சைக்குப் படிக்கும்போது அதன் ஆர்வத்தில் இதை யெல்லாம் மனத்தில் சற்றுத் தள்ளிப் போட்டு வைக்க முடிந்தது. அனுபமா அவளுடன் கூடப் படிக்கிறேன் என்று வருவாள். இருவரும் பயாலஜி படித்துக்கொண்டிருக்கும்போது சட்டென்று ஏதாவது ஒரு வார்த்தையில் பொதிந்துள்ள அர்த்தத்தில் அனுபமா சிரிப்பாள்.

''எதுக்குச் சிரிக்கிறே?''

''சும்மா சிரிக்கிறேன். பாஸ்கர் நன்னு படிப்பானு?''

''எனக்கு எப்படித் தெரியும்?''

''உனக்கு நோட்ஸ் எல்லாம் கொடுத்திருக்கானே?''

''அய்யோ பொய்யி! யார் சொன்னு? அவன் செக்ஷனே வேறே!''

''பாஸ்கர் கிட்ட கொஸ்சின் பேப்பர் எல்லாம் கிடைச்சிரும் தெரியுமோ? உனக்குக் கொண்டு வந்து காட்டினு எனக்குக் கொஞ்சம் சொல்லேன்.''

''ஏன் நீயே கேட்டுக்கோயேன்.''

''எனக்குத் தர மாட்டான். உன் கிட்டத்தான் அவனுக்கு...''

''என்னடி என்ன பேத்தறே?''



# எப்போதும் பெண்

சுஜாதா

''உங்கிட்டத்தான் அவனுக்குஒரு இதுன்னு சொல்ல வந்தேன்.''

''எது? சீ பேச்சைப் பாரு!''

''ஏய் சும்மா கதை அளக்காதே. பாஸ்கர் நீதான் அவன் கர்ள் ப்ரெண்டுன்னு ஊரெல்லாம் சொல்லி வச்சிருக்கான் தெரியுமோல்லியோ?''

''சீ! உனக்கு இதை விட்டா வேற வேலை இல்லை! பாடத்தைப் படிரி. இல்லேன்னு வீட்டுக்குப் போய்டு.''

''லீவு நாள்ல எங்கே போகப் போறே?''

''எங்கயும் இல்லை.''

''மைசூர் டிரிப் போகலை? அப்பா போங்கரு. அம்மாதான் போக வேண்டாங்கரு. பாய்ஸ் கூடப் போனா ரொம்ப ஜாலியா இருக்கும். ரொம்பக் கலாட்டாப் பண்ணுவா. பாட எல்லாம் சொல்லுவா.''

''நான் அங்கல்லாம் வரமாட்டேம்மா.''

படித்துக் கொண்டிருக்கும்போது, ''மாமி! சின்னு இருக்காளா?'' என்று குரல் கேட்டு மாடிப் படியில் ஓசை கேட்டு, பாஸ்கர் வந்தான். சின்னுவும் அனுபமாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு சிரித்துக்கொண்டார்கள். ''என்ன சின்னு எப்படி இருக்கே?''

சின்னு பதில் சொல்லவில்லை. ''பாஸ்கர் உனக்குகொஸ்சின்ஸ் எல்லாம் தெரியுமாமே'' என்றாள் அனுபமா.

''யார் சொன்னா சின்னுவா?''

''இல்லை'' என்று தலையாட்டினாள்.

''நான் போயிட்டு அப்புறம் வரேன்'' என்றான் பாஸ்கர். ''அம்மாவுக்கு கிரஸினுயில் வாங்கிண்டு வந்தேன். அப்படியே விசாரிச்சுட்டுப் போகலாம்னு பார்த்தேன். படிங்க சின்னு உன்னோட பிஸிக்ஸ் புஸ்தகம் திருப்பிக் கொண்டுந்துட்டேன். அலமாரில வெச்சிருக்கேன்''

அவன் போனதும் அனுபமா ''ஓஹோ அப்படியா சேதி? புஸ்தகம் எல்லாம் பரிமாறியாறது. எங்கிட்டச் சொல்ல மாட்டே இல்லையா?''

''அய்யோ எங்கம்மாகிட்டருந்து வாங்கிண்டு போயிருக்காண்டி. நான் ஒண்ணும் கொடுக்கலை.''

''அவன் எதுக்கு உங்கம்மாவை தாஜா பண்றான் தெரியுமா? உனக்காக! சின்னு நீ அழகா இருக்கே தெரியுமோல்லியோ?''

''ஏய் தத்துப்பித்துன்னு பேசினா இனிமே நீ கம்பைண்டு ஸ்டடிக்கு வரவேண்டாம்.''

''பரீட்சை பாஸ் பண்ணிட்டு நாம என்ன செய்யப் போறோம்?''

''காலேஜ் போகப் போறோம்.''

''காலேஜ்லே மூணு வருஷம். அதுக்கப்புறம் கல்யாணம்தானே? குழந்தை பெத்துக்கறதுதானே?''

''எல்லாரும் பின்ன என்ன பண்ரு? எல்லாரும் கல்யாணம்தான் பண்ணிக்கிரு.''

''அதுக்கு எதுக்குப் படிக்கணும்?''

''படிக்கல்லேன்னா கல்யாணம் ஆகாது. இப்பக் கல்யாணம் பண்ணிண்டு வேலைக்குப் போறவாளும் இருக்கா தெரியுமோல்லியோ?''

''நீ பார்த்திருக்கியோல்லியோ'' என்றாள் அனுபமா சட்டென்று.

''எதை?''

''அதைத்தான்.''



''இல்லே.''

''சத்தியமாச் சொல்லு. தலேல அடிச்சு சாமி சத்தியமான்னு சொல்லு.''

சின்னு, ''அதெல்லாம் எதுக்கு, பார்த்த தில்லே'' என்றாள்.

''ஏய் பார்த்திருக்கே! பாத்திருக்கே! நான் பார்த்தாச்சும்மா.''

''அய்யோ போடி! நீ வீட்டுக்குப் போ. நாளேக்குப் பரிட்சை. இன்னிக்குப் பேசற விஷயம் இதுதான் ஆப்ட்டுதா?''

''நாளேக்குப் பரிட்சை. அதுக்குப்புறம் நாளேன்னேக்கு? சரி நான் காப்பிதான் அடிக்கப் போறேம்மா. ஸ்லிப் எழுதி வச்சுண்டு!''

''அநியாயம். எல்லாத்திலேயும் அநியாயம்!''

அனுபமா போன பிறகு பாஸ்கர் திருப்பி கொண்டு வைத்திருந்த புத்தகத்தை எடுத்து பார்த்தாள். பாஸ்கர் எழுதியிருந்த கடிதம் இருந்தது. அதில்,

''என் பிரியமுள்ள சின்னுவுக்கு பாஸ்கர் எழுதும் மூன்ருவது கடிதம். சின்னு இது வரை என் கடிதம் எதற்கும் பதில் போடாமல் இருக்கிருய். உன் மௌனத்தின் அர்த்தமே எனக்குப் புரியவில்லே. ஏன்? நீ வெறுப்பதாக இருந்தாலும் பரவாயில்லே. என்னே நீ வெறுக்கிறேன் என்று பதில் போடு. நான் உன்னேயே எப்போதும் நினேத்துக் கொண்டிருக்கிறேன் உன் சகோதரர்களேக் கேட்டுப் பார். உன்னேத் தவிர வேறு எதுவும் பேச மாட்டேன். உன் வீட்டுக்குச் சேவை செய்வதைப் பாக்கியமாக நினேத்துக் கொண்டிருக்கிறேன். என்னேடு நீ பேசிய வார்த்தைகள் மொத்தம் பத்துக்கூட இருக்காது. லீவு நாட்களில் நான் மதுரை போக இருந்தேன். உனக்காக நான் போகவில்லே. நான் இந்த வருஷம் பெயிலானுல் உன்னேயே நினேத்து கொண்டிருப்பதுதான் காரணம். ஒரு குயர் நோட்டுப் பூராவும் உன் பெயரை எழுதி வைத்திருக்கிறேன். வேணுமென்ருல் காட்டுகிறேன். எனக்காக ஒரு தடவை பதில் எழுத மாட்டாயா? நீ என்னே உதாசீனப் படுத்தினுல் நான் இந்த வாழ்க்கையை விட்டு விடவும் தயார்! இப்படிக்கு ஏ. ஆர். பாஸ்கர் டென்த்-ஏ.''

அந்த மாதிரி கடிதம் வருவது ஒருவிதத்தில் அவளுக்கு உள்ளுக்குள் பெருமையாக இருந்தது. அனுபமாவுக்குக் கடிதம் வந்திருக்கிறதா என்று கேட்க வேண்டும். கடிதம் வருகிற அளவுக்கு நான் முக்கியத்துவம் ஆகிவிட்டேன். பாஸ்கரைப் பற்றி நினேத்துக்கொண்டு சிரித்துக் கொண்டாள். அவள் மனசில் அவளுக்காக வாய்த்தவன் பாஸ்கர் போலவே இல்லே. பாஸ்கரை விடப் பெரியவனுக, பெரிய வேலேயில், செங்கல் கலரில் டை எல்லாம் போட்டுக் கொண்டு இருந்தான் அவன் உள்ளூரில் இல்லே. வடக்கே எங்கோ இருந்தான். அவன் பையில் பர்ஸ் வைத்துக் கொண்டிருந்தான். அதில் நிறையப் பணம் வைத்திருந்தான். அவன் ஏரோப்ளேனில் போனுன். தொள தொள வென்று தங்கத்தில் செயின் போட்டுக் கடிகாரம் கட்டியிருந்தான். அவன் முகம்தான் அடிக்கடி ஜாடை மாறியது. ஒரு சமயம் சில நடிகர்கள் போலவும், கிரிக்கெட்காரர்கள் போலவும் விளம்பரத்தில் வருபவர்கள் போலவும் இருந்தான். தலேயெல்லாம் பாஸ்கர் மாதிரி கோழி கிராப் இல்லே. அவனிடம் வாசனேயாக இருந்தது. அவன் சின்னுவை ஏறிட்டுக் கூடப் பார்க்காமல் அப்பா அம்மாவுடன்தான் பேசுவான். அவன் பெயர் ரொம்ப நவீனமாக இருந்தது. ஆனுல் சரியாக இன்ன பேர் என்று சட்டென்று ஞாபகம் வரவில்லே.

ஆனுல் அது பாஸ்கர் இல்லே.

பாஸ்கரின் மூன்று கடிதங்களேயும் பத்திரமாக அலமாரி மேல் தட்டில் நியூஸ் பேப்பர் போட்டிருக்குமே அதற்கடியில்தான் மறைத்து வைத்திருந்தாள். ஒரு சமயம் திடீரென்று இதையெல்லாம் எதற்கு வைத்திருக்கிறேம் பைத்தியக்காரத்தனம். விஷயம் அவனுக்குத் தெரிந்து விட்டால்? என்று பயம் வந்தது. அதனுல் அம்மாவிடம் பாஸ்கர் லெட்டர் எழுதுவதைச் சொல்லிவிடுவதாகத் தீர்மானித்து விட்டாள்.

பரிட்சை முடியும்வரை அதை மறந்திருந்தாள். முடிந்த பின் பாஸ்கரின் நாலாம் கடிதத்தைக் கல்கண்டு இதழின் இடையில் செருகிக் கொடுத்தான். அதில் கொஞ்சம் தைரியமாக காதல் கீதல் எல்லாம் எழுதியிருந்தது. கவிதையிலிருந்துமேற்கோள் காட்டியிருந்தான்.

சின்னுவுக்கு அம்மா சாயங்காலம் தலே வாரிப் பின்னிக் கொண்டிருக்கும்போது ''அம்மா, பாஸ்கர் இருக்கான் பாரு'' என்று ஆரம்பித்தாள்.

''என்னடி பாஸ்கர் மதுரைக்குப் போகப் போருனும். அவன் இல்லாமல் எனக்கு கிரஸினுயில் யாரு வாங்கிண்டு வரப்போருன்னு தெரியலே.''

''பாஸ்கர் கொஞ்ச நாளா எனக்குக் கடுதாசி எழுதிண்டு இருக்காம்மா.''

அம்மா தலே வாருவதை நிறுத்திவிட்டாள். ''என்னடி?''

''கடுதாசிம்மா. நாலுக் கடுதாசி.''

''எங்கே கொண்டா பார்க்கலாம்.''

''அலமாரிலே வச்சிருக்கேன்.''

''எடுத்துண்டு வா.''

''தலேயைப் பின்னி முடியேன்.''

''அதெல்லாம் அப்புறம். முதல்ல அதைக் கொண்டு வா.''

அம்மா கண்ணுடியைக் கூட்டிலிருந்து எடுத்துத் துடைத்துக்கொண்டு அந்தக் கடிதங்களேத் தாழ்வாக வைத்துப் படித்தாள்.

''அய்யோ இரைஞ்சு படிக்காதேம்மா. அப்பா வாசல்லே இருக்கா.''

''முதல்ல உங்கப்பாவைக் கூப்பிடு.''

சின்னுவுக்கு பாஸ்கர் மேல் பாவமாக இருந்தது. (தொடரும்)

# இப்படியும் தைக்கலாமே!

- சரஸ்வதி சுந்தரேசன்

1. இந்த ஃப்ராகில் பட்டைத் துணி கீழிருந்து தோளின் மேலாக பின் பக்கம் செல்கிறது. இடுப்பிலும் டிசைனுள்ள பட்டைத் துணி இருக்கிறது. இந்த கவுன் நீலம் பச்சை அல்லது சிவப்பு துணியிலும் ஸ்ட்ராப்பில் வெள்ளை பட்டையில் நீலம், மஞ்சள், சிவப்பு போன்ற கலர்களில் புள்ளி இருக்க வேண்டும்.

2. இந்த டிசைன் ப்ராக் ப்ளெய்ன் துணியில் லைட் கலரில் (மஞ்சள், வெள்ளை, நீலம், சந்தனம் ரோஸ்) தைக்க வேண்டும். இடுப்பில் பெல்ட் 'வி' போன்று டிஸைன் செய்யப்பட்டிருக்கிறது. ப்ளீட்ஸ் டிசைன் கழுத்தில் 'போ' தோள்களின் இருபுறமும் அகலமான போட் அமைப்புள்ள காலரில் இணைக்கப்பட்டிருக்கிறது.

3. இந்த ப்ராக்கில் டிசைன் குறுக்கே வளைவாக வெட்டின ஸ்கர்ட்டும் இடுப்பிலும் வலது பக்கம் மேல் பாகத்தில் இரண்டு 'போ'வுமாக அமைந்திருக்கிறது. மேல் பாகம் ஒரே கலர்த் துணியிலும் பிறகு மார்பிலும் ஸ்கர்ட்டிலும் அந்தக் கலர் வரியுடைய ப்ரிண்ட்டட் துணியிலும் தைக்க வேண்டும்.

4. ப்ளைன் லைட் கலர் துணியில் இரண்டு பாகமாக ஸ்கர்ட்டும், ஷர்ட்டும் வைத்து காலரிலும் பாக்கெட்களிலும் கையால் அல்லது மிஷினல் எம்ப்ராய்டரி செய்ய வேண்டும். எம்ப்ராய்டரி செய்யும் கலரிலேயே அலங்காரமான பட்டன்கள் தைக்க வேண்டும்.


5. ஸபாரி ஸூட் போன்று வெட்டப்பட்டிருக்கும் இந்த ப்ராக்கில் பாக்கெட், காலர், இடுப்பு, ஸ்கர்ட்டின் கீழ் வரிகள் முதலியவை வெள்ளைத் துணியில் தைக்கப்பட்டிருக்கிறது. சிவப்பு அல்லது மஜந்தா கலரும் வெள்ளையும் அழகாக இருக்கும். வெள்ளைக் கலர் பட்டன்கள் தைக்க வேண்டும்.


(4)


(3)


(5)


(2)


(1)

## 24

பாஸ்கரை அப்பாவும் அம்மாவும் கூப்பிட்டு வாங்கு வாங்கு என்று வாங்கிவிட்டார்கள். ''உனக்கென்னடா வயசு? காதல் கடுதாசி எழுதுவியோ?''

''அவனோட என்ன பேச்சு. விளக்கு மாத்தாலே அடியுங்கோ.''

''இல்லே இல்லே. இவனை அப்பா அம்மா கிட்டச் சொல்லணும். ஸ்கூல் வாத்தியார் கிட்டச் சொல்லி உன்னை சஸ்பெண்ட் பண்ணச்சொல்றேன் பாரு.''

பாஸ்கர் எதுவும் பதில் சொல்லாமல் அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டே இருந்தான். அண்ணன்கள் எல்லாரும் சின்னுவை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். அவர்கள் சொந்த இலக்கணங்களுக்கு மீறிப் போன சமாசாரம் இது. இதில் எந்தக் கட்சியை எடுத்துக் கொள்வது என்பது அவர்களுக்குக் குழப்பமாகவே இருந்து. சின்னுவுக்கு ஒரு சமயம் பாஸ்கருக்கு நன்றாக வேணுமென்றும், ஒருசமயம் அவன் மேல் பாவமாகவும் இருந்தது.

அப்பா புஸ் புஸ் என்று பெருமூச்சு விட்டுக் கொண்டே பேசிவிட்டு, ''போடா உங்காத்தில வந்து பேசிக்கிறேன்'' என்றார். ''இப்பவே போயிடுங்கோ. இந்த தைரியம் மறுபடி உங்களுக்கு வராது.'' என்று அம்மா வற்புறுத்த அப்பா சட்டை போட்டுக்கொள்ள வந்தபோது ஓரமாகப் பயந்து நின்றுகொண்டிருந்த சின்னுவைப் பார்த்து அவள் மேல் பாய்ந்தார். ''உனக்கும் புத்தி கெட்டுத்தான் போச்சு. சதிர்காரி மாதிரி சிய்யுனு ட்ரெஸ் பண்ணிண்டு தெருவில நடந்தா கடுதாசி எழுதத்தான் செய்வான். அடக்கம் வேணும் சின்னு. அதை முதல்ல கத்துக்கோ.''

''அவ என்ன பண்ணா அவ ஒண்ணும் அந்த மாதிரி இல்லே. லெட்டர் கிடைச்ச உடனே கொண்டு காட்டிட்டா பாருங்கோ. அதில இருந்தே குழந்தைக்கு கல்மிஷம் ஏதும் இல்லேன்னு தெரியலையா? நீங்க அவ மேல பாயாதீங்கோ. முதல்ல அந்த துக்கிரிப் பையனைக் கண்டிக்கச் சொல்லுங்கோ அவா அப்பா அம்மா கிட்ட....''

சின்னு அழுவதைப் பார்த்து 'வாடி கண்ணு, நீ ஒண்ணும் செய்யலடிம்மா' என்று புடவைத் தலைப்பால் சின்னுவை மூடிக் கொண்டாள்.

''சீக்கிரம் இதுக்குக் கல்யாணத்தைப் பண்ணி அனுப்பிச்சுரணும். இதை வீட்ல வெச்சா இதுக்குன்னு வீட்டில ஒரு போஸ்ட் ஆபீஸ் திறக்கணும் போல இருக்கு'' என்று அப்பா துண்டைத் தோளில் போட்டுக் கொண்டு வேகமாகப் புறப்பட்டார்.

''அவாத்துக்குப் போகாது. தைரியம் கிடையாது. சின்னு, அந்தப் பையன் இவ்வளவு சொல்றமே, ஒரு முழி முழிக்கிறான் பார்றி. தான் பண்ணது அத்தனையும் சரிதான்கிற மாதிரி! எப்பவாவது கையைப் புடிச்சு இழுத்தானா?''

''இல்லேம்மா.''

''ஒத்தாசை பண்றேன், ஒத்தாசை பண்றேன்னு நம்மாத்தையே வளைய வந்துண்டிருந்தானே எனக்கு அப்பவே சந்தேகம் வந்தது.''

''பின்ன ஏன் அவனை உள்ள விட்டயாம்?''

''இந்த அரதல் மூணும் வீட்டுக் காரியம் ஒண்ணு செய்ய மாட்டேங்கறதே. உனக்கு கண்ணாடி பாத்துக்கறதுக்கே தேசாலம் சரியா இருக்கு. ஒண்டிக்காரி என்ன பண்ணுவேன். முதல்ல உனக்கு ஜாதகம் குறிச்சு வைக்கணும். எஸ். எல்ஸியோட கல்யாணத்தைப் பண்ணி முடிச்சரவேண்டியதுதான். யாரா லம்மா இருக்கு!''

''போம்மா!'' என்று அதட்டினாள்.

அப்புறம் அந்த விவகாரம் என்ன ஆச்சு என்று தெரியவில்லை. அப்பா நிஜமாகவே போய் அவர்கள் வீட்டில் சண்டைபோட்டதாகவும் அந்தப் பையன் விக்கி விக்கி அழுது மன்னிப்புக் கேட்டுக்கொண்டதாக



# எப்போதும் பெண்

சுஜாதா

சொன்னுர். அம்மா 'எல்லாம் பொய். அந்த தைரியம் அவருக்குக் கிடையாது. பொடிக் கடைக்குப் போய்விட்டுக் கொஞ்ச நேரம் உட்கார்ந்து கொண்டிருந்து விட்டு வந்திருப் பார்' என்ருள். ஒரு நாள்அந்த மாமியைக் கோவிலில் பார்த்தால் பளிச்சென்று கேட்டு விடப் போவதாகச் சொன்னுள். பாஸ்கர் வீட்டுக்கு வரவே இல்லே. அது ஒரு விதத்தில் சின்னுவுக்குக் குறையாகத்தான் இருந்தது. பாஸ்கர் மேல் நிறையப் பச்சாதாபம் ஏற் பட்டது. ஒரு முறை மதுவிடம் உன் தங்கை இப்படிப் பண்ணிட்டா பார்த்தியா என்று வருத்தப்பட்டுச் சொன்னுனும். ''இருந் தாலும் அவள் மேல் எனக்குக்கோபமில்லேனு சொல்லு.. பாஸ்கர் ரொம்ப இளேச்சுப் போயிட்டான் சின்னு. சிகரெட் நிறையப் பிடிக்கிருன். உதடெல்லாம் கறுப்பா இருக்கு. பரிட்சையில் குண்டடிச்சுருவான் போல இருக்கு. எல்லாம் உன்னுலதான். சைக் கிளேத் தொடாமல் தூசு படிஞ்சிருக்கு. சினிமா போறதில்லே. திருப்புகழ் பஜனேயில நெத்தி பூரா குங்குமமும் விபூதியுமா உக் காந்து கைத்தல நிறைகனி அப்பமொடவல் பொரின்னு பாடிண்டிருக்கான். கொஞ்ச நாள்ல பைத்தியம் பிடிச்சுரும் போலத்தான் தோணுறது.''

சின்னுவுக்கு ரொம்ப வருத்தமாக இருந் தது. ஒரு முறை அம்மாவிடம் பாஸ்கரின் பேச்சை எடுத்துப் பார்த்து வாங்கிக் கட்டிக் கொண்டாள். சின்னுவின் சுதந்திரமும் படிப் படியாகக் குறைக்கப்பட்டு வெளியே அவளே தனியாக அனுப்ப மறுத்தாள். அவசிய மிருந்தால் யாராவது அண்ணன் ஒருத்த ஞுடன்தான் அனுப்புவாள். சாரதா கலா லயத்தில் சாயங்காலம் பாட்டு சொல்லிக் கொள்ளப் பெண்களுக்கு மட்டும் தனி [illegible]பு ரெண்டு அண்ணன் வருவார்கள். மோகன வர்ணம் எல்லாருடனும் சேர்ந்து பாடும் போது நன்ருகவே இருந்தது. வீட்டில் தனி யாகப் பாடினுல் சிரிப்பு வந்தது.

''அம்மா எனக்குப் பாட்டு வரலேம்மா'' என்று சொல்லியும் ''சீ. வாயை மூடு என்ன அழகாப் பாடறே!''

''எதுக்கம்மா பாட்டு, டைப்ரைட்டிங் சொல்லிக்கிறேனே!''

''டைப் வேண்டாம். அது ரொம்ப ரௌடி பள்ளிக்கூடம். அங்கெல்லாம் போகக் கூடாது. சாயங்காலம் கதவைப் பாதியாச் சாத்தி வெச்சுண்டு பட்டை சாராயம் அடிக்கிருங்க. உனக்குப் பாட்டுப் போரும். நாளேக்கு உன்னேப் பெண் பார்க்க வந்தா 'குழந்தை ஒரு பாட்டுப் பாடுன்னு' சொன்னு முழிக்கணுமா? ரெண்டு வர்ணம், ரெண்டு கீர்த்தனமாவது தெரிஞ்சிருக்க வேண்டாமா நலங்குக்கு, பண்டிகைக்கு நவராத்திரிக்குப் பாடச் சொன்னு பளிச்சுன்னு பாடறதுக்கு? தைய மிஷின் ஒண்ணு இன்ஸ்டால்மெண்ட்ல வாங்கச் சொல்லியிருக்கேன். எங்க ஆபீஸ் லயும் கிடைக்கும். அது வாங் கினப்புறம் ஜானகி மாமி இருக் காளே, வீணுப் போயிட் டாளே, அவகிட்ட எம்ராய் டரி, ரவிக்கை தைக்கிறது எல் லாம் பழகிக்கலாம். போது போகலேன்னு சௌந்தரிய லஹரி, லட்சுமி ஸ்தோத்ரம் எல்லாம் கத்துக்கலாம்.''

அம்மாவின் மதிப்பில் இது தான் ஒரு பெண்ணின்கற்புள்ள தேவைகளேப் பூர்த்தி செய்



## ஹோம சிகிச்சை

ஹோமியோபதி என்று கேள்விப் பட்டிருப்பீர்கள். ஆனால், ஹோமதெரபி பற்றித்தெரியுமா?

காலையும், மாலையும் அக்னி வளர்த்து, ஹோமம் செய்வதால் என்னென்ன உடல் நல அபிவிருத்தியை அடையலாம் என்றுபெர்ரி ரத்னர் என்ற ஒரு அமெரிக்கமனோ தத்துவ நிபுணர் பூனா பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி செய்து வருகிறார்.

அரை கோபுர வடிவ செப்புப் பேழையினுள், பசுஞ் சாணி வரட்டியும், முள் இல்லாத, கசப்பான, காய் இல்லாத மரங்களிலிருந்து குச்சிகளையும் வைத்து நல்ல நெய் விட்டு, தீமூட்டி, இரண்டு நுனி விரல்களால் அரிசியைஅதில் 'ஆஹூதி' செய்து, சில மந்திரங்களை உச்சாடனம் செய்து, விடியற்காலமும், சந்தியா காலமும் செய்யும் பூஜைதான் அக்னி ஹோத்திரம்.

மகாராஷ்டிரத்தில் ஷோலாப்பூரில் உள்ள ஒரு குழந்தைகள் இல்லத்தில் இவர் இப்படி அக்னி ஹோத்திர ஆராய்ச்சி செய்து, புத்தி வளர்ச்சி குன்றிய குழந்தைகளின் 'ஐக்யூ' அதிகமாகிறது. காக்காய் வலிப்பு நோய் குணமடைகிறது என்று ஆதாரபூர்வமாகக் கூறுகிறார். ஹோமம் மனதில் டென்ஷனைக் குறைத்து அமைதியை உண்டாக்குகிறதாம், ஹோமம் செய்யப்பட்ட அறையில் உடனே மின் அணுக் கிருமிகளின் எண்ணிக்கை 91 சதவிகிதம் குறைந்து விடுகிறதாம்.

மேற்கு ஜெர்மனியிலும், விஞ்ஞானிகள் இதைப் பற்றி ஆராய்ச்சி செய்து ஹோமப் புகை ஜலதோஷம் தலைவலி, ஆராத புண், ஆஸ்துமா, அலர்ஜி வயிற்றுப் போக்கு, சேற்றுப் புண் தசைநார் வலி, டான்ஸிலைடிஸ் முதலிய பல்வேறு நோய்களைக் குணப்படுத்த வல்லது என்று கண்டு பிடித்திருக்கிறார்கள்.

—ஆதாரம்: டெக்கான் ஹெரால்ட்
திருமதி ஜெயா வி. ராமன்

கிறதுபோல. பெண் சம்பந்தமான அவஸ்தைகளைப் பற்றி அதிகமாகச் சொல்ல மாட்டாள். தேவைக்கு மேல் எதுவும் பேசமாட்டாள். பேசினல் கூட மறைமுகமாகத்தான் இருக்கும். சின்னுவுக்கு இந்த நாட்கள் பிடிக்கவே இல்லை. சினிமாப் பார்த்தால் காட்டு மிருகங்கள் அடங்கிய குழந்தைப் படங்கள்தான் போக வேண்டும். ரேடியோ போட்டால் அதில் காதல் பாட்டெல்லாம் கேட்கக்கூடாது கிராம நிகழ்ச்சி, நியூஸ், நாடகம், பாப்பா மலர் இப்படித்தான் கேட்க வேண்டும். இவ்வளவு இருந்தும் அனுபமா மூலம் அவளுக்கு வெளியுலகச் செய்திகள் கிடைத்துக் கொண்டுதான் இருந்தன. அனுபமா கம்பைன் ஸ்டடிக்கு வருவாள். அரை மணிதான் படிப்பு. அரை மணி தாழ்ந்த குரலில் என்ன என்னவோ பேச்சு. இது தப்பு என்று தெரிந்தும், பிடித்தமான பேச்சு. 'எதுத்தாத்திலே இருக்கான் பாரு, வாசத் திண்ணையை விட்டு நகர மாட்டான். எப்ப நிமிந்தாலும் என்னையே பார்த்துக்கிட்டு இருப்பான். கூழாங்கல் வெச்சு சன்னல் வழியா தைரியமா காயிதம் அனுப்புவான். சுன்னு பின்னுன்னு எழுதியிருக்கும்....''

''உங்க அம்மா கிட்டச் சொல்லலியா?''

''சே, இதைப் போய் அம்மா கிட்டச் சொல்லிண்டு... எங்க அக்கா ஒரு ஆல்பமே வெச்சிருக்கா. அவளுக்கு வந்த மாதிரி எனக்கு அத்தனை கடுதாசி வரலைம்மா. அவ கல்யாணம் ஆறதுக்கு முன்னுடி ஒரு ஆட்டம் ஆடியிருக்கா பாரு. சுவத்தில எல்லாம் பேர் எழுதி என்ன என்னவோ அட்டகாசம் நடந்திருக்கு. ஒரு தடவை ரேடியோ ஸ்டேஷன்ல டிராமான்னு, போயிட்டு கார்த்தாலேதான் திரும்பி வந்தா. அவளோட கம்பேர் பண்ணு நாமெல்லாம் ரொம்ப ரொம்ப சாதா.''

''எதுக்காகடி இப்படி பாய்ஸ் அலையறாங்க?''

''தெரியாத மாதிரி கேக்கறியே... இதுக்காகத்தான்.''

''சீ போ.''

''ஏண்டி உங்கம்மா உன்னை இப்படி அடக்கி வச்சிருக்கா?''

''என்னவோ போ. ஒண்ணும் பிடிக்கலை அனு.''

''சினிமா பார்த்தா என்ன?''

''சினிமாவை விடு. மஞ்சரியைத் தவிர பாக்கி ஒண்ணும் படிக்கக் கூடாதுங்கறா.''

''உனக்கு லீவிலே கல்யாணம் பண்ணி வெக்கப் போறாளா?''

''சேச்சே யார் சொன்னா? நான் காலேஜ் படிக்கப் போறேன்.''

''அப்படித்தாம்மா பேசிண்டா. இப்பல்லாம் இருபது இருபத்திரண்டுக்குக் குறைஞ்சு யாரும் கல்யாணமே பண்ணிக்கிறதில்லை. அக்காவுக்கு இருவத்தி நாலிலேதான் கல்யாணம் ஆச்சு. அதுக்குள்ள எல்லாத்தையும் பார்த்துட்டா.''

''உனக்கெப்படித் தெரியும்?''




ULKA-L-1-83 Tam




AGENTS WANTED FOR SRILANKA ALSO

''நான்தானே தூது! சின்னு'' என்று பாவாடைக்குள்ளிருந்து ஒரு அட்டை இல்லாத புஸ்தகத்தைக் கொடுத்தாள். ''படிச்சுட்டு சாயங்காலத்துக்குள்ள குடுத்துரு?''

''என்னடி புஸ்தகம் இது?''

''படிச்சுத்தான் பாரேன்.''

சின்னு அதைப் பிரித்தாள். ஓட்டல் அறையில் என்னை அவன் கொண்டு சென்றதும் அங்கிருந்த நுரை மெத்தையில் என்னைப் படுக்கவைத்து....விலாவாரியாக விவரித்தது சுவாரஸ்யமாக அந்தப்புத்தகம்.

சின்னுவுக்குக் கன்னத்தில் ரத்தம் பாய்ந்தது. ''இப்படி எல்லாம் கூட புஸ்தகம் இருக்கா?''

''அய்யோ இதை விட மோசமா படம் எல்லாம் போட்டது இருக்கு. முதல்ல இதில ஆரம்பி சின்னு!''

சின்னுவுக்குப் படிப்பு என்பது அவள் அண்ணன்களுக்கு எத்தனை முக்கியமோ அத்தனை முக்கியமில்லை போலத் தோன்றியது. வீட்டில் நடைபெறும் எல்லாமே ஒரு நாள் அவளுக்குக் கணவன் கிடைக்கப் போகிறான் என்பதையே சுற்றிச் சுழல்வதாகப் பட்டது. பாட்டு ஸ்லோகம், தையல் கிளாஸ் எல்லாமே அவளுக்குக் கல்யாணம் ஏற்பாடானல் கைவிடப்பட்டு விடும் என்று தோன்றியது.

''சின்னு நீ படிச்சு படிச்சப்புறம் என்னம்மா செய்யப் போறே'' என்று அப்பா அவள் அண்ணன்களைக் கேட்கிறாப் போல் கேட்பதே இல்லை. கணவன் ஒரு நாள் கிடைக்கப் போறான் என்பது மட்டும் திரும்பத் திரும்ப அவளுக்கு வலியுறுத்தப்பட்டது.

பையன்கள் எல்லோரும் படிப்பது மட்டும் இல்லாமல் இன்னும் என்ன என்னவோ எல்லாம் செய்கிறார்கள். கவிதை எழுதுகிறார்கள். கையெழுத்துப் பத்திரிகை நடத்துகிறார்கள். மலை மேல் ஏறுவதற்கு எக்ஸ்கர்ஷன் போகிறார்கள். டெஸ்ட் மாட்ச் போகிறார்கள். பெண்களுக்கு மட்டும் ஏன் இப்படி? எப்பப் பார்த்தாலும் நீ என்ன பவுடர் நான் என்ன பவுடர், இவளுக்குக் கல்யாணம் ஆயிடுத்து, அவளுக்கு நிச்சயம் ஆயிடுத்து, இவ பிள்ளை பெற வந்திருக்கா அவ பிள்ளை பெத்தாச்சு. இதைத் தவிர வேறு ஏதும் பேச மாட்டார்களா? ஒரு கணவன் கிடைக்கிறான் என்றால் ஒரு பெண் தன் சகலத்தையும் விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும். பாடிக் கொண்டிருப்பவள் பாட்டை நிறுத்தி விடலாம். ஆடிக் கொண்டிருப்பவள் ஆட்டத்தை. வேலைக்குச் செல்பவள் வேலையை; பாட்டு, ஆட்டம், வேலை எல்லாம் கணவன் வரும் வரை செய்து கொண்டிருக்கும் தாற்காலிக ஈடுபாடுகள். இதெல்லாம் சேர்ந்து சதி செய்து ஒரு பெண்ணுக்கு உண்டான ஆசைகளை மிகவும் கட்டுப்படுத்தி விடுகிறது. பொருளாதார ரீதியில் ஆணும் பெண்ணும் சமமாக இல்லாதவரையில் பெண்ணுக்கு இந்த இரண்டாம் பட்ச இடம்தான் என்பதை சின்னுவால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. ஆனல் அந்த இரண்டாம்பட்ச இடத்திற்கு அவளைச் சுற்றுப்பட்டவர்கள் தயாரித்துக் கொண்டிருப்பதை உணர்ந்து-கொள்ள முடிந்தது. ஏதோ ஒரு விதியை நோக்கி அவள் தவிர்க்க முடியாமல் சென்று கொண்டிருப்பதாகத் தோன்றியது. பையன்களுக்கு ஆண் பெண் உறவு பற்றி இருக்கும் ஆரோக்கியமான ஆர்வம் இல்லாமல் இதுவே ஒரு புதிராக, தெரிந்தும் தெரியாத மர்மமாக, பயமாகத்தான் இருந்தது.

இந்த அரை குறை நிலையில்தான் அவளுக்கு அந்த முதல் அனுபவம் ஏற்பட்டது.

(தொடரும்)

---

சமையல் செய்யும் பாத்திரங்கள் தேய்ப்பதற்குச் சிறிது நேரமானல் காய்ந்து போகின்றன. அதற்கு நிறையத் தண்ணீர் கொட்டி ஊற வைத்தால்தான் மறுபடியும் தேய்ப்பதற்கு ஈஸியாக இருக்கும் தண்ணீர் கிடைக்காத இக்காலத்தில்?

எல்லா பாத்திரத்திலும் சிறிது சிறிது தண்ணீர் விட்டு அலம்பி கவிழ்த்து வைத்து விட்டால் எத்தனை நேரமானலும் காய்ந்து வற வற வென்று ஆகாமல் தேய்க்க ஈஸியாகஇருப்பதைஉணர்வீர்கள்.

ஹேமா ராகவன்

---


ஃபிரிட்ஜ் இல்லாத வீடுகளில் மோர் சீக்கிரமாகவே புளித்து விடும். அதற்கு இதோ ஒரு வழி. மீதியிருக்கும் மோரில் நிறையத் தண்ணீர் விட்டு (சுமார் இரண்டு டம்ளர்) வைக்கவும். நான்கு மணி நேரம் கழித்து அது நன்றாகத் தெளிந்திருக்கும். தெளிந்த நீரை இறுத்து விட்டால் மோரில் புளிப்பே இருக்காது. தெளிந்த நீரில் பித்தளைப் பாத்திரங்களை ஊறவைத்துத் தேய்த்தால் நன்ருக வெளுக்கும்.

—கற்பகம் கிருஷ்ணன்

பள்ளியிலிருந்து திரும்பி வரும்போதே களைப்போ, களைப்பு...

# ஆனால் க்ளோக்கீன்-டி சக்தியினால்... இதோ இப்போது பாருங்களேன்!






புதிய மேம்பட்ட க்ளோக்கீன்-டி, நாளும் பொழுதும், அவனைக் குன்றாத தெம்புடன் திகழச் செய்கிறது. க்ளூகோஸ், கால்சியம் பாஸ்பேட் மற்றும் வைட்டமின்-டி. செறிந்த க்ளோக்கீன்-டி, இப்போது இன்னும் விரைவில் கரைகிறது. மேலும் கவர்ச்சியான புதிய உறையில் கிடைக்கிறது.

என்றும் க்ளோக்கீன்-டி பழக்கம் நன்று!

**புதிய மேம்பட்ட க்ளோக்கீன்-டி**
**நாளும் பொழுதும் தெம்பூட்டும் சக்தி!**

ULKA-GD-1-83 TAM

# எப்போதும் பெண்

சுஜாதா

25

அப்பா அம்மா அண்ணன்மார்கள் எல்லோருடனும் சின்னு ஒரு கல்யாணத்துக்குப் போயிருந்தாள். த்ரீடயரில் போகும்போதே ரொம்ப உற்சாகமாக இருந்தது. அதிகாலை ரயில் மாறி புதிய புதிய ஸ்டேஷன்களில் ரயில் நிற்கும்போதெல்லாம் அந்தப் பிரதேசத்து இளைஞர்கள் வேண்டுமென்றே சன்னல் அருகில் நிற்பதும், தலையைத் தலையைக் கலைத்துக் கொள்வதுமாக, அவள் பார்க்கிறாள் என்று ஸ்டைலாக மோஷனில் ஏறுவதும், அந்தக் கணத்தில் தான்தான் ராணி என்று அவளுக்கு அடிக்கடி பெருமிதம் கலந்த பரபரப்புக் கொடுத்தது. கல்யாணம் என்றால் பட்டுப் புடவை உடுத்திக் கொள்ளலாம், மருதோன்றி இட்டுக் கொள்ளலாம் நகைகள் போட்டுக் கொள்ளலாம். ரிஸப்ஷனில் அலங்காரமாக நிற்கலாம் புதுசு புதுசாக மனிதர்களைப் பார்க்கலாம் என்றெல்லாம் பிரமிப்பாக இருந்தது.

பாதி நகரம், பாதி கிராமமாக இருந்த இடத்தில் தெருவை அடைத்துப் பந்தல் போட்டு பெரிசாக பண்ணையார் கல்யாணம் போல இருந்தது. வீட்டு வாசலில் நெடுக கம்பிக் கேட்டு, ஊஞ்சல். திண்ணையில் நெல் மூட்டைகள். உள்ளே பழங் காலத்துப் படங்கள். கல்யாணத்துக்கு வந்திருந்த சம வயதுப் பெண்கள் அவளுடன் உடனே சிநேகமாகி விட்டார்கள். அவர்களுடன் அங்கும் இங்கும் சுதந்திரமாக ஓடினாள். நிறையப் பையன்கள் வந்திருந்தார்கள். அவர்கள் இந்தப் பெண்களுடன் உற்சாகமாகச் சீண்டி விளையாடினார்கள். இவளும் கொஞ்சம் கொஞ்சம் தைரியம் பெற்று அவர்களுடன் பேசிப் பார்த்தாள். சிவப்பாக இருந்தவன் ஒருத்தன் நீ என்ன கிளாஸ் படிக்கிறே என்றும், பரீட்சை எப்படிச் செய்தாய் என்றும் கேட்டான். விகடன் பத்திரிகையிலிருந்து ஜோக்கெல்லாம் எடுத்துச் சொன்னான். அதற்கு அவள் மிகையாகச் சிரித்தாள். ராத்திரி படுத்துக் கொள்ளும்போது தலையணைச் சண்டை போட்டார்கள். அடிக்கடி அந்தப் பையன் அவளைக் கிள்ளிவிட்டு திரும்பிப் பார்த்தால் ஒன்றுமே நடக்கவில்லை போல் பாசாங்கு பண்ணினான். மாடியில் ஊஞ்சலில் ரெயில் விளையாட்டு என்று எல்லோருக்கும் கொடுத்தான். இவளுக்கு நிறையத் தூரம் போகும்படி டிக்கட் கொடுத்து இவளுடன் சற்று நேரம் தனியாக ஊஞ்சலாடினான் டிக்கட் கொடுக்கும்போது வேண்டுமென்றே கையில் பட்டான். சாயங்காலம் மாப்பிள்ளை அழைப்புக்கு எல்லோரும் ஜோடித்துக்கொள்வதற்கு முன் புல் புல் தாராவை வைத்துக் கொண்டு டிங் டிங் என்று பூனை மாதிரி சப்தம் பண்ணினான். பிரபல நடிகர்கள் மாதிரி நடித்துக் காட்டினான்.

அவனுடன் பழகுவது சின்னுவுக்கு வேடிக்கையாக இருந்தது. கல்யாணம் தீர்ந்து போகப் போகிறதே என்று கவலையாக இருந்தது. கல்யாணத்தில் பல விதமான சந்தர்ப்பங்கள் கிடைப்பதைக் கவனித்தாள். 'சின்னு சந்தனப் பேலா எங்கே? சின்னு, சர்த்துக்குடி எங்கே?' என்று பிஸியாக இருப்பவன் போல் பேலாவையும் பழங்களையும் வாங்கும்போதெல்லாம் ஒரு மாதிரியாகப் பார்த்து கையைப் பிடித்து சின்னுவுக்குத் தப்பாகத் தோன்றினாலும் மறுக்கும் இச்சை ஏற்படவில்லை.

அவன் உதடுகள் ரோஜா நிறத்தில் இருந்தன. விலை உயர்ந்த வாட்ச் கட்டியிருந்தான். அவனிடம் விவரிக்க முடியாத ஒரு நளினம் இருந்தது. மாப்பிள்ளை வீட்டார் தங்கியிருந்த இடம் தெருக் கோடியில் இருந்தது. அங்கே போய் ஒரு எவர்சில்வர் குடத்தை எடுத்து வருமாறு சின்னுவுக்கு ஆணையிடப் பட்டிருந்தது. அங்கே போனால் வீடே வெறிச்சென்றிருந்தது. எல்லோரும் கோவிலுக்குப் போய் விட்டார்களாம். ''என்ன குடம்தானே, மாடியில் இருக்கு'' என்றான். அவன் எங்கே வந்தான்?

மேலே போகும்போது ''என்னையும் கொண்டு வரச்சொன்னா'' என்றான். மாடியில் குடம் இருந்தது. எடுத்துக் கொண்டுவந்தவளை வழி மறித்தான். சின்னுவுக்கு ஒரு கணம் சகலமும் ஸ்தம்பித்துப் போய் விட்டது. அவளிடமிருந்து குடத்தை வாங்கி வைத்தான். தயங்கினாள். இடுப்பைச் சுற்றிக் கையை வைத்தான். மற்றொரு கையால் தோளை அணைத்து சின்னு எதுவும் செய்வதற்கு முன் ஒரு அமெச்சூர் முத்தம் கொடுத்தான்.

''தப்பா நெனைச்சுக்காதே, தப்பா நினைச்சுக்காதே'' என்றான். ''உன் மேலே காதல். உன்னை நான் இப்பவே கல்யாணம் பண்ணிக்கத் தயார்'' என்று தத்துப் பித்து என்று ஏதோ சொன்னான். மாடியில் ஜமக்காளத்தின் மேல் சின்னுவைப் படுக்க வைத்தான். இடுப்பில் தொட்டுப் பார்த்தான். அவனுக்கு நிறைய வியர்த்திருந்தது. சின்னுவின் கையைப் பிடித்து எங்கேயோ கொண்டு சென்றான். சின்னுவுக்கு உடம்பு பூரா மயிர்க் கால்கள் நின்று கொள்ள ''வேண்டாம் வேண்டாம் கொஞ்சாதே கொஞ்சாதே!'' என்று சொன்னாள். அதற்கு மேல் அவளுக்குப் பேச வரவில்லை. சின்னுவின் மனதுக்கு நடப்பது மகா தப்பு என்று தோன்றியது. அழுகை வந்தது. அவன் கனம் மூச்சு முட்டியது. ''யாரோ வரா'' என்று அலறினாள். அவன் சட்டென்று எழுந்து விட்டான். சின்னு உடனே வாரிச் சுருட்டிக் கொண்டு ஓடி வந்து விட்டாள்.

அப்புறம் அவனை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. முதலில் பயமாக இருந்தது அவளுக்கு. ஆண் பிள்ளைகள் பட்டாலே பாப்பா வந்துவிடும் என்கிறதில் நம்பிக்கை பாக்கி இருந்தது. என்னதான் பயாலஜி படித்தாலும் ஸ்பரிசத்தில் ஏதோ தொற்றிக் கொள்ளும் என்றுதான் நினைத்தாள். இவன் தன்னை எங்கெல்லாமோ தொட்டுவிட்டான். ஜூரம் போல இருந்தது. தன் எதிர் காலக் கணவனுக்காக வைத்திருந்த எதையோ இழந்து விட்டோம் என்ற குற்ற உணர்ச்சி ஏற்பட்டது. இருந்தாலும் அந்தச் சம்பவம் ஒரு மயக்க நிலை வரை அவளைக் கலக்கி விட்டது. அந்த ஒருசில நிமிஷத்தில் எச்சரிக்கை யெல்லாம் எங்கே போயிற்று என்று விசனப்பட்டாள். பயத்தில் குளியலறைக்குச் சென்று தன்னை முழுவதும் பார்த்துக்கொண்டாள். எதுவும் நடக்கவில்லை. இருந்தாலும் தன்னை எந்த விதத்திலோ அலம்பிக்கொள்ள வேண்டும் போல் உணர்ந்தாள். தண்ணீரால் அல்ல.

சின்னுவுக்கு எப்படியோ தான் களங்கப்பட்டு விட்டோம். பெண்ணுக்குத் தன் உடம்பைத் தவிர தனது சொந்தம் என்று சொல்லக் கூடிய வேறு என்ன இருக்கிறது? அது ஏதோ ஒரு பொக்கிஷம் போலத்தான் போற்றி வந்திருக்கிறாள். சே. இத்தனை சுலபத்தில் வீழ்ந்து விட்டோமோ என்று வருத்தமாக இருந்தது. தனக்குத் தெரிந்த அம்பாளை யெல்லாம் மனசுக்குள் கூப்பிட்டு எனக்கு ஒண்ணும் ஆயிடலைதானே என்று கேட்டுக் கொண்டாள். நடந்ததில் கொஞ்சம் சந்தோஷம் இருந்தாலும் அவமானமும் இருந்தது. ஒரு கணம், ஒரு கணம்தான் அவள் வீழ்த்தப்பட்டாள்.

பெண் என்பவளை இந்த வீழ்ச்சி ஸ்தானத்தில்தான் படுக்க வைக்கிறார்கள். ஆண் எப்போதும் மேல். பெண் எப்போதும் தீனமானவள். அவள் எப்போதும் செயப்படுவினை



அவள் தொடப்படுகிருள். தடவிக் கொடுக் கப்படுகிருள். ஆண் எப்போதும் செய்வினைக் காரன்.

சின்னுவுக்கு ஒத்த வயதுப் பெண்களைப் போலத் தன்னுடைய அந்தரங்கங்களைப் பற்றிய குழப்பங்கள் இன்னும் தீரவில்லைதான். ஒரு ஆணுக்கு அந்த விதத்தில் குழப்பம் இருக்காது என்றுதான் தோன்றியது. அவனுடைய அந்தரங்கத்துக்கு ஒரு தனிப்பட்ட அடையாளம், வடிவம் இருக்கும்போது, பெண்ணுக்கு இது எதற்கு என்பதே சரியாகத் தெரியவில்லை. அதனுல் அதனுடன் ஏற்படும் மாதாந்திர அவஸ்தைகள், சின்னச் சின்ன அபாயங்கள், ஒரு ஆணுல் தன் அந்தரங்கத்துடன் தன்னை அடையாளம் கண்டுகொள்ள முடிவது போல பெண்ணுக்கு முடிவதில்லை. எனவே அதன் விருப்பங்களை அவள் விருப்பங்களாக நினைத்துக் கொள்வதில் சிரமம் இருக்கிறது. ஒரு ஆணைப் போல் தன்னுடைய செயல் பாடுகளை இஷ்டத்துக்குக் கட்டுப்படுத்த முடிவதில்லை. ஆணுக்குக் குழந்தை பெறுவதைப் பற்றிய பயமில்லை. அதில் இருக்கும் அபார அபாயமே

> என்ளுப் புண்ணுக்கைத் தூள் செய்து நெருப்பில் போட்டு வீடு முழுதும் புகை காட்டினுல் மூட்டைப் பூச்சிகள் வெளியேறி விடும்.
>
> -தியாகராசன்

அதிலிருக்கும் கொஞ்ச நஞ்ச எதிர்பார்ப்பையும் சந்தோஷத்தையும் கெடுத்து விடுகிறது.

என்ன ஆகியிருக்குமோ என்கிற அச்சம் அந்தப் பையன் மேல் அபரிமிதமான வெறுப்பாக மாறியது. ஒரு முறை அந்தப் பையன் அவளருகில் வந்து எதோ பேச முயன்ற போது, 'போடா போ, என்கூடப் பேசவே பேசாதே' என்று எரிந்து விழுந்தாள். இருந்தாலும் உடம்பின் பதற்றத்தினுல் சந்தோஷம் கொஞ்சம் இருந்ததை அவளால் நிராகரிக்க முடியவில்லை.

ஒன்றும் ஆகாதுதான். கொஞ்சம் கொஞ்சம் தொட்டதைத் தவிர வேறு என்ன நடந்து போச்சு? கல்யாணத்துக்குப் போய் விட்டு வந்த பத்துப் பதினைந்து நாள் வரைக்கும் ரொம்பப் பயந்தாள்.

நல்லவேளை. அவளுடைய பீரியட் வந்ததும் ஒரு விதத்தில் அந்தக் கவலை ஓய்ந்து விட்டது. இருந்தும் சின்னு ரொம்ப மாறி விட்டாள். அவளுக்கு ஆண்கள் மீது பயம் வந்து விட்டது. யாராவது ஆண் பிள்ளை வந்து விட்டால் உடனே ரூமுக்குள் போய் கதவைச் சாத்திக் கொண்டு விடுவாள். சன்னல் வழியாக ஆண் பிள்ளைகள் யாராவது கதவைத் தட்டுவதைப் பார்த்தால் பால் காரனுக இருந்தாலும் சரி, உடனே அவள் முகத்தில் தன்னை அறியாமல் ஒரு அச்சம் தெரிவதை அம்மா கூடப் பார்த்து ''என்னடி திடீர்னு கிலி பிடிச்சாப்பல ஆயிட்டே'' என்ருள்.

''அவன் என்னைப் பார்க்கிறும்மா!''

''ரங்கசாமியா! அவனுக்கு உன் வயசில ஒரு பேத்தி இருக்கா. தெரியுமோ?'' என்று அம்மா சிரித்தாள்.

கோ-எஜுகேஷன் காலேஜில் சேர மாட்டேன் என்று சொல்லி விட்டாள். பஸ்ஸில் போகும்போது பெண்கள் சீட் காலியில்லை என்ருல் அடுத்த ஸ்டாண்டில் இறங்கிக் கொண்டு விடுவாள். எதைப் பற்றிப் பயப்படுகிறோம் என்று தெரியாமலேயே அவளுக்கு ஏற்பட்ட ஒரே ஒரு அனுபவத்தால், ஒரே ஒரு உரசலால் சகலத்தையும் இழந்தவள் போல ஆறு மாசம் பழகினுள். அந்தப் பையன் 'யாரு' என்று தெரியாது. அவன் பெயர் கூட ராஜாவோ ராமுவோ என்று இப்போது சரியாகத் தெரியவில்லை. யாரோ அந்தக் கல்யாணத்தின்போது வந்து அவளுக்கு ஒரு அச்சமான கணத்தில் சந்தோஷமா துக்கமா என்று சொல்ல முடியாத ஒரு அனுபவத்தைக் கொடுத்து விட்டுப் போய் விட்டார்கள். அதை என்ன செய்வது என்று தெரியாமல் விழிக்கிருள் சின்னு.

காலேஜில் அவளால் நிரந்தர சிநேகம் உண்டாக்கிக் கொள்ள முடியவில்லை. தன்னுடைய கன்னித் தன்மையை நிசமாகவே இழந்து விட்டோமா என்பது பற்றி அவளுக்குள் அபிப்பிராய பேதம் இருந்தது. ஒரு முகம் தெரியாத ஆண் பிள்ளைக்கு இன்னும் சந்திக்காத ஆண் பிள்ளைக்கு துரோகம் செய்து விட்டோம் என்று யோசித்தது. கல்லூரி வாழ்க்கையில் கொஞ்ச நாட்களுக்குப் பிறகு பழசாகிப் போய் விட்டது. கல்லூரி நாடகத்தில் அவளுக்கு முண்டாசு கட்டிக் கோவலன் வேஷம் போட்டபோது மாதவியை இந்திர விழாவில் அணைத்துக்கொண்டு காவேரியைப் பற்றி ஏதோ பாடிக் கொண்டு டைரக்டர் நடிக்கச் சொன்னபோது ''போங்க மிஸ் இதெல்லாம் வேண்டாம்'' என்ருள்.

''முத்தம் கொடுக்கிறுப் போல பாவனை தாம்மா. அப்பத்தான் ரியலிஸ்டிக்கா இருக்கும்.''

''அப்ப நான் வரலை மிஸ்.''

''என்ன சின்னு? வாட்ஸ் ராங்க்?''

''இது என்னவோ பொருத்தமாயில்லை மிஸ்.''

''பொருத்தமா இல்லையா?''

''இயற்கைக்கு விரோதமா இருக்குன்னு வச்சுக்கங்களேன். வேற எனக்குச் சொல்லத் தெரியலை.''

''சும்மா நடிப்புக்காக சின்னு.''

''எனக்கு என்னமோ இந்தக் காதல் கீதல்ங்கிறதெல்லாம் ஸில்லியா இருக்கு மிஸ், ஏன்னு தெரியலை'' (தொடரும்)



மங்கல மதிமுகத்தில் மெருகூட்ட
ஐடெக்ஸ்
டீலக்ஸ் குங்குமம்
matt finish
நாடெங்களும் நாகரீக நங்கையர்
நாடி அணிவது ஐடெக்ஸ் குங்குமம்.
மங்கையரின் மலர்முகத்தின் இன்னழகை
எடுத்துக் காட்டுவதற்கெனவே
14 கண்கவர் வண்ணங்களில் கிடைக்கிறது.
சாஸ்திரிய முறைப்படி தயாரிக்கப்படும்
ஐடெக்ஸ் குங்குமம் சருமத்திற்கு எவ்வித
தீங்கும் விளைவிக்காதது.
EYETEX
ஐடெக்ஸ்
40 ஆண்டுகளாக
உங்கள் நம்பிக்கையின்
மகத்தான சின்னம்
அரவிந்த் லாபரட்டரீஸ்.
சென்னை-600 033

## 26

காலேஜில் வைஜயந்தியின் சிநேகிதத்தை முக்கியமாகச் சொல்ல வேண்டும். வைஜயந்தி வாட்ட சாட்டமாக இருந்தாள். அவளுக்கு முகத்தில் கைகளில் எல்லாம் லேசாக ரோமம் இருந்தது. சின்னுவைப் பார்த்து சிரித்தாள் வீட்டுக்கு வா என்று அழைத்தாள். வைஜயந்தியின் வீடு வசதிப்புறத்தில் இருந்தது. நாய் இருந்தது. புல் சதுரம் இருந்தது. அதில் போட்டு உட்கார்ந்து கொள்ள நிறைய நாற்காலிகள் இருந்தன. வேலைக்காரனை வைஜயந்தி அதட்டினாள்.

வைஜயந்திக்கென்று தனிப்பட்டு ஒரு அறை இருந்தது. அதில் பல பெண் நடிகைகள் போட்டோக்கள் இருந்தன. வைஜயந்தி ஒரு விதத்தில் தைரியமான ஆண் பிள்ளை போலத்தான் இருந்தாள். குரல் கூட சற்றே ஆண்மை கலந்ததாக இருந்தது. சட்டை ஆண்கள் போலத்தான் அடிக்கடி அணிந்து கொள்வாள். அதே போல் பாண்ட்டும். வைஜயந்தி கல்லூரியில் வாலிபால் பாஸ்கெட் பால் போன்ற மிகவும் வியர்க்கும் ஆட்டங்கள் ஆடுவாள். ஏதோ ஒரு பாலுக்கு அவள் காப்டன் என்பதும் என். சி. சி.யில் அவள் துப்பாக்கி பிடிப்பாள் என்பதும் டில்லிக்குத் தைரியமாகத் தனியே போய், பரேடில் எல்லாம் கலந்து கொண்டு வந்திருக்கிறவள் என்பதும் தெரிந்தது. வைஜயந்தி ஒரு விதத்தில் சின்னுவுக்கு ஹீரோ போலத்தான் இருந்தாள். வைஜயந்தியுடன் சாலையில் நடந்து சென்றால் அவளுக்குப் பயமில்லை, யாராவது பையன்கள் கலாட்டாப் பண்ணினால், வைஜயந்தி செருப்பை எடுத்துக் காட்டுவாள். கிட்ட வந்தால் அடிக்கக்கூட அடித்து விடுவாள். சின்னுவுக்கு வைஜயந்தியைப் பிடித்திருந்தது ஆச்சரியம் தான். 'வை' என்று சுருக்கமாக அவளைக் கூப்பிட்டார்கள். அவள் வீட்டுக் கதை எல்லாம் சொல்லுவாள். அப்பாவைத்தான் அவளுக்கு ரொம்பப் பிடிக்குமாம். அம்மாவைப் பிடிக்காதாம். காரணம் அவள் அம்மா அப்படிப்பட்ட கிராதகி. கெட்ட குணம் உடையவள் என்று திட்டுவது சின்னுவுக்கு ஆச்சரியமாக இருந்தது. அப்பாதான் பாவம். கல்யாணம் செய்து கொண்டு அவஸ்தைப் படுகிறாராம். அப்பா 'வை' எது கேட்டாலும் கொடுத்து விடுவாராம். அம்மாவைப் போல இல்லையாம். சின்ன வயசில் இருந்தே அப்பா அவளை ஒரு மகன் போலத்தான் வளர்த்து வந்தாராம். குதிரை சவாரி எல்லாம் சொல்லித் தந்திருக்கிறாராம். காட்டில் சுடப் போகும்போது கூட்டிப் போவாராம். கேம்புக்குக் கூட்டிப் போவாராம். எங்கேயோ பெரிய எஸ்டேட் இருக்கிறதாம். சிலவேளை அப்பா அவளை 'ஜெயன்' என்று கூப்பிடுவாராம்.

''உன்னைப் பார்த்தாலே நீதான் ஏற்ற சினேகிதின்னு தெரிஞ்சு போச்சு. உன்னை விட்டு என்னால இருக்க முடியவில்லை. உன் கூட மற்ற பேர் பேசினா எனக்குப் பொறாமையா இருக்கு. இதில வித்தியாசமாகவோ தப்பாவோ ஏதும் நினைச்சுக்காதே. ஒரு பெண்ணும் பெண்ணும் தூய்மையா சிநேகிதமா இருக்க முடியும். இந்த சினேகிதத்திலே ஏதும் அபாசமோ ஆபத்தோ அசிங்கமோ கிடையாது இல்லையா'' என்றாள் வைஜயந்தி. அவ்வப்போது சின்னுவைத் தொட்டுத் தொட்டுப் பேசுவாள். வேண்டாம் என்று மறுத்தாலும் டிரஸ் வாங்கி அதைக் கட்டி விடுவாள். அழகு பார்ப்பாள். சின்னு நான் மட்டும் ஆம்பிளையா இருந்தா



# எப்போதும் பெண்

சுஜாதா

உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிடுவேன்'' என்பாள்.

வக்கேஷனுக்கு ஊருக்குப் போயிருந்த போது சின்னுவுக்கு ஆறு பக்கத்துக்குக் கடிதம் எழுதினுள். அதைப் படித்துவிட்டு மது சின்னுவை ரொம்பக் கலாட்டாப் பண்ணினுன்.

சின்னுவுக்கு வைஜயந்தி மேல் எந்தவித மான வெறுப்பும் ஏற்படவில்லை. அவள் மணி கணக்காகப் பேசிக் கொண்டிருப்பதை யெல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்டிருப் பாள். எப்போதோ வைஜயந்தி எனக்கு ஒரு அம்மா வேண்டும் என்று சொன்னது ஆச்சரியமாகத்தான் இருந்தது. அவளுக்குத் தான் அம்மா இருக்கிருளே என்று தோன்றி யது. கேட்டால் அம்மாவைப் பற்றி இன்னும் திட்ட ஆரம்பித்து விடுவாள். வைஜயந்தி யின் சிநேகம் ஒரு மாதிரியாகத்தான் இருந் தது. சம்பிரதாயமான ஒரு பெண்ணுக்கும் பெண்ணுக்கும் சிநேகம் போலவே இல்லை. வைஜயந்தி சில சமயம் அவள் ஏதோ சின்னு வுக்கு ஒரு விதமான பாதுகாப்புக்காரி போல நடந்து கொள்வாள். ''இது உனக்கு நன்ருக இல்லை. உன் உயரத்துக்கு நீ இந்த கலர்தான் கட்டிக் கொள்ள வேண்டும்'' என்று அதட்டுவாள். ஒவ்வொரு தடவையும் சின்னுவை ஹோட்டலுக்கு கூட்டிச் செல்லும் போது வைதான் காசு கொடுப்பாள். நான் கொடுக்கிறேன் என்று சொன்னுல் எல்லாம் கல்யாணத்துக்கு அப்புறம் திருப்பிக் கொடு என்பாள்.

சின்னுவுக்குப் புரியவில்லை. வை விளை யாட்டுக்குத்தான் சொல்கிருள். அவளைக் கல்யாணம் பண்ணிக்கப் போகும் ஆண் பிள்ளை எப்படி இருப்பான் என்று யோசிக்கத் தோன்றியது. அவன் பயில்வான் போல இருக்க வேண்டும். வைஜயந்தி அத்தனை வாட்ட சாட்டத்திற்கு உள்ளுக்குள் ரொம்ப சாது. சில வேளைகளில் சின்னு சொன்ன பேச்சை அப்படியே கேட்பாள். ஒரு முறை சின்னுவுக்கு பஸ் பாஸ் வாங்கிக்கொண்டு வர ஒரு மத்தியானம் பூரா செலவழித் தாள். அதே போல சின்னுவுக்கு ஸாரி ஃபால்ஸ் அடித்துக் கொண்டு வர மாம்பலம் வரை டாக்சிக்குச் செலவழித்துக்கொண்டு போய் வந்திருக்கிருள்.

வைஜயந்தியைச் சரியாகவே புரிந்து கொள்ள முடியவில்லை.

சின்னுவுக்கு இன்னும் பல விஷயங்கள் புரியவில்லை. பஸ்ஸில் சிவப்பாக, தாடி வைத்துக் கொண்டு ஒரு பையன், அவள் திரும்பிப் பார்த்தபோது வாயிலிருந்து சின்ன தாக கடுகு போல எதையோ துப்பி, ''டோன்ட் லாஃப்'' என்று அவளை அதட் டியது புரியவில்லை! வை இருந் திருக்க வேண்டும். செம்மை யாகக் கொடுத்திருப்பாள். அதே போல் இன்டர் காலேஜியேட் டின் போது ஒரு பையன் தலை தெறிக்க அவர்கள் காலேஜ்வானை எதற்குத் துரத்திக்கொண்டு வந் தான், நடுவில் ஏதோ ஒரு இடத் தில் சாலையில் எண்ணெய்க் கரை படிந்திருக்க அதில் மோட்டார் சைக்கிளும் தானுமாக வழுக்கி விழுந்தும் மிஸ் நிறுத்தவே கூடாது என்று சொல்லி விட்டாள்.

சினிமாப் பாட்டுக்களில் எல்லாம் அந்தச் சங்கதி யைப் பற்றியே பேசுவதும் எரிச்சலாக இருந்தது. இதனு லேயே ரேடியோவில் மெல் லிசை, நாட்டுப் பாடல்கள் அவளுக்குப் பிடித்தது. தமிழ் வகுப்பில் ரட்சண்ய யாத்திரிகத்தில் சில வரிகள் அவளுக்கு ரொம்பப் பிடித் திருந்தது. அது போல தினம் தினம் விவித பாரதியில் வரும் ஒரு விளம்பரத்தில் ஒரு சிறு குழந்தையின் வற் புறுத்தல் குரல் மண லில் வெய்யிலில் பாதம் துடிக்க ஒத்தி, ஒத்தி நடப்பது வாசல் திண்ணையில்




நிலா வெளிச்சத்தில் உட்கார்ந்துகொண்டு சினேகிதர்களுடன் ரகசியம் பேசுவது, அநாவசியத்துக்கு அதிகமாகச் சிரிப்பது, புதுசாக சலவை பண்ணி வந்த காட்டன் சேலையின் வாசனை, அம்மா நகத்தை வெட்டி விடும் போதும் சொடக்கு எடுக்கும்போதும் ஏற்படும் தாங்கக் கூடிய வலி, மாசம் ஒரு நாள் கட்டாயமாக அப்பா மூன்று அண்ணன்களுக்கும் தலை மயிரை ஒட்ட வெட்டிக்கொண்டு வா என்று பிடிவாதமாக விரட்டுவது, மூன்று பேரும் அதைத் தட்டிக் கழிப்பது அவர்கள் சலூனுக்குப் போய் வந்ததும் அப்பா ''என்னடா இது? இதான் ஒட்ட வெட்டறதா?''

''இல்லைப்பா.... இதுக்கு மேலே அவன் வெட்ட மாட்டேங்கறும்பா!''

''அப்படியா? வா என்கூட'' போன்ற சம்பாஷணைகள்.


அப்பாவைப் பற்றிக் கவலையும் இருந்தது. இப்போதெல்லாம் திடீரென்று இருமுகிறார். ஹெர்னியர் தொந்தரவு வேறு இருக்கிறதாம். ஆபரேஷன் என்றால் பயப்படுகிறார். ஐ.ஸி.எஃப். மாமா ஒரு முறை வந்து, ''ஓய் ஒரு நாள் ஸ்ட்ராங்குலைட் ஆயிடும். சீக்கிரமே பண்ணிண்டுடும்'' என்று எச்சரித்து விட்டுப் போயிருக்கிறார். அப்பா எதையும் பிடிவாதமாக ஏற்றுக் கொள்ளாதவர். அம்மா தான் சொல்லுவாள். அப்பாவுக்குச் சர்க்கரை வியாதி இருக்கிறது. ராவ் கடையில் போய் அல்வா திங்கிறார். சொன்ன பேச்சுக் கேட்க மாட்டேன் என்கிறார். அப்பாவுக்கு பிபியும் இருக்கிறதாம். அப்பாவை இப்போது பார்த்தால் டொங்கு விழுந்து மோசமாகத் தான் இருக்கிறார். கண்களில் அருகில் பையாக இருக்கிறது. ரொம்ப வயசானவர்



**சமையல் குறிப்பு:**

காரட், பூசணித் துருவலில் அல்வா செய்யும் போது 1 கிலோவிற்கு 200 அல்லது 250 கிராம் கோவா சேர்த்தும் 100 கிராம் மைதா மாவை, நெய்யில் நிறம் மாறாதபடி வறுத்துச் சேர்த்தும் செய்தால்,, அதன் ருசியும் நிறமும் பிரமாதமாக இருக்கும்!

—லலிதா சுந்தரம்.



போலத்தான் இருக்கிறார். கண்களில் கலக்கம் ஏற்பட்டு சின்னுவுக்குக் கல்யாணத்தை முடிச்சுடணும் என்று அடிக்கடி சொல்லிக் கொண்டு இருக்கிறார். அம்மா தான் கொஞ்ச நாள் போகட்டும். குழந்தை படித்து முடிக்கட்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறாள். மதுவுக்கு பி. காம் பாஸாகி ஸி.ஏ. அப்ரெண்டிஸ் மாதிரி என்னவோ சொன்னார்கள். அதற்கு வேலூர் போக வேண்டுமாம். மது பெரியவனாகி விட்டான். சின்னுவுடன் விடை பெற்றுக் கொண்ட போது சின்னுவுக்கு அழுகை வந்தது. மது அவளைச் சமாதானம் பண்ணி வைத்தான். அண்ணாக்கள் எல்லாமே ஒருத்தொருத்தராக

ஏப்ரல் இதழில் வெளியான மிக்ஸி பற்றிய விவரங்களுடன் இன்னும் சில வற்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம் என எண்ணுகிறேன்.

1. மிக்ஸியின் அடியில் பொருத்தியுள்ள புஷ் எனச் சொல்லப்படும் ரப்பரில் ஜலம் துளியும் படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதில் ஈரம் இருந்தால் 'ஷாக்' அடிக்க நேரலாம்.

2. அரைக்கும் போது சூடு ஏற்படுகிறதா என்பதை கவனித்து இடைவெளி (நிறுத்தி நிறுத்தி) விட்டு அரைக்க வேண்டும். அரைக்கும் போது மூடியை கையினால் அழுத்திக் கொள்ள வேண்டும்.

3. சோப்புத்தூள் கரைத்த ஜலத்தை மிக்ஸியையும் அதன் உபகரணங்களையும் சுத்தம் செய்ய உபயோகிக்க வேண்டும்.

4. அரைக்கும் போது பிளேடுகள் லூஸாகியுள்ளதா என்பதையும் கவனித்து 'டைட்' செய்து கொள்ள வேண்டும்.

—லலிதா சுந்தரம்.

விட்டுப் போய்விடுவார்கள் என்று பயம் வந்தது சின்னுவுக்கு. நகைகள் சேர்த்துக் கொண்டிருந்தாள். தன்னுடைய நகைகளை அழித்து எதை எதையோ பண்ணி குருவி சேர்க்கிற மாதிரி சேர்க்கிறாள். அப்பாவும் அம்மாவும் சின்னு கல்யாணத்தைப் பற்றி உனக்கு பி. எஃப் லோன் எவ்வளவு வரும், எனக்கு எவ்வளவு வரும் என்றெல்லாம் பேசிக் கொள்வது, சின்னுவுக்குத் தாங்கவில்லை. என்றால் அப்பா அம்மாவுக்கு எவ்வளவு செலவு, எதற்காக இதெல்லாம்? பேசாமல் நல்ல பையனாக இருந்தால் ஐநூறு ரூபாய் செலவில் கல்யாணம் கட்டிக் கொள்ளச் சம்மதிக்க வேண்டும். சின்னு இப்போதெல்லாம் கல்யாணத்தைப் பற்றிய நினைப்புக்களில் தவிர்க்க முடியாமல் அதிகமாவது தெரிந்தது.

கல்யாணம் என்பது சம்பிரதாயமாக சமூகம் பெண்ணுக்கு அமைத்த விதி என்பது புரிந்துவிடக் கூடிய நிலைக்கு வந்துவிட்டாள் பெண்கள் பெரும்பாலோருக்கு கல்யாணம் ஆகிவிடுகிறது. இதில் தன் சம்மதம் என்ற ஒன்று இருந்தால் அது சின்னுவுக்கு மிகக் குழப்பமாகத்தான் இருந்தது. கல்யாணம்

ன்பது ஒரு சுமையா சுகமா என்பதும் சரியாகத் தெரிய வில்லை. பெண்களைப் பொறுத்தவரையில் அவர்கள் கல்யாணம் பண்ணிக் கொடுக்கப் படுகிறவர்கள். ஆண்களுக்குக் கல்யாணம் என்பது ஒரு புதிய பிரஜையைத் தன்னுடன் சேர்த்துக்கொள்வது. தங்களையே ஒருவாறு ஊர்ஜிதப் படுத்திக் கொள்வது போலப் பெண்களுக்கு உயிர்வாழ்தலின் முக்கியமான காரணமே அதுதான்! ஒரு விதத்தில் ஆண்களுக்கு அடிமையாவது போலத்தான் அது. அவன் பெயரைத் தம்முடன் ஒட்ட வைத்துக் கொள்ள வேண்டும். அவன் வேலைக்குச் செல்லும் ஊர்களுக்கெல்லாம் இவள் செல்ல வேண்டும். ஏறக்குறைய ஒரு விதமான தன்னுடைய கடந்த காலத்தைத் துறந்து புதுசாக வாழவேண்டிய நிர்ப்பந்தம் போலத் தான் கல்யாணம்.

கல்யாணம் தொடர்பாக எல்லாமே பெண்ணைத் தாழ்த்துவதாகத்தான் தோன்றியது. ஆனாலும் சிநேகிதிகள் யாரைக் கேட்டாலும் தத்தம் கல்யாணத்தைப் பற்றி எதிர்பார்ப்புடன் பேசுகிறார்கள். கல்யாணம் நடக்காதவரை ஒரு பெண் முற்றுப் பெறுதவளாக, குறைபட்டவளாக இருக்கிறாள்.

செய்தித் தாள்களில்தான் எத்தனை கல்யாண ஆசைகள்? ஞாயிற்றுக் கிழமை முழுவதும் வேண்டும் வேண்டும் என்று கல்யாணத்துக்கு எத்தனை பேர் அலைகிறார்கள்.

சின்னுவுக்குக் கல்யாணத்தைப் பற்றிக் கொஞ்சம் பயமும் இருந்தது. கல்யாணம் என்பது உத்தேசித்த ஒரு பாத்திரம் என்று லும் அதில் தனக்கு இழப்பு நிறைய இருக்கப் போகிறது என்று தோன்றியது. அப்பா அம்மா, அண்ணாக்களை விட்டுப் போக வேண்டும் என்பதை அவளால் நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை. கொஞ்சம், கொஞ்சமாக அந்தத் தினம் நெருங்கி வரும் என்பதில் கவலைகள்தான் அதிகமாயிற்று. அப்பா இப்போதெல்லாம் அடிக்கடி சின்னு கல்யாணம் என்று பேசுகிறார். தஞ்சாவூரில் ஒரு பையன் என்கிறார். டில்லியில் என்கிறார். ஒரு நாள் அவன் பி. ஏ. பாஸ் பண்ணியிருக்கிறான். ஒரு நாள் இன்ஜினியராக இருக்கிறான், ஒரு நாள் சினிமாக் கொட்டகையும் ரைஸ் மில்லும் வைத்திருக்கிறான், ஒரு நாள் வக்கீல். மஞ்சள் தடவி ஜாதகத்தை சின்னுவையே காப்பி எடுக்க வைத்தார்கள். ஐ.ஸி.எஃப் மாமாதான் அடிக்கடி பேசுகிறார். ''ஓய், உம்ம கல்யாணத்தை நான்தான் ஏற்பாடு செஞ்சேன். இப்ப உம்ம பொண்ணு கல்யாணத்துக்கும் நான் தான்! ஏதாவது டாக்டராப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கம்மா. ஆத்திலே எல்லாருக்கும் உடம்பு மங்கிண்டு வரது'' என்று சிரித்துப் பேசுவார்.

சின்னுவுக்குப் பெண் பார்க்க முதல் தடவை ஏற்பாடாயிற்று. (தொடரும்)

# சொல்ல விரும்புகிறோம்

● சென்ற இதழின் அட்டையை அலங்கரித்த அந்த அழகிய மங்கையின் பெயரை குறிப்பிடாமல் விட்டு விட்டீர்களே இது நியாயமா? நடிகை லலிதா என்று நினைக்கிறேன் சரிதானே!
பிரசன்ன ராஜன் கும்பகோணம்-1

● பெண்ணே இது உன் வாழ்க்கை பகுதியில் பல விஷயங்களை மிகவும் தைரியமாக உஷா எழுதுகிறார். என் மகள் வேறு ஜாதிப் பையனை மணந்து விட்டாள். என் கணவர் ஆறு வருஷமாய் அவளைப் பார்க்கவும் விடவில்லை. அவளையும் வீட்டுக்கு அழைக்கவில்லை. அவள் திருச்சியில் சந்தோஷமாக பிள்ளை பெற்று இருக்கிறாள். என் கணவர் பிடிவாதத்தால் நான்தான் பெற்ற வயிறு எரிகிறேன். மாப்பிள்ளை கல்லூரி லெக்சரர். பண்புள்ளவர். என்னத்தைச் செய்வது? விதிதான். மற்ற பெற்றோராவது பெண்களை எதிரிகளாக நினைக்காமல் இருந்தால் சரி.
ஸ்ரீமதி.....

● திருமதி ஒய். ஜி. பார்த்தசாரதி அவர்களின் ஒரு நாளைக் கண்டு உண்மையிலேயே மலைத்துப் போனேன். இவரைப் போன்ற பெண்மணிகளிடமிருந்து பல் படிப்பினைகளை பெற முடிகிறது.
ம. தமிழ்சாந்தி நங்கவரம்

● முதுகைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள் கட்டுரை அருமை! நமது உடல் சௌகரியத்துக்காகக் கோணல் மாணலாக அமர்வதோ அல்லது படுப்பதோ அந்தச் சில நேரங்கள் சுகமாக இருந்தாலும் அவைகளால் எவ்வளவு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன என்பதை மிகவும் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிந்தது. கட்டுரையைப் படித்தவுடனேயே கொஞ்சம் முதுகு வலி குறைந்தாற்போல் இருந்தது.
ஆர். நாகராஜன் பரசலூர்

● நாமும் டாக்டராகலாம் கட்டுரை பயனுள்ள கட்டுரையாகும். இளம் பெண்மணிகளுக்கு நல்ல பாடமாகவும் அமைந்துள்ளது.
எஸ். மோகன் மே. மாம்பலம்

● வெள்ளையர் கறுப்பர்களைத் தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கியதை எதிர்த்துத் தான் அண்ணல் காந்தி தென்ஆப்பிரிக்காவில் அறப் போராட்டம் நடத்தினர்.
வெள்ளையர்கள் கறுப்பர்களை வெறுப்பது எப்படி கண்டிக்கப்பட வேண்டியதோ அதேபோல் இந்தியர்கள் அமெரிக்கன் என்பதற்காக ஒரு மனித உயிரை எதிர்ப்பதும் கண்டிக்கத் தக்கதுதான்.
'ஞானம் பிறந்தது' கதையைப் படித்த போது இப்படித்தான் தோன்றியது.
இரணியல் கலை தூத்துக்குடி-6

● 'ஞானம் பிறந்தது' சிறு கதையின் முடிவு அற்புதத்திலும் அற்புதம். சீரியஸான கதைக்குச் சிம்பிளாக முடிவைச் சொல்லி பாராட்டைப் பெற்று விட்டார் லதா கிருஷ்ணு.
ஏ. கணேசன் பம்பாய்-58

● லா. ச. ரா.வின் குறுநாவல் ''பாலா'' கதையா அது... காவியமா! அவருடைய எழுத்திலேயே அவர் பாத்திரங்கள் அனைவரும் எப்படித்தான் கவிதையாய்ப் பேசுவார்களோ! அவருடைய கரங்கள்தான் எழுதுமோ... அன்றி அவருடைய இதயத்தின் பிழிவே கதையோ? அந்த எழுத்தின் நடையில் ஒரு அமானுஷ்யமே தெரிகிறது.
விஜயா குருநாதன் தஞ்சாவூர்-9

● லா. ச. ரா.வின் பாலா என்னுள் ஏற்படுத்திய பாதிப்பு இந்த யுகத்தில் மட்டுமல்ல, வரப்போகும் யுகங்களிலும் தொடரத்தான் போகிறது. மிக மிக நீண்ட நாட்களுக்குப் பிறகு சிறந்த கதை ஒன்றைப் படித்த நிறைவு ஏற்பட்டது.
வி. லலிதா புதுக்கோட்டை

● பார்த்துக்கொண்டா இருப்பது கட்டுரை இன்றைய தாய்மார்களுக்குப் பயனுள்ளது. வியாபாரிகள் சிறந்த மனோதத்துவ நிபுணர்கள் என்று குறிப்பிட்டிருப்பது வேடிக்கையாக இருந்தாலும் வயிற்றெரிச்சலாகவும் இருந்தது.
திருமதி பிரபாடாக்கர் ஹைதராபாத்-4



## 27

**பை**யன் பங்களூரில் வேலையாக இருப்பதாகவும் ஜாதகம் எல்லாம் பார்த்ததில் பொருந்திப் போயிருப்பதாகவும் பேச்சு அடிபட்டது. பையனுக்கு அக்காவும் அம்மாவும் வரப்போகிறார்களாம். அவர்கள் பார்த்து சம்மதம் சொன்ன பின்னே பையன் வருவானாம். சின்னுவுக்கு இதெல்லாம் காதில் விழுந்த செய்திகள்தான். யாரும் அவளுக்கு நேரடியாகச் சொல்லவில்லை. அந்தப் பையனை அவ்வளவாகப் பிடிக்கவில்லை. முதலில் அம்மா பார்த்துத்தான் கல்யாணம் செய்து கொள்கிறான் என்றால் ரொம்ப அம்மா பேச்சுக் கேட்பவனாக இருக்கலாம். அல்லது இவர்கள் பார்க்கும் விஷயம் அவனுக்குத் தெரியாமல் இருக்கலாம். வெள்ளிக் கிழமை சாயங்காலம் ஆட்டோ ரிக்ஷாவில் இரண்டு பெண்களும் ஒரு சின்னப் பையனும் வந்திருந்தார்கள். அம்மாவோடு சகஜமாகப் பேசினார்கள். அப்பாவைப் பார்த்ததும் அந்த அம்மாள் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டாள். ''அவருக்கு வர சமயமில்லை. டூர் போக வேண்டியிருக்கு'' என்றாள். ''இதெல்லாம் எதுக்கு மாமி'' என்றாள் காப்பி கொண்டு வந்ததும். ''வாடிம்மா'' என்று சின்னுவை வரவேற்று பக்கத்தில் தட்டி உட்கார வைத்துக்கொண்டிருக்க அக்கா என்பவள் பேசவேயில்லை. சின்னுவையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். ''எத்தனாவது வாசிக்கிறே?'' என்று அந்த மாமி கேட்டாள், தடவிக் கொடுத்தாள். சின்னுவுக்குப் பட்டுப் புடவை கசகசப்பாக இருந்தது. மது அந்தப் பையனை அழைத்துக் கொண்டு போய்விட்டான். திடீர் என்று தோன்றி கூடத்தில் அந்தப் பையன் ஓடினான். ''எங்காத்து ஜூம்மு ரொம்ப ஒட்டிண்டுடுவான்'' என்றாள்.

ஜூம்மு என்கிற பேரைக் கேட்டதும் சின்னுவுக்குச் சிரிப்பாக வந்தது. அடக்கிக்கொண்டாள்.

''பொண்ணுக்கு என்னம்மா பேரு?''

''சின்னு'' என்றாள் சின்னதாக.

''சின்னுன்னு செல்லப் பேரு. முழுப் பேரு என்ன?''

''பொண்ணு'' என்றாள்.

''சிவகாம சுந்தரி'' என்று அம்மா சரடு விட்டாள்.

''நல்ல பேரு, அம்பாள் பேரு. அது நீ போட்டியா?'' என்று வாசல் கதவருகே தொங்கிய மணி மாலையைக் காட்டினாள்.

''ஆமாம் மாமி. கைவேலை எல்லாம் செய்வாள். கோலம் போடுவா. நாள் கிழமைன்னு சமையலுக்கு ஒத்தாசையா அரைச்சுக் கொடுப்பா. பத்துப் பாத்திரம் தேய்க்கும். பதவிசாக் காரியம் பண்ணும். கொஞ்சம் செல்லமா வளர்த்துட்டோம். சோல்லிக் கொடுத்தாச் சட்டுனு பிடிச்சுண்டுடுவா'' என்றாள் அம்மா. யாரைப் பற்றிப் பேசுகிறார்கள் என்று வியப்பாக இருந்தது.



''ஒரே பொண்ணேல்லியோ'' என்றாள் மாமி. அக்காக்காரி ஒரு வார்த்தை பேச வில்லை. தன்னையே பார்த்துக்கொண்டிருப்பது அவளுக்கு அவஸ்தையாக இருந்தது.

''சிவராமனும் செல்லமாத்தாம்மா வளர்ந்திருக்கான். பங்களூர்ல பச்சைக் கடுகை அரைச்சுப் போடறாளாம். உடம்புக்கு ஒத்துக்கலை. மாசம் ரெண்டாயிரத்துக்குக் கிட்ட வரது. திருடமருதூர்லருந்து ஒரு பையனை அழைச்சுண்டு வெச்சுண்டான். அது காசு திருடறது. என்னால எங்க பங்களூருக்கும் இங்களூருக்கும் போக முடியும் சொல்லுங்கோ.''

''வாஸ்தவம்தான். நம்மாத்துக் கவலை இருக்கோல்லியோ?''

''நீ வந்துரும்மா. பிரகதா பார்த்துப் பாங்கறான். இவ இப்பத்தான் பிள்ளை பெத்திருக்கா.''

''ஒரு பாட்டுப் பாடுவியாம்மா. வெள்ளிக்கிழமையும் அதுவுமா'' என்றபோது சின்னுவுக்கு வயிற்றைக் கலக்கியது.

''பாடேண்டி. அந்த ஆறுமோ பாட்டு பாடுவியே.''

சின்னு மௌனமாகப் புடவைத் தலைப்பை சித்ரவதை செய்ய ஆரம்பித்தாள்.

''வெட்கப்படறது குழந்தை. பாடாட்டிப் பரவாயில்லைம்மா. அடக்கமும் பதவிசுமா இருந்தாப் போறும். நீங்க பாத்தீங்களா மாமி ஜாதகத்தை?''

''பார்த்தோம் மாமி. எட்டுப் பொருத்தமும் இருக்குன்னு சொன்னா.''

''நாங்களும் பார்த்தோம். திருடமருதூர்ல எங்க ஃபாமிலிக்கே ஜோஸ்யர் இருக்கார். யோக ஜாதகம்னுதான் சொன்னார். ''புள்ளைக்கு எழுதறேன். இங்கே டூர் போட்டுட்டு வரச் சொல்லி. வந்த உடனே பாத்துரட்டும். பாத்துப் புடிச்சுப் போயி பிராப்தம் இருந்தா கல்யாணம் நடக்கிறது. எங்களுக்குப் பொண்ணு புடிச்சுத்தாம்மா இருக்கு. என்ன பிரகதா?''

''ராமு பார்த்துரட்டும்மா.''

''பார்க்கத்தாண்டி போறான்.'' என்றாள்.

அவர்கள் போனதும் அம்மா சுருக்கமாக ''மாமி வெகுளி. அந்தப் பொண்ணு அழுத்தம்.'' என்றாள்.

''என்ன சின்னு! ஏண்டி இடிச்ச புளி மாதிரி உக்காந்துண்டு இருந்தே? கேட்ட கேள்விக்குக் கிணத்திலேருந்து பேசற மாதிரி பதில் சொல்றே. வீட்டிலேயானா அட்டகாசம் பண்ணியாறது?''

''போம்மா. எனக்கு இது புடிக்கவே இல்லை.'' பட்டுப் புடவையை உருவி எறிந்தாள்.


''பொண் பார்க்கறதுன்னா இப்படித்-தாண்டி இருக்கும்.''

அதன் பின் பையனுக்கு அண்ணா வந்து பார்த்தார். பையனுக்கு அப்பா ஒரு நடை வந்து விசாரித்தார். அந்த மாமி மறுபடி இன்னும் இரண்டு பெண்மணிகளை அழைத்து வந்து காட்டினாள்.


''ராமு வர்றதாச் சொல்லியிருக்கான். டூர்ல வர முடியலையாம். லீவு கிடைக்கலை. தை மாசத்துக்குள்ளே முடிச்சுடலாம்னு தான் பார்க்கிறோம்.''

அதற்கப்புறம் அவர்களிடமிருந்து சேதி எதுவும் இல்லை. சின்னுவின் போட்டோ வாங்கிக் கொண்டு போனதோடு சரி. ஒரு ரெண்டு மாதம் கழித்து அப்பா விசாரித்து ''அந்தப் பையன் ஆபீசிலேயே ஒரு மலையாளப் பெண்ணை ரிஜிஸ்தர் மாரேஜ் பண்ணிட்டானாம். நல்ல வேளை.'' என்றார்.

சின்னுவுக்கு அன்றைக்கு முழுவதும் வெறுப்பாக இருந்தது. பார்க்க வருகிறார்கள்



என்று காலேஜ் எக்ஸ்கர்ஷனிலும் சேராமல் வெயிலில் வீட்டிலேயே அடைந்து கிடந்ததும், அவர்கள் பேருக்குப் பேர் ஏதோ கைத்தறி எக்ஸிபிஷன் போல வந்து பார்த்ததும் அதற்குப் பிறகு ஒரு மரியாதைக்குக் கூட செய்தியை வந்து சொல்லாததும் சின்னுவுக்கு சே என்று இருந்தது. என்ன செய்ய? கல்யாணம் நிகழ்ந்தே ஆக வேண்டும் என்பதில் அவளுக்குச் சந்தேகம் இருக்கவில்லை. கல்யாணத்துக்குக் காரணம் சமூகத்திற்கு குழந்தைகளை அளிப்பது என்பதைத் தவிர அவளுக்கு வேறு எதுவும் தெளிவாகத் தெரியவில்லை. இதில் தனக்கு ஏதும் உரிமையோ தேர்ந்தெடுப்போ இருப்பதாகத் தெரியவில்லை. இத்தனை நாள் அப்பா அம்மாவுடன்சாப்பிட்டுக்கொண்டிருந்தவள் கொஞ்ச நாளில் ஏதோ ஒரு சிவராமனோ ராம




மூர்த்தியோ வீட்டில் போய்ச் சாப்பிட வேண்டும். சாப்பிட்டு நிழல் தந்தற்காக அவனுக்காகச் சமைத்துப் போட வேண்டும். அவன் குழந்தைகளைத் தாங்க வேண்டும். இப்பொழுதே அம்மா ராத்திரியிலே ரசம் வைக்கச் சொல்கிறாள். இரண்டு பேருக்குச் சமையல் செய்ய, மூன்று பேருக்குச் சமையல் செய்ய எத்தனை சாதம் வைக்க வேண்டும், எவ்வளவு பருப்புப் போட வேண்டும் என்றெல்லாம் சொல்லித் தருகிறாள். கல்யாணம் என்பது ஒருவிதமான அராஜகம் நளினமாகத் திணிக்கப்படப் போகிறது என்பதை உணர்ந்தாலும்அது இல்லாமல் வாழ்க்கையை அவளால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. கல்யாணம் இல்லையெனில் அவள் எப்போதும் அப்பாவுக்கும் பிறகு அண்ணன்மார்களுக்கும் சேவை செய்து கொண்டே இருக்க வேண்டும். அவளுக்காகத் தனியாக ஒரு ஜீவனம் என்பது நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. கல்யாணம் ஒரு அந்தஸ்துதான். நடந்தே ஆகவேண்டும். அது விதி, எப்போதாவது படித்துவிட்டு வேலைக்குப் போகலாம் என்று தோன்றும்.

''உனக்கெதுக்கு வேலை? கிளி மாதிரி இருக்கே. கொத்திண்டு போகப் போறு பாரு. அந்தப் பையன் ஏதோ அராத்துப் போல இருக்கு. அதிர்ஷ்டக் கட்டை. நம்ம சின்னுவைக் கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு குடுத்து வைக்க வேண்டாமோ'' என்றாள் அம்மா.

''அடுத்த தடவை இந்த மாமியார் நாத்தனார் வந்து பார்க்கிற பிஸினஸ் வேண்டாம். காமாட்சி. பையனே நேரில் வந்து பாக்கறதா இருந்தாப் பாக்கட்டும். இல்லேன்னா மாட்டேன்னு சொல்லிடறேன். பாவம், நம்ம குழந்தை ஏமாத்தத்திலே ஏங்கிப் போயிடும்.''

''இவங்களையெல்லாம் சுடணும்பா'' என்றான் மது.

''உனக்கென்னடா தெரியும்?''

''சின்னு என்ன மார்க்கெட்ல விக்கிற மாதிரியா? அப்பா நீங்க பண்றது நல்லாவே இல்லை.''

அவனைக் கவனிக்காமல் அப்பா ''சின்னு கல்யாணத்தை முடிச்சுட்டு இரண்யாவைப் பண்ணிக்கணும்னு பார்க்கறேன். தள்ளிப் போட்டுண்டே வருது. ஒண்ணும் தோதா இல்லையே.''

''அவளை வெச்சுண்டே பேசாதீங்கோ'' என்றாள் காமாட்சி.

''இத பாருப்பா. நீங்க தாராளமா ஆப்பரேஷன் பண்ணிக்கோங்கோ. பரவாயில்லை. என்றான் மது. சின்னு கல்யாணத்தையும் ஆபரேஷனையும் ஒரே வகையில சேக்காதிங்கோ.''

மது இப்போதெல்லாம் தைரியமாகப் பேச ஆரம்பித்து விட்டான். அவனுக்கு டிப்ளமா முடிந்து வேலை கிடைத்து விட்டதால் காலையில் டிபன் கட்டிக் கொண்டு சலவை கர்ச்சிப்பைப் பையில் போட்டுக் கொண்டு பஸ் பிடித்து வேலைக்குப் போகிறான். அவன் சினேகிதர்கள் எல்லாம் இப்போது அவனை விடப் பெரியவர்களாக இருந்தார்கள். இங்கிலீஷ் படம் தனியாகப் போய்ப் பார்க்க ஆரம்பித்து விட்டான். ஆர். எஸ். எஸ். நோட்டீஸ் எல்லாம் வைத்திருந்தான். கோவிலுக்குப் போய் தினப்படி விபூதி. சொந்தப் பணத்தில் ராத்திரி எதிர்க் கடையில் ஒரு பச்சைநாடாப் பழமும் தனக்கு வாங்கிக் கொள்வான். குரல் மாறிவிட்டது. மீசை கருகருவென்று வைத்து சிகரெட் பிடிப்பதற்கு இப்போதெல்லாம் பாக்குப் போட்டுக்கொள்ளுவதில்லை. பகிரங்கமாகப் பாக்கெட்டில் சிகரெட் பெட்டி வைத்துக் கொள்கிறான்.

வைஜயந்தி ''சின்னு கல்யாணமே பண்ணிக்கக் கூடாது. கல்யாணம்கிறதைப் பத்தி நமக்குள்ளே ஒரு தீர்மானமாக ஒரு சுதந்திரம் கிடைச்சாத்தான் கல்யாணம் பண்ணிக்கணும். சின்னு இதோ பாரு, உனக்கு ஒரு பையனைப் பிடிக்கலேன்னா பளிச்சினு அப்பா அம்மா கிட்டச் சொல்லிடு. இது வாழ்நாள் பிரச்னை. யோசிச்சு முடிவு பண்ண வேண்டியது. எதுக்கெடுத்தாலும் தலையை ஆட்டிடாதே. என்ன?''

''என்னிக்காவது கல்யாணம் பண்ணிக்க வேண்டியதுதானே வை.''

''அது அவசியமே இல்லை தெரியுமா?

ஒரு பொண்ணு கல்யாணம் இல்லாம பரி பூர்ணமா வாழ முடியும்.''

சின்னுவுக்கு அது எப்படி என்று புரிய வில்லே.

அப்பா பணக்கார இடம் என்று சொன்னர். அவர்கள் எல்லாரும் காரில் வந்தார்கள் பையனும் வந்திருந்தான். சின்னு நீல நிறத்தில் புடவை கட்டிக் கொண்டாள். தலேயை அம்மா அழுந்த வாரி கொஞ்சம் தாழம் பூவும் மல்லிகையும் வைத்துப் பெரிசாகக் குங்குமம் இட்டு அம்மன் மாதிரி பண்ணி யிருந்தாள். சின்னு நமஸ்காரம் பண்ணிவிட்டு முகவாய்க் கட்டை கழுத்தோடு ஒட்டிக் கொண்டு சோபாவின் மேல் உட்கார்ந்திருந்தாள். பெரியவர்கள் பேசிக் கொண்டார்கள். சின்னு அந்தப் பையனே நிமிர்ந்து பார்க்கவே இல்லே. புதுச் செருப்பும் சரிகை வேஷ்டியும்தான் தெரிந்தது.



குழம்பில் உப்பு அதிகப்பட்டால் சிறிது சீனியைப் போட்டால் உப்பு குறைந்துவிடும். ருசி மாறவே மாருது. இனிப்புச் சுவை சேரவே சேராது.

—பட்டுபத்மனபன



17—லிருந்து, 9 வரை மத்தியப் புள்ளி வைத்துப் போடவேண்டும்.

—மாலதி சூரியநாராயணன்.

''ஸார், இஃப் யூ டோண்ட் மைன்ட் பொண்ணேட கொஞ்சம் பொதுவாப் பேச லாமா? நீங்கள்ளாம் இருக்கலாம். தனியாப் பேசணும்னு கூட இல்லே.''

சின்னுவுக்குப் பழையபடி சுரம் வந்து விட்டது.

''நிமிர்ந்து பார்க்கச் சொல்லுங்கோ'' என்ருன். ''இங்கிருந்து வகிடுதான் தெரியறது.''

''சின்னு நிமிரும்மா.''

''வெட்கப்படரு ரொம்ப.''

''பரவாயில்லே. என்னுல பார்க்க முடியறது'' என்ருன். யாரோ சிரித்தார்கள். ''நீங்க பி. ஏ. பண்றதாக் கேள்விப்பட்டேன். என்ன சப்ஜெக்ட்?''

''எகனுமிக்ஸ்'' என்ருள் சின்னதாக.

''காதில விழல்ல. பரவால்லே. நான் என்ன பண்றேன்னு தெரியுமா உங்களுக்கு? எங்க வேலேல இருக்கனே, என்ன சம்பளம் வாங்கறேன்னு தெரியுமா உங்களுக்கு?''

சின்னு தெரியாது என்று தலேயாட்டினுள்.

''ஏன் ஸார் சொல்லலே நீங்க?''

''சின்னு, என்னடி சொல்லலே காமாட்சி?''

''எம் பேரு ராமச்சந்திரன். நான் டில்லில இருக்கேன். ஐ ஏ அண்ட் ஏ.எஸ்னு என்ன தெரியுமா? உங்களுக்கு?''

சின்னு தலேயாட்டினுள்.

''என்னேப் பார்க்கலாம். சங்கோஜப் படாதீங்கோ. பஸ்ல போறப்ப கடைத் தெருவில சினிமாவில கல்யாணத்தில எல்லாம் பல பேரை நிமிர்ந்து பார்க்கறதில்லேயா? இவ்வளவு வெட்கப்பட வேண்டாம்.''

சின்னு சாஸ்திரத்துக்கு நிமிர்ந்து பார்த்தாள். அந்தப் பையன் தலேயை அடர்த்தியாக வைத்துக் கொண்டிருந்தான். வகிடு கொஞ்சம்தான் இருந்தது. கண்ணுடி போட்டுக் கொண்டு பளிச்சென்று இருந்தான். மாநிறமாக இருந்தான். அவனேப் பார்த்ததுமே ரொம்ப சுத்தம் என்று நினேத்துக் கொள்ளும்படியாக இருந்தது. தினப்படி இரண்டு தடவை பல் தேய்ப்பான் போல. பளிச்சென்று இருந்தது பல் வரிசை. சின்னு அதற்கு மேல் பார்க்கவில்லே. மறுபடி தலேயைத் தழைத்துக் கொண்டாள்.


''ஸாரி. இந்த மெத்தடே எனக்குப் பிடிக்காது. பேர் என்ன? சின்னுதானே சொன்னீங்க. இதைத் தவிர சிறந்ததா வேற எதுவும் முறை இல்லாததாலே இப்படிச் செய்ய வேண்டியிருக்கு.''

(தொடரும்

# பெண்ணே— இது உன் வாழ்க்கை

உஷா சுப்ரமணியம்

இந்தியத் திருமணங்களின் வெற்றியும் தோல்வியும் கணவன், மனைவி என்ற இரு தனி நபர் உறவை விட குடும்ப உறவுகளினாலேயே அதிகம் பாதிக்கப்படுகிறது என்பதைப் பல நிபுணர்களும் ஒப்புக்கொண்டுள்ளார்கள். இதனால்தான் ''இந்தியப் பெண் ஒரு கணவனை மட்டும் மணப்பதில்லை. ஒரு குடும்பத்தையே மணக்கிறாள்'' என்னும் ஆங்கிலப் பழமொழி நிலவுகிறது. வறுமை, சமுதாயப் பாகுபாடுகள், தினசரிப் பிரச்னைகள் நிரம்பிய நாட்டில் இன்னும் மக்கள் மகிழ்ச்சியுடனும், தன்னிறைவுடனும் வாழ்வதற்கு நம் குடும்ப உறவுகள்தான் காரணம்.



சகோதரன் இறந்து விட்டாலும், அவர் மனைவியை மைத்துனர்கள் அன்புடன் பேணி அவர் குழந்தைகளை வளர்த்துப் பொறுப்பாக மணமும் செய்து வைப்பதைப் பல குடும்பங்களில் காண்கிறோம். மூப்பும், பிணியும் மண்டிய பெற்றோரைத் தன் சிரமம் பாராமல் பாதுகாக்கும் பிள்ளைகளையும் இந்த நாட்டில் மட்டுமே பார்க்க முடியும். நம் வாழ்க்கையின் பாதுகாப்புக்கு இத்தகைய கடமை உணர்ச்சிகள் மிகப் பெரிய அரணாக உள்ளன.

கூட்டுக் குடும்பம் இந்தியா உலகுக்கு அளிக்கும் அற்புதமான ஸ்தாபனம். ஆனால் கூட்டுக் குடும்பம் பற்றிய எல்லாச் சிந்தனையும் நம் நாட்டில் உணர்ச்சியுடன் அணுகப்படுகிறதே தவிர அறிவு பூர்வமாக அல்ல. கூட்டுக் குடும்பம் நம் நாட்டில் தோன்றிய காலத்தில் வேலை வாய்ப்புக்களும், விஞ்ஞான சாதனைகளும், ஏட்டுக் கல்வியும் குறைவு. விவசாய சமூகத்தில் நிலம் என்பது பொதுவான சொத்து. அதுவே உழைக்கும் களன். அதுபோலவே குடும்பம் என்பது உழைப்பை நுகரும் இடம். இரண்டும் ஒரு தலைமையில் மட்டும் இயங்கும். வீட்டுத் தலைவரும் அவர் மகன்களும் நாள் முழுவதும் நிலத்தில் வேலை செய்வார்கள். வீட்டுப் பெண்கள் மாமியார் சொற்படி குடும்பத்தைப் பேணுவார்கள். நிலத்திலிருந்து வரும் வருமானம் குடும்பம் வழியாக சாப்பாடாகவும் உடையாகவும், பொழுது போக்காகவும் அனைவராலும் சமமாக அனுபவிக்கப்படும். இங்கே தனி நபர் பாதிப்புக்களுக்கு அர்த்தம் கிடையாது. ஆராய்ந்து பார்த்தால் கூட்டுக் குடும்பத்துக்குப் பொதுச் சொத்தும், தலைமை பற்றிய ஒப்புதலுமே காரணம் என்பது புரியும்.

இன்றைய குடும்ப அமைப்பு எப்படி உள்ளது? திரு கா. அரசு உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றவர். அவர் வருமானம் அவரது நானூறு ரூபாய் பென்ஷன் மட்டுமே. அவரது முதல் மகன் அமெரிக்காவில் டாக்டராக உள்ளார். இரண்டாவது மகன் வட நாட்டில் இன்ஜினியராக உள்ளார். மூன்றாவது மகன் சென்னையில் சாதாரணமான வேலையில் உள்ளார். ஒரு மகள் திருமணமாகித் துபாயில் உள்ளார். மற்றொருத்தி கல்லூரியில் படிக்கிறாள். குடும்பத்




கவிதை பாடும் கண்களுக்கு...
ஐடெக்ஸ்
விழிகள் மொழிபேச ஐடெக்ஸ்
பெண்மை பளிச்சிட, இளமை எழில்
கொஞ்சிட, வனிதையர் வதனம்
கவர்ச்சி மிளிர்ந்து கண்கள்
களிநடம்புரிய ஐடெக்ஸ் கண்மை
சாஸ்திரீய முறையில் தயாராகும்
ஐடெக்ஸ் மை கண்களுக்கு
குளுமையூட்டி பாதுகாக்கிறது
எவ்வித தீங்கும் விளைவிக்காது
ஐடெக்ஸ் 40 ஆண்டுகளாக
உங்கள் நம்பிக்கையின்
மகத்தான சின்னம்
EYETEX REGD.
அரவிந்த லாபரடரீஸ் சென்னை 600 033
imageads-AL-1293 Tam

## 28

சின்னுவுக்கு அந்தப் பையன் பேசுவது, அவர்கள் பார்த்துக் கொண்டிருப்பது எல்லாமே சங்கடமாக இருந்தது. ''ஒருமுறை ஒருத்தரை ஒருத்தர் வெளித்தோற்றத்தைப் பார்த்துக்கிறதை வெச்சுண்டு ஒரு லைஃப் டைம் முடிவு பண்றது கொஞ்சம் அநியாயம் தான் இல்லை சின்னு'' என்றான்.

பதில் பேசவில்லை.

''அதேசமயம் ரெண்டு மூணு மாசம் நாம பழகிப் பேசிண்டாலும் ஒருத்தரை ஒருத்தர் பூராவும் தெரிஞ்சுப்போம்ங்கறதும் அபத்தம்தான்னு என் அபிப்பிராயம். நீங்க என்ன நினைக்கிறீங்க?''

சின்னு பேசவில்லை.

''ஏதாவது பேசேண்டி அவர் கேக்கறார்.''

''உங்கிட்டருந்து பதில் வரவரைக்கும் காத்துண்டுதான் இருக்கப்போறேன்! ராத்திரி எத்தனை நாழியானாலும் சரி.''

''சந்துரு! என்னடா இது அந்தப் பொண்ணு பாவம் வெக்கப் படறது.''

அப்பா 'உக்கும்' என்று கனைத்து ''சின்னு போம்மா உள்ள.. ஏதாவது அம்மாவுக்கு ஒத்தாசை செய்யணும்னு போய்ப்பாரு'' என்றதில் அவள் சட்டென்று எழுந்து கொள்ள,

''இருங்க என் கேள்விக்குப் பதில் சொல்லிட்டுப் போகட்டும்'' என்றான்.

சின்னு அவனை மறுதடவை பார்த்தாள். இவன்தான் என் கணவனா தெரியவில்லையே!

மது ''ஸார் அவ கொஞ்சம் டிமிட் டைப்பு'' என்றான்.

''சரிப்பா நான் கல்யாணம் செய்துக்கப் போற பொண்ணோட குரலைக் கேக்கக் கூட எனக்கு உரிமை இல்லையா?''

''சின்னு ஏதாவது பேசேன்'' என்றான் மது.

சின்னுவுக்கு நாக்குப் புரளவில்லை. என்ன பேசுவது எல்லாமே செயற்கையாக இருக்கையில்.

''ஏதாவது கேள்வி கேளுங்கோ, பதில் சொல்வா.''

''சரி டில்லி எங்க இருக்கு?'' என்றான்.

சின்னு பதில் சொல்லாமல் மதுவைப் பார்த்தாள்,

''ஜியாக்ரபி இல்லாம கேளுங்கோ.''

''சரி ரெண்டும் ரெண்டும் எத்தனை?''

''நாலு!'' என்றாள்,

அப்பாடா என்று கைதட்டினான். எல்லாரும் சிரித்தார்கள். சின்னுவுக்கு அழுகை வந்தது. உள்ளே ஓடினாள். அம்மா ''என்னடிது கல்லுளி மங்கத்தனம்! ஒரு பொண்ணு வாயைத் திறந்து பேசமாட்டியோ?''

''போம்மா!'' என்றாள். ''எனக்கு ஒண்ணுமே பிடிக்கலை'' மது வந்து அவளைத் தலையில் தடவிக் கொடுத்ததும் அவளுக்கு கண்களில் நீர் வடிந்தது. ''கவலைப்படாத சின்னு''.

''எல்லாரும் சேர்ந்து என்னைப் பரிகாசம் பண்றீங்க. போடா!'' என்றாள்.

''சேசே! பரிகாசம் இல்லை சின்னு. அடாடா இதுக்குப் போய் கண்ணில தண்ணியா? சரி நீ மாப்பிள்ளையை நாலும் நாலும் எத்தனைன்னு கேட்டுட வேண்டியதுதானே. ''ஸார், நாலும், நாலும் எத்தனைன்னு எங்கச் சின்னு கேக்கறா'' என்று இரைந்தான்.



# எப்போதும் பெண்

சுஜாதா

போடா! சின்னு மாப்பிள்ளையை இங்கிருந்து பார்த்தாள். சமர்த்தாக அழுந்தி உட்கார்ந்து கொண்டு அப்பாவிடம், ''எல். டி. ஸியில ஃபர்ஸ்ட் கிளாஸ் ஃபேர் கொடுத்துருவான்'' என்று பேசிக் கொண்டிருந்தான். அவர்கள் வீட்டு மனுஷர்கள் எல்லாம் சகஜமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பாபோல இருந்தவர் ''உங்க டி. வி. என்ன மாடல்'' என்றும் மாமா போல இருந்தவர் பால் விலை பற்றியும் அம்மாவிடம் அந்த அம்மா ''போன் பண்ண உடனே கொண்டு போட்டுடுவான்'' என்றும் பேசிக் கொண்டிருந்தார்கள். வைஜயந்தியை ஞாபகம் வந்தது. அவளாக இருந்தால் என்ன ஸார் ராமசந்திரன் என்னன்னு நினைச்சுண்டு என்னை இந்தக்கேள்வி கேக்கிறேள்? ரெண்டும் ரெண்டும் உன் மண்டை! என்று சொல்லியிருப்பாள். ராமச்சந்திரனைப் பற்றி அவளுக்கு ஏதும் தோன்றவில்லை. பார்த்தால் ராங்கிக்காரன் போலவும் இல்லை. பல்வரிசை இங்கிருந்து கூட பளிச்சென்றது. சிரிக்கிறபோது கொஞ்சம் வரிசை தவறியிருந்தது அழகாக இருந்தது. நகத்தில் ஒருவிரலில் மட்டும் க்யூடெக்ஸ் போட்டிருந்ததைப் பார்த்தது சின்னுவுக்கு சிரிப்பு வந்தது.

''அப்ப கிளம்பலாமா சந்துரு.''

''இருப்பா அவாளை எதுக்கு சஸ்பென்ஸில வெக்கணும். முடிவு சொல்லிடலாமே?''

''இப்பவேவா?''

''எதுக்காக 'போய் எழுதறேன் கிழுதறேன்'னு எல்லாம் இழுக்க அடிக்கணும்? நான் ரொம்ப ஸ்ட்ரெய்ட் ஃபார்வர்ட் மான்! அட்மின் சர்வீஸில் இந்த மாதிரி சுத்திவளைக்காம இருக்கிறது எனக்கு எப்பவுமே உதவறது. எனக்கு உங்க பொண்ணை பிடிச்சிருக்கு. இன்னும் கொஞ்சம் தைரியமா பேசியிருக்கலாம். பரவாயில்லை. கல்யாணம்



ஆனப்புறம் பேசப் போறோம்ங்கிற தில ஒரு எதிர்பார்ப்பும் இருக்கட்டும். முக்கியமா நாங்கள்லாம் போனப்புறம் உங்க பொண்ணை என்னைப் பிடிச்சிருக்கான்னு கேட்டு அவ சம்மதம் சொன்ன அப்பாவுக்கு எழுதுங்கோ. ஜாதகம் எல்லாம் பார்க்க வேண்டாம். எல்லாம் சுத்த நான்சென்ஸ். ஒரு வாரத்துக்குள்ளே தகவல் சொல்லுங்கோ. கல்யாணத்தை ஜனவரில வெச்சுண்டா நல்லது. இல்லேன்னு பட்ஜெட் ஸெஷன் முடிஞ்சதும் ஏப்ரல் மேக்கு ஷிப்ட் பண்ணிக்க வேண்டி வரும். எல்லா விவரத்துக்கும் எழுதுங்கோ. போகலாமா? போகலாமாம்மா? பாத்தாச்சில்லே.''

அடடா! வயிற்றை என்னமோ செய்கிறதே ஒரு கோலி சோடா வாங்கி வாயேன்' என்று சொல்பவர்களுக்கு அதைவிட உயர்ந்த சோடா தயாரிக்கலாமே! ஒரு ஸ்பூன் (காஞ் ஸோடா) சாப்பாட்டுச் சோடாவை அரை டம்ளர் ஜலத்தில் போடவும், எலுமிச்சம்பழ விதைகளை நீக்கிப் பிழியவும். தோலைக் கசக்காமல் லேசாகப் பிழியவும். காதை வைத்துக் கேளுங்கள் 'உஸ்' என்ற சப்தம் வரும். நுரைத்து வரும். அப்படியே குடியுங்கள். வயிற்று ஜீரண சக்தி அதிகரிக்கும். புளியேப்பத்தைக் கண்டிக்கும். வயிற்று உப்புசம் குறையும். நிச்சயம் கெடுதல் செய்யாத 'புதிய சோடா' ருசித்த அனுபவம் உங்களை கலகலப்பாக இருக்கச்செய்யும்.

—ரோஜி

நான் வரேன், என்ன பேரு? சின்னு! முழுப்பேரு கூட தெரிஞ்சுக்கலை பாருங்கோ!''

அவர்கள் புறப்பட்டுப் போனதும் வீட்டில் உட்கார்ந்து கொண்டு, மகாநாடு நடத்தினார்கள்.

''நல்ல பையன்'' என்றார் அப்பா.

''என்னடி சொல்றே சின்னுங்கறவளே?''

மது ''சின்னு அவர் சொன்னாப்பல உன் இஷ்டம் இல்லாம ஒரு காரியமும் நடக்காது.''

''அம்மா நான் படிக்கிறேம்மா. அப்புறம் கல்யாணம் பண்ணிக்கிறேம்மா.''

''ஏன்? ஏன்?''

''கல்யாணம்னா எனக்கு வந்து பயமா இருக்கும்மா.''

''ஏன் என்ன பயம்?''

''உங்களை எல்லாம் விட்டுட்டு போகணுமே என்று.'' அம்மாவின்பால் வந்து அவள் தோள்மேல் கைகோர்த்துக்கொண்டு செல்லமாக அவள் முகத்தில் முகத்தைத் தடவி ''எதுக்காகம்மா எல்லாரும் என்னைப் புடிச்சுப் புடிச்சுத் தள்றேள்? எனக்கு எப்படிம்மா உங்களை எல்லாம் விட்டுட்டு இருக்க முடியும்? எனக்கு ஒண்ணுமே தெரியாதும்மா! யாரோ ஒரு அன்னியனுக்கு அவன் சொன்னாப்பல ஒரே ஒருதடவை பாத்துட்டு திடீர்னு என்னைக் கல்யாணம் பண்ணி அனுப்பணும்னு என்ன ஆத்திரம்? நான் இன்னும் கொஞ்ச நாள் நிம்மதியா இருக்கக் கூடாதா? என்ன மது?''

''எனக்கு ஒண்ணும் தெரியலேம்மா. ஆனா நீ சொல்றதில பாயிண்ட் இருக்கு. அப்பா எதுக்கு இவளை அவசரப்பட்டு மூட்டைக்கட்டி அனுப்பணும்?''

''என்னடா சொல்ற? வயசு என்ன ஆச்சு தெரியுமா? என்னடி வயசு உனக்கு?''

''பத்தொன்பது.''

''அப்பா இட்ஸ் எ க்ரைம்பா!'' என்று சின்னுவின் தலையைத் தடவிக் கொடுத்தான். ''குழந்தை இது.''

''குழந்தையா?''

''நான் உங்களை எல்லாம் விட்டுட்டுப் போக மாட்டேன். மதுவுக்கு அப்புறம் யார் சட்டைபட்டன்லாம் தெச்சுப்போடுவா இல்லே மது?''

''விளையாடாதே. இத பாரு சின்னு, நீ படிச்சுக் கிழிச்சு ஒண்ணும் ஆகப்போறதில்லே.''

''வேலைக்குப் போறேன்.''

''என்னடிது? இப்படிப் பேசறு! நல்ல வரன் வலுவில வந்த கல்யாணம் பண்ணிக்கறேங்கறான். இது என்னமோ மோட்டு வளையைப் பார்க்கறதே.''

''நீங்க போங்கோ. நான் இதுங்கூட பேசி நைச்சியம் பண்ணி வைக்கறேன்.'' என்று அம்மா கண்ணைக்காட்டினாள்.

அதற்கப்புறம் சின்னுவை யாரும் கல்யாணத்தைப் பற்றி அபிப்பிராயம் கேட்கவில்லை. அம்மா கல்யாணம் நடக்கப் போவதை நிச்சயமாகக் கொண்டே அடுத்த வாரம் பூராவும் பேசினாள். ''டில்லில குளிர் ஜாஸ்தி இருக்குமாம். ஒரு குப்பங்குவிலிட்டும் போர்வையும் வாங்கிண்டுடணும் அங்கல்லாம் பாலு ரொம்ப மலிவாண்டி.''

'நாத்தனார்க்காரி போட்டுண்டிருந்தாப் பாரு எட்டுக் கல் பேஸரி!....

''அப்பா கிட்ட படிச்சுப் படிச்சு சொல்லியாச்சு. பி.எஃப் லோன் அப்ளை பண்ணுங்கோ பண்ணுங்கோன்னு எல்லாவற்றையும் மௌனமாக கேட்டுக் கொண்டே இருந்தாள். கல்யாணம் வேண்டாம் என்று அடித்துக் கொள்ள வேண்டும் போல இருந்தாலும் சொல்லவில்லை. நிஜமான விருப்பம் என்ன என்பது புரியாத பேதையாக இருந்தாள். ஒருசமயம் பார்த்தால் தனக்குப் படித்து பாஸ் பண்ணி இண்டர்வியூவுக்குப் போய் வேலை கிடைத்து தினசரி பஸ்ஸில் போய் வருகிற திறமை இருக்கிறதாகத் தெரியவில்லை. தன்னுடைய பாத்திரம் தன்னை

ஆயிரக்கணக்கான குடும்பங்கள் காலங்காலமாக
பயன்பட்டுவரும் கிராம்புத் தைலத்தின்
நன்மைகளை ப்ராமிஸில் கண்டுணர்ந்தனர்.

# கிராம்புத் தைலம் கொண்ட இணையற்ற டூத்பேஸ்ட் ப்ராமிஸ்

நீங்களும் ஏன் அதை உபயோகிக்கக்கூடாது?






## ப்ராமிஸ்

பற்சிதைவிலிருந்து பாதுகாக்கிறது,
வாய்க்குப் புத்துணர்ச்சி
தருகிறது மற்றும்
துர்நாற்றத்தை அகற்றுகிறது.

Monde Selection Gold Medal Winner

பல்ஸாரா தயாரிப்பு

ஆரோக்கியமான பற்கள்,
ஈறுகள் மற்றும் புத்துணர்ச்சிமிக்க
மூச்சுக்கு ப்ராமிஸ்.

CHAITRA-BLS-453-R TAM

அறியாமலேயே தனக்கு அமைவது போலத் தான் இருந்தது. கல்யாணம் விரும்பத் தக்கதாகவும் பயம் தருவதாகவும் இருந் தது. கல்யாணத்துடன் தவிர்க்க முடியாமல் அதனுல் ஏற்படப் போகும் விளைவு தன் காலத்துடன் உள்ள தொடர்பு, ஒரு சங்கிலி துண்டிக்கப்படப் போகிறது அப்பாவையும், அம்மாவையும், சகோதரர்களையும் வீட்டை யும், வீதியையும், நட்பையும் துறந்துவிட்டு அன்னியனுடன் செல்ல வேண்டும் என்பது திகிலாக இருந்தது. கல்யாணத்தைத் தவிர வேறு ஏதும் தனக்கு இருப்ப தாகவும் தெளிவாக இல்லே. இது செய்து தான் ஆகவேண்டும். ஒரு மனேவி, ஒரு தாய்! இதுதான் எனக்கு உரிய வாழ்க்கை.

அதில் பாசம் இருக்கப் போவதைப் பற்றி எச்சரிக்கைகள் ஏதும் இல்லே. கணவன் என்று வாய்க்கப் போகிறவன் அவள் மனபிம்பக் கணவனின் ஒரு ஏமாற்றுப் பிரதிதான். அவளுடைய ஆதர்ச கணவன் அவன் அல்ல. அந்த ஆதர்சக் கணவன் ஒரு பொய்தான். கல்யாணம் ஒரு பொதுப்படையான அவசியமான கட்டம். இந்தக் கணவன் தான் என்ப தில்லே. ஒரு கணவனே அடைவது. இந்தக் குழந்தையைப் பெறுவது என்றில்லே! குழந்தை பெறுவது சமூகம் பெண்ணிடம் கேட்டு வாங்குகிற ஒரு விதமான பணி தான் அது! சொந்தமாக அவளுக்கென்று ஏதும் நிறைவேறப் போவதில்லே. மற்றவர் பணித்த காரியத்தை அல்லது இயற்கை அல்லது கடவுள் பணித்த கட்டாயக் காரி யத்தை அவள் செய்யப் போகிருள். செய்ய வேண்டும்! கல்யாணம் ஒரு புனித மான விஷயம். ஒரு கடமை! அதிலிருந்து சந்தோஷத்தை எதிர்பார்க்கக் கூடாது. சந் தோஷம் என்பது இரண்டாம் பட்சம்தான்.

டில்லிக்கு அந்தப் பையன் திரும்பிப் போய் விட்டானும். சின்னுவை ரொம்பப் பிடித்துப் போய் விட்டதாகவும் தினம் எஸ். டி. டி. போட்டு 'என்ன சொன்னுர்கள் என்ன சொன்னுர்கள்?' என்று கேட்டுக் கொண்டிருப்பதாகவும் மாம்பலத்திலிருந்து அவன் மாமா வந்து சொன்னுர். ஒருதடவை அப்பா சின்னு இருக்கிருளா என்று உள்ளே பார்த்துக் கொண்டே, ''எங்களுக்குச் சம்ம தம்னு சொல்லிடுங்கோ'' என்ருர்.

''கல்யாணத்தை எப்ப வெச்சுக்கலாம்?''

''தை மாசம் பொறந்ததும் வெச்சுண்டுட லாம். சத்திரத்துக்குக் கூட புக் பண்ணிட் டேன். மத்த லௌகீகங்கள்லாம் வெள்ளிக் கிழமை வந்தா பேசிடலாம்'' என்ருர்.

அப்பாவும், அம்மாவும் இதற்கு ஆயிரம் அதற்கு இரண்டாயிரம் என்று பேசிக் கொண்டிருப்பதிலிருந்து மறைமுகமாகச் சின்னுவுக்கு தன் கல்யாணம் ஊர்ஜித மாயிற்று. அப்பாமேல் கோபம் வந்தது. ஓசைப்படாமல் ஏற்பாடுகள் செய்து கொண்டு வந்திருக்கிருர். தன்னிடம் ஏன் சொல்லவில்லே என்று கேட்க வேண்டும் போல இருந்தது. கேட்கவில்லே.

சின்னு தனக்கு நிகழப்போவதை முழுமை யாக ஒப்புக் கொண்டு விட்டாள்.


(தொடரும்)

---

ரொட்டிசுட்டும் கவிதைகள் எழுதியுமே தமது வாழ்நாளில் பெரும் பகுதியை வீணுக்கி விட்டதாக உணர்ந்த நிலேயில் சர்ச்சைக்குரிய பிரபல ஆங்கில புரட்சி எழுத்தாளரும் காதற்சுவை கவிஞரு மான கமலாதாஸ் இப்போது தீவிர அரசியலிலும் சமூக சேவையிலும் ஈடு பட முற்பட்டுள்ளார். வங்காளியை மணந்துள்ள கேரளீயப் பெண்மணி யான இவர் கருத்துப்படி, கல்வி வாசனேயற்ற ஊழல்வாதிகளிடம்இன்று அதிகாரம் குவிந்திருப்பதால், எங்கும் நயவஞ்சகம்: ஆடவர்கள் அனேத்தையும் பாழாக்கி விட்டனர்; இன்று மரங்கள் வெட்டப் படுகின்றன; நாளேத் தண் ணீர்ப் பஞ்சம்; அரிசிப் பற்றுக்குறை; மண் எண்ணெய் தட்டுப்பாடு, இவை யெல்லாம் பெண்களேப் பாதிக்கும் பிரச் சினேகள். இவற்றிற்காக உரிமைக் குரல் எழுப்பிப் போராடுவதற்காக மாதர் களுக்கென தனிமையான, முழுமை யானதொரு அரசியல் கட்சியைத்தாம் விரைவில் அமைக்கப் போவதாக இவர் அறிவித்துள்ளார்.

எஸ். ஏ. காதர்.





இருந்தாலும், எடுத்த முயற்சிகள் நல்லபடியாக முடியும். பணவரவு நல்ல விதமாகவே இருக்கும். இம்மாதத்தின் கடைசியில் சிறிதே மனவேற்றுமையும், சண்டைகளும் குடும்பத்தினரிடையே எழும். குழந்தைகளினால் அலைச்சலும் இருக்கும்.

### துலாம்



சமூகசேவையில் ஈடுபட்டவர்கள், பொதுமக்களிடையே தொடர்புள்ளவர்களுக்கு இம்மாதம் எதிர்பாராத புகழ் வந்தடையும். அனைவராலும் போற்றப்படும் உன்னத நிலையை அடைவார்கள். கலைஞர்களுக்கும், விளையாட்டுத் துறையில் உள்ளவர்களுக்கும் எதிர்பார்த்த வெற்றிகள் கிட்டும். வேலைதேடி அலைபவர்களுக்கு இம்மாதம் நல்லதொரு செய்தியைக் கொண்டு வந்து தரும்.

### விருச்சிகம்



வெளியில் நல்ல புகழும், பொருளும் பெற்றிருந்தாலும் குடும்பத்தில் ஒற்றுமையின்மையும், சச்சரவுகளும் எழுவதால் மன அமைதியோ உடல் நலமோ கெடக்கூடும். வெளியூர்ப் பிரயாணங்களோ, புனிதப் பயணங்களோ மனதுக்கு நல்ல ஆறுதலைத் தரும். குழந்தைகளினால் இழந்த மன நிம்மதியும், சந்தோஷமும் கிட்டும். இம்மாதக் கடைசி வாரத்தில் சுப நிகழ்ச்சிகள் உண்டாகி நல்ல முன்னேற்றத்தைக் கொடுக்கும்.

### தனுசு




உங்களைச் சுற்றியுள்ள மனிதர்கள் கூறும் யோசனைகளை மிகவும் சீரியஸாக எடுத்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது. சுயமாகச் சிந்தித்து, தீர யோசித்து முடிவெடுப்பதே இந்தச் சமயத்தில் நல்ல முடிவை உங்களுக்குத் தரும். அதிகம் யாருடனும் விவாதிக்காமல் இருப்பது, குறிப்பாக உணர்ச்சி வசப்படும் சுபாவம் கொண்டவர்களிடம் தர்க்கம் செய்யாமல் இருப்பது நல்லது. இதனால் பல பின் விளைவுகளைத் தடுக்கலாம்.

### மகரம்




நீதிமன்றம் சம்பந்தப்பட்ட வழக்குகளில் சிக்கிக் கொண்டுள்ளவர்களுக்கு இம்மாதம் சிறிது அலைச்சலைத் தந்தாலும், முடிவு உங்களுக்குச்சாதகமானதாகவே இருக்கும். பணம் ஓரளவு விரயமாகவே செய்யும். வெளியூர்ப் பிரயாணங்களும் உண்டாகலாம். குடும்பத்தாரின் அன்பு, ஒற்றுமையின் காரணமாக எந்தப் பிரச்சினைகளையும் எளிதாகச் சமாளித்து விடுவீர்கள். தெய்வானுகூலம் உங்களிடம் நிறையவே உண்டு.

### கும்பம்



அதிகப் பரிச்சயமில்லாத இடங்கள் (அ) ஊர்களுக்குச் செல்ல நேரிடலாம். அதனால் புதிய தகவல்களும், புதிய நண்பர்களின் சேர்க்கையும் உண்டாகும். நீங்கள் திட்டமிட்டுள்ள எதிர்காலத்திற்கு நல்ல அடிப்படையாக இப்பிரயாணம் அமையும். தனியார் நிறுவனங்களில் உள்ளவர்களுக்குப் பதவி உயர்வும், பண வரவும் உண்டாகும். குடும்பத்தாரிடையே சுப நிகழ்ச்சியும், உறவினரின் வருகையால் குதூகலமும் உண்டாகும்.

### மீனம்




எதையும் மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்ளாமல் சாதாரணமாகவே நடந்து கொண்டுவிட்டால் அதிகப் பிரச்சினைகள் இல்லாமல் இம்மாதம் சென்றுவிடும். மிகவும் அவசரமான விஷயங்களைத் தவிர, தீவிரமாக ஆலோசிக்க வேண்டிய விஷயங்களை உடனடியாக முடிக்காமல் தள்ளிப் போடுவது நல்லது. குடும்பத்தாரிடையேயும் அதிகம் வாக்குவாதம் ஏற்படுத்திக்கொள்ளாமல் இருந்தால் ஏற்றத்தாழ்வு இல்லாத மாதமாகப் போகும்.

## 29

கல்யாணம் விமரிசையாகநடந்தது. சின்னுவின்சிநேகிதிகள், காலேஜ் லெக்சரர்கள், அண்ணன்மார்கள், சிநேகிதர்கள் எல்லோரும் வந்திருந்தார்கள். அவர்கள் பக்கம் டில்லியிலிருந்தும் மன்னார்குடியிலிருந்தும் பாபட்லாலிருந்தும் பேருக்குப் பேர் இறங்கிக் கொண்டிருக்க மதுதான் பாவம் சென்ட்ரலுக்கும் எக்மோருக்கும் அலேந்து கொண்டிருந்தான். கல்யாணம் ஆன கையோடயே சாந்தி முகூர்த்தம்வைத்து விட்டார்கள். அவர்கள் வீட்டில் சௌகர்யப்பட வில்லே என்று சத்திரத்திலேயே ஒரு ஓரத்து ரூமை ஜோடித்து வைத்திருக்க சின்னுவுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. வெளியே கூச்சலும் கும்மாளமும் அடங்குகிற வரைக்கும் ராமச்சந்திரனைத் தடுத்துக் கொண்டே இருந்தாள். உடம்பில் பதற்றம் இருந்தது. ராமச்சந்திரன் சம்பளம், வேலே எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னாலும் சின்னுவுக்கு அதெல்லாம் உரைக்கவே இல்லே. மெல்ல மெல்ல வெளி உலகச் சப்தங்கள் அடங்கிப் போனதும் ராமச்சந்திரன் மெல்லப் பேசுவதெல்லாம் பலமாகக்கேட்க சின்னுவை அவன் தொட முனேந்த போது உடம்பெல்லாம் இறுகிப் போனது போல, உறைந்து போனது போல உணர்ந்தாள். ஏன் பயப்படறே என்று கேட்டாலும் ராமச்சந்திரனும் கொஞ்சம் நெர்வஸாகத்தான் இருந்தான். உங்களுக்கு எத்தனே அக்கா, உனக்கு எத்தனே மாமா என்றெல்லாம்கேள்விகளுக்கிடையில் அவள் எதிர்பார்ப்பு மிதந்து கொண்





டிருந்தது. தொட்டுப் பார்ப்பதைத் தடுப்பதில் சுரத்து இல்லை. விளக்குப் போட்டிருக்கும் போதே அவன் தன்மேல் ஆக்கிரமிப்பதை அவள் விரும்பவில்லை. ராமச்சந்திரனுக்குப் பார்க்கவேண்டும் போல உணர்ந்ததை உணர்ந்து கொண்டாலும் தொட்ட இடத்தை யெல்லாம் தடை செய்தாள். ரொம்ப சிணுங்கலுக்குப் பிறகு விளக்கணைத்த பின்பு மெதுவாகப் பேசுவதாக வாக்களித்த பிறகு, தனக்கு நிகழ்வதைச் சின்னு அனுமதித்தாள்.

சின்னுவுக்கு இதைப் பற்றி ஒரு கவலை தான் இருந்தது. அந்தச்சரணில் அவளுக்கு உடனே எதுவும் இன்பம் தோன்றவில்லை. வெட்கத்தையும் தன்மானத்தையும் பறி கொடுத்து விட்டது போல உணர்ந்தாள். இந்த வேதனையை வாங்கிக் கட்டிக் கொள்ளவேண்டுமா என்று தோன்றியது. சின்னு வளர்ந்த சூழ்நிலை அத்தனையும் ஒட்டு மொத்தமாக இந்த ராத்திரியில் ஏதோ சதி செய்து சந்தோஷத்தைக் கெடுப்பது போல் இருந்தது. ராமச்சந்திரன் அவளை லேசாகத்தான் கலைத்தான். பயப்படாதே பயப்படாதே. என்று அடிக்கடி சொன்னான். புஸ்தகம் எல்லாம் படித்திருக்கிறான் போல. உன் சந்தோஷம்தான் முக்கியம் என்று சொன்னது அவளுக்குச் சந்தோஷமாக இருந்தது அதனால் ராமச்சந்திரன் சொன்னதைக் கேட்கலாம் போல இருந்தது. தன்னை ஒரு பொருளாக மதிக்காமல் மனுஷியாக மதிப்பான் போலத்தான் தோன்றியது. ஒன்றுமே பேசாமல் சும்மா இருந்தால் அது அவனுக்கு ஒரு தண்டனை ஆகும். அதனால் சின்னு கொஞ்சம் காதல் போலப் பேசினாள். பேசும்போதே கூச்சப்பட்டாள். இருந்தாலும் பேசினாள். இந்த மாதிரிவார்த்தைகள் எல்லாம் பேசுவோம் என்று சனவிலும் நினைத்திருக்க மாட்டான். இருந்தும் நடப்பதில் அதீதமான சந்தோஷம் ஏதோ ஒரு மழுப்பலாக இருந்தது. கொஞ்ச நேரத்தில் ராமச்சந்திரன் அவளை விட்டு விலகிப் பக்கத்தில் படுத்துக் கொண்டபோது அப்பாடா என்று இருந்தது. இருந்தும் உள்ளுக்குள் இந்த ஆக்கிரமிப்பு அவளுக்குப் பிடித்திருந்தது. துன்பம் இருந்தாலும் அது இருக்க வேண்டும். அதைத் தாங்கிக் கொள்ள வேண்டும். காலையில் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருக்கும் ராமச்சந்திரனை மிகக் கிட்டத்தில் பார்க்கும்போது சின்னுவுக்கு இதுவரை ஏற்படாத புதிய சந்தோஷம் ஏற்பட்டது.

மாப்பிள்ளை உடனே டில்லிக்குப் போய் விடுவதாகவும் ஏப்ரல் மாசம் வீடு பார்த்து விடுவதாகவும் அப்போது அப்பா சின்னுவைக் கொண்டு போய் விட்டு வருவதாகவும் ஏற்பாடு பண்ணிவிட்டு விடை பெற்றபோது சின்னுவுக்குப் பிரிந்து போகிறாரே என்று அழத் தோன்றவில்லை. மாறாக இன்னும் கொஞ்ச நாள் அம்மா அப்பாவுடன் இருக்கப் போகிறோம் என்று சந்தோஷம் இருந்தது.

''சின்னு கல்யாணம் ஆயிடுத்து. இனிமேல் பாவாடை, தாவணி மாக்ஸி எல்லாம் அணியக் கூடாது'' என்று அம்மா சொல்லிவிட்டாள். ''உன் ஆம்படையான் கிட்டப்

# எப்போதும் பெண்

சுஜாதா

போய் நீ என்னவோ கோரம் பண்ணிக்கோ'' தழையத் தழையப் புடவைதான். புயல் வேகத்தில் சமையல் கற்றுக் கொடுத்தாள். கோவில் கோவில் கோவில் என்று அடிக்கடி பக்தி.

கல்யாணம் ஆனதால் சின்னுவுக்கு அங்கீகரிக்கப்பட்ட பெரிய மனுஷித் தன்மை கொடுக்கப் பட்டது. அண்ணன்மார்கள் கொஞ்சம் ஒதுங்கிக் கொள்ள அப்பா கூட அவள் தலையைத் தட்டுவதையும் உச்சி முகர்வதையும் எப்போதாவது முத்தம் கொடுப்பதையும் நிறுத்திக் கொண்டு விட்டார். கல்யாணம் ஆனவர்கள் புது சினேகிதம் கிடைத்தது. வெற்றிலை பாக்குப் போட்டுக் கொள்ள அனுமதிக்கப்பட்டாள்.

காலில் மெட்டி ஒலித்தது. கொஞ்ச நாட்களிலேயே உடம்பு பூசிவிட்டாற்போல் ஆகிவிட்டது. நல்ல வேளை எதும் நடக்கவில்லை என்று அம்மாவிடம் சந்தோஷப் பட்டுக் கொண்டாள். ''மாத்திரை யெல்லாம்நிறைய முழுங்கி வை. போன கையோட வயத்தைச் சாச்சுண்டு வந்துராதே. இத பத்தி உன் ஆம்படையான் ஏதாவது சொன்னானா?''

''இல்லேம்மா.''

''நீதான் சாக்கிரதையா இருக்கணும். நாலாவது நாள்ளருந்து கத்திரி வலி எடுக்கிற வரைக்கும் கிட்டச் சேர்க்காதே என்ன?''

''போம்மா'' என்று அதட்டினாள்.

''எனக்குப் பிரசவம் பார்க்கத் திராணி இல்லே. இப்பத்தான் கல்யாணத்துக்கு அலையா அலைஞ்சு இடுப்பு ஒடிஞ்சு போயிடுத்து. நான் ரிடையராகப் போறவ. அதனால ஏதானா எக்குத் தப்பா ஆயிட்டா அதுக்காக அபார்ஷன் கிபார்ஷன்னு பித்துக்குளிக் காரியம் எல்லாம் பண்ணிக்காதேங்கோ!''

ராமச்சந்திரனிடமிருந்து லெட்டர் வந்தது. நீலக் கடுதாசியே ஒரு மாதிரி கிறக்கத்தை ஏற்படுத்தியது. ஆல்பத்தை எடுத்து வைத்துக் கொண்டு கண்ணாடிக்காரனை நன்றாகப் பார்த்துக் கொண்டாள். நெஞ்சம் பதறியது. பதில் கடுதாசியின்போது ராமச்சந்திரனை எப்படித் தமிழில் கூப்பிடுவது என்று அரை மணி நேரம் திண்டாடிவிட்டு 'டியர்' என்று தீர்மானித்தாள். இப்படிக்கு உங்கள் அடியாள் என்பதை அடித்துவிட்டு, அன்புள்ள முத்தங்களுடன் என்பதைத் திரும்பத் திரும்ப அடித்துவிட்டு அன்புடன், காதலுடன் என்று தைரியம் பெற்று முடித்தாள். தானே கொண்டு போய்த் தபால் ஆபீசில் போட்டாள்.

கரோல்பாக்கில் எழுநூறு ரூபாய் வாடகைக்கு ரெண்டு ரூம் பிளாட் எடுத்திருப்பதாகவும் அட்வான்ஸ் கொடுத்து விட்டதாகவும், வீட்டுக்காரன் பஞ்சாபி, ரொம்ப நல்லவன் என்றும், வீட்டின் வரைபடத்தை எப்படி, பெட் ரூம் எப்படி என்று எல்லாம் எழுதியிருந்தான். அப்பா டில்லிக்கு டிக்கெட் வாங்குவதற்கு இன்னும் நாட்கள் இருக்கிறதென்றும், லீவு விட்டப்புறம்தான் கூட்டம் இருக்கும் என்றும் சொன்னார்

ஒரு தடவை டில்லியிலிருந்து மெடிகல் ஷாப்புக்கு டெலிபோன் பண்ணிக் கூப்பிட்டான். சின்னுவுக்கு டெலிபோன் பேச வரவில்லை. வெச்சுரட்டுமா, வெச்சுரட்டுமா என்று அவசரப்பட்டாள். மாத்திரைப் பாட்டில்களுக்கு நடுவே கணவனோடு கொஞ்சிப் பேசுவது வினோதமாக இருந்தது. மதுதான் அவளை ரொம்பக் கோட்டாப் பண்ணிக்கொண்டிருந்தான். அவளும் அவளை 'உனக்குக் கல்யாணம் ஆறப்ப மாட்டிக்க போறே பாரு! சேர்த்து வைச்சு இருச்கு உனக்கு'' என்றாள்.

அம்மா தகரப் பெட்டியில் ஸ்டவ்விலிருந்து அப்பளக் குழவி வரை சிறுகச் நிறுகச் சேர்த்துக் கொண்டிருந்தாள். சில சமயங்களில் சட்டென்று அம்மா நிறுத்தி வெற்றுப் பார்வை பார்ப்பாள்.

''என்னம்மா?''

''சின்னு நான் உன்னை வளர்த்தவ. பெத்த தாயார் இல்லேன்னாலும் ஏண்டி நீ போறேங்கறதைநினைக்கறப்ப வயித்தைப் பிசையறது''

''எனக்கும் அப்படித்தாம்மா இருக்கு. பேசாம என்னோட டில்லிக்கு வந்துரு. மூணு மாசம் இருந்துட்டுப் வாயேன்.''

''இதெல்லாம் நடக்கிற காரியமா? உங்கப்பாதான் வர முடியும்! இப்பவே பிராமணன் ஹரித்வார் ரிஷிகேஷ்னு பிளான் பண்ணிண்டிருக்கு. இவரை ரெண்டாம் கல்யாணம் பண்ணிண்டதில் ஒரு எடம் அழைச்சுண்டு போனதில்லே. சொந்தமா ஒரு பிள்ளை பெத்ததில்லே. அப்பா அம்மா ஆத்துக்குக்கூடப் போனதில்லே....''

---

மாவு அரைக்கும் பொழுது முதலில் உளுந்தைப்போட்டு அரைத்து விட்டு மாவு எடுக்கும் போது குழியிலேயே கொஞ்சம் உளுந்து மாவை அப்படியே விட்டு, ஓடவிட்டு, ஓடும்பொழுதே ஒவ்வொரு கை அரிசியாகத் தண்ணீருடன் போட்டு அரையுங்கள். அரிசி அரைக்கும் போது அடியில் சிக்கிக் கொண்டு குழவிக்கல் மேலே தூக்கிக் கொண்டு விடாமல் நிதானமாக அரைக்கும். கல்லும் தேயாது.

அரிசி மசிந்ததும், எடுத்து வைத்திருக்கும் அரைத்த உளுந்து மாவை, அரிசி மாவுடன் கொட்டி அத்துடன் தேவையான உப்பையும் போட்டு சிறிதுநேரம் ஓடவிட்டால்எல்லாமாவும் சமமாகக் கலந்துவிடும்.

—சுகுணா.

''அம்மா, சண்டை வந்தா என்னம்மா பண்றது?''

''யாரோட?''

''ராமச்சந்திரன் கூட.''

''பேர் சொல்லக் கூடாது! சண்டை எதுக்கு வரணும்? புருஷா சொல்றதுக்கு அனுசரிச்சுண்டு போயிடு.. அவா எப்பவுமே கொஞ்சம் கோபக்காராதான். முதல் சோபம் ஆம்படையா மேலதான் பாயும். அவா ஜாதியே கார்வார் பண்ற ஜாதி. தழைஞ்சு போகலேன்னு பொம்மனாட்டிக்கு இந்த தேசத்திலே வேற வாழ்வு கிடையாது! சின்னச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் பிடிவாதம் பிடிக்காதே. விட்டுக் கொடுக்கத் தயாரா இரு! ராமச்சந்திரன் பார்த்தா ரொம்பச் சாது மாதிரிதான் இருக்கார். ஆனாலும் கல்யாணத்துக்கு அப்புறம் அவாளுக்கல்லாம் வேற மாதிரி பிடிவாதங்கள் கோவங்கள்ளாம் வரும். எந்தக் கோவமும், பிடிவாதமும் புருஷனை விடக் கல்யாணத்தை விட அதனோட புனிதத்தை விட பெரிசில்லே. அதை மட்டும் ஞாபகம் வச்சுக்கோ. நீ நல்ல குடும்பத்துப் பொண்ணு. நல்லபடியா வளர்ந்தவ. கண்ணுக்கு லட்சணமா இருக்கே. உன்னை அடைஞ்சதுக்கு அந்தப் பையன் கொடுத்து வச்சிருக்கணும். அதேபோல நீயும் சுபிட்சமா சந்தோஷமா இருப்பே. இங்க வா'' என்றாள்.

சின்னு அருகில் செல்ல அவள் தலையைத் தடவி விட்டு அம்மா சற்று கண்ணீர் சிந்தினாள். ''பொம்மனாட்டி ஜன்மம் அப்படி! எப்பவும் ஏதாவது பிரயாணத்துக்குப் புறப்பட்டுண்டே இருக்கணும். உன்னை விட்டுட்டு எப்படி இருக்கப் போறேன்! சினனு நினைச்சாலே வயத்தைக் கலக்கறதே!''

சின்னுவும் அம்மாவுடன் சேர்ந்துகொண்டு அழுதாள். சற்று நேரத்திற்கப்புறம் அவளே, ''என்ன இது வெள்ளிக் கிழமையும் அதுவுமா ரெண்டு பேரும் அழுதுண்டு! அம்மா நான் எங்க போறேன்? திரும்பி இங்க வந்து டேராப் போடப் போறேனா இல்லையா பாரு'' என்றாள்.

எதிர்நோக்கிய பிரிவில் தவிர்க்க முடியாத ஒரு துக்கம் இருப்பதை உணர்ந்தாள். அம்மாவை நன்றாகப் பார்த்துக் கொள்ள வேண்டும் போல இருந்தது. அப்பாவையும் தான்! அண்ணன்மார்களையும்தான்!

யார் இந்த ராமச்சந்திரன்? சின்னுவுக்குத் தெரியாது! இனி அவள் வாழ்நாள் முழுதும் அவனுடன் பந்தப்பட்டு விட்டாள். அவனை நிசமாக யார் என்று தெரியாது. ஒரு நாள் பார்த்தாள். மற்றொரு நாள் மணந்தாள். இன்னொரு நாள் இருட்டில் அவனுடன் இருந்தாள்! இப்போது தன் விதிகள் அத்தனையையும் பார்சலில் கட்டிக் கொண்டு படுக்கை கட்டிக் கொண்டு டில்லியில் அந்த மனிதனை நோக்கிச் செல்கிறாள்! சமூகமும் சதி செய்த விதிகளும் நியமித்து விட்ட கடமை! அதை அவள் செய்தாக வேண்டும். வடக்கே போகும் எத்தனை எத்தனையோ புது மணப் பெண்களில் இவளும் ஒருத்தி. இவளும் வாழ்ந்து வாழ்ந்து பெற்று, புறப்பட்டு, பிரிந்து பிரயாணப்பட்டு, உலகத்தில் உள்ள அத்தனை பெண்களில் ஒருத்தி.

சித்திரை மாசம் பிறந்த கையோட அப்பா ஆபீசிலிருந்து லீவு எடுத்துக் கொண்டு அவளை அழைத்துப் போக ஏற்பாடு செய்து விட்டார். சென்ட்ரலுக்கு எல்லோரும் வந்திருந்தார்கள். ஜி. ஸி. எஃப்காரர் உடம்பு முடியவில்லை என்றாலும் பிளாட்பாரத்தில் வந்துநின்று கொண்டிருந்தார். எல்லாருக்கும் கண்ணருகில் எப்போதும் கண்ணீர் இருந்தது. அம்மாதான் தடை இல்லாமல் அழுதாள். மதுகறுப்புக் கண்ணாடி போட்டுக் கொண்டிருந்தான். அவனை லீவுக்கு வாடா என்று

> தேங்காய் பர்பி செய்யும்போது தேங்காய்த் துருவலுடன் இளம் கேரட்டை துருவி ஒரு கப்புக்கு அரை கப் வீதம் சேர்த்துக் கொண்டால் ருசியாகவும் அழகாகவும் இருக்கும். காய்ச்சி ஊற்றிய பின் மேலே சிறிது பசும்பாலை பரவலாக ஊற்றி பால் அடிவரை இறங்கியபின் ஆறியவுடன் துண்டுகள் போடவேண்டும். மெத்தென்று இருப்பதுடன் சுவையும் கூடுதலாகும்.
>
> —ஆர். ஜானகி.

நெஞ்சைத் துக்கம் அழுத்தக் கேட்டாள். ''எங்க போறே நீ வரமாட்டியா என்ன?'' என்றான் மது. ஸீட்டு பூரா பட்சணமும் பிளாஸ்டிக் கூடையும் தினத் தந்தியில் கட்டின திராட்சைப் பழமுமாக இருந்தன. சின்னுவுக்கு மணியடித்துப் புறப்படப் போகிறது என்று பரபரப்புத் தெரிந்ததும் வாய் விட்டு அழுதாள். ஏனோ அவளுக்கு அந்தப் பிரிவில் பகுத்தறிவையும், மீறின சோகம் இருந்தது. எதையோ எப்படியோ இழக்கப் போகிறோம் என்று எச்சரிக்கை இருந்தது. பிளாட்பாரத்தில் இருந்து புறப்பட்ட அந்தக் கணத்திலிருந்து தான் ஸ்பஷ்டமாக மாறிப்போய்விடுகிறதாக மற்றொரு உலகத்துடன் ராஜி பேச ஓடுவதாகத் தோன்றியது. சன்னல் கம்பியில் கன்னத்தை வலிக்க அழுத்திக் கொண்டு அம்மாவையும் அண்ணன்களையும் கண்ணீர்த் திரையினூடே பார்த்தாள். (தொடரும்)

# பெண் குலத்திற்கோர் வழிகாட்டி!



உலகத்தை யெல்லாம் தன் குரலாலே மயங்கச் செய்து, பக்தியுணர்விலே ஆழச் செய்து, இறைவனுடன் இரண்டறக் கலக்கும் அனுபவத்தைத் தந்து... தான் மட்டும் அடக்கமே உருவாக, தமிழ்ப் பெண்மைக்கே உரிய அன்பும், அருளுமாக... இத்தனைக்கும் பாத்திரமாக விளங்குபவர் எம். எஸ். என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி!

இத்தனை பண்புகளுக்கும் மேலே அவரிடம் சிறப்புடன் குடிகொண்டிருக்கும் குணம் தயாள குணம். இவர் தன் கச்சேரிகளின் மூலமும், பாடல்கள் அடங்கிய ரெகார்டுகளின் மூலமும் அள்ளி வழங்கிய கோவில்கள் தான் எத்தனை! வளமடைந்த நிறுவனங்கள்தான் எத்தனை! திருப்பதி தேவஸ்தானம் முதல், ஜவஹர்லால் நேரு மெமோரியல் ஃபண்ட் வரை எத்தனையோ!

அள்ளிக் கொடுப்பவர்களுக்கு மீண்டும் மீண்டும் தரவேண்டும் என்ற அவாவை அடக்க முடியாது போலும். மீண்டும் அந்தத் தாகம் எழுந்திருக்கிறது, திருமதி எம். எஸ்.ஸிற்கு!

காஞ்சித் தவ முனிவர் சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அத்யந்த பக்தர் டாக்டர் பத்ரிநாத். முனிவரின் ஆசியோடும், பத்ரிநாத்தின் அயராத உழைப்போடும் இன்று இந்தியாவின் தலைசிறந்த மருத்துவ மனைகளில் ஒன்றாகத் திகழ்வது சென்னையிலுள்ள சங்கர நேத்ராலயா. ஆயிரக் கணக்கான துயருறும் நோயாளிகளின் துயர் தீர்க்கும் நிறுவனமாக விளங்கும் இக்கண் மருத்துவ மனையின் வளர்ச்சிக்காகத் தேவையான பொருள் வசூலிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்காகப் பாரதியார் பாடல்கள் அடங்கிய நீண்ட நேர மூன்று எல்.பி. ரிகார்டுகளையும், மூன்று மாபெரும் கச்சேரிகளையும் செய்யத் திட்டமிட்டுள்ளார். இதன் ராயல்டி தொகை முழுவதும் சங்கர நேத்ராலயாவிற்குச் செல்கிறது. செப்டம்பர் 10ம் தேதி பம்பாய் ஷண்முகாநந்தா ஹாலிலும், பின்னர் கல்கத்தா, டெல்லியிலும் அவருடைய கச்சேரிகள் நடக்கவிருக்கின்றன.

கானக் குயிலின் கருணாமிர்தமான இசை ரசிகர்களின் பரவசத்திற்குக் கேட்பானேன்! தனக்கென வாழாது, சமூகத்துக்காகத் தன் குரல் மூலம் மாபெரும் தொண்டாற்றி வரும் இந்தப் பெண்மணியைப் பெண் குலத்திற்கோர் வழிகாட்டி என்று சொன்னால் அது மிகையில்லையே! — எம்.ஆர்.

புதிய ஊர், புதிய வீடு, புதிய உறவு, புதிய பாஷை சின்னுவுக்கு மறுபிறவி எடுத்தாற்போல இருந்தது. பாஷை தெரியாமல், கடைக்குப் போய் ஒரு கிலோ அரிசி ஒரு நெருப்புப் பெட்டி வாங்குவதற்குக் கூட கணவன் ஆபீசிலிருந்து வரும் வரை காத்திருக்க வேண்டியிருந்தது. எதிர்த்தாற்போல் இருந்த ஃப்ளாட்டுக்காரர்கள் எல்லோரும் யார் என்றே தெரியவில்லை. எல்லோரும் அவளை விரோதமாகப் பார்ப்பது போலிருந்தது. சமையல் பண்ணத் தெரிந்திருந்தாலும் முதல் முதல் உப்புப்போடும் போதெல்லாம் தயக்கமாக இருந்தது. ப்ரெஷர் குக்கர் சப்தம் போடுவது பயமாக இருந்தது. காலை கேட்கும் இந்தி சப்தங்கள் பயங்கரமாக இருந்தது. கார்ஹார்ன் ஸ்கூட்டர் சப்தம் எல்லாமே அச்சமளித்தது. உறவுகளைப் பிரிந்த துக்கத்தில் பாரம் வேறு நெஞ்சு பூராவும் கனத்தது. ஒன்பதுக்கு ராமச்சந்திரன் ஆபீஸ் கிளம்பி தன்னை மிகத் தனிமையில் விட்டுப் போவது அச்சுறுத்தியது. அழவேண்டும் போல இருந்தது.


சின்னுவுக்கு அந்த ஆரம்ப நாட்களில் டில்லி என்பது ஒரு சன்னல்தான். அதன் வழியே பார்க்கும் போது எதிர்வீட்டில் டெலிவிஷன் கம்பி தெரியும். தோளில் துண்டைப் போட்டுக் கொண்டு இரண்டு மலையாளப் பையன்கள் துரத்தி விளையாடுவது தெரியும். அந்தப் பக்கம் சிவப்பாக ஒரு பஞ்சாபிப் பெண் மார்பு மூடாமல் நிற்பதும் தெரிய சர்தார்ஜி சைக்கிள் கடை வைத்திருந்ததும் அதில் தொங்கும் டிரான்ஸிஸ்டரும் அழகழகாக குழந்தைகள் வெள்ளை கவுனும் இடுப்பில் சிவப்பு பெல்ட்டும் அணிந்து கொண்டு அதிகாலையில் பள்ளிக்குச் செல்வதும் ''பாட்டில்ஜி'' என்று பால்காரன் கைவண்டியில் பாட்டில் பால் கொண்டு வருவதும் ஒரு தாத்தா போர்த்தி கொண்டு நடந்து போவதும் பெரிசு பெரிசாக எருமைகள் நல்லாவின் அருகில் கட்டியிருப்பதும் எல்லாம் அந்த சன்னல் வழி தான் டில்லி. ராமச்சந்திரன் வரும்வரை இருக்கிற வீட்டைத் திருப்பித் திருப்பி சுத்தம் பண்ணிக் கொண்டிருப்பாள். கட்வாலிப் பெண் ஒன்று பாடிக்கொண்டே தரை துடைக்க வரும். அதன் ஹிந்தி அவளுக்குப் புரியாவிட்டாலும் ஏகப்பட்ட நகைகள் ஒலிக்க ஏதாவது பேசிக்கொண்டே இருக்கும்.

சின்னுவுக்கு தன் கல்யாணத்தின் அர்த்தமே புரியவில்லை. தன்பாட்டுக்குச் சந்தோஷமாக இருந்தவளை சட்டென்று பேசி முடித்து பார்ஸல் பண்ணி டில்லிக்கு அனுப்பிவிட்டதில் ஒரு துரோகம் இருந்தாற்போலத்தான் தோன்றியது. ராமச்சந்திரன் என்பவன் அவள் வந்து சேர்ந்த கணத்திலிருந்து வீடு வாசல் வேலை போல மனைவி என்கிற ஒரு சொத்தையும் ஏற்றுக்கொண்டு தனக்குள் அனுமதித்துக் கொண்டு காலை பிரிந்து சாயங்காலம் திரும்பி வந்தால் வாசலில் நிற்க வேண்டியவள் என்கிற ஒரு அர்த்தத்தில்தான் அவளை கவனிப்பதாகப் பட்டது. ஞாயிற்றுக்கிழமை வெளியே போவது கூட ஒருவாறு மிஷின்தனமாக இருந்தது. காலை கொஞ்சம் நேரம் கழித்து எழுந்திருந்து மெஸ்ஸில் போய் இட்லி சாம்பார் வாங்கி வந்து புத்த ஜெயந்திபார்க் அல்லது நேரு பார்க் ஏதாவது புல்வெளிக்கு கடமை போலச் சென்று அங்கே கொஞ்ச நேரம் அதிகம் பேசாமல் உட்கார்ந்திருந்துவிட்டு போலாமா என்று கிளம்பி யாராவது நண்பர்கள் வீட்டுக்குச் சென்று அங்கே இவள் மற்றொரு சின்னுவிடமும் அவன் மற்றொரு ராமச்சந்திரனுடனும், பேசிவிட்டு மறுபடி 'போலாமா!' அதன்பின் இண்டியாகேட்டில் அல்லது ஏதாவது இடத்தில் உலாவி ராத்திரி ஏழுமணிக்குள் வீட்டுக்கு வந்து சேர்ந்து கொண்டிருக்கும் போதே ராத்திரி படுத்து கொள்வதற்கானஉத்தேசங்களைரகசியமாக பேசிக் கொண்டு — சின்னுவுக்கு இதில் எல்லாம் வெறுப்பு என்றில்லை. ஆனால் கொஞ்ச நாள் போனால் வெறுப்பு வந்து விடும்தான்.

ராமச்சந்திரன் ஆபீஸ் விஷயமாக நிறைய பேசினான். எச். ஆர். ஏ. அர்ரியர்ஸ், மல்ஹோத்ரா போன்ற வார்த்தைகள் எல்லாம் கேட்டுக்கேட்டு சின்னுவுக்கு அத்துப்படியாகி விட்டது. ரீடர்ஸ் டைஜஸ்ட் படி, உன் நாலட்ஜ் இம்ப்ரூவ் ஆகும் என்றான் ராமச்சந்திரன். எதிலும் ஒரு ஒழுங்கு உள்ளவன் காலை ஷேவ் செய்து பிளேடை அதன் கூர் மழுங்காமல் அலம்பி வைப்பது நாசூக்காக இருக்கும். ஹிந்துஸ்தான் டைம்ஸை சரியாக மடித்து வைத்துக் கொண்டு சரியான வெளிச்சத்தில் படிப்பான். ஷேர்களைப் பற்றி கொஞ்சம் பேசுவான். டி.டி.ஏ. யில் ஒரு ஃப்ளாட்டுக்கு மனு போட்டிருப்பதால் டி. டி.ஏ. பற்றி என்ன வந்தாலும் சின்னுவைக் கூப்பிட்டு படித்துக்காண்பிப்பான். இரவு படுத்துக் கொள்ளும் போது அவளை இன்றைக்கு பத்திரமான நாளா என்று

# எப்போதும் பெண்

சுஜாதா



விசாரித்து விட்டுத்தான் தொடுவான். இல்லை யெனில் சட்டென்று அந்தப் பக்கம் திரும்பிக் கொண்டு விட்ட சற்று நேரத்தில் குறட்டைவிட்டு தூங்கிப் போய்விடுவான் மறுநாள் காலை பிளேடு அலம்பவும் இந்துஸ் தான் டைம்ஸைப் பிரித்துக் கொள்ளவும்.

சின்னுவுக்கு இந்த நாட்களில் எல்லாம் அழுகை வந்தது. 'போர்' அடிக்கிறது என்று ஒரே ஒருமுறை ராமச்சந்திரனிடம்சொல்ல போய் அதற்காக கோபித்துக் கொண்டு ராத்திரி வரை பேசாமல் இருந்தான். கல்யாணம் ஆனபின் அதுதான் முதல் தடவை. நான் என்ன சொல்லிவிட்டேன் என்று சின்னுவுக்கு ஆச்சரியமாக இருந்தது. நேரம் போவது அவளுக்கு பிரச்சினையாக இருந்தது. ஒருமுறை கண்ணாடியில் பார்த்துக் கொண்ட போது திடுக்கிட்டாள். நிறைய சதைபோட்டு மாமிபோல ஆகிவிட்டாற் போல இருந்தது.

படுக்கை அறையைப் பார்த்து பயமாக இருந்தது. சன்னல் திரைகளும் அப்பா வாங்கிக் கொடுத்த மெத்தையும் 'ஸ்வீட் ட்ரீம்ஸ்' என்று எம்ப்ராய்டரி போட்ட தலையணை அதில் லேசான வாசனையும் லேசான எண்ணெய்க் கறையும் தினத்தின் கடைசி சரண். தினம் தினம் இரண்டுபேரும் கடமை போல வந்து படுத்துக்கொள்ள வேண்டிய களம். கேட்டும் கேட்காமலும் வந்து எல்லாவற்றையும் பரிசோதனை பார்க்கும் களம். அஞ்சு வருஷத்துக்குக் குழந்தை பெத்துக்கக் கூடாது என்று சொல்லியிருந்தான். அஞ்சு வருஷம் என்பது மலைப்பாக இருந்தது. அடுத்த சம்மருக்கு காஷ்மீர் போவதற்கு இப்போதே எல்.டி.ஸி. எல்லாம் போட்டிருந்தான் உற்சாகமாக. சுமாரான போட்டுக்கு எத்தனை மட்டக் குதிரை சவாரி எத்தனை என்று அடிக்கடி கணக்கைப் போட்டாலும் சின்னுவுக்கு அங்கே போயும் இதே தான் என்று மலைப் பாக இருந்தது. இதுநாள் வரை அவளுக்கு நிஜமான சந்தோஷம் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. ராமச்சந்திரன் செய்யும் சில சின்னச் சின்ன விஷயங்கள் அவளுக்கு ரொம்பப் பிடித்திருக்கும். திடீர் என்று அவள் காலை எடுத்து தன் மடிமேல் வைத்துக் கொண்டு நகங்களை ஆராய்வான். ரொம்பப் பிடித்திருக்கும். கல்யாணம் என்பது இயல் பான உறவைக் கொச்சைப் படுத்தி கடமை யாக்கி விடுகிறது. மென்மையான உணர்ச் சிகள் எல்லாம் கடமை என்பதில் உறைந்து போய் மனைவிக்கு ஏதோ விலைபோன மாதிரி ஏமாற்றமும் இருந்தது. ஆரம்ப நாட்களில் ஆண் பெண் என்கிற நிலையால் இருந்த கவர்ச்சிகரமான சந்தேகங்களும் ஆறு மாசத் தில் தீர்ந்து போய்விட்ட பின் எஞ்சியிருப் பது ஒரு விதமான சரணாகதிதான். உடல் உறவில் இருந்த பயமும் குற்ற உணர்ச்சி யும் விலகிப் போய் விட்டாலும் சில தினங் களின் ராத்திரிக் கணங்களை அவள் அனு பவிக்கவில்லை என்று சொல்ல முடியாது. இந்த தினங்கள் மிகவும் அரிதாகத்தான் இருந்தன. குழந்தை பயம் அதனாலே பற்பல கட்டுப்பாடுகள் அவையெல்லாம் இல்லாமல் ஒன்றிரண்டு நாட்கள்: இருவரும் ராமச்



சந்திரன் சின்னு என்றில்லாமல் ஒரு ஆண் ஒரு பெண் என்று மட்டும் உறவாடும் போது சின்னுவுக்கு பூர்ணமாக ஆனந்தம் இருந்ததுதான் இருப்பினும் உடல் சம்பந்தம் என்பது அவர்கள் உறவின் மொத்தபிம்பத்தின் ஒரு பகுதிதான். மற்றதெல்லாம் கொஞ்சம் பாலை நிலம் போலத்தான் இருந்தது.

இதனுல் அவள் எதிர்ப்புக் குரல் தெரிவிக்க ஆரம்பித்தாள் என்றில்லை. எப்படியோ அவள் வளர்ந்தவிதமும் வம்சமும் அந்த விதியை முழுவதும் ஒப்புக்கொள்ளும் தகுதியை அவளுக்கு அளித்திருந்தன. எப்போதாவது அம்மாவுக்கு இன்லண்ட் லெட்டர் எழுதும்போது கண்ணீர் வருவதைத் துடைத்துக் கொண்டு எழுதுவாள். ஆனுல் இங்கு இவர் சௌக்கியம் போனவாரம் ஆக்ரா மதுரா போயிருந்தோம். ரொம்ப நன்றாக இருந்தது. எப்பப் பார்த்தாலும் 'சின்னு சின்னு' என்று அன்பாக இருக்கிருர் இத்யாதி...

மனசுக்குள் இருந்தாலும் சொல்லக்கூடிய அளவுக்கு யாரும் அவளுக்கு நெருக்கமில்லை.

**பூ அலங்காரம் செய்பவர்களுக்கு...**

பொதுவாக அழுத்த நிறப் பூக்கள் அடிப்புறமாகவோ அல்லது நடுப்புறமாகவோ இருக்கலாம். அதே போல் மெல்லிய நிற மலர்கள் மேற்புறமாகவும், ஓரங்களிலும் அமையலாம். சில சமயங்களில் வெள்ளை மலர்களை நடுவிலோ அல்லது இணைப்பு மலராகவோ பயன்படுத்தினுல் அழகு கூடித் தெரியும்

—லட்சுமி

ஒருவேளை மது லீவுக்கு வந்தால் சொல்லுவாளோ என்னவோ.

ராமச்சந்திரனுடன் முதன் முதலாக பெரிய சண்டையும் போட்டாகி விட்டது. பனியனில் இங்க் கறை பட்டிருந்ததை சரியாகத் தோய்க்கவில்லை என்று கோபப்பட்டான். சின்னு இங்க் கொட்டும் பேனுவைத் தூக்கி எறியச் சொன்னுள். 'உங்களால் முடியும். உங்கப்பா ரொம்பப் பணக்காரர்'' என்றுன். ''கேலிப் பண்ணுவதாக இருந்தால் என்னைப் பண்ணுங்கள் எங்கப்பாவை வேண்டாம். நாங்கள் எல்லாம் ஏழைதான் அதைக் குத்திக் காட்ட வேண்டாம்'' என்றுள். ''இன்றிலிருந்து நானே பனியனைத்துவைத்துக் கொள்கிறேன்'' என்றுன். உங்க இஷ்டம் என்றுள். அந்த கட்வாலி பெண் புரியாமல் புரிந்து இந்த சண்டையைப் பார்த்துக் கொண்டிருக்க அவளைச் சத்தம் போட்டு துரத்தினுன். அதற்கு சின்னு சிரித்தாள் என்று கோபம் அதிகமாகி சிரிக்கிறதா இருந்தா உங்க வீட்டிலே வெச்சுக்கோ. என்றுன். சரி என்னை அனுப்பிச்சிருங்கோ என்றுள். இன்னைக்கே டிக்கெட் வாங்கிண்டு வரேன் என்னிக்குப் போகணும் என்றுன். இன்னைக்கே டிக்கெட் கிடைச்சாலும் போறேன்என்றவுடன் விருட்டென்று சட்டைபையில் தெரிகிற மாதிரி நோட்டுக்களைத் திணித்துக் கொண்டு புறப்பட்டான். எனக்கு சமையல் பண்ண வேண்டாம். வெளியில் சாப்பிட்டுக் கொள்கிறேன் என்றுன். சென்றுன். சின்னுவுக்கு பயமாகவும் அழுகையாகவும் சிரிப்பாகவும் இருந்தது. முதன் முதலில் இருவரும் தத்தம் அலுப்புக்களை வெளிப்படுத்துகிருர்கள். கல்யாணம் என்பதில் எதிர்பார்த்ததற்கும் நடப்பதற்கும் இருந்த வித்தியாசங்களின் ஏமாற்றத்தை காட்டுகிருர்கள். சின்னுவுக்கு அம்மாசொன்ன புத்திமதியெல்லாம் ஞாபகம் வந்தது. இருந்தாலும் முதன் முறையாக கணவனை எதிர்த்துப் பேசியது நியாயம்தான் என்று மனசாட்சி சொன்னது. அதற்கு தனக்குள் பற்பல காரணங்கள் சொல்லிக் கொண்டாள்.

என்னை இப்படி ஜெயிலில் போட்ட மாதிரி வெச்சிண்டிருந்தா இப்படித்தான் ஆகும். அன்னிக்கு ஒரு கவர் வாங்கி வரச்சொன்னேன். எத்தனை நாளாச்சு? ஏழுநாள்! உனக்கு மட்டும் அம்மாவுக்கோ மத்தவாளுக்கோ எழுதறதுன்னு உடனே உடனே கவர் வாங்கிண்டு வரதா? குக்கருக்கு காஸ் கெட் போடணும்னு எத்தனை நாள் சொல்லிண்டு வரேன். உன் ஸ்கூட்டர் ரிப்பேரானு உடனே போறயே? நான் மட்டும் பூச்சியா? ஒருவேளை டிக்கெட் வாங்கிக் கொண்டுவந்து விடுவானே, இல்லை மன்னிப்பு கேட்கச் சொல்லுவான். ம்ஹூம். மாட்டவே மாட்டேன். என்ன தப்பு செய்து விட்டேன். இங்க் கறையை என்னுல் அகற்ற முடியவில்லையென்றுல் நான் என்ன பண்ண முடியும்? நான் என்ன லாண்டரியா வைத்து நடத்துகிறேன். என்ன ஆனுலும் ஆகட்டும் மன்னிப்புக் கேட்க மாட்டேன். ஊருக்குப் போ என்றுல் போக வேண்டியதுதான். நீ சென்னைக்கு வந்து மன்னிப்பு கேட்டு என்னைத் திருப்பி அழைத்துச் செல்கிறவரை அங்கேதான் இருப்பேன். எனக்கு மட்டும் பிடிவாதம் கூடாதா? பார்த்துவிடலாம்!

சாயங்காலம் கணவன் வருகிற ஸ்கூட்டர் சப்தம் கேட்டுக் காப்பியை வாசல் அறையில் வைத்து விட்டு உள்ளே போய் விட்டாள். அவன் வந்து சட்டை மாற்றிக்கொண்டு முகம் கழுவிக் கொண்டதெல்லாம் கேட்டது. காப்பி சாப்பிடுகிருர் என்று எட்டிப் பார்த்தாள்.

''காப்பி சாப்பிட்டாச்சு. எனக்கு வேண்டாம்.'' என்றுன். அதை எடுத்துக்கொண்டு சென்றுள்.

''டிக்கெட் என்னிக்கு வாங்கியிருக்கு?'' என்றுள். அவன் அவளருகில் வந்துகையைப் பிடித்து ''என்னை மன்னிச்சுரு சின்னு'' என்றுன்.

(தொடரும்)

# எப்போதும் பெண்

## 31

கணவன் முழுமையாகத் தன்னை மன்னித்துவிடு என்று சொன்னதும் சின்னுவுக்கு படக்கென்று குழாய் திறந்தாற்போல் அழுகை வந்துவிட்டது. ''போனாப்போறது'' என்று பலமுறை சொல்லிப் பார்த்தும் அழுகை நிற்கவில்லை. ''என் மேலேதான் தப்பு. பனியனை சரியா வாஷ் பண்ணியிருக்கணும்'' என்று அவளும் ''என் மேலதான் தப்பு. பனியன்ல இங்க் கறையிருந்தா என்ன? வேற பனியன் போட்டுக்கறது'' என்று அவனும் மாற்றி மாற்றி என்மேலதான் தப்பு என் மேலதான் தப்பு என்று பிடிவாதம் பிடித்தார்கள். சண்டை போட்டதால் ரொம்ப நெருக்கமாக இருந்தார்கள். ராத்திரி எச்சரிக்கைகளை எல்லாம் காற்றில் பறக்க விட்டார்கள்.

''சின்னு உனக்கு வீட்டில் உட்கார்ந்து உட்கார்ந்து போர் அடிக்கும். ஏதாவது வேலை பார்க்க முயற்சி செய்கிறேன்'' என்றான். ரெண்டு மூன்று சினிமாப் போனார்கள். நீயும் நானும் சரிசமம் என்று அடிக்கடி சொல்லிக் கொண்டே இருந்தான்.

சின்னுவுக்கு இதெல்லாம் தமாஷாக இருந்தாலும் நிஜமாகவே தான் ராமச்சந்திரனின் சரிசமம் இல்லை என்பது உணர்வில் தெரிந்திருந்தது. அவன்தான் சம்பாதித்துக் காசு கொண்டு வருபவன். அவன்தான் அவர்கள் எந்த இடத்தில் வாழ்வது என்பதை நிர்ணயித்தவன். அவன் வேலை மாறினால் இவள் வேலையில் இருந்தாலும் அங்கே மாற்றிக் கொண்டு போக வேண்டும். அவர்கள் வாழ்க்கையின் தரம் அவன் சம்பாத்தியத்தைப் பொறுத்தது. தினசரி எழுந்திருப்பதும் பல்தேய்ப்பதும் குளிப்பதும் வாராவாரம் சினிமாப் போவதும் வருஷாவருஷம் லீவில் போவதும் எல்லாமே அவனுடைய தொழில் சௌகரியத்தைப் பொறுத்துதான். அவன் நண்பர்கள்தாம் அவள் நண்பர்கள். அவன் வாங்கிறதுதான் பத்திரிகை. அவன் தேர்ந்தெடுப்பதுதான் சினிமா. கொஞ்சம் கொஞ்சமாக சின்னுவுக்கு ஏற்படும் அபிப்பிராயங்களில் எல்லாம் ராமச்சந்திரனின் தாக்குதல் இருந்தது. சில வார்த்தைகள் கூட அவனைப் போலவே பிரயோகிக்க ஆரம்பித்தாள். இதில் என்ன சரிசமம் கெட்டு கெடுகிறது!

எதிர் ஃப்ளாட்டில் ஒரு மலையாள ஜோடி ஏறக்குறைய அவர்கள் வயசுதான் இருக்கும். ஐ. ஏ. எஸ். ஆரில் இருக்கிறானாம். அந்தப் பெண் கிரிஜா ஏதோ தானே வேலை செய்கிறதுபோல் பேசுவது சின்னுவுக்கு வியப்பாக இருந்தது. 'இந்த வருஷம் எங்களுக்கு ப்ரமோஷன் கிட்ட

சுஜாதா



ணும்' என்பாள். 'இந்த வருஷம் நாங்க டிப் பார்ட்மெண்ட் பரீட்சை பாஸ் பண்ணணும்' என்பாள். மேனனை ஏறக்குறைய பூட்டி பரீட்சைக்குப் படிக்கச் சொல்வாள். அதிகாலை எழுப்பி காப்பி கொடுத்து தன் கணவனின் முன்னேற்றத்தில் கண்ணும் கருத்துமாக இருந்தாள். மேனனுக்கு பிடிக்காது மேனனுக்கு ஒத்துக் கொள்ளாது என்று எல்லாமே இவள் தான்! இந்த மாதிரி ராமச்சந்திரனை தன்னால் கட்டுப்படுத்த முடியுமா என்று சின்னு யோசித்துப் பார்த்தாள். அதற்கான சாமார்த்தியம் தனக்கு இருப்பதாகத் தெரியவில்லை. ராமச்சந்திரன் என்ன வேலை பார்க்கிறான் என்றே — தினம் தினம் அவன் ஆபீஸ் விஷயமாகப் பேசினாலும் — அவளுக்கு இன்னும் பிடிபடவில்லை. சின்னுவுக்கு வீட்டில் அந்தப் பதவி மாற்றம் கொடுக்கப்பட்டாலும் அதை எடுத்துக் கொள்ள மாட்டாள். கிரிஜாமேனன் அதிகாரம் பண்ணினாலும் ஒருவகையில் அது அவள் தன் கணவனைச் சார்ந்திருப்பதைத் தான் காட்டுகிறது என்று தோன்றியது.

கருவேப்பிலைச் செடி ''நே'' என்று இருக்கிறதா? கவலைவேண்டாம். அவ்வப்போது மிகுதியான புளித்த மோரை விட்டு வாருங்கள். 'ஹாவ்' என்று பூரித்துப் போவீர்கள்.

திருமதி தேவனாதன்

மேனன் வாழ்க்கையில் வெற்றி பெறுவது கிரிஜாவினுடைய சௌகரியத்துக்கு அவசியமாகிறது. தன்னால் சொந்தமாக முடியாததை தன் கணவன் என்னும் ஆயுதத்தின் மூலம் சாதிக்க விரும்புகிறாள். கிரிஜாவும் ஒரு வகையில் அடிமைதான் என்று தோன்றியது. மேனன் காலையில் ஆபிசுக்கு கிளம்பும்போது தப்பித்தால் போதும் என்று உற்சாகமாக கிளம்புவது போல அவளுக்குப்பட்டது. எல்லா மனைவிகளுமே ஒட்டுண்ணிகள்தான் என்று அபிப்பிராயம் உண்டாயிற்று. வேலைக்குப் போகும் பெண்கள் எல்லோரும் நிஜமாகவே சுதந்திரமாக இருப்பார்களா என்று கேள்வி கேட்கத் தோன்றியது. மேலும் தாய்மையையும் வேலைக்குப் போவதையும் சேர்த்து வைத்துப் பார்க்கவே முடியவில்லை.

தாய்மை ஒன்றுதான் ஒரு பெண்ணுக்கு நிஜ சுதந்திரம். கணவனையே கவனித்துக் கொண்டிருக்க வேண்டிய அவனையே சார வேண்டிய கட்டாயத்திலிருந்து நிஜ விடுதலை குழந்தைதான்! அவளுடைய நிஜ சந்தோஷம். அவள் பெண்ணாகப் பிறந்ததற்கு நியாயம். குழந்தையின் மூலம்தான் அவளுக்கு சமூகத்திலும் அந்தஸ்து கிடைக்கிறது. மகப்பேற்றினால்தான் கல்யாணம் என்னும் ஸ்தாபனத்திற்கு அர்த்தமும் காரணமும் வெளிப்படுகிறது.

சின்னுவுக்குத் தான் கர்ப்பமாயிருக்கிறோம் என்பது எப்படியோ அன்றைக்கே தெரிந்து போனாற்போலத்தான் இருந்தது. சொல்லி வைத்தாற்போல் நாள் தவறிப்போனதும் ராமச்சந்திரனிடம் சொல்லும் தருணத்தை ஒத்திப் போட்டுக் கொண்டே இருந்தாள். அவன் காலண்டரைப் பார்த்துக் கண்டு பிடித்தான் 'அதுக்குள்ள எப்படித் தெரியும்' என்றாள் சிணுங்கலாக. அவன் பிடிவாதமாக அவளை அடுத்திருந்த லேடி டாக்டரிடம் அழைத்துச் சென்றான். அந்த அம்மாள் சிவப்பாக கண்ணாடி போட்டுக் கொண்டு சின்ன வயசில் ரொம்ப அழகாய் இருந்திருப்பாள் போல் தோன்றினாள். சிந்திக்காரி கைகள் லாகவமாக சுத்தமாக இருந்தன. கன்ஃபர்ம் பண்ணிவிட்டாள். சின்னுக்கு ரொம்ப சந்தோஷமாச இருக்க ராமச்சந்திரன் தான் கேட்டான் டாக்டரை. அதற்கு அந்த டாக்டர் கோபப் படாமல் ''நான் உயிர்களை கொண்டு வருவேனே தவிர அழிப்பதில்லை. கலைப்பதாக இருந்தால் ஒரு வாரத்திற்குள் டிசைட் பண்ண வேண்டும். அதிகம் தாமதிக்கக் கூடாது. அதில் எதுவும் சிரமம் இருக்காது. அதற்கு ஏகப்பட்ட பேர்கள் இருக்கிறார்கள். நான் செய்வதில்லை'' என்றாள். சின்னுவுக்கு ராமச்சந்திரன் மேல் கோபமாக வந்தது. அவன் என்னவோ கலைப்பதுதான் இயற்கையாக தொடர வேண்டிய காரியம் என்பதுபோல் செயல்பட்டுக் கொண்டிருந்தான். அஜ்மல்கான் ரோடு மூலையில் கண்ணாடி கண்ணாடியாக வைத்திருந்த ஒரு இடத்திற்கு அழைத்துச் சென்றான். டாக்டர் மிட்டல் ஃபாமிலி ப்ளானிங் அட்வைஸர் என்று ஒரு நாளைக்கு ரெண்டு மூன்று அபார்ஷன் பண்ணிக் கொண்டிருந்தடாக்டர். அவளுடன் கண்ணாடி அறைக்குள் குசுகுசுவென்று பேசிவிட்டு 'வா நாளைக்கு காலம்பற வரச் சொல்லியிருக்கா!'' என்றான். வீட்டுக்கு வந்ததும் சின்னு பிடிவாதமாக மாட்டேன் என்று சொல்லிவிட்டாள்.

''மாட்டேன்னா என்ன அர்த்தம்?''

''நான் நிச்சயம் மாட்டவே மாட்டேன்''

''என்ன சின்னு இது, இத்தனை சீக்கிரம் குழந்தை பெத்துண்டா உடம்பு பாழாப் போயிடும். இதில என்ன இருக்கு? ரொம்ப சுலபம். கார்த்தால போயிட்டு மத்தியானம் ஆத்துக்கு வந்துரலாம். அரைநாள் லீவுதான் போடப் போறேன்.''

''மாட்டேன்னா மாட்டேந்தான். எனக்கு இந்தக் குழந்தை வேணும்!''

''சரியாப் போச்சு. உங்கப்பா அம்மாவுக்கு தந்தி கொடுத்து வரவழைக்க வேண்டியதுதான். என்ன இது பைத்தியக்காரத் தனம்! இத்தனை சீக்கிரம் குழந்தை பெத்துக்கறதாவது. இத பாரு உனக்கு நல்லதுக்குத்

தான் சொல்றேன்னு ஏன் உன் மர மண் டைக்குப் புரிய மாட்டேங்கறது?''

''மாட்டேன் மாட்டேன்.''

''வேற ஏதாவது டாக்டர் பார்க்க லாமா?''

''அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். பாத்ததே போறும்.''

ராமச்சந்திரன் கையைப் பிசைந்தான். ''எதுக்கும் யோசிச்சு சொல்லு. காலம்பர அப்பாயிண்ட்மெண்ட் கொடுத்திருக்கேன்.''

''நீங்க போய்ப் பண்ணிக்குங்கோ'' என்று சிரித்தாள். அவனுக்குச் சிரிப்பு வர வில்லை.

ராத்திரி பக்கத்தில் ராமச்சந்திரன் தூங்கிக் கொண்டிருந்த போது சின்னு வயிற்றைத் தொட்டுப் பார்த்துக் கொண் டாள். 'மாட்டேன்' என்று மெலிதாகச் சொல்லிக் கொண்டாள். ஆண் பிள்ளை ளுக்குக் கலைக்கிறது என்றால் எத்தனை சுலப மாக எடுத்துக் கொள்கிறார்கள்.

அதனுடைய முழு அர்த்தமும் ராமச் சந்திரனுக்குத் தெரியுமோ? தன்னுடைய நியாயப்படுத்தப்பட்ட உலகத்தையே கலைப் பது போல அல்லவா இது! தன்னுடைய உரிமையை மதிப்பைப் பறிப்பது போலல் லவா! சின்ன வயசிலிருந்தே சின்னுவுக்குத் திரும்பத் திரும்ப நேராகவும் மறைமுகமாக வும் கற்றுக் கொடுக்கப்பட்ட பாடம். ''நீ குழந்தை பெற அமைந்திருக்கிறாய். பெற்றுக் கொடுப்பது உன் உன்னதமான கடமை' இந்த ஒரு சந்தோஷத்துக்காக எல்லாவற்றையும் தாங்கிக் கொள்ளலாம். பெண் என்கிற பேதமையை மாதாந்திர அவஸ்தையை வீட்டில் போர் அடிப்பதை எல்லாவற்றையும் இந்த ஒரு சலுகைக்காக தாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கையில் கலைப்பதாவது! என்ன அநியாயம் எதற்காக கலைக்கச் சொல்கிறார். தன்னுடைய சுயநலத் துக்காகத்தான்! வீட்டில் இன்னொரு பிரஜை ஏற்பட்டு இஷ்டப்பட்ட மாதிரி சினிமாப் போக முடியாது. திரிய முடியாது. எல்லாம் சுயநலம்தான்! ம்ஹூம். என்ன ஆனாலும் சரி. நான் ஒப்புக் கொள்ளவே மாட்டேன். வேண்டாமென்றால் நீ ஜாக்கிர தையா இருந்திருக்க வேண்டும். மற்ற நாட் களில் இல்லையா? இப்போது கண்டுபிடித்து விட்டுக் கொல்லுவதாவது! அது ஒரு உயிர்! எனக்கு வலிக்கட்டும் பரவாயில்லை. செத்துப் போனாலும் பரவாயில்லை. இதற்கு ஒப்புக் கொள்ளவே மாட்டேன்.

சின்னுவுக்குத் தான் ஒரு தாயாவதை நிச்சயம் எதிர்பார்த்தாள் ஒரு விதத்தில். அவள் கண்ணாலே பார்த்திராத தன்னைப் பிறப்பிப்பதில் செத்துப் போன அம்மாவுக்கு செய்ய வேண்டிய கைம்மாறு போல இருந் தது. அதற்கான உள் தைரியம் அவளுள் பிரவகித்தது. தனக்கு அந்தக் குழந்தை வேண்டும். ராமச்சந்திரன் வேண்டாம் என்று வெறுத்து விட்டாலும் தனியாக அதை வைத்துக் காப்பாற்ற தெம்பு இருக்கிறது என்று என்னவெல்லாமோ எண்ணினாள். தூங்கிப்போனாள்.

காலையில் எழுந்த போது ராமச்சந்திரன் முன்னாலேயே எழுந்து காப்பிப் போட்டு வைத்திருந்தான்.

''என்ன ரெடியா?'' என்றான்.

''என்ன ரெடி?'' என்றாள் திகைத்துப் போய்.

''அங்க போறதுக்குத் தான்!''

''சரியாப் போச்சு ராத்திரி பூரா திருப்பித் திருப்பிச் சொன்னது உங்களுக்கு உறைக் கவே இல்லையா?''

''யோசிச்சுப் பார். மனசு மாறியிருக் கும்னு நினைச்சேன். சின்னு இதோபார். இன்னும் ஒரு வாரம் டயம் இருக்காம். அதுக்குள்ள தீர்மானிக்க வேண்டியது உன் கடமை. உன் பொறுப்பு. அதுக்கப்புறம் குழந்தை பிறந்து அதனால ஏற்படற அவஸ் தைகள் எல்லாம் படற போது பொறுப்பு பூரா உன்னுதுதான். நான் சொல்லி யாச்சு. எச்சரிக்கை பண்ணியாச்சு. அது ரொம்பப் பெரிய விஷயம். குழந்தை வளர்க் கிறதுக்கு ரொம்ப பொறுமை வேணும். அது எனக்குக் கிடையாது. அதனால எங் கிட்ட எந்தவிதமான விசேஷ சலுகையை யும் எதிர்பார்க்காதே. எனக்கு ஆபீஸ் இருக்கு. மூச்சு முட்டும்படியா வேலை இருக்கு. இதையெல்லாம் ஞாபகத்திலே வெச்சுக்கோ.''

''நான் சமாளிக்கிறேன்'' என்றாள்.

''இப்ப சொல்லாதே. யோசிச்சு சொல்லு. சர்க்கார் ரொம்ப ஈஸியா பண்ணி வெச்சி ருக்கா எல்லாத்தையும்தெரியுமோல்லியோ?''

''தெரியும் தெரியும் தெரியும். ஆனா இதைக் கலைக்க வேண்டாம். ஒண்ணு பெத்துக்கலாம்.''

''ரெட்டைக் குழந்தையா பொறந்தா?''

''ரெட்டைப்படையா சந்தோஷப்படு வேன். நீங்க ஒண்ணும் எனக்கு செய்ய வேண்டாம். இந்த மாதிரி அசிங்கங்கள்ளாம் பத்தி நினைக்காம இருந்தா அதுவே போறும்.''

''சரியான மாமியாய்ட்ட நீ'' என்றான்.

(தொடரும்)

ஆடைகளில் சேறு படிந்துவிடு வது மழைக்காலங்களில் தவிர்க்க முடியாததாகி விடுகிறது. அவற் றைப் போக்க, உருளைக் கிழங்கை நறுக்கி, அந்த இடத்தில் தேய்த்து விட்டுத் துவைத்தால் கறை காணாமல் போகும்!

—அரிகோபி

தாய் யார், தந்தை யார், சகோதரி யார், சகோதரன் யார், கணவன் யார், பெற்ற பிள்ளைகள் யார், யாரும் யாருக்கும் இல்லை. உறவே உனக்கு ஒரு கும்பிடு. இப்படி முடி வெடுத்து திருமணம் நடந்து முடிந்த மறுநாளே திரும்பி னேன்.

எனக்கு இது மாபெரும் அதிர்ச்சி. நகைகளை இழந்ததைக் கூட நான் பெரிதாக நினைக்காமல் மனதை சமாதானப் படுத்திக் கொண்டு எவ்வளவோ காலமாயிற்று. ஆனால் இந்த அவமதிப்பு என்னைச் சுட்டெரித்தது. மனவேதனையால் முன்பே ஆஸ்த்மா நோயாளியாக இருந்த நான், பலமான தாக்குதல் களுக்கு ஆளானேன். கடுமையான நோயின் பிடியில் துவண்டு தத்தளித்தேன்.

இரவெல்லாம் இருமலும் இளைப்புமாய்த் தூங்காமல் அவதிப்பட்டாலும், காலையில் என் கடமைகளை நான் செய்தே ஆகவேண்டும். குழந்தைகளைக் கவனித்து பள்ளிக்கு அனுப்பவும் வேண்டும். சமையல், துவைத்தல், பாத்திரம் துலக்குதல், இன்னும் மாலையில் குழந்தைகளின் பாடங்களைக் கவனித்தல் ஆகியவற்றையும் செய்தே ஆக வேண்டும்.

மாத்திரைகளை வாயில் இட்டு வெந்நீர் ஊற்றி விழுங்கி விட்டுப் பாடங்களைச் சொல்லித் தர ஆரம்பிப்பேன். அப்படியே டாக்டரிடம் தடுமாறிக் கொண்டு போவேன். என்னைப் பார்த்ததும் முதலில் இஞ்செக்ஷன் கொடுப்பார் டாக்டர். அடுப்பில் குக்கரில் சாதம் வெந்து கொண்டிருக்கும். இல்லாவிட்டால் துவைத்த துணிகள் வாளியில் போட்டபடி இருக்க, டாக்டரின் கருணையைத் தேடிப் போவேன்.

இப்படிப்பட்ட நிலையில் இருந்த நான், ஆச்சரியப்படத் தக்க விதத்தில் நோயிலிருந்து மீண்டு வருகிறேன். மருந்தே என் உணவு என்று இருந்த நான், இப்போது மருந்தின் அளவைக் குறைத்துக் கொண்டு வருகிறேன்.

இப்போது வாழ்க்கையை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு விட்டேன். இதுவரை நான் அடைந்த தோல்வி களுக்கு யாரையும் காரணமாக்க மாட்டேன். இனிமேல் நான் வாழ்க்கையில் வெற்றிகளைச் சந்தித்தே தீருவேன் என்ற திட மான முடிவே, என் திருப்புமுனை.

என் வாழ்வின் வெற்றி தோல்விகள் என் கையில் தான் இருக்கின்றன என உணர்கிறேன், இதனை உணர வைத்தது என் அருமைத் தம்பியும், "STAY ALIVE ALL YOUR LIFE" என்ற புத்தகமும்தான்.

என் முன்னேற்றத்துக்குக் காரணமான முக்கியமான வரிகள், அப்புத்தகத்தில் இருந்து,

''வாழ்க்கையில் நமக்கு என்ன நேரிடுகிறது என்பது முக்கியமல்ல. நாம் அதற்கு எப்படி ரியாக்ட் செய்கிறோம் என்பதுதான் முக்கியமான விஷயம்.''

**ஆர். விஜயலட்சுமி** சென்னை

(இன்னும் வரும்)

"ஜெயிலுக்குப் போனால் உங்களுக்குச் சரியான சாப்பாடு கிடைக்காது. கிடைக்கிற சாப்பாடும் போதுமானதாக இருக்காது. சிறைத் துணிகளைத்தான் நீங்கள் அணிய வேண்டியிருக்கும். நிச்சயம் அவை உங்களுக்குச் சௌகரியமாக இருக்காது. உங்களுக்குக் கடுமையான வேலைகள் கொடுப்பார்கள். அதைச் சரியாகச் செய்யா விட்டால் வார்டர்கள் உங்களைத் திட்டுவார்கள். அடித்தாலும் அடிப்பார்கள். இன்னும், படுக்கை, குளிப்பு, பாத்ரூம் வசதிகள் எல்லாமே மோசமாக இருக்கும். வாயிலெடுக்கக் கூட வரும். இவ்வளவையும் நீங்கள் சகித்துக் கொள்ள முடியுமா என்பதை யோசியுங்கள்.

வருஷம் 1913.

இடம்: தென் ஆப்பிரிக்காவில் உள்ள டால்ஸ்டாய் பண்ணை.

பேசியவர் காந்திஜி.

எதிரே நின்ற பன்னிரண்டு பெண்களில் பதினோரு பேர் தமிழ்ப் பெண்கள். பாதிப் பேருக்குக் கையில் குழந்தைகள்! சிலர் கர்ப்பிணிகள்! இரண்டுபேர் திருமணமாகாதவர்கள். அந்தப் பெண்மணிகளில் யாரும் கலங்க



வில்லை. ''நாங்கள் எந்தக் கஷ்டங்களுக்கும் பயப்படவில்லை. காந்திஜி! அநீதியை எதிர்க்க நாங்கள் என்ன தியாகமும் செய்யத் தயார்'' என்றார்கள்.

அந்த வீராங்கனைகளின் பெயர்கள்:

1. திருமதி தம்பி நாயுடு
2. திருமதி என். பிள்ளை
3. திருமதி கே. முருகேச பிள்ளை
4. திருமதி ஏ. பெருமாள் நாயுடு
5. திருமதி பி. கே. நாயுடு
6. திருமதி கே. சின்னசுவாமி பிள்ளை
7. திருமதி என். எஸ். பிள்ளை
8. திருமதி ஆர். ஏ. முதலிங்கம்
9. குமாரி மீனாட்சி பிள்ளை

# வழிகாட்டும் பெண்மணிகள்-1



10. குமாரி வைகும் முருகேச பிள்ளை
11. திருமதி பவானி தயாள்.

காந்திஜிக்கு மகிழ்ச்சி! இருந்தாலும் கவலை இருந்தது. இதுவரை அவர் புதிதாக ஆரம்பித்த அந்த சத்தியாக்கிரகம் என்னும் போராட்டத்தில் பெண்களைச் சேர்த்துக் கொள்ளவில்லை. ஆண்கள்தான் பங்கெடுத்திருக்கிறார்கள். பலன்களை அனுபவித்திருக்கிறார்கள். அடி, உதை, ஜெயில் எல்லாம் அவர்களுக்குச் சாதாரணமாகி விட்டது. ஆனால் பெண்கள் இவைகளைத் தாங்குவார்களா?

மனம் கலக்கம் அடைந்தாலும் பெண்களை நிச்சயம் இதில் சேர்த்துக் கொள்ள விரும்பினார்.

காரணம் இருந்தது.

அவர் எதிர்க்கப் போகும் சட்டம் பெண்களைத்தான் அதிகம் பாதிக்கக்கூடிய சட்டம்.

ஏதோ ஒரு கேஸ் ஆப்பிரிக்க சுப்ரீம் கோர்ட்டுக்குப் போக, அது கிறிஸ்துவச் சடங்குகளோடு நடத்தப்படும் திருமணம் தான் சட்டரீதியானது, மற்றவை சட்டத்திற்குப் புறம்பானவை என்று தீர்ப்புக் கொடுத்து விட்டது.

இந்தத் தீர்ப்பினால் இந்தியர்கள்தான் நிறையப் பாதிக்கப்படுவார்கள்.

இந்தத் தீர்ப்பினால் எல்லா இந்து, முஸ்லீம், பார்ஸி திருமணங்களும் பாதிக்கப்படும்.

இந்தத் தீர்ப்பு வந்ததும் காந்திஜி உடனே ஆப்பிரிக்க அரசாங்கத்துக்குக் கடிதம் எழுதிப் பார்த்தார்.

அவர்களிடமிருந்து நியாயம் கிடைக்கவில்லை.

எனவே இனி அவரது புதுக் கண்டுபிடிப்பான சத்தியாக்கிரகம்தான் அவரது ஒரே ஆயுதம். அதை அவர் உபயோகப்படுத்த வேண்டியதுதான்.

பெண்கள் தயார் ஆனதும் காந்திஜிக்கு இன்னொரு பிரச்னை நினைவுக்கு வந்தது.

ஆப்பிரிக்க அரசாங்கம் அவரது சத்தியாக்கிரகத்தை நன்றாகப் புரிந்துகொண்டு விட்டது.

சத்தியாக்கிரகிகளின் ஒரே லட்சியம் சிறைக்குப் போவதுதான் என்று அறிந்திருந்தது.

ஆகவே சத்தியாக்கிரகம் செய்யும்போது அவர்களைக் கைது செய்யாமல் அப்படியே

விட்டு விட்டால் அவர்களது லட்சியம் நிறைவேறாது என்று நினைத்தார்கள்.

இந்தக் காரணத்தால் பல இடங்களில் சட்டம் மீறுபவர்களை எதுவும் செய்யாமல் சும்மா விட்டு வந்தார்கள்.

இது காந்திஜிக்குப் பிரச்னையைக் கொடுத்தது.

அவரது சத்தியாக்கிரகம் பலன் அளிக்க வேண்டுமானால், சத்தியாக்கிரகிகள் சிறைக்குப் போக வேண்டும்.

அப்போதுதான் பொதுமக்களின் மனங்கள் தூண்டப்படும். அவர்கள் ஏகோபித்து எழுவார்கள். சத்தியாக்கிரகிகளுக்குத் தங்கள் ஆதரவைத் தருவார்கள். முடிவில்அரசாங்கம் வேறு எதுவும் செய்ய முடியாமல் சத்தியாக்கிரகிகளின் விருப்பங்களை நிறைவேற்ற வருவார்கள்.

இதற்கு மாறாக, அரசாங்கம் யாரையும் கைது செய்யவில்லை என்றால் எல்லாமே வீணாகப் போய்விடும்.

காந்திஜி யோசித்தார்.

இதற்கு என்ன செய்வது?

ஒரு வழி தென்பட்டது.

நேட்டாலில் நியூ காஸில் என்னும் இடத்தில் நிலக்கரிச் சுரங்கங்கள் இருந்தன.

இவற்றில் இந்தியத் தொழிலாளிகள் தான் உழைத்தார்கள்.

**காய்கறிகளை கழுவும் பொழுது அதிக நேரம் நீரில் ஊறவைப்பதால் தாது உப்புகளும், வைட்டமின்களும் அழிந்து விடுகின்றன. அதனால் முழு காய்கறிகளை அரிவதற்கு சற்று முன்புதான் சீக்கிரம் கழுவி எடுக்க வேண்டும்.**

இவர்கள் எல்லோரையும் வேலை நிறுத்தம் செய்ய வைத்தால் என்ன?

இதற்காகப் பெண் சத்தியாக்கிரகிகளைப் பயன்படுத்தினால் என்ன?

வேலைநிறுத்தம் செய்யும்படி அவர்களை இந்தப் பெண்கள் தூண்டி விட்டால், அரசாங்கம் நிச்சயம் இந்தப் பெண்களைக் கைது செய்வார்கள். அது போதும் காந்திஜிக்கு! ஊரே அமர்க்களப்படும். செய்திகள் தீப் போலப் பரவி எங்கும் அரசாங்கத்துக்கு எதிராகக் கண்டனங்கள் கிளம்பும்.

சரி, வேலை நிறுத்தத்தைத் தூண்டிவிடுவது எப்படி? அதற்கு ஒரு காரணம் வேண்டாமா?

கைவசமாக ஒரு காரணமும் கிடைத்தது. இந்தியத் தொழிலாளி மீது ஒரு மூன்று பவுன் அநியாய வரி விதிக்கப்பட்டிருந்தது.

இந்தியர்கள் மட்டும் இதில் பாதிக்கப்பட்டவர்கள்.

இதை எதிர்த்து வேலை நிறுத்தத்தைத் தூண்டிவிட்டால் போகிறது.

இதை யெல்லாம் பெண் சத்தியாக்கிரகிகளிடம் காந்திஜி கூறினார். எல்லோரும் அதை ஆமோதித்தார்கள்.

விஷயம் ரகசியமாக மற்ற பெண்களுக்கும் பரவ அவர்களும் இந்த சத்தியாக்கிரகத்தில் கலக்க முன்வந்தார்கள்.

குறித்த நாளில் சத்தியாக்கிரகம் ஆரம்பித்தது.

பெண் சத்தியாக்கிரகிகள் நியூகாஸிலுக்குப் போனார்கள்.

தங்கள் திட்டப்படியே சுரங்கத் தொழிலாளிகளிடம் அவர்கள் வேலை நிறுத்த பிரசாரத்தைத் தொடங்கினார்கள். மூன்று பவுன் வரியை வெகுவாகத் தாக்கிப் பேசினார்கள்.

சுரங்கத் தொழிலாளிகளில் பெரும்பாலோர் தமிழர்கள்தான்! அதனால் தமிழ்ப் பெண் சத்தியாக்கிரகிகள் அவர்களிடையே மிகச் சரளமாகவும் சகோதர பாவத்துடனும் பிரசாரம் செய்ய முடிந்தது.

பலன்!

அந்தச் சுரங்க நகரம் முழுவதும் தீப்பிடித்தது போல் ஆகியது.

தொழிலாளர்கள் திரண்டு எழுந்தார்கள்.

பெண்கள் அவர்களை வழிநடத்துவது அவர்களுக்கு ரொம்பவும் பிடித்துப் போயிற்று.

எங்கும் வேலை நிறுத்தங்கள் ஆரம்பமாயின.

சுரங்க முதலாளிகள் அனைவரும் வெள்ளைக்காரர்கள். அவர்கள் சும்மா இருப்பார்களா?

அவர்கள் அரசாங்கத்தைத் தூண்டிவிட, அரசாங்கம் செயலில் இறங்கியது.

பெண் சத்தியாக்கிரகிகள் அனைவரும் கைது செய்யப்பட்டார்கள். (21, அக்டோபர், 1913)

அனைவரும் மூன்று மாதம் சிறை தண்டனை விதிக்கப்பட்டார்கள்.

பெண்கள் கைது ஆகி சிறைக்குப் போனால் கேட்க வேண்டுமா?

செய்தி எல்லோரையும் உலுக்கியது. தங்கள் சார்பில் பெண்கள் சிறை சென்றார்கள் என்று தெரிந்ததும் தொழிலாளர்கள் அனைவரும் ஏகோபித்து விட்டார்கள். எங்கும் வேலை முடக்கம்! எங்கும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம். எல்லோரும் காந்திஜியின் தலைமைக்குக் கீழ் ஒன்று சேர்ந்தார்கள். வெற்றிப் பாதை நோக்கி ஒரு பெரிய இயக்கம் ஓட ஆரம்பித்தது.

சிறை சென்ற பெண்களில் ஒருத்திதான் வள்ளியம்மா ஆர். முனுசாமி முதலியார் என்பவள். அவளுக்கு வயது பதினாறு. உற்சாகத்துடன் சத்தியாக்கிரகத்தில் பங்கு கொண்டாள்.

சிறையின் கொடுமை அதிகம். உணவு மிகவும் மோசம். வேலையோ கடுமை! வியாதியோ வெட்கையோ யாருக்கும் வேறு வித உணவோ, பத்திய உணவோ சாப்பிட அனுமதி இல்லை.

பலர் இந்தக் கடினங்களால் இளைத்து எலும்பாகி விட்டார்கள்.

சிலர் வெளிவந்தும், அவர்களை உடல்தேற வைப்பது வெகு கஷ்டமாகி விட்டது.

இந்தப் பெண்மணிகள் அனைவரிலும் காந்திஜியின் மனத்துக்கு மிகவும் பிரியமாகிப்

போனவள் அந்தப் பதினறு வயது வள்ளியம்மாதான்.
ஜோகன்னஸ்பர்க்கைச் சேர்ந்தவள் அவள். நெட்டையாக இருப்பாள். சிறை சென்ற சில வாரங்களில் அவள் படுக்கையில் படுக்க வேண்டி வந்தது. உடல் நலம் இல்லாமல் இருந்தும், சிறைக் கொடுமைகள் எல்லாவற்றையும் புன்னகையுடன் ஏற்றுக்கொண்டாள்.
மூன்று மாத தண்டனையும் எப்படியோ முடிந்து விட்டது.
விடுதலை அடைந்ததும் படுக்கையில் படுத்து விட்டாள்.
காந்திஜிக்கு விஷயம் தெரிந்தது. ஓடோடி வந்து அவளைப் பார்த்தார்.
அந்தப் பெருமானின் கண்களில் நீர் வந்து விட்டது.
வள்ளியம்மா துரும்பாக இளைத்துப் போயிருந்தாள்.
இருப்பினும் காந்திஜி வந்ததும் அவள் புன்னகை புரிந்தாள்.
''வள்ளியம்மா!'' என்று தழதழப்புடன் அழைத்து அவள் கைகளைப் பிடித்துக்கொண்டார் காந்திஜி.
''வள்ளியம்மா! ஜெயிலுக்குப் போனது உனக்கு வருத்தமா இருக்கிறதில்லே?'' என்று கேட்டார் அவர்.
''வருத்தம்!'' என்ருள் வள்ளியம்மா. ''ஏன் வருத்தம்! இப்போ என்னைத் திரும்பவும் கைது செய்தாக்கூட நான் சிறை போகத் தயார்!'' என்ருள் அவள்.
''அப்படிப் போறதினலே நீ இறந்துபோனயானு?'' என்று நிறுத்தினர் காந்திஜி.
''கவலையே பட மாட்டேன். தாய் நாட்டுக்குச் சாகிறதுக்காக யாரேனும் இஷ்டப்பட மாட்டார்களா?'' என்ருள் அவள்.
(மேலே நடந்த உரையாடலை காந்திஜி அப்படியே எழுதி வைத்திருக்கிருர்.)
காந்திஜிக்குக் கண்ணீர் பொங்கியது. வள்ளியம்மாவுக்கு ஆறுதல் கூறிவிட்டுப் புறப்பட்டார்.
அந்தப் பெண் பிழைப்பாளா என்பது சந்தேகம்! வருத்தத்துடன் போனர்.
சில நாட்கள்தான்.
வள்ளியம்மா மரணம் அடைந்தாள். காந்திஜி அவளைப் பார்க்க ஓடோடி வந்தார். பார்த்தார். கண்ணீர் உகுத்தார்.
அவர் ஆரம்பித்த புதுக் கண்டுபிடிப்பான சத்தியாக்கிரகத்தில் முதன் முதல் கலந்து கொண்ட அந்தப் பெண்கள் அணியை அவரால் மறக்க முடியாது.
அதுவும் அதில் வள்ளியம்மாவின் தியாகத்தை மறக்கவே முடியாது.
மனம் உருகி அவர் எழுதி வைத்துள்ள வாசகங்களை அப்படியே தருகிறேன்.
''நான் எப்படி அந்தப் பெண்ணை மறப்பேன்? நான் கடைசியாகப் பேசிய சில நாட்களுக்குள் அவள் மறைந்து விட்டாள். தனது அழியாத பெயரை நிறுத்திவிட்டுப் போய்விட்டாள். பல இடங்களில் அவளுக்காக அனுதாபக் கூட்டங்கள் நடந்தன. இந்தியாவின் இந்தத் தவப் புதல்வியின் உன்னத தியாகத்தை நினைவு படுத்தும்படி ஒரு 'வள்ளியம்மா நினைவு மண்டபம்' கட்ட விரும்பினேம். ஆனல் அது நிறைவேறவில்லை. பல கஷ்டங்கள் வந்தன. பல வேற்றுமைகளும் வேறுபாடுகளும் தோன்றி காரியத்தில் இறங்க விடாமல் செய்து விட்டன. அதனல் என்ன? கல்லிலும் சுண்ணும்பிலும் ஒரு நினைவு மண்டபம் கட்டினல்தான் ஆயிற்ரு? வள்ளியம்மாவின் சேவை என்றும் அழியாதது. தனது சேவைக் கோயிலை அவள் தன் கைகளாலேயே எழுப்பினள். இன்னும் கூட பலரது இதயக் கோயிலில் அவளது புகழ் மிக்க உருவம் பொறிக்கப் பட்டிருக்கும். இந்தியா வாழும் வரை வள்ளியம்மாவின் திருப்பெயர் தென் ஆப்பிரிக்கச் சரித்திரத்தில் சிரஞ்சீவியாக நின்று கொண்டிருக்கும்.''
எவ்வளவு தூரம் உருகினல் காந்திஜி மேற்கண்ட விதம் தாமே எழுதுவார்? அவரது சத்தியாக்கிரகம் தமிழரிடையே முதன் முதல் ஆரம்பித்தது என்பதும், ஒரு தமிழ்ப் பெண்மணியின் தியாகம்தான் அதில் முதல் தியாகமாக இருந்தது என்பதையும் யார் மறுக்க முடியும்?

---

**சமைக்கும்போது சோடாமாவைச் சேர்ப்பது அவற்றிலுள்ள 'பி' (B) வைட்டமின்களை அழித்துவிடும்.**

---

இந்த வரலாற்றை எழுதி முடித்ததும் என் கண்களை மூடுகிறேன். ஒரு காட்சி!
சென்னை மெரினவில் பதினறு வயது இளம் பெண் ஒருத்தியின் சிலை ஒன்று கம்பீரமாக நிற்கிறது.
'ஒரு சின்னப் பொண்ணுக்குச் சிலையா?' என்று பலரும் அதிசயப்பட்டு பக்கத்தில் போய்ப் பார்க்கிருர்கள்.
வள்ளியம்மாவின் பெயரும் தியாகமும் குறிக்கப்பட்டு, கீழே காந்திஜியின் மனத்தை உருக்கும் வாசகங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன.
அதைப் படித்துவிட்டு ஓரளவு பழைய சரித்திரத்தைத் தெரிந்து கொண்ட பலரும் மனசில் வள்ளியம்மா பற்றிய கனமான நினைவோடு போகிருர்கள்!
கண்ணை விழிக்கிறேன். எனது இந்தக் கனவு நிறைவேறக் கூடாதா? சுதந்திரம் அடைந்த சூட்டோடு நாம் செய்யத் தவறியதை இப்போது யாராவது செய்யக் கூடாதா? ஒரு தமிழ்ப் பெண்ணின் உன்னத தியாகத்தின் மெய்க்கீர்த்தி தமிழகத் தலைநகரிலே பொறிக்கப்படக் கூடாதா?
எங்கேங்கோ அவள் பெயரைச் சூட்டியிருக்கிருர்கள். உண்மை! ஆனல் அவைகளுக்குப் பரிமாணம் பற்ருது.



# பெண்களின் சில நிரந்தரப் பிரச்னைகள்

டாக்டர்: கமலம்மா M.D. D.G.O.

பெண்கள் தாய்மையுறும்போது முதல் மூன்று மாதக் கட்டத்தைப் பற்றிச் சென்ற இதழில் பார்த்தோம். நான்கு, ஐந்து, ஆறு ஆகிய இரண்டாம் கட்ட மாதங்களை 'நடு மாதங்கள்' என்று சொல்வார்கள்.

இந்தச் சமயங்களில் பொதுவாகப் பல பெண்களுக்கும் ஏற்படுகின்றபிரச்னைகள்வயிற்றுவலி, கால் வலி, காலில் நரம்பு இழுத்துக் கொள்ளுதல், நெஞ்சு எரிச்சல், வலி போன்றவைதான்.

**வயிற்று வலி:**

கர்ப்ப காலத்தில் கொஞ்சம் வ்யிற்று வலி வந்தவுடனேயே 'ஐயோ, நமக்கு அபார்ஷன் ஆகிவிடுமோ' என்று பயந்துபோய் விடுகிறார்கள். இதற்காக டாக்டர்களை அணுகும் போது, அவர்களில் சிலர் தற்காலிக நிவாரணத்துக்காக 'ஹார்மோன் இன்ஜெக்ஷன்' போடுகிறார்கள். இது முற்றிலும் தவறானது.

வயிற்று வலியும், பின்முதுகு வலியும் கர்ப்ப காலத்தைப் பொறுத்தவரை இயற்கையானது என்பதுதான் என்னுடைய எண்ணம். இவற்றிற்கும், கர்ப்பப் பையிலுள்ள சிசுவுக்கும் சம்பந்தம் கிடையாது. கர்ப்பப் பை சிசுவின் வளர்ச்சியால் விரிவடையும் போது, சுற்றியுள்ள தசைகளும், நரம்புகளும் விலகுகின்றன. இதனால்தான் முன் பின் இரண்டு பக்கங்களிலும் வலி ஏற்படுகிறது. இதற்கு ஓரளவு ஓய்வு எடுத்துக் கொண்டாலே போதும்.

வயிற்று வலி அதிகமாக இருந்தால் அது அநேகமாக மலத்தில் பூச்சிகள் இருப்பதால் இருக்கலாம். வயிற்று வலி என்று வரும் கர்ப்பிணிகளை நான் 'மலப் பரிசோதனை' செய்யச் சொன்னபோது அவர்களில் தொண்ணூறு சதவிகிதம் பேருக்கு 'இந்த 'அமீபிக் இன்ஃபெக்ஷன்' இருப்பது தெரிய வருகிறது. இதற்கு என்ன காரணம்?

நம்முடைய ஊர்களில் தண்ணீர் சுத்தமாக இல்லாததுதான் காரணம். படித்த பெண்கள்கூடதண்ணீரைக்கொதிக்கவைத்துக் காய்ச்சிக் குடிக்க வேண்டும் என்பதை மறந்து விடுகிறார்கள். அதிலும் கர்ப்பம் தரித்த பெண்கள் தண்ணீரைக் கொதிக்க வைத்து ஆறவைத்தே குடிக்க வேண்டும். வெளியே உணவு அருந்துவதையோ, தண்ணீர் குடிப்பதையோ தவிர்க்க வேண்டும். வீட்டிலும், சட்னி, மோர் போன்றவற்றிற்குத் தண்ணீர் ஊற்றும்போது கொதிக்க வைத்து ஆறவைத்த நீரையே பயன்படுத்த வேண்டும். இப்படிச் செய்தால் இந்த 'மலப் பூச்சிகள்' மறைந்து வயிற்று வலி தானாக மறைந்து விடும்.

**கால் வலி:**

அதே போலக் கால் வலியும் கர்ப்பிணிப் பெண்களுக்குப் பொதுவானதுதான். கர்ப்பப் பையில் பளு ஏற ஏற காலில் வலுவில்லாத காரணத்தால் வலி ஏற்படுகிறது. அதற்கும் ஓரளவு ஓய்வெடுத்துக் கொண்டால் போதும். ஆனால், காலில் நரம்பு இழுத்துக் கொள்ளுதல், சுருட்டிக் கொள்ளுதல் என்று சொல்வார்கள். இந்த அதீதமான வலி ஏற்பட்டால் அது கால்ஷியம் குறைவால்தான் ஏற்படும். இதற்குக் 'கால்ஷியம்' ஊசிகளைப் போட்டுக் கொண்டால் சரியாகிவிடும்.

ஆனால் பொதுவாகவே கர்ப்ப காலத்தில் உடலில் பல பெரும் மாறுதல்கள் ஏற்படுவதால் அசௌகரியங்கள் ஏற்படலாம். இதற்காகவெல்லாம் டாக்டர்களிடம் ஓடி வலி நிவாரண மாத்திரைகளை, ஹார்மோன் ஊசிகளைப் போட்டுக் கொள்வது பெரும் தவறு. இவைகள் அனைத்தும் பிற்காலத்தில்குழந்தைகளையே பாதிக்கின்றன.

அதேபோல் ஜலதோஷம், வயிற்றுப்-போக்கு, இருமல் இவற்றிற்கும் கூடியவரை இயற்கையாகவே குணமடைந்துவிட வேண்டும். வயிற்றுப் போக்குக்கு மட்டும் லேசாக மருந்து எடுத்துக் கொள்ளலாம். கர்ப்ப காலத்தில் மருந்துகளை அதிகம் உபயோகிக்காமல் இருப்பதே நல்லது.

**கால் வீக்கம்**

இது கடைசி மூன்று மாதங்களில்தான் கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏற்படும். பளு

வினல் ஏற்படுவது. ஆனல் இடை மூன்று மாதங்களிலே ஏற்பட்டு, ஓய்வு எடுத்துக் கொண்டும் நிற்கவில்லை யென்ருல் டாக்டர் களை அணுகுவது நல்லது. ஏனெனில் இவர் களுக்கு நீரிழிவு நோய் இல்லை யென்ருலும், முன் பரம்பரையில் யாருக்கேனும் இருக்க லாம்.

ரத்த சோகை, ரத்த அழுத்தம், நீரிழிவு, போன்ற காரணங்களாலும் இந்தக் கால் வீக்கம் ஏற்படுகிறது. இதற்குத் தகுந்த சிகிச்சையை அப்போதே மேற்கொண்டு விட்டால் குழந்தையும் பாதிக்கப்படாது. பிரசவ காலத்தில் சிக்கல்கள் ஏற்படாமலும் பார்த்துக் கொள்ளலாம்.

### இதய நோய்கள்:

நெஞ்சு படபடவென்று அடித்துக்கொள்ளு தல், மாடிப் படி ஏற முடியாமை, நெஞ்சில் எரிச்சல் போன்றவை யாவும் ஓரளவு பல வீனமான கர்ப்பிணிகளுக்கு ஏற்படும். இதற்கும் ஓய்வே நல்ல மருந்து.

ஆனல் நெஞ்சு வலி அதிகமாக இருக்கு மானல் அதற்கு உடனடியாக மருத்துவரை அணுகுவது நல்லது. ஏனென்ருல் இருதயத் தில் ஏதேனும் கோளாறுகள் இருந்து இது நாள்வரை வெளிப்படாமல் இருந்திருக் கும். கர்ப்ப காலத்தில் உடல் பலவீனமான நிலையில் வெளிப்பட்டிருக்கும். இதற்கு உடனடியாக நிவாரணம் அளித்தாக வேண் டும். இல்லையென்ருல் பிரசவ காலத்தில் மிகச் சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புண்டாகி விடும்.

### வயிற்றில் அசைவுகள்:

முதல் குழந்தைக்கு ஐந்து மாதத்திலிருந்து சிசு வயிற்றில் அசைவதை உணரலாம். இது நார்மலானது. பிறகு ஏற்படும் கர்ப்பங்களில் நான்காவது மாதத்தின் கடைசியிலேயே உணரலாம். ஏனெனில் ஒரு முறை கர்ப்பப் பை விரிந்து சுருங்கி யிருப்பதால் அசைவுகள் எளிதாகப் புலப்பட்டு விடும்.

இந்த அசைவுகள் மருத்துவ ரீதியாக ஓரளவு உதவும். மாத விலக்கு முறையாக ஏற்படும் பெண்களுக்கு நாள் கணக்குச் சரியாக வரும். கர்ப்ப காலம் என்பது ஒன் பது மாதங்களும் ஏழு நாட்களும் ஆகும். பிரசவம் இந்தக் கணக்கில் ஒரு வாரம் முந்தியோ, பிந்தியோ ஏற்படலாம். ஆனல் முறையற்ற மாதவிலக்கு உடையவர்களுக்கு எப்போது கர்ப்பம் தரித்தார்கள் என்று சொல்ல முடியாது. இவர்களுக்குச் சரியாகக் கணக்கு வைக்கவும் முடியாது. இப்படிப் பட்டவர்கள் தன் வயிற்றில் குழந்தை அசைவு ஏற்பட்ட நாளைக் குறித்து வைத்துக் கொண்டு சொன்னல், மருத்துவர் அந்த நாளை வைத்து ஏறக் குறைய பிரசவ காலத் தைக் கணக்கிட முடியும்.

## ஆகார வகைகள்:

கர்ப்ப காலத்தில் முதல் மூன்று மாத கட்டங்களில் வைடமின் மாத்திரைகள் போன்றவை எதுவும் தேவையில்லாவிட்டாலும், இரண்டாவது கட்டத்தில் இவை மிகவும் அவசியமானது. டானிக்கை விட மாத்திரைகள் நல்லது.

''டாக்டர், நான் ருசியான உணவுதான் சாப்பிடுகிறேன். நிறைய மீன், கறியெல்லாம் சாப்பிடுகிறேன். எனக்குப் போய் சத்தில்லே, வைட்டமின் மாத்திரைகள் சாப்பிட வேண்டும் என்கிறீர்களே....''

என்கிறார்கள். இது உண்மையில்லை. ருசியான உணவு என்பது வேறு, சத்தான உணவு என்பது வேறு. நாம் தினசரி சாப்பிடுகிற உணவிலே ஒரு கர்ப்பிணிக்குத் தேவையான சத்து இருக்கிறதா என்று பார்த்தால் இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். எனவே அதிகமாகத் தேவைப்படும் வைடமின், புரோடின், கால்ஷியம் போன்றவற்றிற்குத் தேவையான காப்ஸ்யூல்கள், மாத்திரைகளைச் சாப்பிட்டே ஆகவேண்டும்.

கர்ப்பத்தின் இரண்டாம் கட்டத்தில் இவற்றைத் தொடங்க வேண்டும். நல்ல மருத்துவரின் ஆலோசனையுடன் தினசரி தவறாமல் இவற்றைச் சாப்பிட வேண்டும்.

இவை தவிர ஒரு நாளைக்கு நான்கு டம்ளர் பால் சாப்பிட வேண்டும். கீரை வகைகள், தக்காளி, நெல்லிக்காய், கேழ்வரகு இவற்றையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

''நான் தினமும் ஆப்பிள் சாப்பிடுகிறேன்'' என்று பெருமையாகச் சொல்லிக் கொள்வார்கள். ஆனால் ஒரு நெல்லிக்காயிலோ, தக்காளியிலோ, கேழ்வரகிலோ இருக்கும் சத்து ஆப்பிளில் கிடையாது. விலையுயர்ந்த பண்டங்கள் என்றால் அது உயர்வானது என்ற தவறான நம்பிக்கை நம்மிடம் இருக்கிறது.

இந்தக் கட்டத்தில் தக்காளி ஜூஸ் தினமும் சாப்பிடுவது உடம்பிற்கு மிக நல்லது. இந்தச் சமயத்தில் தேவையான சத்துக்கள் பெரும்பாலும் தக்காளியில் அடங்கியுள்ளன.

நெய், எண்ணெய் இவற்றைக் குறைப்பது நல்லது.

## நம்மிடையே பரவியிருக்கும் நம்பிக்கைகள்:

நிறையச் சாதம் சாப்பிட்டாலோ, மருந்து, மாத்திரை, டானிக் இவற்றைச் சாப்பிட்டாலோ வயிற்றில் குழந்தை பெரிதாகி பிரசவம் சிக்கலாகி விடும் என்று பயமுறுத்துவார்கள்.

ஒன்றைத் தாய்மார்கள் புரிந்து கொள்ள வேண்டும். வயிற்றில் வளரும் சிசு தாயிடமிருந்து தேவையான சத்துக்களைப் பெற்றுக் கொண்டு நார்மலாக வளர்கிறது. தாய் சாப்பிடும் மருந்து, மாத்திரைகளினால் குழந்தை 'அதிகமாக' வளர்ந்து விடாது. அதனுடைய சாதாரண வளர்ச்சியை யாரும் கட்டுப்படுத்தி விடவும் முடியாது.

தாயிடமிருந்து சத்துக்கள் அனைத்தும் குழந்தைக்குச் சென்று விடுவதால் தாய் தன் உடலுக்குத் தேவையான சத்துக்களை ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். 'குழந்தை பெரிதாகிவிடும்' என்று பயந்து கொண்டு தாய் சத்துள்ள ஆகாரங்களை ஏற்றுக் கொள்ளாமல் போனால் தாய் பாதிக்கப்பட்டு, பலவீனப்பட்டு, பிரசவத்தை எதிர்கொள்ள முடியாமல் பிரசவம் கஷ்டமாகிவிடும். இதற்கும் குழந்தையின் வளர்ச்சிக்கும் சம்பந்தமேயில்லை.

அதே போல வயிற்றின் அளவை வைத்து ஆண் குழந்தை, பெண் குழந்தை என்று கணிப்பவர்களும் உண்டு. இதுவும் சரியில்லை. கர்ப்பப் பையில் சிசுவைச் சுற்றியுள்ள நீர், தசைகள் போன்றவற்றைப் பொறுத்தே வயிற்றின் அளவும் அமைகிறது.

வயிறு மிகப் பெரிதாக இருந்தால் இரட்டைக் குழந்தைகளாகவோ, இல்லை தாய்க்கு நீரிழிவு நோயோ இருக்கலாம். வயிறு மிகச் சிறியதாக இருந்தால் அது சிசு சரியாக வளரவில்லை என்பதைக் காட்டுகிறது. இரண்டு நிலையிலும் தக்க மருத்துவ பரிசோதனை செய்து கொள்வது அவசியம்.

பொதுவாக மருத்துவப் பரிசோதனைக்கு வரும்போதே டாக்டர்கள் இதைப் பார்த்துச் சொல்லிவிடுவார்கள்.

அதே போல இரும்புச் சத்து மாத்திரைகள் சாப்பிடுவதால் குழந்தைகள் கறுப்பாகிவிடும் என்று அதைத் தவிர்த்துவிடுவார்கள். இதனால் மலம் கறுப்பாக வருமே தவிர குழந்தை கறுப்பாவதில்லை. குங்குமப் பூவிற்கும், குழந்தையின் நிறத்துக்கும் கூட சம்பந்தமில்லை.

இவையெல்லாம் காலம் காலமாக நம்மிடையே நிலவி வரும் தவறான நம்பிக்கைகளாகும். இந்தக் கால கட்டத்தில் மாதம் ஒரு முறை மருத்துவ பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். அதிக வயதில் திருமணம் செய்து கொண்டவர்கள் அடிக்கடி பரிசோதனை செய்து கொள்வது நல்லது.

## ரத்தப் பரிசோதனை

தாய் ஆர். எச். பாசிட்டிவ்வாக இருந்து விட்டால் தந்தைக்கு ரத்தப் பரிசோதனை தேவையில்லை. தந்தை ஆர். எச். நெகடிவாக இருந்தாலும் அதைப் பற்றிக் கவலையில்லை. தாய்க்கு நெகடிவ் என்று வரும் போதே அதற்கு முன்னெச்சரிக்கையுடன் ஊசி போட வேண்டி வரும். மற்றபடி இன்றைய வளர்ந்த விஞ்ஞான யுகத்தில் அதைப் பற்றித் திகில் கொள்ளத் தேவையில்லை.

(தொடரும்)


இனிப்பா!
காரமா!
வீட்டிற்கும் ஹோட்டலுக்கும் ஏற்ற தரமான ரவா
பட்லர்
ரவா
உப்புமா, பொங்கல், கேசரி, புட்டு, பாயாசம், இட்லி, கிச்சடி, பிரியாணி போன்ற பலகாரங்களை சுவையாக சமைத்திட—பட்லர் ரவா.
BUTLER
BUTLER
பட்லர்
• பட்லர் ரவா, இயற்கையிலேயே நறுமணமுள்ளது, பொன் நிறமானது.
• 1 கப் பட்லர் ரவாவிற்கு, 3 முதல் 4 கப் வீதம் தண்ணீர் சேருங்கள்.
• சமைத்த பின் மற்ற ரவைகளை விட 40% வரை அதிக உணவு அளிக்கிறது.
PADA-101
சௌத் இந்தியா கார்ப்பொரேஷன் (ஏஜென்ஸீஸ்) லிட். சென்னை, கோயம்புத்தூர். மதுரை திருச்சிராப்பள்ளி, செகந்திராபாத், விஜயவாடா, விசாகப்பட்டினம், பெங்களூர், மங்களூர், எர்ணாகுளம் ஆகிய நகரங்களுக்கு விநியோகஸ்தர்கள்.

# மர்மத் தீவில் மாலா-பாலா 1

கதை: மகிழ்ச்சிக் கண்ணன்
சித்திரம்: விஜயா




மிஸ் சுசேதா,
அது இருக்கட்டும், உங்களைத் தனியா அழைச்சதுக்குக் காரணம் நாளைலேயிருந்து உங்க ரகசிய வேலை ஸ்டார்ட் மிஸஸ் பிரியா, மாணவிகள் பள்ளிக்கூடங்களைக் கண்காணிக்கணும். அதுப்பத்தி ரகசியமா ஃபைல் வந்து சேரணும்.
என் பேர்ல நம்பிக்கையில்லையா, ஸார்!
என் பேர்லேயே ஐ.ஜிக்கு நம்பிக்கையில்லை. போலீஸ்ல இதெல்லாம் சாதாரணம்.
ஸார், உங்க மகன் பாலாவுக்கு பதினாறு வயசில்லே... பிளஸ் டூ படிக்கிறதா சொன்னீங்க...
ஆமா, ஆனா அவன் சாதாரணமானவனில்லே. ஓ.கே. நான் அவசரமா ஐ.ஜி.யைப் பார்த்தாகணும். டைம் ஆயிடுச்சு.
கலெக்டர் சொல்றது போல நம்ம இலாகாவிலேயே யாராவது அந்த கோஷ்டிக்கு உதவியா ரகசிய வேலை செய்யலாம்னு நாம நெனைச்சதும் சரியா இருக்கே. இந்த சுதேசாவா இருப்பாளா? இல்லே ஏ.சி. நாத்தா இருப்பாரா? இவங்களைக் கண்காணிக்க தனி குழு போடணும் போல இருக்கு...
யோவ், பரசுராமா! பாலா வந்துட்டாரு?
ஸ்கூல்லருந்து இன்னும் வரலே சாமி. அம்மாவும் கண் கலங்கியபடியே உள்ளே இருக்காங்க.
வந்துட்டீங்களா? தனியாவா வந்தீங்க. பாலா எங்கேங்க. பாலா...?
ஏன் இப்படி ஒண்ணு ஒப்பாரி வைக்கறே. நம்ம பாலா எங்கேயும் போகல. வந்துடுவான்... உனக்கு எப்படி விஷயம் தெரியும்?
மத்தியானத்துலே இருந்து போன் மேல போன். யாருன்னு கேட்டா வச்சுடறாங்க... எனக்கென்னவோ பயமா இருக்குதுங்க... பாலாவும் வரக்காணோம்.
ஒன்னும் பயப்பட வேணாம். பாலா ஃப்ரெண்ட்ஸ்ங்க வீட்டுக்கு போன் பண்ணிப் பாத்தியா?
டிரிங்... டிரிங்...
உம். பார்த்தாச்சு. இதோ வேற டெலிபோன். இதுலே என்ன நியூஸோ?

தொடரும்....



கவிஞர் பால் எங்கல் மனைவியுடன்

# பெண் ஒரு கண்ணோட்டம்

## உஷா சுப்ரமணியன்

பதினைந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து International writing programme அமெரிக்காவிலுள்ள அயோயாவில் ஆண்டுதோறும் நடக்கிறது. உலகப் புகழ் பெற்ற கவிஞர் பால் எங்கல் இந்தத் திட்டத்தை ஆரம்பித்து அதன் அட்வைஸராகவும் இருக்கிறார். இந்தத் திட்டம் 1976ல் நோபல் சமாதானப் பரிசுக்கும் சிபாரிசு செய்யப்பட்டது. உலகம் முழுவதிலும் இருபத்தைந்து அல்லது முப்பது எழுத்தாளர்கள் அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் ஒருவருடன் ஒருவர் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்கிறார்கள். அவரவர்கள் நாட்டு இலக்கியம் விமரிசிக்கப்படுகிறது. எழுத்தாளரின் சொந்த படைப்புகள் மதிப்பீடு செய்யப்படுகின்றது. எழுத்தாளர்கள் பல இடங்களில் பேச அழைக்கப் படுகிறார்கள். அத்துடன், அவர்கள் அமெரிக்காவை International visitor தகுதியில் சுற்றிப் பார்க்கவும், அமெரிக்க வாழ்க்கை முறையை அறியவும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இந்தியாவிலிருந்து இதுவரை ஏழெட்டு எழுத்தாளர்கள் அழைக்கப்பட்டுள்ளார்கள். பெரும்பாலோர் ஆங்கில அல்லது வங்காளி எழுத்தாளர்கள்.

இந்த ஆண்டு திருமதி உஷா சுப்ரமண்யம் அழைக்கப்பட்டிருந்தார். இந்தியாவின் சார்பில் கலந்து கொண்ட முதல் பெண் எழுத்தாளர் என்ற பெருமை பெறும் இவர் பார்க்கும் அமெரிக்கா...

**"நா**ன் ஒரு பெண் எழுத்தாளர் என்று குறிக்கப்படுவதை எந்த எழுத்தாளரும் விரும்புவதில்லை" என்ற வர்ஜினியா வுல்பின் கூற்று சரிதான். உலகப் புகழ் பெற்ற கோர்நெல் காலேஜில் "நான் ஒரு பெண் எழுத்தாளர்" என்ற தலைப்பில் பேச அழைத்தபோது நான் மறுத்துவிட்டேன். 'நான் ஒரு பெண்ணாய்ப் பிறந்ததற்காக மிகவும் பெருமைப்படுகிறேன். ஆனால் நான் பெண்ணாக இருப்பதால் எழுத்தாளராக இல்லை. இரண்டும் என் வாழ்க்கையின் வேறுபட்ட அம்சங்கள். 'ஆண் எழுத்தாளர் என்று எவரையும் குறிக்காதபோது பெண் எழுத்தாளர் என்று வேறுபடுத்திக் காட்டுவது சரியல்ல' என்றேன். அவர்கள் புரிந்து கொண்டார்கள். தலைப்பு மாற்றப் பட்டது – 'நான் ஒரு பெண் மற்றும் எழுத்தாளர்' என்று.

அமெரிக்காவில் Women's liberation என்பது இப்போது பழைய வார்த்தையாகி விட்டது. உள்ளாடைகள் எரிப்பதன் அர்த்தமற்றதனத்தைப் பெண்கள் உணர்ந்து கொண்டு விட்டார்கள். இப்போது 'பெமினிஸ்ட்' என்று கூறிக்கொள்பவர்களின் குறிக்கோள் Change of roles என்பதாகும். பெண்ணை இத்தனை ஆண்டுகளாகத் தாய், மனைவி என்ற இமேஜுக்குள் அடைத்து வைத்ததை மாற்றி அவர்கள் தங்கள் இஷ்டப்படி வாழ வழி செய்ய வேண்டும் என்பதுதான் இந்தப் பெண்களின் வாதம். உத்தியோகம், சம்பளம், வீட்டு வேலை, குழந்தை வளர்ப்பு செக்ஸ் எல்லாவற்றிலும் பெண்களுக்கு சம உரிமை வேண்டும் என்று இவர்கள் கூட்டம் போட்டுப் பேசுகிறார்கள்.

கல்லூரி சார்பில் என்னை அழைக்க வந்த ஜெனட் என்னிடம் அந்த பெமினிஸ்ட் பாதிப்புகள் நிச்சயம் இருக்குமென்று நம்பியிருக்க வேண்டும். அர்ஜெண்டீனாவைச் சேர்ந்த க்றிஸ்டீனா பினா என்ற கவிஞரும், நானும் அன்று பேச்சாளர்கள். எதிர்பாராத அளவு கூட்டம். நாலு மாதக் குழந்தையை மார்பில் பையில் மாட்டிக் கொண்டு ஒரு பெண் வந்திருந்தாள். "நான் இந்தக் குழந்தையின் தாய். ஆனால் திருமணம் செய்து கொள்ள இல்லை. கல்லூரியில் ஆராய்ச்சி செய்கிறேன்"

துணைக்கு வந்த நண்பர் விட்டுட்டு ஆபீசுக்குப் போயிட்டார். வேறு யாருமே கிடையாது. பிரமை பிடிச்சுப் போய் உக்காந்திருந்தேன். 'கோமா'வில விழுந்துட்ட அவர் பக்கத்துல நானும் ஜடமா இருந்தேன். அந்தச் சமயத்திலதான் ஒருத்தர் ரெண்டு பேர் வந்து எங்கிட்டப் பேச்சுக் கொடுத்தாங்க, 'உங்க படங்கள்ளாம்நான்பார்த்திருக்கேன்'னு...''

என்று இவர் சொல்லும்போது 'என்ன மனிதர்கள்!' என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது. இவருடைய நிலைமையை டாக்டர்கள் புரிந்து கொண்டு விட்டார்கள். இவரிடம் எப்படிச் சொல்வது, 'இனி மேல் நீங்கள் உங்கள் எதிர்காலத்தைத்தனியாகத் தான் சந்திக்க வேண்டும்' என்பதை. கோமாவில் விழுந்துவிட்டவர்கள் இறந்துபோனாலும் அப்படியே அசைவில்லாமல்தான் உயிர் போகும். ஆனால் காமேஷின் மனசில் என்னென்ன உணர்வுகள் உறுத்திக் கொண்டிருந்தனவோ, யாருக்குத் தெரியும்? அந்த உடல் உயிர் பிரியுமுன் ஒரு துள்ளுத் துள்ளி மனைவியை இறுகப் பிடித்துத் தோளில் முகம் பதித்துக் கொண்டது. அந்தச் செய்கையின் மூலமே என்னவோ சொல்லிவிட்டுப் போய்விட்டார்!

கணவரின் உயிர் பிரிந்தது தெரியாமல் தன்னை அவர் அணைத்துக் கொண்டதைப் பார்த்து, 'டாக்டர், டாக்டர்' என்று கத்தியிருக்கிறார் கமலா. ஆக்ஸிஜன் ஸிலிண்டர்கள் உருண்டு வந்தன. மூச்சு விட செயற்கை மசாஜ் செய்யப்பட்டது. பிறகு எல்லாம் மெதுவாக அகற்றப்பட்டன.

''இனி என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்றாராம் டாக்டர்.

''ஏன் சார், வேறு ஏதாவது மருந்து வாங்கிண்டு வரணுமா?'' என்று கேட்கும் கமலாவைப் பரிதாபமாகப் பார்த்துவிட்டு மென்று விழுங்கிக் கொண்டே,

''இல்லை...பாடியை எடுத்துக் கொண்டு போகிறீர்களா... மார்ச்சுவரிக்கு அனுப்பட்டுமா?'' கேட்ட மறு நிமிடம் டாக்டர் அங்கு இல்லை. அப்போதுதான் தான் தனிமரமாகி விட்டதை கமலா புரிந்து கொண்டு இருக்கிறார்.

''கணவர் இறந்தார் என்று தெரியாமல் அவர் பக்கத்தில் அரை மணி நேரம் உக்காந்துகொண்டு இருந்தேன். நான் தனியாகி விட்டேன் என்று தெரிந்து கொண்டு அவர் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு அரைமணி நேரம் கதறினேன்.

கண்களில் மெல்லிய நீர்த் திரை படிகிறது. அதை விழுங்கிக் கொள்கிறார் அவர். இவருடைய முகத்தில் தெரியும் தன்னம்பிக்கையும், உறுதியுமே இவரைப் போன்ற பெண்களுக்குப் பாடமாகுமோ?

''நான் கதறி அழுவதைப் பார்த்து என் மகள் கழுத்தைக் கட்டிக் கொண்டு அழுகிறாள். அவளுக்கு ஏதேனும் ஆகிவிடுமோ,

**தேள் கடி மருந்து**

தண்ணீர் தெளித்த புளியங் கொட்டையை [illegible] தேய்த்து, இடத்தில் வைத்தால் ஒட்டிக் கொள்ளும். விஷம் இறங்கியதும், புளியங் கொட்டை விழுந்து விடும். —பொன்னு

நானே நம்பிக்கை இழந்துவிட்டால் அவளுக்கு யார் ஆதரவு? அன்றைக்குக் கண்களைத் துடைத்தவள்தான் நான். என்னை நானே தேற்றிக் காண்டேன்.

பாஸ்ட் ஈஸ் பாஸ்ட். அழுதால் மட்டும் எந்தப் பிரச்னையும் தீர்ந்து விடப் போவதில்லை. இனி எதிர்காலத்தைப் பற்றித்தான் சிந்திக்க வேண்டும்...''

அவருடைய தன்னம்பிக்கைக்கும் தைரியத்துக்கும் தலை வணங்க வேண்டும். 'இனி உங்களுடைய எதிர்காலத்தை எப்படி அமைத்துக் கொள்ளப் போகிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''அவருக்கு இசை என்றால் உயிர். 'உனக்கு மனைவி, குழந்தை வேணுமா,இசை வேணுமா என்று கேட்டால் இசைதான் வேண்டும் என்பார். அவர்சொல்லிக் கொண்டே இருப்பார், வடக்கில் உஷா கன்னா என்ற ஒரே பெண் மியூசிக் டைக்டர் இருக்கிறார். அவரைப் போல என் பெண்ணையும் நான் ஆக்கப் போகிறேன் என்று.

நான் அதை நிறைவேற்றப் போகிறேன். அவருடைய கனவை நனவாக்குவதுதான் என் எதிர் காலத் திட்டம். மற்றபடி எனக்கென்று நான் எதையும் நினைக்கவில்லை''

என்று கூறும் இவர் கடைசியாகச் சுவையான செய்தி ஒன்றையும் கூறினார். முதல்வர் எம். ஜி. ஆரின்டைரக்ஷனில் பாரதியார் படம் எடுக்கப் போகிறார்களாம். அதில் செல்லம்மாள் பாரதியாக இவர் நடிக்கப் போகிறாராம்.

கடைசியாக ஒரு கேள்வியைத் தயங்கிக் கொண்டே கேட்டேன், ''அவர் இறந்து போன பிறகும் உங்கள் வீட்டிலிருந்து யாரும் வரவில்லையா?''

கமலா காமேஷ் சிறிய சிரிப்பொன்று சிரித்தார். ''இல்லை. நானும் அவர்களைத் தொந்தரவு படுத்தப் போவதில்லை. என்னால் முடிந்தால் ஏதாவது உபகாரத்தைப் பிறருக்குச் செய்வேன். ஆனால் யாருக்குமே உபத்திரவமாக இருக்கக் கூடாது என்பதுதான் என் கொள்கை. என் மனசு எப்படி என்பது ஆண்டவனுக்குத் தெரியும். அது போதும் எனக்கு....''

வருங்காலத்தை வழி நடத்த ஆண்டவனும் துணை நிற்பான் என்றுதான் சொல்ல வேண்டும், வேறென்ன சொல்ல?


மர்மத்தீவில் மாலா-பாலா
கதை: மகிழ்ச்சிக் கண்ணன்
சித்திரம்: விஜயா
2
ஹலோ வரதராஜன்!
ஹலோ டாடி, நான் தான் பாலா பேசறேன். வரதுக்கு இன்னும் அரை மணி நேரம் ஆகும். இன்னக்கு டேபிள் டென்னிஸ் மேட்ச் ஃபைனல்ஸ்
எங்கிருந்து பேசறே?
ஸ்கூல் ஹாஸ்டல்லேருந்து.
அங்கேயே இரு. நான் வர்றேன்.
அப்பாடா, பாலா இருக்கானு! ஏங்க நானும் வரேங்க.
டிரைவர், பைல்களையெல்லாம் என் ரூம்லே வச்சுட்டு சீக்கிரம் வா, போகணும். நானும் டிரஸ் சேஞ்ச் பண்ணிட்டு வந்துடறேன்.
யெஸ் ஸார்!
பாத்தியா, இவனைப் போயி காணலியேன்னு பயப்பட்டியே, இவனுக்கும் மாலாவுக்கும் படிப்போட கராத்தே, பாக்ஸிங், ஸ்கேட்டிங், ஸ்விம்மிங், ஸ்போர்ட்ஸ் இப்படியெல்லாம் கத்துக் கொடுத்தது வீண் போகாது! தப்பிக்க..
அவ வயசுப் பொண்ணுங்க... ரௌடிங்ககிட்ட மாட்டிக்கிட்டு...
டாடி, மம்மி...! இண்டர்ஸ்கூல் பஸ்ட்ப்பா! வாங்க உங்களை அறிமுகப்படுத்தி வக்கறேன்.
கங்க்ராஜுலேஷன்ஸ், வா மொதல்ல வீட்டுக்குப் போகலாம்
மம்மி, இங்க பேப்பர் நியூஸ் பாருங்களேன், கமிஷனர் மகள் மாலா கடத்தலாம்!
ஆமாம்டா! அதனால்தான்.
எந்தப் பேச்சும் வாணாம், பேசாம வரணும்.
உம்... அவங்கவங்க வேலையைப் பாருங்க.. நான் போய் சில குறிப்பெடுக்கணும்.
சாப்பிட்டீங்களா...
கொஞ்ச நேரத்திலே வர்றேன்.


அம்மா, நீங்க அழுதுட்டே இருந்தா நானும் அழுவேன். நம்ம மாலா எங்கேயும் போகல. வந்துடுவா பாருங்க. நம்ம அப்பா எதுக்குதான் இருக்காங்க...?
ஆமா, அப்பா பெரிய போலீஸ் ஆபிஸர்தான். அவர் கண்டு பிடிக்காதது எதுவும் இல்ல தான். ஆனா இந்த விஷயத்துலே..
மாலா கவலையை விடுங்க. அப்பா கூட வேண்டாம். நானே ஒரு வாரத்துலே கண்டு பிடிச்சுட்டு வர்றேன்.
அய்யய்யோ.. இப்போ நீ பேசாம ஸ்கூலுக்குக்கூட போகாம வீட்லே இருந்தாலே போதும். அவங்களுடைய அடுத்த குறியா நீதான் இருப்பே.
இருக்கட்டுமே. எங்கிட்ட அவங்க பாச்சா பலிக்காது. மாலாவும் இப்பவே ஏதாவது திட்டம் பண்ணிட்டுதானிருப்பா...!
அவ திட்டம் பண்றது இருக்கட்டும். ஒரு கும்பல் கிட்ட தனியா அவளால என்னடா செய்ய முடியும். பாவிங்க... எ..ன்..ன.. பா..ப..ண..ற... கி..ங்..க..ளோ...
மம்மி, அழாதீங்க மம்மி... ஒண்ணும் ஆகாது. கடவுளைக் கும்பிடுங்க.. நான்...!?
என்ன சூர்யா, பாலா? ரெண்டு பேருமா அழுதுகிட்டு.. பயப்படாதீங்க. ஒரு கை பார்த்துடுவோம். வாங்க சாப்பிடலாம். இது நமக்கெல்லாம் ஒரு அனுபவம்.
மாலா சின்னவ. ஆனா அவ சாதாரணப் பொண்ணில்லே. எல்லா வித்தைங்களும் தெரிஞ்சவ. எனக்கு மத்தக் கொழந்தைங்களைப் பத்தித்தான்...
உங்களுக்கு எல்லாமே ஒண்ணுதாங்க. எனக்கு பெத்த வயிறு பத்தி எரியுது.
டாடி, நானும் அதான் சொன்னேன் டாடி, எங்களுக்கு கத்துக் கொடுத்த வித்தைங்களைப் பயன்படுத்தி நானே மாலாவையும் மத்தவங்களையும் கூண்டோடு கண்டுபுடிச்சி...
ஷட் அப், பாலா! நீ பெரிய துப்பறியும் புலின்னு தெரியும். இது ஏதோ காமிக் புக்ஸ்ல வர்ற கதை மாதிரி நினைச்சுட்டியா? பேசாம சாப்பிட்டுப் போய்படி, இல்லே தூங்கு!
என்னடா சரியா சாப்பிடாம.. எழுந்துக்கிட்டு என்ன யோசனை?
நீங்களும் தான் சரியா சாப்பிடலே.
நீ சாப்பிடலே உட்காரலியே.. எப்படியோ குட் நைட்! காலேலே பார்ப்போம்.
அம்மா, பாலா தம்பியைக் காணோம்மா!
காணோமா, தோட்டத்திலே பாத்தியா?
என்னங்க பாலாவைக் காணோமாம். ஒரு சமயம் அவனையும். நான் ராத்திரியெல்லாம் முழிச்சிட்டுதானே இருந்தேன். இதென்ன சோதனை!
என்னது? பாலாவைக் காணலியா?
தொடரும்....

# தையல்

4 துண்டு அம்ப்ரெல்லா ஸ்கர்ட் ப்ராக்

இங்கு மாதிரிக்காக 3 வயது குழந்தையின் அளவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த அளவுப்படி ப்ராக் தைக்க சுமாராக ஒரு மீட்டர் துணி தேவைப்படும். பிரிண்டட், பாப்ளீன், பாம்பே டையிங், டூபைடு போன்ற துணிகளில் இந்த உடையைத் தைக்கலாம்.

## பேப்பர் பேட்டனை வரையும் முறை

ப்ராக்கின் தேவையான உயரம், மார்பளவு, கைநீளம், அகலம், ஆகியவற்றை இஞ்ச் டேப்பால் அளந்து, குறித்துக்கொள்ளவும். இங்கு மாதிரிக்காக எடுத்துக்கொள்ளப் பட்டுள்ள அளவுகள் கீழ்வருமாறு:

அளவுகள்: பாடி:

0 to 1–8'' (உயரம்)
0 to 2–6'' (மார்பளவின் கால் பாகம்)
0 to 4,
2 to 2'
2 to 1–2'' (இடுப்பிற்காக)
0 to 5–2'' (கழுத்து)
5 to 7–2½'' (தோள்பட்டை)
7 to 7'–½'' (தோள்பட்டை இறக்கம்)
8 –2வது கட்டத்தின் மத்திய புள்ளி
0 to 6'–முன் கழுத்து
0 to 5'–பின் கழுத்து

பாட்டம் (ஸ்கர்ட்):

0 to 1–16½–''
0 to 2
0 to 4–6½'' (மார்பளவு 24லிருந்து 4ஐ கழித்து 3ஆல் வகுக்கவும் 24-4 20/3 6½'')
2 to 1–10'' (16½''லிருந்து 6½''ஐ கழித்தால் மீதமுள்ள ஸ்கர்ட் பகுதியின் உயரம்)
4 to 3

கை:


0 to 1–6'' உயரம்
2 to 3
0 to 2 –12'' அகலம்
1 to 3
5 –2வது கட்டத்திலிருந்து மேற்புறமாக ½'' மார்க் செய்யவும்.
4 –கை அகலத்தின் சரி பாதி
1 to 1–'' கை ஷேப்புக்காக
3 to 3½


வரையும் முறை: பாடி: பழைய செய்தித்தாளில் தேவையான உயரத்தையும் மார்பளவையும் குறித்துக் கொள்ளவும். (எப்பொழுதும் மார்பளவுடன் லூஸுக்காக 4'' சேர்க்க வேண்டும்.) உயரம் 18'' (¼'' மார்பளவும்–2'' இடுப்பளவு (பொதுவானது) வரைந்து, மார்பளவும் வரைந்து, மார்பளவை 4 சம கட்டங்களாகப் பிரித்துக் கொள்ளவும்.

4 துண்டு

அளவுகள்:–
உயரம் – 18"
மார்புசுற்றளவு – 20+4 = 24/4" = 6"
கழுத்து – 2"
தோள் பட்டை – 2½"

பாடி







ப்ளீட் தைக்கும் முறை

...றெல்லா ஸ்கர்ட் ப்ராக்

...ம்ஹோல் — 10"

...க்கோ மட்டன் கை!—

(LEG'O MUTTON)

நீளம் — 6"

அகலம் — 12"

----- வெட்டும் கோடுகள்


——— துணி கோடுகள்

# -லலிதா கணபதிராமன்

கழுத்து (2'') தோள்பட்டை (2½'') ஆகியவற்றைப் படத்தைப் பார்த்து தேவையான அளவுப்படி வரையவும். இறக்கம் ½'' அமைத்துத் தோள்பட்டையைச் சாய்வாக வரையவும். 2வது கட்டத்தின் மத்திய புள்ளியான 8ஐயும் 7ஐயும் இணைத்து ஆம் ஹோலை உருவாக்கவும். 1'' லிருந்து உட்புறம் ½'' மார்க் செய்து அப்புள்ளியையும் 8ஐயும் இணைத்து இடுப்பின் சாய்வான பகுதியை உருவாக்கவும்.

ஸ்கர்ட்: தேவையான ஸ்கர்ட்டின் உயரம் 10'' என்றால் அத்துடன் மார்பளவிலிருந்து 4''ஐக் கழித்து மீதமுள்ளதை 3ல் வகுத்தால் ஸ்கர்ட்டின் வளைவான இடுப்புடன் இணையப்போகும் மேற்பகுதியின் அளவு கிடைக்கும் (24—4—20—3—6½) இதையும் உயரத்துடன் (10'') சேர்த்து மொத்தம் 16½'' ஆக (0 to 1, 0 to 3) படத்தில் உள்ளது போன்று வரைந்து கொள்ளவும். பின்னர் 6½'' ஐ (0 to 2) 0 to 4 சதுரமாகப் படத்தைப் பார்த்து வரையவும். 0 லிருந்து சதுரத்தை வெட்டுமாறு நீண்டகோட்டை வரையவும் (0 to 6) பின்னர் அந்தக் கோட்டின் மீதாக 6½'' மார்க் செய்து கொள்ளவும். (0 to 5) 2, 5, 4 ஆகிய புள்ளிகளை இணைக்கவும். பாட்டத்தில் 1, 6, 3 புள்ளிகளை இணைக்கவும் இப்பொழுது சுருக்கம் இல்லாமலே இடுப்பு பகுதியுடன் பொருந்தக் கூடிய ஆம்ரெல்லா ஸ்கர்ட் பகுதி தயார். 0 to 5 1to 6 என்ற பகுதியையும் 5 to 4, 6to 3 என்ற பகுதியையும் தனியாக வெட்டி (...என்ற கோட்டின் வழியாக) எடுத்துக் கொள்ளவும்.

கை




கை: உயரத்தை (6'') வரைந்துகொள்ளவும். ஆம்ஹோலை விட 2'' அதிகமாக்கி அகலத்தை வரைந்து கொள்ளவும். (10''—2''—12'') உயரத்தை 3 சம பாகங்களாக பிரித்துக்கொள்ளவும். கீழேயுள்ள முதல் கட்டத்தின் மேற்புறம் ½'' மார்க் செய்து கொள்ளவும் (5). கையின் அகலத்தில்சம பாகத்தை (4) குறித்துக் கொள்ளவும். பின்னர் 5, 4 ஆகியவற்றை வளைவாகப் படத்தில் உள்ளது போன்று வரையவும். கீழ்புறம் ½'' (1 to 1, 3 to 3'') மார்க் செய்து கையின் சாய்வான பகுதியை வரையவும். ... என்ற கோடிட்ட பகுதி வழியாக பேப்பர் பேட்டனைத் தனியாக வெட்டி எடுத்துக் கொள்ளவும்.



தைத்தபின் உடை


## துணியில் வெட்டுதல்

துணியைத் தேவையான அகலப்படி 2ஆக மடித்த பின் உயரத்துக்குத் தகுந்தவாறு 2ஆக மடித்து முதலில் பாடியை துணியின் மீது வைத்து அகலாதவாறு துணியுடன் சேர்த்துக் குண்டூசியால் இணைத்துக்கொள்ளவும். எல்லா இடம் ¼'' தைப்பதற்காக இடம் விட்டு வரைந்து பின்னர் பேப்பர் பேட்டனை எடுத்து விட்டு வெட்டவும்.

முதலில் பின் கழுத்து வரைந்து வெட்டிய பின் அப்பகுதியைத் தனியாக எடுத்துவிட்டு முன் கழுத்து வரைந்து வெட்டவும். பாடியின் பின்புறம் கழுத்தின் மையத்திலிருந்து இடுப்பு வரை ஓப்பன் வெட்டிக் கொள்ளவும் கையும் துணியை 2 ஆக அகலத்திற்கு தகுந்தாற்போல் மடித்து 2 கை வெட்டிக்கொள்ளவும். எல்லா இடமும் ¼'' கீழ்ப்புறமும், கையின் பக்கவாட்டுப் பகுதியிலும் மட்டும் கொஞ்சம் அதிகமாகத் துணி விட்டு வெட்டவும். மீதமுள்ள துணியை பாட்டம் அகலத்திற்கு ஏற்றவாறு மடித்துக்கொள்ளவும். 2 to 5, 1 to 6 என்ற பகுதியை 2 துண்டுகள் வெட்டிக் கொள்ளவும். அதே போன்று 5 to 4, 3 to 6 என்ற பகுதியையும் 2 துண்டுகள் வெட்டிக் கொள்ளவும். வெட்டு முன்னர் எல்லா இடமும் தைப்பதற்கு ¼'' இடம் விட்டு வெட்டவும்.

## தைக்கும் முறை


முதலில் வலது புறம் 1'' பட்டியும் இடது புறம் 2'' பட்டியும் வைத்து ஓபன் தைத்துக் கொள்ளவும். தோள்பட்டை, இடுப்பு பாகங்களை இணைத்துத் தைக்கவும். கையின் சாய்வான பகுதியை தைக்கு முன் கையின் நடுப் பகுதியில் ஒரு நீண்ட ஃப்ளீட்டும் அதையடுத்து இருபுறமும் நடு ப்ளீட்டை விட சிறிது நீளம் குறைவான ப்ளீட்களையும் தைத்துக் கொள்ளவும். கையின் கீழ்ப்புறமும் கழுத்தின் ஓரத்திலும் டார்க் கலர் கிராஸ் பீஸால் பைப்பிங் வைக்கவும் கையை ஆம்ஹோலுடன் இணைக்கும் போதும் தோள்பட்டையின் நேராக ஒரு பெரிய ப்ளீட்டும், அதை அடுத்து இரு புறமும் 2 சிறிய ப்ளீட்டுகளும் அமைத்து, மற்ற இடங்களில் சுருக்கம் அமையாதவாறு பார்த்து ஒட்டுத் தையல் தைத்து பின்னர் மிஷின் தையல் தைக்கவும். ஒட்டுத் தையலை பிரித்து விடவும். ஸ்கர்ட் பகுதியின் 4 துண்டுகளையும் மிஷின் மூலம் இணைத்து தைத்துக் கொள்ளவும். கீழ்ப் பகுதியில் கழுத்து, கை ஆகியவற்றுக்கு வைத்த அதே கலர் க்ராஸ் பீஸால் பைப்பிங் தைக்கவும். பாடியின் நல்ல பக்கமும், ஸ்கர்ட்டின் நல்ல பக்கமும் பொருந்தியிருக்குமாறு வைத்து ஸ்கர்ட்டின் இருபுற இணைப்பும் இடுப்பு, பகுதியில் அமையுமாறு பார்த்து ஒட்டுத் தையல் தைக்கவும். இப்பொழுது முன்புறம், இரண்டு துண்டும், பின்புறம் இரண்டு ஸ்கர்ட் துண்டும் அமைத்துக் குடை போன்ற அமைப்பைக் கொண்டதாய்க் காணப்படுவதால் இதற்கு அம்ரெல்லா ஸ்கர்ட் என்ற பெயர் வந்தது. மிஷின் தையல் தைத்த பின்னர் ஒட்டுத் தையலைப் பிரித்து விடவும். ஓபன் பகுதியில் வலதுபுறம், 3 அல்லது 4 கொக்கி அல்லது பட்டனை அவரவர் விருப்பம் போல் வைத்துத் தைக்கவும். கை, கழுத்து, பாட்டம் ஆகிய இடங்களுக்கு தேவையான கலரிலும் நீளத்திலும் கடைகளில் க்ராஸ்பீஸ் விற்கின்றன. அதைக் கடைகளில் வாங்கியும் தைத்து உடையை அழகுபடுத்தலாம்.



சிலருக்கு பல் தேய்க்கும்போது பல்லில் இரத்தம் வடியும். தினசரி இது போல் இருந்தால் தமிழ் மருந்துக் கடையில் சூரத் காய்களை வாங்கிக் காய வைத்து உரலில் போட்டு இடித்துத் தூளாக்கி அதே அளவு உப்பு கலந்து வைத்துக் கொண்டு தினம் இப்பொடியில் பல் துலக்கி வந்தால் பல்லில் இரத்தம் வடிவது நின்று விடும். பல் கெட்டிப்படும்.

எஸ், விஜயா சீனிவாசன்

ஜலதோஷத்தினால் மூக்கடைப்பாக இருந்தால், மூக்குக்குக் கடையில் வாங்கும் ட்ராப்ஸ் விட வேண்டும் என்று அவசியமில்லை. நல்ல ஐஸ் வாட்டரை இரண்டு மூக்குத் துவாரத்திலும் 4, 5 துளிகள் விட்டால் போதும். இது சளி உற்பத்தியையே குறைத்து மூக்கடைப்பை விலக்குகிறது. ஜெயா. வி. ராமன்



# அழகிற்கு 10 வழிகள்

ஒரு பெண்ணை 'அழகி' எனக் குறிப்பிடும்போது, அவளில் 'அழகு' என நாம் காணுகிற அம்சம் எது? எண்ணிப் பார்க்கையில் ஒவ்வொரு பெண்ணிடமும் ஒவ்வொரு அழகு சிறப்பம்சம் இருக்கவே செய்கிறது. தன்னில் உள்ள சிறப்பை உணர்ந்து அதை மேலும் பரிமளிக்கச் செய்வதில் அவள் காணுகிற வெற்றியே அவளை 'அழகி'யாக்குகிறது. நடை, உடை, பேச்சு, அசப்பில் சில பாவனைகள்... என எல்லாமே ஒரு பெண்ணின் அழகில் பங்கு பெறுகின்றன. ஆனால் இவை எல்லாவற்றுக்குமே அடிப்படையில் நல்ல ஆரோக்கியம் அமைந்திருத்தல் அவசியம் என்பது மறுக்கமுடியாத உண்மை. ஆரோக்கியமான உடலின் அழகை நாகரிகமும், அழகுப் பூச்சுக்களும் ஆடை, அணிகளும் மேலும் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன என்பதுதான் உண்மை.

உடலின் இயற்கை அழகைப் பெறவும், அதைப் பாதுகாக்க மேற்கொள்ளும் முயற்சிகளையும் இப்பகுதியில் உணவுத் துறை நிபுணர் திருமதி மாயா மோகனும், அழகுக் கலை நிபுணர் திருமதி அருணா கோபாலும் வாசகர்களுக்கு அளிக்கிறார்கள்.





## இயற்கை அழகு பெற

*1.* பூரண அழகையும் ஆரோக்கியத்தையும் பெற ஒவ்வொரு பெண்ணுக்கும் களங்கமற்ற மன அழகு தேவை. பரந்த மனப்பான்மை, பொது நோக்கு, தன்னால் இயன்ற அளவு மற்றவர்களுக்கு இதமா யிருத்தல், சிரித்த முகம் — இவை அழகின் 'ஆனா', 'ஆவன்னா'.

*2.* அமைதியான மனநிலை. ஒரு நாளைக்கு ஏழு மணி நேர நிம்மதியான தூக்கம்.


*3.* குறித்த நேரத்தில் சரிசம விகிதத்தில் அளவான உணவு, ஒரு பெண்ணின் சரும ஆரோக்கியத்திற்கு அடிப்படைக் காரணம். பச்சைக் காய்கறி, முட்டை, தயிர், எண்ணெயும், காரமும் அதிகம் சேராத உணவு இவையே உகந்தவை.

*4.* தேங்காய், எண்ணெய் தோய்ந்த பலகாரங்கள், மசாலாவை அதிகம் உபயோகித்தல், அதிக காரம், சிகரெட் போன்ற பழக்கங்கள் பெண்களின் தோல் அழகைப் பெருமளவுக்குப் பாதிப்பதோடு, அனாவசிய சதையை அதிகரித்து ஆரோக்கியத்தையும் பாதிக்கும்.

*5.* தினமும், காரெட், வெங்காயம் கோஸ், பீட்ரூட், வெள்ளரி போன்று 'சீசனு'க்கேற்ப — காய்கறிகளைப் பசுமையாக நறுக்கி ஒரு கோப்பை அளவில் 'ஸாலட்' செய்து உட்கொள்ளலாம். புதினா, எலுமிச்சை, இரண்டு கோப்பை மோர், மற்றபடி தானிய வகை, பருப்பு, பழங்கள் இவை ஆரோக்கியத்துக்கு உகந்த உணவுகள்.

**— மாயா மோகன்**







# அழகுக்கு அழகூட்ட

1. சிறு தேக்கரண்டியில் கசகசா எடுத்து அரை மணி நேரம் தண்ணீரில் ஊறவைத்து, அரைத்து, முகத்தில் பூசிக் கொண்டு அரை மணி நேரம் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவவும். இம் முகப் பூச்சு குறிப்பாக முப்பது, முப்பத்தைந்து வயதடைந்த பெண்களின் முகச் சருமத்தை இளமையாக வைக்க உதவும்.

2. சுருக்கங்கள், கருப்புப் புள்ளிகள் நீங்க — துளசி இலை, கற்பூரம் இவற்றை அரைத்து, முகத்தில் பூசலாம். புதினா, தேன், அரை மூடி எலுமிச்சம்பழம் கலந்த கலவையையும் உபயோகிக்க, மிகச் சிறந்த Natural Bleach பயனைப் பெறுவீர்கள்.

3. இருபத்தைந்து வயதுக்கு மேல் பெண்களுக்குக் காலில் வெடிப்பு உண்டாவதைக் காணலாம். அகல பாத்திரத்தில் வென்னீர் வைத்து, எலுமிச்சம்பழச் சாற்றைச் சேர்த்து அதில் பாதங்களைப் பதினைந்து நிமிஷம் போல் நனைய அமிழ்த்தி விட்டு, பிறகு வெடிப்புக்களின் மேல் 'வாஸலைன்' தடவுதல் நல்ல பயனைத் தரும்.

4. சுத்தமான, மிருதுவான, களிமண்ணை வெந்நீரில்கரைத்து Face mask ஆக உபயோகப்படுத்துவது பருக்களை அகற்றவும், சுருக்கங்கள் வராமல் தடுக்கவும் உதவும்.

5. விடமின் 'ஈ' எண்ணெயுடன், நல்ல கிரீமைக் கலந்து, கண்களுக்கு அடியில் தடவுவது கருவட்டம், சுருக்கம் விழாமல் பாதுகாக்கும்.

— திருமதி அருணாகோபால்



# றுவர் ஜிப்பா

லலிதா கணபதிராமன்

மேற்புற பாடியும் கீழ்ப்புற ஜட்டியும் இணைந்த இந்த ராம்பர் உடை 6 மாதம் முதல் 3 வயது வரையிலான குழந்தைகளுக்கு அணிவிக்க ஏற்றது. டிசைன்கள் போட்ட பாப்லின், டு பை டு துணிகளிலும் ப்ளெயின் டர்க்கி டவல் துணியிலும் இந்த உடையைத் தைக்கலாம். இதற்குமுக்கால் மீட்டர் துணி வேண்டும்.

## பேப்பர் மாதிரியைத் தயாரித்தல்:

குழந்தையின் முழு உயரம் (மேல் பாடி, ஜட்டி சேர்ந்தது. மார்பு அளவு, கழுத்து, தோள், இடுப்பளவு, ஆம்ஹோல், லெக் ஹோல் (Leg hole) ஆகியவற்றை அளந்து குறித்துக்கொண்டு ஒரு பழைய செய்தித் தாளில்கீழே விளக்கப்பட்டுள்ளவாறு பேப்பர் மாதிரியை வரையவும். இங்கு எடுத்துக் கொண்டுள்ள அளவுகள் 3 வயது குழந்தை களுக்கானவை ஆகும்.

அளவுகள்

0 to 1, 2 to 3 — 18'' (முழு உயரம்)

0 to 2, 4 to 4 — 6'' (மார்பளவின் கால்பாகம்)

4 to 5, 4,to 5' — 2'' (இடுப்பளவிற்கான உயரம்

0 to 6–2'' (கழுத்து)

0 to 6' முதல் கட்டத்தின் 3 பகுதியுள் முதல் பகுதி (பின் கழுத்து)

0 to 7 முதல் கட்டத்தின்3பகுதியுள்ளி 2வது பகுதி (முன் கழுத்து)

6 to 8 2¼'' (தோள்பட்டை)

8 to 9–½'' (தோள்பட்டை இறக்கம்)

10– 2வது கட்டத்தின் மையப்புள்ளி

9to10–10'' (ஆம் ஹோல்)

11,11'–ஜட்டியின் கீழ்ப்புறக் கட்டத்தின் மேற்பகுதியிலும் ஜட்டியின் ஓப்பன் பகுதியிலும் ஷேப்புக்காக¼''

1 to 11--ஓபன்

ஒரு பழைய செய்தித் தாளை நீளவாக்கில் 2ஆக மடித்து உயரத்தைக் குறித்துக்கொள்ளவும். மார்பு அளவுடன் லூஸுக்காக 4'' சேர்த்து அதன் 4ல் ஒரு பாகத்தை (0-2, 4-4') படத்தில் உள்ளது போன்று வரைந்து கொள்ளவும். கீழ்ப்புறமும் அதே அளவுடன் (1-3) வரைந்து நீண்ட சதுரத்தை உருவாக்கவும். மேற்புறம் 0-4 வரை உள்ளது மார்பளவாகும். அதை 4 சம கட்டங்களாகப் பிரித்து கழுத்து, தோள்பட்டை, ஆம்ஹோலை படத்தைப் பார்த்து வரைந்து கொள்ளவும். 4-5 என்பது (2'') இடுப்பளவாகும். இது எப்பொழுதும் 2'' ஆகவே இருக்கும். மற்றபடி கீழே உள்ள அளவு (5-1, 5'-3) ஜட்டியின் அளவாகும். இதை படத்தில் உள்ளது போன்று 8 சம கட்டங்களாகப் பிரித்துக் கொள்ளவும். முதல் கட்டத்தை விட்டு ஒபன் பக்கமும், மேற் பக்கமும் ¼'' மார்க் செய்து(11-11')லெக்ஹோலை வளைவாகவரையவும். கீழ்ப்புறம் குழந்தைகளுக்கு எளிதாக அணிவிக்கும் பொருட்டு (1-11') ஓபன் அமைத்துக் கொள்ளவும். 5'லிருந்து உட்புறம் தள்ளி ¼''மார்க் செய்து 10ஐயும் அந்த மார்க் செய்த புள்ளியையும் சேர்த்து இடுப்பின் பக்கவாட்டு ஷேப்பை உருவாக்கவும். அதே புள்ளியைக் கீழ்புறம் லெக்ஹோல் உடன் இணைத்து ஜட்டியின் (11) ஷேப்பை உருவாக்கவும். சிறு கத்தரியால் பேப்பர் பேட்டனை..... என்ற கோடிட்ட இடம் வழியாக வெட்டி எடுத்துக் கொள்ளவும்.

## மாதிரியைத் துணியில் வெட்டும் முறை:

தேவையான உயரத்தை வைத்துப் பார்த்து உயரவாக்கிலும்,அகல வாக்கிலும் துணியை இரண்டாக மடிக்கவும். முன்புறமும், பின்புறமும் தனித் தனியாகவும் வெட்டிக் கொள்ளலாம். பேப்பர் மாதிரியை மடிப்பின் மீதாக ஒட்டி வைத்து குண்டூசியால் மாதிரி துணியை விட்டு நழுவாதவாறு பின் செய்து எல்லா இடத்திலும் தைப்பதற்காக இடம் விட்டு (¼'') பென்சிலால் வரைந்து கொள்ளவும். பின்னர் பேப்பர் மாதிரியை எடுத்து விட்டு வெட்டத் துவங்கவும். (பின் கழுத்தை முதலில் வரைந்து வெட்டிய பின் முன்புறக் கழுத்து வரைந்து வெட்டுக) பின்புறக் கழுத்தின் மையத்திலிருந்து இடுப்பு வரை ஓபன் வெட்டிக் கொள்ளவும். கீழ்ப்புறம் இரண்டு லெக் ஹோல்களுக்கிடையிலும் ஓபன் வெட்டிக் கொள்ளவும். இவ்வாறு இப்பகுதியில் ஓபன் அமைப்பதால் சிறு குழந்தைகளுக்கு உடையைச் சிரமமில்லாமல் எளிதாக அணிவிக்கலாம்.


முதலில் வலப்புறம் 1'' பட்டியும், இடப்புறம் 2'' பட்டியும் வைத்துத் தைத்து ஓபனை தைக்கவும். தோள்பட்டை, இடுப்பின் சாய்ந்த பகுதி, ஜட்டியின் ஓரப் பகுதி பகுதி ஆகியவற்றை கால் அங். இடம் விட்டு தைத்து இணைத்துக் கொள்ளவும். கழுத்து, ஆம் ஹோல், லெக் ஹோல் ஆகியவற்றை க்ராஸ் பீஸாகத் தைத்து உட்புறம் திருப்பி கால் அங். மடித்து ஹெம் செய்யவும். இறுதியாக லெக் ஹோலின் இடைப்பட்ட ஓபன் பகுதியில் ஜட்டியின் முன் பகுதியில் 1'' பட்டியை வைத்து திருப்பி உட்புறம் ஹெம் செய்யவும். ஜட்டியின் பின் பகுதியில் 2'' பட்டியை வைத்துத் தைத்து முடிக்கவும். இவ்விடத்தில் ஓபன் பகுதியில் தைப்பது போன்று பிரஸ் பட்டன் அல்லது சாதா பட்டனை வைத்துத் தைக்கலாம். ப்ளெயின் துணியாலான உடையாக இருந்தால் முன்புறம் பலவகையான பட்சி, மிருகங்களின் உருவத்தை அப்ளிக் செய்தால் பார்க்கக் கவர்ச்சியாக இருக்கும்.

# குழந்தைகளின் ராம்பர்

யரம் — 18"
ார்பு சுற்றளவு — 20+4=24"/4=6"
தாள்பட்டை — 2½"
ழுத்து — 2"
ஆம் ஹோல் — 10"

------ வெட்டும் கோ
——— துணை கோடுக

உடை – தைத்தபின்






# திருமண மலர்

36 வயது. பிரஹசரணம், பாரத்வாஜ கோத்ரம், அசுவதி, அய்யர், சொந்த வியாபாரம். ரூ. 2000 மாத வருமானமுள்ள பட்டதாரிப் பையனுக்கு 30 வயதுக்குள் உயரமான மணமகள் தேவை. பட்டதாரி கட்டாயமில்லை. உட்பிரிவு சம்மதம். ஜாதகநகலுடன் விண்ணப்பிக்கவும். பையன் 6 அடி உயரம். பெட்டி எண் 645.

கௌண்டின்ய கோத்ரம், பிரஹசரணம் 32 வயது. பி. காம் படித்து மத்திய சர்க்காரில் பணியில் இருக்கும் மாதம் ரூ. 1400 சம்பளம் வாங்கும் ஐயர் பையனுக்கு பாட்டு, சமையல், தையல் தெரிந்த 24—28 வயதிற்குள் நல்ல குடும்பப் பெண் தேவை. பெட்டி எண் 646.

சைவ வேளாளர், 26 வயது, சதயம், அரசு பணியில் உள்ள ஸ்டாப் நர்ஸ் பெண்ணுக்கு, தகுந்த படிப்பும், அழகும், வேலையுமுள்ள மணமகன் தேவை. மற்ற பிரிவினரும் சம்மதம். கண்டிப்பாகப் புகைப்படம், மற்றும் விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். நல்ல முறையில் திருமணம். பெட்டி எண் 647

என் பிள்ளை யு. எஸ். ஏ.யிலிருந்து வந்திருக்கிறான். அவன் பி.ஏ. தேர்ச்சி பெற்று டிசைனிங் என்ஜினியராக யு.எஸ்.ஏ.யில் வேலை செய்கிறான். Green Card holder வயது 29. பரத்வாஜ கோத்ரம். தென் கலை ஐயங்கார். வட கலை பரவாயில்லை. படித்துப் பட்டம் பெற்ற பெண் தேவை. ஜாதகம் அனுப்பவும். பெட்டி எண் 648.

கௌசிக கோத்ரம், ரோஹிணி, செவ்வாய் 8ல். பி.எஸ்ஸி. படித்த, பாங்கில் வேலை பார்க்கும் 24 வயது பெண்ணுக்கு பம்பாய் பக்கத்தில் படித்த வேலை பார்க்கும் வரன் தேவை. ஜாதகத்துடன் விபரம் எழுதவும். பெட்டி எண் 649.

ஜபல்பூரில், மத்திய அரசு வேலையில் ரூ. 850 சம்பாதிக்கும் பௌர்குத்ஸ கோத்ரம், அஷ்டசகஸ்ரம் 33 வயது ரோஹிணி நட்சத்திரம் இண்டர்மீடியட் பாஸ் செய்த பையனுக்கு மாற்றிக் கொள்ளக் கூடிய வேலையில் இருக்கும் அல்லது வேலைக்குப் போகத் தகுதியுள்ள அதே பிரிவில் அல்லது வேறு உட்பிரிவில் மணமகள் தேவை. ஜாதகம், மற்ற விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் 650.

நைஜீரியாவில் இறுதியாண்டு பி.எஸ்.ஸி படிக்கும் லட்சணமான 19 வயது 163 செ. மீ. உயரம், பிரஹசரணம் விசாகம் கௌசிக கோத்திரம் ஐ. நா. நிபுணரின் பெண்ணுக்கு 26 வயதுக்குட்பட்ட மிக உயர் படிப்புகளும் வேலையும் உள்ள ஐயர் மணமகன் தேவை. அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா குடியேறத் தகுதியுடையவர் (அ) வெளி நாடுகளில் வேலை ஏற்க விருப்பமுள்ளவர் உத்தமம். முழு விவரங்களுடன் எழுதவும். பெட்டி எண் 651.

கௌண்டின்ய கோத்ரம், வடமாள் 27 வயது திருவாதிரை பட்டதாரி பெண்ணுக்கு வரன் தேவை. சகோதரன் 32 வயது பூரட்டாதி பி.யூ.சி. ஸ்டனோ தனியார் துறை ரூ. 900 சம்பளம். வேலையில் இருக்கும் பெண் தேவை. பெண் கொடுத்துப் பெண் பெறுவது விரும்பத் தக்கது. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் 652.

தமிழ் நாடு அரசு வேலையில் உள்ள 30 வயது பி.எஸ்.ஸி; பி. எட்., கோனார் ஜாதி, மணமகனுக்கு அதே ஜாதியில் பட்டதாரி அல்லது மேற்படிப்புப் பட்டம் பெற்று அரசு வேலையில் விரும்பத் தக்கது (பேங்க் அல்லது ஆசிரியை எம்.எஸ்ஸி.எம்எட் போன்ற) மணமகள் தேவை. பெட்டி எண் 653.

கௌண்டின்ய கோத்ரம், வடகலை ஐயங்கார், 32 வயது அரசு உத்தியோகமுள்ள வரனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் 654.

பாரத்வாஜ — வடகலை — ஐயங்கார் தமிழக அரசில் ஸ்டாப் நர்ஸாக பணிபுரியும் மாத வருமானம் ரூ. 1000 சொத்துள்ள பெண்ணுக்கு அதே வகுப்பைச் சார்ந்த பரந்த நோக்குள்ள படித்த உத்தியோகத்திலுள்ள விவசாயத்தில் ஈடுபாடுள்ள (ராமநாதபுரம் மாவட்டத்திற்கு முதலிடம்) 43—45 வயதுக்குள் உள்ள மணமகன் தேவை. பதிவுத் திருமணம் சம்மதம். பெட்டி எண் 655.

கௌதம, மிருகசிரிஷம், செவ்வாய் தோஷ, பிரஹசரணம், 30 வயது. சிகப்பு நிறம், பி.எஸ்ஸி. 2 பி.ஜி. டிப்ளமோ, தனியார் கம்பெனி, ரூ. 500 ஆபீஸரின் மகனுக்கு வேலையில் இருக்கும் பெண் தேவை. பெரிய வேலையில் சேர்ப்பவர்களோ சொந்தபிஸினஸ் அமர்த்திக்கொடுப்பவர்களோ கூட விண்ணப்பிக்கவும். வரதட்சிணை கிடையாது. உட்பிரிவு சம்மதம். பெட்டி எண். 656.

கௌசிக கோத்ரம், வயது 28 மத்திய அரசில் ரூ. 1100 வருமானமுள்ள ஐயர் பையனுக்கு வேலையில் உள்ள மணமகள் தேவை. இருதய அறுவைச் சிகிச்சை ஒன்றரை வருடங்களுக்கு முன் நடந்தது. திருமணத்துக்கு டாக்டரின் அனுமதி உள்ளது. எளிய, விரைவான திருமணம் விரும்பப்படுகிறது. பெட்டி எண் 657.

லாம். உட்பிரிவுகள் பரவாயில்லை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். 42 வயது மத்திய சர்க்காரில் மாதம் ரூ. 1600 சம்பாதிக்கும் வரனுக்கு மணமகள் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் 756.

வடமாள், கௌசிக கோத்ரம், திருவோண நட்சத்திரம் எல். எஸ். எல்.சி. பாஸ்செய்த தமிழக அரசு அலுவலகத்தில் ரூ. 900 சம்பளத்தில் பணி புரியும் 40 வயதுள்ள பிள்ளைக்கு எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்த வடமா பிரிவை மட்டும் சேர்ந்த பெண் தேவை. பெட்டி எண் 757.

சோழிய வேளாளர் அசைவ பிள்ளை வகுப்பைச் சேர்ந்த 25 வயது பி. எஸ்.சி. பி. எட். படித்து தனியார் பள்ளியில் பணியாற்றும் குடும்பச் சொத்துக்கள் உடைய பெண்ணுக்கு அதே வகுப்பைச் சேர்ந்த, தகுந்த படிப்பும் அழகும் நல்ல வேலையும் உள்ள மணமகன் தேவை. ஜாதகத்துடன் குடும்ப விவரங்களுடனும் விண்ணப்பிக்கவும் பெட்டி எண் 758.

பாரத்வாஜ கோத்ரம், வடமாள் ஐயர் திருவோண நட்சத்திரம், வயது 36. காரைக்குடிக்கு அருகில் உள்ள ஒரு மானேஜ்மெண்ட் ஸ்கூலில் செகண்டரி கிரேட் ஆசிரியராக பணி புரிபவருக்கு நல்ல அழகும், தெய்வ சிந்தனையும் உள்ள பெண் தேவை. வேலையில் இருந்தாலும் நல்லது. ஜாதகம் விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் 759.

பாரத்வாஜ கோத்ரம், வடமாள் ஐயர் உத்தர நட்சத்திரம், வயது 34. திருவனந்தபுரத்தில் ஒரு அரசு நிறுவனத்தில் வேலை. மாத வருமானம் ரூ. 700.எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்த நல்ல அழகும், தெய்வ சிந்தனையும், சங்கீத ஞானமும் உள்ள பெண் தேவை வேலையில் இருந்தாலும் பரவாயில்லை. ஜாதகம் மற்றும் விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் 760.

சென்னையில் மத்திய அரசின் சார்பு நிறுவனத்தில் மாதம் ரூ. 900 ஊதியம் பெறும் தெலுங்கு ஐயங்கார் 32 வயது பாரத்வாஜ கோத்திரம், அவிட்டம் பார்வைக் குறைவுள்ள மணமகனுக்கு நல்ல பண்புள்ள பிராமண வகுப்பைச் சேர்ந்த மணப் பெண் தேவை. உட் பிரிவு எதுவாயினும் பரவாயில்லை. பெட்டி எண் 761.

தனியார் கம்பெனியில் மாதம் ரூ. 1500 சம்பளம் பெறும் 25 வயது உடையவருக்கு பொருத்தமான, படித்த மணமகள் தேவை. தந்தை (கள்ளர்) அரசு பதிவு பெற்ற அதிகாரி. தாய் பிராமணர். பெண் அதே போல் கலப்புத் திருமணம் பெற்ற குடும்பத்தையோ அல்லது கள்ளர், பிராமணர் குடும்பத்தையோ சேர்ந்திருக்க வேண்டும். பெட்டி எண் 762.

30 வயது. ஆத்ரேய கோத்ரம், மிருகசீரிஷம் கேரள ஐயர் (வடமாள்) பையனுக்கு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த அழகான பெண் தேவை. பையன் பி.யூ.ஸி. படித்து சென்னையில் தனியார் நிறுவனத்தில் வேலை. ஜாதகம், விவரங்களுடன் எழுதவும். பெட்டி எண் 763.

கபிகோத்ரம், ஹஸ்தம், பிரஹசரணம் டில்லியில் மத்திய அரசில் யு. டி. சி. ஆகப் பணி புரியும் 27 வயதுப் பெண்ணுக்கு டில்லியிலோ, மற்றும் பெங்களூர் பம்பாய் முதலிய மாநிலத் தலைநகரிலோ வேலை பார்க்கும் வரன் தேவை. ஜாதகம், விவரத்துடன் எழுதவும். பெட்டி எண் 764.

பிரபல வங்கியில் அதிகாரியாக (ரூ. 2200) பணி புரியும் கால்கள் ஊனமுற்ற 32 வயதுள்ள கௌசிக கோத்திரம் (வடமாள்) சுவாதி நட்சத்திரத்தைச் சேர்ந்த இளைஞருக்கு அதே குலத்தைச் சேர்ந்த படித்த மணமகள் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் 765.

ஐயர். பாரத்வாஜா. அவிட்டம். வயது 31. பட்டதாரி. அரசு நிறுவனம், சென்னை. சம்பளம் ரூ. 1050. உயரம் 5'.9''. சிகப்பு நிறம். நல்ல அழகு. மகிழ்ச்சி நிறைந்த நடுத்தரச் சிறு குடும்ப மணமகனுக்கு ஆரோக்கியம், அழகு அன்பு பண்பு நிறைந்த 25 வயதிற்குட்பட்ட பட்டதாரியான நல்ல உத்தியோகத்தில்உள்ள நடுத்தரவர்க்க மணப்பெண் தேவை. எளிய திருமணம். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும்.
பெட்டி எண் 766.

ஐயர் நைத்ருவ காச்யப கோத்ரம், சதய நட்சத்திரம், 26 வயதுள்ள நல்ல நிறமுள்ள, உயரமுள்ள S.S.L.C. ஹிந்தி விசாரத் படித்த பெண்ணுக்கு நல்ல உத்தியோகத்தில் உள்ள 32 வயதிற்குள் மணமகன் தேவை. பெட்டி எண் 767.

எம்.ஏ., பி.எட். படித்து மேல் நிலைப் பள்ளியில் ஆசிரியராக உள்ள செட்டியார் வகுப்பைச் சேர்ந்த அசைவ இளைஞருக்கு பி.எட். படித்த அல்லது ஆசிரியை உத்தியோகத்தில் உள்ள பெண் தேவை. வயது 30. இந்து மதத்தைச் சேர்ந்த எந்த ஜாதியாயிருந்தாலும் பரவாயில்லை. ஜாதகம் இருந்தால் அனுப்பி வைக்கவும். பெட்டி எண் 768

# மர்மத்தீவில் மாலா-பாலா

3

கதை: மகிழ்ச்சிக் கண்ணன்
சித்திரம்: விஜயா—




கல்யாணி! நேத்தைக்கு மாலா ஸ்கூலுக்கு வரலியா... அடடே.. பாலாவே வர்றான். வாடா பாலா! என்னடா இது?
என்ன சொல்றது? கல்யாணி நீதான் ஒரு உதவி பண்ணணும்.
என்னண்ணே செய்யணும்?
கல்யாணி! மாலா கிடைச்சுடுவா, நீ கவலைப்படாதே! சில விவரங்க தெரியணும். நீ நேத்தைக்கு அவளை எப்போ கடைசியா பார்த்தே!
லஞ்ச் டைம்லண்ணே... ஸ்கூல் வெளியிலே ஒரு கார். அதுல இருந்தவங்க கூப்பிட மாலா ஏறிப் போயிட்டா!
அந்தக் கார் நம்பர், கலர், வந்த ஆளுங்க பற்றி ஏதாவது....?
கறுப்பு அம்பாஸடர். நம்பர் நாலு ஆறு. மத்த விவரங்க கவனிக்கலேண்ணே.
நியூஸெல்லாம் பாத்தா பயமா இருக்கு. நீங்களும் ஜாக்கிரதையா இருக்கணும். பாலா, நீ எங்கே போறே!
ஒரு ஆபீஸர் வீட்டுக்குப் போயி டு ஸ்கூலுக்குப் போவேன். நான் வந்தது எங்க வீட்டுக்குத் தெரிய வேண்டாம். வெங்கட் உன்னை ஸ்கூல்லே பார்க்கறேன். பை.
பள்ளிக்கூடம் அருகே சைக்கிளில் வந்த வெங்கட்டை ஒரு ஜீப் மோத வெங்கட் விழுகிறான். அங்கே சைக்கிளில் பாலா வருகிறான்.
அய்யய்யோ! இவன் நம்ம உதவிக்கு வருவான்னு நெனச்சா இவனுக்கே இப்படி ஆயிடுச்சே..
என்னய்யா, அறிவிருக்கா! ஸ்கூலாச்சே... பார்த்து வரக் கூடாது?
பஸ்ட் போலீஸ்லே புகார் பண்ணணுங்க!
அதெல்லாம் வேணும்... பையனை ஹாஸ்பிடலுக்கு அழச்சுப் போங்க.. சைக்கிளையும் ஜீப்லே ஏத்திக்கிங்க....
6666
ஆ.. இதுவும் சரிதான்! அந்தக் காரின் பின்புறத்தில் ரகசியமாக ஏறிவிட வேண்டும். சைக்கிள் கிடக்கட்டும்.

தொடரும்....

# நீரைக் கொதிக்க வைத்தல், பாட்டிலை கிருமி நீக்கம் செய்தல், வெப்பநிலை சோதனை செய்தல்—ஆகிய பிரச்சினைகள் இல்லை.

புதிதாகப் பிறந்த குழந்தை உணவைப் பெற்றிட எத்தகைய சுலபமான, வசதியான, இயல்பான வழி இருக்கிறது பார்த்தீர்களா? ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இயல்பாக நடந்த நீண்ட சோதனை கணிப்பின் மூலம் இயற்கை கண்டு கொண்டுள்ளது:

குழந்தைக்கான தாய்ப்பாலை உன்னத உணவாக்குபவை அதில் இயல்பாக சரிவிகிதமாகக் கலந்துள்ள உடல் வளர்ச்சிச் சத்துக்கள் (புரதம்), சக்திதரும் சத்துக்கள் (கார்போஹைட்ரேட்டுகள், கொழுப்பு) ஆரோக்கியமான பாதுகாப்புச் சத்துக்கள் (வைட்டமின்கள்) ஆகும்.

## தூய்மைக்கேடு பிரச்சினை இல்லை.

உங்கள் குழந்தை, முலையிலிருந்து பாலை நேரடியாக குடிப்பதால் தூய்மைக்கேடு ஏற்படும் அபாயம் அதில் இல்லை, தயாரிப்பு அல்லது பாலின் வெப்ப நிலையை சோதித்தல் போன்ற பிரச்சினைகளும் அதில் இல்லை.

அத்துடன் வயிற்றில் வாயுக் கோளாறுகள் மற்றும் இதர நோய்களிலிருந்து உங்கள் குழந்தையை பாதுகாத்திட தாய்ப்பாலில நோய் எதிர்ப்புப் பொருள் இயல்பாகவே உள்ளது—இன்னும் இதர நன்மைகள்கூட அதிலே—உதாரணம் புளிப்பைத் தடுத்திட வைட்டமின் 'சி'.

முலைப்பால் உண்ட குழந்தை பாதுகாப்பும் தன்னம்பிக்கையும் பெறுகிறது; காரணம் நீங்கள் குழந்தையை அரவணைத்து பாசத்தையும் சேர்த்தல்லவா பாலூட்டுகிறீர்கள்.

## நாளும் பிரபலமடைகிறது

அதன் ஊட்டச்சத்து மற்றும் இதர நலன்கள் விரிவாகவும் அதிகமாகவும் உணரப்படுவதால் மேலை நாடுகளிலும் கூட முலைப்பால் கொடுத்தல் மிகவும் அதிகமாக பிரபலமாகி வருகிறது.

உங்கள் உடல் நல பாதிப்பு அல்லது பால் பற்றுக்குறை ஆகியவற்றால் நீங்கள் குழந்தைக்கு பால் கொடுக்க முடியாமல் போனால் என்ன செய்வது?

உங்கள் குழந்தைக்கு நீங்கள் சிறந்த 'தாய்ப்பால் மாற்று' தேர்ந்தெடுக்க வேண்டும்.

# வெற்றி வீரன்

அடிப்படை ஆரோக்கியம்
வெற்றியின் முதற்படி-



உங்கள் குழந்தைக்கு
போலியோ சொட்டு மருந்து அளித்து
இளம்பிள்ளை வாத நோயிலிருந்து
பாதுகாப்பு அளித்திடுங்கள்.

மருத்துவரின் மேற்பார்வையில் போலியோ
சொட்டுமருந்து. டிரிபிளாண்டிஜென்,
தட்டம்மை தடுப்பு ஊசியும் அளிக்கப்படும் இடம்:

TAMILNADU DADHA

**தமிழ்நாடு தாதா
பார்மாசூடிக்கல்ஸ் லிமிடெட்**


10, பத்மாவதியார் சாலை, ஜெய்ப்பூர் நகர்
(ஆயிரம் விளக்கு மசூதி அருகில்)
சென்னை-600 086, தொலைபேசி 810646

ஞாயிறு : காலை 8.30 முதல் பகல் 12.30 வரை
புதன் : காலை 8.00 முதல் பகல் 10.00 வரை
சனி : மாலை 3.00 முதல் 6.00 வரை

madhu ads-248

# மர்மத் தீவில் மாலா-பாலா

கதை: மகிழ்ச்சிக் கண்ணன்
சித்திரம்: விஜயா




கட்டுமரம் எங்க போகுது? அட, எதிரே ஒரு தீவுபோல இருக்குதே! இது என்ன மர்மத் தீவு!
தம்பி, யாரு?
பட்டணங்க... கார்ல பெரியவரைப் பார்க்கணுமின்னு அழைச்சுட்டு வந்தாங்க. அந்த கட்டு மரத்திலே இடமில்லாததாலே அடுத்து வந்து அழைச்சுட்டுப் போறதா சொன்னாங்க..
ஓஹோ.. ஆச்சரியமா இருக்குது. உன்னை விட்டுட்டு அவங்கப் போனது. தம்பி புதுக் கேஸு.. பேசாம அவங்க வரதுக்குள்ளே! ஓடிப் போயிடு தம்பி. அது பொல்லாத இடம்.
அதோ தெரியுதே அந்தத் தீவு என்னது?
ஆமாம் தம்பி! அந்தத் தீவுதான் மர்மத்தீவு. அங்கே ஒரு பெரிய கட்டடம் தெரியுது, அங்கதான் அந்த சாமியார் இருக்கான். அவன் தான் பெரியவர். அவன்கிட்டே மாட்டுனா அவ்வளதான்!
அங்கே என்ன மர்மம் நடக்குதுன்னு நான் கண்டு பிடிக்கணும்.
அது-தான் நடக்காது. காணாமல் போன என் தங்கை-யையும், என் ஃபிரண்-டையும் மீட்காம நான் போக மாட்டேன்..
ஹா ஹா ஹா... நீ, அந்தச் சாமியாரை இங்கிருந்து பிடிக்கப் போறியா. நல்ல டமாஷ்! போயிடு விளையாட்டு வேண்டாம்!
உம்.. உங்க தலையெழுத்து அப்படி இருந்தா நான் என்ன செய்ய முடியும். அதோ. சாமியார் கையாள் வரான். நான் அப்புறமா பாக்கறேன்
தொடரும்...

### பேப்பர் மாதிரியைத் துணியில் வைத்து வெட்டும் முறை:

முதலில் துணியின் கரைப் பகுதி உயர வாக்கில் அமையுமாறு பின்புற பாடியை வைத்து (2 ஆக மடித்து குண்டூசியால் பின் செய்து தைப்பதற்காக எல்லா இடமும் கால் அங். இடுப்புப் பகுதியில் மட்டும் 1''ம் விட்டு பென்சிலால் வரைந்து வெட்டி எடுத்துக்கொள்ளவும். முன்புற பாடியையும் இவ்வாறே வெட்டி எடுத்துக் கொள்ளவும். 2 கைகளையும் எல்லா இடமும் கால் அங்.ம் கீழே (பாட்டம்) மட்டும் மடித்துத் தைக்கத் தேவையான அளவும் விட்டு வரைந்து வெட்டிக் கொள்ளவும்.

### தைக்கும் முறை:

2 அங்குலம், மற்றும் ஒன்றரை அங்குலம் அகலமும் ஓபன் அளவு நீளமுள்ள 2 துண்டுகளை மீதமுள்ள துணியிலிருந்து வெட்டி எடுத்துக் கொள்ளவும். ஒன்றரை அங். அகலமுள்ள துணியை வலதுபுறம் நல்ல பக்கம் கால் அங். வைத்து கெட்ட பக்கம் முழுவதுமாகத் திருப்பி கால் அங். மடித்து ஹெம் செய்யவும். 2'' துண்டை இடதுபுறம் கெட்ட பக்கம் தைத்து நல்ல பக்கம் பாதி திருப்பி முன் தைத்த தையல் தெரியாதவாறு அத்தையலின் மீதே தைக்கவும். தோள் பட்டை, இடுப்புப் பகுதியை தைத்துக்கொள்ளவும். முன்புற பாடியில் நடுவில் முக்கால் அங். பிளீட் பட த்திலுள்ளது-போன்று தைக்கவும். அதற்கு சற்று மேலாக ஆம் ஹோலிலிருந்து கால் அங். அகலத்தில் 2'' நீளத்திற்கு சாய்வாக ஒரு ப்ளீட் தைக்கவும். பின்புற பாடியில் கால் அங். அகலத்தில் இரு புறமும் 2 ப்ளீட் தைத்துக்கொள்ளவும். கீழ்புறம் பெல்ட்டிற்கு 2'' அகலமும், இடுப்பளவுக்கு நீளமுள்ள துணியை வெட்டி எடுத்துக் கொண்டு துணியை ஓரத்தில் கால் அங். மடித்து இடுப்பின் நல்ல பக்கம் தைத்து முடிவிலும் கால் அங். மடித்துத் தைத்துக்கொள்ளவும். 2வது முறை மேல் புறத் தையல் தைத்தபின் முழுவதுமாக பட்டியை கெட்ட பக்கம் கொண்டு வந்து கால் அங். மடித்து நம் விருப்பப்படி ஹெம்மிங்கோ அல்லது மிஷினலோ தைத்துக் கொள்ள வேண்டும்.

கையின் கீழ் புறம் துணி விட்டதற்கு ஏற்றவாறு மடித்துத் தைக்கவும். ஆம்-ஹோல் இணைப்புடன் கையை வைத்துப் பார்த்து தேவையான அளவுப்படி மார்க் செய்து கையைத் தனித் தனியே இணைத்துத் தைக்கவும். பின்னர் பாடியின் நல்ல பக்கமும் கையின் நல்ல பக்கமும் இணைந்திருக்குமாறு பொருத்தி வைத்து முதலில் ஒட்டுத் தையல் தைத்துக்கொண்டு, பின்னர் மிஷினல் தைக்கவும். ஒட்டுத் தையலைப்பிரித்து விடவும். கழுத்தின் நல்ல பக்கம் 1''மும், கழுத்தின் நீளத்திற்கேற்றவாறும் க்ராஸ் பீஸை வெட்டி இணைத்துக் கொண்டு நல்ல பக்கம் கால் அங். அகலத்திற்கு வைத்துத் தைத்து கெட்ட பக்கம் முழுவதுமாக திருப்பி கால் அங். மடித்து ஹெம் செய்யவும். ஓபன் பகுதியில் 2''க்கு ஒன்றாக கொக்கியோ, அல்லது பட்டனோ அவரவர் விருப்பத்துக்கு ஏற்ப வைத்துத் தைக்கலாம்.

# கடைத் தேங்காயை எடுத்து.....

கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்தாற்போல் என்று சொல்வதுண்டு.

பிள்ளையாருக்கு உடைப்பது இருக்கட்டும். முதலில் கடைத் தேங்காயை நல்லதாக எடுக்கத் தெரியுமா? இதோ சில குறிப்புகள்:

தேங்காயை எடுக்கும்போதே முதலில் அதன் குடுமியைப் பிடியுங்கள். தற்போதைய தண்ணீர்ப் பஞ்சத்தில் குளிக்காத நம் கூந்தலைப் போல குடுமியின் நார்கள் பிசுக்குப் பிடித்தாற்போல் ஒட்டிக்கொண்டிருந்தால் — தேங்காய் இளசு.

அல்லாமல், ஷாம்பூ செய்த கூந்தல் போல மொற மொற வென்று நார்கள் தனித் தனியாக இருந்தால் தேங்காய் முற்றல்!

சரி, குடுமி இல்லாத மொட்டைத் தேங்காய் என்றால்?

தேங்காயின் மூன்று கண்களும் வெளிறினாற்போல பழுப்பாக இருந்தால் இளசு!

கண்கள் நல்ல கறுப்பாக இருந்தால் தேங்காய் முற்றல்.

மேலும் தேங்காயின் மேலுள்ள மூன்று கோடுகளும் தேங்காயின்மேல் பரப்போடு சமமாக ஒட்டினாற்போல் இருந்தால் தேங்காய் இளசு.

அப்படியின்றி மூன்று வரிகளும் நன்றாக உயர்ந்து கம்பி போல வரப்பு கட்டினாற் போல் இருந்தால் முற்றல்.

தவிர உருண்டை வடிவக் காய்களை விட நீளவாட்டில் இருக்கும் காய்களில் பொதுவாகத் திருகினால் பூ நிறைய இருக்கும்.

வெள்ளை ராசிக் காய்கள் ஆப்பம், சேவை முதலியவைகளுக்குப் பால் பிழியவும் குருமா, முதலியவற்றுக்கும் ஏற்றது. பால் நிறைய இருக்கும்.

கருப்பு ராசிக் காய்கள் வறுத்தரைக்கும் கறிகளுக்கும் கறிகளுக்குத் துருவிப் போடவும், பர்ஃபி, தேங்காய் பூரணம், முதலியவை செய்யவும், தட்டை, சோமாஸ்-பூரணம் போன்றவைகளுக்குத்திருகிப் போடவும் ஏற்றது. பட்சணங்கள் கெடாது.

தேங்காய் தண்ணீர் நன்றாகக் குலுங்கினால், தேங்காய் அடர்த்தியாக இருக்கும்.

தேங்காய் தண்ணீர் குலுங்கி, காய் கனமின்றி இலேசாக இருந்தால் தேரை விழுந்த காயாக இருக்கும்.

தேங்காயின் கண்கள் ஈரமாகவும், லேசான வாடையுடனும் இருந்தால் அநேகமாக அழுகலாக இருக்கும்.

தேங்காய் பார்வைக்கு நல்ல முற்றலாகவும் குடுமி ஒட்டிப் பிடித்துக் கொண்டிருந்தால் குலைவாடல் தேங்காய். (செயற்கையாக மூட்டம் போட்டது) நன்றாக இராது.



இப்படிப் பார்த்துப் பார்த்து வாங்கிய காயை வீட்டுக்கு வந்ததும் குடுமி பாகம் மேலே இருப்பது போலச் செங்குத்தாக ஈரமில்லாத இடத்தில் வைத்தால் அழுகாது.

முதலில் செலவழிப்பது கண் உள்ள மூடியை. ஏனெனில் அந்தப் பகுதிதான் சீக்கிரம் கெட்டுவிடக் கூடியது.

உபயோகிக்காத மூடிகளை சிறிது டேபிள் ஸால்ட் தடவி, காற்றோட்டமாக வைத்தால் எத்தனை நாளானாலும் கெடாது.

நிறைய முற்றிய தேங்காய்கள் மலிவாகக் கிடைத்தால்—

மொத்தமாகத் துருவி, இலேசாக நிறம் மாறாமல் ஈரம் வற்றும்வரையில் அதிகாலையில் வறுத்து, சிறிது உப்புத் தூள் கலந்து, நல்ல வெயிலில் அன்று முழுவதும் உலர வைத்து சூடாறிய பிறகு சுத்தமாக பாட்டில்களில் காற்றுப் புகாமல் வைத்துக் கொண்டால்—

எவ்வளவு நாளானாலும் கெடாது. வேண்டும்போது புதிய தேங்காயைச் சமைப்பது போலவே உபயோகிக்கலாம்.

அடடா...! எல்லாம் சரி. கடைத் தேங்காயை எடுக்க வந்ததே வழிப் பிள்ளையாருக்கு உடைப்பதற்கு அல்லவா? எந்தக் காய் எடுப்பது?

இந்தத் தேங்காயில் முளை வந்திருக்கிறது. ஆகவே இதற்குள் மொட்டு இருக்கும். (தேங்காய்ப் பூ) வேண்டாம்.

கைக்குள் அடங்குவதாக—

அதிகம் முற்றல் இல்லாததாக—


இருந்தால்தான் ஓங்கி அடிப்பதற்கும் சிதறுவதற்கும் ஏற்றதாக இருக்கும். எடுத்துக் கொண்டு நடையைக் கட்டுவோமா?

—எஸ். பட்டம்மா



# மர்மத் தீவில் பாலா-பாலா

கதை: மகிழ்ச்சிக்கண்ணன்
சித்திரம்: விஜயா





ஹா ஹா ஹா! என்னை வடக்கேதான் அவனால் மடக்க முடிந்தது. இங்கே நான் நெனச்சா இன்னைக்கே அவனை குடும்பத்தோட க்ளோஸ் பண்ணுவேன்.
அதெல்லாம் வேணாம் ஸ்வாமி விபரீதமா போயிடும்.
தெரியும். அதனாலதான் படிப்படியா. ஓகே... நீ வர்ற பௌர்ணமிக் குள்ளே வந்துடணும். இல்லே நான் வந்துடுவேன்.
இல்லே நானே வரேன் ஸ்வாமி.
பீமன்! பீமன்!
இந்தத் தீவுல நமக்கு எதிரா ஒருத்தன் கிளம்புறானே, குப்பன் அவன் இப்போ எப்படியிருக்கான்!
அப்படியே தான் இருக்கான் பாஸ் அவனுக்கு மத்த ஜனங்க ஆதரவும் பெருகிட்டிருக்கு.
இருக்கட்டும் மொதல்லே அவனை க்ளோஸ் பண்ணிடணும். வைர சந்தைக் குள்ளே...
ஓகே பாஸ்! அந்தப் பொண்ணு அடம் பிடிக்குது. அதை அடக்கணும் பையனுக்கு இன்னும் மயக்கம் தெளியலே.
அப்படியா, ரெண்டும் பெரிய இடத்துப் பசங்க இல்லே! மொதல்ல அந்தப் பொண்ணை என் ரூமுக்கு கூப்பிட்டு வா!
வாம்மா மானாக் கண்ணு. உங்க அண்ணன் கூட வந்துட்டான். இனிமே பயமில்ல... உனக்காக ஃபாரின் டிரஸ்ங்க வாங்கி வச்சிருக்கேன். இந்தா.
யாருக்கு வேணும் உன் ஃபாரின் டிரஸ். நீயே வச்சுக்க. எங்கண்ணன் பாலாகூட வந்துட்டானா! ரெண்டு பேருமா சேந்து உங்களை ஒரு கை பாக்கறோம்.

தொடரும்...


மர்மத் தீவில்
மாலா-பாலா
கதை: மகிழ்ச்சிக் கண்ணன்
சித்திரம்: விஜயா
யோவ், அவரு உங்களுக்கு என்னய்யா செஞ்சாரு! அவரைக் கட்டிப் போடறீங்க!
எங்களுக்கு எதிரா ஒருத்தர் கூட இருக்கக் கூடாது. மெட்ராஸா போயிட்டு வந்தே? குப்பா, இப்போ மேலோகம் போ...
டேய் பீமன், ஜாஸ்தி பேச்சு வேணாம். அவனை இழுத்துட்டுப் போய் தென்னந் தோப்புல க்ளோஸ் பண்ணு.
கோயில்ல இருந்து தீவட்டிங்க வருது பாத்தீங்களா, மத்தவங்கள்ளாம் போயிடுங்க...
யோவ், யோவ், இழுக்காதேய்யா, அப்பாவை ஒண்ணும் செய்யாதீங்கடா பாவிங்களே!
குப்பனை இழுத்துக் கொண்டு போய் தனி இடத்தில் எரிக்கிறார்கள்.
உம், எல்லோரும் போயிடுங்க. ஆரம்பிங்க...
என்னது தேங்கா விழுது? மேலே பாருங்க. ஊஹும் யாரும் இல்லே. தானா விழுந்திருக்கும் ம்..ம்.. காரியம் முடியட்டும்...
ஆட்கள் போகின்றனர். பாலா ஒரு மரத்திலிருந்து ஒரு மரம் தாவி வீராசாமி, குப்பனின் மகன் டில்லி மற்றவர்கள் இருக்கும் இடம் அடைகிறான் மரத்திலிருந்து பாலா இறங்கியபடி...
என்ன வீராசாமி, மொதல்ல வந்திருந்தா தடுத்திருக்கலாமே. அப்படியும் நான் மேலிருந்து தேங்காயைப் போட்டேன்.
அவங்களை எதிர்த்து ஒண்ணும் செய்ய முடியாது. சந்தையிலே வித்துடு வாங்க தம்பி. நீ இங்கே இருந்தா பிடிப்பாங்க. நம்ம குடிசைக்குப் போகலாம்.


சந்தை, சந்தைன்னு சொல்றீங்களே என்னங்க!
ஒவ்வொரு பௌர்ணமியிலும் பலஊர்லே இருந்து தேசங்கள்ள இருந்து வியாபாரிங்க வருவாங்க. அவங்களுக்குப் பிடிச்ச பசங்க, பொண்ணுங்க கொழந்தைங்களை வாங்கிட்டுப் போவாங்க. அது இல்லாம வேற வேற வியாபாரங்களும் அன்னிக்கு ஒரே திருவிழாதான்!
கமலா, பௌர்ணமிக்கு ரெண்டு நாள் தான் இருக்கு. சந்தைக்கு எத்தனைப் பசங்க தேறுவாங்க அந்த மாலா எப்படி இருக்கா?
25 பேரு தேறுவாங்க, பாஸ்! மாலா அப்படியே மாறிட்டா... அவளுக்கு நம்ம ராதா ஃப்ரண்டாம். அவ விஷயத்தைச் சொல்லி மாத்தி இப்போ எல்லா வித்தையும் கத்துட்டு வர்றா. பையனும் தணமாயிட்டு வர்றான்.
ராதா, நீதான் வெளியே போறியே, நைஸா அப்படியே ஓடறது. எங்கபோறவைப் பார்த்து சொல்றது!
முடியாது மாலா. நம்ம கூட ஒரு பத்து பேரு பாதுகாப்புக்குன்னு வருவாங்க.. இங்க இருக்கிறவங்கள்ள நெறய பேரு எதிரா தான் சமயம் பாத்துட்டு இருக்காங்க.
வாங்க பாஸ், குட் ஈவினிங்
குட் ஈவினிங் அங்கிள். நீங்க டிரஸ்ங்க வாங்கித் தந்ததுக்கு ரொம்ப தேங்க்ஸ் அங்கிள்! ராதாவும் கமலா மாமியும் ரொம்ப உதவியா இருக்காங்க..
நல்லது. இப்போ எப்படி அழகா ரதி மாதிரி இருக்கே. லட்ச ரூபாகூட கொடுப்பா உன்னைப் பாத்தா!

தொடரும்....



HE is the cause of all our actions. We are only HIS instruments: the result is in HIS hands.

In any action the means are as important as the result.

ALWAYS do to others as YOU would wish others do to you in similar circumstances. Let your thoughts and actions be guided by Dharma (righteousness).

Don't compare yourself with those more fortunate than you and feel sorry: be happy that you are above those less fortunate than you. Involving yourself in solving others' problems will minimise your own.

Be thrifty. Spend only on needs and not on desires you can do without. Today's waste might prove to be tomorrow's want. Avoid tastes and expenditure you cannot always afford.

Save today for tomorrow's comforts or emergencies. The future is always unpredictable. Better to save than to have to borrow.

---

7

மர்மத் தீவில்

# மாலா-மாலா

கதை: மகிழ்ச்சிக்கண்ணன்
சித்திரம்: விஜயா




டில்லி, நாமும் பங்களாக்குள்ளே போகணும்.
இப்போ வேண்டாம் சாமி, இருட்டட்டும். சந்தை ஆரம்பமாகட்டும். அது-சரி எப்படி போனீங்க.
இருட்டட்டும் வீராசாமி கீழே இருக்குது இல்லெ.
டில்லி, நான் வேலையை ஆரம்பிக்கறேன். என் பையைக் குடு. இப்போ கூட இரு
ஜாக்கிரதையா தம்பி.
ஒரு ஆள் வருகிறான்
அந்த ஆளை இரும்புக் குழாயால் மண்டையில் பாளா அடிக்க அவன் சத்தம் போடுவதற்குள் டில்லி அவன் வாயை அடைத்தான்.
வாடா டில்லி, தோப்புக்குள்ளே இழுத்துப் போவோம்!
டில்லி, அடையாள கார்டு கூட இருக்குது. இதுதான் ரகசிய டெலிபோன்.
சீக்கிரம் டிரஸ் மாத்துங்க
நான் இந்த ஆளை ஒளிச்சு வச்சுடறேன்.
பலே, தம்பி சந்தை ஆரம்பமாயிடுச்சு. ஆட்டெல்லாம் போட்டாச்சு! மொதல்ல ஏலம் தான்!
நான் போறேன். நீ நம்ம ஆளுங்களை ரெடி பண்ணி கோயிலண்ட இருக்க வை..
ரொம்ப அழகான பொண்ணு. 14 வயது ரதி மாதிரி டான்ஸ், பாட்டு, ஓட்டம், ஆட்டம் எல்லாம் தெரியும். யாருக்கு வேணுமோ விலை கேட்கலாம்
பத்தாயிரம்
பதினைந்தாயிரம்
யாரு நம்ம மாலாவையா! பாவிங்க.. உம்.. விடக்கூடாது.
ஒரு லட்சம்!

தொடரும்...

# ராசிபலன்

## ஆகஸ்ட்'83

### மேஷம்



இம்மாதத்தின் முதல் பதினைந்து நாட்கள் வரை அவ்வளவு சுவாரஸ்ய மில்லா நாட்களாக சென்றாலும், கடைசிவாரம் மனமகிழ்ச்சியைக் கொண்டு தரும். நீண்ட நாளாக எதிர்பார்த்து வந்த நண்பர் (அ) உறவினரின் வருகையால் இல்லத்தில் மகிழ்ச்சியும், குதூகலமும் ஏற்படும். அரசாங்க உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவும், கூட வேலை செய்பவர்களின் உதவியும் சமயத்தில் கிடைக்கும். பணவரவும் திருப்திகர மாகவே இருக்கும்.

### ரிஷபம்



வரவு மிகவும் சரளமானதாக இருந்தாலும், அதைக் காப்பதில் மிகவும் குறியாக இருக்க வேண்டிய நாட்கள் இவை. உங்களைச் சுற்றி யிருப்பவர்களினால் செலவினங்கள் அதிகமாகும். இம்மாதம் மிகவும் குதூகல மான, பரந்த மனப்பான்மையுடன் இருப்பதால் பணவிஷயத்திலும் ஜாக் கிரதையாக இருப்பது நல்லது. இரும்பு சம்பந்தமான வியாபாரிகளுக்கு ஓரளவு சிக்கல்கள் மிகுந்த மாதமாக இருக்கும். கலைஞர்களுக்குப் புகழுடன் பணமும் சேரும்.

### மிதுனம்



உத்தியோக நிமித்தமாகவோ, கணவரின் மூலமாகவோ வெளியூர்ப் பிரயா ணங்கள் ஏற்படலாம். அதிக அலைச்சலின் காரணமாக உடல்நிலை சிறிதே பாதிக்கவும் கூடும். குழந்தைகளின் காரணமாக இதுநாள்வரை இருந்த வந்த சங்கடங்களும் சஞ்சலங்களும் மாறி இம்மாதத்தின் நாட்கள் அமைதியாகவே செல்லும். மிகவும் நெருங்கிய உறவினர் (அ) நண்பர் ஒருவரின் மூலமாக எதிர்பாராத பணவரவு ஏற்படும். திருமணமாகாதவர்களுக்கு நல்லவரன்கள் எதிர்ப்படும்.

### கடகம்



பல மாதங்களாக எடுத்த காரியங்களில் தோல்வி, அலைச்சல் என்று இருந்த நிலைமை இம்மாதம் மாறி, நல்ல விதமாக திருப்புமுனை ஒன்று ஏற் படும். உங்களை வந்தடையும் நண்பர் ஒருவரின் உதவியால் சரியான பாதை யில் நடந்து செல்ல ஆரம்பிப்பீர்கள். கடின உழைப்பும், தீர்க்கமான சிந்தனை யும் மேற்கொண்டீர்களானால் பிரகாசமான எதிர்காலத்திற்கு வழியுண்டு. பணவரவு செலவுக்குள் அடங்குவதாகவே இருக்கும்.

### சிம்மம்



மனசஞ்சலங்களும், குழப்பமும் இம்மாதம் ஓரளவு மிகுந்தே காணப் படும். உடனிருப்பவர்களுடன் ஒத்துப் போகாமை, அதீத கற்பனை இவற்றை விட்டொழித்து, மனிதர்களுடன் சுமுகமாகப் பழக ஆரம்பித்தீர் களானால், உங்கள் பிரச்சினைகள் பனிபோல விலகும். தெய்வ பக்தியும், ஆழ்ந்த நம்பிக்கையும் உங்கள் வாழ்க்கையில் நல்ல திருப்பத்தை உண்டாக் கும். மற்றபடி எல்லாவிதத் திறமைகளும் கொண்டுள்ள உங்களால் வாழ்க் கையை மிக எளிதாக வெற்றிகொள்ள முடியும்.

### கன்னி



எதையும் தீர ஆராய்ந்து, கச்சிதமாகச் செய்யும் மனப்போக்குடைய நீங்கள் திட்டமிட்டிருந்தபடி காரியங்கள் இம்மாதம் வெற்றிகரமாகவே முடியும். சுயதொழில் செய்பவர்களுக்கு அலைச்சலும், குழப்பமும் அதிகமாக

# நீங்களே கண்டுபிடிக்கலாம்!

**பு**ற்று நோய்களில் மார்பகப் புற்று நோய்தான் சுலபமாகக் கண்டு பிடிக்கக் கூடியது. குறித்த காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டால் சுலபமாககுணப் படுத்தியும் விடலாம்.

மாதம் ஒருமுறை நீங்களே உங்கள் மார்பகங்களைப் பரிசோதனை செய்து பார்ப்பதன் மூலமும் வருடம் ஒரு முறை டாக்டரிடம் பரிசோதனைசெய்து கொள்வதன் மூலமும், ஏதேனும் சிறு மாற்றம் இருந்தால், கட்டிகள் இருந் தால், மார்பகக் காம்புகள் உள் ளிழுத்துக் கொண்டிருந்தால், அல் லது அவற்றிலிருந்து நீர் வடிந்தால் உடனே எச்சரிக்கை அடைந்து தகுந்த சிகிச்சையளிக்கலாம்.

ஒவ்வொரு மாதமும் மாதவிடாய் ஏற்பட்டதற்கு ஒரு வாரம் கழித்து மார்பகங்களை கவனித்துப் பார்க்க வேண்டும்.

மேல் ஆடைகளைக் களைந்து விட்டு ஒரு கண்ணாடியின் முன் நிற்கவும். இரண்டு கைகளையும் பக்கவாட்டில் தொங்க விட்டுக் கொண்டு, உங்கள் மார்பகங்களை, அதன் அளவு தோற் றம் இவைகளைத் தெரிந்து கொள் ளுங்கள்.

பின்பு கையிரண்டையும் தூக்கித் தலைக்குப் பின்புறமாக வைத்துக் கொண்டும் ஏதேனும் மாறுதல்கள் தெரிகிறதா என்று கவனிக்கவும்.

மூன்றுவதாக கைகளை இடுப்பில் வைத்து கீழ்நோக்கி அழுத்திக்கொண்டு மார்பகங்களை விரைப்பாக வைத்துக் கொண்டு மார்பகக் காம்புகள் சரி யான நிலையில் இருக்கிறதா என்று பார்க்கவும்.

கடைசியாக கீழே படுத்துக்கொண்டு வலது கையை தலைக்கடியில் வைத்துக் கொண்டு, இடது கைவிரல்களால் வலது மார்பில் மார்பகக் காம்பி லிருந்து தொடங்கி வட்டமாகச் சுற்றி பரிசோதனை செய்ய வேண்டும். அதே போல் இடது கையைத் தலைக்கடியில் வைத்துக் கொண்டு வலது கையால் இடது மார்பைப்பரிசோதிக்கவேண்டும்.

சாதாரண சமயங்களில் தன் மார்பு எப்படி இருக்கும் என்று தெரிந்து கொண்டிருக்கும் பெண்களுக்கு, அங்கு ஒரு சுண்டைக்காய் அளவு கட்டி இருந்தாலும் உடனே தெரிந்துவிடும்.

அப்படி ஏதேனும் தென்பட்டால் அதைத் தேய்த்தோ, கசக்கியோ செய் யாமல், பெரிதாகிறதா, மறைகிறதா என்று பொறுத்திருந்து பார்க்காமல் உடனே டாக்டரிடம் செல்லவும்.

—ஜெயா. வி. ராமன்.









மர்மத் தீவில் மாலா-பாலா

கதை: மகிழ்ச்சிக்கண்ணன்
சித்திரம்: விஜயா




பாஸ், போலீஸ்!
அப்பா, பயந்துட்டேன். இந்த போலீஸ் ஆபிஸர் தானா. பரவாயில்லே. அவங்களை மரியாதையா என் அறைக்கு அழைச்சுண்டு வாங்க.
வாங்க, வாங்க. டேய் பீமா, ஸாருக்கும் மத்தவங்களுக்கும் ஸ்பெஷலா விருந்து ஏற்பாடு பண்ணு.
இதெல்லாம் இருக்கட்டும். வரதராஜன் வந்தாரே என்ன செய்யறீரு. பிடிச்சுட்டீங்களா இல்ல...
பாக்கறீங்களா, இந்த டி.வி.லே. தனி ரூமிலே அடச்சு வச்சிருக்கேன்.
ஓ... இவருடைய பசங்க?
மாலா... சரி இவன் இவளுடைய அண்ணன் இல்லியே...
அம்மாடியா! ஏன் மாலா, அப்போ இவன் யாரு!
எங்கண்ணன் க்ளாஸ்மேட், அங்கிள். ஆறு அண்ணன் ஆதான் கூப்பிடுவேன்!
ஓ... நீங்கதான் இவங்களுக்கு ரகசிய உதவி புரிபவரா?
உம், இவனே என்னச் செய்யப் போறீங்க. வெளியே உயிரோட விட்டா என்பாடு திண்டாட்டம்!
இல்ல. இங்கேயே இருக்கப் போறூ... வாங்க விருந்துக்குப் போவோம். மாலா நீ டான்ஸ் ஆடணும்.

தொடரும்...


ஆயிரக்கணக்கான குடும்பங்கள் காலங்காலமாக
பயன்பட்டுவரும் கிராம்புத் தைலத்தின்
நன்மைகளை ப்ராமிஸில் கண்டுணர்ந்தனர்.
கிராம்புத் தைலம் கொண்ட
இணையற்ற டூத்பேஸ்ட்
ப்ராமிஸ்
நீங்களும் ஏன் அதை உபயோகிக்கக்கூடாது?
அட! ப்ராமிஸ் போல டூத்பேஸ்ட்டை ஏன் இதுவரைக்கும் யாரும் தயாரிக்கல!
CLOVE OIL
The unique toothpaste with time-tested
Promise
for healthier teeth and gums fresher breath
ப்ராமிஸ்
பற்சிதைவிலிருந்து பாதுகாக்கிறது,
வாய்க்குப் புத்துணர்ச்சி
தருகிறது மற்றும்
துர்நாற்றத்தை அகற்றுகிறது.
MONDE SELECTION
SELECTION DE LA QUALITE
Monde Selection
பல்ஸாரா தயாரிப்பு
ஆரோக்கியமான பற்கள்,
ஈறுகள் மற்றும் புத்துணர்ச்சிமிக்க
மூச்சுக்கு ப்ராமிஸ்.
CHAITRA-BLS-453-R TAM

# சொல்ல விரும்புகிறோம்

● இம்மாத இல்லத்தரசியில் வெளியான முதல் மூன்று ரசப் பொடிகளையும் சாம்பிளாக மட்டும் செய்து பார்த்ததில் ஸில்க் ரசப் பொடிதான்; ஸாரி ஸில்க் ரசம்தான் நாக்கைச் சப்புக் கொட்டச் செய்தது. ஒரு வேளை 'ஸில்க்' பெயர் ராசியோ? இல்லை கவர்ச்சியோ புரியலே!
வியாசநகர் சிம்மவாஹினி

● கோலச் சிறப்பிதழா? சும்மா இஷ்டத்துக்குக் கோலங்களைப் பிரசுரித்துத் தள்ளி விட்டீர்களே! இருந்தாலும் ஒவ்வொரு கோலமும் அட்டகாசம் என்பது யாரும் மறுக்க முடியாத உண்மை.
வேலூர் கவிப்பிரியா

● செப்டம்பர் இதழில் கத்தரிக்காய் மகாத்மியத்தை வெளியிட்டு விலை குறைவாக இருந்த கத்தரிக்காயின் விலையை ஏற்றி விட்டீர்களே!
சீர்காழி ஆயில்யன்

● எங்கள் ஊரில் ''மங்கையர் மலர்'' படிக்காத மங்கையே கிடையாது என்றே கூறலாம். விலை ஏற்றம் பொருத்தமானதே. தவறில்லை. உள்ளே இருக்கும் விஷயங்களுக்கு தாராளமாக இரண்டு ரூபாய் மனமுவந்து தருகிறோம்.
கும்பகோணம் மைதிலி பாபு

● ''பெண்களின் சில நிரந்தரப் பிரச்னைகள்' ஒரு பயனுள்ள தொடர். தொடரைத் தொடர்ந்து கொடுக்கப் போகும் மருத்துவர் திருமதி கமலம்மாவுக்கு எங்களது நன்றிகள்.
கரூர் அகிலாதேவி

● செப்டம்பர் இதழ் ம. மலரில் பெண்களின் கவனத்துக்கு எழுதியது மிகப் பொருத்தமே. எடை போடும்போது எடைக் கல் பக்கத்தில் மேலே ஒரு வெயிட் கட்டி விடுகிறார்கள். அல்லது எடைக் கல் உள்ள தட்டை முழங்காலால் முட்டுக்கொடுத்துக் கொள்கிறார்கள். இல்லாவிடில் மேல் கையால் அழுத்திக் கொள்கிறார்கள். இந்த மூன்றினால் நிச்சயம் ஒரு கிலோ கல்லுக்கு 4 கிலோ புத்தகங்கள் தேறும்.
ஸ்ரீரங்கம் பி. இந்திரா

● ''நாங்களும் மனிதர்கள்தான்'' என்ற சமூகக் கட்டுரை நர்ஸ்களின் மீது இரக்கத்தையும் அனுதாபத்தையும் மதிப்பையும் உயர்த்தியதோடு அவர்களது நிலையைக் குறித்து ரொம்ப நாழி சிந்திக்கவும் வைத்தது. அரசும் தனியார் நிறுவனங்களும் இந்த 'ஃப்ளாரன்ஸ் நைட்டிங் கேலு'க்கு இன்னும் நிறையச் சலுகைகளும் வசதிகளும் செய்து கொடுத்து அவர்களது ஒப்புயர்வற்ற தியாகத்தை ஈடு செய்ய முன்வர வேண்டும்.
மதுரை-3 திருமதி தேவநாதன்

● பொதுவாக உலக வாழ்க்கையில் 'இல்லறத்துக்குப் பிறகு துறவறம்' என்ற வழிமுறை நடந்து வர துறவறத்துக்குப் பிறகு இல்லறம் ஏற்றுள்ள முருகதாஸோடு அவரது மனைவியையும் பேட்டி கண்டு எழுதப்பட்ட கட்டுரை அந்த விசித்திர தம்பதியரைப் போலவே புதிய பாணியில் அமைந்திருந்தது.
சென்னை-14 வசந்தா வாசுதேவன்

● ரத்னாவின் ''அண்ணி அன்னை ஆனாள்'' குறுநாவல் என் உள்ளத்தைத் தொட்டதோடு என் கண்களைக் குளமாகவும் ஆக்கியது. இது கதையல்ல. உண்மைச் சம்பவமாகவே நினைக்கிறேன். சித்திரம் வரைந்த மாருதிக்கும் கதை எழுதிய ஆசிரியர் ரத்னாவிற்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.
வலங்கைமான் எஸ். பிருந்தா

● வெகு நாட்களுக்குப் பிறகு ஒரு நல்ல கதையைப் படித்த மன நிறைவு ஏற்பட்டது 'அண்ணி அன்னை ஆனாள்' — குறுநாவலைப் படித்ததும்.
திருச்சி-6 மஞ்சுளா நாகையா

● ஏதோ தங்கள் மகள்களுக்குக் கல்யாணம் என்று ஒன்று ஆனால் சரிஎன்று இருக்கும் தாய்மார்களின் கூட்டத்தில் தங்கள் பெண்களுக்கு மணியான புத்திமதிகளைக் கூறி, புகுந்த வீடு அனுப்பும் அன்னையர்களின் பேட்டி என்னை ஆனந்தக் கண்ணீர் விடச் செய்தது. ஒவ்வொரு தாய்மாரும் இதைப் பின்பற்றலாமே!
சென்னை-28 தி. சு. ஸ்ரீராம்




மர்மத் தீவில்
மாலா-பாலா
கதை: மகிழ்ச்சிக் கண்ணன்
சித்திரம்: விஜயா
பீமன், இந்தத் தம்பி உதயாவுக்கு எல்லா வித்தைங்களும் கத்துக் கொடுக்கணும். நான் வந்த வேலை முடிஞ்சுடிச்சு!
என்னாங்க சாமி அது!
அந்த கமிஷனர் வரதராஜன்! எங்க ஊர்லே என் குடும்பத்தோட கைது பண்ணி- எல்லாரையும் க்ளோஸ் பண்ணிட்டான். அவன் குடும்பத்தை.. அவன் மாட்டிட்டான் அவன் பையனைத்தான் மாத்திக் கொண்டாந்துட்டாங்க...
யார் சாமி, சொல்லுங்க.. நான் புடிச்சுட்டு வர்றேன்.
பாலான்னு பேராம். இங்க வெங்கட்னு ஒரு பையன் இல்லே அவனை மாதிரி இருப்பானாம். நேத்துதான் விஷயம் தெரிஞ்சுது...
அவ்வளவு தானே சாமி! அவங்கப் பாவே நம்ம சுரங்க அறையிலே இருக்-காரு. அவன் என்ன பொடியன்! நானே புடிச்சிட்டு வர்றேன்.
அவ்ள லேசில்ல உதயா. நீ மொதல்ல அந்த மாலாவை சிநேகம் பண்ணி விவரம் சேகரிச்சுக்க.. அப்புறம் அவளையும் அழைச்சுட்டு நீ போயி அவனைப் புடிச்சு வரலாம். கூட துணைக்கு ஆளுங்க வரும்.
எதுக்கு சாமி துணைக்கு ஆளுங்க! போலீஸே நம்ம கைல இருக்கும் போது...
உதயா.. போலீஸ்காரங்களை மட்டும் நம்பக் கூடாது. அதோட உனக்கு தற்காப்பு வித்தைங்களும் தெரி-யாது.
யார் சொன்னது? இதோ பாருங்க சாமி!
அய்யோ. விட்டுடுப்பா, உங்கப்பா உன்னை நல்லா வளர்த்திருக்காரு..
எப்படி சாமி!
குட், உதயா! என் வேலை தமிழ்நாட்டிலே முடிஞ்சுடுச்சு.
வரதராஜனைப் பிடிச்சு சிறை வச்சாச்சு! இனிமே அவனை அணு அணுவா சித்ரவதை செய்யணும். பின்னால நீ தலைமை தாங்கணும்.
இதோ இந்த ஸ்விட்சுங்க.. இங்க மட்டுமில்ல மெட்ராஸ்ல நடக்கறதைக் கூட தெரிஞ்சுக்கலாம் இந்த ஸ்விட்ச்..
ஓ... துப்பாக்கிங்க..
சாதாரண துப்பாக்கிங்க இல்ல உதயா, ஒண்ணுலே விஷ ஊசி. ஒண்ணுலே பயித்திய ஊசி. ஒண்ணுலே மரண ஊசி... இப்படி..
பலே... பலே.. நீ மொதல்ல மாலாவைப் புடி... அப்போதான் அவங்க கண்ணனைப் பிடிக்க முடியும்.
அவங்கம்மாவை சாமி!
பொம்பளைங்களை மட்டும் வேணாம். அதோட அந்த வரதராஜன் என் மனைவியை ஒண்ணுமே செய்யலே, உதயா!



பாஸ், இந்தப் பையன் பொல்லாதவன். ஒரே வலி.
இப்போ அந்த விஷயமெல்லாம் வேணாம். நீ உதயாவை மாலாகிட்ட அழைச்சுட்டுப் போ... உதயா, நான் சொன்னதெல்லாம் மறந்துடாதே.
பாஸ், யாரையும் இவன் சீக்கிரம் நம்ப மாட்டாரு!
நான் யாருய்யா, சாமியாருடைய வியாபாரி புள்ளே. அதோட எல்லாம் தெரிஞ்சவன்.
ஓ... அந்த மாலா சண்டை போடறு தம்பி. நீ பாத்துக்க, நான் வர்றேன்
அவங்கப்பாவைக் காப்பாத்தறதுக்கு இருக்கும்.
எதுக்கும் இவனையும் கண்காணிக்கணும். என்னது மாலா சண்டை போடறு!
வாய்! நீதானே மாலா. ரகஸ்யத்தை நினைத்து. நீ உன் அப்பாவைக் காப்பாத்தறதுக்காகத்தானே இவ்ள கலாட்டா பண்றே!
ஆமாம்! எங்கப்பாவைச் சித்ரவதை பண்றதை என்னால பாத்துட்டிருக்க முடியாது...
ஓகே... உங்கண்ணன் பாலாவைக் காட்டிக் கொடு. நான் கூட வந்து புடிச்சு வர்றேன். அப்புறம் உங்கப்பாவுக்கு எதுவும் நடக்காது.
உன்னை எப்படி நம்புறது
உன்னை ஒரு லட்சம் விலைகேட்டவன் மறந்துடாதே!
பீம்... பீம்... பீம்...
பாஸ் ஒரு பொம்பள போலீஸ் தலைமையிலே போலீஸ்ங்க வருது.
உதயா, விஸ்வா, ராதா எல்லாம் வாங்க... அபாயம் வந்தாச்சு. இதோ பாருங்க போலீஸ்ங்க... ஓ... ஜீப், கார் ஆட்களைப் பிடிச்சாச்சா!
ஓ... சுதேகா ஏ.சி. யா!
ஓகோ. நமக்கே ஹெலிகாப்டர்ல வர ஆரம்பிச்சுட்டாளு.... உதயா, நீ இந்த துப்பாக்கிலே மொதல்ல அந்த வரதராஜனைக் கொன்னுடு... பீமா, ராதா எப்படியோ நம்ம ஆளுங்க தப்பிச்சுடுங்க... உம் ஓடுங்க...
பீம்... பீம்... பீம்...
என்ன உதயா, நீயும் வேலையை முடிச்சுட்டு ஓடிடு...
ஊஹும்.. என் வேலை உங்களைத்தான்.


(தொடரும்)



சௌராஷ்ட்ர சமூகம். திருவோண நட்சத திரம், விசுவாமித்ர சோத்ரம் எஸ். எஸ். எல். சி. வரை படித்துள்ள கண்ணியமான நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த குடும்பப் பாங்கான 29 வயது மங்கைக்கு இதே இனத்தில் நிரந்தர உத்தியோகம் அல்லது நல்ல தொழில் செய்யும் மணமகன் தேவை. பெண்ணிற்கு செவ்வாய் தோஷமுண்டு. விவரங்களுடனும் ஜாதகத்துடனும் விண்ணப் பிக்கவும். பெட்டி எண்: 969.

ஸ்ரீ பாரத்வாஜ கோத்திரம், விசாக நட்சத் திரம், அஷ்டசஹஸ்ரம், நடுத்தர குடும்பத்தில் உள்ள குடும்பப் பாங்கான ஐயர் டைப்பிஸ்டு பெண்ணிற்கு ஏற்ற மணமகன் தேவை. வருமானம் ரூ. 300. வயது 31. நல்ல சிகப்பு. டைப்ரைட்டிங் ஹையர் பாஸ். ஸ்மார்த்தாவில் உட்பிரிவுகள் பரவாயில்லை. சுமாராக சீர்வரிசை செய்ய இயலும். பெட்டி எண்: 970.

பையன், 32½வயது, சித்திரைநட்சத்திரம். ஷடமர்ஷணம் — அய்யங்கார், கம்பெனியில் வேலை — சொத்தும் இருக்கிறது. வேலையில் இருக்கும் பெண் தேவை. பொருத்தமான பெண்கள் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 971.

சென்னை பி அண்ட் டி இலாகாவில் பணி புரியும் பட்டதாரிப் பெண்ணிற்கு மத்திய அரசு, பேங்க், அல்லது நல்ல கம்பெனியில் பணிபுரியும் மணமகன் தேவை. பெண்ணுக்கு வயது 23. பிரகசரணம் காச்யப கோத்ரம், உட்பிரிவு சம்மதம், ஜாதகம், மற்ற விவரங் களுடன் தொடர்புகொள்க.பெட்டிஎண்:972

தெலகாண்யா ஸ்மார்த்த கௌண்டின்ய கோத்ரம், ஆருத்ரா நக்ஷத்திரம் உடைய பி.எஸ்ஸி படித்து சென்னையில் பயோகெமிஸ் டர்க தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் 29 வயது கன்னிகைக்குத் தகுந்த வரன் தேவை. ஜாதகம் குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்க. பெட்டி எண்: 973.

ஹரித கோத்ரம். ப்ரஹசரணம். உத்திரட் டாதி நக்ஷத்திரம். பட்டதாரி பெண் நல்ல தோற்றம்.உயரம் 5,2'' வயது 25.பம்பாயில் வேலையில் உள்ள பெண்ணுக்கு வரன் தேவை. எஞ்சினியரிங், ஆடிட்டிங், எம்.பி.ஏ. போன்ற படிப்பு. வயது முப்பதுக்குள் உட்பிரிவு சம்ம தம். ஜாதகம் தேவை. சிறப்பாக திருமணம் செய்யப்படும். பெட்டி எண்: 974.

அய்யர் வகுப்பைச் சேர்ந்த பாரத்வாஜ கோத்திரம், பிரஹசரணம், வயது 31, மாதம் ரூ. 2500]- வரை வருமானம் உள்ள நல்ல குடும்பத்தைச் சேர்ந்த கிராஜுவேட் பைய னுக்கு ஏற்ற, வயது 21—26 வரை உள்ள, உயரம் 5'3''—க்கு மேலாக, கல்வித் தகுதி குறைந்த அளவு எஸ். எஸ். எல். சியும், நல்ல அழகான குடும்பப் பாங்கான பெண் தேவை. ஜாதகம், போட்டோ மற்ற விபரங் களுடன் விண்ணப்பிக்கவும்.பெட்டி எண்:975

கௌசிக கோத்திரம், சுவாதி நட்சத்திரம், 25 வயது. அய்யர் வடமாள், காது கேட்பது, பேசுவது இவைகளில் குறை, பேச்சு ஊன முற்றோருக்கான விசேஷ பள்ளியில் பத்தாவது வரை படிப்பு மத்திய அரசு தந்தி இலாகாவில் நிரந்தரமான உத்தியோகம் சமையல் செய்ய தெரிந்த குடும்பப் பாங்கான பெண் — வேலை யில் உள்ள நல்ல குடும்பத்தைச் சேர்ந்த வரன் தேவை. மற்ற உட்பிரிவைச் சேர்ந்தவ ராயினும், காது கேட்பது, பேசுவது இவை களில் குறை உள்ளவராகிலும் சம்மதம். முழு விபரங்களுடன் ஜாதகத்துடன் விண்ணப்பிக்க வும். பெட்டி எண்: 976.

# திருமணமலர்

# கூந்தல் வளர...



'தலை முடி வளரவில்லையே, 'இப்படி அநியாயமாகக் கொட்டுகிறதே' என்று வருந்தி கண்ட எண்ணெய்களை உபயோகிப்பவர்களை நாம் சந்திக்கிறோம்.

தலைமுடி வளராதது மட்டுமல்ல: தலைப் பொடுகு, மற்றும் தலையின் அழுக்குகள், முகத்தில் பருக்களையும், படைகளையும் ஏற்படுத்தும் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்?

எனக்குத் தெரிந்த ஒரு பெண்ணுக்கு தலையில் ஏற்பட்ட அதிகமான பொடுகுகளால் காதின் பின்புறம் படைபோன்ற சிரங்கு ஏற்பட்டு, அதன் காரணமாக மிகவும் துன்புற்று, பின் மருத்துவரை அணுகி, அது 'பொடுகின்' கைங்கர்யம் என்று அறிந்து, (செல்சன் என்ற பொடுகு நீக்கி உபயோகித்துக் குணம் அடைந்தாள்.

ஒரு முட்டையின் வெள்ளைக் கருவுடன் சிறிதளவு எலுமிச்சம் சாறைக் கலக்கிக் கொண்டு, தலை முடியின் அடிப் பகுதியில் நன்கு தேய்த்து விட வேண்டும். ஒரு மணி நேரம் ஊறிய பின் குளித்துவிட்டு, சீயக்காய் போட்டு தலையை அலசவும். தொடர்ந்து வாரம் ஒரு முறை, ஐந்தாறு வாரம் செய்தால் பொடுகு மறைந்து விடும்.

பொடுகு மட்டுமல்ல, பேன்களும் ஈறுகளும் நமக்கு ஆஸ்துமா, ஜுரம் முதலியவைகளுக்கு வழி கோலும்.

பேனை ஒழிக்கச் சிறிதளவு தேங்காய் எண்ணெயில் கற்பூரத்தைக் கரைத்துக் குளித்தால் தலைப் பேன் அகலும்.

தலையில் அளவுக்கு அதிகமான எண்ணெய் தடவுதல், அழுக்கை நீக்காமல் இருப்பதும்தான் பேன், ஈறு, பொடுகுகளுக்குக் காரணம்.

பொடுகுகள் தலையின் பின் பகுதியில் பிடரியிலோ, தோள் பட்டைகளிலோ விழும்போது சிவப்பான படைகளை உண்டாக்கி, பெருக்கிவிடுகின்றன.

தலைக்குச் சுத்தமான தேங்காய் எண்ணெய் அல்லது பாதாம் எண்ணெய் தடவி தினமும் சுத்தமான சீப்பினால் காலை மாலை இரு வேளைகளிலும் சுமார் பத்து நிமிடமாவது தலையைச் சீராக வாரவேண்டும்.

பல் அகன்ற, பல் நொறுங்கிய, பல் உடைந்த சீப்புகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். வாரம் ஒரு முறை சீப்பைச் சுத்தம்செய்யவேண்டும்.

ஒருவர் சீப்பை மற்றொருவர் உபயோகிக்கக் கூடாது. வாரம் ஒரு முறை ஷாம்பூ அல்லது சீயக்காய் தேய்த்துத் தலையைச் சுத்தமாக அலசிக்கொள்ள வேண்டும்.


மாதம் ஒரு முறையாவது பிளவு பட்ட முனை உடைய முடிகளை நீக்குவதால், மேலும் பிளவு படாமலும், முடி உதிருவதையும் தடுக்கலாம்.

எல்லாவற்றுக்கும் மேலாக முடி செழிப்பாக வளர, முடி வளர்ச்சிக்கு இரும்புச் சத்தும், வைட்டமின் 'பி' சத்தும் அவசியம். உடல் ஆரோக்கியத்தினால்தான் முடியும் வளருகிறது.

எனவே உடலையும், மனத்தையும் செழிப்பாக வைத்திருந்து அழகிய கூந்தலைப் பெறுவோம்.

-லட்சுமி நடராஜன்


மர்மத் தீவில்
மாலா-பாலா
கதை: மகிழ்ச்சிக் கண்
சித்திரம்: விஜயா
சாமியார் அறையில் மேலிருந்து ஊஞ்சல் இறங்குகிறது.
சாமி... ஹாய் திருட்டுச் சாமி. நீதானே சம்பலாஸ். இனி தப்ப முடியாது.. நீ கொடுத்த அந்தத் துப்பாக்கி மொதல்ல பயித்திய ஊசி.. நான் தான் பாலா!
ஓகோ... பாலாவா! இதோ பாரு.
சாமியார் ஊஞ்சல் பலகையில் மே
செல்ல, பாலா ஆச்சரியத்தில் நிற்
போது அறைக்குள் மாலா, ராதா
அண்ணா, சீக்கிரம் வாங்க நானும் ராதாவும் அந்தக் கமலாவை அடிச்சுப் போட்டுட்டோம். ஆனா அப்பா அறையைத் திறக்க முடியலே...
வெங்கட் எங்கே?
அவன் மாடிக்குப் போயிட்டான் வா போகலாம்.
மாலா, ராதா, பாலா வரதராஜன் அறைக்கருகே வந்ததும் பாலா தன்னிடமுள்ள துப்பாக்கிகளில் ஒன்றினால் பூட்டை உடைக்கிறான்.
மாலா டக்கென லைட் அடித்து இளங்
கோவின் துப்பாக்கியைத் தட்டிவி
அப்பா, அப்பா.. இவ நம்ம ராதா!
ஏன் அவசரப்படறீங்க. நம்ம இளங்கோவும் ஐ.ஜியும் கூட வராங்க.. எங்க அந்த சம்பலாஸ்?
அயோக்கிய ராஸ்கல், நீதான் இவங்களுக்கு உடந்தையா?
யாரும் பேசக் கூடாது. நான் சுட்டுடுவேன்.
நீதான் சுடுவியா நான்...
அவரை ஒன்றும் செய்யாதே பாலா. ஐ.ஜியே வராரு. அவரு பார்க்கட்டும். இப்போதைக்குக் கட்டிப் போடுவோம்.
மேடம், சுரங்க அறைங்களிலே இருக்கிற சம்பலாஸ் கோஷ்டிங்களை...
நாங்க வரதுக்கு முந்தியே உங்க மக மாலாவும் ராதாவும், வெங்கட்டும் பிடிச்சுட்டாங்க.
அந்த பீமன் அவனாலே இறந்துட்டான்பா
பாவம். சரியான அடிமை!


வாங்கபா, பெரிய மாம பங்களா, நாமும் உள்ளே போவோம்!
அடடா இன்னொரு ஹெலிகாப்டர்!
ஐ.ஜி வர்றாரு
மாடியில் இன்னொரு ஹெலிகாப்ட லிருந்து ஐ.ஜி இறங்குகிறார்.
குட் ஈவினிங் ஸார்!
எங்க இளங்கோ?
அதோ திருடன், அயோக்கியன் ஆள்காட்டி!
ஓ, இவர்தான் இத்தனைக்கும் காரணமா?
சாமி, நாங்க கள்ளச் சாராயம் காய்ச்சி வெளியே வித்துட்டிருந்தோம். அதான் தொழில். அதனைத் தான் பயங்காட்டி எங்களில சிலரை போலீஸ்ல புடிச்சிக் குடுத்தாங்க
அதோட விஷயம் சொல்ல வந்த எங்கப்பாவை எரிச்சு சாவடிச்சாங்க!
சாமி, இனிமே நாங்கள்ளாம் திருந்திடுவோம். கள்ளச் சாராயம் காய்ச்ச மாட்டோம்.
ரொம்ப நல்லது. மிஸ்டர் வரதராஜன், மிஸ் சுசேதா காணாமல் போன எல்லாப் பசங்களையும்...
இதோ இருக்கோங்க.. எங்கள்ள சுமாரா அம்பது பேரை வித்துட்டிருப்பாரு. சாமியாரைக் கேட்டா தெரியும்
சாமியாரா, திருட்டுச் சம்ப ளாலி... உம் ஏறுபோ... ரொம்ப நன்றி வரதராஜன்.
வரதராஜனுக்கு நன்றி சொல்றதைவிட அவரது பொண்ணு மாலா, மையன் பாலாவுக்குத்தான் நன்றி சொல்லணும்.
முற்றும்.

சின்னு அம்மாவுக்கு விஸ்தாரமாகக் கடிதம் எழுதினுள்: ''நான் பிடிவாதமாக மறுத்துவிட்டேன். எனக்கென்னவோ அது மஹா பாவம் என்று தோன்றியது. என்ன என்னவோ காரணங்கள் சொல்லிப் பார்த்தார். எல்லாவற்றிற்கும் மேலாக இவருடைய சுயநலம் எனக்குத் தெளிவாகப் புரிந்தது. இப்போது குழந்தை பெற்றுக் கொண்டால் நச்சு. அதை வளர்க்கக்கஷ்டப் படுவோம். இஷ்டத்திற்கு சுற்றிப் பார்க்க முடியாது. பரவாயில்லே. அம்மா, சுற்றிப் பார்க்காவிட்டால் என்ன போயிற்று? நான் வளர்த்துக் கொள்கிறேன். என்னுல் சமாளிக்க முடியுமல்லவா?

அம்மா, எனக்கு மத்தியானத் தூக்கத்தின் போதும் அதிகாலேயிலும் சில சமயம் கனு எல்லாம் வருகிறது. புரியாத கனு. ஆனுல் பயமாக இருக்கிறது. செத்துப்போன முகம் தெரியாத அந்த அம்மா கூப்பிடுகிருற் போல! பைத்தியக்கார யோசனேகள் எல்லாம் வருகிறது. என் தம்பிகளே அடிக்கடி நினேத்துக் கொள்கிறேன். மதுவுக்கு கல்யாணம் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிற தாக அப்பா எழுதியிருந்தாரே அத்தனே பெரியவனுகிவிட்டானு? எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. உங்களே எல்லாம் பார்க்க வேண்டும் போல இருக்கிறது. உடனே பிரசவத்துக்குப் புறப்பட்டு விடலாம், என்ருல் இவர் இத்தனே சீக்கிரம் அனுப்ப மறுக்கிருர். முதலில் இவரை அனுப்ப சம்மதிக்க வைப்பதே பெரும்பாடாகி விட்டது. எட்டு மாசத்துக்கு மேல் பிரயாணம் செய்வது நல்லதல்ல என்று டாக்டரே படித்துப் படித்து சொல்லியிருக்கிருர். டிக்கெட் வாங்கு என்று தினப்படி சொல்லியாகிறது. ஏதாவது சாக்கு சொல்லி தள்ளிப் போட்டுக் கொண்டிருக்கிருர் நீதான் திடீர் என்று வந்து என்னே அழைத்து கொண்டு போனுல் என்ன? இல்லேஅப்பாவை யாவது, மதுவையாவது அனுப்பக்கூடாதா? மது, ரவி, ரகு எல்லாரும் எப்படி இருக்கிருர்கள்?

எனக்கு பலமுறை அழுகை வருகிறது. தெம்பாக ஏதாவது எழுதேன். நல்ல காரமாக ஊறுகாய் இருந்தால் பார்ஸல் பண்ணி அனுப்பேன்.

சின்னுவுக்கு இப்படி அடிக்கடி அழுகை வந்தாலும் பலசமயம் அவள் தன் வயிற்றை பார்த்து உற்சாகப்பட்டிருக்கிருள். ராமச்சந்திரன் அவளேத் தட்டிக் கழித்து ஊருக்கு அனுப்பவில்லேயென்ருலும் அந்த அனுபவத்தைத் தனியாக சமாளிக்க தைரியம் ஏற்பட்டிருந்தது. இருந்தாலும் அம்மாவிடம் போய் உட்கார்ந்து கொண்டு இங்கே வலிக்கிறது, அங்கே பிசகினுற்போல் இருக்கிறது என்று தன்னே முழுமையாக அவளிடத்தில் கொடுத்து விடவும் இச்சையாக இருந்தது. அம்மாவிடம் போய் அங்கே பிறந்தால் மற்ற கவலேகள் ஏதும் இல்லே! அம்மாவுக்கு குழந்தை பெற்ருே, வளர்த்தோ அனுபவமில்லேதான். இருந்தாலும் பெரியவள், வாழ்க்கையை நிறைய பார்த்தவள். மற்ற பேர் இருப்பார்கள் துணையாக தெம்பாக இருக்கும்.

சின்னு ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்த போது தெரியும் பஞ்சாபிக்குழந்தைகளே யெல்லாம் பார்க்கும்போது அவள் கண்கள் பிரகாசமாகும்.

அவளுக்குள் ஏதோ நாடகம் நடப்பது போலத்தான் அந்த நாட்களில் இருந்தது. ஒரே சமயத்தில் பெரிய சொத்துக்கிடைத்து விட்டது போலும். தனக்கு ஏதோ ஒரு குறுக்கீடு ஏற்பட்டு விட்டது போலவும் உணர்ந்தாள். அவளுக்குள் வளரும் கருவா? அல்லது அவளே ஆக்கிரமித்துக்



கொண்ட வெளி ஜீவனா? அது அவளுடையதா? அல்லது அவள் அதனுடையதா? அந்த சின்ன ஜீவன் அவளுடைய எதிர்காலம் போலத்தான் தோன்றியது. அதைச் சுமக்கும் போது அவள் உலகளாவி பெரிதாகி விட்டமாதிரி உணர்ந்தாள். அதே சமயம் அந்த வளர்ச்சி தன்னையே சாப்பிடுவது போலவும் உணர்ந்தாள். அவளும் அதுவும் விதிவசமாகப் பிணைந்துவிட்ட விநோத ஜோடி. எப்போதாவது அஜ்மல்கான் ரோடில் நடந்து போகும்போது சின்னப் பெண்கள் இவள் சாய்ந்த வயிற்றைப் பார்த்துப் பரிகாசமாக சிரிப்பது அவளுக்கு கோபம் வரவில்லை. ஒருநாள் நீயும் எங்கே போகப் போகிறாய்? என்றுதான் தோன்றும். சின்னு அந்த அனுபவத்தை அந்த வேதனையை அந்த ஆறுதலை அவள் மார்பில் ஆக்கிரமிப்பை பயத்துடனும் சந்தோஷத்துடனும் எதிர்பார்த்தாள். ஒரு வழியாக ராமச்சந்திரன் டிக்கெட் வாங்கி வைத்தான். அவன் நண்பன் ஒருவன் எல்.டி.ஸி.யில் சென்னை போகப் போவதால் அந்த சமயத்தில் துணை அகப்பட்டது என்று அதே கம்பார்ட்மெண்டில் டிக்கெட் வாங்கிவிட்டான். ஏன் நீங்கள் வரக் கூடாதோ என்று கேட்க வேண்டும் போலத்தான் இருந்தது. இதில் ஏமாற்றம் தான். ஆபீஸில் அப்படி என்ன தலைபோகிற வேலை?

''குழந்தை பிறந்ததும் வந்து பார்க்க வேண்டாமா சின்னு? அப்ப லீவு கொடுக்க மாட்டேன்னு சொல்லிட்டா என்ன பண்றது? உங்கப்பாவுக்கு தந்திகொடுத்துட்டு டெலிபோன்லயும் பேசிடறேன். நேரா ஸ்டேஷனுக்கு வந்து நலுங்காம அழைச்சுண்டு போயிடுவார். உன் தம்பிமார்கள்ள யாராவது வருவானோல்லியா? அப்புறம் மறக்கவே மறக்காதே. திரும்பி வரப்ப அம்மாவைக் கூட்டிண்டு வந்து ரெண்டு மூணு மாசத்துக்காவது இருக்கட்டும். தாஜ்மகால்லாம் காட்டறேன்னு சொல்லு! நிச்சயம் உங்கம்மா வந்து ஆகணும். சொல்லிட்டேன். நானும் லெட்டர் எழுதிடறேன்.''

அப்பா! என்ன சுயநலம்! அம்மாவும் மாப்பிள்ளையே கைப்பட எழுதியிருக்கிறார் என்று வரத்தான் போகிறாள். இந்த மனுஷனுக்கு எந்தவித சிரமமும் கூடாது. குழந்தையை சுண்டுவிரலால் கூடத் தொட மாட்டார். பிரயாணத்தின் போது களைப்பாக இருந்தது. ராமச்சந்திரன் சினேகிதரின் மனைவிக்கு எட்டு வயசிலும் ஆறு வயசிலும் இரண்டு பையன்கள். 'இத்தனை லேட்டா போறியேம்மா' என்று கவலைப்பட்டாள். 'நானும் சொல்லிப் பார்த்தேன் மாமி. இவர் கேட்டாத்தானே?'

ராமச்சந்திரன் கேப்பானே என்றார்

# எப்போதும் பெண்

சுஜாதா



சிநேகிதர். சின்னுவுக்கு தன் தோற்றத்தைப் பற்றி அப்போது கவலேயோ கூச்சமோ இல்லாமல் இருந்தது. சீட்டு பூரா உட்கார்ந்து கொண்டு தொளதொளவென்ற பாடியுடன் என்னவோ புடவை என்னவோ பொட்டு என்னவோ நடை பூதாகாரமாக. இங்கே அங்கே நடப்பதற்குள் ஆயாசம்!

''பொஸிஷன் எல்லாம் நேராத்தானே இருக்கு? லேடி டாக்டர் பாத்து சொல்லிட்டாளோல்லியோ?''

ஸ்டேஷனுக்கு மதுவும், ரவியும் வந்திருந்தார்கள். பார்த்து ஒரு வருஷம் கூட ஆக வில்லே. இரண்டு பேரும் மாறியிருந்தார்கள். மதுவைப் பார்த்ததும் என்ன மது கல்யாண மாமே என்ருள்.

''ஏண்டா நீயே பொண்ணு பார்த்தியா? அப்பா பார்த்தாளா?''

''எல்லாம் ஆத்துக்கு வா. சொல்றேன். சின்னு உடம்புக்கு ஒண்ணுமில்லேயே டாக்ஸில போகலாமோல்லியோ. கொஞ்சம் களேச்சாப்பல இருக்கே சின்னு.''

''ஏன் அம்மாகிட்ட இருந்து லெட்டரே வரலே நான் போட்டதுக்கு?''

''அதையேன் கேக்கறே. ஆஸ்பத்திரிக்கும் ஆத்துக்குமா அல்லாடிண்டிருக்கா.''

''ஆஸ்பத்திரியா?''

''ஆமா சின்னு, அப்பாவுக்கு உடம்பு சரியாயில்லே.''

''என்ன உடம்புக்கு?''

''என்னவோ சொல்ரு ஒண்ணும் நேரா இல்லே'' என்று சூள் கொட்டினுன். அவா கல்யாணத்தை வேற எட்டாம் தேதிக்கு வெச்சிக்கலாம்னு சொல்லியிருக்கா. நீயும் வந்தாச்சு. அப்பாவுக்குச் சரியாப் போயிடுத்துன்னு நல்லது.''

''ஆத்தில தானே இருக்கார்?''

''ஆமாம். ஆஸ்பத்திரியில் படுத்துக்க மாட்டேன்னுட்டார். ஸ்திரமாக ஒரு வைத்தியம் பார்த்தோம்னு இல்லே. ஒரு நா இங்கிலீஷ் வைத்தியம். ஒரு நாள் நாட்டு மருந்து, ஒரு நா ஓமியோபதின்னு மாத்திண்டே இருந்தா எப்படி?''

''என்னடா, ரகு கூட வேலேக்குப் போற தாமே?''

''ஆமாம் சின்னு. மூணு பேரும் வேலேக்கு சேர்ந்தாச்சு. அம்மாதான் வீட்டில ஒண்டியா இருக்கா அப்பாவை வெச்சுண்டு. பைசா வசதி ஒண்ணும் குறைச்சலில்லே. ரிடையராயிட்டார் தெரியுமா?''

''தெரியும். அம்மா எழுதியிருந்தா. அதான் கடைசி கடுதாசி''.

''ஏதோ நிம்மதியா இருக்கலாம்னு முடியலே பாரு?''

''யாரு நிம்மதியா இருக்கலாமானு?''

''எல்லாம் அப்பாத்தான்.''

வீட்டுக்கு வந்த போது வாசலில் நின்று கொண்டிருந்தார் அப்பா. மப்ளரைப் போட்டுக் கொண்டு.

''எதுக்காகப்பா வாசல்ல வந்து நிக்கறேள். டாக்டர் சொல்லியிருக்காரோல்லியோ நீங்க ரொம்ப வரவழைச்சுக்கறீங்கப்பா. ராத்திரி பூரா இருமல்...''

''இருக்கட்டும்டா. சின்னுவைப் பார்க்க ஆசையாக இப்பத்தான் வெளில வந்தார்'' என்ருள் அம்மா. சின்னு அப்பாவைப் பார்த்ததும் கண்ணீர் வடித்தாள். ''என்னப்பா இது, இப்படி குன்னிப்போயிருக்கேள்?''

''வயசாயிடுத்தும்மா.''

''அப்படி என்னப்பா வயசு உங்களுக்கு?''

''அதெல்லாம் அப்புறம் சொல்றேன். வா வந்து உக்காரு. மாப்பிள்ளே ஏன் வரலே?''

''அவருக்கு எத்தனேயோ வேலேம்மா. இனிமே அவர் வந்து என்னேப் பார்க்காம நான் திரும்பிப் போறதில்லேன்னு வெச்சிருக்கேன்.''

''சின்னு உன் ஜாதகத்தைப் பார்த்து என்ன சொன்னுன் தெரியுமோ?''

''போறும். போறும் வாம்மா. என்ன சாப்பிட்டியா? டேய் ரவி போய் ஒரு ஓவல்டின் வாங்கிண்டு வந்துடு.''

''டி. வி. எப்பம்மா வாங்கினது?''

மூன்று பிள்ளேகளும் சம்பாதிப்பதால் பல சௌகரியங்கள் வீட்டில் ஒட்டிக்கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

''உன் அலமாரியை அப்படியே கலேக்காம வெச்சிருக்கோம் சின்னு''.

ரவி அவளேத் தொட்டுப் பார்த்தான். ''என்னடி இப்படி குண்டாயிட்டே?''

''எல்லாம் புள்ள பெத்ததும் பழையபடி ஆயிடுவா!''

''ப்ரெக்னண்டுன்னு இவ்வளவு பெரிசா ஆயிடுவாளா?'' என்ருன்.

''போடா''.

அம்மா ஆத்தி, ஆத்திகொண்டுவர ''இப்ப எதுக்கும்மா பாலு.?'' என்ருள்.

''சரியாப் போச்சு. இப்பலேர்ந்தே அதுக்கும் சேர்த்து சாப்பிட்டாகணும் நீ! என் கணக்குப்படி வைகாசி விசாகத்துக்குள்ள பொறந்துரும். இங்க பக்கத்திலேயே நர்ஸிங் ஓம் இருக்கு. ரொம்ப சௌகரியம் ராப்பகலா திறந்து வெச்சிருக்கு. ஜீவன் நர்ஸிங் ஓம்ல நாளேக் கார்த்தாலேயே லேடி டாக்டர்கிட்ட கொண்டு காட்டிடலாம் பயமே இல்லே.''

''சின்னு நீ போய்ப் படுத்துக்கம்மா.''

''இரும்மா. அவ டில்லி கதையெல்லாம் சொல்லட்டும்.''

''அதெல்லாம் அப்புறம்'' என்று அம்மா பிடிவாதமாக உட்கார வைத்து சாப்பிட வைத்து ஹாலில் ஃபான் அடியில் பாய் போட்டு, மெத்தை போட்டு, ரெண்டு தலே காணி கொடுத்து படுக்க வைத்தாள். அப்பா படுத்திருந்த ரூமைச் சார்த்திவிட்டு ''ராத்திரி இருமுவார்'' என்று சிம்னி விளக்கை ஏற்றி வைத்துவிட்டு பக்கத்தில் செம்பில், காய்ச்சி ஆறவைத்த ஜலம்வைத்து மூட அம்மா பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு விஷயத்தைச் சொன்னுள்.

அப்பாவுக்குக் கான்ஸராம். (தொடரும்)




அட்டை வண்ணப்படம்: **ஹரீஷ்**

சந்தா விவரம்
தனிப்பிரதி ரு. 2-00
ஆண்டுச் சந்தா ரு. 24/-
ஆறு மாத சந்தா ரு. 12/-

● மங்கையர் மலரில் குழந்தை வஸந்தாவின் (மதுரை) கட்டுரையைப் படிக்கச் சொல்லிக் கேட்டேன். நெக்குருக அமைந்திருந்தது. பகவான் அவள் கஷ்டங்களை நீக்கி அருள்பாலிக்க பிரார்த்திக்கிறேன்,

பார்வதி அம்மாள் நாகர்கோவில்.

● சென்னை டி. வி. நிலைய டைரக்டர் திரு. சௌடேகரின் பேட்டியைப் படித்தேன். சம்பந்தமில்லாத முறையில் தமிழ்நாட்டில் பெண்களை விளம்பரப்படுத்துவது முற்றிலும் உண்மை. சமீபத்தில் தீபாவளிப் பட்டாசு வாங்கினபோது அதன் அட்டையில் பெண்களை அலங்கோலமாக விளம்பரப்படுத்தியிருப்பது இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. தமிழ்நாட்டில் உள்ள பெண்கள் சங்கம் இதை அடுத்த தீபாவளிக்குள்ளாவது தடுத்து நிறுத்த வேண்டும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி. டிக்ஸிட் குஜராத்.

● டாக்டர் கமலம்மாவின் கட்டுரை நன்றாய் இருக்கிறது. கர்ப்பிணிப் பெண்களுக்கு மனோதைரியத்தைக் கொடுக்கும்படி இருக்கிறது. ''ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும்'' என்பது உவப்பின் சிகரம்.

டி. எஸ். ராமனுதன் தென்காசி.

● சகோதரி விஜயலட்சுமி தான் படித்த புத்தகத்திலிருந்து முக்கியமான சில வரிகளை எழுதியிருந்தார். அருமையான வாசகம் அது. இந்த விஞ்ஞான யுகத்தில் மனிதன் எவ்வளவோ உயர்ந்தாலும், அவனது புத்தி இன்னும் அந்த அளவுக்கு உயரவில்லை என்பதை இந்தக் கட்டுரைகள் தெளிவாகப் புரிய வைத்தன.

சி. பி. ராஜு கல்பாக்கம்.

● முதன்முதலாக மடாதிபதியாகி, ஆன்மீகத்திலும் பெண்ணினத்தை உயர்த்திவிட்ட சாயி. பிருந்தாதேவி கட்டுரை – ஒவ்வொரு மங்கையும் பெருமைப்படும் விதமாக அமைந்திருந்தது.

அண்ணு அன்பழகன் அந்தணப்பேட்டை.

● ''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்'' என்ற குறளுக்கு விளக்கம் அளிப்பதாகவும் படித்த ஒவ்வொரு வாசகரையும் கண்ணீர்க் கடலில் ஆழ்த்துவதாகவும், புரட்சிகரமான கருத்தை வலியுறுத்துவதாகவும் அமைந்தது ''கரை சேர்க்கும் தோணிகள்'' குறுநாவல்.

எம். கே. கல்பனு சென்னை.

● வீட்டுக் குழந்தைகளுக்கு கதை சொல்ல நல்ல தோதாக இருந்தது மாலா–பாலா சித்திரத் தொடர். கதை எழுதிய மகிழ்ச்சிக் கண்ணன் (விசிட்டர்) அவர்களுக்கும், விஜயா ஓவியருக்கும் குழந்தைகள் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விஜயா முரளி ஈரோடு–1.

● உணவு எப்போது விஷமாகிறது என்ற கட்டுரையை பட்டணத்து மக்கள் படித்தால் மட்டும் போதாது. பட்டிதொட்டிகளுக்கும் இந்தச் செய்தியை எட்டச் செய்யவேண்டும்.

எம். பஷீர். ஹைதராபாத்–12.

● ஸ்ரீவேணுகோபாலனின் 'வழிகாட்டும் பெண்மணிகள்' தொடர் இன்னமும் தன்னம்பிக்கை பெருத தாய்க் குஞ்சுகளாய், பெற்றோர்களின் கட்டுப்பாட்டிற்கு அடிமைகளாய், கணவனின் அதிகாரங்களுக்கு சிறைக் கைதிகளாய், விலைபேசும்கூட்டத்தில் அடிமை பெண்களாய் உழன்று வரும் பெண்ணினத்திற்கு நிச்சயமாய் வழிகாட்டும். தீப் பொறிப்பட்ட வெடிகளாய் குரல் எழுப்பிய பெண் சிங்கங்கள் காட்டும் பாதை, நல் பாதையாகவே அமையும் என்பதில் ஐயமில்லை.

செல்வி. மோகனு திருச்சி–1.



## 33

**வா**ரம் ஒருமுறை அடையாறுக்குப் போய் ரேடியேஷனுே ஏதோ சொன்னுர்கள் அதற்காக அப்பாவை மதுவும் ரவியும் மாற்றி மாற்றி அழைத்துக் கொண்டு போக அப்பா வெளியே சொல்ல முடியாமல் அடக்கி வைத்துக் கொண்டு வேதனைப்படு கிருர் என்பது சின்னுவுக்குத் தெளிவாகத் தெரிந்தது. சில சமயம் அப்பா அதிகநாள் தாங்க மாட்டார் என்று தோன்றிய எண்ணத்தை அவசரப்பட்டுத் துரத்திஞள். யாரும் உலகத்தில் செத்துப் போகவே கூடாது. துக்கத்தை என்னுல் தாங்கிக் கொள்ளவே முடியாது. அப்படிப்பட்ட துக்கம் எனக்கு வேண்டாம், எனக்கு அது வராது. இதோ என் மகன் பிறக்கப் போகிருன். அந்த சந்தோஷத்தில் அப்பாவுக்கு சரியாகிப் போய் விடும். தப்பாகத் தான் கான்ஸர் என்று சொல்லியிருக்கிருர்கள் கான்ஸராவது அப்பாவுக்கு வருவதாவது. அவரிடம் ஏதாவது கெட்டபழக்கங்கள் இருந்ததா! இல்லை கான்ஸர் வர ஒரு காரணமுமில்லாமல் வருமாமே! வந்தவழியே அது போய்விடும். அப்பா சுகமாகி விடுவார் நிச்சயம். அதுதான் நடக்கப்போகிறது.

சின்னு தனக்கு பிள்ளைதான் என்று நிச்சயமாய் தனக்குள் ஊர்ஜிதம் செய்து கொண்டு விட்டாள். அம்மாகூட 'வயிறே இல்லை பாரு புள்ளைதான்' என்ருள். 'மயிர்' எல்லாம் கொட்டி மூஞ்சி கருத்துப்போய் இருக்கு பாரு! 'பொண்ணுன்னு முகத்தில ஒரு பளபளப்பு ஏறிக்கும்' என்று வந்து பார்த்தவர்கள் எல்லாம் சொல்லிவிட்டுப் போனுர்கள். டில்லியில் குளிரும் என்ற சின்னதாக ஸாக்ஸ், எல்லாம் பின்ன ஆரம்பித்தாள். ராமச்சந்திரனுக்கு ஒரு வாரமாய் கடிதம் எழுதி இன்னும் விட்டிருந்தாள். அவன் கடிதம் வரும் என்று எதிர் பார்த்தாள். போஸ்ட்மேன் ஏதோ ஒரு புக் போஸ்ட்டைக் கொண்டு வந்து தருவது



ஏமாற்றமாக இருந்தது. டில்லி கணவனுடன் ஒரு பிடிவாதப் போர் என்று நினைத்துக் கொண்டாள். அவர் எழுதின பின்தான் என் கடிதத்தை தபாலில் சேர்க்க போகிறேன் என்று கடித ஆரம்பத்தில் 'உங்கள் கடிதம் கிடைத்தது' என்று எழுதுவதற்கு ஒரு வரி விட்டிருந்தாள்.

ராமச்சந்திரன் கடிதம் போடவில்லை. பதிலாக மெடிக்கல் ஷாப்பில் கூப்பிட்டு டெலிபோன் பேசினான். 'என்ன உங்கிட்டருந்து கடுதாசியே இல்லை?' என்று சொல்லி முடிப்பதற்குள் கட்டாகி விட்டது. ராமச்சந்திரன் பேசினதில் கொஞ்சம் ஆறுதலாகத் தான் இருந்தது. கடிதத்தை முடித்து, தபாலில் போட்டாள். சின்னுவின் உள்ளே அந்தக் குழந்தை வளருவதும் லேசாக அசைவதும் அவளுக்குத் தெரிய ஆரம்பித்து விட்டது. லேடி டாக்டர் எல்லாம் பார்த்து பயமில்லை என்று நாள் குறித்துக் கூட சொல்லி விட்டாள். 'இப்பல்லாம் நல்ல நட்சத்திரமாப் பாத்து சிஸேரியன் பண்ணிண்டுடரா மாமி' என்று யாரோ யோசனை சொல்ல, 'எங்க சின்னுவுக்கு என்ன? எட்டூருக்கு புள்ளை பெத்துப்பா' என்றாள் அம்மா.

அப்பா ஆஸ்பத்திரிக்குப் போய்க்கொண்டு தான் இருந்தார். ஒருநாள் மாடியில் தனியாக இருக்கும்போது ''சின்னு உடம்பைப் பார்த்துக்கம்மா, எனக்கு ஏதாவது ஆயி...'' என்று ஆரம்பித்தபோது ''போப்பா, ஏதாவது உளறாதே'' என்றாள்.


''நீ பொறந்தது எனக்கு நல்லா ஞாபகம் இருக்கும்மா. சுகமா பிரசவம் ஆயிடுத்துன்னு நினைச்சுண்டு எதுத்த கடையில போய் சாக்லேட் வாங்கிண்டு, பசிச்சுது ஒரு ஓட்டல்ல போய் தோசை சாப்டுட்டு உனக்கு என்ன பேர் வெக்கறதுன்னு யோசிச்சுண்டே' திரும்பி வரேன். எங்க போயிட்டீங்க அம்மாவுக்கு ஆபத்துங்கறா நர்ஸ்.

எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை. உங்கம்மா மார்ல ஊசி ஏத்தறா! குழந்தை நல்லாத்தான் இருக்கு அம்மா தான்னு.... வேண்டாம்! இந்த சமயத்தில் எதுக்கு அது?

''சின்னு உன்னை நான் சரியா வளர்க்கலையோன்னு எனக்கு இப்ப தோண்றதும்மா''.

''ஏம்பா.''

''மூணு பசங்களை வெச்சுண்டு உன்னை வெச்சுக்க முடியாம, பாட்டியும் இல்லாம



யாரோ குழந்தையைக் கேட்டான், குடுத்தேன் பாரு! மகா கிராதகன்'மாநான்! உன் அண்ணன்லாம் என்னை அதுக்காக மன்னிக்கவே இல்லே. போன மாசம் கூட மது பளிச்சென்று சொல்லிட்டாம்மா. சின்னு கிட்டருந்து கடுதாசியே இல்லேன்னு எப்படி வரும்? அவளை நாம வளர்த்தமான்னு ஒரு வார்த்தை கேட்டுட்டான்.

''கொஞ்ச நாள்தானேப்பா அங்க இருந்தேன்.''

''இருந்தாலும் நான் செஞ்சது தப்புத்தாம்மா'' என்று அவள் கையைப் பிடித்தார்.

''என்னப்பா இது?''

''அந்தச் செயலுக்காக உங்கிட்ட மனப்பூர்வமாக மன்னிப்பு கேக்கற சந்தர்ப்பம் இனிமோ வருமோன்னு பயமா இருக்கம்மா.''

''என்னப்பா உளர்றீங்க.''

''சின்னு நான் செத்துப் போய்டுவேனோன்னு பயமா இருக்கம்மா. ஊசியும் கீமோதெரப்பியும் எக்ஸ்ரேயும் போறும்மா. எல்லாத்தையும் உதறிப் போட்டுட்டுப் பேசாம திருவாசகம் படிக்கலாம்னு தோண்றது. சில வேளைகளில் போறும் எனச்கு, பசங்கள்ளாம் வேலைக்குப் போயாச்சு பொண்ணுக்கு கல்யாணம் ஆயாச்சு. இனிமேஎனக்கென்னம்மா? அம்மாவை நீங்கள்ளாம் வெச்சுப்பேள் இல்லேயா? சரியா வெச்சுப்பியா சின்னு? இந்தப் பசங்க திராட்டில விட்டுட்டா அவளைப் பாத்துப்பியா? நம்ம குடும்பத்துக்காக ரொம்ப தியாகம் பண்ணியிருக்கா. ரெண்டாம் தாரமா வாழ்க்கைப்பட்டு வேலைக்குப் போயிண்டு உங்களையெல்லாம் பராமரிச்சு அல்லல்பட்டிருக்கா. அவதாம்மா நிசமான பொம்மனுட்டி.''

''என்னைப் பொறுத்தவரையிலும் அவதாம்பா நிசமாவே அம்மா. மற்ற யாரையும் எனக்கு ஞாபகம் கூட இல்லே.''

''உன்னைக் கோர்ட்டுக்கெல்லாம் இழுக்கடிச்சிருக்கேம்மா!''

''போனுப் போறதுப்பா அதையே திருப்பித் திருப்பி சொல்லிண்டிருக்காதே.''

''என்னை மன்னிச்சுட்டேன்னு ஒரு வார்த்தை சொல்லும்மா.''

''சரி. மன்னிச்சாச்சு. போ. போய்ப் படுத்துக்கோ. உனக்கு ஒண்ணும் ஆகாது. உன் பேரனைப் பார்க்காமப் போயிடுவியா நீ, அப்படி யாரும் உன்னை விட்டுர்றதாஇல்லே'' என்றாள். அப்பா அவள் முன்நெற்றியை முகர்ந்து பார்த்து கன்னத்தில் தடவிக் கொடுத்து விட்டு செல்கையில் சின்னுவுக்கு தாள முடியாமல் துக்கம் பொங்கியது. அப்பாவை இதுதான் கடைசி தடவையாக பார்க்கப் போகிறோமோ என்று அபத்தமான பயம் ஏற்பட்டது. அறைவாசலில் நின்று அவர் திரும்பி அவளை முழுமையாகப் பார்த்ததில் ஏதோ ஒரு எச்சரிக்கை ஒரு கடைசித்தனம் இருப்பது போலப்பட்டது. அப்பாவுடன் பேசியதெல்லாம் எப்போதோ பேசிவிட்டது போல எங்கோ ஏதோ ஒரு நிகழ்ச்சியின் மறுவாழ்வு போல இருந்தது. அந்தச்சங்கடத்தை அவளால்புரிந்து கொள்ள முடியவில்லை.

அன்று ராத்திரி சின்னுவுக்கு வலி எடுத்தது. குழந்தை வெளியே வரத் தீர்மானித்து விட்டது என்பதற்குத் தவிர்க்க முடியாத அறிகுறிகள் துவங்கிவிட்டன.

அம்மா இந்தக்கணத்துக்காகத் தயாராகத்தான் இருந்தாள்.

''என்ன சின்னு என்ன பண்றது உனக்கு'' என்றாள்.

''வேளை வந்துடுத்துன்னு தோண்றதும்மா.''

''மது! ரவி! வண்டி கொண்டாங்கோடா. டாக்ஸி கொண்டாங்கோடா. அப்பாவை எழுப்ப வேண்டாம்'' சின்னு தன் வயிற்றைப் பிடித்துக் கொண்டு வாடா கண்ணே என்று சொல்லிக் கொண்டாள். அவளுக்குப் பயமாகவும் சந்தோஷமாகவும் இருந்தது. ''கவலைப்படாத கண்ணு. இன்னும் நிறைய நேரம் இருக்கு. பொய் வலியாக்கூட இருக்கலாம்.''

> அரிசித் திப்பிலியைத் தேனில் 10 நாட்கள் ஊற வைத்து, பிறகு தினமும் காலை வெறும் வயிற்றில் ஒரு திப்பிலி எடுத்து வாயிலிட்டுச் சுவைத்து, அந்தச் சாறை விழுங்கி வந்தால், ஞாபக சக்தி பெருகும்.
>
> பத்மா.

''இல்லேம்மா, நிக்கலே. வலிக்கட்டும். பரவாயில்லே. அப்பாவை எழுப்பாதேங்கோ. மது எங்கே?''

மது வந்து பார்த்து, ''ரவி டாக்ஸிக்குப் போயிருக்கான். கவலைப்படாத சின்னு. கவலையே படாதே'' என்று அவன் தான் கவலைப்பட்டுக் கொண்டிருப்பது சிரிப்பாகக் கூட இருந்தது. ஒவ்வொரு வலிப் பந்திலும் அவள் உள்ளே இருந்த குழந்தை மெல்ல மெல்லத் தலையை வாசலில் முட்ட சின்னுவுக்கு லேசாக மயக்கம் வரும்போலத் தோன்றியது. அப்புறம் அவளுக்கு நிகழ்ந்தது கனவில் போலத்தான் இருந்தது. பார்த்துப் பார்த்து என்று டாக்ஸிக்காரன் பரிவாகச் சொல்வதும், ''நலுங்காம வண்டி ஓட்டறேன் அய்ரே'' ஆஸ்பத்திரி வாசனை முன்பே தெரிந்த லேடி டாக்டரின் தூக்க முகம். ''சுகுணு அஞ்சாம் நம்பர் காலியா இருக்கா பாரு! அஞ்சு என் அதிர்ஷ்ட நம்பர். பிள்ளைதான் அது! ராமச்சந்திரனுக்கு தந்தி போகும். ''சின்னு ஹேவ் பர்த் டு எ மேல் சைல்டு மதர் அண்ட் சைல்ட் சேஃப்!'' அந்த டவல்ஸ் எல்லாம் எடுத்துட்டு வாம்மா. இந்த பாரும்மா, என்ன பேரு சின்னுவா லேசா முக்கிப்பாரு. காலே அகத்திக்க அ! தட்ஸ் எ குட் கேர்ள்!'

''அய்யோ தாங்கலை டாக்டர். தாங்கலை! என்னை விட்டுடுங்கோ. மயக்கம் கொடுத்துடுங்கோ!'' ஈஸி, ஈஸி இப்பதான் தைரியமா சமாளிப்பேன்னே. இன்னும் கொஞ்சம் கொஞ்ச நேரம் பொறுத்துக்க. பேர் கூட தயார் பண்ணி வெச்சுட்டேன் டாக்டர் ராம்குமார்!

''சபாஷ்.''

பாப்பா மெல்ல தலையை பெர்விக்ஸ் பெரினியம் என்று நுழைத்துக் கடந்து அந்த வழிக்கு ஏற்ப தலை சற்று மாற்றிக் கொண்டது. அழுக்குக் கலரில் கண்களைச் சுருக்கிக் கொண்டு என்ன என்னவோ திரவங்கள் எல்லாம் வழிந்து கொண்டு ஈரமாக வெளியே வந்தது. அதைத் தலை கீழாகத் தொங்கப் போடுவதை சின்னு அரை மயக்கத்தில் பார்த்தாள். அவளுக்கு ஆறுதல் என்னும் பாற்கடலில் மிதப்பது போல இருந்தது. ''என்ன குழந்தை? என்ன குழந்தை?''

''பொண்ணும்மா.''

ஹோ என்று தலையை இந்தப் பக்கம் அலுப்பில் ஏமாற்றத்தில் திருப்பிக்கொள்ள அந்தப் புதிய ஜனனி பின்பக்கம் தட்டப்பட 'ஞே' என்று அழ ஆரம்பித்தாள்.

இதுவரை சிக்கலில்லாமல் சென்று கொண்டிருந்த பிரசவம் இப்போது பாதை மாறியது. பிறப்புக்குப் பின்னும் பிளாஸண்டா கர்ப்பப்பையின் மேற்பகுதியுடன் இணைந்துதான் இருந்தது. இணைந்திருந்த அந்தப் பகுதியில் ஏகப்பட்ட ரத்த நாளங்கள் இணைந்துதான் இருந்தன. வழக்கமான பிரசவத்தில் உடம்பு கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக் கொண்டு விட்டு பிளசண்டாவை உதறி எறிய மறுபடி வெளியேற்ற அசைவுகளைத் துவக்க வேண்டும். கர்ப்பப்பை சரிவர சுருங்கி அந்த ரத்த இணைப்புக்களை சீல் அடிக்க வேண்டும். சின்னுவுக்கு அப்படி ஆகாமல் எங்கோ அட்டவணையில் தப்பாகி உடனே அந்த அசைவுகள் ஏற்பட்டு பெருவாரியாக ரத்தம் கசிய ஆரம்பித்தது. டாக்டர் மற்றொரு பிரசவம் பார்க்கப் போயிருந்ததால் புதிதாகச் சேர்ந்திருந்த அவள் அஸிஸ்டண்ட் வந்து பார்த்து திஸ் இஸ் நார்மல் என்று சொல்லிப் போய் விட்டாள்.

சின்னு கண்ணை மூடிக் கொண்டு அரைமயக்கத்தில் இருக்க மிக வேகமாக ரத்தம் இழந்து கொண்டிருந்தாள். மதுவிடம் தந்தி கொடுக்கச் சொல்ல வேண்டும். மங்கையர்மலரில் அந்த ஸ்டிட்சைக் கத்தரித்து எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.. பெண்ணாக இருந்தால் என்ன. எங்கேயோ புறப்பட்டுப் போகிறாற் போல இருக்கிறது. அப்பாவுக்கு சரியாகி விட்டது போலவும் ராமச்சந்திரன் ஏரோப்ளேனில் அவசரப்பட்டு வந்து சின்னு சின்னு என்று அவளைக் கொஞ்ச பாப்பாவைப் பாருங்கோ. என்ன பேர் வெக்கலாம். எனக்கு பொண்ணுங்கறதிலே ஏமாற்றம் தான். சதாசிவம் யாரு. ஏகப்பட்ட நகையெல்லாம் போட்டுண்டு என்னைத் தோட்டத்திலே போய் அண்ணாவையெல்லாம் பார்க்கக் கூடாது என்கிறாயே. அந்த அம்மா அவளை விரட்டிட்டு நிஜமா எங்கம்மாவை, என்னை நிஜமாப் பெற்றவளை பார்க்கணும் போல இருக்கு. காட்டுங்கோ என் குழந்தையை இல்லை எங்கம்மாவைக் காட்டுங்கோ. பார்க்கணும். அவளுக்கு நான் முலை கொடுக்கணும். என் மேல எல்லாம் எப்படிக் கசியறது பாருங்கோ பாலா ரத்தமா தெரியலை. பால்தான், தாய்ப்பால்தான். என் பெண்ணை என்கிட்ட கொண்டு வரப் போறேளா இல்லையா? உங்களுக்கும் ஏமாத்தமா ராமச்சந்திரன்? பேர் சொல்லிக் கூப்பிடறேனேன்னு நினைச்சுக்காதீங்கோ. மாப்பிள்ளைன்னு கூப்பிடட்டுமா. இந்தப் பொண்ணுக்கும் எம்மாதிரி பேர் இல்லை. பொண்ணு சின்னுன்னு ஏதாவது வெக்க வேண்டாம். நல்ல பேரா ஃபெமினாவைப் பார்த்து செல்க்ட் பண்ணலாம். அவசரமே இல்லை. இவ ஸ்கூலுக்கு அட்மிஷனுக்கு இப்பவே சொல்லிடணுமாமே. டில்லில இடம் கிடைக்கிறது கஷ்டமாமே.

அப்புறம் பொண்ணாப் பொறந்திருக்கு. இப்பவே சேர்த்து வெச்சுண்டாத்தான் நல்லது. அதனாலே நீங்க வந்து என்ன பண்றேள். இவ பேர்ல ஒரு பிக்ஸட் டிபாஸிட் கட்டிருங்கோ. டாக்டர் என்ன ஆச்சு,

''என்னம்மா இது முன்னமேயே சொல்லக் கூடாதா? இவங்கம்மாவுக்குக் கூட இந்த மாதிரி காம்ப்ளிகேஷன் ஆயிருக்குன்னு இப்ப சொல்றீங்களே! என்ன ''சேச்சே கெட்தட் பிளடி ஆக்ஸிஜன் ஸிலிண்டர்!

சின்னு சின்னு! இத பாரும்மா இத பாரும்மா! உங்கம்மா வந்திருக்கேன் என்னை பாரு!... **எந்த அம்மா? எந்தப் பெண்? நான் 'அம்மா'வா? இல்லை தூங்கற அந்தப் பெண்ணா?**


மது தந்தி கொடுத்து விட்டு உள்ளே உற்சாகமாக நுழையும்போது படுக்கை ஓரத்திலிருந்து ரத்தம் சொட்டுவதைப் பார்த்தான்.

புதியவளுக்கு இதெல்லாம் தெரிய நியாயமில்லை. ஒரு பிளாஸ்திரியில் 3457 என்று நம்பர் போட்டு அவள் முழங்கையில் ஒட்டியிருந்தார்கள். அவள் ஏழு பவுண்டு இருந்தாள். பத்தொன்பது அங்குலம் நீளமிருந்தாள். எலும்புகள் எல்லாம் இளகு. தலைமேல் சொட்டையாக ஒரு அவசரமுடி. தேகப் பயிற்சி செய்வது போல இப்போதே கையைக் காலை ஆட்டத் தொடங்கி விட்டாள்.

சின்னு இறந்திருந்தாள்.

**(முற்றும்)**

# திருமண மலர்



வயது 26. பாரத்வாஜ கோத்திரம், விசாக நட்சத்திரம். வடகலை. பி. எஸ்.ஸி படித்துத் தனியார் கம்பெனியில் மாதம் ரூ. 1000]- வாங்கும் ஐயங்கார் பெண்ணுக்கு நன்கு படித்து நல்ல நிலைமையில் உள்ள ஐயங்கார் பையன் தேவை. பெட்டி எண்: 1048.

வயது 29. கௌசிக கோத்திரம். வடகலை திருவோண நட்சத்திரம் பி. ஏ. படித்துத் தனியார் கம்பெனியில் மாதம் ரூ. 800]- வாங்கும் ஐயங்கார் பையனுக்குப் படித்த வேலைக்குப் போகும் ஐயங்கார் பெண் தேவை. பெட்டி எண்: 1049.

''செங்குந்தர் வகுப்பு — 25 வயது — படிப்பு +2 165 செ. மீ. உயரம் —மாநிறம்— குடும்பப்பாங்கான பெண்ணுக்குப் பண்புள்ள — நற்குடியிற் பிறந்த — பட்டம்பெற்று வங்கியிலோ அரசுப் பணியிலோ ஆசிரியராகவோ பணிபுரியும் மணமகன் தேவை.'' பெட்டி எண்: 1050.

33½ வயது 163 செ. மீ. உயரம் திருநெல்வேலி சைவ வெள்ளாளப் பிள்ளை தமிழ்நாடு அரசாங்க இஞ்சினியர் மனைவியை இழந்தவருக்கு அரசாங்க உத்தியோகத்தில் உள்ள நல்ல குணமுள்ள அழகிய பெண் தேவை. முழு விவரங்களுடன் போட்டோவுடன் விண்ணப்பிக்கவும். ஜாதகம் இருந்தாலும் அனுப்பவும். எளிய திருமணத்திற்கும் சம்மதம். பெட்டி எண்:1051.

கௌசிக கோத்திரம் வடமாள் எஸ். எஸ். எல். சி. வயது 33 விசாகம் 4—ம்பாதம் மத்திய அரசாங்க வேலையில் ரூ. 950]- சம்பளத்திலுள்ள பெண்ணுக்கு நல்ல வேலையிலுள்ள வடமா பிரிவை மட்டும் சேர்ந்த பையன் தேவை. ஜாதகம் முக்கியம். பெட்டி எண்: 1052.

Wanted Blind or handicapped educated brahmin girl above 30 for a brahmin of 40 central govt. employee purely dedicated in the service of handicapped ones. Widows with one child are also preferred. Correspondence in English please. Box No: 1053.

Palghat Vadama Iyer, 33 years Garga Gothram Swathi Matriculate Bangalore Public Sector Employee salary Rs. 1700 seeks alliance from preferrably employed girl subsects no bar. Box No: 1054.

கல்யாணமாகி தீவிர கொடுமையினால் நல்வாழ்வு வாழ முடியாமல் பிறந்தகம் வந்த 29 வயது ஐயங்கார் பெண்ணிற்கு 35 வயதிலிருந்து 40—க்குள் விவாகரத்து செய்த பிராம்மண புருஷனோ அல்லது கல்யாணமாகி மனைவியை இழந்தவரோ தேவை. பெண் விவாகரத்து பெற்றவள். பெட்டி எண்: 1055.

---

**திருமண மலர்ப்பகுதியில் விளம்பரம் செய்ய கட்டணம் ரூ. 30/— தொகையை 'மங்கையர் மலர்' என்ற பெயருக்கு போஸ்டல் ஆர்டராக மட்டுமே அனுப்பவேண்டும். ஒரு விளம்பரத்தில் ஒருவருக்கு 30 வார்த்தைகளுக்குள் விவரங்கள் தர வேண்டும். பதில் அனுப்புபவர்கள் ''விளம்பரதாரர், பெட்டி எண்.... c/o மங்கையர் மலர், கிண்டி, சென்னை-600032 என்ற விலாசத்துக்கு அனுப்பவும். தனிப்பட்ட கடிதப் போக்குவரத்து கிடையாது.**

---

Srivatsa Vadama Iyer, Avittom Fourth 44 175-2000, fair-trim-looks young ,permanent Central, R & D Electronics, proressionally qualified undergraduate, highly respectable family, widower with two (G11y & B8y) intelligent children, invites alliance from unemployed girls 30-35, minimum S.S.L.C. knowledge of Tamil essential and English preferred,should dedicate to raise the children with motherly love. Respectable classes may forward detailed applications with latest photograph (Returnable). Box No: 1056.

''பூரம் ஸ்ரீவத்ஸ கோத்திரம் அய்யர், எஸ். எஸ். எல். சி. படித்த அழகான 26 வயது குடும்பப் பாங்கான பெண்ணிற்கு

நல்ல படிப்பு வேலை 1500-க்கு மேல் வருமானம் உள்ள வரன் தேவை. சகோதர சகோதரிகள் உயர்ந்த நிலையில் உள்ளனர். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும்.'' பெட்டி எண்: 1057.

திருநெல்வேலி சைவப்பிள்ளைமார் 25 வயது எம். ஏ. படித்த பெண்ணிற்கு டாக்டர் இஞ்சினியர் சார்ட்டர்ட் அக்கௌண்டண்ட் அல்லது பாங்க் ஆபீசர் தேவை. வடஇந்தியா வெளிநாடு செல்ல ஆட்சேபணை இல்லை. போட்டோ குடும்ப விவரத்துடன் எழுதவும். பெட்டி எண் 1058

Wanted tall, beautiful good complexioned educated bride though from poor family for Brahmin aged 30, Kasiaba Gothram, earning above Rs. 2000/- p. m. Subsect no bar. Box No : 1059.

''ஆத்ரேய கோத்திரம் பிரஹசரணம் வயது 36. எம்.எ. எம். எட்., படித்து Quasi Govt. ஆசிரியை சம்பளம் ரூ. 1300. மாநிறம் வீட்டு வேலையில் தேர்ச்சி பெற்றவள், உத்திரம் 4-ம் பாதம் நக்ஷத்திரம் பிராமண பெண்ணிற்கு மதராசில் நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. வடமாளும் சம்மதம். ஜாதகம் குடும்ப விவரம் அனுப்பவும். தபால் பெட்டி எண்: 1060.

''திருநெல்வேலி சைவ வெள்ளாளப் பிள்ளை வகுப்பைச் சேர்ந்த மத்திய அரசுப் பணிபுரியும் அழகுள்ள பட்டதாரிப் பெண்ணிற்கு தகுந்த மணமகன் ஜாதகம் குடும்ப விவரங்களுடன் எழுதவும்.' பெட்டி எண்: 1061.

துளுவ வேளாளப் பிள்ளை வகுப்பைச் சேர்ந்த 23 வயது பெண்ணிற்கு அதே பிரிவிலோ அல்லது வேளாள உட்பிரிவுகளிலோ மணமகன் தேவை. பெண் எஸ். எஸ். எல். சி. ரேவதி நட்சத்திரம், பொழுது போக்காக போட்டோகிராபி கற்றுள்ளாள். பெண்ணின் தந்தை சென்னையில் அரசாங்க அதிகாரி. ஜாதகம் மற்ற விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 1062

26 வயதான திருநெல்வேலி சைவச் செட்டியார் பையனுக்கு அழகிய பெண் தேவை. பையன் டிப்ளமா இஞ்சினியராக மத்திய அரசாங்கத்தில் வேலை பார்க்கிறன். சைவப்பிள்ளை சைவச் செட்டியார் இனத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 1063.

''இந்து நாடார் வயது 31 படிப்பு எம். பி. ஏ. தனியார் நிறுவனத்தில் சம்பளம் ரூ. 1000]- முதல் மனைவியுடன் வாழ முடியாத நிலையிலுள்ளவருக்கு அழகும் குணமுமுள்ள மணமகள் தேவை.

விதவை, விவாகரத்து பெற்றவள் ஜாதி பேத மில்லை வரதட்சிணை இல்லை பிராமணரும் ஜாதகத்துடன் எழுதுக.'' பெட்டி எண்: 1064.

திருச்செங்கோடு, செங்குந்த முதலியார், வயது 32, உயரம் 163 செ. மீ. பி. ஏ. ஸ்டேட் பாங்க் ஆஃப் இண்டியா, ஏ.டி.பி., ஹோசூர் கிளையில் பணிபுரியும் நல்ல தோற்றமும் உடல் ஆரோக்கியமும் உள்ள வரனுக்கு இணையான கல்வியும், அன்பும், நற்பண்பும் நிறைந்த எளிமையான சமஉயரமும் தேகவளமும் பெற்றுள்ள பெண்தேவை எளிய திருமணம் இந்து மதத்தில் எப்பிரிவினரும் வரவேற்கத்தக்கவர். பெட்டி எண்: 1065.

மத்திய அரசில், பணியாற்றும் எம்.காம், தேர்ச்சி பெற்ற 23 வயது பிரகசரணம் பிரிவைச் சேர்ந்த உத்திரட்டாதி பாரத்வாஜ கோத்திர வாலிபருக்கு, நல்ல அழகும் படிப்பும் உள்ள 21 வயதுக்குட்பட்ட, பிரகசரணம், வடமாள், பிரிவைச் சார்ந்த வரன் தேவை. மத்திய அரசு, தேசிய வங்கியில், பணியாற்றினுல், விரும்பத்தக்கது. பெட்டி எண்: 1066.

கர்நாடக மாநிலத்தில் பொதுத் துறை நிறுவனத்தில் நல்ல பதவி. பரந்த மனப்பான்மையும் இரக்கமும் உண்டு. ஊனமுற்ற தாய்மை அடைய முடியாத பெண்ணைத் தேர்ந்தெடுக்க விரும்பும் தாழ்த்தப்பட்ட (எஸ். சி. பட்டதாரி) இளைஞருக்கு பெண் தேவை. எந்த சாதியும் சம்மதம். முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 1067.

Alliance for highly qualified chief executive widower, 47 years, Bharadwaja, Vadama with two children 14 and 10, from bride, Vadama or other subsects, graduate, good-looking fair, aged 36 years. simple marriage. Box No : 1068.

ஸ்ரீவத்ஸ கோத்திரம். வடமாள் பூசம் நக்ஷத்திரம். எஸ். எஸ். எல். சி. தமிழ் ஆங்கிலம் தட்டெழுத்து தேர்ச்சி பெற்று தமிழக அரசில் தற்காலிக வேலையிலிருந்து நிறுத்தப்பட்ட 28 வயது பெண்ணுக்கு 37 வயதுக்குள் வரன் தேவை. ஜாதகம் வேண்டும். சாதாரண விவாகம். பெட்டி எண்: 1069.

வெள்ளாள பிள்ளை வகுப்பு 26 வயது பட்டதாரி. தட்டெழுத்து, சுருக்கெழுத்து தேர்வு பெற்ற 158 செ. மீ. உயரம். மாநிறம். நல்ல தோற்றம் அழகுகொண்ட பெண்ணுக்கு தக்க வரன் தேவை. சீர் வகைகளுடன் திருமணம் எளிய முறையில் நடத்தப்படும். பெட்டி எண்: 1070.

பாரத்வாஜ கோத்திரம், உயரம் 5'',2'' காசில்நாடு, தெலுங்கு பிராமண, எம்.ஏ. பி. எட்., பட்டதாரி பீஹார் அரசினர் கல்லூரி, பாட்னாவில் விரிவுரையாளராக மாதம் ரூ. 1700 சம்பாதிக்கும் வீட்டுப்பொறுப்பு தெரிந்த 32 வயதுள்ள பெண்ணுக்கு, நல்ல சம்பாத்தியமுள்ள தெலுங்கு பிராமண மணமகன் தேவை. உட்பிரிவு பாதகமில்லை. பெட்டி எண்: 1071.

உயர் குடியில் பிறந்த, சைவப்பிள்ளை இனத்தைச் சேர்ந்த 21 வயதுள்ள அழகிய பட்டதாரிப் பெண்ணுக்கு, அதே இனத்தை சேர்ந்த, படித்த, நல்ல வேலையில் இருக்கும் அழகிய மணமகன் தேவை. ஜாதகம், குடும்ப விவரங்களுடன் எழுதவும். பெட்டி எண்: 1072.

வடமாள், பாரத்வாஜ கோத்ரம், 27 வயது பட்டதாரி. மத்திய அரசு கம்பெனியில் ரூ. 1200]- சம்பளத்துடன் நிரந்தர வேலையில் உள்ள அழகான பெண்ணிற்குத் தகுந்த மணமகன் தேவை. பெண்ணிற்குஒரு காலில் Infantile Polio இதனால் பாதகம் இல்லை. விருப்பம் உள்ளவர்கள் ஜாதகத்துடன் பதில் எழுதவும். பெட்டி எண்:1073.

ஷடமர்ஷண கோத்திரம், கேட்டை,நான்காம் பாதம், வடகலை ஐயங்கார், 34 வயது, சிவப்புநிறம், பி. எஸ். சி., இந்தி, தையல் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றவள். உயரம் 5.2' சீர்வரிசைகள் நன்கு செய்யக் கூடிய குடும்பப்பாங்கானகுரோம்பேட்டையிலுள்ள இக்கன்னிகைக்கு, நல்ல படிப்பும் நல்ல உத்தியோகத்தில் இந்தியாவில் பணிபுரியும் முதல் தரம் மணமகன் தேவை. பெட்டி எண்: 1074.

காச்யப கோத்திரம் அஷ்டசஹஸ்ரம் 34, 36, 38 வயதுடைய வேலை பார்க்கும் மூன்று சகோதரிகளுக்குத் தமிழ்நாட்டில் நிரந்தர வேலை வருமானமுள்ள தமிழ் பிராம்மண ஐயர் வரன்கள் தேவை. வேறு உட்பிரிவோ இரண்டாம் தாரமாகவோ இருந்தாலும் பரவாயில்லை. மனப்பொருத்தம் பார்த்து தகுதிக்கேற்ப விரைவில் திருமணம் நடத்த விருப்பம். பெட்டி எண்: 1075.

ஆத்ரேய கோத்திரம் மகநக்ஷத்திரம், புனாவில் டாடா கம்பெனியில் சீனியர் இன்ஜினியராகவும் இன்ஜினியரிங் பட்டதாரியும் மாதம் ரூ. 3500]- சம்பளமும் 37 வயதான பிள்ளைக்கு நன்கு படித்த உயரமான சிவப்பு நிறம் லக்ஷணமான பெண் தேவை. வரதட்சணையின்றி சிக்கனமான திருமணம். பெண்ணின் குணம் பண்பு தகுதிக்கு சலுகை காட்டப்படும். ஜாதகமும் போட்டோவுடன் பெட்டி எண்: 1076.

ஸ்ரீவத்ஸ கோத்திரம் கேட்டை நட்சத்திரம். உயரம் 5 அடி 6 அங்குலம். 29 வயது ஐயங்கார் பெண்ணிற்கு மூத்த பிள்ளையாக அல்லது குடும்பத்திற்கு ஒரே ஒரு பிள்ளையாக இருப்பவர் ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெண் மத்திய அரசில் வேலை. சம்பளம் ரூ. 1200. பெட்டி எண்: 1077

பாரத்வாஜ கோத்திரம். வடமா. ஆயில்யம் முதல் பாதம் பி. காம் படித்து வங்கியில் வேலையில் உள்ள உயரம் 156 செ. மீ. நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த 22 வயது அழகான பெண்ணிற்கு 30 வயதிற்குள் மணமகன் தேவை. உட்பிரிவுகள் பாதகமில்லை. வெளிநாட்டில் இருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண்: 1078.

Brahmin trained graduate partner tall above forty without encumberance for widower Lecturer (in Libya) 48/178 with three children studying in India. Hindi knowing passport holders correspond to. Box No: 1079

சைவ வேளாளர் பெண் வயது 29. தனியார் நிறுவனத்தில் பெர்மனண்ட் உத்தியோகத்தில் மாதச் சம்பளம் ரூ. 450]- பெறுகிறார். அதே இனத்தில் உத்தியோகத்திலுள்ள தகுந்த வரன்கள் விண்ணப்பிக்க. சீர்வரிசை சுமாராக செய்ய முடியும். மனப்பொருத்தம் சம்மதம். பெட்டி எண்: 1080.

தென்னாற்காடு மாவட்டம் இந்து நத்தமன் உடையார் 18 வயது மணமகளுக்கு நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. போட்டோ மற்றும் விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 1081.

இந்து சாதிப் பூசல்களுக்கு அகப்படாமல், பண்பாடு பெருநோக்குடன் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த 25 வயது Post Graduate மாநில அரசில் பணிபுரியும் அழகு குணம் பக்தி கீழ்படிந்து நடத்தல் ஆகிய குணங்கள் அமைந்த பெண்ணுக்குத் தகுதியான வரன் திருமணமாகாதவர்களிடமிருந்து கோரப்படுகிறது. இந்து பிற்பட்ட முற்பட்ட வகுப்பைச் சேர்ந்த எவரும் சம்மதம். பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த சைவ உணவு உண்பவர் திருமணமாகாதவர் என்பதை குறிப்பாகப் பதிலில் எழுதவும்.
பெட்டி எண்: 1082.

எஸ். எஸ். எல். சி. படிப்பும் அழகும் குடும்ப கலையில் தேர்ச்சியும் தன் சேமிப்பில் ரொக்க ஆஸ்தியும் உடன் பிறந்தவர்கள் நல்ல நிலையில் முற்போக்கு குடும்பத்தை சேர்ந்த 23 வயது ஹிந்து பிற்பட்ட வகுப்புப் பெண்ணுக்கு இதுவரை திருமணம் செய்து கொள்ளாத வரன் தேவை. சீர்வரிசைகள் மனநிறைவு அளிக்கும். இந்து மதத்தைச் சேர்ந்த முற்பட்ட பிற்பட்ட

வகுப்பு சாதி வேறுபாடில்லாமல் அணுகலாம். திருமணம் ஆகாதவர் என்பதை பதிலில் குறிப்பாக எழுதவும். பெட்டி எண்: 1083.

பிருஹசரணம், காஸ்யப கோத்திரம், அஸ்த்த நக்ஷத்திரம், 30 வயது எஸ். எஸ். எல். சி. முடித்து ஜாப் டைப்பிஸ்ட் மாதவருமானம் 750 ரூபாய். பிறவியிலேயே சற்று பரவலான தலைமுடியும் சந்துவிட்ட பல்வரிசையும் கொண்ட பெண். மற்றபடி உயரம் நிறம், குணம், குடும்ப நிர்வாகம் அனுபவமுள்ளவள். 'கண்ணிய'மான பெரும் குடும்பத்தைச் சார்ந்தவள். சம்பாதிக்கும் தமிழ் பிராம்மண 35 முதல் 40 வயதுள்ள மணமகன் தேவை. பெட்டி எண்: 1084.

ஜாதகம், உத்தியோகம், குடும்ப விவரங்களுடன் பாரத்வாஜ கோத்திரம். தமிழ்வடமாள், நடுத்தர உயரமும் அழகும் திறமையுமுள்ள 28 வயது பி. யு. சி. டைப்ரைட்டிங் ஷார்ட்ஹாண்ட் ஹையர் பாஸ் செய்த பூரட்டாதி நட்சத்திரம். மாநில அரசில் சென்னையில் மாதம் ரூ. 750/- சம்பளமுள்ள பெண்ணிற்கு மணமகன் தேவை. உட்பிரிவுகள் பரவாயில்லை. பெட்டி எண்: 1085.

ஆர்ய வைசியர், கோமுட்டி செட்டியார், புஷ்பால கோத்திரம், வயது 29, ஆயில்யம் 4-ம் பாதம், உயரம் 5-1, கல்வி எஸ்.எஸ். எல். சி., நிறம் சிகப்பு, தையல் வேலை தெரிந்த பெண்ணுக்கு, ஆர்ய வைசியர், உத்தியோகம், அல்லது, வியாபாரத்திலுள்ள, 30 வயதிற்கு மேற்பட்ட வசதியுள்ள, மணமகன் தேவை. தாயார் இல்லாதவராக இருக்க வேண்டும். ஜாதகமும், இதர விவரங்களுடன் எழுதுக, அன்பளிப்பும் உண்டு. பெட்டி எண்: 1086.

சைவ வேளாளர் பெண்– வயது 23. மாப்பிள்ளை சரியில்லாததால் திருமணமான அன்றே விலகி ஒரு வாரத்தில் விவாகரத்துப் பெற்றவர். பரந்த மனப்பான்மை உள்ளவர்கள் விண்ணப்பிக்க. பெண் நல்ல நிறமாக அழகாக இருப்பாள். சீர்வரிசை சுமாராகச் செய்ய முடியும். பெட்டி எண்: 1087.

Alliance from professionally qualified, preferrablyM. B.B.S. / B.E. Electronics/Comp Science, tall, fair, beautiful bride forHaritha Vadama, Uthirattathi, only son, M. Com. A. C. A., A. C. S. (A. C. M. A.) Accounts Officer, Reputed concern 28/172propertied Subsect acceptable Box No: 1088.

Wanted fair graduate bride employed in I. O.B./Indian Bank/State Bank for a graduate fair only son Brahacharanam,Athreya, Rohini 160 cms. chemist in Mettur Chemical Industries Ltd., salary Rs. 1150/- and other income Rs. 1300/- subsect no bar. Box No: 1089.

எம். ஏ. பி. எட். படித்து ஆசிரியர் வேலை பார்க்கும் மாதம் ரூ. 1000 சம்பளம்பெறும் 32 வயது யாதவ வகுப்பைச் சேர்ந்த பையனுக்கு, வேலையிலுள்ள அதே வகுப்பைச் சேர்ந்த அழகிய பெண் தேவை. புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும். வேலையில்லாத படித்த வசதியுள்ள பெண்ணாயிருப்பினும் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண்: 1090.

Wanted Non-Harita groom for Tamil Iyer girl 34 years M. A. B. Ed. and 165 cms tall. Apply Box No: 1091.

Wanted broad minded highly qualified well settled Tamil non - Bharadwaja Brahmin bridegroom below 42 to marry very fair Vadama post graduate college professor 38 working near Madras drawing four figure salary. BoxNo:1092.

''வட ஆற்காடு நாட்டார் பி. எஸ். ஸி. (எல். எல். பி. வயது 28]175 செ. மீ. பம்பாயில் ஏர் இந்தியாவில் மாதம் ரூ.2000]- சொந்த ப்ளாட்டில் வசிக்கும் வரனுக்கு 20–23 வயதுக்குள் நல்ல அழகான சிவப்பு நிறமுள்ள பி. யு. சி. வரையிலாவது படித்த கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த மணமகள் தேவை. ஜாதிபேதமில்லை. போட்டோவுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 1093.

தமிழ் ஐயர், அஷ்ட சகஸ்ரம், பௌர் குத்ஸ கோத்திரம், பரணி நட்சத்திரம், 29 வயது, எஸ். எஸ். எல். சி. படித்த மனோ வியாதியில் இருந்து குணமடைந்துள்ள குடும்பப் பாங்கான பெண்ணிற்கு, பரந்த மனப்பான்மையுள்ள நல்ல குடும்பத்தைச் சேர்ந்த படித்த நல்ல வேலையில் இருக்கும் வரன் தேவை. திருமணம் நல்ல முறையில் செய்து தரப்படும். உட்பிரிவுகள் சம்மதம். பையன் ஜாதகம் மற்றும் முழு விபரத்துடன் எழுதவும். பெட்டி எண்:1094

தமிழ் ஐயர், அஷ்ட சகஸ்ரம், பௌர் குத்ஸ கோத்திரம், அசுவதி நட்சத்திரம், 28 வயது, பட்டதாரி, குடும்பப் பாங்கான பெண்ணிற்கு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த படித்த நல்ல வேலையில் உள்ள வரன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பையன் ஜாதகம், போட்டோ மற்றும் முழு விபரத்துடன் எழுதவும். பெட்டி எண்: 1095.

# பெண்கள் சவாலை ஏற்க வேண்டும்!

இருபது வயதில் ஒரு கம்பெனியின் சீஃப் எக்ஸிக்யூட்டிவ் ஆவதென்றால் அத்தனை எளிதான காரியமா? இவர் ஒரு தொழிலதிபரின் மகளுமல்ல; எம்பி.ஏ.வோ, எம். காமோ இல்லை; வெறும் பத்தாவது மட்டுமே! சாதாரண சிப்பந்தியாக பதினெட்டு வயதில் ஒரு கம்பெனியில் சேர்ந்து இரண்டே வருடங்களில் அந்தக் கம்பெனியின் தலைமைப் பொறுப்பையே ஏற்றிருக்கிறார் என்றால் அதற்கு அவருடைய சலியாத உழைப்பும், தளராத ஆர்வமும்தான் காரணம்.

எஜ்ஜி குரூப் ஆப் கம்பெனியின் சீஃப் எக்ஸிகியூட்டிவான ராஜி காலை ஏழு மணிக்குக் கிளம்பினால் வீடு திரும்ப இரவு ஆகிவிடுமாம்.

''முதலில் குருவி தலையில் பனங்காயை வைத்த மாதிரி இவ்வளவு பெரிய பொறுப்பை எனக்குத் தந்தபோது பயமாய்த்தான் இருந்தது. ஏனென்றால் கல்யாணமாகாத இருபது வயதுப் பெண் நான். இங்கு வேலை செய்யும் பலர் என் அப்பா வயசுள்ளவர்கள். எந்த அளவு இவர்களெல்லாம் என்னை ஏற்றுக் கொள்வார்கள் என்று யோசனையாகத்தான் இருந்தது. ஆனால் நான் கூறும் யோசனைகளுக்கும் நிர்வாகத் திட்டங்களுக்கும் மதிப்புக் கொடுத்து என்னுடன் அனைவரும் ஒத்துழைப்பது நான் செய்த பாக்கியம் தான்'' என்கிறார் ராஜி.

இவருடைய வேலையைப் பற்றிக் கேட்டபோது... ''இது ஒரு சேலஞ்சிங் ஜாப். ஃபைல் பார்க்கும் வேலையல்ல. முழுக்க முழுக்கப் பொதுமக்களுடன் தொடர்புள்ளது. ஒவ்வொரு வீட்டிற்கும் தேவையான உதவிகளைச் செய்வது, பெரிய கம்பெனி, கட்டிடப் பராமரிப்புக்களை ஏற்றுக்கொள்வது, தொலை பேசி இல்லாதவர்களுக்கு உதவி செய்வது என நாள் முழுவதும் சர்வீஸ் நினைப்புடைய வேலை.

இதனால் எல்லோருடைய குறைகளையும் கேட்டு, அவர்களுக்குத் திருப்தியாக அவற்றை நீக்கி, நல்ல பெயர் வாங்கி... வெரி வெரி இன்ட்ரஸ்டிங்!'' என்று சந்தோஷத்துடன் கூறுகிறார்.

ராஜியை இன்றைய இளம் பெண்களுக்கு ஒரு உதாரணமாகத் திகழ்பவர் என்று கூடச் சொல்லலாம். ஏனென்றால் பள்ளி பிறகு கல்லூரி, அப்புறம் வேலை தேடல், கல்யாணம், குழந்தை என்ற வட்டத்திலிருந்து விலகிப் புதுமைப் பெண்ணாகி நிற்கிறார்.

''பெண்கள் பேங்க், கவர்ன்மெண்ட் வேலை என்று பாதுகாப்பான வேலைக்குப் போய் விடுகிறார்கள். அந்த வழக்கமான வட்டம் எனக்குப் பிடிக்காமல் தான் பத்தாவது முடித்தவுடன் பாலிடெக்னிக்கில் சேர்ந்தேன். ஒவ்வொரு பெண்ணிடமும் ஆக்கபூர்வமான சிந்தனைகள் குவிந்து கிடக்கின்றன. இந்த 'கிரியேடிவ் திங்கிங்'கை சமையலுக்கும், வீட்டு அலங்காரத்திற்கும் மட்டுமே பயன் படுத்துவது கொடுமையானது. சமுதாயத்தில் இவர்களுடைய கற்பனா சக்திக்கு எவ்வளவோ வேலைகள் காத்துக் கிடக்கின்றன. அவற்றை ஒரு சவாலாக ஏற்று, கலை மணக்கப் பல தொழில்கள் நடத்த பெண்கள் முன்வர வேண்டும்'' என்கிறார் இந்த இளங்குமரி ராஜி சுப்ரமண்யம்.

பேட்டி: **திவ்யா**

வண்ணப் படம்: **ரங்கிஷ்**

Edited, Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032, (Phone: 431543)
Assistant Editor: Manjula Ramesh.

# கரை சேர்க்கும் தோணிகள்

சுபா

குறுநாவல்

## 1

அந்த நாள் வெகு தூரத்தில் இல்லை என்பது மட்டும் அவனுக்கு நிச்சயமாகத் தெரிந்தது. ஒத்திப் போடுவதிலும் தள்ளிப் போடுவதிலும் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிடைத்துவிடப் போவதில்லை என்று புரிந்தது. பையிலிருந்து சிகரெட் பாக்கட்டை எடுத்து ஒரு சிகரெட்டை உருவி எடுத்து உதடுகளில் பொருத்தினான். 'சர்ரக்' என்று நெருப்புக் குச்சியைக் கிழித்து அதன் முனை பற்றவைத்து நெஞ்சு வரை புகையை இழுத்தான். ஜன்னல் வழியாக வெளியே பார்த்தான். கடைசி நேரப் பரபரப்பில் மக்கள் அலைந்து கொண்டிருந்தார்கள். 'மூக் மூக்' 'மூக்' என்று சப்தித்துக் கொண்டு கிரஷ் பாட்டில்கள் நகர்ந்தன.

'சாப்பி, டீஈஈஈ, டீ, காப்ப்பீய்ய்ய்'

'போய்ச் சேர்ந்தவுடனே மொதக் காரியமா ஆசாமியைப் போய்ப் பார்த்து வேலைய முடிச்சிடு....'

பாக்க எனக்குத்தான் குடுத்து வக்கலை.'

பத்ரி நாராயணன் எல்லாவற்றையும் மறந்து சிகரெட்டை ஆழமாய் இழுத்து புகை எதுவும் வெளி வராமல் நெஞ்சில் அடக்கிக் கண்களை மூடிக் கொண்டான்.

நெஞ்சில் மண்டியிருந்த புகை வெளிவரத் தவித்த மாதிரி அவனுள் நினைவுகள் முட்டி மோதிக் கெண்டன. எத்தனை நாள் சமாச்சாரம் அது?

'ஜிவுக்' என்று இழுபட்டு வண்டி மெல்ல நகர ஆரம்பித்தது.

## 2

"ஊருக்குப் புதுசா நீ?"

"ஆமா மாமா."

"ஜாகை?"

"ஸ்கூல்லயே இருந்துக்கோன்னு சொல்லிட்டா."

"ஒனக்கு யாரு சொன்னா இந்த எடத்தைப் பத்தி?"

"சுப்பையா வாத்தியார்தான் சொன்னார். சன்னதித் தெருவுல தெற்குக் கோடிலேர்ந்து நாலாவது வீட்ல வீட்டுச் சாப்பாடு கெடைக்கும்னு..."

"ஆனா எந்த நாழின்னு சொல்லலையாக்கும்?"

பத்ரி லஜ்ஜையில் நெளிந்தான். விறகு பற்றவைக்கு முன் விருந்துக்கு உட்கார்ந்து விட்ட மாதிரி குறுகினான்.

"நான் போயிட்டு அப்புறம் வரேன்..." என்று நழுவப் பார்த்தான்.

"பரவால்ல உக்காரு... இன்னும் கால் மணி நேரத்துல தயாராகும்... சொந்தூர் எது?"

**மோர் குழம்பில், வேகவைத்த உருளைகிழங்கு துண்டுகளை வதக்கிய பின போட்டால் மிகவும் ருசியாக இருக்கும். அரைஉருளை கிழங்கு துண்டினை மசித்துப் போட்டால் குழம்பு கெட்டியாக இருப்பதுடன், அரிசி மாவு கரைத்து விடவேண்டிய அவசியமும் இல்லை.**

-சீதாலக்ஷ்மி

பத்ரி நிஜமாகவே சங்கடமாய் உணர்ந்தான். இவர்தான் சுப்பையா சொன்ன 'வெங்கடேச மாமா'வாய் இருக்க வேண்டும். இரண்டு கைக்கு அடங்காத கூந்தலைக் குடுமியாய் முடிந்திருந்தார். அதில் கறுப்பை விட வெள்ளை பிரதானமாய் இருந்தது. நெற்றி அகலமாய் இருந்தது. புருவங்களில் முடி சொற்பம். புருவ மேடுதான் தெரிந்தது. கண்கள் கத்தி கிழித்த மாதிரி இடுங்கியிருந்தன.

'எந்த ஊர்னு கேட்டேன்...'' மறுபடியும் அவரே கேட்டார். குரல் சற்று வித்தியாசமாய் இருந்தது. பேச்சு உதிர்கையில் கூடவே ஒரு மெல்லிய எதிரொலி மாதிரி கீழ் ஸ்தாயியில் இன்னொரு குரலும் சேர்ந்து வந்தது.

''பத்மனுபன்கோயில்.''

''பக்கத்திலதான். அப்பா என்னவாயிருக்கார்?''

''அப்பா இல்ல... அம்மாவும் போய்ச் சேர்ந்துட்டா...''

''த்சு...த்சு... கூடப் பொறந்தவா?''

'ஊஹூம்.''

'பத்மனுபன் கோயில்ல தனியாவா இருந்தே?''

''பெரீப்பா வீட்லதான் கொஞ்ச நாள் இருந்தேன். எனக்கும் அவாளுக்கும் ஒத்து வரலே. சுப்பையாதான் வாத்யார் உத்யோகம் இருக்கு, வந்துடேன்னு கூப்ட்டார் வந்துட்டேன்...''

''ஸ்கூல்லயா?''

ம்.''

'இன்னும் முடிவாகல்லே. நூறோ... தூத்தி இருபதோ தருவான்னு நெனைக்கிறேன் அதுவும் அப்பப்போ கிராண்ட் வந்தால் தான் கெடைக்கும் போல இருக்கு.'

வெங்கடேசன் சட்டென்று நிமிர்ந்தார்.

''ரெண்டு வேளை சாப்பாட்டுக்குக் கூடக் காணுதே.''

' சாப்பாட்டுச் செலவு மாத்திரம்தான். இருக்கிற எடத்துக்கு வாடகை கெடையாது. வருஷத்துக்கு மூணு மாசம் வெக்கேஷன்... வேற உத்தியோகம் பண்ணியும் சம்பாதிக்கலாம். இதெல்லாம் போக ட்யூஷனுக்கு ஏற்பாடு பண்ணித் தரேன்னு சொல்லியிருக்கார் சுப்பையா. அதுல ஒரு நாப்பது அம்பது கெடைக்கும் போல இருக்கு.''

**உளுந்துமாவை எவ்வளவுக் கெவ்வளவு நைசாக அரைக்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு எண்ணெய் இழுத்துக் கொள்ளும். ஆகவே வடை மாவை நைசாக அரைக்காமல் கரகர வென்று அரைத்து ஒரு ஸ்பூன் அரிசிமாவையும் கலந்துஈரக்கையால் வடையைத் தட்ட, வடை பெரிதாக பூரித்து வரும்.**

**- திருமதி தேவனுதன்**

''எதுவரைக்கும் வாசிச்சிருக்கே?''

''எஸ்ஸெஸ்ஸெல்ஸி.''

''கஷ்டம்தான். நீயாவது அதை பாஸ் பண்ணிட்டே. உன் வயசுல எனக்கொரு பிள்ளை இருக்கான். கரண்டியைப் பிடிக்கத்தான் லாயக்கு... அவனோட அண்ணன் ரொம்பச் சமர்த்து... படிச்சான். டவுன் காலேஜுக்குப் போனன். பாஸ் பண்ணுன். பூனுல பெரிய கம்பெனில உத்யோகம்.. அவ்வளவுதான். அதோட எங்களையும் இந்த ஆண்டிமங்கலத்தையும் மறந்துட்டான்.''

ஐந்து நிமிஷப் பழக்கத்தில் இத்தனை விஷயங்களைச் சங்கோஜமில்லாமல் அவர் பேசியது பத்ரிக்கு ஆச்சரியமாய் இருந்தது.

''ரகுபதி...'' என்று உள்ளே திரும்பிக் குரல் கொடுத்தார்.

நான்கு முழ வேட்டியை மடித்துக் கட்டி இடுப்பில் ஒரு துண்டை உருட்டிக் கட்டிக் கொண்டு திறந்த மார்போடு வாசலைத் தாண்டி வெளியே வந்தவனை பத்ரி பார்த்தான். வெங்கடேசனின் ஜாடை அப்பியிருந்தது. அதே அகல நெற்றி இடுங்கின கண்கள். குடுமி வைக்காமல் கிராப் வைத்திருந்தான்.

''என்னப்பா?''

''ஆச்சா?''

''அஞ்சு நிமிஷத்துல எலை போட்டுரலாம்.''

''நம்ம ஸ்கூல்ல வாத்தியாராச் சேர்ந்திருக்கானும். பத்ரிநாராயணன்னுதானே சொன்னே?''

''ஆமா மாமா.''

''சுப்பையா சொல்லி விட்டாராம்.... இனிமே இங்கதான் சாப்பாடு.... அக்கௌண்டா, கேஷா?''

''அக்கௌண்டுன்னு சௌகரியமாயிருக்கும்.''

''நோட் புக்ல ஒரு புதுப் பக்கம் போட்டுடு ரகுபதி....''

''சரிப்பா.''

அன்றைக்கு முதன் முறையாய் ரகுபதியைப் பார்த்தபோது கூட அது ஒரு வியாபார உறவாய்த்தான் இருக்குமென்று தோன்றியதே தவிர ஆழமாய்ப் பின்னிக் கொள்கிற நட்பாய் பின்னுல் மலரப் போகிறது என்று எதிர்பார்த்திருக்கவில்லை. ஆரம்பத்திலிருந்த சங்கோஜமும் லஜ்ஜையும் கொஞ்சம் கொஞ்சமாய் உதிர்ந்து போய், ஸ்கூல் முடிந்தவுடன், டியூஷனுக்கு வருகிற பையன்களை அனுப்பியவுடன் நேரே சன்னிதித் தெருவுக்குத்தான் கால்நடக்க ஆரம்பித்தது. வெங்கடேசனுடன் கொஞ்ச நேரம், ரகுபதியோடு நிறைய நேரம் என்று பேச்சுக்கு மனது அலைய ஆரம்பித்தது. ஒரு மாதத்திலேயே ஒட்டுதல் அதிகமாய்ப் போய் பத்ரி தேடிப் போகாத நாளெல்லாம் ரகுபதி அவனைத் தேடி வருகிற அளவுக்கு நெருக்கமாகி விட்டது.

ஆற்றங்கரையில் அரை நிலவு வெளிச்சத்தில் கால் பதியப் பதிய நடப்பதிலும்,

இரவு விழுந்த பின்னும் கூட நினைத்துக் கொண்ட மாதிரி வேஷ்டியைக் களைந்துவிட்டு தண்ணீரில் தொபேலென்று குதித்து எதிர்க் கரைவரை போட்டி போட்டுக் கொண்டு நீச்சலடிப்பதிலும் ஒரு சொகுசான சுகம் பொதுவாய்க் கிடைத்ததினால்தானா தன் வேர்கள் கிளம்பின என்று நிறைய நாள் யோசித்திருக்கிறான். இன்னதுதான் என்று வரையறுக்க முடியாத ஏதோ ஒரு பொதுவான பிடிமானம்தான் இந்த உறவுக்கு உயிர் கொடுத்திருக்க வேண்டும் என்று மட்டும் புரிந்தது.

## 3

**லே**சான ஒரு அதிர்வில் கண்ணைத் திறந்தான் பத்ரி. வண்டி மை இருட்டில் நின்று கொண்டிருந்தது. 'விர்'ரென்று மேலே மின் விசிறி சுற்றியும்கூட ஏகமாய்ப் புழுங்கியது. எதிர் ஸீட்டில் குழந்தை யொன்று மடியில் தலை சாய்த்திருக்க அதன் இதழ் கடையில் பால் துளி ரோஜா இதழ் மேல் விழுந்த மாதிரி தெரிந்தது. அதன் தாயின் மார்பு குழந்தைக்காக மூடாமல் திறந்திருக்க, பாதி வாய் திறந்த நிலையில், அவள் தூங்கிக் கொண்டிருந்தாள். ஜன்னலிலிருந்து வெளியில் பாய்ந்த வெளிச்சம் சதுரமாய் கீழே விழுந்து சிதறியிருந்த கருங்கல் ஜல்லியைக் காண்பித்தது. பத்ரி நிலைகொள்ளாமல் மறுபடி கண்களை மூடிக் கொண்டான். விடிய வேண்டும் ஊர் போய்ச் சேர.

## 4

“**அ**ப்பா கையோட கூட்டிண்டு வரச் சொன்னார்டா பத்ரி.”

“வேண்டாம்ரகு...நான் எங்கேயோவெளியில போய்ட்டேன்னு சொல்லிடு.”

“முடியாது. வா.. வரத்தான் போறே.”

“ஒனக்கு என் நெலைமை தெரியாதாடா? என்னவோ இருந்தாப்ல இருந்து உடம்புக்கு முடியலை. படுத்துண்டேன். உடம்புன்னா வைத்தியம் பார்க்காம இருக்க முடியாது. வைத்தியம்னா சும்மாவா நடக்கும்? கொஞ்சம் நஞ்ச காசும் செலவாய்டுத்து ரகு...”

“இதெல்லாம் என்கிட்டச் சொல்ல வேண்டாமே. அங்க வந்து சொல்லிக்கோ..... தொரைக்கு வேற கோபம்... ரெண்டு நாளா நா வந்து உன்னைப் பார்க்கலையேன்னு. நான் அகரமாங்குடிக்குப் போயிட்டேன்டா. அதனாலதான் வர முடியலை.... வா... ப்ஸ்... வான்னா வரணும்...”

பத்ரிக்கு கண்ணில் லேசாய் நீர் திரண்டு போயிற்று. வெங்கடேச மாமா முகத்தில் விழிப்பது என்பதே ஒரு சங்கோசமான செயலாய்த் தோன்றிற்று. நான்கு வீதி தள்ளியிருக்கும் சன்னிதித் தெருவுக்கு வந்து சேர்வதற்குள் கால்கள் பின்னிபின்னித் தடுமாறின.

வாசலிலேயே வெங்கடேச மாமா நின்று கொண்டிருந்தார்.

“கூப்பிட்டேளாமே மாமா?”

“ரெண்டு நாளாத் தலையைக் காட்டாம இருந்துட்டு, இப்ப இழுத்துண்டு வரச் சொன்னதுக்கப்புறம் 'கூப்பிட்டேளாமே'வா?”

“......”

“ஏன் வரலை?”

“வயிறு கொஞ்சம் உப்பினாப் போல இருந்தது மாமா. பசியேயில்ல...”

“பொய் சொல்லப்படாது. கண் ஏன் கீழே பார்க்கறதாம்... தைரியமா என்னைப் பாத்துச் சொல்றது...”

“கொஞ்சம் பணத் தட்டுப்பாடு... ஏற்கெனவே போன மாசத்துப் பாக்கி நிக்கறது. காசு கொடுக்காமச் சாப்பிடறதுக்கு யோசனையா இருந்தது மாமா...”

“பணம் என்னிக்கு வரும்?”

“தெரியலை... ஒரு வாரம் ஆகலாம்.”

“ஆக இந்த எட்டு நாளும் ஈரத் துணிய வயித்தில போட்டுண்டு இருக்கப் போறியாக்கும்?... இல்லன்னா வேற எடத்துல சாப்பாட்டுக்கு ஏற்பாடு ஆகியிருக்கா?”

“மாமா... சன்னிதித் தெருவைத்தவிர வேற எடத்துல ஒரு பருக்கை கூட எனக்கு எறங்காது....”

“நெஜமாத்தான் சொல்றியா?”

“சத்தியமா மாமா...”

“அப்ப உள்ள வந்து உக்காரு... ரகுபதிக்கும் உனக்கும் நான் வித்தியாசம் பாக்கறதில்ல... நீ பிரிச்சுப் பிரிச்சிப் பேசறது எனக்குப் பிடிக்கலை... வா.. பொண்டுகள்ளாம் இன்னும் சாப்பிடாம நமக்காகக் காத்திண்டிருக்கா...”

“சரி...”

“அம்மாடீ கல்யாணீ... எலை போடு... எலை போடு... பத்ரி வந்துட்டான்.”

முற்றத்தில் இறங்கி கையை அலம்பிக் கொண்டான். மனசு இருந்த இருப்பில்

**கேக் வேக வைக்கும்போது அதன் மேல் ஒரு பிரவுன் பேப்பர் போட்டு மூடினால் வெந்தபின் கேக்கின் மேல் ஆடை கட்டாமல் இருக்கும்.**

**-சரஸ்வதி**

சாப்பாடு சரியாய்க் கொள்ளவில்லை. சாப்பிடுகிற சாப்பாட்டுக்கு யாராவது கடன் வைப்பார்களோ?

மெதுவாய்க் கடன் ஏறிக் கொண்டேதான் இருந்தது. மாதா மாதமும் ஏதாவது ஒரு வகையில் இழுத்தடித்து வெங்கடேச மாமா பணத்திற்கு ஒட்டை விழுந்தது. வெங்கடேச மாமாவும் கேட்கக் கூடாது பண விஷயம் என்று சங்கணம் கட்டிக் கொண்ட மாதிரி அது பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

அந்தக் கடனோடு நின்றிருந்தால் வெறும் பண விஷயம்தான் என்று மனது சமாதானப் பட்டுப் போயிருக்குமோ என்னவோ! பள்ளிக் கூடத்திலேயே ஆனது ஆகட்டும் என்று தங்கியிருந்துவிட்டுச் சாப்பாட்டுக்கு மட்டும் அங்கே போய்க் கொண்டிருந்தால் இந்தப் பிரச்சினையே வந்திருக்காதோ என்னவோ?

''என்ன பத்ரி மென்னு மென்னு முழுங்கறே... சொல்லேன்.''

பத்ரி பதில் சொல்லாமல் இலையை மடித்து எழுந்தான்.

''நீ கேளுடா ரகுபதி.''

''அப்பா கேக்கருளே சொல்லேன் பத்ரி.''

பத்ரி வாசல் தொட்டியில் இலையைப்-போட்டுவிட்டு முற்றத்தில் கையை அலம்பிக்கொண்டு திண்ணையில் வந்து உட்கார்ந்தான். வெங்கடேசன் வெற்றிலைப் பெட்டியுடன் வந்து சேர்ந்து கொண்டார்.

''உடம்புக்கு மறுபடியும் ஏதாவது?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே மாமா... இன்ஸ்பெக்ஷனுக்கு வந்திருந்த ஆபீஸர் ஸ்கூல்ல இனிமே வாத்தியார்லாம் தங்கக் கூடாதுன்னு கண்டிஷனுச் சொல்லிட்டார். ஒரு வாரம் டயம் குடுத்திருக்கா....''

''அட அசமஞ்சம்... இதுக்கு இவ்வளவு கஷ்டப்படுவானேன்... என்னைக் கேட்டா நான் ஒரு எடம் இங்கேயே ஒழிச்சுத் தர மாட்டேனு பத்ரி?''

''ஏற்கனவே சாப்பாட்டுக்கே கடன் எழுதி எழுதியே நோட்டு தீர்ந்துபோச்சு... இதில ஜாகைக்கு வேற உங்க கிட்டயே எப்படி மாமா நான் கேப்பேன்?''

''என்னை நீ இன்னும் வேத்து மனுஷனுவே நெனைச்சுண்டிருக்கே...''

''நான் இங்க வந்துட்டா உங்களுக்கெல்லாம் சிரமம் ஜாஸ்தியாயிடும்.''

''அந்தக் கவலை எனக்கில்ல இருக்கணும்.''

## 5

பத்ரிநாராயணனுக்கு அந்த நினைவுகளின் பேரில் ஒரு அபரிமிதமான காதல் இருந்தது. நான்கு வருஷங்களுக்கு முன் இந்த மாதிரி சிகரெட் பிடித்துக் கொண்டு தூக்கம் விழித்துக்கொண்டு ஒரு பயத்துடனும், படபடப்புடனும் கவலையுடனும் பயணப்படுவோம் என்று எண்ணிக் கூடப் பார்த்ததில்லை. ஆனை யடிமங்கலமும் அதன் ரம்மிய அழகும், எல்லைக் காளியின் குங்குமப் பொட்டும் தான் நெடுநாள் சுவாசிக்கப் போகிற இடமென்று நினைத்திருந்தான். வெங்கடேச மாமாவின் வீட்டில் ஒரு சின்ன ட்ரங்குப் பெட்டியும், துணி உலர்த்துகிற சப்பாணிக் கயிறுமாய்க் குடிவந்தபோதே அந்த இடத்தில் தான் கடைசிவரை ஜீவனம் செய்ய நேருமென்று தோன்றிற்று.


அந்த முனைப்பில் கிடைத்த அந்தச் சின்ன பசையில் மனசு தானுய்ப் படிந்து அவர்களுடன் ஒட்டிக் கொண்டு விட்டது. ட்யூஷனுக்கு மாத்திரம் பள்ளிக் கூடத்தில் பெரிய மனசு பண்ணி ஒரு அறை ஒழித்துக் கொடுத்திருந்தார்கள். அங்கேவேலைமுடிந்ததும்ராத்



திரி சாப்பிட்டுவிட்டு ரகுபதியோடு காலாற நடந்து போய்விட்டுத் திரும்பியவுடன் வாசல் புறத்துக் கயிற்றுக் கட்டிலில் படுத்துக் கொண்டு, பக்கத்துக் கட்டிலில் வானம் பார்த்துப் படுத்திருக்கும் வெங்கடேச மாமாவோடு மணிக் கணக்காய் ஊர் வம்பையும், சுய புராணத்தையும் மூட்டை யவிழ்த்து விட்டுக் கொண்டே தூங்கிப் போவது கொஞ்சம் கொஞ்சமாய்ப் பழக்கப் பட்டுப் போனது.

சாப்பாட்டுக்கு மாத்திரம் வந்து சென்று கொண்டிருந்த நாட்களில் இல்லாத ஒரு புதுப் பரிச்சயம் இப் போது கிடைத்திருந்தது.

வெங்கடேசனின் மூன்று பெண்கள். அவனேடு பேசுகிறபோது தரையைப் பார்த்துப் பேசும் கல் யாணி, ராதா, உமா.



''பேசாம மண் தரைல நெடுகக் கண்ணுடியைப் பதிச்சுடலாமான்னு பாக்கறேன்'' என்ருன் ரகுபதி ஒரு நாள்.

''எதுக்குச் சொல்றே ரகுபதி?''

''இல்ல நீயும் சரி, என் தங்கைக் கழுதைகளும் சரி, ஒருத்தர் மூஞ்சை ஒருத்தர் பார்த்துப் பேசறதுக்கு சௌகரியமா யிருக்கும் பாரு....''

அன்றைக்கு வெங்கடேச மாமாவோடு சேர்ந்து எல்லோரும் சிரித்தார்கள்.

இடையிலிருந்த திரை கொஞ்சம் கொஞ்சமாய் விலகிஅவர்கள் அவனேடு சகஜமாய்ப் பழகுவதற்கு ஆறு மாதம் கூடப் பிடிக்கவில்லை. தை வந்தது. கூடவே கல்யாணிக்கு வரன் வந்தது.

குழந்தைகளுக்கு மலம் சரியாகப் போகாமல் மப்பியிருந்தால் இரண்டு ஸ்பூன் கடுகை நன்கு கருகவிட்டு நீர் விட்டுக் கொதிக்கவிட்டுப் பின் இதை வடிகட்டிப் புகட்டினுல் மலம் நன்கு போகும்.

-உஷாலக்ஷ்மி

''நீ எங்காத்துல காலே வச்ச முகூர்த்தம் தாண்டா பத்ரி முதப் பொண்ணுக்கு கல்யாணம் நிச்சயமாயிடும் போல இருக்கு... ராசியானவண்டா நீ...''என்று வெங்கடேச மாமா இவனைக் கட்டிப் பிடித்தபோது நிஜமாகவே பெருமையாய் இருந்தது.

''யாரு மாமா பையன்?''

''உங்கூருதான்.''

''பத்மனுபன்கோயிலா?''

''ஆமா... பெத்தவாதான் அங்க இருக்கா. பையன் மைசூர்ல ஏதோ எலக்ட்ரிக் கம்பெனில இருக்கானும். கைநிறையச் சம்பளம் வரது...''

''ராஜகோபாலனு மாமா?''

''உனக்கு அவனைத் தெரியுமாடா பத்ரி?''

''கேள்விப்பட்டிருக்கேன்... ஆனு அவா அப்பா அம்மா பணம் பிடுங்கியாச்சே மாமா. அழிச்சாட்டியம் பிடிச்சவாளாச்சே... நம்மால அவ்வளவு முடியுமான்னு பாத்தேளா?''

''எல்லாம் பேசியாச்சுடா. கொஞ்சம் கூடத்தான் எதிர்பார்க்கறு... ஆனு பையன் நல்ல உத்தியோகத்தில இருக்கான். கொஞ்சம் முன்னப் பின்ன போனுலும் முடிச்சுடலாம்னு இருக்கேன். வெள்ளிக் கிழமை பொண் பார்க்க வரேன்னு சொன்னு... பையன் எப்படி? அதைச் சொல்லு.''

''ராஜகோபாலனேட எனக்குப் பழக்கம் கெடையாது. சின்ன வயசுலேயே அவன் மாமாவோட மைசூருக்குப் போயிட்டான். அவனுக்குக் கல்யாணியைப் பிடிச்சு, அவளுக்கு அவனைப் பிடிச்சிருந்தா மத்த விஷயங்களைப் பத்தி நமக்கென்ன கவலை மாமா?''

ஆனுல் கவலை அலை அலையாக வந்து தாக்கிற்று. கல்யாணம் நிச்சயமாகிறபோது எதிர் பார்த்ததை விட ஏராளமாய்ச் செலவு பண்ண வேண்டி வந்தது. கௌரவத்திற்காக விட்டுக் கொடுக்க முடியாமல் நடத்தி வந்த ஹோட்டலை முதலியாருக்கு எழுதிக்கொடுத்துப் பணம் புரட்ட வேண்டி இருந்தது.

கல்யாணி ஒரு வழியாய்க் கட்டுச்சாதக் கூடையோடு புக்ககத்திற்குக் கிளம்பிப்போன போது வெங்கடேச மாமா பிழிந்து போட்ட சக்கை மாதிரி உணர்ந்தார். பூனுவிலிருந்து வந்திருந்த மூத்த பையன், 'நான் என்னப்பா செய்யறது?' என்று கையை விரித்து விட்டான். ரகுபதி உபயோகமற்றவனுய் நொடித்திருந்தான். பத்ரிக்கு மனசு ஆறுமல் வெந்து கொண்டிருந்தது. இத்தனை செய்த குடும்பத்துக்குத் தான் எப்படித் திருப்பிச் செய்யப் போகிறோம் என்று பிரமிப்பாய் இருந்தது. ஏதாவது உடனடியாகச் செய்ய வேண்டும் என்கிற துடிப்பு மாத்திரம் விடாமல் நெஞ்சை உறுத்திக் கொண்டிருந்தது. சொல்லி வைத்த மாதிரி சுப்பையா வாத்தியார் ஒரு வழி காண்பித்தார்.

''மெட்ராஸ்ல ஏதோ ஸ்கூல்ல வாத்தியார் உத்தியோகம் காலியா யிருக்குன்னு இந்தப் பேப்பர்ல வந்திருக்கு... நீ வேணுப் போட்டுப் பாரேன் பத்ரி...''

அப்போதுதான் தமிழ்ப் பேப்பரில் மற்ற வேலைகளுக்கான வாய்ப்புகள் விளம்பரமாய் வருவதே அவனுக்குத் தெரிந்தது. அந்த வாத்தியார் உத்தியோகத்துக்கு மட்டுமல்லாமல் இன்னும் கண்ணில் பட்ட இரண்டு மூன்று விளம்பரங்களுக்கும் சேர்த்து விண்ணப்பித்து வைத்தான். சரியாய் நாற்பத்திரண்டாவது நாள் சென்னையிலிருந்து அழைப்பு வந்தது இன்டர்வ்யூவுக்கு. கூப்பிட்டிருந்த டயர் கம்பெனி வியாபாரத்தில் அழுத்தமாய்க் கிளை பரப்பிக் கொண்டிருந்தது.

அந்தச் சின்ன ட்ரங்குப் பெட்டியைக் கீழே வைத்துவிட்டு வெங்கடேச மாமாவின் காலில் சாஷ்டாங்கமாய் விழுந்து கண்ணீர் பொங்க கதறியபோது அவர் அவனைத் தூக்கி நிறுத்தினுர்.

''ஏண்டா அழற அசடு... நல்ல வேலைக்குத்தானே போறே... ஜாக்கிரதையாப் போயிட்டு வா... லீவு கெடைச்சா எங்களையெல்லாம் வந்து பார்த்துண்டிரு... மறந்துடாதே...''

''எப்படி மாமா மறப்பேன்... மறக்கறதுக்குத்தான் வயிறு சம்மதிக்குமா? நான்

அங்கே போய் செட்டில் ஆனதும் எழுத றேன். நீங்களாம் அங்க வந்துடுங்கோ மாமா... சேந்து இருக்கலாம்.''

''தாரள மனசுடா உனக்கு... க்ஷேமமா யிரு...'' குரல் தழுதழுக்கச் சொன்னுள் ரகு பதியின் அம்மா. தெரு முனையில் வண்டி திரும்புகிற வரைக்கும் ராதாவும் உமாவும் கையை ஆட்டிக் கொண்டிருந்தார்கள்.

ரயிலடியில் துண்டு நனைய நனைய ரகுபதி கதறினுன். ரயில் புள்ளியாய் மறைகிற வரை, அவனும், அவன் புள்ளியாய் மறை கிறவரைக்கும் பத்ரியும் கையை வீசி விடை பெற்றது, அப்படியே மனதில் பதிந்து நிறைய ராத்திரிகள் அவனை எழுப்பி உட்கார்த்தி யிருக்கிறது.

## 6

சென்னை சம்பளம் தாராளமாய் இருந் தது. மனதுக்கு நிறையச் சந்தோஷமாய் இருந்தது. லகானை இழுத்துப் பிடித்து நடத்தினதில் மாதம் கொஞ்சம் பணம் மிச்சப்படுத்த முடிந்தது.

மாதக் கணக்கில் பாக்கி வைத்திருந்த பணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய் வெங் கடேசனுக்கு அனுப்பினுன். நிறைய கடி தங்கள் போட்டான். ஆனுல் பதிலுக்கு எப் பொழுதாவது நினைத்தபோது ஒரு கடிதம் வரும். கடிதம் நிறைய சோகமும் வரும்.

'ரொம்ப நெருக்கமாய்ப் போய் முதலி யாரிடமே ஹோட்டலை விற்று விட்டோம். அவர் பெரிய மனது பண்ணி இரண்டு அறை ஒழித்துக் கொடுத்திருக்கிருர். ஜீவனம் ரொம் பச் சிரமமாயிருக்கிறது...'

அந்தத் தபால் கார்டு எழுத்துக்களை அவன் படித்தபோது உதிர்ந்த கண்ணீர் கலைத்து விட்டது.

'பேசாமல் எல்லோரும் மெட்ராஸுக்குக் கிளம்பி வந்துடுங்கள்...' என்று அவன் எழு தின கடிதத்துக்குப் பதில் இல்லை. ஆனுல் விடியலின் சாம்பலிலும், அஸ்தமன ஆரஞ் சிலும், நள்ளிரவுக் கறுப்பிலும் சிந்தனை முழுக்க அந்தக் குடும்பம்தான். அவர்களுக்கு எந்த விதத்திலாவது உதவ வேண்டும் என்று மனது அலைந்தது.

கூட வேலை செய்கிற செல்லையா தான் சொன்னுன். ''ஏன் பத்ரி... அவரோட பொண்ணுகள்ள ஒருத்தியை நீ கல்யாணம் பண்ணிக்கலாமே... ஒரு பாரம் கொறையு மில்ல அவங்களுக்கு...''

சரேலென்று மனத்தில் அந்த எண்ணம் இறங்கி விட்டது. உடனே ரகுபதிக்குத் தனிப்பட்ட முறையில் ஒரு கடிதம் எழுதி னுன். நான்கு நாட்களில் வந்த பதில் அக்னி யைக் கொண்டு வந்து மடியில் கொட்டியது.

'அன்புள்ள பத்ரி,

உன் கடிதம் கண்டு வியப்படைந்தேன். உன் மனசில் இப்படி ஒரு தப்பான எண்ணம்



### தீபாவளி சுக்குக் களி

#### தேவையான பொருள்கள்

புழுங்கல் அரிசி 150 கிராம், உளுத்தம் பருப்பு 300 கிராம். வெந்தயம் 2 டீஸ்பூன், சுக்கு 50 கிராம், வெல்லம் (உருண்டை வெல்லம்) 500 கிராம். நல்லெண்ணெய் 500 மில்லி.

#### செய்முறை:

அரிசி, உளுந்து, வெந்தயம் இம்மூன்றை யும் ஊற வைக்கவும். வெல்லத்தைத் தட்டி வைத்துக் கொள்ளவும். சுக்கை தட்டிப் பொடி செய்து கொள்ளவும்.

ஊற வைத்த அரிசி, உளுந்து, வெந்தயம் மூன்றையும் ஆட்டுரலில் போட்டு நன்கு மசிய ஆட்ட வேண்டும். மசிந்ததும் பொடி செய்த சுக்கைப் போட்டு ஆட்டி சிறிது நேரம் கழித்துத் தட்டிய வெல்லத்தைப் போட்டு வெல்லக்கட்டி இல்லாமல் ஆட்ட வும். மாவு தண்ணீராக இருக்கும்.

ஆட்டிய மாவை ஒரு அகலமான வாணலி யில் ஊற்றி கிளறிக் கொண்டே இருக்க வேண்டும். 10 நிமிடம் கழித்து நல்லெண் ணெயை கொஞ்சம் கொஞ்சமாக ஊற்றிக் கிளறிக் கொண்டே இருக்கவேண்டும். அல்வா போல் எண்ணெய் கக்கி வாணலியில் ஒட்டாமல் பரவலாக திரட்டி ஆறினதும் துண்டாகவோ அல்லது ஸ்பூன் கொண்டோ எடுத்துச் சாப்பிடலாம். இதுவே 'தீபாவளி சுக்குக் களி' என்பதாகும்.

தீபாவளியன்று சாப்பிட்ட பலகாரம் ஜீரணம் ஆவதற்கென்றே இதை திருநெல் வேலிக்காரர்கள் செய்வார்கள். ஒரு மாத மானுலும் கெடாது. இது ஜீரண கோளா றையும், வாயு பிடிப்பையும் போக்கும் சிறந்த லேகியம் போல் ஆகும்.

—செல்வி கா. சாரதா, அரியலூர்.

எப்படி வந்தது? என் தங்கைகள் மூன்று பேருமே உன்னையும் ஒரு சகோதரனாய் நினைத்துப் பழகியிருக்கையில், உனக்கு இந்த மாதிரியான ஆசை எப்படி வர முடியும்? நாங்கள் ஏழைகளாயிருந்தாலும் கௌரவமானவர்கள் என்பதை நீ மறந்துவிட்டாயா? அப்பாவுக்கு இது விஷயம் தெரிந்தால் துடித்துப்போவார். நம்முடைய நட்பு நெருக்கமாய் இருந்த காரணத்தால் இந்த விஷயத்தை அப்பாவிடமோ மற்றவர்களிடமோ நான் பிரஸ்தாபிக்காமல் விடுகிறேன். என் மதிப்பிலிருந்து நீ மிகவும் சறுக்கிவிட்டாய். வருத்தப்படுகிறேன் — ரகுபதி.'

எத்தனை நாட்களுக்கு அந்தக் கடிதத்தைப் பார்த்துப் பார்த்து மேஜையில் முஷ்டிமோதி தலையில் படபடவென்று அடித்துக்கொண்டு தவித்துப் போனானென்று செல்லையாவிடம் கேட்டால் அவன் சொல்லுவான்.

**அழுக்கு, எண்ணெய்ப்பசை ஆகியவை படிந்துள்ள பாட்டிலை சுத்தம் செய்யவேண்டுமா? கொஞ்சம் மணலும் தண்ணீரும் கலந்து பாட்டிலுக்குள் போட்டு அரை மணி நேரம் கழித்துக் கழுவுங்கள். பாட்டில் பளிச்சென்று இருக்கும்.** -லட்சுமி சிவம்

'என்ன பத்ரி.. ஒன் ஃப்ரண்டு இப்படி அரைக் கிறுக்கா இருக்கான்... நீ என்னமோ எழுதின.. அதைத் தப்பாய்ப் புரிஞ்சுக்கிட்டு பேத்தியிருக்கானே... பேசாம அந்த லெட்டரைக் கிழிச்சுப் போட்டுட்டு அவங்களை யெல்லாம் மறந்துடு...''

முடியாமல் பத்ரி தத்தளித்தான். ரகுபதிக்கு இன்னும் விளக்கமாய் மன்னிப்புக் கேட்டு ஒரு கடிதமும், பதில் வராமல் இன்னொன்றும் அதற்குப் பதில் வராமல் மேலும் ஒன்றுமாய் எழுதி எழுதிச் சளைத்துப் போய் நெஞ்சுக்குள்ளேயே நொந்து நொந்து மறுகிப் போவதைத் தவிர வேறு வழியில்லாமல் போயிருந்தது.

கிட்டத்தட்ட ஒன்றரை வருடம் கழித்து ஒரு கல்யாணப் பத்திரிகை வந்தது.

ராதாவின் கல்யாணப் பத்திரிகை.

மாப்பிள்ளை கும்பகோணத்தில் பரிசாரகனும். மனசு வேதனைப் பட்டது. கல்யாணத்துக்குப் போகாமல் ஐநூறு ரூபாய்க்கு டிராஃப்டை மட்டும் அனுப்பினான். அப்புறம் மறுபடியும் தொடர்பு விட்டுப் போயிருக்கையில் மறுபடியும் இந்தக் கடிதம்.

பத்ரி சுற்று முற்றும் பார்த்தான். இன்னும் யாருக்கும் பொழுது விடியாமல் இருந்தது. வெளியில் விடிகாலைக் கருக்கல் ஒரே அந்தகாரமாய்த் தெரிந்தது. சட்டைப் பையைத் தொட்டு உணர்ந்து அந்தக் கடிதத்தை எடுத்தான். பிரிக்கும்போதே கண்ணில் நீர் சுரந்தது அவனுக்கு.

அன்புள்ள பத்ரி,

நீ எங்களை யெல்லாம் மறந்திருக்க மாட்டாய் என்று நினைக்கிறேன். போன வருடம் அப்பா திடீரென்று உடம்புக்கு வந்து செத்துப் போய்விட்டார்....'

சரேலென்று மறுபடியும் நடு நெஞ்சில் ஈட்டியைச் செருகி எடுத்த மாதிரி இருந்தது. அவர் இறந்து போனதை உடனுக்குடன் தெரிவிக்கக் கூடாத அளவுக்கா ரகுபதிக்குக் கோபம் இருக்க வேண்டும்.

....அப்புறம் எங்கள் குடும்பம் இன்னும் சீரழிந்து இப்போது தெருவுக்கே வந்து விட்டது. பட்ட காலிலே படும் என்கிற மாதிரி அம்மாவும் படுத்த படுக்கையாய் எந்த நிமிஷமும் எங்களை விட்டு விட்டுப் போய் விடத் தயாராயிருக்கிறாள். கல்யாணிக்கும் ராதாவுக்கும் கல்யாணம் செய்து கொடுத்த அப்பா உமாவுக்கு ஒரு வழி செய்யாமலே போய் விட்டார். அவளை யார் கையிலாவது பிடித்துக் கொடுத்தால்தான் அம்மா நிம்மதியாகச் சாக முடியும். எனக்கு உன்னைத் தவிர வேறு யாரிடம் போய்க் கேட்பதென்று தெரியவில்லை. நீ பழைசை யெல்லாம் மறந்துவிட்டு பெரிய மனது வைத்து உமாவைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். அப்பாவுக்காக இதை நீ கண்டிப்பாய் செய்வாயென்று நம்புகிறேன்.

அன்புடன்
ரகுபதி....

இந்த வேதனை ஜ்வாலையை நினைவுகள் விசிறி விசிறி பெரிய நெருப்பாய்க் கிளப்பி தகிக்கு முன் ஒரு தீர்வு காண வேண்டுமென்று மட்டும் பத்ரிக்குப் புரிந்தது. இதற்குத் தீர்வு சென்னையில் இல்லை. ஆனையடிமங்கலத்தில் இருக்கிறது என்பதும் தீர்மானமாய்த் தெரிந்தது.

ரயில் வேகம் குறைந்து கொண்டிருந்தது.

பத்ரிக்கு அதிர்ச்சியாய் இருந்தது. கண்ணில் செந்நீர் தளும்பும் போலிருந்தது. சிதிலமாகிப் போய்க் கலைக்கப்பட்ட சிலந்திக் கூடு மாதிரி அந்த வீடே தொய்ந்து கிடப்பதைக் காண்கையில் பழசெல்லாம் தொண்டையில் அழுகையாய்ப் புரையேறிற்று.

அவன் படியேறித் திண்ணையைத் தாண்டினான்,

''பத்ரி... வந்துட்டியா பத்ரி... நீ கண்டிப்பா வருவேன்னு எனக்குத் தெரியும்.''

ரகுபதியா அது? அப்பாவைப் போலவே சுருதி சேராத இரட்டைக் குரல். அவனுடைய உருண்ட தேகம் எப்படி இப்படி உலேகாய்ந்து உருவிழந்து போனது?

''ரகுபதி... பத்ரி வந்திருக்கேண்டா.'' என்கையில் குரல் குழறிற்று. சேர்த்து கொண்டபோது கண்ணீர் பொங்கிற்று.

''வந்துட்டேளா பத்ரி?''

சரேலென நிமிர்ந்தான்.

கல்யாணி! இடுப்பில் சின்னக் குழந்தையுடன். இவள் எதற்காக இங்கே வந்திருக்கிருள்? கடைசி நேரத்திலே அம்மாவுடன் இருப்பதற்காகவா?

''எப்படி இருக்கே கல்யாணி?''

அவளே அந்தக் கேள்வி கேட்டிருக்கக்கூடாது. உடல் மெலிந்து மார் சுருங்கி முகம் படிந்து ஈர்க்குச்சிக்குப் புடவை சுற்றியிருக்கிற அவளேப் பார்த்துக் கேட்டிருக்கக் கூடாத கேள்வி என்று அவனுக்குப் புரியு முன் அவள் தொண்டையில் திமிருகிற விம்மல்களே அடக்கிக் கொண்டு உள்ளே திரும்பி ஓடினுள்.

''என்ன விஷயம் ரகுபதி? ஏன் அவ பேச மாட்டேங்கரு?''

''வாழாவெட்டியா வந்துட்டவளுக்கு மத்தவா கிட்டப் பேசறதுக்குக் கூச்சமாத் தானே இருக்கும் பத்ரி....''

''ரகுபதி...'' அவன் தோளேப் பிடித்து உலுக்கினுன் பத்ரி. ''என்னடா சொல்றே?''

''பணம் பணம்னு ரத்தத்தை யெல்லாம் உறிஞ்சுட்டுத் தூன்னு துப்பிட்டா பத்ரி அவா வீட்ல. அடி மேல அடி பட்டதுன்னு எழுதியிருந்தேனே... இதுவும் ஒரு அடி... ஒண்ணரை வருஷமாச்சு அவ வந்து... அந்தத் துக்கத்திலதான் அப்பா போயிட்டார்.''

''எனக்குக் கல்யாணியைப் பத்தி எழுதவேயில்லேயே பத்ரி.''

''எழுதிப் போடறதுக்கு நல்ல சமாச்சாரமா பத்ரி... எத்தனே துக்கத்தைத்தான் எழுதறது சொல்லு... பத்ரி... டேய் பத்ரி... என்னே மன்னிச்சிட்டியாடா. நான் அந்த மாதிரி கிறுக்குத்தனமா லெட்டர்எழுதினதை மறந்துட்டியாடா?''

பதில் சொன்னுல் மேலும் துக்கம் கிளர்ந்து போகும்.

''அம்மா எங்கே?''

''உள்ளதான் இருக்கா.''

ரகுபதியின் அம்மா, வெங்கடேச மாமாவின் அருமை மனேவி உள்ளே 'இருந்தாள்', படுக்கையில் ஒரு போர்வைக் கிழிசலினூடே எலும்புகளேப் போர்த்தின தோல் தெரிந்தது.

பத்ரிக்கு உடம்பெல்லாம் பதறியது. மனசில் விரிசல் விரிசலாய் எத்தனே வெடிப்புகள் என்று வருந்திற்று.

''அம்மா, பத்ரி வந்திருக்கேம்மா...'' என்று அவளருகே அமர்ந்து உடம்பை சேகரித்து அணேத்துக் கொண்டான்.

''பத்ரி... என் பொண்ணுக்கு ஒரு வழி காமிப்பா...''

குரல் மிகத் தேய்ந்து நிறையக் காற்றுடன் தொய்வாய் வந்தது.

''ராதா எப்படி இருக்கா ரகுபதி?''


''ஏதோ அவ வயித்துக்குச் சம்பாதிச்சுப் போடறுன் மாப்பிள்ளே...''

''உமா எங்கே?''

''கோயிலுக்கு...''

''உங்களே இந்தக்கதிக்குக் கொண்டுவந்த சாமிக்கு நன்றி சொல்லப் போயிருக்காளாக்கும்...''

''பத்ரிக்குச் சாப்பிட ஏதாவது கொடுத்தியா?''




கட்டிலிலிருந்து குரல் மறுபடியும் காற்ருய் ரகுபதியை நோக்கி வந்தது.

பத்ரி எழுந்தான்.

''ரகுபதி ஆத்தங்கரை வரைக்கும் போய் விட்டு வரலாம் வாயேன்... நீ நெறைய விஷயம் எனக்குச் சொல்றதுக்குப் பாக்கியிருக்கு...''

ஆற்றுத் தோப்பில் சலனமே இல்லே. அவ்வளவு மௌனம். அமானுஷ்யமான மௌனம்.

''என்ன சொல்றே பத்ரி?'' என்று ரகுபதியின் மௌனத்தை உடைத்துக் கேட்டான். குரலில் திகிலும் வியப்பும் மாறி மாறித் தெரிந்தன.

''புரியும்படியாகத்தானே சொன்னேன்.''

''இது நடக்கிற காரியமா பத்ரி?''

''ஏன் நடக்கக் கூடாது?''

''அவ்வளவு பெரிய சுமையை உன் தலேல ஏத்தறதுக்கு எனக்கு மனசு வராது பத்ரி.''

''கல்யாணியை ஒரு சுமையா நான் நெனேக்கலே... நிஜமாப் பார்த்தா இதுதான் நான் வெங்கடேச மாமாவுக்குச் செய்யற உதவியாயிருக்கும்.''

''அப்ப உமா?''

''உமாவைப் பத்தின கவலேயை நீ விடு... அவ சின்னப் பொண்ணு... அழகு இருக்கு... வயசிருக்கு. அவளே ஒருத்தனுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கறதுல எந்தப் பிரச்னேயும் இருக்கப் போறதில்லே. அவளுக்கு மனசுக்குப் பிடிச்ச ஒரு மாப்பிள்ளேயைப் பாத்து கல்யாணம் பண்ணிக் கொடுக்க வேண்டியது என் பொறுப்பு.... செலவு பண்ண இப்ப என்கிட்டப் பணம் இருக்கு... உமாவுக்கு ஒரு வழி தேடறது கஷ்டமில்லே. கல்யாணியைப் பத்தி நெனேச்சுப் பாரு.... இனிமே காலா காலத்துக்கும் அவ உங்க வீட்ல ஒரு பாரமாவே இருக்கறதுல அவ மனசு எப்படிக் கஷ்டப்படும்னு யோசிச்சுப் பாரு... கூடப் பொறந்த தங்கைகள் நல்ல கதில இருக்கறச்சேதான் மட்டும் சுகமில்லாம இருக்கறதுக்கு அவளுக்கு எவ்வளவு வேதனேயாயிருக்கும்? அவ குழந்தையோட எதிர்காலத்தைப் பத்தி நினேச்சுப் பாத்தியா?''

'ஆனு இது எப்படிச் சரியாகும்? ஏற்கனவே கல்யாணமான ஒரு பொண்ணே நீ?''

'நெஜமாகவே அவளுக்கு அதுதான் ரகுபதி நிம்மதியைத் தரும். இஷ்டப்பட்டா நீயும் அம்மாவும் கூட என் கூட வந்து இருக்கலாம்.''

''கல்யாணி இதுக்கு ஒத்துப்பாளா பத்ரி?''

''அவ கிட்ட எடுத்துச் சொல்லிச் சம்மதிக்க வைக்கறது நம்ம பொறுப்பு...''

**வா**னத்தில் தேய்ந்த நிலவு சோம்பலாய் ஏறிக் கொண்டிருந்தது. நுரை மேகங்கள் அடர்த்தியாய் அங்கங்கே தீவு சேர்ந்திருந்தன. இருட்டினிடையே பொத்தல்களிலெல்லாம் சர்க்கரை மாதிரி வெளிச்சம் சரிந்து கொண்டிருந்தது.

கல்யாணி மண் தரையில் அமர்ந்திருந்தாள். மடியில் குழந்தை குப்புறப் படுத்திருந்தது. இடது தொடையை மட்டும் மெலிதாய் உதறிக் கொண்டு 'ஜோ ஜோ' என்று தூங்கப் பண்ணிக் கொண்டிருந்தாள். முகத்தில் புரிபடாத உணர்ச்சிக் குழப்பங்கள்.

நாலடி இடைவெளி விட்டுக் கயிற்றுக் கட்டிலின் குழிவில் பத்ரி நாராயணன். அவனேடு தொடை ஒட்டி ரகுபதி. அவனுக்குப் பக்கத்தில் உமா. கவனம் பூராவும் கல்யாணியின் முகத்தில்.

''எனக்கு என்னமோ இது சரிப்பட்டு வரும்னு தோணலே...'' என்று கல்யாணி மெலிதாய் முணு முணுத்தாள்.

''ஏன் கல்யாணி?'' — ரகுபதிதான் கேட்டான்.

''ஏற்கெனவே வேறெருத்தர் கட்டினதாலி கழுத்தில இருக்கறச்சே இன்னெருத்தர் கூட நான் எப்படிண்ணு போய் இருக்க முடியும்?''





இன்றைய
பொழுது
பொங்கும்
மகிழ்வைக் கூட்டுமே
ம:.பத்லால்
துணிகள்
மட்டுமே
ம:.பத்லால் துணிமணிகள்
மென்மையானவை. உடலுக்கு இனிய
உணர்வைத் தருபவை. பாலியெஸ்டர்,
பாலியெஸ்டர் ப்ளெண்ட்ஸ், மற்றும்
காட்டன் துணிகளில் நித்தம்
நித்தம் புத்தம் புதிய படைப்புகள்.
அவற்றின் வண்ணங்கள்,
நெசவுகள், மற்றும் வடிவமைப்புகள்
அனைத்தும் நாளும் பொழுதும்
நற்பொலிவூட்டி உங்கள் அழகுக்கு
அழகூட்டுகின்றன.
ம:.பத்லால்
:.பேப்ரிக்ஸ்

''கழுத்தில தாலி இருக்கிறது மட்டும் தான் தாம்பத்யம்னு நெனேக்கிறயா கல்யாணி?''

பத்ரிநாராயணனின் குரல் குறுக்கில் வந்ததும் கல்யாணி நிமிர்ந்து பார்த்தாள்.

''தாம்பத்யத்தைத் தாலி கட்டினவன் கிட்டத்தான் அனுபவிக்கணும்கிறது நம்ம சாஸ்திரமில்லேயா?''

''தாலி கட்டினவன் மூஞ்சைத் திரும்பிண்டு உன்னேடவாழத் தயாராயில்லேன்னு சொல்றதுக்கு அந்த சாஸ்திரம் என்ன சொல்றதாம்?''

''விதண்டா வாதம் பண்ணு நான் என்ன பதில் சொல்றது?''

''விவேகமாத்தான் பேசறேன் கல்யாணி''

''சாஸ்திரத்தை விட்டுட்டாக் கூட சட்டம் அதுக்கு ஒத்துக்காதே... ஒரே பொண்ணுக்கு ரெண்டு பேர், தாலி கட்டினுச் செல்லாதே...''

''ஒத்துக்கறேன். சட்டத்துக்கிட்டேயும் சமூகத்துக்கிட்டேயும் நாம கையேந்திண்டு நிக்கப் போறதில்ல... நாம பாட்டுக்குச் சந்தோஷமா வாழ்ந்துட்டுப் போறேம்

''அதெப்படி நீ இன்னொருத்தர் கூட வாழலாம்னு அவர் கேஸ் போட்டாக்க?''

''கேஸ் போடற அளவுக்கு அவனுக்கு யோக்கியதை இருக்கா கல்யாணி? பொண்டாட்டியை வச்சுக் காப்பாத்தத் துப்பில்லாதவன் சொந்தம் கொண்டாடிண்டு மட்டும் வந்துடுவானு? சரி அப்படியேதான் கேஸ் போடட்டும். கோர்ட்ல பார்த்துப்போம்... என்னிக்கோ அவன் போடப் போற கேஸுக்காக இப்ப நாம ஏன் பயந்துக்கணும்? இல்லே, இப்ப நீ ஒரு வார்த்தை சொல்லு, அவனே நீ டைவர்ஸ் பண்றதுக்கு நானே ஏற்பாடு பண்றேன்...''

''கேக்கறதுக்கு நன்னுத்தான் இருக்கு... ஆனு....''

''கல்யாணிக்கா... எனக்கு பத்ரிசொல்றதுதான் சரின்னு படறது...''

''உமா, நீகூடவா அப்படிச் சொல்றே?''

''ஆமாம் கல்யாணிக்கா.. ஒரு பொண்ணுக்குச் சரியான பாதுகாப்பு கொடுக்கறதுக்கு ஒரு ஆம்பிளேத் துணே வேணும்... பத்ரி நாராயணனே விட உனக்கு வேற நல்ல துணே கெடைக்காது...''

''சரின்னு சொல்லு கல்யாணி...'' என்முன் ரகுபதி.

''சரின்னு சொல்லு கல்யாணி...'' என்ருள் உமா.

''சரின்னு சொல்லு கல்யாணி...'' என்ருன் பத்ரிநாராயணன்.

**"ப**த்ரி... 'உங்க வீட்டுக்கு நான் கடன்காரனுயிட்டேன்னு சொல்லிண்டே எங்களே யெல்லாம் உனக்குக் கடன்பட வெச்சிட்டேடா..எந்தஜன்மாவிலதீர்க்கப்போறேன்னு தெரியலேடா பத்ரி...''

கம்பிகளுக்கு வெளியே ரகுபதியின் முகம் சிவந்து நனேந்தது. கல்யாணி பத்ரி நாராயணனுக்கு அடுத்த இருக்கையில் உட்கார்ந்து சலேந்துபோன சந்தோஷம் முகத்தில் கொஞ்சமாய் இழை பின்னியிருக்க, மடியில் அழுகிற குழந்தைக்கு ஜன்னல் வழியே வேடிக்கை காட்டிக் கொண்டிருந்தாள். உமா கம்பியில் ஒரு கை வைத்துப் பிடித்து நின்றிருந்தாள்.

''ட்ரெயின் மெட்ராஸ் எப்பப் போய்ச் சேரும்?''

''உன் கவலே எனக்குப் புரியறது உமா... நாளேச்கு விடியக்காத்தால மெட்ருஸ் போய்ச் சேர்ந்ததும் ஸ்டேஷன்லேருந்து உனக்கு

### சென்ட்



சென்ட் வாங்கினுல், எல்லோரும் முகர்ந்து பார்த்து வாங்கி விடுகிறேம். இது தவருனது.

கொஞ்சம் எடுத்துத் தடவிப் பார்த்து அதில் உள்ள ஆல்கஹால் சம்பந்தப்பட்ட ரசாயன பொருள்கள் ஆவியான பின்னரே அதன் உண்மையான மணம் தெரியுமாதலால் பின்னரேவாங்க வேண்டும்.

—லட்சுமி நட்ராஜன்

வரன் பார்க்க ஆரம்பிச்சுடுவேன்... ஒரே மாசம் டயம் கொடு... மெட்ருஸ்ல உன் கல்யாணம் ஜாம் ஜாம்னு நடக்கும்.''

கணகணவென்று மணியடித்தது.

''அம்மாவை ஜாக்கிரதையாப் பார்த்துக்கோ ரகுபதி... நான் போனவுடனே காரியத்தில இறங்கிடறேன்...''

குப்பென்று புகையைக் கக்கிவிட்டு இன்ஜின் வலியோடு ரயிலே இழுத்தது.

கொஞ்சம் கொஞ்சமாக வேகம் பிடித்து ரயில் புள்ளியாகிற வரை இவர்களும், இவர்கள் புள்ளியாகிறவரை அவர்களும் கையை வீசி வீசிப் பிரிந்தார்கள்.

# அக்னிப்பூக்கள்

## குறுநாவல்

## எஸ். கனகவல்லி சாரங்கபாணி


'**ஐ**ந்து பெண் பெற்ருல்அரசனும் ஆண்டியாவான்' என்று சொன்னது யார்? வந்து பார்த்துச் சொல்லுங்கள், எங்கள் திருத் தகப்பனுரை! ஏழு பெண்களைப் பெற்றிருக்கிருக்கும் அவர்! கொசுருக இரண்டு பிள்ளைகள் வேறு! ஒன்பது குழந்தைகளைப் பெற்ற ஆசுவாசத்திற்காக வாசல் திண்ணையில் அறுபது நாழியும் பன்னீர்ப் புகையிலை ணக்கும் வாயும், கலைத்துப் போட்ட சீட்டுக் கட்டும் (ஜமா சேராவிட்டால் ஒண்டியாயும் ஆடுவார்) கழுத்து ஒசந்த செம்பில் தண்ணீரும் வைத்துக் கொண்டு, திண்டுத் தலையணையில் சாய்ந்தபடி வெற்றிலைப் புகையிலை-யோடு ஊர் வம்பைக் குதப்புவார். ஏழு பெண்களைப் பெற்ற விசாரமே இன்றி! எதற்கு விசாரம்? ஐந்து பெண் பெற்றெடுத்துக் கல்யாணம் கார்த்தி என்று சீர்செய்தால் அரசன் ஆண்டியாய்ப் போவான். இவர் ஏழு பெண்களைப் பெற்றெடுத்திருந்தும் ஏழு பெண்களும் வேலைக்குப் போய்ச் சம்பாதித்துக் கொண்டு வந்து கொட்டும் போது, ஒரு பெண்ணுக்குக் கூடக் கல்யாணம் செய்ய வேண்டும் என்ற பிரக்ஞையே இல்லாதபோது 'ராஜ போஜனம்' என்ன, சக்கரவர்த்தியின் ஆடம்பரம் செய்யலாமே அவர்!

எதிலிருந்து ஆரம்பிக்க....?

அம்மாவின் புடவைக் கிழிசல் தாவணியில் நான் இருந்த காலத்திலிருந்து ஆரம்பிக்கவா?

இருபத்தி மூணு வயசு பிரேமாதான் முதல் பெண். அம்மா அவளுக்குக் கீழ்த் தொடர்ச்சியாக தம்பி தங்கைகளை வழங்கியதன் விளைவாக எட்டு வகுப்போடு பள்ளிக்கூடப் படிப்பு நிறுத்தப்பட்டவள். 'பொட்டைக் குட்டிக்குப் படிப்பு எதற்கு? ஆச்சு, பதிமூணு வயசுலே திரண்டாச்சு. நல்ல எடமாப் பார்த்துக் கல்யாணம் பண்ண வேண்டியதுதான்' என்ற அப்பாவின் வார்த்தைகள் அவர் துப்பிய புகையிலையோடு சமாப்தி ஆனதை உணராமல் தன் இருபத்தி மூன்ருவது வயது வரை 'கல்யாண'க் கற்பனையோடு தன் தம்பி தங்கைகளைக் கவனித்தாள்.

காவேரிக் கரையில் இருந்த கிராமத்துப் பண்ணையின் வலதுகையாகக் காரியஸ்தராக அப்பா விளங்கிஞர். பண்ணையாரின் பெரிய கரும்பு, கடலை, நெல் வயல் விவரங்கள், மா, பலா,




13 புள்ளி 7ல் சந்துப் புள்ளி.

தென்னை, வாழைக் கொல்லைகள், வேறு பல பரந்த ஸ்தாவர, ஜங்கமச் சொத்துக்களுக்கு, ஆள் செலவு, உரம், முதலிய கணக்கு எழுதும் நேரம் போக பண்ணையாரோடு அவர் வீட்டுத் திண்ணையில் அவருடன் சீட்டாடிக் கொண்டு வெற்றிலை, சீவலை மென்று கொண்டு, ஊரில் உள்ள எல்லோருடைய வீட்டு உள் விவகாரங்களையும் பண்ணை

யாருக்கு அறிவித்துக் கொண்டு சுக போகமாக இருந்தார், அப்பா. பண்ணை யாரிடம் வேலை பார்த்ததால் பண்ணை யாரின் தோரணையோடு வீட்டில் எங்களை மிரட்டுவார். அம்மாவிற்கு அப்பாவைக் கண்டாலே பக்தி பாசம். நளாயினிதான்! 'இத்தனை பெண் குழந்தைகள் இருக்கிறதே, நல்லதாய் மாற்றுத் துணி இல்லையே' என்று ஒரு வார்த்தை கேட்க மாட்டாள். பெண் குழந்தைகள் ஒழுங்காய்ப் பள்ளிக்குப் போய் வருகையில் ஆண் பிள்ளைகள் இருவரும் கோலி, கிட்டுப்புள் ஆடி, பொறுக்கிகளாய் வளர்வதையும் கண்டிக்க மாட்டாள்.

அக்கா, வீட்டுச் சமையல் வேலைகள் முடித்து, (பள்ளிப் படிப்பை முடித்திருந்த நான் பக்கத்து ஊரில் இன்ஸ்டிடியூட்டிற்கு டைப் அடிக்கப் போகும் நேரம் தவிர, மற்ற நேரங்களில் அக்காவுக்கு உதவுவேன்) குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பி, பெரும்பாலும் கர்ப்பிணியாகவோ, கைக்குழந்தைக்காரியாகவோ இருக்கும் அம்மாவின் தேவைகளையும் கவனித்த நேரம் போக பஞ்சாயத்து போர்டு தையல் மெஷினில் கிராம சேவிகா மூலம் தையல் கற்றுக் கொண்டாள். பண்ணை யாரின் மனைவிதான் இதற்கு வழி செய்தாள். நன்றிக் கடனாக அக்கா, மாமிக்கு அவருடைய ஒன்பது கஜம் புடவை, ரவிக்கையைத் தோய்த்து மடியாக உயரக் கொடியில் உலர்த்தி விட்டு வருவாள் தினமும். நான் மட்டும் என்ன, டைப்ரைட்டிங் இன்ஸ்டிட்யூட் ஓனரின் வீட்டுப் பற்றுத் தேய்த்துக் கொடுத்து விட்டு பணம் கட்டாமல்தான் டைப் அடித்தேன். பண்ணையார் தருகிற சம்பளம், எங்களுக்கு வேளைக்குத் தண்ணி மோரும் சோறும் போடத்தான் போதும். அப்பாவுக்கு மட்டும் வதக்கலும் பருப்புக் குழம்பும், மணக்க மணக்க நெய்யும். மீதி இருந்தால் ஆம்பிள்ளைப் பிள்ளைகளுக்கு. சம்பளம் கட்டாமல் பள்ளிக்கூடப் படிப்பு, புஸ்தகம், நோட்டுக்குப் பலரிடம் கெஞ்சல். இப்படித்தான் வளர்ந்தோம்.


புள்ளிகளற்ற கோலம். K.P. பரமேஸ்வரி

அக்கா தினமும் ஸ்வாமி விளக்கேற்றி நமஸ்கரிக்கையில் தற்போதைய கடைசித் தங்கையான சின்னியை ''அக்காவுக்குச் சீக்கிரம் கல்யாணம் ஆகணும்னு வேண்டிண்டு சேவிடி'' என்னும்போது எனக்கு அக்காவின் மேல் அனுதாபம் பெருகும். அவளை விட மூன்று வயது இளையவளான என் மனசில் கல்யாண ஆசை ஏற்பட்டிருக்கும்போது அவள் எவ்வளவு தாபப் படுவாள், பாவம்!

அக்கா, தையல் முழுக்கக் கற்றுக் கொண்டு, ஒரு இரண்டாந்தர தையல் மிஷினை வாங்கிப் போட்டுக் கொண்டு வீட்டில் தைக்க ஆரம்பித்து விட்டாள். ஆனால் நன்றிக் கடன் - புடவை தோய்க்கும் உத்தியோகம் மட்டும் தொடர்ந்தது. தொடர்ந்ததன் விளைவு—பண்ணையாரின் தங்கை மகன் — ரவி — அக்காவைப் பார்த்துக் காதல் கொண்டான். கல்லூரி விடுமுறையில் வந்தவன் அக்காவுக்குக் காதல் பாடம் கற்பிக்க, பண்ணையாரின் தோப்புக்களைத் தேர்ந்தெடுத்தான்.

அந்தஸ்து பேதம்! — காதல் வயப்பட்ட — கல்யாண தாபம் கொண்ட அக்காவின் மனத்தில் உறைக்கவில்லை. அக்காவின் காதல் விவகாரம் புரிந்த போது அக்காவை எச்சரிக்க நினைத்த நான், 'ஒருவேளை ரவியின் காதல் கைகூடினால், பண்ணையாரின் தங்கைக்கு மருமகளானால், நாங்கள் அந்தஸ்தில் உயர்வோம்' என்று பேராசைப்பட்டேன். பண்ணையாரின் இரு பெண்களும், மகனும் பக்கத்து டவுனுக்கு, நாங்கள் படித்துவந்த பள்ளிக்கூடத்திற்கு மெத்தை தைத்த, டயர் சக்கரம்

கொண்ட வில்வண்டியில் பள்ளிக்கூடம் வருகையில்... வண்டியில் இடமிருந்தாலும் எங்களை ஏற்றிக் கொள்ள மாட்டார்கள்... நாங்கள் வண்டியின் பின்னுல் ஓடிப்போவோம். சில சமயம் சின்னக் கற்களைப் பொறுக்கி வைத்திருந்து ''நாய் மாதிரி இரைக்க இரைக்க ஏன் எங்க வண்டி பின்னுல் ஓடிவரீங்கடிபட்டுச் சிறுக்கியளா'' என்று கல்லை வீசுவார்கள். அந்த ரணம் என் மனசில் பதிந்து அந்த வில் வண்டியில் பயணம் செய்யணும் என்ற ஆவலைக் கிளப்பி யிருந்தது. 'பண்ணை யாருக்குச் சம அந்தஸ்து ஏற்பட்டால் அவருடைய வில் வண்டியில் ஏறிப் பயணம் செய்யலாம்' என்ற அற்ப சந்தோஷம் ஏற்பட்டது எனக்கு.

அக்கா விவேகி. ரவி தோப்பிலும், கொல்லையிலும் அக்காவின் அணைப்பை நாடியபோது, ''கல்யாணம் செய்த பிறகுதான்!'' என்று அடித்துச் சொல்லி யிருக்கிருள். ''கல்யாணமா? உன்னையா? என்று அதிரச் சிரித்த ரவி, ''உங்கள் பண்ணையாரின் பெரிய பெண் ராது தான் எனக்குப் பெண்டாட்டினு எப்போதோ நிச்சயமாயிடுத்து. ஜஸ்ட் லைக் தட்... ஏதோ சுகம் கொடுப்போம் நமக்கும் கிராமத்துல போது போகும் என்று ஏதோ பழகினேன்!'' என்று வெட்டிக் கொண்டான்.

அன்று முழுக்க அக்கா அழுதாள். ''கல்யாண ஏக்கமாம்! ஆம்பிளைக்கு ஏங்கறேனும். படவா, என்ன பேச்சுப் பேசினுன்... என் உடம்பு எரியறது, ஆத்திரத்திலே....'' என்று ஆற்றில் மூழ்கிக் குளித்தாள்.

''நல்ல வேளையாய் நான் ஏமாறலை! நீ ஏமாந்து போயிடாதே எவன் கிட்ட யாவது. நாம்தான் நம்மைக் காபந்து பண்ணிக்கணும்! அக்னிப் பூவா இருந்து கெட்ட எண்ணத்தோட நெருங்கினுல் நெருங்க விடாமச் சுட்டுடணும்! நம்மைச் சுட்டுக்கக் கூடாது'' என்றெல்லாம் என்னிடம் புலம்பினுள்.

அதன் பிறகுகூட அக்காவிடம் துளியூண்டு நம்பிக்கை இருந்தது. மாவுக்கேற்ற பணியாரம் என்பது போல் தங்கள் சக்திக்கேற்ப மாப்பிள்ளை பார்த்து மணம் முடிப்பார் என்று. சின்னு அக்காவுக்காக ஸ்வாமியை நமஸ்கரித்துக் கொண்டுதான் இருந்தாள். அக்காவுக்குக் கல்யாணம் ஆகணும் என்ற வேண்டுதலுடன் அத்திம்பேர் தனக்கு நிறைய சாக்லேட் வாங்கித் தரணும் என்றும் வேண்டிக் கொண்டாள்.

அன்று, நாங்கள் எல்லோரும் படுத்துக்கொண்ட பின், அப்பாவும், அம்மாவும் (இத்தனை குழந்தைகள் பிறந்த பின்னும், மூன்று பெண்கள் கல்யாண வயசிலும், இன்னும் இரண்டு பெரிய வளாகி விடுகிற பக்குவத்திலும் இருக்கும்போதும் — அப்பா அம்மா தனியறைப் படுக்கைதான்) பேசிக்கொள்வது காதில் விழுந்தது.

---

உடைந்த கண்ணடி பீங்கான் ஒட்டும்போது கொஞ்சம் சுண்ணும்பும் கொஞ்சம் அஸ்காவும் கலந்து ஒட்டினுல் நன்கு பிடித்துக்கொள்ளும். உடனேயே செய்யவேண்டும்.

-பொன்னம்மாள்

---

'நம்ம பிரேமாவுக்கு ஒரு வரன் இருக்காம். கோடியாத்து பாட்டி சொல்ரு! குதிர் போல வளர்ந்துண்டே போருள். இன்னும் ரெண்டு பொண் கல்யாணத்துக்குத் தயாரா யிருக்கு. பொண்ணும் கறிகாயும் முத்திப் போனுல் விலை போகாது. சுருக்க பிரேமாவுக்கு ஒரு கல்யாணம் பண்ணிடு'ன்னு நச்சரிக்கிருள் பாட்டி. பண்ணையார்கிட்ட கொஞ்சம் கடன் வாங்குங்கோ!'

''போடி பைத்தியமே! எங்கேருந்துடீ கல்யாணம் பண்றது? வேளைக்குச் சாப்பாடே சிரமமா யிருக்கு. அறுத்த விரலுக்குச் சுண்ணும்பு தராத மனுஷன் அந்தப் பண்ணையார். நானும் வேலை பார்க்க ஆரம்பிச்ச அன்னிலேந்து அதே எட்டுக் கலம் நெல்லும் இருபது ரூபாய் பணமும்தான் தரார்! இப்போ என்ன கல்யாணம்? பாட்டி கேட்டா ஜாதகத்துல ஏதோ தோஷம் இருக்குன்னு சொல்லிடு... சரி, சரி, விளக்கை அமர்த்தி ஓரமாய் வச்சிட்டுப் படு'' என்று முடிவாய்ச் சொன்னுர். அப்பா சொன்னதே வேத வாக்கு என்றுஅம்மா

மேற்கொண்டு பேசாமல் படுத்துக் கொண்டு விட்டாள்.

என்னைப் போலவே பிரேமாவும் விழித்திருக்கிறாள் என்பது ஓசை எழாமல் அவள அழுவதைக் காட்டிக்-கொடுத்த முதுகின் எழும்பல் மூலம் தெரிந்தது. நான் மனசுக்குள் ஆத்திரப்பட்டேன். வேறு விதி! நான் டைப் பாஸ் செய்துவிட்டு வீட்டில் கிடக்கிறேன். அடுத்தவள் எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்து வீட்டில் அடைந்து கிடக்கிறாள். பிரேமா தையல் மெஷினுடன் உழல்கிறாள். நாங்கள் இருவரும் வேலைக்கு அப்ளிகேஷன் போட பிரேமாவின் தையல் கூலிதான் உதவுகிறது.

## 2

ஒருவேளை சோற்றுக்கும் மண் விழுகிற விபரீதம் அன்று நடந்தது. காலையில் எழுந்திருக்கும்போதே அம்மாவின் தலை சுற்றல், வாந்தி, பத்தாவது குழந்தையின் அவதாரத்தைக் காட்டிய போது நானும் பிரேமாவும் திகைத்தோம். போருக் குறைக்குப் பண்ணையார் வீட்டுக்குப் போன அப்பா பத்து மணியளவில் சிவுசிவுத்த முகத்தோடு திரும்பினார். நடந்தது இதுதான்:

பண்ணையாரின் மைத்துனர் தன் குடும்பத்துடன் அக்காவையும், அத்தானையும் பார்த்து, விருந்தாடிப்போக வந்திருக்கிறார். பண்ணையார், இந்தக் காரியஸ்தரை அறிமுகப்படுத்தும்வாக்கில், ஜோக் அடிப்பது போல், ''நம்ம பண்ணைக் கணக்கைக் கவனிக்கறதும் வருஷம் தவறாமே பிள்ளை உற்பத்தி பண்றதும்தான் இவருடைய வேலை!'' என்றவர், கணக்குப்பிள்ளையிடம் திரும்பிக் கேலியும் நக்கலுமாக, ''எத்தனை குழந்தைகள் உமக்கு? பத்தா, பதினெண்ணு? பேர் வச்சிருக்கீரா இல்லே, நம்பர் ஒன், நம்பர் டூவா?'' என்று சிரித்தார். கணக்குப்பிள்ளை 'பெரிய இடம்' குட்டும்போது குனிந்து வாங்கிக்கொண்டிருக்கலாம். பண்ணையாரின் 'அந்தரங்க பலகீனம்' ஒன்றை அந்த நிமிடம் வெளிப்படுத்தினார்.

வந்ததே கோபம் பண்ணையாருக்கு. பண்ணையார் ஏகத்தாறுக ஏச, அவ-ருடைய மனைவி, ''நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டுல வச்சா, வாலைக் குழைச்சுண்டு மூஞ்சியை நக்க வந்துடும்பாங்க. அதுபோல பைசா பெறாத மனுஷனுக்குச் சம அந்தஸ்துகொடுத்து, ஒரே கூஜாவிலே காப்பி, வெற்றிலை பாக்கு, சமமாய் ஒக்காந்துண்டு சீட்டாட்டம்னு நீங்கதான் கெடுத்திட்டீங்க. சம்பளப் பாக்கியை வீசி எறிஞ்சு விரட்டுங்கோ. வேலையை விட்டு!'' என்று கத்தினாள்.

தொழிலாளர் யூனியனா, வேறு ஏதாவது பாதுகாப்பா? அந்த நிமிடமே வேலையை விட்டு நீக்கப்பட்ட கணக்குப்பிள்ளை வீட்டுக்கு வந்தார். மாலையே அவர் சம்பளப்பாக்கியாக ஆறு கலம் நெல் (அதில் ஒரு கலம் கருக்காய்) பதிமூணு ரூபாய் பணம் வந்தது.



மூன்று மாதம் முக்கால் பட்டினியும் அரைப் பட்டினியுமாக ஓடிய பின்னர் எனக்கும் என் தங்கைக்கும் சென்னையில் வேலை கிடைத்தது.

வயசுப் பெண்களான எங்களைத் தனியே சென்னையில் தங்க விட முடியாது என்று ஒரு காரணம். இங்கு குடும்பம் நடத்த வக்கில்லை என்ற ஒரு காரணம். மிச்சம் மீதம் சாமான்களுடன் ஒரு நல்ல நாளில் எங்கள் குடும்பம் சென்னைக்குப் பெயர்ந்தது. நகருக்குள் வீடு பிடித்தால் வாடகை அதிகம் என்பதால் நகர்ப்புறப் பகுதியில் வீடு வாடகைக்குப் பிடித்தோம். அங்கொன்றும் இங்கொன்றுமாய் பதினைந்தே வீடுகள். தெரு கிடையாது. வீடுகளுக்கு எலக்ட்ரிக் வசதி உண்டு. ஆனால் மாலை ஆறு மணிக்கு மேல், பிராந்தியமே இருள் போர்வை போர்த்துக்கொள்ளும். மழைக் காலத்தில் சேறு, சகதி, பள்ளங்களில் தேங்கும் நீர்.


எங்கள் இருவருக்குமே வெவ்வேறு பகுதிகளில் நகரின் இதயத்தில் அலுவலகம். காலை எட்டு மணிக்கு அவசரமாகக் கிளம்பினால், பஸ் பிடித்து, ஒன்பது முப்பதுக்கு அலுவலகம் அடையலாம். அலுவலகம் விட்டு வீடு வந்து சேரவும் ஏழு மணி எட்டு மணி ஆகிவிடும்.

பிரேமா. தன் தையல் மெஷினோடும், சமையல் வேலைகளோடும் ஐக்கியமாகிப் போனாள். இப்போதெல்லாம் அவள் அதிகம் பேசியே பார்க்க முடிவதில்லை. முன்பிருந்ததில் பாதியாக இளைத்திருந்தாள். குழந்தைகள் ஹைஸ்கூலிலும், அடுத்த தங்கை டைப்அடிக்கவும்சேர்ந்து



விட்டாள். படிப்பு ஏறாத இரண்டு தம்பிகளும் மூக்கின் கீழ் ரோமம் உருவாகிவிட்ட பெருமையில் கைலி கட்டிக் கொண்டு தெருப் பொறுக்குவதைத் தொடர்ந்தார்கள்.

அப்பா, நாங்கள் சம்பாதிக்கிற திமிரில் எங்கே அடங்காமல் இருப்போமோ என்று ஜபர்தஸ்தை இன்னும் அதிகமாக்கினார். சம்பளப் பணம் முழுவதையும் வாங்கிக் கொண்டு, பஸ்ஸுக்குக் கரெக்டாய்ச் சில்லறை தந்தார். சற்றுத் தாமதித்து வந்தாலும் சிடுசிடுத்தார். ஆனால் வயசுப் பெண்கள் இருட்டில் தனியாகப் பஸ் நிறுத்தத்தில் இருந்து இரண்டு பர்லாங் நடந்து வீட்டுக்கு வருகிறார்களே, பஸ் நிறுத்தத்தில் போய்க் காத்திருந்து அழைத்து வருவோம் என்ற பொறுப்புணர்ச்சியோடு ஒரு நாள்கூட வந்ததில்லை, மனசில் பயம் கூடையாய் வியாபிக்க, 'சஷ்டி கவசம்' சொல்லியபடி இருட்டில் வருவோம். அலுப்புத் தீர, சாப்பிடுகிறாயா, களைப்பாய் இருக்கா? என்றெல்லாம் அன்புடன் விசாரிக்க அம்மாவுக்குத் தெரியாது. பிரேமாதான் ஏதாவது சாப்பிடக் கொடுத்து, பரிந்து நடப்பாள். அவளுடைய 'யோகி' போன்ற முகத்தைப் பார்க்கும்போது, 'இவளுக்குப் பணம் சேர்த்துக் கல்யாணம் செஞ்சுடணும்' 'என்று நினைப்பேன். ஆனால் சேமிக்கப் பணம்?




5

காலம் ஓடிக் கொண்டே இருந்தது. அப்பா திண்ணையில் சீட்டாட்டத்துடன் எல்லோருக்கும் ஜாதகப்பொருத்தம், ஜோஸ்யம் சொல்லிக் கொண்டு இருந்தார். பக்கத்தில் தொழிற்பேட்டை இருந்ததால் காலியான இடங்களில் வீடுகள் முளைத்தன. மனிதப் பெருக்கம் மிகுந்தது. எல்லோரும் அக்காவிடம் தைக்கத் துணி கொடுத்ததில் அக்காவின் வருமானம் அதிகமாயிற்று. (ரங்கநாதன் தெரு கட்பீஸானாலும் பிரேமாப் பொண்ணு அளவாத் தெச்சுடுது; டைலரைவிட நாலணா கம்மி) உடம்பு இன்னும் இளைத்தது.

அண்ணா இருவரும் வேலைக்குப் போகாவிட்டாலும், அம்மாவிடமும், பிரேமாவிடமும் பணம் பிடுங்கி சிகரெட், சினிமா என்று திரிந்தனர். பெரியவன் ரொம்ப ஊருக்கு உழைப்பவன் போல், எல்லாப் பெண்களிடமும் ஸிஸ்டர், மேடம் (கண்ணில் மட்டும் சத்தியமாகச் சகோதரப் பார்வை இருக்காது) என்று இளித்துப் பேசி, நடு வயதுப் பெண்களுக்கு அவர்கள் குழந்தைகளைத் தூக்கி, சாமான்கள் வாங்கிக் கொடுத்து, இளம் வயதுப் பெண்களைப் பின்தொடர்ந்து பாதுகாப்பாய்ச் சென்று, ரௌடிகள் வாலாட்டாமல் காப்பாற்றி —பரோபகாரி என்று தன்னை நிலைநாட்டிக் கொண்டிருந்தான். (இன்று வரை எங்களுக்கோ, வயதுக்கு வந்து விட்ட மற்ற தங்கைகளுக்கோ ஒரு எஸ்கார்டாக பஸ்ஸுக்கோ, வீட்டுக்கோ துணை வந்தது கிடையாது அவன்!)

அடுத்தவன் – முப்பத்திரண்டு வயசிலும், முப்பது, இருபத்தெட்டு வயசிலும் அக்காக்கள் கல்யாணமாகாமல் நிற்கையில் இருபத்தியொரு வயசே நிறைந்திருக்கையில், கறிகாய்க்கடைப் பெண்ணிடம் வாலாட்டி, அவர்களைச் சார்ந்தவர்கள் சக்கையாய் அடித்து, அந்தப் பெண்ணையும் கல்யாணம் செய்து வைத்து, ஒரு குடிசை போட்டுக்கொடுத்து விட்டனர். இங்கே வந்து




# ULIP

## உங்கள் குடும்ப நலனைக் கருதி நான்கு நன்மைகள் பயக்கும் முதலீட்டுத் திட்டம்

யூனிட் லிங்க்ட் இன்ஷூரன்ஸ் ப்ளான் (ULIP) பற்றித் தெரிந்து கொள்ள இதுவே சமயம்!

நீங்கள் முதலீடு செய்யும் தொகைக்கு வரிச் சலுகை கிடைக்கிறது. இலக்குத் தொகைக்குச் சமமாக உங்களுக்கு ஆயுள் இன்ஷூரன்ஸ் பாதுகாப்பு கிடைக்கிறது. மருத்துவ சோதனை தேவையில்லை.

மேலும் ரூ. 15,000 பெறுமான விபத்து இன்ஷூரன்ஸ் பாதுகாப்பும் உண்டு.

எல்லாவற்றிற்கும் மேலாக, உங்கள் முதலீடு அதிக வருவாயைத் தருகிறது.

ULIP அளிக்கும் நன்மைகளை நீங்களே பாருங்கள்.

| சேமிப்புக் காலம் | ஆண்டுதோறும் செலுத்தவேண்டிய தொகை | இலக்குத் தொகை | முடிவில் பெறும் தொகை |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| 10 வருடங்கள் | 1200 | 12,000 | 19,000 |
| 15 வருடங்கள் | 800 | 12,000 | 24,500 |

உங்கள் வயது 18 லிருந்து 45½ வரை இருந்தால் நீங்கள் ULIP திட்டத்தில் சேரலாம். உங்கள் இலக்குத் தொகை குறைந்தபட்சம் ரூ 3000 ஆகவும் அதிகபட்சம் ரூ. 12,000 ஆகவும் இருக்க வேண்டும். சேமிப்புக் காலம் 10 வருடமோ அல்லது 15 வருடமோ இருக்கலாம். நீங்கள் இத்திட்டத்தில் சேர்ந்த மூன்று வருடத்திற்கு பிறகு ரூ. 12,000 பெறுமானமுள்ள மற்றும் ஒரு ULIP திட்டத்தில் சேரலாம்.

இதர விபரங்களுக்கு எங்கள் ஏஜெண்டுகள், தலைமைப் பிரதிநிதிகள் மற்றும் பாங்க் ஆஃப் பரோடாவின் கிளைகளை அணுகுங்கள்.

**யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா**

(ஒரு பொதுத் துறை நிதி நிறுவனம்)
தலைமை அலுவலகம் : பம்பாய்.
பிராந்திய செயலகம் : ரெஜினா மான்ஷன்,
46 செகண்ட் லைன் பீச், சென்னை-600 001 போன் : 27433

தமிழ் நாட்டிலுள்ள எங்கள் முக்கிய பிரதிநிதிகள்:

● கோவை, பெரியார், நீலகிரி மாவட்டங்களுக்கு : திரு ஏ. தனபால், 30, ஹூஸுர் ரோடு, கோவை-641 018. போன் : 34776 (அலு) ● மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு : திரு எம். இராமமூர்த்தி, 30. எல்.ஐ.சி. காலனி, மதுரை-625 002 போன் : 30160 (அலு) ● சேலம் மாவட்டத்திற்கு : திரு என் கே. இங்கர்சால், 155, சுவர்ணாம்பிகை தெரு, அன்னதானப்பட்டி, சேலம்-636 002 போன் : 64302 (வீடு) ● தஞ்சை மாவட்டத்திற்கு : திரு கு. முத்துசாமி, 52-ஏ, வ.உ.சி. நகர், தஞ்சை-613 007 போன் : 1224 (வீடு) ● நெல்லை, குமரி மாவட்டங்களுக்கு : திரு எம்.எம். காஜா, பாக்காலி பில்டிங் அனெக்ஸ், 41, திருவனந்தபுரம் நெடுஞ்சாலை, பாளையங்கோட்டை-627 002. போன் : 4520 (அலு). 5395 (வீடு)

**உங்கள் சேமிப்பின் தொடக்கம் யூனிட்டுகளாக இருக்கட்டும்.**

Sista's UTI 152/83 TM



**சமைத்துப் பார்க்கலாம்!**

சேலம் ஸ்ரீ வாசவி மஹிளா சமாஜம் புதுமையான முறையில் ஒரு பயனுள்ள சமூக சேவையைச் செய்துள்ளது. 'பச்சைக் கீரை, சிவப்புத் தக்காளி, சமைத்துப்பார்!'

என்ற தலைப்பில் எளிமையான, சுவையான சமையல் குறிப்புப் புத்தகத்தை வெளியிட்டுள்ளது. சாம்பிளுக்கு—

**தக்காளி பர்பி**

தக்காளி அரை கிலோ
தேங்காய் அரை மூடி
முந்திரி 250 கிராம்
வெண்ணிலா எஸ்ஸென்ஸ் 3 டே.ஸ்பூன்
நெய் சிறிதளவு

தக்காளியைச் சிறிதளவு தண்ணீரில் வேகவைத்து வடிகட்டிக் கெட்டியான ரசமாக வைத்துக் கொள்ளவும். தக்காளிச் சாறைப் போல இரு மடங்கு சர்க்கரை எடுத்துக்கொண்டு துருவிய தேங்காய், தக்காளிச் சாறு எல்லாவற்றையும் பாத்திரத்தில் சேர்த்துக் கலந்து கொள்ளவும். அடுப்பை நிதானமாக எரிய விட்டுக் கலவையை விடாமல் கரண்டியால் கிளறவும். சிறிது சிறிதாக நெய்யை விட்டு முந்திரிப் பருப்பைப் போட்டுப் பாத்திரத்தில் ஒட்டாத பதத்தில் திரண்டு வரும் போது எஸ்ஸென்ஸையும் விடவும். பிறகு இறக்கி நெய் தடவிய தட்டில் கொட்டி ஆறியவுடன் துண்டுகள் போடவும்.

இப்புத்தகம் கிடைக்குமிடம்: சேலம் ஸ்ரீ வாசவி மஹிளா சமாஜம், நெ. 2, 6வது குறுக்குத் தெரு, மரவனேரி, சேலம்-7. விலை ரூ. 7.50.

சாப்பிடுவதும், குடிசைக்குப் படுக்கப் போவதும், செலவுக்குப் பணம் எங்களைப் பிடுங்குவதுமாக, இன்னும் நாலு மாசத்தில் தகப்பனுகப் போகிற அவன் பெரியவனே தேவலை என்று ஆக்கிவிட்டான்.

இந்தச் சென்னை வாழ்க்கை என்னை மட்டும் பாதிக்கவில்லையா என்ன?

உடம்பு கொள்ளாமல் இளமை: கிராமத்தில் வளர்ந்ததால் காவிரித் தண்ணீரின் செழுமை உடம்பில். பார்ப்பவர்கள் கண்கள் என்னைவிழுங்குகையில் தலையைத்தான் குனிந்து கொள்வேன். பஸ் பயணம் முழுக்க பலரின் இடித்தல், உரசல்கள். அலுவலகத்தில் வயதான ஹெட் கிளார்க் முதல், புது சாய்க் கல்யாணம் ஆன டெஸ்பாட்ச் கிளார்க் வரை பார்க்கும், விழுங்கும் பார்வைகள். ஃபைல் தருகையில் தொடல்கள், 'ஏன் டல்லாய் இருக்கிறீர்கள்? காப்பி சாப்பிடுகிறீர்களா?' போன்ற கரிசனங்கள். இத்தனையும் என் உடம்பை ருசிபார்க்க அவர்கள் போடும் வேஷங்கள் என்பது சென்னை வாழ்க்கையிலும் பிரேமா—ரவி விவகாரத்திலும் புரிந்து போயிருந்ததால், அவர்களுக்கு இடம் கொடாமல் 'மிஸ் கடுவன் பூனை' என்ற பட்டப் பெயரைச் சுமந்தேன்.

வெளியே 'ஷ்ரூட்' ஆக இருந்த போதிலும் என் உள்ளம் தாபத்தில் உருகிக்கொண்டுதான் இருந்தது. அழகான ஆண்களைப் பார்த்தால் 'இவனைக் கணவனுக அடைய மாட்டோமா' என்ற ஏக்கம், ரேடியோவில் அலறுகிற இரட்டை அர்த்தப் பாடல்கள் கிளரும் கிளர்ச்சி, பஸ் பயணம் முழுக்க போஸ்டரில் அணைத்துச் சிரிக்கும் சினிமா ஜோடிகள். அலுவலகம்முடிந்து வரும்போது கண்ணில்படும் ஜோடிகள் என்னைத் தவிக்கவிடும் தாபம். 'கல்யாணம்' என்ற பேச்சே எழ முடியாத சூழ்நிலையில் 'கணவன், குடும்பம், குழந்தை என்ற இனிய கனவை உண்டாக்கிக் கொண்டு அதைக் கலைத்துக் கொள்கையில் இதய வலியுடன் தவிப்பேன். உடம்பு உருகித் தவிக்கக்-கூடாது என்று சாப்பாட்டைக் குறைத்துக்கொண்டேன்.

நெய் வேண்டாம், குழம்பு கறிகாய் வேண்டாம்; உப்பு போட்ட மோர் சாதம் போதும். தொட்டுக்கொள்ளக் கூட வேண்டாம் என்று நாவை அடக்கி உடலை ஒடுக்கலானேன் நான்.

''வேலைக்குப் போகிற பெண்: கல்லைத் தின்று மண்ணைச் செரிக்கிற வயசு!

நெய், காய்கறி சாப்பிடணும்!'' என்று பிரேமா சாப்பாடு போட்டால் வலுக் கட்டாயமாகச் சாப்பிடச் சொல்வாள். ஆனால் அம்மா சாப்பாடு போட்டால் 'அப்பாவுக்கு இன்னொரு கரண்டி நெய் விட்டு, கறி காயைப் போடலாமே' என்று மீத்திக் கொள்வாள். என்ன அம்மா இவள் என்று வெறுப்பே தோன்றும். தான் பெற்ற குழந்தைகளிடம் பாசம் வைக்காமல் அவர்களுக்குக் கல்யாணம், கார்த்தி செய்யணுமே என்று நினைக்காமல், 'அப்பா, அவருடைய சுகம்தான் உலகம்' என்று உழன்று கொண்டு!

ஆனால், அம்மா கிராமத்திலிருந்து சென்னை வந்ததில் பல விஷயம் கற்றுக் கொண்டாள். மாதம் மூன்று நாள் ஒதுங்கி, நாங்கள் ஏழு பேருமாக மாதத்தில் இருபத்தைந்து நாட்களை ஆக்கிரமித்துக் கொள்ளும் 'இடை-கழிக்கு' அம்மா போட்டி போட முடியாதபடி நாள் தள்ளிப் போய்விட்டால், மருந்துக் கடைக்கும் லேடி டாக்டரிடமும் தனியாகப் போகக் கற்றுக் கொண்டுவிட்டாள். அதுவும் நல்லது தான். இல்லாவிட்டால் சென்னை வந்தபோது பிறந்த குழந்தையுடன் எங்கள் குடும்ப நபர் எண்ணிக்கை நின்றிருக்காது.


அப்பா, திண்ணையில் தஞ்சாவூர் வெற்றிலை, பன்னீர்ப் புகையிலை, கைச்சீவல் சகிதம் அமர்க்களமாய் ஜோஸ்யம் சொல்கிறார். ஜாதகப் பொருத்தம் பார்த்துக் கல்யாணம் முடிக்கிறார். ஆனால் ரொம்ப ஜபர்தஸ்தாகப் பணம் வாங்கிக்கொள்வதில்லை. ''கல்யாணம் கூடி வந்தால் கூப்பிட்டுக் கல்யாணச் சாப்பாடு போடுங்கோ, சாப்பிட்டுவிட்டு குழந்தைகளைப் பத்து ரூபாய் பணத்தோட ஆசீர்வதிக்கிறேன். உங்கள் கிட்டப் பணம் வாங்கினால் என் ஞானத்தை வித்தாபோல ஆயிடும்'' என்பார்.

எங்களுக்கு ஆத்திரம் ட்றிக்-கொண்டு வரும். எல்லா ஜோஸ்யர்களும் பணம் வாங்கவில்லையா? அதுவும் ஒரு தொழில்தானே! எங்கள் சம்பாத்தியத்தை உறிஞ்சி, அதிலிருந்து பத்து ரூபாய் வேறு 'ஓதி' விடுகிறாராம்.

ஆனால் அவரிடம் போய் சத்தம் போட வாய் எழும்பாது!

யாராவது சற்று அந்யோன்யமாக, ''இவ்வளவு ஜாதகம் பார்த்துக் கல்யாணம் முடிக்கிறீரே, உம்ம பொண்களுக்குக் கல்யாணம் பண்ணலையோ?'' என்பார்.

வந்துவிடும் அப்பாவுக்குப் பொய்யாகத் துக்கம். ''ஹூம்.. இதோ பாரும்' என்று கேது, ராகு, அது இது என்று ஏதேதோ சொல்லி, முதல் நாலு பெண்ணுக்கும் இப்போதைக்குக் கல்யாணம் நடக்கக் கூடாது: ஆனால் அடுத்த ரெண்டு பொண்ணுக்கும் ஜாதகம் 'டாண்'ணு கல்யாணத்துக்கு ரெடிங்கறது. முன் பொண்களுக்குப் பண்ணும எப்படி ஸ்வாமி, அவாளுக்குப் பண்றது!'' என்பார்.




7 புள்ளி; 7 வரிசை. சுற்றி நடுப்புள்ளி 1.

''நாங்க சம்மதிக்கிறோம்; பண்-ணுங்கோப்பா, நானே மாப்பிள்ளை பார்க்கறேன். ஆனால் கல்யாணம் பண்ணி வைக்க உங்களுக்கு ஏது வக்கு? நாங்கள் சம்பாதித்துக் கொண்டு வருகிற பணம் முழுக்க செலவு செய்து விடுகிறீர்களே!'' என்று மனசுக்குள் தான் பொருமுவேன். அப்பாவிடம் நேரில் பேசப் பயம்.

எனக்கு அடுத்தவள் மகா சாது. சம்பளத்தை அப்பாவிடம் நீட்டிவிட்டு, போட்ட சாப்பாட்டைச் சாப்பிட்டுத் தானுண்டு, தன் வேலையுண்டு என்று இருக்கும் பரப்பிரும்மம்.

4

என் பக்கத்து ஆபீசில் வேலை பார்க்கும் சுந்தரம் என்னுடன் ஒன்றாய்ப் பஸ்

ஸில் வரத் துவங்கினர். கொஞ்ச நாள் கழித்துப் பேச ஆரம்பித்தார். நாற்பது வயதில் மனைவி இழந்து மூன்று குழந்தைகளுடன் தவித்துக் கொண்டிருந்தார். பிரேமாவிற்காகத்தான் நான் அவருடன் பேசியதே. பிரேமாவிற்குக் கல்யாணம் • ஆக வேண்டும் என்ற ஆர்வத்தில் இருந்தேன். ஆனல் சுந்தரமோ, ''உன் அக்காவா? உன்னைத்தான் எனக்குப் பிடித்திருக்கிறது'' என்ருர்.

முப்பத்தி மூணு வயசுக்கு நரைக்கக் கூட ஆரம்பித்துவிட்ட தலையும், உண

**முறுக்கு மாவு பிசையும் போது நன்ருகக் கனிந்த ஒரு வாழைப் பழத்தையும் சேர்த்துப் பிசைந்து முறுக்கு செய்து பாருங்கள்! தனி டேஸ்ட்டாக இருக்கும். நமுக்காது.**

**-உமா**

வுக் கட்டுப்பாட்டால், ஒடுங்கி விட்ட உடம்பும் கொண்ட என்னைப் 'பிடித்திருக்கிறது' என்று சுந்தரம் சொன்னவுடன், மனம் இள வயசுப் பெண்ணுட்டம் சந்தோஷப்பட்டது. 'பிரேமா பிரேமா' என்று அனுதாபப்பட்ட மனத்தை அடக்கி, அட்லீஸ்ட் இப்போதைக்கு எனக்காவது சுந்தரம் மூலம் கல்யாணம் ஆகிறதே! அவருடைய உதவியுடன் பிரேமாவிற்கும் மாப்பிள்ளை பார்த்துவிடலாம் என்று தீர்மானித்தேன். சுந்தரம் கடற்கரைக்குக் கூப்பிட்டபோது, மணலை அளைந்தபடி, வெட்கமாய் (இத்தனை வயசாகியும் வெட்கம் வருகிறது!) சம்மதம் சொன்னேன். 'கல்யாணம் சிம்பிளா கோயிலில் வைத்துக் கொள்ளலாம்' என்றேன்.

''கல்யாணமா? கல்யாணத்துக்கெல்லாம் என் வீட்டுப் பெரியவர்கள் சம்மதிக்கமாட்டா! (இவருக்கே நாப்பது வயது. இவர் வீட்டுப் பெரியவாளாம்!) குழந்தைகளைக் கவனிச்சுக்க அவாளோட பாட்டி இருக்கா. எனக்குத்தான் பெண்டாட்டி இல்லாததுக்குப் பெண் துணை வேணும்: கண்ட இடத்துக்குப் போய் வியாதி வரவழைச்சுக்கப் பிரியம் இல்லே: நான் டீஸன்ட் மேன். • உனக்கு வேணும்கற புடவை, நகை வாங்கித் தரேன். வேணுமான ஒரு அமௌண்ட் உன் பேர்ல ஃபிக்ஸெட்ல போடுறேன். ஆனல் கல்யாணம் பண்ணிக்க முடியாது....'' டீஸன்ட் மேன் அல்லவா... தயங்கி இழுத்தார்.

''ஏன் சார் தயக்கம்? தாலி கட்டின பெண்டாட்டியா வச்சுக்க மாட்டேன், 'கீப்'பாக வச்சுக்கறேன்னு பளிச்சுன்னு சொல்லுங்களேன். செய்யறது அசிங்கம், அதுக்கு ஜிகினைப் போர்வை! ஒரு நிமிஷம் அக்காவைக் கூட நினைக்காமல் என் சொந்த சுகத்தை நினைச்சேனே அதுக்கு இது நல்ல தண்டனை... படிப்பினை'' திரும்பிக் கூடப் பார்க்காமல் என் கல்யாண ஆசைகளையும் கடலோடு கரைத்து விட்டுத் திரும்பினேன்.

கடைசித் தங்கையும் படிப்பை முடித்துவிட்டு வேலைக்கு அலைகிருள். மூன்று வருடமாக வேலைக்குப் போகிற நான்காமவள்தான் எனக்கு ஒரு பிரச்னையாகத் தோன்றினுள். ஐந்தாமவளும் ஆருமவளும் அப்பாவிடம் ரொம்ப பயந்தவர்கள். பக்கத்து நர்ஸரி ஸ்கூலில் தற்காலிக டீச்சராக வேலை. ட்யூஷன் பணமும் அப்பாவிடம் கொடுத்து விடுவார்கள். நான்காமவள் மட்டும் வேலையில் இருந்தபடி ஷார்ட் ஹாண்ட் கற்ருள். சம்பளம் முழுவதையும் அப்பாவிடம் தரமாட்டாள்.

''ஏண்டி, பாக்கிப் பணம் எங்கே?'' என்று அப்பா கேட்டால், ''எனக்குச் சொந்தச் செலவுக்கு வச்சுண்டேன்'' என்பாள்.

வாயில்லாப் பூச்சிகளான எங்களிடையே அவள் மகா தைரியசாலி தான். என்னிடம் மட்டும் சற்றுத் தணிந்து போவாள். கேட்டதற்குப் பதில் சொல்லுவாள்.

''என்னடி பண்றே பணத்தை?'' என்றேன்.

''பாங்கில் போட்டேன். புடவை, சீட்டு, நகைச் சீட்டு, பாத்திரச் சீட்டு கட்டறேன். எனக்குக் கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசையாய் இருக்கு அக்கா. உங்க மூணு பேரைப் போல யோகினியாய் இருக்க முடியல்லே.

பார்க்கிற சினிமா போஸ்டர், படிக்கிற வார, மாதப் புத்தகங்கள், கேட்கிற பாட்டு எல்லாமே செக்ஸுக்குத்தான் முதல் இடம் கொடுக்கிறது. வேணு மென்று இடிச்சுட்டுப் போற பொறுக்கிகள், கையிலே டிக்கட் தர்ற கண்டக்டர், ஃபைலேத் தரும்போது காலே மிதிக்கிற மானேஜர், காப்பி குடிக்கிறிங்களான்னு கேட்டுண்டு ப்ளௌஸையே பார்க்கிற ப்யூன், எல்லாரும் என் மனசிலே கல்யாண ஆசையை நெருப்பாய்க் கிளப்பி விடறு அக்கா. என் சிநேகிதங்க,புருஷன் குழந்தைன்னு போகும் போது, அவாளேப் போல குடும்பம் நடத்தணும்னு ஆசை வருகிறது.''

என் கைகளில் முகம் புதைத்து அழுதவளே அணைத்தேன். அவள் வயதில், அவளேப் போல் உணர்ச்சிகளின் போராட்டத்தில் உழன்றவள்தானே நான்.

''ஸ்ஸு! அழாதே. எனக்குக் கொஞ்சம் ஆபீஸில் லோன் வாங்கலாம், யாரையாவதுஆசைப்படறியா சொல்லு எல்லாவற்றையும் பேசிண்டு கடைசியாக அப்பா அம்மாவிடம் சொல்லலாம். எங்க மூணு பேருக்கும் இனிமேல் கல்யாணம் ஊர்வலம் எல்லாம் நாலு பேர் தூக்கச் சுடுகாடு போனுல் தான். உன் விஷயத்திலாவது டுலேட் ஆகாமல் நடக்கட்டும். உனக்கும் இருபத்தாறு வயசாச்சே'' என்றேன்.

அவள் சின்னப் புன்னகையும் வெட்கமுமாக, ''எங்க ஆபீஸ் பக்கத்துல சின்னதாய் காஸ்மெடிக்ஸ் கடை வைத்திருக்கிறுர். நான் பவுடர், மை வாங்கப் போவேன். அப்படியே பழக்கம். ரொம்ப நல்லவர். நானுகத்தான் புடவை, நகை, பாத்திரம் சேர்க்கிறேனே தவிர, ஒன்றுமே இல்லாமல் கல்யாணம் பண்ணிக்க நான் தயார்னு தான் அவர் சொல்றுர். மூணு வருஷமா அவர் கடைக்கு வாடிக்கையாய்ப் போறேன். ஆனுல் மூணு மாசமாய்த் தான் காதலிக்கிறேம். அவர் தன் பேரண்ட்ஸ் கிட்டப் பேசிச் சம்மதம் வாங்கப் போயிருக்கிறுர்'' என்றுள்.

ஒரு வாரம் ஓடிவிட்டது. அன்று அலுவலகத்திலிருந்து வந்த நாலாமவளின் முகம் சுரத்தாக இல்லே. என்ன ஏது என்று விசாரிக்கச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லே. எல்லோரும் படுத்தாகி விட்டது. விளக்கை அணைத்தாயிற்று.

அப்பா நாங்கள் எல்லோரும் படுத்திருந்த கூடத்துக்கு வந்தார். தொண்டையைச் செருமிக்கொண்டு, ''அடி, கொஞ்சம் தண்ணி எடுத்துண்டு வா ஜில்லுனு. நாக்கு வரள்றது'' என்றுர்.

இது அம்மாவுக்கு ஒரு சமிக்ஞை. எல்லாப் பெண்களும் வளர்ந்துவிட்டதாலும், கிராம வீடு போல இது பெரிதாக இல்லாததாலும் அப்பாவுக்குத் தனி அறை சிறியதாகிவிட்டது. அம்மா கூடத்தில் எங்களுடன் படுக்க நேரிட்டது. அதனுல் பத்துப் பதிணைந்து நாட்களுக்கொரு தரம் அப்பாவுக்குத் தாகம் எடுப்பதும், அம்மா செம்பில் ஜலம் எடுத்துச் செல்வதும் நாங்கள் மூச்சு விடக் கூடப் பயந்து தூங்காமல் இருப்பது தெரியக் கூடாது என்று கட்டை போல் கிடப்பதும் வழக்கம்தான்.

> புடலங்காய் நோஞ்சானுகக் காய்க்கிறதா? கவலே வேண்டாம். ஒரு டேபிள்ஸ்பூன் பெருங்காயத் தூளேத் தண்ணீரில் ஊறவைத்து, செடியின் வேரைச் சுற்றி அதை விடவும். நல்ல புஷ்டியான காய்களேக் கண்டு பிறகு அதிசயிப்பீர்கள்.
>
> —திருமதி தேவஞதன்

இன்று அப்பா, குடிக்க ஜலம் கேட்டவுடன், வெடுக்கென்று படுக்கையை விட்டு எழுந்தாள் நாலாமவள். ''தண்ணிதானேப்பா! ஒரு செம்பு என்ன, பானேயோடயே தரேன். குடிச்சுட்டுப் போய்த் தூங்குங்கோ'' என்று விளக்கைப் போட்ட கையோடு குளிர்ந்த தண்ணீர்ப் பானேயும் டம்ளருமாக வந்தாள்.

''ஹி! நீ படுத்துக்கோம்மா!'' என்று அப்பா அசடு வழிய ''நீ தூங்குடி. அப்பாவுக்கு நான் குடுக்கறேன''என்று அம்மா தண்ணீர்ச் செம்புடன் அவளே நெருங்கினுள்.

''போறும் போ! ஒரு நாளேப் பார்த்தாப்பல பத்து நாளேக் கொரு தரம் இந்த மனுஷனுக்குத் தாகம் எடுக்கறதும், நீ தண்ணீர் எடுத்துண்டு போறதும் என்னத்துக்குனு வயசுக்கு வந்து பதிணைந்து வருஷத்துக்கு மேல் ஆகிவிட்ட எங்களுக்கெல்லாம் புரியாதா? நீங்கள்ளாம் மனுஷ ஜென்மங்கள்

தானே! கல்யாணம் ஆகாத பொண்களை ஆத்துல வச்சுண்டு... தூ!''

இத்தனை நேரமாகத் தூங்காமல் அழுததால் சிவந்த கண்களும், கலைந்த கூந்தலும் ஆத்திரமுமாய்ச் சீறினாள் அவள்.

''பெத்தவாளைப் பார்த்துப் பேசறப் பேச்சா இது! படுடீ பேசாம: திமிரெடுத்த நாயே!'' என்றார் அப்பா.

''திமிரெடுத்துப் போய் தான் ஆமடையான் வேணும்னு கேக்கறேன். நீங்க ஒடனே பண்ணி வெக்கப் போறேள்! யார் திமிரெடுத்த ஜன்மம்...

''போறும்டீ, அப்பாவை எதுத்து பேசறயே! அல்லு அசல் சிரிக்கப் போறது'' என்றாள் அம்மா.

குறிப்பு:

குளோரின் கலந்த தண்ணீரில் குளிப்பது அல்லது நீந்துவது கூடாது. தலை மயிர் கொட்டும். அமெரிக்காவில் நியூ கரோலினாவில் நடந்த ஆராய்ச்சியால் தெளிவான விஷயம் இது.

—தனலட்சுமி

''நீ பேசாதே, நீயெல்லாம் ஒரு பெத்த தாயா! முப்பது வயசு முடிஞ்ச மூணு பொண்களை வீட்டுல வச்சுண்டு... துளிக்கூட, பெண்களுக்கு, கல்யாணம் கார்த்தி பண்ணணும்னு சிந்தையே இல்லாம, அவர் கூப்பிட்டவுடனே தண்ணிச் செம்பை எடுத்துண்டு போறியே! நாங்க சம்பாதிச்சுண்டு வரப் பணத்தில் கட்டுசெட்டாய் குடும்பம் நடத்தி, சேமிச்சிருந்தாயானால் ரெண்டு அக்காவுக்குக் கல்யாணம் பண்ணிஇருக்கலாம்:ஒருவேளை தவறாமல் அப்பாவிற்குக் காப்பியும், அடை, தோசை, நெய்யப்பம்னு, டிஃபனும் சீட்டாடும் போது கொரிக்க, பட்சணமும், ராத்திரி படுத்துக்கச்சே ஒரு சேர் பாலும் தரத் தெரியும். பெத்தக் குழந்தைகளைக் கவனிக்கவாத் தெரியும்...!''

அப்பா அடிக்க விளக்குமாற்றை ஓங்கினார். நான் அவளை அணைத்து வாயைப் பொத்தி, பேச விடாமல் சமையல் கட்டுக்குள் இழுத்துப் போனேன். சிறிது நேரத்தில் கூடத்து விளக்கு அணைந்தது.

''என்ன ஆச்சு! ஏன் இவ்வளவு ரௌத்திரம், ஆங்காரம் உனக்கு?'' என்று அவளை வினவினேன்.

''அக்கா'' என்று என் மடியில் படுத்துக் குலுங்கி அழுதாள்..... ''அவன் தன் பேரன்ட்ஸை பார்த்துட்டு வந்துட்டான் அக்கா. வெரிகுட் ந்யூஸ்னு காட்பரிஸ் கொடுத்தேன். ''சம்மதிச்சுட்டாளா?'' என்று கேட்டேன். ''அவனோட அத்தைப் பொண்ணை அவனுக்கு நிச்சயம்பண்ணியிருக்காளாம். ஒரே பொண்ணும். நிறைய சொத்து. சீர்வரிசையாம். அவர்களோட விருப்பப்படி அவளைக் கல்யாணம் பண்ணிக்கப் போறானும். என்னைத் தயவு செஞ்சு மன்னிச்சுடு. அவளைக் கல்யாணம் பண்ணிக்கலேன்னா தூக்குலே தொங்குவேன்னு அம்மா மிரட்டினான்னான். இவன் சம்மதிச்சுட்டானும். நீலிக்கண்ணீர் விட்டான்...

தன் சுகம் மட்டும் நினைத்து, பெற்ற குழந்தைகளுக்கு வாழ்வு அமைத்துக் கொடுக்காத அப்பா, கூடப் பிறந்த சகோதரிகளிடம் பாசம் வைக்காத சகோதரர்கள், பெண் என்றால் அதுவும் ஏழை என்றால் ''சூ'' என்றால் ஓடிவருவாள் நாய் போல என்று நினைக்கும் என் காதலன் போன்ற ஆண்கள், ''அக்னி பூவாய் இருக்கணும்னு பிரேமா அக்கா சொன்னா! பூவா, இருக்கேன்னேன் கசக்கிடறேன் என்கிறார்கள். அக்னியாய்க் கொளுத்த எனக்கு ஆத்திரம் வருது. என்னை நானே எரிச்சுக்கறேன். என் உடம்பு தீயாய்த் தகிக்கறது. என் கண்ணீர் கனலாய்ச் சுடறது... ஏன்க்கா இந்த உலகம் மோசமாய் இருக்கு!'' கதறினாள் அவள்.

கதறி ஓய்ந்தபின், தூங்கி விட்டாள். தூங்கும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன். எங்கள் அப்பா, ரவி, சுந்தரம், இவள் காதலன், என் அண்ணன்கள், போன்றவர்கள் மட்டுமே நிறைந்த உலகம் அல்ல இது. நல்லவனாய் ஒருவனைத் தேடி, இந்தப் பெண்ணைப் பூவாக மணக்கச் செய்ய வேண்டும். எங்களைப் போல அக்னிப் பூவாய்க் கருக விடக்கூடாது.

ஏதேதோ யோசித்தபடி எப்போது தூங்கிப் போனேன்? அருகில் படுத்திருந்தவளைக் காணோம். கொல்லைப்புறம் ஒரே அமர்க்களம். என் இடுப்பில் ஒரு காகிதம் செருகப்பட்டிருந்தது. ''அக்கா இது நீச உலகம். என் ஆசைத்தாபம் என்னை எரிக்கிறது. என் கண்ணீர் என்னை நெருப்பாய்த் தகிக்கிறது. என் உடம்பைக் குளிர வைக்க... நம் கிணறுதான் எனக்குப் புகலிடம்.... நான் உடலில் தூய்மையானவள்தான் அக்கா.... என்னை நம்பு.... நான் அக்னிப்பூதான்....!'' நான்காமவளின் கடிதத்தை முழுக்கப் படிக்காமல் இடுப்பில்செருகிக் கொண்டு, கொல்லைப் புறம் ஓடினேன். பாறுங்கல்லைக் கட்டிக் கொண்டு கிணற்றில் இறங்கி தன் உடலைக் குளிர்வித்து, மரணத்தைத் தழுவி இருந்தாள் பாவி.

நான் கண்ணீரை மறந்த கண்களோடு அந்த உடலையே வெறித்தேன். தவறி விழுந்து விட்டதாக ஊருக்குச் சொல்லி, தற்கொலை என்பதை மறைத்து நாலாமவளைப்போய்க் காட்டில் எரித்து, பத்துநாள் காரியம் அவள் நினைவாக ஏழைப் பெண்ணொருத்திக்குச் சாப்பாடு போட்டுச் சேலை, ரவிக்கை எடுத்துக் கொடுத்து அவளை எல்லா வகையிலும் மறந்து விட்டது வீடு. அவளை இழந்ததன் மூலம் இழந்த சம்பளம், அவளுக்குப் பதிலாக அமர்த்திக் கொள்ளப்பட்ட கடைசித் தங்கையால் ஈடு செய்யப் பட்டது.

## 5

பழையபடி ''யோகினியாய்'' அலுவலகம், வீடு... என்று நான்...

பதினைந்து நாள் ஆகி இருக்குமா, அவள் இறந்த காலமாகி.... இரவு!

அப்பா தொண்டையைச் செருமி... அம்மாவைக் குடிக்கத் தண்ணீர் கேட்கிறார். அம்மா செம்பில் ஜலம் சரித்து எடுத்துக் கொண்டு அப்பாவின் பின் போகிறாள்.

நான்... நான்காமவள் இறந்துவிட்டதால் உபயோகிப்பார் இல்லாத அவளுடைய தலையணையில் முகத்தைப் புதைத்து ஓசையின்றி அழுகிறேன்



கோவை மாநகராட்சி கலையரங்கில் நடைபெற்ற ஸ்ரீசக்தி நாட்டியகலா நிலையத்தாரின் ஆண்டு விழாவின் போது திரு. பழனியப்பன் அவர்களின் சிஷ்யையும் ராயல் ஏஜென்ஸீஸ் உரிமையாளர் கே. சுப்பிரமணியம் அவர்களின் புதல்வியுமான கே. எஸ். பாலசரஸ்வதி நடனம் ஆடினார். சிறு வயதிலேயே இவளுக்கு பரத நாட்டியத்தின் பாலுள்ள ஆர்வம் நன்கு புலப்படுகிறது.



இரவெல்லாம் தூக்கத்திலும் விழிப்பிலும், தேம்பலிலும், திடுக்கிடலிலுமாய் தவித்துப் புரண்டாள். எழுந்தாள், நடந்தாள். அறையில் விச்ராந்தியாகப்படுத்திருந்த அப்பாவைப் பார்த்தாள். வாழ்க்கைத் தரத்தில் உடம்பின் வளத்தை இழந்து வறுமையின் கைப்பிடிக்குள் சிக்கிவிட்ட வற்றிய மேனி. அவரிடம் நிதானம்; அன்பு, இரக்கம் எல்லாம் விடைபெற்றுக் கொண்ட உணர்வுகள். கோபத்தை மட்டுமே விசுவாமித்திரரிடமிருந்து ஒட்டுமொத்தமாகக் குத்தகை எடுத்திருந்தார் அவர். பாவம்! எல்லாம் அவரால் பிறப்பிக்கப்பட்ட உயிர்களுக்காகத்தான்.

இதோ அம்மா... அந்தத் தெய்வத்தின் பொறுமை, தியாகம்த்தான் அங்கே குடை நிழலாகக் கவிந்து ஆறுதல் அளிக்கிறது. அவளது அடக்கப்பட்ட கண்ணீரும், ஒடுக்கப்

# என்று முடியும் இந்தத் துயரக் கதை

கோமக



பட்ட அபிலாஷைகளுமே அந்தக் குடும்பத்தின் அஸ்திவாரமும், ஆணிவேரும்.

இதோ இரண்டு அக்காக்கள். பருவத்தின் விகசிப்பில் பாவாடை, தாவணிப் பருவம் மாறி, புடவைக்குள் பொக்கிஷங்களாகப் பாதுகாக்கப்படுபவர்கள். நோக்கும், இலக்கும் எட்டாமல் இழுபறி செய்தாலும் நம்பிக்கைக் கனவுகளில் நளின நீச்சலிடும் அழகின் விஸ்வரூபங்கள். அப்பாவின் மனத்தில் நெருப்புக் கோளங்கள். அம்மாவின் நெஞ்சில் தீப்பந்தங்கள்.

இவர்களோடு கூட அவளும் ஒரு தீயாகவோ, பெரு நெருப்பாகவோ அல்லாமல் ஒரு எரிமலையாய் உருமாறி நிற்கிருள் என்ற பிரக்ஞை அப்பா, அம்மா இருவருக்குமே தெரியாது. ஏனென்ருல், அவள் கடைசிப் பெண். கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு வேலையில் அமர்ந்து புரொபேஷன் பீரியட்டைத்தாண்டிவிட்ட அக்காக்களைப் போலில்லாமல் கல்லூரிக்குள் இன்னும் ஓராண்டு வளைய வரவேண்டியவள்!

இவளுக்கு இப்படி ஒரு அவசரமா? இப்படி ஒரு ஆசையும், துணிச்சலுமா?

முந்தின நாள் மாலை அம்மா கோவிலுக்குப் போயிருந்தபோது அக்காக்கள் காபி குடித்த ஆசுவாசத்துடன் வாரப் பத்திரிகைகளோடு தூணில் சாய்ந்து கொண்டு பெருமூச்சுக்களை ரகசியமாக விட்டுக் கொண்டிருந்தபோது...

இவள் ஒரு பேப்பரை எடுத்து முதன் முதலாக தன் அப்பா, அம்மாவுக்கு தபாலில் போடாத ஒரு கடிதத்தை எழுதி முடித்தாள். தனது தெய்விகக் காதல் பற்றி, தான் கைப்பற்றப்போகும் ராஜசேகரன் ஒரு செல்வந்தன் என்பது பற்றி, அவன் வீட்டில் மறுப்பு இருப்பதால் அவளோடு தனியே வாழ விரும்பும் அவன் எண்ணம் பற்றி, தன் வீட்டில் நிச்சயம் மறுப்பு வரும் என்பதால் மௌனமாகவே தான் புறப்படுவது பற்றி அதற்காக மன்னிப்பை வேண்டி...

கடிதத்தை எழுதியிருந்த விதம் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. இது தன் பெற்ருேர்களின் நியாயமான தீர்ப்பைப் பெற்றுத் தரும்எனநம்பிக்கை இருந்தாலும் ஒரு பயம். கடிதத்தை பிளவுஸிலிருந்து எடுத்து அக்காவின் மேஜை மீதிருந்த கண்ணுடி பேப்பர் வெயிட்டின் கீழ் வைத்தாள். முதலில் அக்கா பார்ப்பாளா? என்ன நினைப்பாள்? மனசில் ஒரு கலவரம்.

அம்மாவின் கண்ணீர்... அந்த மௌனக் கண்ணீர்... அவள் கண்களில் நீர் கோர்த்து சிறுக்க வைக்கும். ஆனால் அதை வழிய விட மாட்டாள். இந்த நினைப்பில் நெஞ்சில் ஒரு கேவல்.. அப்பா வழக்கம் போல் குதிப்பார். ஆர்ப்பாட்டம் பண்ணுவார். அடுத்த வீட்டு வரதராஜனைப் பார்த்ததும், அவமானத்தால் சிறுத்துப் போவாரே...

இதுநாள்வரை மென்மையான போதையாக மனத்தில் பூத்து நர்த்தனமாடிக் கொண்டிருந்த காதல் மலர் மெல்ல நடு நடுங்கியது. 'ஓ! டியர் ஃபிளவர் ட்ரம்பிள்



நாட்' என்று வேர்ட்ஸ் வொர்த் கவிதை வரிகளைத் தன் காதல் மன்னருக்கு ஆறுதலாக முணு முணுத்தாள்.

கடைசி விநாடியிலும் நழுவி விழமுயலும் துணிச்சலைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டு இருளின் நிழல்களாகக் கிடந்த அந்த நான்கு பேரையும் ஒருசேரப் பார்த்துவிட்டு கதவை மெல்லத் திறந்தாள்.

இந்த வீட்டை நான் துறக்கிறேன் என்ற நினைத்தபோது ஒரு சின்ன அழுகை கோர்த்த போது, எனக்குச் சொந்தமான வீடு ஒன்றை அமைக்கப் போகிறேன் என்ற மகிழ்ச்சியில் அதைக் கரைத்தாள்.

கபாலீஸ்வரர் கோயிலின் உச்சி விளக்கும் குளத்தின் பரந்த நீர்ப் பரப்பும் வெறிச்சிட்ட வீதிகளும் பால்கேன்களைச் சைக்கிளில் வைத்துச் செல்லும் ஒருசில பையன்களும்... எல்லோருக்கும் வாழ்க்கை அவசியம்....

'என்னைப் புரிந்தவர்கள் என்னை ஆசீர்வதிப்பார்கள்' என்று முணு முணுக்கும் போதே ராஜசேகர் நிற்பது புரிந்தது. அவ

**கையில் நகச்சுத்தியோ காயமடைந்து வீங்கினாலோ கொப்பளித்துக் குத்து வலி எடுக்கிறதா? ஒரே நாளில் சீழ் பழுக்க வழி இதோ:–**
**கறுப்பு எள்ளை சிறிதளவு ஜலம் விட்டு, வறளிமஞ்சளைச் சேர்த்து மிகவும் நைஸாக அரைத்து வைத்துக் கட்டுங்கள். எள்ளில் உள்ள எண்ணெயும் மஞ்சளும் சீழ் பழுத்து உடையவும் புண்ணை ஆற்றவும் சிறந்த மருந்து. - சித்ரா**

ளுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகவே அவன் ஒரு விளக்குக் கம்பத்தருகே நிற்கிறான் என்று புரிந்து கொண்டபோது ஒரு புன்னகையில் அவளது குழப்பங்கள் விடைபெற்றன. அவனை நெருங்கிவிட்டபோது தனது பிறந்த வீட்டுப் பந்த பாசங்கள் பழசாகிப் போனாற்போல் உணர்ந்தாள்.

''எங்கேநீ வரமாட்டாயோஎன்று பயந்தே போனேன்'' என்றான் அவன் மெல்லிய கிசுகிசுப்புடன்.

''நானும்தான் பயந்தேன்...'' அவளது நிம்மதிப் பெருமூச்சு.

''என்னது பையிலே....''

''என்னோட ரெண்டு செட் டிரஸ், கொஞ்சம் பணம், எனது சங்கிலியும், வளையலும்.''

''ஒண்ணுமே வேண்டாம்னு சொன்னேனில்லே....?''

''என்னைச் சொல்லிட்டு நீங்க என்ன பெரிய பெட்டியாய்....''

''நான் வெறுங் கையா வர முடியுமா? இந்த ராணியைக் காப்பாத்தற ராஜா நான் தானே... உம்... உம்... விடியறது... புறப்படலாமா?''

''நிச்சயமா!''

ஆட்டோவின் குலுக்கலில் அவர்கள் அண்மையை ரசித்தார்கள்.

சென்ட்ரலில் இறங்கி, தமக்குத் தெரிந்தவர்கள் யாராவது இருப்பார்களோ என்ற அச்சத்தில் அவசர அவசரமாய் தங்களை கோவை எக்ஸ்பிரஸில் திணித்துக்கொண்ட போதும், வண்டி புறப்பட்டதும், வாழ்க்கையின் தாகங்கள் பற்றி, எதிர்கால திட்டங்கள் பற்றி அவர்கள் பரிமாறிக்கொண்ட எண்ணங்கள்தாம் எத்தனை?

நடக்க வேண்டியவைகளைப் பின்னுக்குத் தள்ளி, உணர்ச்சிகளின் தீவிரத்துக்கே முதலிடம் தந்து அன்பின் விகசிப்புகளை, பரிமாற்றங்களை, பருவத்தின் ஈடுபாடுகளை நிறைவேற்றிக் கொண்ட பின்தான் ஹோட்டல் பில் பயமுறுத்தியது.

ஒரு சின்ன வீடாகப் பார்த்து, ஒரு வேலை தேடிக் கொண்டு தாங்களே சமைத்துச் சாப்பிட்டு முறையாக ஒரு கோயிலிலாவது மாலை மாற்றிக் கொள்ளாமல்... தேனிலவுத் தம்பதிகளைப் போல் எத்தனை குதூகலமாய்.. முறையாய் வாழும் உரிமை பெற்றாற்போல் எத்தனை பாதுகாப்புணர்ச்சியோடு... நிகழ் கால பிரக்ஞையே இல்லாமல் ஒரு கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டு, குளிர் காலப் பறவைகள் போல் ஒடுங்கிக்கொண்டு..

தமிழ் நாளிதழில் ''காணவில்லை'' என்று அவர்களது புகைப்படங்கள் வந்தபோது தான் இருவருக்கும் விழிப்பு வந்தது. இரண்டு உள்ளங்களில் மணமயமான கனவுகள் சற்றே கலைந்தன. கவர்ச்சிகள் ஒரு நிலைப்பட்டபோது கலவரம் ஆரம்பித்தது.

வாழ்க்கை என்பது வேறு... இன்றைய நிதரிசனம் வேறு... ஓடிவந்தது பெரிதில்லை, இணைந்தது பெரிதில்லை.

இவைகள் எல்லாம் கேள்வி தெரியாமல் எழுதப்பட்ட விடைகள்! அந்தக் கேள்வியை இப்போது தெரிந்து கொண்டால் பதிலும் புரிந்துவிடும். ஆனால் அது எப்படி? அவள் தேம்பினாள். விம்மியவாறே அவனது மார்பில் புகலிடம் தேடினாள். அவனும் ஆறுதல் படுத்தத் தெரியாமல் கண் கலங்கினான்.

காலை உணவை அவர்கள் அறைக்கே கொண்டுவந்த சர்வர்தான் இவர்களைக் காட்டிக்கொடுக்கும் புண்ணியத்தைக் கட்டிக் கொண்டான். தினத்தாளின் ஒரு பக்கத்தில் பிரசுரமாகியிருந்த புகைப்படங்களை ஒத்திடவே அவன் அவசரமாக வந்தான். சரி பார்த்த திருப்தியில் ஏக உபசரிப்போடு அவர்களிடம் விடைபெற்றவன் ராஜ சேகரனுக்காக அவன் அப்பா அறிவித்திருந்த ரூபாய் இரண்டாயிரத்தையும் அவள் அப்பா அறிவித்திருந்த 'தகுந்த சன்மானத்தை'யும் மனத்துக்குள் கூட்டியவாறே போலீஸ் ஸ்டேஷனை அடைந்தான்.

சரியாகப் பத்து மணிக்கு அவர்களைப்- போலீஸ் சூழ்ந்தது.

அவர்கள் அறையை லாட்ஜ் மக்கள் சூழ்ந்தனர். பத்திரிகைகளுக்குப் பரபரப்பான தீனி.




"வியாபார விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன"

போலீஸ்ஸ்டேஷன்வராந்தாவில் இருவரும் அமர்ந்திருந்தபோது அவன் அவமானத்தால் தலை குனிந்திருந்தான். அவள் பயத்தால் முகம் வெளுத்துக் கண்களில் அழுகை கோர்க்க அமர்ந்திருந்தாள். ஒரு கேலிப் புன்னகை யோடு மற்றவர்கள் அவளைப் பார்த்தபோது உடம்பெல்லாம் முள்ளாய் உறுத்தியது.

அகப்பட்டுக் கொண்டோமே 'அப்பா கொன்றுவிடுவாரே' என்று அவளும்' அப்பா புலி மாதிரி பாய்வாரே'என்று அவனும்...

''ஏன் மிஸ்டர் ராஜசேகர், உங்களில் யார் இந்த முடிவுக்குத் தூண்டியது?''

''நாங்கள் இருவரும் எடுத்த முடிவுதான் இது.''

''இப்போது என்ன செய்வதாக உத்தேசம்?''

''நாங்கள் திருமணம் செய்து கொள்ளப் போகிறோம்.''

'கொல்'லென்ற சிரிப்பொலி அவர்கள் உடம்பை எரிப்பதைப் போலச் சுட்டது.

''ராஜ்! எனக்குப் பயமா இருக்கு....'' அவளது முணு முணுப்பு.

''பத்மா! அப்பா வந்ததும் நான் கேட்கப் போகிறேன். பயப்படாதே!''

''என்ன அதற்குள் உங்களுக்குள் பேச்சு?'' மீண்டும் கேலிப் புன்னகைகள்.

''எங்களை என்ன செய்யப் போகிறீர்கள்?''

''உங்கள் அப்பாவுக்கு எஸ். டி. டி. கால் போட்டோம். அவரது குடும்ப நண்பர் உங்களைக் கூப்பிட்டுப் போக வருகிறார்...''

''இவள்....?''

''இவங்க பெற்றோருக்குத் தகவல் போச்ச. இவங்க சித்தி இப்ப வருவாங்க...''

இப்படி இன்ஸ்பெக்டர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஒரு நடுத்தர வயதுப்பெண் ''எங்கே அவ, குடிகேடி, பழிகாரி....!'' என்று கூச்சலோடு உள்ளே வந்தாள்.

''சித்தி....!'' என்று மெல்லக் கூவினாள்.

''சீ! சித்தின்னு என்னைக் கூப்பிடாதேடி. நல்ல குடும்பத்திலே புல்லுருவி பாய்ஞ்சா மாதிரி நீ எங்கே இருந்துடி வந்து முளைச்சே?''

''அம்மா கூச்சல் போடாதீங்க. பத்மா எந்தத் தப்பும் பண்ணிடலை!'' என்று ராஜசேகரன் குறுக்கிட....

''போடா! உன்னைப் போல போக்கிரிப் பசங்கதாண்டா பொம்பளைப் பிள்ளைகளைக் கெடுக்கறது....'' என்று சித்தி பாய...

இன்ஸ்பெக்டர், ''அம்மா! உட்காருங்க, உங்க முடிவைச் சொல்லுங்க...'' என்றார்.

''முடிவா? இவ அப்பா தகவல் அனுப்பியிருக்கார். இவளை யாரோ கடத்திக்கிட்டுப் போயிருப்பான்னு நினைச்சாராம். இவ இவனோட ஓடிவந்துட்டான்னு தெரிஞ்சதுமே வீட்டுப் பக்கமே இவ வரப்படாதுன்னுட்டார். போலீஸ் என்ன செய்யணுமோ அதைச் செய்துக்கலாம்.''

''சித்தி!'' பத்மா அலறினாள்.

''பத்மான்னு ஒரு பொண்ணு எங்க குடும்பத்தில பொறக்கலேன்னு தலை முழுகிடறோம்.''

நெருப்பை வாரிக் கொட்டிவிட்டு சித்தி விலகிவிட்டாள். இல்லை, பத்மா தன் குடும்பத்திலிருந்து விலக்கப்பட்டு விட்டாள். ராஜசேகரன் என்ன செய்வதென்று தெரியாமல் நெளிந்தான்.

வரதராஜுலு ஸ்டேஷனுக்குள் நுழைந்ததும் ''ஹலோ'' என்று அவனைக் கைகுலுக்கினார். ''டோன்ட் ஓர்ரி, திஸ் அண்ட் ஆல் ஆர் பாஸிங் க்ளௌவ்ட்ஸ்!''

''அங்கிள்! நான் இவளை விட்டுட்டு வர மாட்டேன்.''

வரதராஜுலு அவனைத் தட்டிக் கொடுத்தார்.''காம் யுவர்ஸெல்ஃப்! நான் எப்பவும் உங்க பக்கம்தான். பார்த டைம் பீயிங் நீ என்னோடு புறப்படு. இந்தப் பெண்ணை பத்திரமாக ஒரு இடத்துக்கு அனுப்ப ஏற்பாடு செய்கிறேன். வித்தின் செவன் டேஸ், உனக்கும் இவளுக்கும் கல்யாணம், என்னை நம்பறியா ராஜா?''

''தேங்க்யூ அங்கிள்!''

இதே வார்த்தைகளை அவளும் மனப்பூர்வமாக முணு முணுத்தாள்.

ராஜசேகர் கிளம்பும்போது பத்மாவைப் பார்த்தான். ஒரு வாரமாக, உடலும் உள்ளமும் ஒருசேரத் துய்த்த இன்பங்கள் நினைவில்

---

வெங்காயத்தைச் சுட்டு அத்துடன் மஞ்சளையும் சிறிது நெய்யையும் விட்டுப் பிசைந்து கட்டிகளின் மீது கட்டினால் கட்டிகள் பழுத்து உடைந்துவிடும்.

-எஸ். விஜயா சீனிவாசன்

---

ஊசலாடின. அவை சட்டென தாகத்திற்கு எட்டாத கானலாக மாறியதை எண்ணி ஒரு திடுக்கிடல் ஆட்கொண்டது.

''அம்மா பத்மா! உன்னைத் தகுந்த இடத்தில் பாதுகாப்பாக வைத்திருப்பார்கள். நான் எல்லா உதவியும் செய்கிறேன். வரட்டுமா?'' அவளையும் ஆறுதல் படுத்திவிட்டுக் கிளம்பினார் வரதராஜுலு.

ராஜசேகரன் அவளைப் பிரிந்து... பிரிந்து தூரச் சென்று கொண்டிருந்தான்.

அவளிடம் ஒரு விம்மல் பீறிட்டது.

இரவு அவள் வந்து சேர்ந்த இடம் அபய இல்லம். ஆதரவற்ற அனாதைத் தன்மை. களங்கப்பட்டு விட்டதற்கான புறக்கணிப்பு. அநேகமாக இனி அதுதான் அவளுடைய நிரந்தரமான இடம்.

ராஜசேகர் பட்டு மெத்தையில் புரள்கிறான். பழவகை, பால் உண்கிறான். ராஜ உபசாரத்தில் அப்பா திக்குமுக்காட வைத்து தன்னையொத்த ஒரு பெங்களூர் தொழிலதிபரின் மகளை அவன் மனைவியாக்கும் முயற்சிக்குப் பேச்சு வார்த்தை நடத்துகிறார். அநேகமாக அந்த இடம் முடிந்து விடும்.

இந்த நாட்டில் ஆணும் பெண்ணும் சமமாம்! எல்லோரும் பேசிக் கொள்கிறார்கள்!

“அம்மா வந்திருக்கா!'' — வாசலில் காத்துக் கொண்டு நின்ற மதுமிதா சுசீந்தர் ஸ்கூட்டரை விட்டு இறங்கும்போதே மகிழ்ச்சியோடு அறிவித்தான்.

இறங்கி உள்ளே நுழைந்தவன்—

''வாங்க'' — மாமியாரை வரவேற்றான்.

அபிராமி அவனுக்கு மரியாதை காட்டும் வகையில் அடுக்களை வாசலில் பாதி மறைந்தும் மறையாததுமாய் நின்று கொண்டிருந்தாள்.

உடை மாற்றிக் கொண்டு வந்து ஓய்வாகக் கூடை நாற்காலியில் சாய்ந்து கொண்ட சுசீந்தர் கேட்டான்: ''நன்னா இருக்கேளா தாமுவும் பைரவியும் சௌக்கியம்தானே?''

''உம்...உம்... அவாளுக்கு என்ன சௌக்கியமாத்தான் இருக்கா!''

பதில் ஒரு விதமாக வரவும் சுசீந்தர் மனைவியையும் மாமியாரையும் ஒரு மாதிரியாகப் பார்த்தான்.

இதற்குள் அவனுக்கு மிகவும் பிடித்த நாகூர் அல்வா, உப்பு பிஸ்கட் இரண்டையும் ஒரு தட்டில் கொண்டு வந்து மதுமிதா அவன் எதிரில் வைத்தாள்.

அபிராமி எப்போது வந்தாலும் அவனுக்கென்று அவைகளை வாங்கி வரத் தவறுவதில்லை. கல்யாணமான புதிதில் ஒருமுறை நாகபட்டினம் மாமனார் வீட்டுக்குச் சென்றிருந்தபோது அவசரத்திற்காகக் கடையில் வாங்கி வந்து அவைகளை வைத்ததைச் சாப்பிட்டுவிட்டு ஓகோ என்று இவன் புகழ்ந்தான். இன்றைக்கும் அபிராமி மறக்காமல் எப்போது வந்தாலும் அரைக் கிலோ அல்வாவும் கால் கிலோ உப்புப் பிஸ்கட்டோடும்தான் வருவாள்.

''என்ன மது உங்க அம்மா பதில் ஒரு மாதிரியா வருது?'' தன்னிடம் அவள்நெருங்கியபோது இவன் கேட்க—

''சாப்பிடுங்கோ. அப்புறம் சாவகாசமா விசாரிச்சுக்கலாம்'' — மெல்லிய குரலில் அவள் அவன் வாய்க்குப் பிளாஸ்திரி போட்டாள்.

இரவு—

''அம்மா கோவிச்சுக்கிட்டு வந்திருக்கா.''

''ஓ!''

''மாட்டுப் பெண் மதிக்கிறதேயில்லையாம். தாமோதரனும் அவ இஷ்டப்படிதான் ஆடறானாம்.''

''சரி, அதற்காகப்புறப்பட்டு வந்துடறதா? இங்கே எத்தனை நாளைக்குத் தான் இருந்துட முடியும்?''


மதுமிதா அந்த இருட்டிலும் அவனைக் கோபமாகப் பார்த்தாள். கேட்டாள்—

''என் எத்தனை நாள் இருந்தால் தான் என்ன?''

சுசீந்தர் இதமாகவே சொன்னான்.

''அசடே! இருக்கிறதைப் பத்தி ஒண்ணுமில்லை. சின்னஞ்சிறுசுகள் கொஞ்சம் அப்படி





# முதுகு

கமலா நடராஜன்

இப்படி இருக்கத்தான் செய்யும். அதை விட்டு விட்டுத் தன் வீடு தன் வாசல்ங்கறதை மறந்து இப்படிப் புறப்பட்டு வரத் தொடங்கினா அவாளுக்கு இடம் கொடுத்துப் போயிடும். இவ இல்லாமலே சமாளிச்சுக்கலாம்கற தைரியம் ஏற்பட்டு அந்தத் தனிமைச் சுதந்திரத்தில் அப்புறம் இவளை ஓர் அந்நிய மனுஷியாவே நினைச்சு ஒதுக்கிடச் சொல்லும்!''



''எங்கே இருந்து சமாளிக்கிறது. கைக் குழந்தையையும் வச்சுக்கிட்டு வேலைக்காரியும் இல்லாம அவ எத்தனை நாள் சமாளிக்க முடியும்? இன்னும் கொஞ்ச நாளில் தானா வந்து அம்மா காலில் விழுந்து அவ அழைச்சிட்டுப் போறாளா இல்லையா பாருங்கோ.''

''தப்பாச் சொல்றே மது. குழந்தை அவளோடது மட்டுமா? உன் அம்மாவுக்கும் அது பேரக் குழந்தை இல்லே? அந்த ஐந்தாறு மாதக் குழந்தைக்கு ஒரு கஷ்டம்னு வந்தா அது உன் அம்மாவுக்குச் சந்தோஷம் தரக் கூடிய விஷயம்னு நினைக்கிறியா? பாவம் அந்தக் குழந்தையைக் குளிப்பாட்ட, மருந்து புகட்ட, உடம்புக்கு ஒண்ணு வந்துட்டா தைரியமாப் பக்கத்தில் இருந்து டார்த்துக்க கொள்ள உங்க அம்மா அங்கே இருக்கிறது தான் நல்லது. பெரியவங்கன்னு ஒருத்தர் இல்லாமக் கஷ்டப்படறது வேறே. ஆனா இருந்தும் ஒருத்தருக்கொருத்தர் இந்த மாதிரி வீம்பினால் சிரமப்படறது இரு தரப்புக்கும் நல்லதல்ல, கௌரவமுமில்லே.''

''அதற்காக?''

''என் யோசனை என்னன்னு கேட்டா இன்னும் இரண்டொரு நாள் கழிச்சு நீயே உன் அம்மாவை உன் தம்பி கிட்டே அழைச்சிக்கிட்டுப் போய் அவன் சம்சாரத்துக்கும் அவனுக்கும் நல்ல புத்தி சொல்லிச் சமாதானப்படுத்தி விட்டுட்டு வந்துடு.''

''அதாவது எங்கம்மாவை அவங்க காலில் போய் விழச் சொல்றேள். அப்படி ஒண்ணும் அவசியமில்லே. உங்களுக்கு அவளுக்குச் சோறு போடறது கஷ்டமாத் தெரிஞ்சா சொல்லிடுங்கோ. இப்பவே அவளைப் போகச் சொல்லிடறேன். பொண்ணு வீடாச்சேன்னு உரிமையோட வந்திருக்கா. இப்படின்னு தெரிஞ்சா எட்டிக் கூடப் பார்க்கமாட்டா. அவளுக்கும் வேற இடம் இல்லேங்கிறதனாலே தானே நீங்களும் இவ்வளவு அலட்சியமாப் பேசறேள். அவ மானஸ்தி. உங்க பிச்சைச் சோத்தை எதிர்பார்த்து இங்கே ஒண்ணும் வந்து நிக்கலே.''

இதுவரை அவள் கண்களில் எட்டிப்பார்த்துக் காண்டிருந்த கண்ணீர் இப்போது கன்னங்களில் வழியத் தொடங்கவும் சுரேந்தர் நிஜமாகக் கலங்கிப் போனான். இந்தச் சமயத்தில் தான் என்ன சொன்னாலும் எடுபடாது என்பதை உணர்ந்து மேலும் பேச்சைத் தொடராது விட்டு விட்டான்.

வழக்கம் போல் நாட்கள் நகர்ந்து கொண்டே இருக்க—

அபிராமியும் மதுமிதாவும் மட்டும் ஒவ்வொரு நாளையும் ஏதோ ஓர் எதிர்பார்ப்பிலும் ஏமாற்றத்திலுமாகக் கடத்திக் கொண்டு வருவது தெரிகிறது. நாளுக்கு நாள் அவர்களது இந்த அமைதியின்மை அதிகரித்துக் கொண்டேதான் இருந்தது.

சுரேந்தர் எதையும் கண்டு கொள்வதில்லே.

ஒருசில சமயங்களில் மதுமிதா அவள் தம்பியைப் பற்றியும் அவன் மனைவி பைரவி

யைப் பற்றியும் ஏதாவது பேசத் தொடங்கினால் கூடக் காதில் வாங்கிக்கொள்வதில்லை. அதே சமயத்தில் அபிராமி அங்கிருப்பதில் தனக்கு எந்தச் சுமையும் இல்லை என்பது போலவும் நடந்து கொண்டான்.

ஆயிற்று. அபிராமியும் அங்கு வந்து ஒன்றரை மாதம் ஓடி விட்டது.

தாய் மகள் இருவருமே ஒருவித ஏமாற்ற உணர்வை ஜீரணிக்க முடியாமல் திணறிக் கொண்டிருப்பது தெரிகிறது.

இப்போதெல்லாம் மதுமிதா காரணம் இன்றி சுசீந்தர் மேல் கோபப்படத் தொடங்கினாள். அவனது வழக்கமான நடைமுறை

### காது கரப்பானுக்கு மருந்து

காதில் கழட்டாமல் தோடு போட்டு கரப்பான் நீர் சுரந்து ஊந்தண்ணி வடியும். தாங்க முடியாத அரிப்பு ஏற்படும். உடனே தோட்டைக் கழட்டி வைத்துவிட்டு மாத்திரைக் கல்லில் அரிசி களைந்த கழுநீரை விட்டுக் கடுக்காயை இழைத்து மெழுகு போன்று வரும். அக்கலவையை அரிப்பு உள்ள காதின் இரு பாகத்திலும் மூன்று வேளைக்குக் குறையாமல் போடவும். கரப்பான் பறந்து போய்விடும். பூரண குணம் தெரியும். பிறகு தோடு அணியலாம்.

—சகுந்தலா காத்தையன்

கூடக் குறைகள் சொன்னாள். எதையும் கவனிப்பதில்லை. எதிலும் பட்டுக்கொள்வதில்லை என்று குற்றம் சாட்டினாள்.

சுசீந்தர் மனத்துக்குள் சிரித்துக்கொண்டான்.

மதுமிதாவின் தாழ்வு மனப்பான்மையைக் கண்டு அவனுக்கு அவளிடம் உண்மையிலேயே ஓர் அனுதாபம் தொடங்கிவிட்டிருந்த சமயத்தில்தான்—

ஒரு நாள்—

''அம்மா ஊருக்குப் போகணும்கறா!''

''ஊருக்கா... எந்த ஊருக்கு?''

''.....''

''சொல்லேன். எந்த ஊருக்கு?''

''தம்பி வீட்டுக்குத்தான்.''

''மானஸ்தி அங்கே ஏன் போறா?''

''அவளைப் பார்க்க யார் போறா. பேத்தி வகுளாவைப் பிரிஞ்சிருக்கிறது கஷ்டமாய் இருக்காம். ராத்திரி என்னென்னவோ அவளைப் பத்திக் கனவெல்லாம் கண்டாளாம். போறேங்கறா.''

''ரொம்பச் சந்தோஷம். அவ வீட்டுக்கு அவ போறதை யார் தடை பண்ண முடியும்''

''உங்களுக்கு நிம்மதிதானே?''

''என்ன சொல்றே நீ?''

''இல்லையா பின்னே? என் அம்மா இங்கே இருக்கிறது சுமைங்கிற மாதிரித்தானே அன்னிக்குப் பேசினேள்?''

அவனுக்கு உண்மையாகக் கோபம் வந்தது.

''அறிவில்லாம பேசாதே. அன்னிக்கு உன்கிட்ட நான் எடுத்துச் சொன்னது நியாயம். என்னிக்கும் நியாயத்தை ஏத்துக்கவும் ஒரு தைரியம் வேணும். குத்தம் யார் மேலே இருந்தாலும் குடும்பம் ஒண்ணுங்கிற எண்ணம் மாமியார் மருமகள் இரண்டு பேருக்குமே எல்லாக் குடும்பத்திலும் இருக்கணும். அதில்லாமல் இவளோ அவளோ யார் கோவிச்சுக்கிட்டு எங்கே போனாலும் பத்து நாள் கௌரவம்தான். அப்புறம் மேயப் போன மாதிரி வீட்டுக்குத்தான் திரும்பி ஆகணும். அன்னிக்கு நான் இதைச் சொன்னபோது உனக்குக் கஷ்டமாகத் தெரிந்தது. இப்போ அனுபவப்பட்டு உணரச்சே அந்த உண்மையை ஏத்துக்கத் தைரியம் இல்லாமே அதன் இயலாமையையும் கோபத்தையும் என்கிட்ட காட்டிப் பேசறே. இன்னும் சொல்லப் போனா....'' — மேலும் ஏதோ பேசத் தொடங்கியவன் அதோடு நிறுத்திக்கொண்டு விட்டான்.

மறுநாள்—

''ஸ்டேஷனுக்குப் போக வண்டி சொல்லி இருக்கேளா?'' — மது கேட்க,

''இதோ வந்துடும்'' — சுசீந்தர் பதில் சொன்னான்.

அபிராமி புறப்பட்டு விட்டாள்.

நெய்யில் செய்த அதிரசம் (தாமோதரனுக்கு மிகவும் பிடிக்கும்) ரவா கோதுமை உருண்டைகள், ஏழெட்டுத் தேங்காய் கொஞ்சம் மாங்காய் வற்றல் வடாம் ஊறுகாய் வகைகள் எல்லாம் பக்குவமாய்ப் பார்சல் செய்து அபிராமியிடம் கொடுத்திருந்தாள் மதுமிதா.

வாசலில் வண்டிச் சத்தம்.

''போயிட்டு வரேன்.''

அபிராமி சொல்லிக் கொண்டு கிளம்பிய போது சுசிந்தருக்கே என்னவோ போல்தான் இருந்தது.

''எல்லாம் சரியாப் போயிடும். போய்க் கடிதாசு போடுங்கோ. வகுளாவை ஜாக்கிரதையாப் பார்த்துக்கோங்க.''

அவள் கண்ணீரோடு தலையசைத்துவிட்டுப் புறப்பட்ட அதே சமயம்—

ரேழியில் யாரோ நுழைந்து வரும் காலடி ஓசை.

அடுத்த நிமிடம்—

அங்கே தாமோதரன், பைரவி — கையில் வகுளாவுடன்!

''வா தாமு. வா பைரவி''—சுசீந்தர் வரவேற்றான்.

மனம் கொள்ளாத மகிழ்ச்சியுடன் அபிராமி பாய்ந்து சென்று வகுளாவைத் தூக்கிக் கொண்டாள்.

''வாடாப்பா, இப்போத்தான் வழி தோணிச்சோ'' — மது தன் ஆத்திரத்தை எல்லாம் தம்பி மேல் பொழிய—

''என்னை ஏன் கோபிக்கிறே மது இதோ இவளைக் கேள். பெரியவங்க தயவில்லாம தானே சர்வாதிகாரியா விளங்கணும்னு நினைச்சா. அம்மாவை மதிக்கிறதே இல்லை. எதற்கெடுத்தாலும் ஏட்டிக்குப் போட்டி. அம்மா வருத்தத்தோடு புறப்பட்டபோது கூட அதனால்தான் நான் தடை பண்ணலை. அடுத்த இரண்டு நாளைக்கெல்லாம் என்ன கவனமின்மையோ வகுளாவுக்குக் காய்ச்சல் டாக்டர் மருந்து, மாத்திரைகள் ஒரு வாரம் தூக்கமில்லை. கொஞ்சம் அவளுக்கு உடம்பு சரியானதும் இவ படுத்துட்டா. கவனிக்கக் கூட ஆள் இல்லை. எப்படியோ தேறி எழுந்ததும் என்னை மீறி ஒரு நாள் சண்டை போட்டேன். கோபம். பிறந்த வீட்டுக்குப் போனா. எத்தனை நாள் வச்சிருப்பா நாலு பேர் என்ன ஏதுன்னு விசாரிக்கிறதுக்குள்ளே நல்ல புத்தி சொல்லி அவங்க அப்பா கொண்டு வந்து விட்டுட்டுப் போனார். அழுதா செய்தது தப்புன்னு ஒத்துக்கிட்டா. என் கிட்டே சொல்லி என்ன பிரயோசனம் அம்மா கிட்டே வந்து சொல்லுன்னு அழைச்சுக் கிட்டு வந்திருக்கேன்.''

பைரவி தலையைக் குனிந்து கொண்டு நின்றாள்.

அன்றும் மறுநாளும் அந்த வீடு மகிழ்ச்சியில் திளைத்தது.

அனைவரும் புறப்பட்டுச் சென்ற பிறகு—

''என்னை மன்னிச்சுடுங்க'' — மது தன் கணவனின் மார்பில் புதைந்து கொண்டாள்.

''என்ன மது? ஏன் கலங்கறே? அம்மா ஊருக்குப் போயிட்டாள்னா?''

அவள் அவனை அண்ணாந்து பார்த்தாள்.

கண்ணீருக்கிடையே சொன்னாள். ''ஆமா ஆனா என் அம்மா இல்லை. உங்க அம்மா. அவர்களை நான் எவ்வளவெல்லாம் அலட்சியப் படுத்திட்டேன். அவ்வளவுக்கும் கோப படாமே இருந்தவங்க ஒரு சமயம்உங்களுக்கும் எனக்கும் இது சம்பந்தமா மனஸ்தாபம் வந்து ஒரு வாரம் பேசாமே இருந்தவுடன் நம்மால் இவர்களுக்குள் ஏன் தகராறுன்னு மக வீட்டுக்குப் புறப்பட்டுப் போய் மாசம் ஆறுகிறது. என்ன இருந்தாலும்அவர்களுக்கு அது கௌரவமா இருக்குமா? நான் அதைப் பத்தி யெல்லாம் இதுவரை கனவிலே கூட சிந்திக்கலையே. இப்போ எனக்குன்னு வரச்சேதானே என் முதுகு எனக்குத் தெரியறது.''

அவன் அவளை ஆதரவாக அணைத்துக் கொண்டே கேட்டான்.

''அது சரி, உனக்கென்ன பிள்ளையா குட்டியா அவர்கள் தயவு தேவைப்படறதுக்கு''

மது பொய்க் கோபத்தோடு அவனை முறைத்தாள்.

''இந்தக் குதர்க்கம்தானே வேண்டாம் கிறது. பிள்ளை குட்டியை வளர்க்கறதுக்கு மட்டும் இல்லை. பெறுவதுக்கும் கூடப் பெரியவங்க, மனப் பூர்வமான ஆசீர்வாதம் வேணும். அப்படியே குழந்தை இல்லேன்னாலும் பரவா இல்லை. அவர்களுக்கு நான் குழந்தையா இருந்துட்டுப் போறேன்.''

சுசீந்தர் அவளிடம் ஓர் உள் நாட்டுக் கவரை எடுத்து நீட்ட...

மதுமிதா எழுதத் தொடங்கினாள்...

'தேவரீர் அத்தை அவர்களது பொற்பாத கமலங்களுக்கு....

**பருக்களை போக்குவது எப்படி?**

முகத்திலும் மற்ற இடங்களிலும் உள்ள பருக்களை மிகச் சுலபமான முறையில் போக்கிவிடலாம். அதிகாலையில் முற்றிய கருவேப்பிலையைப் பறித்து மாத்திரைக் கல்லைச் சுத்தம் செய்து அதில் வைத்து அழுத்தமான பால் போன்ற வெள்ளை சங்கால் சிறிது நீர் விட்டு இழைத்து குழகுழவென்று வரும் கலவையை பருக்கள் உள்ள இடங்களில் நன்கு முட்டுப் பூச்சாகத் தடவி விடவும். பிறகு ஒரு மணி நேரம் கழித்து முகத்தை அலம்பி விடலாம். (சோப்பு உபயோகிக்கக்கூடாது) இம்மாதிரி மூன்று நாள் விடாது அதிகாலையில் செய்து வந்தால் வருஷக் கணக்காக மறையாத பருக்கள் மறைந்து விடுகின்றன. கருவேப்பிலையில் உள்ள பாஸ்பரஸ், வெண் சங்கில் உள்ள கால்சியமும் பருக்களை அழித்து விடுகின்றன.

—சகுந்தலா சாத்தையன்

# பேணி வளர்த்தேன்

பரிசுபெற்ற கட்டுரைகள்



## முதல் பரிசு:
## வெள்ளி அஷ்டலக்ஷ்மி சொம்பு

ஒரு நாள் என் சிறிய பெண் (இரண்டரை வயது) தண்ணீரைக் கீழே ஊற்றி ஊற்றி விளையாடிக் கொண்டிருந்தாள். நான் தரை புதிதாய் மொஸைக் போட்டிருப்பதால் வழுக்கும் என்று எவ்வளவோ சொல்லியும் குழந்தைப் புத்தியாகையால் கேட்கவில்லை. சிறிது நேரம் சென்ற பின் வீறிட்டு அலறும் சத்தம் கேட்டு நான் பதறிக் கொண்டு வந்து பார்த்தால், குழந்தை கீழே விழுந்து முழங்காலில் அடிபட்டு விட்டது என்று சொன்னாள். நான் காயம் ஒன்று மில்லாததால் அப்போதைக்கு மருந்து போட்டு அவளைப் படுக்க வைத்து விட்டேன்.

மறுநாள் காலைத் தொட்டுக் குளிப்பாட்ட முடியாமல் வலி, வலி என்று அலறினாள். அதனால் டாக்டரிடம் சென்று காண்பித்தோம். அவர் ஒரு இன்செக்ஷன் போட்டார். இரண்டு நாள் கழித்து முழங்காலில் வீக்கம் கண்டது. வலியும் குறையவில்லை. மறுபடியும் ஸ்கிரீன் டெஸ்ட் பார்த்ததில் சிறு 'கிராக்' இருப்பதாகக் கூறி, பாண்டேஜ் போட்டு மருந்து கொடுத்தார். கால் வலியினால் குழந்தை தூங்க முடியாமல் தவித்தாள்.

பின் அவளை சென்னையில் உள்ள மிகப் பெரிய எலும்பு சிகிச்சை நிபுணரிடம் அழைத்துச் சென்றோம். (அவர் பெயரை வெளியிட விரும்பவில்லை.) அவர் எல்லா டெஸ்ட்டும் செய்து கொண்டு வரும்படி சொன்னார். எல்லாவற்றையும் பார்த்த அவர் இது ஒரு வகை எலும்பு டி. பி. என்று கூறியதும் அன்று நான் விட்ட கண்ணீர்!

சிகிச்சை தொடங்கியது. 15 நாட்களுக்கு ஒரு முறை நாங்கள் சென்னை சென்று வந்தோம். இப்படி ஒவ்வொரு முறை செல்லும்போதும் ரத்த, சிறுநீர்ப் பரிசோதனை எக்ஸ்ரே போன்றவற்றைச் செய்தோம். அதுவும் அவர் கூறும் நபர்களிடமே சென்று பரிசோதனை செய்தால்தான் ஏற்றுக் கொள்வார். இங்குள்ள டாக்டர்களிடம் செய்து கொண்டு போனால் ஏற்க மாட்டார். மீண்டும் செய்து கொண்டு வரும்படி வற்புறுத்துவார். ஒவ்வொரு முறையும் அவருக்கு ரூ. 25 மற்ற பரிசோதனைகளுக்கென்று 5, 6 மைல் சுற்றி, பின் மீண்டும் அவற்றை வாங்கிச் வரச் சென்று அவரிடம் கொடுப்போம். அவர் இருக்கும் ஏரியாப் பக்கம் டாக்ஸி கிடைப்பது கஷ்டம். ஆகவே குழந்தையை பிளாஸ்டர் காலுடன் (எவ்வளவு கனம் என்று நினைத்துப் பாருங்கள்) நாங்கள் மாற்றி மாற்றித் தூக்கிக் கொண்டே ஒன்றரை பர்லாங் வரை நடந்து சென்று டாக்ஸி பிடித்து போய் வருவதற்குள் அந்த வெய்யிலில் நாங்கள் படும் பாடு!

மேலும் அவர் கூறும் ஆஸ்பத்திரிக்கு அந்த டயத்தில் போய்க் கட்டுப் போட வேண்டும். கட்டுப் போடுவதற்கு வேண்டிய துணி, மாவு இவை வாங்க வேண்டியதும் நம் பொறுப்பு. சில நாட்கள் நாங்கள் சாப்பிடக் கூட நேரம் இருக்காது. ஆபரேஷன் தியேட்டரில் கட்டுப் போட்டுக் குழந்தையை அனுப்பு முன் பில் நம் கைக்கு வந்துவிடும். அதைக் கொண்டு போய் பணம் கட்டிய பின்தான் குழந்தை வெளியே அனுப்பப்படுவாள். இதற்குத் தியேட்டர் சார்ஜ், கட்டுப் போட சார்ஜ் என்று வேறே தனி. இப்படி ஒவ்வொரு முறையும் நாங்கள் சென்னை சென்று வர ஆன தொகை ஆயிரத்துக்கும் குறைவில்லை.

இப்படி ஒன்றரை வருடங்கள் ஓடி மறைந்தன. கடைசியில் என்ன தெரியுமா? பிளாஸ்டர் போட்டுப் போட்டுக் குழந்தையின் கால் கறுத்து சூம்பிப் போய் விட்டது. பிடித்துக் கொண்டு நடந்தவள், நடக்கவே முடியாத நிலைமைக்கு வந்து விட்டாள். எங்களுடைய மனோநிலையும், குழந்தையின் நிலையும் எப்படி இருந்திருக்கும் என ஊகியுங்கள். அவள் ஒருவளால் மட்டும்தான் அத்தகைய நிலைமையைச் சமாளிக்க முடிந்தது என்பதை

நினைத்து நான் இன்று கூடப் பெருமைப் படுவது உண்டு. அப்போது அவள் சாப்பிட்ட மருந்தை நினைத்தாலே இன்று கூட எனக்கு வாந்தி வரும்.

பின் ஒரு சமயம் அந்த டாக்டர் கோவை வருவதாக அறிந்து இங்கு பக்கமாக இருப்பதால் அங்கேயே சென்று காட்டலாம் என்று முடிவு செய்தோம். கோவை சென்ற பின்தான் மற்றவர்கள் அவரைப் பற்றிய குணங்களைச் சொல்லியும் நாங்கள் காரியம் ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு பொறுமையுடன் இருந்ததை எண்ணி வெறுப்புற்றோம். அந்த டாக்டரின் பேரில் எங்களுக்கு ஏற்பட்ட அந்த ஒரு நிமிட வெறுப்பு எங்களைக் கொலைகாரர்களாக மாற்றாமலிருந்தது ஆச்சரியம்தான். அதற்குக் காரணம் குழந்தையைப் பார்த்த அவர், 'இவளை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறதே' என்றாரே பார்க்கலாம்! எப்பேர்ப்பட்ட கவனிப்பு நோயாளியின் மீது என்று பாருங்கள். இதுநாள்வரை பணத்தைப் பார்த்தாரா, நோயாளியையா என்று தெரியவில்லை. அன்று நாங்கள் எடுத்த முடிவு குழந்தைக்குக் கால் சரியாகா விட்டாலும் பரவாயில்லை. இவரிடம் வைத்தியத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பது என்பதுதான்.

5, 6 மாதங்கள் சென்ற பின் குழந்தையின் வேதனையைத் தாங்க முடியாமல் நாங்கள் அவளை வேலூர் கூட்டிச் சென்றோம். அங்கு நாங்கள் இதுவரை குழந்தைக்குக் கொடுத்த டிரீட்மெண்ட் பற்றிய விவரங்களைக் காட்டியதற்கு நாங்கள் பார்த்து முடிவெடுக்க வேண்டுமே தவிர மற்றவருடைய ரிப்போர்ட்டை பார்க்க மாட்டோம் என்று சொன்னார்கள். பின் அவர்கள் பரிசோதனை செய்து இது எலும்பு டி. பி. அல்லவென்றும், முன்பே வந்திருந்தால் ஒரு மாதத்தில் குணமாகி இருக்கும் என்றும் மேலும் சென்னையில் போடப்பட்ட பிளாஸ்டர் காலின் வெளிப் பக்கமாகச் சுற்றாமல் உட் பக்கம் சுற்றியதால் கால் உட் பக்கமாகத் திரும்பி யுள்ளது என்றும் கூறினர்.

நாங்கள் வேலூரில் ஒரு மாதம் தங்கினோம். டாக்டர் சௌந்திர பாண்டியன் என்பவர் முழங்காலுக்குச் சிறிது கீழாக எலும்பின் பின்புறம் காலில் துளையிட்டு, அதில் ஒரு ஸ்டீல் ராடு சொருகி, அதன் இரு முனைகளிலுமாக ஒரு கம்பியை இணைத்து அதிலிருந்து ஒரு சக்கரத்தில் மணல் மூட்டையைத் தொங்க விட்டு சிகிச்சையைத்தொடங்கினர். ஒரு நாள் விட்டு ஒரு நாள் புட்டத்தில் ஊசி வேறு. கொஞ்ச நாளில் ஊசி போட்டால் ரத்தம் வரக்கூடிய அளவுகுழந்தை வேதனைப்பட்டது. ஆனால் அவளோ நாங்கள் வருந்தக் கூடாது என்ற நினைவில் எந்த வித வேதனையையும் வெளிக் காட்டாமல் எப்போதும் சிரிப்புடன் என்னால் உங்களுக்கு எவ்வளவு கஷ்டம், செலவு என்று தன்னையே நொந்து கொள்ளக் கூடிய உயர்ந்த மனம் படைத்தவளாக விளங்கினாள். இதனால் எல்லா டாக்டர்களும் இவள் பேரில் ஒரு தனி அன்பு. இப்போதும் யாராவது இங்கிருந்து வேலூர் சென்றால் என் பெண் நலமா என்று கேட்காத டாக்டர்கள் இல்லை.

கைராசியான, கனிவான டாக்டரின் கை வண்ணத்தினால் கட்டைப் பிரித்த அன்றே என் மகள் எழுந்து பாத் ரூம் சென்ற காட்சி எங்கள் வயிற்றில் பால் வார்த்தது. அதன் பின் அவர்கள் கருத்துப்படி அவளைக் கேரளாவில் உள்ள ஆயுர்வேத மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்று நவரக்கிழி என்ற சிகிச்சையை ஆரம்பித்தோம். இதற்காக அவளுக்குப் பத்தியச் சாப்பாடு. ஆகையால் எனக்கும் பத்தியம். ஐந்து வருடங்கள் நாங்கள் பட்ட பாட்டிற்குப் பலன் கிடைத்தது.

இன்று அவளும் எல்லோரையும் போல் நன்கு வளர்ந்து நடந்து சென்று கான்வென்ட்டில் படிக்கிறாள். அவளுடைய பொறுமையும் எங்களின் விடாமுயற்சியும், என்னுடைய கண்காணிப்பும், டாக்டரின் திறமையும் எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனின் கருணையும் இருந்ததினால் என் மகளின் பெரிய பிரச்னை தீர்க்கப்பட்டது.

**எஸ். விஜயலட்சுமி,**
**திருப்பூர்**



**இரண்டாம் பரிசு:**

**வெள்ளி சலங்கை பேலா**

**நா**னும் என் கணவரும் எங்கள் பெற்றோர்களின் எதிர்ப்புடன் கலப்புத் திருமணம் செய்து கொண்டோம். பட்டதாரியான என் கணவர் நல்ல பதவியில் இருந்தபோதிலும் அப்போதுதான் நடந்த தன் தங்கையின் திருமணத்தின் காரணமாக ஏகப்பட்ட கடன். எங்கள் திருமணம் நடந்த அதே மாதம் என் கணவருக்குத் தஞ்சாவூருக்கு வேலை மாற்றலாகி விட்டது. நானும் அதே மாதம்

# குழந்தை பிறந்த 6 மணி நேரத்திற்கு பின்பு அது, முதல் தடுப்பு ஆகாரம் பெறுகிறது. அதை ஊட்டுவது நீங்கள்தான்.

இயற்கையின் ஒரு வரப்பிரசாதம் தாய்ப்பால்.

தாய்ப்பாலில் இயல்பாகவே நோய் எதிர்ப்புப் பொருள் அடங்கியுள்ளது. புதிதாகப் பிறந்த குழந்தைக்கு, வயிற்றில் வாயுக்கோளாறு மற்றும் இதர நோய்களுக்கு எதிரே பாதுகாப்பு அளிப்பதில் முக்கிய பங்காற்றுகிறது தாய்ப்பால்.

## இயல்பான ஊட்டச்சத்து

இயற்கையும் அறிந்துள்ளது: குழந்தைக்கான தாய்ப்பாலை உன்னத உணவாக்குபவை அதில் இயல்பாக சரிவிகிதமாகக் கலந்துள்ள உடல் வளர்ச்சிச் சத்துக்கள் (புரதம்), சக்தி தரும் சத்துக்கள் (கார்போ ஹைட்ரேட்டுகள், கொழுப்பு) ஆரோக்கியமான பாதுகாப்புச் சத்துக்கள் (வைட்டமின்கள்) ஆகும் (உதாரணமாக தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகள், வைட்டமின் 'சி' குறைவினால் ஏற்படும் ஸ்கர்வி நோயால் பொதுவாக பாதிக்கப்பட மாட்டார்கள்) முலைப்பால் உண்ட குழந்தை பாதுகாப்பையும் தன்னம்பிக்கையையும் பெறுகிறது. காரணம், பசியைத் தணித்திட குழந்தை முலைப்பாலை உறிஞ்சும் போது, நீங்கள் குழந்தையை அரவணைத்துப் பாசத்தையும் சேர்த்தல்லவா பாலூட்டுகிறீர்கள்.

## உலகளாவிப் பிரபலமடைகிறது

அதன் ஊட்டச்சத்து மற்றும் இதர நலன்கள் விரிவாகவும் அதிகமாகவும் உணரப்படுவதால் மேலை நாடுகளிலும் கூட முலைப்பால் கொடுத்தல் மிகவும் அதிகமாக பிரபலமாகி வருகிறது.

உங்கள் உடல் நல பாதிப்பு அல்லது பால் பற்றுக்குறை ஆகியவறறால் நீங்கள் குழந்தைக்கு பால் கொடுக்க முடியாமல் போனால் என்ன செய்வது?

உங்கள் குழந்தைக்கு நீங்கள் சிறந்த 'தாய்ப்பால் மாற்று' தேர்ந்தெடுக்க வேண்டும்.

## ஸ்ப்ரே ட்ரை செய்யப்பட்ட அமுல் ஸ்ப்ரே

அமுல் ஸ்ப்ரே-நன்கு சமச்சீராக கலக்கப்பட்ட சத்துக்களுடன் கூடியது—பிரதம தரமுள்ள புரதம், ஜீரணிக்க எளிதான கொழுப்பு மற்றும் கார்போஹைட்ரேட்டுகள், சரியாகக் கலந்துள்ள வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள்.

ஏற்கனவே கொதிக்க வைத்த வெதுவெதுப்பான நீரில் அதைக் கலப்பது எளிது, முன்னாலேயே அதை பசை போல் தயாரிக்க வேண்டிய அவசியம் இல்லை.




## சிக்கனமானது

டின்னில் அடைக்கப்பட்டுள்ள குழந்தை உணவுகளில் மிகவும் சிக்கனமானது, அமுல் ஸ்ப்ரே. காரணம், அது இந்தியாவின் 'வெண்மைப் புரட்சிக்கு' முன்னோடியான நவீன பால் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆனால் கொதிக்க வைத்த நீர் சுகாதார முறையில் கிருமி நீக்கம் செய்யப்பட்ட பாத்திரங்கள் மற்றும் பால் புட்டிகள் உபயோகித்தலை உறுதி செய்து கொள்ளுங்கள். பால் கலக்கப்படும்போது அதிகம் நீராகி விடுவதைத் தவிர்ப்பதற்கும், போதுமான ஊட்டச் சத்துக்களை உறுதி செய்வதற்கும் டின் மீது குறிப்பிட்டுள்ள வழி முறைகளை கவனமாக பின்பற்றுக.

**இலவசம்! அமுல் வளர்ப்பு வழி—**
இதில் அடககியுள்ளவை: கருத்தரித்தல், பேறு காலத்திற்கு முன் கவனிப்பு, பிரசவம், தாய்ப்பால ஊட்டுதல், வெளியில கிடைக்கும் உணவு வகைகள், லேசான தானிய உணவு தருதல், குழந்தையின் அன்றாடக கடன்கள், குழந்தையின் வளர்ச்சி, நோய்த் தடுப்பு, முதலுதவி, பொதுவான நோய்கள், நோயுற்ற குழந்தையைப் பாதுகாத்தல் தமிழ், இந்தி, மராத்தி, குஜராத்தி, ஆங்கிலம், தெலுங்கு மற்றும் மலையாள மொழிகளில்.

உங்கள் பெயர் மற்றும் முகவரியுடன் ரூ. 1.25 தபால் தலை ஒட்டி எழுதுக இம் முகவரிககு: தபால் பெட்டி எண் 10124, பம்பாய் 400 001.

உங்கள் குழந்தையின் ஆரோக்கிய ஆர்வத்தில் ஒரு நற்செய்தி வழங்குகின்றனர் அமுல் ஸ்ப்ரே தயாரிப்பாளர்கள்.

# அமுல்ஸ்பரே

இந்தியாவின் முன்னணி பால் நிறுவனத்தின் தயாரிப்பு.

குஜராத் கோ-ஆப்பரேடிவ் மில்க் மார்க்கெட்டிங் ஃபெடரேஷன் லிமிடெட்
தபால் பெட்டி எண்.10,
ஆனந்த் 388 001 குஜராத் மாநிலம்.




ASP/AS-1/83

கர்ப்பம் தரித்திருந்த காரணத்தால் என்னை சென்னையிலேயே இருபத்தைந்து ரூபாய் வாடகை வீட்டில் வைத்து விட்டுப் போய் விட்டார். நான் பி. யூ. சி. படித்திருந்த காரணத்தால் வீடுகளில் டியூஷன் சொல்லிக் கொடுத்தேன். எங்கள் இரு பெற்றோர்களும் சென்னையிலேயே இருந்த போதிலும் இரு வீட்டாராலும் புறக்கணிக்கப் பட்டேன். மசக்கையின் இயலாமை ஒரு புறம், வறுமை ஒரு புறம். என் கணவரிடமிருந்து தவறாமல் கடிதங்கள்தான் வருமேதவிர பணம் வராது. என் டியூஷன் வருமானம் வீட்டு வாடகை கொடுக்கவும், அன்றாடம் டீ, பன், மற்றும் டியூஷனுக்குப் போய் வர பஸ் கட்டணத் திற்கே போதாது.

ஒன்பது மாதங்கள் கடந்து என் மூத்த மகன் சென்னை கோஷா ஆஸ்பத்திரியிலே பிறந்தான். கர்ப்பத்தின்போது தகுந்த போஷாக்கு, ஓய்வு, மன நிம்மதி இல்லாமை யின் காரணமாக மிக மிக பலவீனமாகப் பிறந்தான். அதன் காரணமாக பிறந்த மூன்றாம் நாளே அவனுக்குத் தொடர்ச்சி யாகப் பேதி கண்டது. மருந்து கொடுத்தும் நிற்கவில்லை. எனக்கோ பச்சை உடம்பு. பிறந்த சிசுவான குழந்தைக்கோ க்ரோனிக் டயரியா. என்னை வெறுத்து ஒதுக்கியவர்கள் குழந்தையும் நானும் ஒழிந்து போவதற்கு இந்நிலையைச் சாதகமாக எதிர்பார்த்தார்கள்.

பிறந்த மூன்றாம் நாள் ஆரம்பித்த பேதி பதினோராம் மாதம்தான் நின்றது. இதற் கிடையில் பிரைமரி காம்ப்ளெக்ஸ், ஜுரம், வைசூரி, ஜலதோஷம், இருமல், ஒரு முறை கீழே விழுந்து கைமுட்டி எலும்பை முறித் துக்கொண்டது, இப்படி ஐந்து வயது வரை நான் பட்ட துன்பம், அப்பப்பா! என் விரோதிக்குக் கூட வரக் கூடாது.

எத்தனை டாக்டர்கள், ஆஸ்பத்திரிகள், நாட்டு வைத்தியங்கள், திருஷ்டி கழிப்புகள், மந்திரித்த முடிகயிறுகள், பில்லைகள்,கோயில் குளங்கள், ஜெபங்கள், பிரார்த்தனைகள்! இத் தனைக்கும் மேலாக "என் குழந்தையின் இழப் பைக் கற்பனையிலும் நினைத்துப் பார்க்க முடியாத, அதே சமயத்தில் என் குழந்தை பிழைத்தே ஆக வேண்டும்; மற்ற குழந்தை களைப் போல் நார்மலாகப் பள்ளிக்குப் போய் தான் ஆகவேண்டும, என் தோளுக்கு மிஞ் சின பிள்ளையாக நான் காணத்தான் வேண் டும் என்கிற அசைக்க முடியாத என் பிடி வாதக் கொள்கை ஒரு பக்கம்.

பிள்ளையோ எழுந்தால் நிற்க முடியாது, நின்றால் நடக்க முடியாது. என்ன செய்தால் ஒரு நார்மல் குழந்தைக்குரிய வலுவுடன் வளருவான் என்கிற ஒரே கவலை, நோக்கத் துடன், நான் உணவு, ஓய்வை மறந்தேன். சுகத்தைத் துறந்தேன். என் குழந்தையின் உயிர் காக்க மற்றொரு மலை போன்ற பிரச்னை 'பணம்'. அதற்காக நான் துணி தைப்பது, எம்பிராய்டரி போடுவது,டியூஷன் சொல்லித் தருவது போன்ற வழிகளை நாடினேன். அண்டை அயலார் வீட்டில் உள்ள குழந்தை களை மூன்று வயதில் பள்ளியில் சேர்த் தார்கள். ஆனாலும் என் பிள்ளையின் உடல் நிலை காரணமாக அவனை மூன்று வயதில் பள்ளிக்கு அனுப்ப இயலாமல் வீட்டிலேயே நானே பாடங்களைப் போதித்தேன். இதற் கிடையில் பிரைமரி காம்ப்ளெக்ஸினால் அவன் மிகவும் உபத்திரவப்பட்டான். அந்த நோய் உடம்பிலிருந்து வேரோடு போகத் தொடர்ச் சியாக வைத்தியம், சத்துணவு என்று இரவு பகல் பாராமல் கண்காணித்தேன். இதனால் என் உடல்நிலை மிகவும் பாதித்தது.

''ஒரு குழந்தை போனால் இன்னொரு குழந்தை, வீணாக ஏன் உடம்பைச் சீரழித்துக் கொள்கிறாய்'' என்று எனக்கு உபதேசம் செய்தவர்களும் உண்டு. எப்படியோ ஐந்து வயது வரை வளர்த்து ஆறாவது வயதில் பள்ளியில் முதல் வகுப்பில் சேர்த்தேன். அச்சமயம் என் கணவர் லக்னோவில் இருந் தார். மகனைப் புகழ் பெற்ற ஆங்கிலப் பள்ளி யில் சேர்த்ததைக் குறித்து என் கணவருக்கு ஒரு கடிதம் போட்டேன். அதற்கு அவர் குழந்தையை எமனிடமிருந்து போராடி, காத்து, அவனைப் பள்ளியிலும் சேர்த்துவிட்ட தைக் குறித்து என்னை மிகவும் பாராட்டி எழுதியிருந்தார்.

ஒரு ராணுவ வீரன் போல் மிடுக்கு நடை போட்டு அவன் பள்ளிக்குச் செல்லும் அழ கில் மயங்கி ஒதுங்கி யிருந்த என் மாமனார் தன் பேரனைத் தன்னோடு வீட்டுக்கு அழைத்து போய் வருவார். என் பெற்றோர்களைப் பற்றி சொல்லவே வேண்டாம். அவன்தான் அவர் களின் உலகம் என்று ஆகிவிட்டது.

இப்படியாகப் பேணி வளர்த்த என் மகன் இன்று உண்மையில் என் தோளுக்கு உயர்ந்த வனாக ஒன்பதாம் வகுப்புப் படிக்கும் மாணவ னாக, என் அலுவலகத்துக்கு நேரமானால் (ஆசிரியையாகப் பணி புரிகிறேன்) என்னை சைக்கிளில் டபுள்ஸ் ஏற்றிச் செல்லும் ஆபத்

பார்த்தவனாக, சில நேரங்களில் வீட்டிற்கு வர நேரமானால் என்னைத் தேடி வரும் உத்தம மைந்தனாக, வல்லவனாக, நல்லவனாக எல்லாவற்றிற்கும் மேலாகத் தெய்வ சிந்தை, தெய்வ பயம் மிக்கவனாக வளர்த்து வருகிறேன்.

ஜெயா கணபதி
சென்னை - 11




மூன்றாம் பரிசு:
**வெள்ளி டம்ளர்**

குழந்தை வளர்ப்பில் தாயின் பங்கு மிகப் பெரியது, உன்னதமானது, என்பதனை நான் தாயானவுடன்தான் உணர்ந்தேன்.

எனக்கு இரண்டு ஆண் குழந்தைகள். இரண்டும் சிசேரியன் மூலம் பிறந்தவை. முதல் பிள்ளைக்கு நான்கு வயதும், இரண்டாமவனுக்கு ஒன்றும் வயதாகிறது. முதல் பத்து நாட்கள் வரை டாக்டரின் நேரடிக் கண்காணிப்பில் அவர் அட்வைஸ்படி குழந்தையைக் கவனித்து வந்தோம். வீட்டிற்கு வந்த பிறகு ஒவ்வொரு முறை பால் கொடுக்கும்போதும் மிக்க கவனத்துடன் எந்தவித தொற்று நோயும் குழந்தையைத் தாக்காதபடி கவனித்து வந்தேன். குழந்தைக்கு உபயோகிக்கும் பால் பாட்டில், துணி மணிகள் முதலியவற்றைச் சுத்தமாக வைத்துக் கொண்டேன். மேலும் குழந்தையின் நிலையை அடிக்கடி இரவென்றும் பாராமல் கண்காணித்து வந்தேன். இதனால் குழந்தைக்கு ஜலதோஷம் போன்றதொந்தரவுகள் அடிக்கடி வராமல் பார்த்து வந்தேன். குழந்தைக்குத் தேவையான அளவு பால் கொடுத்தல், அதன் தேவையை உடனுக்குடன்பூர்த்தி செய்தல் போன்றவற்றால் அதன் அழுகுரலிலிருந்து என்னைப் பல சமயங்களில் மீட்டுள்ளன.

குழந்தை சற்றே வளர்ந்த நிலைமையை அடைந்தவுடன் அதன் பிடிவாதமும் வீம்பும் வளரா வண்ணம் அதன் குறிப்பறிந்து, தக்கனவற்றைச் செய்தும், தகாவற்றை எவ்வாறு விலக்குவதென்றும் யோசித்து வைத்துக் கொள்வேன். குறிப்பாகக் குழந்தை அழுகின்றதே என்று அதற்கு ஏதாவது உணவுப் பண்டத்தைக் கொடுத்துச் சரி செய்ய மாட்டேன். உடனே வண்ணப் படங்கள் உள்ள புத்தகங்களைக் காட்டி, 'இதோ பார் யானை, பூனை என்று கூறி இது என்ன? அம்மாவுக்குத் தெரியவில்லையே. நீ சொல் பார்க்கலாம்' என்பேன். அவன் கூறியவுடன் 'சபாஷ்' 'வெரி குட்' போன்றவற்றைக் கூறி அவனை மகிழ வைத்து அவன் போக்கை ஆக்கப் பூர்வமாக மாற்றியுள்ளேன். இப்பொழுதும் அவன் புத்தகத்தைக் கண்டால் எப்படிப்பட்ட கோபமாக இருந்தாலும் மாறி விடுவான். அவ்வாறில்லாமல் கண்ட நேரங்களில் குழந்தையின் அழுகையை நிறுத்த ஏதாவது தின்னக் கொடுத்தல், அல்லது காசு கொடுத்தல் போன்றவைகள் அவனது எதிர்கால வாழ்க்கையைப் பாதிக்கும் என்பது எண்ணம். மேலும் வயிற்றுப் போக்கு போன்ற வியாதிகள் அடிக்கடி பல வீடுகளில் குழந்தைகளுக்கு ஏற்படுவதும் இதனாலேயே.

ஒருவாறு அவனுக்குப் பேசும் திறன் வந்தவுடன் அவனுக்குப் பாடம் சம்பந்தமான நூல்கள், நோட்டு, பென்சில்கள் போன்றவைகள் வாங்கி வர ஆரம்பித்தேன். இதனால் நான் வேலைக்குக்கிளம்பும் போது, 'அம்மா எனக்கு வேறே புக் வாங்கி வாம்மா. இதைப் படிச்சுட்டேன்' என்பான். அவன் ஒருபோதும்



என்னை மிட்டாய், சாக்லேட் வாங்கிவரும் படி கேட்டதில்லை. ஏனென்றால் அவனுக்குச் சிறு வயதிலிருந்தே நான் புத்தகத்தில் ஈடுபாடு ஏற்படும்படி செய்துள்ளேன்.



நான் அவனைச் சிறு வயதிலிருந்தே என் சிரமத்தையும் பாராமல், காலையில் வேலைக்குச் செல்லும் முன்பும் வேலையிலிருந்து வந்த பின்பும் நன்கு துடைத்து பவுடர் பூசி, துவைத்த ஆடைகளை மாற்றி தலை வாரிப் பொட்டிட்டு, இப்ப நீ யாராட்டம் இருக்கே? ராஜாவாட்டம் என்று கூறிப் பூரிப்பேன். அந்தப் பழக்கம் இன்றும் அவனிடம் ஊறியுள்ளது. இன்றும் மாறாமல் அவன் இரு முறை நன்கு டிரஸ் செய்து கொள்ளுவான். இதனால் மண்ணைத் தொடுதல், அழுக்கு முதலியவை அவனே விரும்பாத விஷயங்கள்.

என் பிள்ளையும் குறும்புக்காரன்தான். அவன் பல சமயங்களில் விஷமங்கள் செய்து அடிபட்டுக் கொள்வான். அப்போது ''ஏனடா இப்படிச் செய்தாய்?'' என்று மிரட்டினால் ''நான் அப்படித்தான் செய்வேன் போ!'' என்று நம்மையே திட்டுவான். ஆகையால் அவன் குறும்பு செய்தவுடன், 'இனி இப்படிச் செய்யாதேடா கண்ணு, சாமிக்குக் கோபம். அதனால்தான் உன்னைக் கீழே தள்ளிட்டார். என்று கூறி நீ சாமிக்கு ஒரு ஸ்லோகம் சொல்லு, சாமி உன் கூட சேத்தி விடுவார் என்பேன். உடனே அவன் ஸ்லோகம் ஒன்று தன் மழலையில் கூறுவான். அப்பொழுதே இன்னொரு புது ஸ்லோகம் ஒன்றும் சொல்லிக் கொடுத்து விடுவேன். இவ்வாறு அவனுக்குப் பல ஸ்லோகங்கள் கற்றுக் கொடுத்து விட்டேன்.

எப்படியோ இந்த வருடம் அவனை நர்சரியில் சேர்த்து விடுவோம். இனி அவன் நாட்டம் படிப்பில் செல்லும் என்று உறுதியாக நம்பி என் இரண்டாவது பிள்ளையின் மேல் முழு கவனத்தையும் செலுத்துவேன்.

**திருமதி புவனேஸ்வரி,**

**திருச்சி**

## கொஞ்சம் கவனியுங்கள்!

ஆயிரக் கணக்கில் வந்த கட்டுரைகளில் பலரும் பலவிதமாக வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். தாங்கள் அஜாக்கிரதையாக, கொஞ்சம் கவனக் குறைவாக இருந்ததால் குழந்தை காணாமல் போனது;

கை தவறுதலாக வைத்து விட்டதால் மருந்துகளைச் சாப்பிட்டுவிட்ட குழந்தையைச் சமாளித்த விதம்;

வாந்தி, பேதி ஏற்பட்டு முதலில் அலட்சியமாக விட்டதால் உயிருக்கே மன்றாடிய நிலை—

இப்படி எவ்வளவோ.

ஒரு தாய், 'தாய்மார்களே! குழந்தை தொண்டை வலிக்கிறது என்றால் உடனே கவனியுங்கள். அது டிப்தீரியாவாக இருக்கலாம்' என்று எச்சரிக்கை விடுகிறார்.


குழந்தையைப் பெறுவது ஒரு சாதனை என்றால், அதைவிடப் பெரிய சாதனை அதை நல்ல முறையில் வளர்ப்பது. தாய்மார்கள்தான் நாளைய சமுதாயத்தை உருவாக்குபவர்கள். அதை நினைவில் வைத்துக்கொண்டு நாம் சிறந்த முறையில் குழந்தைகளைச் செம்மைப்படுத்துவோம்.

# ஆயுளுக்கு வேதம்!

டாக்டர் பி. வைத்தியநாதன்
(செயலாளர், இண்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேட்டிவ் பார்மஸி அன்ட் ஸ்டோர்ஸ், சென்னை)

**ஆ**யுர்வேதம் என்ற சொல் ஆயுள், வேதம் என்ற இரண்டு தனிச் சொற்களால் ஆனது. வேதம் என்றால் அறிவியல் எனப் பொருள். எனவே, ஆயுளைப் பற்றிய அனைத்து விவரங்களைக் குறித்த அறிவியல்தான் ஆயுர் வேதம்.

ஆயுள், அதனளவு, சுகமான ஆயுள், துக்க மான ஆயுள், இதமான ஆயுள், இதமற்ற ஆயுள், ஆயுளுக்கு இதமானவை, ஆயுளுக்கு இதமற்றவை எனப் பல்வேறு கோணங்களில் நின்று ஆயுர்வேத நூல்கள் விளக்கம்கொடுத்து



—ஆயுர்வேதம் என்ற பெயருக்கு உரித்தாகியுள்ளன. இவ்விதம் பிணி நீக்கத்தை மட்டும் பற்றாது நோயற்ற வாழ்வைப் பேணிக் காப்பதையும் வலியுறுத்துகிறது ஆயுர்வேதம்.

இந்த நோயற்ற வாழ்வை உருவாக்க உடல் நிலைக்கும், மனோ நிலைக்கும் சமமான பங்கு உண்டு என்பதை முதலில் கண்டது ஆயுர்வேதம்தான். இந்தப் பயனை அடைய நாம் மூன்று தீமைகளைத் தவிர்த்தாகவேண்டும்.

முதலாவதாக கண், காது, மூக்கு, நாக்கு தோல் ஆகிய ஐந்து புலன்களுக்கும் தாம் புலப்படுத்தும் உணர்ச்சிகளைத் தமக்கு ஒவ்வாத முறையில் கூடிப் புலப்படுத்துவது ஆகும். மிக நுண்ணிய பொருள்களையோ, மிக மிகப் பிரகாசமான பொருள்களையோ கண் கொண்டு நோக்குவது போன்ற ஒவ்வாத முறையை இங்கு ஓர் உதாரணமாகக் கொள்ளலாம். மற்ற புலன்கள் விஷயத்திலும் இவ்விதமான நிலைகளைக் கண்டறிய வேண்டும். இவை அனைத்தும் தவிர்க்கப்பட வேண்டியவை. மேலும் இந்தப் புலன்களை அதிகமாகச் செயல்படச் செய்வதோ, செயல்படுத்தாமல் இருப்பதோ கூடத் தவிர்க்கப்பட வேண்டும். இவை அனைத்தும், கை, கால், குதம், ஜனன உறுப்பு, சொல் என்ற ஐந்து பணிப் புலன்களுக்கும் பொருந்தும்.

இரண்டாவதாக நமது பகுத்தறிவால் அறிய வேண்டியவற்றைச் சீர்தூக்கிப் பகுத்து அறியாது, தவறாகக் காரணங்களைச் சொல்லுவது; ஊழ்வினை உண்டாவதற்கும் இதுதான் காரணமாக ஆகிறது. இந்த அடிப்படையில் தான் சில பிணிகள் கர்ம வியாதி என்று பிரித்து அறியப்படுகின்றன.

மூன்றாவது பருவக் காலங்கள் பொய்ப்பது அல்லது மாரிக் காலத்தில் கோடை, கோடைக் காலத்தில் மாரி போன்ற இயற்கை மாறாட்டங்கள். சரியான பருவக் காலங்களிலும் வெப்ப தட்ப நிலைகளைச் சீராகக் கொள்ளாது முற்றிலும் தவிர்ப்பதோ, அதிகமாக அல்லது முறை தப்பியோ கொள்வதும் ஆகும்.

இந்த மூன்றும்தான் மனம், உடல் இவற்றைக் கெடுத்து வியாதிகளுக்குப் பொதுப்படையான காரணங்களாக ஆகின்றன.

ஒவ்வாமை (Allergy) சக்திக்கு மீறிய உழைப்பு, மன உளைச்சல் (tension) என்றெல்லாம் வியாதிக்கு முக்கிய காரணமாக இன்று பேசப்படும் புதிய கொள்கைகள் அனைத்தும் மேலே கூறிய மூன்று காரணங்களுள் அடங்குகின்றன. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆயுர்வேதம் இவற்றை ஆராய்ந்து கூறியுள்ளது.


மேலும் உடலமைப்பில் இயற்கையாகவே கழிவுப் பொருட்களை வெளியேற்றத் தோன்றும் உந்தல்களை ''வேகம்'' என்று பெயரிட்டு அவற்றை அடக்கக் கூடாது எனக் கூறுகிறது ஆயுர்வேதம். மல ஜலம் கழிக்கத் தோன்றும் உந்தல்கள் போன்ற பதின்மூன்று உந்தல்கள் இப்பிரிவில் அடங்கும்.

மேற்கூறிய காரணங்களால் இயற்கை வாழ்க்கை சீர்குலைக்கப்படுகிறது. இதனால் மனதையும் உடலையும் பேணிக் காக்கும் ஸத்வ குணம், கபம், பித்தம், வாதம் என்ற இயக்கங்கள் சீர்கெடுகின்றன. இந்தச் சீர்கேட்டைத்தான் ஆயுர்வேதம் பிணி என்கிறது. எனவே சிகிச்சை முறை அந்த இயக்கங்களின் சீர்கேட்டைச் சரிசெய்து அவற்றைச் சமநிலையில் இயக்குவதாக அமைய வேண்டும்.

கபம், பித்தம், வாதம் என்ற இயக்கங்கள் அதனதன் செயல்களைக் கொண்டு மின்சாரம்

போல் பிரித்தறிய வேண்டியவைகள் ஆகின்றன. அவைகளை ஸ்தூலமாகக் கண்டறிய முடியாது. ஸ்தூலமாகக் காணப்படும் கோழை, பித்த வாந்தி, உப்புஸ வாயு போன்றவை அல்ல அவை. அந்தக் கோழை முதலியவைகளை மலங்கள் அல்லது கழிவுப் பொருள்கள் என்று அறிய வேண்டும். இதற்கு மாறாகக் கபம், பித்தம், வாதம் என்று கூறப்படும் இந்த இயக்கிகள் ஆக்கப் பணிக்கு உதவுபவைகள்.

நிற்க, ஆயுர்வேதத்தின் நோக்கில் மனது, உடல் இவற்றின் வளம்தான் ஆரோக்கியம்.



விருந்துகளில் அறு சுவையுடன் நால் வகைப் பதார்த்தங்கள் பரிமாறப்பட்டதாக சொல்கிறேமே அறு சுவை தெரியும். நால் வகைப் பதார்த்தம் என்றால் என்ன? கறிகளின் எண்ணிக்கையா இல்லவே இல்லை. பின்னே?

உண்ணும் உணவு நால்வகைப்படும்: (1) போஜ்யம் - அள்ளி உண்ணத் தக்கது. இதில் சாதம், பொரியல் கூட்டு முதலியவை அடங்கும். (2) கட்யம் - கடித்து உண்ணத் தக்கவை. அப்பளம், வறுவல் முதலியன. (3) பேயம்—குடித்து உண்ணத் தக்கது பாயசம், ரஸம், மோர் முதலியன. (4) லிக்யம்—தொட்டு உண்ணத் தக்கது. பச்சடி, ஊறுகாய் முதலியன.

இப்படி நால் வகையாகவும் உண்ணத் தக்கவைகளை, அறு சுவையுடன் படைப்பதே விருந்து!

எஸ். பட்டம்மா

இவைகளின் எதிரிகளும் பெரும்பாலும் உள்ளுக்குள்ளேதான் இருக்கிறதே தவிர புறத்தில் இல்லை. எனவே நோய்கள் Infection-ஆல் தோற்றுவிக்கப்படுகின்றன என்ற கருத்து ஆயுர்வேதத்தின் கொள்கைக்கு மாறுபட்டது. ஆகையால் தொற்றுபவற்றைத் தாக்குவதுதான் சிகிச்சை என்ற நிலைக்கு ஆயுர்வேதத்தில் இடமில்லை. பிணியை மட்டும் அகற்றுவதுதான் தூய சிகித்ஸை. ஒன்றை நீக்கி மற்றொன்றை விளைவிப்பது தூய சிகித்ஸையல்ல. எனவே சிகித்ஸையால் உடலிலுள்ள திசுக்களுக்குத் தீங்கு விளைவது என்பதை ஆயுர்வேத சிகித்ஸை முறையில் காண முடியாது.

சிகித்ஸை என்பது தாதுக்களைச் சமமான நிலையில் நிறுத்துவதுதான் என்கிறது ஆயுர்வேதம். அதாவது உண்ட உணவிலிருந்து பிரிந்த ஆகார ரஸம், ரத்தம், மாம்ஸம், கொழுப்பு, எலும்பு, எலும்பினுட்புற ஜவ்வு, மக்கட் பேறுக்கு இன்றியமையாத சுக்ரம் என்ற இந்த ஏழு தாதுப் பொருட்களும் தம் தம் தரத்திலும் அளவிலும் குன்றாது சீராகச் செயல்பட்டு, நோயற்ற வாழ்வுக்கு அடிகோலுவதாகத் திருப்புதல்தான் சிகித்ஸையின் குறிக்கோள்.

''அக்னி பலம்'' என்ற ஜீரண சக்திதான் இதைச் சாதிக்க வல்லது என்கிறது ஆயுர்வேதம். ஆகவேதான் ஆயுர்வேத சிகித்ஸையில் பயன்படுத்தப்படும் மருந்து முறைகள் பெரும்பாலும் ஜீரண சக்தியைச் செம்மைப்படுத்தும் பொருள்கள் கொண்டதாகவே அமைந்துள்ளன. ''அக்னி'' என்ற ஜீரண சக்தி நன்கு செயல்படுவதால் உண்ட உணவு தாதுக்களாகவும், கழிவுப் பொருள்களாகவும் சீரான முறையில் பிரிக்கப்பட்டும், வளர்ச்சிப் பணியும் சரிவர அமையும். இந்நிலையில் கபம், பித்தம், வாதம் என்ற மூன்று முக்கியமான இயக்கங்கள் சரிவர இயங்கி சமநிலைக்குத் தகுதி வாய்ந்தவைகளாக அமையும். அப்பொழுது ஆத்மா, புலன்கள், மனது ஆகியவையும் நன்கு தெளிவுற்றிருக்கும். இந்த நிலையில்தான் மனிதன் ஆரோக்கியமானவன் என்று கூறத் தகுதிவாய்ந்தவன் ஆகிறான்.

இவ்விதம் தனி மனிதனுடைய அக்னி பலத்தைப் பொருத்தே மேற்கூறிய தொடர் நிகழ்ச்சி ஏற்படுவதால் அக்னியை அதாவது ஜீரண சக்தியைப் பேணிக் காப்பதை மிக முக்கியமாகக் கருதுகிறது ஆயுர்வேதம்.

இவ்விதம் அக்னி பலத்தால் பக்குவமான தாதுப் பொருட்கள் வெளியிலிருந்து செலுத்தப்படும் பொருள்கள் போல ஒவ்வாது எனப் பெரும்பாலும் வெளியேற்றப்பட மாட்டா. ''லங்கணம் பரம ஔஷதம்'' என்ற பண்டைய பழமொழியும் இந்தத் தத்துவத்தின் அடிப்படையில் வந்ததுதான். பச்சிளங் குழந்தைகளுக்குச் செயற்கைப் பாலுணவுகளுக்குப் பதில் தாய்ப் பாலை இன்று பரிந்துரைக்கவும் இதுதான் காரணம். இந்த முக்கியத்துவம் தொன்று தொட்டு உணரப்பட்டிருந்தும் காலப் போக்கில் சிறிது மங்கி மீண்டும் தனக்குரிய இடத்தைப் பற்றிக் கொள்ளத் தொடங்கியுள்ளது.

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ஐந்து பூதங்களை அடிப்படையாகக் கொண்டு ஆயுர்வேதம் விளக்கம் கொடுக்கிறது. இதனால்தான் புல், பூண்டு போன்ற தாவரப் பொருள்களுக்கும் உடலுறுப்புகளுக்

கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டறிவது எளிதாகிறது. இவ்விதம் மூலிகைகளையும், கனி வளங்களையும், விலங்கினப் பொருள்களையும் தனது மருந்துகளில் மூலப் பொருட்களாக ஆக்கிக் கொண்டுள்ளது. இந்தத் தொடர்பு ஆயுர்வேதத்தின் செய்கை எல்லையை மனித வர்க்கத்துடன் மட்டும் வரையறுத்து நிறுத்தாது விலங்கினங்கள், தாவர வர்க்கங்கள் எல்லாவற்றையும் வியாபித்து விருக்ஷ ஆயுர்வேதம், பசு ஆயுர்வேதம் ஆகியவைகளாக விரிவடையவும் காரணமாகியுள்ளது.

சுருங்கச் சொல்லி , விளங்க வைத்தல் என்ற கொள்கையைக் கையாண்ட நம் பெரியோர்கள் மேலே குறிப்பிட்ட பஞ்ச பூதக் கொள்கையையும் சுருக்கி, கபம், பித்தம், வாதம் என்ற மூன்று இயக்கங்களைக் கொண்டே பொருள்களை விளக்க முற்பட்டனர். இதனால் மூலம் காண முடியாத பரந்தமைந்த விரிவுகளில் சிக்கித் தத்தளிக்காது மிக மிகக் குறுகிய வசதிகள் படைத்த சூழ்நிலையிலும் கிடைக்கக் கூடிய வாய்ப்புக்களைக் கொண்டே வியாதிகளையும் அதற்கான பரிகாரங்களையும் நிர்ணயிக்க வழி கோலினார்கள்.

அண்டத்தில் உள்ளதே பிண்டத்திலும் என்ற கொள்கைக்கு ஏற்ப இந்த உலகையே இயக்கும் சந்திரன், சூரியன், காற்று என்ற மூன்று பொருள்களின் இயக்கத்தின் அடிப்படையில் கபம், பித்தம், வாதம் ஆகியவை அடைந்துள்ளன. எனவே பண்டைய ஆயுர்வேதம் இன்றைய நிலைக்குப் பொருந்துமா என்ற ஐயப்பாட்டிற்கு இடமே இல்லை. உலகின்பால் சந்திரன், சூரியன், காற்று இவற்றின் இயக்கங்கள் தேவையில்லாத நிலை உருவாகுமேயாகில் உடலுக்கும் கப, பித்த, வாதங்களும் தேவையில்லாமல் போகலாம். அதுவரை இவைகளும் நிலைத்து நிற்கும். இவ்விதம் ஆயுர்வேதம் நமது பாரத நாட்டுக்கு மட்டுமின்றி மனிதன் வாழும் பல்வேறு கண்டங்களுக்கும் உதவும் ஓர் மருத்துவ முறையாகும். ஊழ்வினையின் சம்பந்தமின்றித் தோன்றும் பிணிகள் அனைத்துக்கும் ஆயுர்வேதம் உறுதுணையாகும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

இந்த ஆயுர்வேதம் எட்டுப் பிரிவுகள் கொண்டது. அவைகளாவன:

1. காய்ச்சல், குடற் போக்கு போன்றவைகளுக்கான காய சிகித்ஸைப் பகுதி.

2. கருவாக உருவாகவும், அவ்விதம் உருவானது முதல் குழந்தைப் பருவத்தைக் கடக்கும் வரையிலும் உதவும் பால சிகித்ஸை அல்லது கௌமார பிருத்தியம்.

3. மனோநிலையைத் தாக்கும் பைத்தியம் போன்ற பிணிகள், உருவமற்ற ஆவி வடிவங்கள் ஆகியவற்றைப் பற்றிய கிரஹ சிகித்ஸை.

4. கழுத்தின் மேலுள்ள உறுப்புக்களில் தோன்றும் பிணிகளுக்கான ஊர்த்வாங்க சிகித்ஸை.

5. உடலுக்கு ஒவ்வாத உலோகத் துண்டுகள் போன்ற வெளிப் பொருள்கள் உடலில் பாய்ந்து புரையோடுவது போன்றவற்றை நீக்கவல்ல ரண சிகித்ஸை என்ற சல்லிய சிகித்ஸை.




6. பாம்பு, தேள், சிலந்தி போன்ற விஷ ஜந்துக்கள் தீண்டுவதை முக்கியமாக விளக்கும் தம்ஷ்ட்ரா சிகித்ஸை.

7. முதுமையைப் போக்க வழி புகலும் ஜரா சிகித்ஸை.

8. மக்கட் பேறுக்கும் புணர்ச்சி வலிமைக்கும் உதவும் விருஷ சிகித்ஸை.

இந்த எட்டுப் பிரிவுகளும் மேலே குறிப்பிட்ட கபம், பித்தம், வாதம் என்ற மூன்று இயக்கிகளின் இயக்கங்களுக்கு உட்பட்டவையே.

(தொடரும்)



"என்னடா இது?'' —மகன் தன்கையில் கொடுத்த பையை வாங்கிக் கொண்ட சரஸ்வதி கேட்டாள்.

''என் ஆபீஸில் வேலை பார்க்கும் நண்பன் ஒருவன் கல்கத்தா போவதாகச் சொன்னேனே, அவன் திரும்பி வந்து விட்டான். உங்களுக்குப் பிடிக்குமே என்று ஒரு டின் ரஸகுல்லா வாங்கி வரச் சொல்லியிருந்தேன்'' டையைக் கழற்றியவாறு தன் அறைக்குள் நுழைந்தான் பரத்.

கணவன் குரல் கேட்டுச் சமையலறையிலிருந்து வெளியே வந்த சுனிதா சடாரென்று மறுபடி உள்ளே புகுந்து கொண்டாள். அரிவாள்மனையில் வெண்டைக்காய் நறுக்குவதைத் தொடர்ந்தாள்.

நான் ஒருத்தி இருப்பது ஞாபகமில்லை? காலையில் ஆபீஸ் போனவர்தானே? என்னை ஒரு தரம் உள்ளே எட்டிப் பார்த்துவிட்டு என்னுடன் இரண்டு வார்த்தைகள் பேசிவிட்டுப் போனால் குறைந்தாவிடும்? ஏன் எனக்கு மட்டும் ரஸகுல்லா பிடிக்காதா?

''ஆ...'' வாய் விட்டுக் கதறிவிட்டாள் சுனிதா. ''என்னம்மா?'' என்றபடி உள்ளே ஓடிவந்த மாமியார் கையை உதறியபடி உட்கார்ந்திருந்த மருமகளின் கையைப் பிடித்துப் பார்த்தாள்.

''என்னம்மா அமர்க்களம்?'' என்ற... வந்த மகனை நோக்கி, ''பாவம்டா கையை நறுக்கிக் கொண்டிருக்கிறாள். சட்டென்று விரலைப் பச்சைத் தண்ணீரில் அலம்பிவிடேன். இதோ வந்து விட்டேன்'' என்று சொல்லியபடி நகர்ந்தாள் சரஸ்வதி.

''சாதாரண இந்தக் கீறலுக்கா ஒரே கலாட்டாப் பண்ணி விட்டீர்கள்?'' — இது குழாய்க்கடியில் மனைவியின் கையைப் பிடித்தவாறிருந்த பரத்தின் கேள்வி.

குபுக்கென்று கண்களில் வந்த கண்ணீரை அடக்கிக் கொண்டாள் சுனிதா.

—இருக்காதா? என் இடத்தில் தன் அம்மா இருந்திருந்தால் இந்த ஊரையே கூட்டி, வீட்டை இரண்டாக்கி...

எங்கிருந்தோ ஒரு வெள்ளைத் துணியைக் கிழித்துக்கொண்டு வந்த சரஸ்வதி சுனிதா மறுப்பைச் சட்டை செய்யாமல் விரலைச் சுற்றி அதைக் கட்டி விட்டாள்.

இரவு சாப்பாட்டுக்குப் பிறகு அடுப்படியில் ஒழித்து வைத்துக் கொண்டிருந்த சுனிதா படுக்கை அறைக்குப் போகும் நேரத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டே போனாள்.

—நானும் பொறுத்துப் பொறுத்துத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். கல்யாணம் ஆகி ஒரு மாதம்தான் ஆகிறது...சாயந்திரம் ஆபீஸிலிருந்து வரும்போது ஒரு முழம் பூ வாங்கி வந்து என் கையில் கொடுத்தால் என்ன? நான் என்ன எதிர் வீட்டு ராம் தன் மனைவியை ''டார்லிங்'' என்று அழைத்துக் கொண்டே உள்ளே நுழைவது போல் இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்...

''ஏய் சுனிதா'' அருகே குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

''எவ்வளவு நேரம்? எலி மாதிரி எதையோ குடைந்து கொண்டு... நேரமாகவில்லை? வா. வந்து படுத்துக்கொள்''

பரத் பிடியிலிருந்து நழுவிய சுனிதா, ''நீங்க போங்க. இதோ வந்துவிடுகிறேன்.''

—ஆமாம் இந்தக் கரிசனத்தை மற்ற நேரங்களில் காணுமே.

மெள்ள வந்து கட்டிலில் உட்கார்ந்த சுனிதா, அருகே நகர்ந்து தன் மீது சாய்ந்த கணவனிடமிருந்து விலகினாள்.

''சுனித், என்னாச்சு? நானும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். கொஞ்ச நாட்களாக என்னோடு சரியாகப் பேசிச் சிரிப்பதே இல்லை. ஏன்?'' — அவள் முகவாயைத் தூக்கினான். ''குழந்தைக்கு அப்பா அம்மா ஞாபகம் வந்து விட்டதா?'' என்று இதமாக அன்பான குரலில் கேட்டதுதான் தாமதம். அவள் கண்கள் மடைதிறந்தவெள்ளமாயிற்று.


உடனே விளையாட்டுப்போய் நிமிர்ந்தவன் அவளைச் சமாதானம் செய்வதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது.

எல்லாக் குற்றச்சாட்டுக்களையும் பொறுமையாகக் கேட்ட பரத், ''பைத்தியம்! இதற்கா முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டிருக்கிறாய்? நான் உன்னை எவ்வளவோ



# மணமகளே மருமகளே!

-லதா கிருஷ்ணா-



புத்திசாலி என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். கதைகளில், சினிமாக்களில் வருவது போல் நான் நடந்து கொண்டால் நன்ருகவா இருக்கும்? கதை வேறு வாழ்க்கை வேறு. வெளிப்படையாக 'டெமான்ஸ்ட்ரேட்' செய்தால்தான் அன்பு என்ருல்... என்னை நீ புரிந்து கொண்டது அவ்வளவுதான்'' என்ருன்.

அவள் பதில் பேசாமல் இருப்பதைக் கண்டவன் இன்னும் அருகே அமர்ந்தான்.

''சுனிதா, அந்தக் காரணம் மட்டும் இல்லை. நான் பத்து வயதில் என் தந்தையை இழந்தவன் என்று உனக்குத் தெரியும். அன்றிலிருந்து இன்றுவரை அந்தக் குறையை நான் உணராமல் இருக்கப் பாடுபட்டு என்னை வளர்த்தவள் என் தாய். தனியாக நின்று என்னை வளர்த்துப் படிக்க வைத்து இன்று நான் நல்ல நிலைமையில் இருப்பதற்குக் காரணமே அவர்தான். அதற்கு ரொம்பக் கடமைப்பட்டிருக்கிறேன்.''

''இதெல்லாம் எதற்குடா இப்பொழுது சொல்கிருன் என்று பார்க்கிருயா? எங்கம்மாவின் உலகமே நான்தான். இந்த உலகத்தில் நீ திடீரென்று தோன்றி யிருக்கிருய். நான் உன் பின்னுல் சுற்றிக் கொண்டிருந்தால் தன்மீது எனக்கிருந்த அன்பு குறைந்துவிட்டதாக அவர் நினைக்கக் கூடாது. அவர் மனதில் எந்த ஒரு சிறு சலனத்திற்கும் நான் இடம் தரமாட்டேன். அவர் மனம் நோகாமல் இருக்க நீயும் என்னுடன் ஒத்துழைக்க வேண்டும். என்ன செய்வாயா?'' அவள் இரு கைகளையும் சேர்த்துக் கொண்டான்.

—இந்த நல்ல மனிதர் மனத்தைப் புரிந்து கொள்ளாமல் எதை எதையோ நினைத்துக் கொண்டு.....

''என்னை மன்னித்துவிடுங்கள்'' — வார்த்தைகள் வெளிவரவில்லை. அதனுல் என்ன? பரத்துக்குப் புரிந்து விட்டதே.

அன்று காலை வாக்குக் கொடுத்தபடி சீக்கிரம் வீடு வந்து சேர்ந்தான் பரத்.

''என்னம்மா இது? இன்னும் ரெடியாகவில்லை? நான் காலையிலேயே சொல்லிவிட்டுப் போனேனே. புது சினிமா. அதனுல் காலையிலேயே ரிசர்வ் செய்து விட்டேன். சுனிதா எங்கே?''

''நான் வரவில்லைடா. என்னவோ தெரியவில்லை. மத்தியானத்திலிருந்து ஒரே தலைவலி. நீயும் சுனிதாவும் போய்விட்டு—வாருங்கள்.''

''நீங்கள் வராவிட்டால்...''

''நானும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன்.'' — உள் பக்கம் பார்வையை ஓட்டிவிட்டு தன் குரலைத் தாழ்த்திக்கொண்டாள். ''நீ செய்வது உனக்கே நன்ருக இருக்கிறதா? கல்யாணமான புதுத் தம்பதிகள் ஒவ்வொருவரும் எப்படி இருக்கிருர்கள்? சுத்த அசடாக இருக்கிருயே... போ... போ... உள்ளே போய் முகத்தை அலம்பிக் கொண்டு அவளோடு சந்தோஷமாக சினிமாவுக்குப் போய் விட்டு வா.'' பரத் திகைத்து நின்ருன். ■

# யோகாசனம்



அர்த மஸ்ஸியேந்திரர் ஆசனம்

இம்மாதம் இடுப்புப் பெருப்பதைத் தவிர்க்கும் ஆசனங்களைப் பற்றியும் குடும்பக் கட்டுப்பாட்டிற்கு இயற்கையாக உதவும் ஆசனங்களைப் பற்றியும் ஆராய்வோம்.

## அர்த மஸ்ஸியேந்திரர் ஆசனம்

இவ்வாசனத்துக்குப் பாதி மீன் நிலை என்று பொருள். ஏனெனில் சிவபெருமான் உமையவளுக்கு ஆசனங்கள் சொல்லித் தரும் பொழுது அதைப் பார்த்து ஓர் சிறு மீன் செய்வதைக் கண்டு வியந்து அம்மீனிற்கு மனித உருவம் கொடுத்தார். அவர்தான் அர்த மஸ்ஸியேந்திரர் எனும் முனிவர். இவர் பெயரில் இவ்வாசனம் அமைந்துள்ளது.

செய்முறை: முதலில் இரண்டு கால்களையும் நீட்டிக் கொண்டு உட்காரவும். பின்பு வலது காலை மடக்கி அக்குதிகாலை ஆசனவாயில் படுமாறு வைக்கவும். பின்பு இடது காலை மெள்ள மடக்கி வலது துடையைத் தாண்டி படத்தில் பார்ப்பதைப் போல் வலது முட்டியின் அருகில் இடப் பாதத்தை நன்ருகப் பதிய வைக்கவும். பின்பு மெள்ள திருப்பி வலது கை இடது கால் முட்டியைத் தாண்ட அக்கையின் கக்கம் இடது கால் முட்டியின் வெளிப் பக்கத்தில் பட வேண்டும். இவ்வாறு செய்யும்பொழுது நாம் காற்றை வெளியே விட்டுக் கொண்டு செல்ல வேண்டும். பின் வலது கையினல் இடது கால் கட்டை விரலை நன்ருகப் பிடித்த பின் இடது தோளைப் பின் நோக்கித் தள்ளவும். பின்பு மெள்ளக் காற்றைச் சுவாசித்துக் கொண்டு இடது கையைப் பின் நோக்கி எடுத்துச் சென்று வலது துடையின் மீது பதிய வைத்த பின்பு தலையையும் நன்ருகத் திருப்பி இடது தோளைத் தாண்டி பின் நோக்கி பார்வையைச் செலுத்தவும். இந்நிலையில் முப்பது விநாடிகள் இருந்த பிறகு சம நிலைக்கு வரவும்.


பலன்: இவ்வாசனம் வயிற்றிலுள்ள தசைகளுக்கு நல்ல வலுவைக் கொடுக்கும். அளவுக்கு மீறி இடுப்பில் உள்ள தசைகளையும் தொடையில் உள்ள சதைகளையும்குறைத்து அவற்றை மேலும் பெருக்காமல் இருக்கச் செய்யும். உடலில் உள்ள உறுப்புக்களான liver spleen ஆகியவைகளை நன்ருக செயல்படுத்தும். முதுகு எலும்பிலுள்ள நரம்புகளின் டென்ஷனைக்குறைத்து அவற்றை வலுப்படுத்தும். அடிக்கடி முதுகு வலியும் தோள் வலியும் வருபவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாகும்.

## சக்கராசனம்

'சக்கரா' என்ருல் சக்கரம் என்று பொருள் உடல் சக்கரம் போல் இந்நிலையில் காட்சியளிப்பதினுல் இவ்வாசனத்துக்கு இப்பெயர்.

செய்முறை: முதலில் தரையில் விண்ணை நோக்கிப் பார்த்துக் கொண்டு மல்லாந்து படுக்கவும். பின்பு இரு கைகளையும் தலைக்கு மேல் நோக்கிப் பின்பு கைகளை மடக்கி உள்ளங் கைகளை இரு தோள்களுக்கும் அருகில் தரையில் நன்ருகப் பதிய வைக்கவும். இவ்வாறு கைகள் வைக்கப்படும்பொழுது கை முட்டிகள் விண்ணை நோக்கி பார்த்துக் கொண்டும் கைகளின் விரல்கள் கால்களை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் பிறகு இரு கால்களையும் நன்ருக மடக்கி இடுப்பிற்கு அருகே குதிகால்களைப் பதிய வைக்கவும். பின்பு மூச்சை வெளியே விட்டுக்கொண்டு நாம் ஆசனத்தையும் முதுகையும் தரையிலிருந்து தூக்கி உச்சந்தலையைத் தரையில் பதிய வைக்கவும். பின்பு மூச்சை நன்ருக வெளியே விட்டுக் கொண்டு இடுப்புப் பகுதியை விண்ணை நோக்கித் தள்ளிக் கொண்டு முதுகை நன்ருக வளைத்துக் கொண்டும் தலையைத் தரையிலிருந்து தூக்கி அதே சமயம் கைகளையும் நன்ருக நேராக்கவும். உங்கள் உடலின் முழு எடையைச் சமமாக கைகளிலும் கால்களிலும் பகிர்ந்து போடவும். இந்நிலைக்கு வந்த பிறகு பாதங்களைத் தரையிலிருந்து தூக்கி கால் விரல் நுனிக்குக் கொண்டு வரவும். இந்நிலையில் சிறிது நேரம் இருந்த பிறகு மெள்ளக் கைகளை மடக்கித் தலையைத் தரைக்குக் கொண்டு வந்த பிறகு முதுகையும் தரைக்கு கொண்டு வந்து சம நிலைக்கு வரவும்.

சக்கராசனம்



மங்கையர் மலர்

# வந்தனை

குறுநாவல்



ஸ்ரீ வேணு கோபாலன்

**வா**யிலில் நின்று ஒரு தீர்க்கமான பார்வை பார்த்தான்.

அவன் உணர்ச்சிகள் பொங்கி வந்தன. கண்களை நீர் மொய்த்தது. நினைவுகளும் உணர்வுகளும் கதம்பங்களாக வந்துகொண்டிருக்க, காலை ஊன்றி அப்படியே நின்றான்.

அவன் முன்னால் அந்த வீடு நின்றிருந்தது. பழங்கால வீடு. நீளமாக ஒரு பால்கனி! பெரிய பெரிய சன்னல்கள்! கலர்க் கண்ணாடிக் கதவுகள். வீட்டு நெற்றியில் அலுமினியம் பூசிய கிருஷ்ணன் பொம்மை.

அந்த நாளைக்கு அது நவீனமாக இருந்திருக்க வேண்டும்.

அவனைப் பார்த்ததும் வீட்டு விலாப்புறத்திலிருந்து அந்த அம்மாள் ஓடிவந்தாள்.

வாசல் கேட்டைத் திறந்து கொண்டு, ''யார் வேணும்?'' என்று பதட்டத்தோடு கேட்டாள்.

அவன் பதில் பேசவில்லை. உணர்வுகள் உள்ளே சீறி வந்தன. அவளைச் சிறிதாக ஒரு பார்வை பார்த்துவிட்டு மீண்டும் அந்தக் பட்டத்தைப் பாசத்தோடு பார்த்தான்.

சின்னக்குழந்தைக்கு கடுமையான வயிற்றுப்போக்கு ஏற்பட்டால் கொடுக்கும் நீரெல்லாம் வெளியே போய்விடும். உடல் நீரெல்லாம் வற்றிப்போகாமல் (dehydrate) ரத்தம் மறுபடி தண்ணீரை ஏற்றுக் கொள்ள (Rehydrate) ஒரு லிட்டர் வென்னீரில் 8 டீஸ்பூன் சர்க்கரையும் 1 டீஸ்பூன் உப்பும் கலந்து ஆறவைத்து அடிக்கடி கொடுக்கவும்.

-ஜெயா வி. ராமன்

அம்மாள் சற்று நிச்சயமில்லாமல், அவன் பக்கத்தில் வந்தாள். அவள் நுனி நாவுக்கு அவன் பெயர் வந்து விட்டது. எனினும் ஒரு உறுதிக்காக இன்னும் அவன் அருகில் வந்து கண்ணாடி அணிந்த கண்ணை இடுக்கிப் பார்த்தாள். ''நீ ரகு தானே?''

அவன் இப்போதும் பேசவில்லை. ஆனால் கண் மூலம் அந்தப் பரிச்சயத்தைக்காண்பித்த தன்மூலம் அவளது சந்தேகத்தை நிவர்த்தி செய்தான். அவள் ஒரே வியப்பில் இருந்தாள். எத்தனை வருஷம் ஆயிற்று அவனைப் பார்த்து! பதினைந்தா, இருபதா?

இன்னும் அவளது திகைப்புக் கலையாமல், ''எல்லாரும் அமெரிக்கா போயிட்டா!'' என்றாள் மௌனமாக. அவனது தியானத்தை அவள் கலைக்க விரும்பவில்லை.

அவன் இன்னமும் அந்த வீட்டைக் கரை காணாத அன்புடன் பார்த்துக் கொண்டிருந்தான். அதை விட்டுப் பார்வையை அசைக்கவே இல்லை. இயலுமானால் அந்த வீட்டை அப்படியே உருக்கிவிட்டுப் பருகியிருப்பான்.

அவள் சொன்னது இன்னும் அவன் காதுகளில் தங்கிக் கொண்டிருக்க, மெதுவாகத் திரும்பினான்.

''எப்போ(அமெரிக்கா) போனா?'' என்றான் மெதுவாக. அவன் மறைத்தாலும் அவன் வலி அதில் தொனித்தது.

''ரொம்ப வருஷமாச்சே!'' என்றாள் அவள்.

''உங்களுக்குக் கடுதாசி போடுவாளா?'' என்றான் அவன். அவன் குரலில் ஒரு பழைய இளைஞனின் ஆர்வம் எவ்வளவு தொனித்தது.

''போடுவா! வருஷா வருஷம் ஒரு கடுதாசி போடுவா! உனக்கு?.....''

அவனுக்கா!

ஹூம்! அந்தப் பாக்கியம் அவன் பெறவில்லை.

கேவலம் ஒரு சமையற்காரி பெற்ற அதிர்ஷ்டத்தைக் கூட அவன் பெறவில்லை.

அவள் கையெழுத்து எப்படி இருக்கும்? யோசித்துப் பார்த்தான். அவன் நெஞ்சத்தில் அது செதுக்கப்பட்டிருந்தது. எம். கே. என்ற இனிஷியலைச் சற்றுப் பெரிதாகப் போடுவாள். வந்தனா என்ற பெயரை மட்டும் குறுக்கிச் சின்னதாக எழுதுவாள். ஹூம்! அந்தக் கையெழுத்தையே எவ்வளவு காதலித்திருக்கிறான்!

''நல்ல புத்திசாலிப் பொண்ணு'' என்றாள் அம்மாள்.

''ஹூம்'' என்று தாபமாக அங்கலாய்த்தான் அவன்.

''என்ன அழகு! அப்படியே சித்திரம் எழுதலாம்'' என்றாள் அவள்.

கீழ் உதட்டை மட்டும் அவன் கடித்தான். மனசில் வலி ஏற்பட்டபோதெல்லாம் அப்படித்தான் செய்வான்.

இன்னும் அவளைப் பற்றி ஏதாவது சொல்லியிருந்தால் அவன் தாங்கி யிருக்க மாட்டான். அழுகை ஏற்கனவே வந்து விட்டது. ஒரு காக்கி உடையில் மிலிடெரி யூனிபாரத்தில் நின்று கொண்டு அவன் அழுவதா? உடனே அந்த அம்மாளை நிறுத்தச் சொல்ல வேண்டி,

''நான் வீட்டை ஒரு முறை பார்க்கலாமா?'' என்றான்.

அம்மாள் அவனை ஒரு பார்வை பார்த்தாள். ஒரு வேளை வாழ்வின் மிருதுவான உணர்வுகள், நுணுக்கமான ஆர்வங்கள் எல்லாம் அவளுக்கும் தெரிந்திருக்கலாம். சமையல் வேலை செய்தாலும், உணர்வுகளை அவள் எரித்திருக்க மாட்டாளே. வாழ்க்கையில் அவை அவளுக்கும் எப்போதோ எங்கேயோ தோன்றியிருக்கலாம்.

ஒரு பெருமூச்சுடன் ''ஓ'' என்றாள்.

அவள் முன்னே போக அவன் பின்னே ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்தான்.

''எவ்வளவு பெரிய வீடு! வாடகைக்கு விட்டாக்கூட ஆயிரத்துக்கு மேல் போகும். அவள் அப்பாவுக்கு இஷ்டமில்லே... வீட்டை ஒரு பொக்கிஷம் போலக் காப்பாற்ற விரும்பினர். நான்தான் பராமரிப்பு வேலைக்கு! மாசம் நூறு ரூபாய் கொடுக்கி....''

அவள் திரும்பிப் பார்க்க, அவன் ஒரே உணர்ச்சிப் பிரளயத்தில் வீட்டு முகட்டைப் பார்த்து நின்றான்.

அவன் நினைவுகளை அனுமதிப்பதற்காக அவளும் நின்றாள்.

அவன் மேலே ஆகாயத்தைப் பார்த்தான். ஒரு க்ரே கலர் ஆகாயம்! அதே பழைய ஆகாயம்தான்! அதில் அந்தக் கனத்த கறுத்த மேகம்! அதுகூடப் பழைய மேகம்தான். அசட்டுத்தனமாக நினைத்தான் அவன்.

அப்போது ஒரு திடீர் காற்று வீச, மரங்கள் சடசடத்தன. ஒளிந்திருந்த மழைத் துளிகள் பளிங்கு போல் உதிர்ந்தன.

அவள் பூட்டை அவிழ்த்துக் கதவைத் திறந்தாள். ''வா.''

அவன் பெரிய பிரமிப்பில் இருந்தால காலை மெள்ளப் படியில் வைத்தான். ஒரு நடுக்கம் அவன் உச்சி வரை ஓடியது.

சற்றே அவன் தடுமாற, அவள் அவனைப் பிடிக்கப் போக, அவன் சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்டான்.

வராந்தா!

ஒரு சொப்பனத்தைப் போல் அதைப் பார்த்தான்.

அதற்குள் அவள் ஹாலைத் திறந்தாள். அவசரமாக வெளிச்சம் தட்டினாள்.

ஹால்மத்தியில் சாண்டிலியர்விளக்கு ஒன்று ஒரு யுகத்திற்குப் பிறகு விழித்தது.

ஒரு வெள்ளைப் பாலாக வெளிச்சத்தை நடுவில் மட்டும் சிந்தியது.

அவன் நடுங்கும் இதயத்துடன் உள்ளே நுழைந்தான். ஹாலுள் வந்ததும் அவன் சுவாசம் திடீரென்று நின்றது. பிரமிப்பான கண்களுடன் எல்லாப் புறமும் பார்த்தான்.

திடீரென்று அந்த கந்தர்வ கீதங்கள் எங்கும் எழுந்தன. ஆமாம் அவள் சிரிக்கும் ஒலி! வந்தனா சிரிக்கும் ஒலி! ரோஜாப் பூக்களாக அவை எங்கும் உதிர்ந்தன. ''வந்தனா.''

ஒரு செல்லமான பிராணியைப் பார்ப்பது போல் ஹால் முழுவதையும் பார்த்தான்.

எல்லாம் அப்படியப்படியே இருந்தன. சோபா, நாற்காலி, மேஜை, கண்ணாடி, கோட் ஸ்டாண்ட், பீரோ....

எல்லாவற்றையும் மூடி வைத்திருந்தார்கள் தூசி படாமல் இருக்க.

அவைகள் பூச்சாண்டிகள் போல் தெரிய ''வேதாள லோகம் போல இருக்கில்லே?'' என்றாள் அம்மாள்.

''நோ'' என்றான் அவன் சற்றுக் கடுமையாக. ''உலகின் மிகப் புனிதமான இடம் இதுதான்! சொர்க்க லோகம் இது.''

சோபாவை நோக்கி வாத்சல்யத்தோடு நடந்தான். மெள்ள அதன் நுனியை நோக்கி, ஒரு குழந்தையைப் பார்ப்பது போல் பார்த்தான்.

அவன் பதினைந்து வருடங்கள் போன இடம் தெரியவில்லை. மீண்டும் அந்த கல்லூரி ரகுவாகவே இருந்தான். அந்த சோபா முன்னால் உட்கார்ந்திருந்தான்.

சோபாவில் வந்தனா ஒரு வன தேவதையாக அமர்ந்திருந்தாள். மினுக்கும் அவள் கூந்தல் சோபா முதுகில் சரிந்திருந்தது. நீண்டு மெல்லிய கைகளைப் புத்தகத்தோடு அணைத்துவிட்டு, ஒரு மார்பிள் சிலை போல் கண்ணை மூடியிருந்தாள்.

திடீரென்று கண் திறந்தாள். அவை முழுவதிலும் நீர் முத்துக்கள். 'ரகு ரகு ரகு' என்று பொறுமையின்மையாக அழைத்தாள். 'என்ன மாதிரி நாவலைப் படிக்கக் கொடுக்கிறே? என்னைச் சோகமாக்கிறியே! என்னாலே தாங்க முடியவில்லையே!'' என்றாள்.

உண்மைதான்!

அவனுக்குச் சோகம் ரொம்பப் பிடித்திருந்தது. வாழ்க்கை ஒரு நீண்ட சோக வெளி!


**அப்பனே, முருகா, ஆதி மூலமே**
**ராஜராஜேஸ்வரி, துணிவே துணை,**
**கடவுளை நம்பினோர் கை விடப்படார்,**
**ஆறிலும் சாவு நூறிலும் சாவு!**
**என்ன இதெல்லாம்?**
**( 74ம் பக்கம் பார்க்க)**


அதன் கீதங்கள் எல்லாம் சோகம்! அதன் ஆரம்பமும் சோகம், முடிவும் சோகம்!

ஒருவேளை பின்னால் அவன் அடையப் போவதை முன்கூட்டியே சூசகமாக அறிவித்து விட்டானோ!

அப்பா! எவ்வளவு சோகம்! டன் டன்னாய் சுமந்து கொண்டு வந்து நிற்கிறானே!

அவன் கீழே மண்டி போட்டு உட்கார, அந்த அம்மாள் அவனை ஆச்சரியத்தோடு பார்த்தாள்.

அவன் கண்கள் தீவிர நெருப்புக்களாகத் தகித்தன. அதில் அவன் நடந்ததை ஒரு நிகழ் காலமாகக் கொண்டு வந்திருந்தான். இரண்டுமே இப்போது ஒருங்கிணைந்திருந்தன.

அவனது வந்தனா அவன் முன்னால் பிரத்யட்சமாக இருந்தாள். அவனது பதினைந்து ஆண்டுகளும் கரைந்தன. ஒரு பழைய கல்லூரி மாணவனாகவே அவன் அங்கே உட்கார்ந்திருந்தான்.

நுட்ப உணர்வுகளின் இயல்புகளை அந்த அம்மாள் நன்கு அறிந்திருக்க வேண்டும்.

அவனது பிரமைகளை அவள் கலைக்கவில்லை. சோபா முன்னால் அவன் மண்டியிட்டிருந்தது அவளுக்கு விசித்திரமாகத் தெரியவில்லை.

'ரகு, உன் சோகத்தை எப்போ நிறுத்தப் போறே? நாவல் கொண்டு வந்தயானா அது சோகம்! கவிதை எழுதினயானா அது சோகம், எல்லாமே சோகமா?'

மண்டியைத் தளர்த்தி அவன் மெல்லப் புலம்பினான். ''இல்லை வந்தனா! சோகந்தான் நிரந்தரமான ஒரு இன்பம். அதில் இருக்கிறசுகம் எதிலேயுமேவராது.''

நேரம் சென்றது. 'ரகு' என்றாள் அம்மாள் ''போவோமா?''



அவன் அவளைவி நோதமாகப் பார்த்தான். ஒரு கொடூர நிகழ்காலத்தை அவன் ஏற்கத்தயாராகஇல்லை ஆனாலும் ஏற்கத்தான் வேண்டி வந்தது.

மெள்ளஎழுந்தான். கால் சிறிது தடுமாறியது.

ஒரு பெருமூச்சு விட்டு மெதுவாக நடந்தான்.

பீரோ பக்கத்தில் புக் கேஸ்.

அதன் அருகில் போனதும் மீண்டும் ஓர் ஆர்ப்பரிப்பு அவனைப் பற்றியது. ''இங்கே தானே அவள் படித்த புத்தகங்களை அடுக்கி வைத்திருந்தாள்.'

கதவைஇழுத்தான். திறந்தது. உள்ளே நாலு வரிசை! அதில் இரண்டு வரிசை காலியாக இருந்தது.

''இந்த ரெண்டு வரிசை என்ன?'' என்றான்.

''அவதான் புத்தகப் புழு ஆச்சே! அமெரிக்கா எடுத்திட்டுப் போயிட்டா!''

பளிச்சென்று அவன் நினைவில் ஒரு வெளிச்சம் அடித்தது.

ஒருவேளை அவன் கொடுத்த ''வேர்ட்ஸ்வொர்த்''தை எடுத்துப் போயிருப்பாளோ? எப்போதாவது சோர்ந்து போகையில் அதை பக்தியோடு எடுத்து பக்க இலைகளை அன்போடு தள்ளி ஏதாவது ஒரு கவிதையைப் படிப்பாள். மெய்மறந்து போவாள். 'ரகு! எல்லாம் சோகமா இருக்கே! இதைக் கொடுத்துட்டியே!' என்று மனசில் புலம்பினாலும் புலம்புவாள் அந்தக் கணத்தில்,

அவள் நெஞ்சில் அவன் நினைவுகள் புரள்வதும்,

அவள் நாவில் அவன் பெயர் புரள்வதும் எவ்வளவு சுகமான அனுபவங்கள்! அல்லது சுகமான சோக அனுபவங்கள்!

அமெரிக்காவில் ஒரு கொட்டும் வெளிச்சத்தின் முன்னால் ஒரு மெத்தை சோபாவில் அமர்ந்து அவள் தாபத்தோடு அதைப் படிப்பதைக் கற்பனை செய்தான்.

அந்தக் காட்சி அவன் மனத்தில் ஒரு சுரண்டி உருவாக்கப்பட்ட ப்ளாக் போல பதிந்தது.

ஆனால்,

மற்ற இரு வரிசைப் புத்தகங்களை அவன் ஒவ்வொன்றாகப் பார்த்து வந்தபோது அந்தப் புத்தகம் (வேர்ட்ஸ்வொர்த்) ஏன் அவன் கண்ணில் பட வேண்டும்?

அது ஓர் அதிர்ச்சி!


இதுபோல் ஏதாவது நேரக் கூடாது என்று நினைத்துத்தான் அங்கே வந்திருந்தான். நடந்து விட்டது.

உடம்பு மரத்துப்போக, கண் இருட்டியது. சில கணங்கள் வரை சுய நினைவு அற்று நின்றான்.

பிறகு வேறு பக்கம் திரும்பியவாறே, 'எல்லாப் புத்தகத்தையும் அவளே எடுத்து தானே 'பாக்' பண்ணினா?' என்று கேட்டான்.

''அவளேதான்! ஒவ்வொரு புத்தகத்தையும் எடுத்து எது வேணும், எது வேண்டாம் என்று கழிச்சு அவளே பாக் பண்ணினா. இதையெல்லாம் பேப்பர்காரன் கிட்டே போடச் சொன்னா. அவ அப்பாதான் 'வேண்டாம்' னார்.''





சில சுட்டிகள் அவனை ஊடுருவிச் சென்றன. மனம் அடிபட்ட ஜந்து போல் சுருண்டது.

அதற்குள் அம்மாள் ஊகித்து விட்டாள். அவன் வேறு பக்கம் திரும்பிக் கண்ணீர் விடுகிறான் என்று.

அவன் கைமட்டும் அந்தப் புத்தகங்கள் நடுவில் இருந்தது.

மெள்ள வந்து அதைப் புரிந்து கொண்டாள். பரிசாக அவன் அவளுக்குக் கொடுத்த புத்தகத்தை அவள் நினைவு வைத்திருந்தாள். அது அந்தப்புத்தகமாகத்தான் இருக்க வேண்டும்.

''அப்புறம் அவளே சொன்னாள்!'' என்றாள் அம்மாள்.

ஊங்கொட்டக்கூட முடியவில்லை அவனால்!

''திரும்ப வரப்போ எல்லாத்தையும் எடுத்திட்டுப் போறேன்னு!' வந்தா எடுத்துட்டுப் போவா!''

நொண்டிச் சமாதானம். அது அவனுக்குத் திருப்தியாக இல்லை. அவள் அந்தப் பரிசை நிச்சயம் எடுத்துப் போயிருக்க வேண்டும்.

**பிரஷர் குக்கரில் வெயிட் போட்டு நீண்ட நேரமாகியும் சத்தமே வராததால் தாய் தன் மகளை சுண்டி விடுமாறு கட்டளை யிட்டபொழுது மகள் புலம்பிய சொற்கள் இவை.**

''குருப்ரியா''

எவ்வளவு கஷ்டப்பட்டு வாங்கினான். அதை விலை கொடுத்து வாங்கும் தகுதி அவனிடம் அப்போது கிடையாது. விதவைத் தாயாரிடமிருந்து நாலணா எட்டணா என்று கேட்டு வாங்கிப் பத்து ரூபாய் சேர்த்து புத்தகக் கடைக்குப் போய்....

அவனால் அடக்க முடியவில்லை. கண்களைத் கண்களைத் துடைத்துக் கொண்டான். இனி மேல் அந்த அம்மாளுக்குத்தெரிந்தால்என்ன?

சின்ன விசிப்பு வர, அந்த நிசப்த அமைதி திடீரென்று சோகமாக மாறியது.

தூரத்தில் ஜீப் சத்தியது. அவன் வந்த ஜீப்தான். நண்பன் ஓட்டி வந்திருந்தான். அதை சாலையில் நிறுத்தி விட்டு....

பெருமூச்சு விட்டு மெல்ல நகர்ந்தான் அடுத்த உள்ளுக்குப் போகும் நிலை வாயிலில் நின்றான். திடீரென்று அவன் வெளிறியிருந்தான். நிலையின் சட்டத்தின் வாசல்பக்கப் பகுதியில் ஒரு போர்ட்ரெய்ட் போல சோகமாக நின்றான்.

அம்மாளுக்கு மனம் என்னவோ செய்தது. நுண்ணிய மன எண்ணங்கள் எவ்வளவு மென்மையானவை, வலுவானவை என்று அவளுக்குத் தெரியும். அவனைச் சீக்கிரம் மாற்ற நினைத்தாள்.

''அப்புறம் நீ மிலிடிரிக்குப் போயிட்டே இல்லையா? படிச்சு முடிஞ்சப்புறம்...''

அவன் சிறிது பொறுத்துத்தான் திரும்பினான். ''வேற வேலை என்ன கிடைச்சுது!'' என்றான். பிறகு பாதிப் புலம்பலில், ''இந்த ஊரையோ, ஜில்லாவையோ, விட்டுப் போக இஷ்டமே இல்லைதான்'' என்று முனகினான்.

''எனக்குத் தெரியும். படிப்பு முடிஞ்ச உடனே வேலையில்லாம ரொம்பக் கஷ்டப் பட்டே! உங்க அம்மாவும் பட்டா.''

வெறுமனே திரும்பினான்.

''நீ மிலிடிரி போயிட்டே! நான் கூட ரொம்ப வருத்தப்பட்டேன்.''

அவன் முழுதும் திரும்பி முழுசாக ஒரு பார்வை பார்த்தான்.

அவள் உடனே பதிலளித்தாள். ''நான் மட்டுமில்லை. வந்தனாவுந்தான் தவிச்சுட்டா''

சொல்லும்போது ஆனந்தபாஷ்பங்கள் அவன் கண்களிலிருந்து உருண்டன. அப்படியா? என்கிற தொனியில் ''ஹூம்?'' என்றான்.

''அவள் எப்படி மறக்க முடியும்? நீ எங்கே எத்தனை வாட்டி வந்திருக்கே? எவ்வளவு பேசியிருக்கே? நான் மனந் திறந்து சொல்றேன். நீ இந்த வீட்டுக்கு வந்தயானா நான் கவலையே படறதில்லை.''

அவன் இன்னும் பேசவில்லை. ஊமை அழுகையோடு அவளைப் பார்த்தான்.

''அவ (வந்தனா) அம்மா படுக்கையிலேயே தானே கிடந்தா! 'மங்களம்! யார் யாரோ பிள்ளைங்க அவளோடு (வந்தனாவோடு) வந்து பேசறதடீ! இதுவும் வெகுளியாய் பேசறது. நீ கொஞ்சம் கவனிச்சுக்கோடீ! என்னால எழுந்திருக்க முடியலேடீ!' என்பா. ஆஸ்மாவிலே கிடந்த கிடையிலே இருந்ததனாலே நான்தான் வந்தனாவுக்குக்கார்டியன். அவ அப்பாவைக் கூட அவ்வளவு சொல்ல முடியாது. படிக்கிறதும் ராமாயணத்துக்கு வியாக்கியானம் எழுதறதும்தான் ஒரே பொழுதுபோக்கு! பெண்ணு பெண்டாட்டியைப் பத்தி அக்கறை கிடையாது.''

அவன் தனது கண்ணீரை இப்போது வெளிப்படையாக வழித்தான்.

''ஆமாம். சொல்ல வந்தேனே. நான் வெறும் சமையல்காரிதானே! இருந்தாலும் பாரேன். ஆண்பிள்ளை வீட்டுக்குள்ளே வந்துட்டா கைக் காரியத்தை அப்படியே போட்டுட்டு ஹாலுக்கு வந்துடுவேன். சாடைமாடையாய் அவாளைக் கவனிப்பேன். ஏதாவது தப்பிதமா நடந்தா முறைச்சுக்கூடப் பார்ப்பேன். அதனாலே இந்தப் புருஷப் பிள்ளைகளுக்கு என்னைக் கண்டாலே பிடிக்காது. வந்தனா கிட்டே அவா சொல்லி, அவகூட என்கிட்டக் கேட்டா. நான் அதுக்கு

வக்கணையா சால்ஜாப்பு சொல்லிட்டேன். எதுக்குச் சொல்ல வந்தேன்னா...''

அவள் நிறுத்தி அவனை இரக்கத்தோடு பார்த்தாள்.

''...உன் விஷயத்திலே எனக்குப் பயமே கிடையாது. நீ அவளுக்குப் பத்தடி விலகித்தான் எப்போதும் இருப்பே! நெருங்கிப் பேச மாட்டே! அவள் கையிலே ஏதாவது வச்சிருந்தா விளையாட்டு என்கிற பேரிலே பிடுங்க மாட்டே! அவள் மேலே ஏரோப்ளேன் எறிய மாட்டே! கர்ச்சீபைச் சுருட்டி அவள் மார்பு மேலே எறிய மாட்டே! கால் வலிக்கிறதுன்னு சொன்னா எங்கேன்னு தொட்டுப் பார்க்க மாட்டே! ஜாடை மாடையா வெளியிலே போலாம்னு அழைக்க மாட்டே! வந்தனாவுக்குத் தோள் துணி ஒழுங்கா நிக்காது. எக்கச் சக்கமா கிடந்தா நீ நிமிர்ந்து கூட அவளைப் பாக்கவே மாட்டே! நீ நல்ல மனசுக்காரன்! மனசிலேயே எல்லாத்தையும் தக்க வச்சுப்பே! மனசுக்குள்ளே கூட எல்லையைத் தாண்ட மாட்டே! உன்னை நான் புரிஞ்சுக்கிட்டேன். நல்லாப் புரிஞ்சுக்கிட்டேன்.''

அவன் திடுக்கிட்டு அவளைப் பார்த்தான். இந்த அம்மாளிடம் இவ்வளவு விஷயங்கள் இருக்கின்றனவா? சாதாரணமாக நினைத்திருந்தான். இப்போது அவள் மீது இரு மடங்கு மதிப்பு அதிகரிக்க, விசேஷமாக அவளைப் பார்த்தான். நன்றியுடன் ''உங்களை முன்னாடியே அறிஞ்சுக்காமப்போயிட்டேன்'' என்றான் தழதழத்து.

''வெறும் சமையல்காரின்னு நினைச்சிருப்பே!'' என்றாள் லேசாகச் சிரித்து ''சாமயல்காரிதான். இருந்தாலும் பொறுப்பு கொடுத்திருந்தாளே! அதனாலே அதை நிறைவேற்ற வேண்டி வந்தது. நீ வந்தா எனக்குக் கவலை இல்லை. வேறு யாராவது வந்தா வயத்திலே நெருப்பைக் கட்டிட்டு உட்கார்ந்திருப்பேன்.''

''அதிலேயும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் பையன் ரங்குடு இருந்தானே, அவன் வந்துட்டான்னா ஹாலுக்குள்ளேயே பழியாக் கிடப்பேன்.

''வந்தனாவோடு அவன் ரொம்பப் பேசுவான். லிமிட்டே இருக்காது. அவன் வந்துட்டா அடிக்கொருதரம் ஹால்லே வந்து பார்ப்பேன்....''

ஆதங்கத்தோடு அவன் திரும்பினான். ''ரங்குடு....'' என்று நிறுத்தினான் அவன். எண்ணத்தைப் பேச்சாக உருவாக்கக் கஷ்டப்பட்டான். ''ரங்குடு... வந்துட்டிருந்தானா'' என்று சாதாரணம் போலவும் கேள்வி போலவும் கேட்டான்.

''ஆமாம்! சாயங்காலமா வருவான். ஒரு நாள் சண்டையே போட்டேன். 'என்ன தொண தொணன்னு பேச்சு?'ன்னு.''

''நிறுத்திட்டானா?'' என்றான் ஆர்வத்தோடு.



பட்டுப் புடவைகளை அடிக்கடி ட்ரை-க்ளீனிங் செய்வதால் புடவைகள் சீக்கிரம் நைந்து போகும். புடவைகள் வீணாகாமல் இருக்கவும் ட்ரை க்ளீனிங் மாதிரி இருக்கவும் சுலபமான முறை:

சீயக்காய்க் கொட்டை என்று கேட்டால் கடையில் கிடைக்கும். தெலுங்கில் இது குங்குடிக்காய் என்று சொல்வார்கள். கோலி குண்டு மாதிரி லேசான பழுப்புக் கலரில் இருக்கும். உள்ளே கருப்பாக, குண்டாகக் கொட்டைகள் இருக்கும். இந்தக் காயைப் பத்துப் பதினைந்து எடுத்து நசுக்கிக் கொட்டையை எறிந்து விட்டு மேல் தோலை மட்டும் சிறிது வெதுவெதுப்பான நீரில் ஊற வைக்கவும்.

கால் மணி கழித்து அந்தத் தோலை இரண்டு உள்ளங்கைகளில் தேய்த்துக் கசக்கினால் நல்ல நுரை வரும். அதில் தேவையான தண்ணீர் ஊற்றி பட்டுப் புடவையை ஊற வைக்கவும். அதிக நேரம் ஊறினால் சாயம் ஒட்டும். கொஞ்ச நேரம் கழித்து புடவையை கசக்கித் தண்ணீரில் அலசவும். புடவையில் உள்ள எண்ணெய்க் கரை கூட போகும். பிறகு மிகக் கொஞ்சமான கஞ்சியில் பத்து நிமிஷம் ஊறவைத்து, காயவைத்து இஸ்திரி செய்யவும்

பட்டுப் புடவையைப் பூச்சி அரிக்காமல் இருப்பதற்கு கடைசியாக அலசும் தண்ணீரில் ஒரு ஸ்பூன் கெரஸின் விட்டு கலக்கி அலசவும்.

—நிர்மலா தணிகாசலம்

''இல்லை. விபரீதமாப் போச்சு. இரண்டு பேரும் அப்புறம் குசுகுசுன்னு பேச ஆரம்பிச்சாச்சு.''

அவள் நிறுத்தினாள். அவன் கண்கள் இப்போது எவ்வளவு கலங்கியிருந்தன! அவற்றின் மத்தியில் சொல்ல முடியாத சோகம் ஒன்று தனித்து உருவாகி இருந்தது.

''அப்புறம்?'' என்று அவன் கேட்க விரும்பினான். ஆனால் வார்த்தை வரவில்லை. முகம் தான் பேசிற்று.

''அப்புறம் சாயங்காலம் கோயிலுக்குப் போறேன்னு ஆரம்பிச்சாங்க! என்னாலே தடுக்க முடியலை. அவ அம்மா கிட்டே சொல்லிப் பார்த்தேன். அவளும் கேட்டுப் பார்த்தா. 'கோயிலுக்குப் போனா உனக்கு என்ன?' என்று வந்தனா ஒரு போடு போட்டுட்டா....

அவன் சிந்தனை இப்படி எங்கேயோ மாறி கொடுத்தது. வாய் கோணியிருந்தது.

என்னவோ பேச எடுத்தான். முடியவில்லை.

''ரெண்டு பேருமா லேட்டா வந்தா. பத்து மணி ஆயிடுத்து...''

அவன் இழைத்துக் கொண்டிருந்தான்.

''...அந்த வேளையிலே கோவில் கூட மூடி யிருக்கும். எனக்குக் கோபம் வந்துட்டுது.''

அவன் உடம்பில் எதோ பூடகமான சல னம் தெரிந்தது. உடம்பை இழுத்து அவன் நிறுத்தி வைத்திருப்பது போலத் தோன்றியது ''அப்பு...'' என்று சொன்னான். அதற்கு மேல் ஒரு இனமில்லாத சத்தம். வெளுத்து வந்த டிரஸ் போலக் கீழே குவியலாய் விழுந்தான்.

''ரகு'' என்றாள் அவள். நிலைவாசலில் ஓடி, விலாப்புறம் இருந்த வண்டிப்பரைக்கு ஓடி, ஒரு செம்புநிறையத் தண்ணீர் கொண்டு வந்தாள்.

பட் பட் என்று அவன் முகத்தில் அடித் தாள்.

அவன் கண் மெல்ல விழித்தது. அவளைப் பார்த்ததும் கூச்சம்தான் வந்தது தன்னை மீறிய பிரயாசையுடன் சீக்கிரம் எழுந்து நின்று ''ஒன்றுமில்லை ஒன்றுமில்லை'' என்றான்.

அம்மாள் அவனை பிதியோடு பார்த்தாள். அவனுடைய உடம்பு இன்னும் உதறுவது நன்றாகப் புரிந்தது. ''உட்கார்றியா?'' என்றாள்.

''ஒன்றுமில்லை. களைச்சிருந்தேன். இப்படி சாஞ்சுக்கிறேன்.''

## பாப்கார்ன் செய்வது எப்படி?

popcorn விதை கடைகளில் கிடைககிறது. அதைக் கொஞ்சம் வாணலியிலோ அல்லது குக்கர் அடி யிலோ சிறிது எண்ணெய் விட்டு எண் ணெய் காய்வதற்கு முன்னமேயே பாப் கார்ன் விதையை எண்ணெயில் அமிழுமாறு போடவும். விதைகள் எல் லாம் எண்ணெயில் தோய்ந்ததுபோல் இருக்க வேண்டும். பிறகு வாணலியை அல்லது குக்கரையோ அடுப்பில் வைக்க வும். முதலில் தீ கூடுதலாக இருக்க லாம். பாப்கார்ன் வெடிக்க ஆரம் பித்ததும் விட்டுத் தீயை மிதமாக வைக்கவும். கடுகு வெடிப்பது போல் வெடிக்கும். வெடிப்பு ஓசை அடங்கிய கியதும் அடுப்பிலிருந்து இறக்கி விடவும் மிளகாய்ப் பொடி, மஞ்சள் பொடி, உப்புத் தூள் தேவையான அளவு கலந்து பாப்கார்னில் தூவிவிட்டால் பாப்கார்ன் ரெடி. இது 5 நிமிடத்தில் தயாராகும். அதிக எண்ணெயும் பிடிக் காது. —ஹேமா ஸ்ரீராமன்

சுவரோடு சாய்ந்தான்.

அவள் அவன் கண்ணைப் பார்த்தாள். அதற் குள் எத்தனை மாளிகைகள், பூந்தோட்டங்கள் பொழில்கள், நந்தவனங்கள், அத்தனைகளை யும் கனவில் கட்டியிருந்தான் அவன். ஒரு காலத்தில் வந்தனுவைக் குடியேற்ற நினைத் திருப்பான். ஆனால் இப்போது...

அவளால் ஊடுருவிப் பார்க்க முடிந்தது. அந்த மாளிகைகள் புதுசாக இருந்தாலும் ஜீவனற்று, சோபையற்று, வெறும் சூன்ய லோகம் போல இருந்தது. ஒரு இடுகாட்டு வெறுமை என்றுகூடச் சொல்ல வேண்டும்.

அவள் ஒரு பெருமூச்சு எறிய, ''சொல் லுங்க!'' என்றான் அவன்.

கண்ணை ஒரு விநாடி மூடி யோசித்தாள் அவள். பிறகு, ''என்ன சொன்னேன்... ஆ..'' என்றாள்.

அவள் குரல் இப்போது ரொம்பரொம்பப் புதுசாக இருந்தது.

''ஆமா! எனக்கு ரொம்பக் கோபம் வந்தது. கன்னாப் பின்னா வென்று திட்டிட் டேன். அவன் இனிமேலே இப்படி நடந் துக்கிட்டா நான் வீட்டை விட்டுப் போயிடு வேன். உன் பாடு 'உன் அம்மா பாடு'ன் னேன். பயந்துட்டா.

அடுத்த நாள் என் தோளைக் கட்டிக்கிட்டு அழுதா. பாஞ்சாலி கோவில்லே தெருக் கூத்துப் பார்க்கப் போனேன். அதனாலே லேட்டாயிடுத்து... ரங்குடுவோட வெறும் சிநேகம்தான் வேறு எதுவுமில்லை என்று சத்தி யம் பண்ணிச் சொன்னா... அழுதா....''

அவன் தன்னை மீறியும் கீழே சரிந்து உட்கார்ந்தான். அவன் மார்பு விம்மிக் கொண்டிருந்தது. அவன் முகத்தில் சந் தோஷ மின்னல் ஒரு நொடி, அழுகை மின் னல் ஒரு நொடி...

''அப்புறம் இன்னொரு ரகசியத்தையும் சொன்னா...''

அவன் சட்டென்று நிமிர்ந்தான்.

''அதைச் சொன்னேன்னா உனக்கு எப்படி இருக்குமோ தெரியாது....''

அவள் அவனைச் செதுக்கும் பார்வை பார்த் தாள். அவன் அவளுடன் அவளை மறு பார்வை பார்த்தாள்.

''வந்தனா என்ன சொன்னா தெரியுமா?... என் மனசு ரகு மேலேதான் அக்கா. அவ னைத்தான் ரொம்பப் பிடிச்சிருக்கு. நான் பண்ணிக்கிட்டா அவரைத்தான் பண்ணிப் பேன். ஆனா அவன் சொல்லாமக் கொள்ளா மல் போயிட்டானேன்னு சொன்னா.''

அவன் உடம்பில் ஒரு துள்ளு! கண்ணி லிருந்து சூடான பாஷ்பங்கள் உதிர, ''சொன் னாளா, அப்படிச் சொன்னாளா?'' என்றான். அவனால் அவன் விம்மலைத் தாங்க முடியாமல் கட் கட் என்று இருமினான்.

''நீ மிலிடரியிலே சேர்ந்துட்டே வீட்டிலே சும்மா இருக்க முடியலே. அம்மா எத்தனை வீட்டிலே உழைச்சுப் போடுவா? போயிட்டே

அவன் தழதழுப்போடு "சொல்லிட்டுப் போயிருப்பேன்.... எனக்கு அவமானமா இருந்தது. ஊர்லே இப்படி எஸ். எஸ். எல். சியோடு போகிற பிள்ளை கிடையவே கிடையாது. வந்தனாவுக்கு அடிமட்ட ஏழ்மைத் தனத்தைக் காட்ட விரும்பவில்லை.... அவள் என்னைக் கேட்டாளா?..." என்றான்.

"கேட்டாளாவா? கேட்டு கேட்டு மாய்ஞ்சு போயிட்டா. அப்புறம் அமெரிக்காவுக்கு மேல் படிப்புக்கு அழைப்பு வந்தபோதுகூட போறதுக்குச் சுத்தமா இஷ்டப்படல்லே. அப்புறம் நீ வேறே ஊருக்கு வராமலே இருந்துட்டியா, வேற வழியில்லாம அமெரிக்கா போயிட்டா! அப்புறம் ரெண்டு மூணு வருஷம் கூட எனக்கு எழுதிக்கொண்டிருந்தா. அப்புறம் எல்லாம் நின்னுபோச்சு"

அவனுக்குத் துக்கமும் மகிழ்ச்சியும் வெய்யில் மழை போல் ஒருங்கு அடித்தது.

அவனது இதயத்தில் ஒரு மூலையில் தரிசையாக விடப்பட்டிருந்த பூமியில் குளிர் மழை விழுந்து கொண்டிருந்தது.

"அப்புறம்?" என்றான் அவனே ஆவலோடு.

"அப்புறம்" என்று அவள் இழுத்தாள். "பல வருஷமா எந்தச் செய்தியும் கிடையாது. பராபரியாகக் கேள்விப்பட்டேன். இப்போ கிரீட்டிங்ஸ் வர்றதோடு சரி! அதுவும் இரண்டு வருஷமா இல்லே. நான்தான் என்ன செய்யறதுன்னு தெரியாம இந்த வீட்டை பராமரிச்சுண்டு வரேன்...."

"பதினைஞ்சு வருஷமாச்சுல்லே?"

"ஆமாம்!"

"அம்மா அப்பா என்ன ஆனாங்க?"

"அம்மா இந்த ஊரிலேயே போயிட்டா! அப்பா அமெரிக்கா போய்ப் போனார்."

"அப்புறம்?"

எத்தனை அப்புறங்கள்?

"அப்புறம் அவள் எத்தனை நாள் தனியா இருப்பாள்? யாரையோ அமெரிக்கனைக் கல்யாணம் கட்டிக்கிட்டான்னு கேள்வி..."

"அமெரிக்கனையா?"

"ஆமா! துணை வேண்டாமா? அதுக்குத்தான்! அங்கேயே குடி போயாச்சு! வேறே என்ன செய்ய முடியும்?"

அவன் மனத்தில் வந்தனாவைப் பற்றி பெரிய இரக்கம் உருவாகியிருந்தது. ஒரு தனிப் பெண்ணாக, அப்பா அம்மா துணை இல்லாத பெண்ணாக, எவ்வளவோ கஷ்டங்களையும் துக்கங்களையும் சமாளித்து வாழ்க்கையில் போராடி முன்னுக்கு வந்து கடைசியில் களைத்துப் போகும் வேளையில் அவள் மனத்தில் நினைத்தவன் அவளுக்குக் கிட்டாமலேயே இருந்ததால் கடமைக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒரு அமெரிக்கனையே திருமணம் செய்து கொண்டிருப்பாள்! பாவம் அவள் வேறு என்ன செய்வாள்!

அவன் எழுந்தான்.

மனம் கொஞ்சம் தெளிந்தாலும் உள்ளே அதன் சஞ்சலங்கள் விலகவில்லை.

ஒருவேளை ரணத்தை மாற்றுவதற்கு வந்து, புது ரணத்தைச் சம்பாதித்துக்கொண்டு விட்டானோ!

ஒவ்வொரு அறையாகச் சென்றான்.

இரண்டைக் கடந்து மூன்றாவதற்கு வந்ததும் "இதன் சாவி கெட்டுப் போயிடுத்து, உள்ளே சப்பு, சவறு, ஒடிஞ்சது, ஒடியாதது குடும்பப் போட்டோ கீட்டோ எல்லாம் இருக்கு...."

"சாவி இல்லையா?" என்று தாபத்தோடு கேட்டான் அவன்.



''இல்லே. கெட்டுப் போச்சு.''

அவன் அந்த அறையின் சன்னல் பக்கம் போனுன்.

அவள் முன்னே நடந்தாள். அடுத்த தாழ்வாரம் போனதும் திரும்பிப் பார்த்தாள்

''வர்லேயா?'' என்ருள் அவள்.

சன்னலிலிருந்து சட்டென்று விடுபட்டு அவன் வந்தான்.

தாழ்வாரத்தைத் தாண்டினுர்கள். அதன் பிறகு முற்றம். பின் கட்டு. சமையலறை பாத் ரூம். கொல்லே.

தோட்டத்தின் தரையில் அவன் இடறி விழுந்தபோது அவள் அவனைப் பார்த்தாள். ''உனக்கு ஒண்ணும் இல்லேயே!'' என்று கலவரத்தோடு கேட்டாள்.

''இல்லே. கொஞ்சம் களைப்பு!'' என்ருன் அவன். அவள் சமாதானமடையவில்லே. அவனது மூச்சு அவளுக்குத் திகிலாக இருந்தது.

> தோசைக்குப் பச்சரிசி மட்டும் உபயோகிப்பவர்கள் அரிசியை ஊறவைப்பதற்கு முன் லேசாக வறுத்துவிட்டு வெந்நீர்விட்டு ஊறவைத்தால் தோசை மிகவும் மெத்தென்றும் வாசனையாகவும் ருசியாகவும் இருக்கும். வெந்நீரில் ஊற வைப்பதால் மற்ருெரு லாபமும் உண்டு உரலில் அரைப்பவர்களுக்கு அரிசி சிக்காமல் அரைபடவும் மேலே தெளிக்காமலும் இருக்கும். —வத்சலா

பெரிய ஊது உலே போல் இழுத்து இழுந்து வந்தது.

பின்னர் இருவரும் திரும்பினுர்கள்.

வீடு முழுவதையும் மீண்டும் கடந்து வாசலுக்கு வந்தார்கள்.

வராந்தாவில் இறங்கியதும் அவன் நின்ருன். ஒரு பூர்வ ஜன்மத்துக்குள் அவன் போய்விட்டுத்திரும்பியது போல் ஓர் உணர்வு தோன்றியிருந்தது.

''எல்லா இடமும் பார்த்தேன். ஒரே ஒரு அறையை மட்டும் நீங்கள் திறக்கலே'' என்ருன் அவன்.

''ஓ! அதுவா?'' என்று திகைப்புடன் கேட்டாள் அவள். ''அந்தச் சாவி மட்டும் என் கிட்டக் கிடையாது. குடும்ப ஞாபகார்த்தங்களேயும் போட்டோக்களேயும் உள்ளே வச்சிருக்கா! பத்திரமா இருக்கணும்னு.''

அவன் பேசவில்லே. ஒரே நேர் பார்வை மட்டும் பார்த்தான். முகத்தில் ஒரு சிறிதான வேதனை ஊமை மறைவாகப் படர்ந்தது.

''வரேன்'' என்ருன்.

ஒரு கனமான தேரைத் திருப்புவது போல் உடம்பைச் சிரமத்துடன் திருப்பினுன். பதட்டமான கால்களை ஊன்றி நடக்க ஆரம்பித்தான்.

ஒவ்வொரு அடியும் தரையில் பாரமாக விழுந்தது.

மெள்ள மெள்ள மேடு ஏறித் தெருவை சேர்ந்ததும் அந்த அம்மாள் திடீரென்று ஓடிவந்தாள்.

''ரகு....ரகு....''

அவசரமாக வந்து பாதையில் இருந்து எதையோ பொறுக்கிக் கொண்டு அவனை அணுகினுள்.

''ரகு....ரகு.... இதை விட்டுட்டுப் போறியே... இந்தா...''

நடக்கும்போது அவன் கையிலிருந்துவிழுந்த அந்த லாக்கெட்டை அவனிடம் கொடுத்தாள் சின்னச் சங்கிலி கோர்த்து அதில் அழகாக இருந்தது.

அவன் வெதும்பலோடு திரும்பினுன். ஒரு இளப்பமான புன்னகையை ஓட விட்டான்.

''வச்சுக்குங்க!'' என்ருன் கண்ணீரோடு. ''அது அவள் கொடுத்தது... ஒரு விநாடி கூட என் உடம்பை விட்டுப் பிரிஞ்சது இல்லே. ஆனு... இப்போ... உள்ளே அந்த அறை பூட்டப்பட்டிருந்ததே அதன் சன்னல் தள்ளினுல் திறந்தது. உள்ளே அந்த போட்டோவைப் பார்த்துட்டேன்''

''பார்த்துட்டியா?'' என்று வாய்க்குள்ளேயே முணு முணுத்தாள் அவள்.

அதில் வந்தனுவும் ரங்குவும் திருமணத் தம்பதிகளாகத் திகழ்ந்த பெரிய அளவு போட்டோ தொங்கிக் கொண்டிருந்தது.

அதை அவன் பார்க்க வேண்டாம் என்று தான்....

''நல்லெண்ணத்தோடு நீங்கள் இட்டு கட்டிய கற்பனையை நான் மறக்க மாட்டேன்... சொல்றேன். ஒரு ஆண் மாதிரி ஒரு பெண்ணுக்குக் காதல்லே ஆழம் வர்றதில்லே... அது ஒரு துரதிர்ஷ்டம்... நான் வரேன்....''

அவள் கல் போல் நின்ருள்.

அவன் கனமான பாதங்களைப் பூமியில் அழுத்தித் தள்ளாடி நடந்து போனுன்.

ஜீப்பில் ஏறியதும் திரும்பிக்கூடப் பார்க்கவில்லே.

கண்களை மூடினுன்.

இமையை மீறி நீர்த் துளிகள் தளதள என்று கொதித்து வழிந்தன.

ரணத்தைச் சிறிது ஆற்றலாம் என்று வந்தான். இப்போது புது ரணம் மட்டும் வரவில்லே. உள்ளம் முழுவதும் ரணங்களாக மாறிவிட்டது.

அதை அவனுல் இனிக் குணப்படுத்த முடியுமா?

# அம்மா ஸ்லோகம் சொல்லித் தருகிறாள்

அபிராமி துர்காதாஸ்



அடுக்களை யுத்த அரங்கமாகக் காட்சி அளித்தது. பாத்திரங்கள் இங்கும் அங்கும் முட்டி மோதிக் கலகலத்துக் கொண்டிருந்தன. எண்ணெய்க் குப்பியையும் சீப்பையும் கையில் சுமந்தபடி தலைவிரி கோலமாக, 'தலை பின்னிவிடம்மா ஸ்கூலுக்கு நேரமாச்சு' என்று அம்மாவைச் சுற்றிச் சுற்றி வந்தாள் சித்ரா.

''எனக்கு ஸாக்ஸ் போட்டு விடேன்'' என்று ஷூவும் ஸாக்ஸுமாகக் கத்திக்கொண்டிருந்தான் பாபு.

''டீ... சாரதா... எனக்கு ஆபீசுக்கு நேரமாச்சு. சமையல் ரெடியா? குளிக்க வெந்நீர் ரெடியா?''


முகம் முழுவதும் சோப் நுரையுடன் கையில் ரேஸருடன் கண்ணாடியின் முன் நின்று குரல் கொடுத்தார் அப்பா.

இத்தனை அமர்க்களத்துக்கும் நடுவில் அமர்ந்து சுவாரஸ்யமாக ஆங்கில நாவல் ஒன்றில் மூழ்கியிருந்தாள் லல்லி.


''ஏண்டி லல்லி! இதுகள் கத்தறது காதுல விழல்லே! நானும் பார்க்கிறேன் எப்பப் பார்த்தாலும் என்ன நாவல் வேண்டிக் கிடக்கிறது! எழுந்து வந்து ரஸத்துக்குத் தாளிச்சுச் கொட்டு. நான் இதுகளைக் கவனிக்கிறேன்.''

புடவைத் தலைப்பில் கையைத் துடைத்த படி நேராக அப்பாவின் பக்கத்தில் போய் நின்றாள் அம்மா.

'ஓ...அம்மாவுக்கு ஏதோ காரியம் ஆக வேண்டியிருக்கிறது. அதுதான் சரியான சமயத்தில் அப்பாவைப் பிடிக்கப் போகிறாள் அம்மா' எரிச்சலோடு பாதி படித்திருந்த நாவலைக் கீழே வீசிவிட்டு சித்ராவின் தலையைப் பிடித்து விருக் விருக்கென்று வாரிவிட்டாள் லல்லி.



உங்கள் முகத்தில் மிக அதிக அளவு முடி இருக்குமானால் அதற்குச் சிறந்த வழி 'ப்ளீச்சிங்தான்' — 500 மில்லி ஹைட்ரஜன் பராக் ஸைடையும் பவுடரையும், சிறு துளிகள் சிறிது முக அம்மோனியா திரவத்தையும் நன்கு கலக்கி அதிக முடியின் மீது தடவுங்கள். ஆனால் உலர்ந்த சருமம் உள்ளவர்களுக்கு இம்முறையினால் தோல் உலர்ந்து சருமம் கெட்டு விடலாம்.



''ஏன்னா...நம்ம ஆத்திலே ஸ்லோக கிளாஸ் ஆரம்பிக்கலாம்னு இருக்கேன். அக்கம் பக்கத்து மாமிகள் எல்லாரும் 'ஏண்டி சாரதா இவ்வளவு நன்னா ஸ்லோகம் எல்லாம் பாடறே! எங்களுக்கும் சொல்லிக் குடேன்' என்கிறார்கள். நீங்கள் என்ன சொல்றேள்?'' அம்மா ரொம்பவும் பவ்யமாகச் சொன்னாள்.

அம்மா பலே கெட்டிக்காரி.

எந்தக் காரியத்தை அப்பாவிடம் சாதித்துக் கொள்வதானாலும் கத்தி முனையிலோ, அல்லது கழுத்து முடிச்சு முனையிலோதான் சாதித்துக் கொள்வாள்.

என்னடா கத்தி முனை, கழுத்து முடிச்சு என்றெல்லாம் சொல்கிறேனே என்று பயப்படுகிறீர்களா? பயப்பட வேண்டாம்.

அப்பா முக க்ஷவரம் செய்துகொள்கிற நேரத்தையும் கழுத்துக்கு டை அணிந்து கொள்ளும் நேரத்தையும்தான் சொல்லுகிறேன். அந்த இரண்டு நேரங்களிலும்தான் அப்பாவின் எரிச்சல் உச்ச கட்டத்தில் இருக்கும். அந்த நேரங்களில் யார் எது சொன்னாலும் காதில் ஏறாது. மனசிலும் பதியாது. இந்த நேரங்களில் அம்மா தன் விருப்பங்களை அப்பாவிடம் சொல்லிவிட்டு, அப்பாவிடம் சொல்லியாகி விட்டது' என்கிற நிம்மதியில் தன் காரியத்தைச் சாதித்துக் கொண்டு விடுவாள்.

இப்பவும் ஸ்லோகக் கிளாஸைப் பற்றி அப்பாவிடம் சொல்லிவிட்டுத் தன் வேலையில் ஈடுபட்டாள் அம்மா.

சாப்பிட்டுவிட்டு பேண்ட் சட்டை அணிந்து கொண்டு 'டை'யுடன் அப்பா போராடிக் கொண்டிருந்தபோது டிபன் பொட்டலத்துடன் அம்மா வந்தாள்.

''டீ... லல்லி... அப்பா ஆபீஸ் போனதும் கதவைத் தாள் போட்டுக்கோ. பக்கத்தாத்து மாமி அடுத்தாத்து மாமி எல்லார் கிட்டேயும் போய் நாளைலேர்ந்து ஸ்லோக கிளாஸ் ஆரம்பிக்கப் போறேன்னு சொல்லிவிட்டு வருகிறேன்.''

தன் வயதையும் உடம்பையும் மீறின துள்ளலோடு அடுத்த வீட்டுக்குப் போனாள் அம்மா.

மறு நாள் பகல் ஒரு மணி இருக்கும்.

கார்ப்பரேஷன் பள்ளிக்கூடம் மாதிரி 'கஜகஜ'வென்று ஹால் பூராவும் மாமிகளின் கூட்டம். சின்ன வயசில் பாட்டுக் கற்றுக்கொள்ளாத குறையைத் தீர்த்துக் கொள்வது போல ஸ்லோகம் கற்றுக்கொள்ள வந்த சில வயசான மாமிகள், பொழுது போகாமல், பொழுதை நல்லபடியாக கழிக்க நினைக்கும் சில நடுத்தர வயசு மாமிகள், காலேஜ் படிப்பை' முடித்து விட்டு கல்யாணமா காரியாலயமா என்று இடைக்கழியில் நிற்கும் சின்னப் பெண்கள். இப்படி பலதரப்பட்ட கூட்டங்களுக்கு நடுவே ஜம்மென்று உட்கார்ந்திருக்கிறாள் அம்மா.

''அபிராமி அந்தாதிதான் முதலில் ஆரம்பிக்கப் போகிறேன்'' என்று சொல்லிவிட்டாள் அம்மா தீர்மானமாக.

சுருதிப் பெட்டி 'ஙொய்' என்று ரீங்காரமிட,

தாரமர் கொன்றையும்
செண்பக மாலையும்...

என்று அம்மா பிள்ளையார் காப்பு சொல்ல, சின்னக் குரலும், கட்டைக் குரலும் கீச்சுக் குரலுமாகச் சேர்ந்து முட்டி மோதிக்கொண்டு ஹாலே கிடுகிடுத்தது.

''அம்மாடீ... சித்த சுருதியைக் குறைத்து வையேன். அத்தனை உசரத்திலே பாட முடியல்லே!''

ஒரு வயசான மாமி சொல்ல, இதுவே நான் பாடற சுதிக்கு ரொம்பக் குறைச்சலா இருக்கு. இன்னும் குறைத்தால் எப்படி? என்று ஒரு சின்னப் பெண் முணு முணுத்தாள்

''ரொம்ப வருஷமா நாம எல்லாரும் வாயைத் திறந்து பாடாமலே இருந்துவிட்டோமோன்னோ அதுதான் இப்படி சிரமமாக

இருக்கு, ரெண்டு நாள் பாடிண்டே வந்தால் எல்லாம் சரியாகி விடும்''

நடுத்தர வயது மாமி ஒருத்தி சமாதானம் சொல்ல, ஒரு வழியாக பிள்ளையார் காப்பு முடித்து அபிராமி அந்தாதியை ஆரம்பித்தாள் அம்மா.

பாதி பாட்டு பாடிக் கொண்டிருக்கும் போதே யாரோ கமறிக் கமறி இருமினார்கள்.

''ஒரு வாய் வெந்நீர்த் தீர்த்தம் இருந்தால் தேவலை. சித்த வாயைத் திறந்தாலே இந்தப் பாழாய்ப்போன இருமல் வந்து தொலைக்கிறது'' என்றாள் தொண்டைக் கமறலுக்குரிய மாமி.

''எனக்கும் ஒரு வாய் வெந்நீர் இருந்தால் தேவலை'' என்றாள் இன்னொரு மாமி மெதுவாக.

இப்படி ஒவ்வொரு மாமிக்கும் தொற்று நோய் மாதிரி தொண்டைக் கமறல் தாகம் எடுக்கவே, ஹால் முழுதும் கனைப்புச் சத்தம் அலை அலையாக எழுந்தது.

இப்போதெல்லாம் ஸ்லோகக் கிளாஸ் ஆரம்பித்ததுமே காதில் பஞ்சை அடைத்துக்கொள்வது வழக்கமாகி விட்டது. சில சமயங்களில் பஞ்சையும் மீறிக் காதுக்குள் புகுந்து நெஞ்சைத் துளைக்கும் சங்கீதத்தைக் கேட்டு வெகுண்டு எழுந்தாள் லல்லி.

''என்னம்மா வர வர ஸ்லோக கிளாஸ் ஒரே சந்தைக் கடை மாதிரி ஆகிவிட்டது!'' என்று அலறியபோது அம்மா சமாதானம் செய்தாள்.

''என்னடி செய்யறது லல்லி! ஆசையா சுலோகம் கத்துக்க வரவாளை எப்படி வராதே என்று சொல்வது?''

லல்லிக்கு ஒரு ஐடியா தோன்றியது.

''ஃப்ரீயா நீ ஸ்லோகம் சொல்லித் தரதுனாலேதானே பொழுது போகாத மாமிகள் எல்லாரும் வந்து கூட்டம் போடறா. தலைக்கு மாசம் ஒரு ஐந்து ரூபாய் என்று வசூல் பண்ணு. அப்போ கூட்டம் கணிசமாகக் குறையும்''

''சே... அப்படியெல்லாம் சொல்லாதேடி லல்லி. எல்லோரும் ஆசையாத்தான் கத்துக்க வரா. ஐந்து என்ன பத்து என்று வைத்தால் கூட எல்லாரும் வருவா.''

''பார்க்கலாமா?'' என்று லல்லி சவால் விடவே அம்மாவும் ஒப்புக் கொண்டாள்.

என்ன ஆச்சரியம்!

அடுத்த ஒரு வாரத்தில் கணிசமான கூட்டம் கரைந்தது. எண்ணி ஒரு பத்து மாமிகளே கிளாசுக்கு வந்தார்கள்.

''என் மூன்றாவது பெண் இரண்டாவது பிரசவத்துக்கு வரா. கிளாசுக்கு நான் எப்படி வரது?''

இப்படி ஒரு மாமி நழுவினாள்.

''எங்க அக்கா பொண்ணுக்குக் கல்யாணம் நிச்சயமாகி யிருக்கு. நான் போய்த்தான் முறுக்கு அதிரசம் எல்லாம் செய்யணும். ஒரு மாசம் முன்னாடியே போகணும். ஒரு மாசம் கிளாஸ் விட்டுப் போனா என்னாலே பிடிக்க முடியாதும்மா'' — இப்படி ஒரு மாமி வழுக்கிக் கொண்டு போனாள்.

''இவ சொல்லிக் குடுக்கிற அழகுக்கு ஐந்து ரூபாய் பணம் வேறயா?'' என்று ஒரு மாமி நேரிலேயே சொல்லி விட்டாள்.

இப்படிப் பல மாமிகள் காரணம் சொல்லியும் சொல்லாமலும் நின்றது போக பாக்கி பத்துப் பேர்கள்தான் மிச்சம்.

லல்லிக்கு ஒரே சந்தோஷம்.

அம்மாவுக்கு அதை விடப் பரம சந்தோஷம் சுளையாய் மாசம் ஐம்பது ரூபாய் கையில் கிடைக்குமே!

ஒரு பத்து நாள் கழிந்திருக்கும். வீட்டுக்கார மாமி வந்தாள். அவளும் இதுவரை இலவச பாட்டுக் கிளாஸில் இருந்தவள். இப்போது மாதம் ஐந்து ரூபாய் என்றதும் நின்றுவிட்டவள்.

''வாங்கோ மாமி!'' என்று வரவேற்றாள் அம்மா.

காலில் உள்ள முடியை அகற்ற வீட்டிலேயே செய்யும் செலவற்ற வழி: ஒரு கிலோ சர்க்கரையை இரண்டு எலுமிச்சம் பழச் சாற்றுடன் கலந்து சிறிது சூடு படுத்துங்கள். அதில் ஒரு துளி எடுத்து விட்டால், கட்டியானால் உங்கள் கிரீம் ரெடியாகிவிட்டது என்று அர்த்தம். இந்தப் பாத்திரத்தைக் கொதிக்கும் நீரில் வைத்து, ஒரு மழுங்கிய கத்தியின் உதவியினால் உங்கள் கால் கைகளில் இதைத் தடவுங்கள். மேலே ஒரு சுத்தமான, நீளமான, சிறிய துணியை அழுத்தி முடி முளைப்பதற்கு எதிர்ப்புறமாக இழுங்கள். முடி கையோடு துணியில் வந்துவிடும்.

''டீ....லல்லி, காஸை மூட்டி ஒரு பெரிய கெட்டில் நிறைய வெந்நீர் போட்டுக்கொண்டு வா.''

அம்மாவின் உத்தரவைக் கேட்டு நாவலில் சுவாரஸ்யமாக மூழ்கியிருந்த லல்லி, எரிச்சலோடு எழுந்து சென்று கால் அடுப்பை மூட்டி வெந்நீர் போட்டுக் கொண்டு வந்தாள்.

''எங்க பொண், டில்லியிலேருந்து வரா. நீங்க இடத்தைக் காலி பண்ணினால் தேவலை'' என்றாள் எடுத்த எடுப்பில்.

அம்மா திருதிருவென்று விழித்தாள்.

''இரண்டு மாசம் முன்னாடியே சொல்லணும்னு நினைச்சேன். ஆனால் ஏதோ நல்ல சுலோகங்களைச் சொல்லித் தந்துண்டு இருக்

கேளே, இது ஒரு புண்ணிய கைங்கரியம் தானே நமக்கும் அதிலே பங்கு வரட்டும்னு தான் பேசாம இருந்தேன். இப்போ...''

''இப்போ என்ன மாமி?''

அம்மா தயக்கத்துடன் இழுத்தாள்.

''இப்போதான் பணம் வசூல் பண்ணி பள்ளிக்கூடம் மாதிரி நடத்தறேளே. சரிசரி இதெல்லாம் எதற்கு? நீங்க ஒடனே காலி பண்ணிடுங்கோ.''

மாமி விருட்டென்று போய்விட்டாள்.

''என்னடி இது லல்லி!''

அம்மா அங்கலாய்த்தாள்.

சாயந்திரம் அப்பா வந்ததும் அம்மாவும் பெண்ணுமாக விஷயத்தைச் சொன்னதும் அப்பா குதி குதி என்று குதித்தார்.

காலி பண்ண முடியாது என்ன செய்வார்கள் பார்க்கலாம் என்று சவால் விட்டார்

ஆகக் கூடி அலைந்து திரிந்து அடுத்த தெருவிலேயே ஒரு இடம் பிடித்துவிட்டாள் அம்மா. இந்த இடத்தை விடச் சின்ன இடம் தான். ஆனாலும் வாடகை ஐம்பது ரூபாய் அதிகம். இந்த ஐம்பது ரூபாயை எப்படிச் சரிக்கட்டுவது என்று அம்மா கவலைப்பட்ட போது, ''உன் சுலோகக் கிளாஸ் பணம் ஐம்பதும் கோவிந்தா'' என்று சொல்லி நமுட்டுச் சிரிப்புச் சிரித்தாள் லல்லி.

புது வீட்டுக்கு வந்து அன்றுதான் முதல் கிளாஸ். எல்லா மாமிகளும் வந்திருந்தார்கள்.

கையின் அடியில் உள்ள உரோமத்தை எடுக்கச் சிறந்த வழி பிளேடு தான். ரேசர் உபயோகித்து இதைச் செய்யலாம். இதற்கு முன் அப்பாகத்தில் சிறிது பவுடரைத் தூவி பிறகு எடுங்கள். பிறகு எடுத்த பின்பும் சிறிது பவுடரைத் தூவுங்கள். வேறு எந்தத் திரவ நிலையில் உள்ள வாசனைத் திரவியங்களையும் உபயோகிக்க வேண்டாம். —அருணா கோபால்

''ஆனந்தமாய் என் அறிவாய்,
நிறைந்த அமுதமுமாய்....'

''பேஷ் பேஷ். ரொம்ப நன்னா இருக்கு.''

பாட்டில் கனிந்து, கசிந்து உருகி அபிராமி அம்மனே நேரில் வந்து நிற்கிறாளோ என்கிற பரபரப்பில் எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள்.

ஆஜானுபாகுவாய் இடுப்பில் கைவைத்துக் கொண்டு ருத்ர தேவதையாக நின்றிருந்தாள் வீட்டுக்கார சுந்தரி அம்மாள்.

அவளைக் கண்டதும் அம்மாவுக்கு கை காலெல்லாம் வெட வெடவென்று நடுங்கியது.

''வாங்கோ மாமி.''

லல்லிதான் சமாளித்துக் கொண்டு மாமியை வரவேற்றாள்.

''நான் ஒன்றும் ஒங்களோட சேர்ந்துண்டு கோஷ்டி கானம் பாட வரல்லே! இது என்ன சந்தைக் கடையா அல்லது பஜனை மடமான்னு சுடச் சுடக் கேட்டுப் போக வந்தேன். இது மாதிரி யெல்லாம் பஜனை பாடறதுன்னா வேற எடம் பார்த்துண்டு போயிடுங்கோ.'' — படபடவென்று பட்டாசாய் வெடித்து விட்டு மாடிப் படி அதிர இறங்கிப் போனாள் சுந்தரி மாமி.

அவள் பின்னாலேயே ஒவ்வொரு மாமியாக இறங்கிப் போனார்கள்.

மறுநாள் காலை.

வழக்கம் போல அமர்க்களங்கள்.

''டீ சாரதா ஆபீசுக்கு நேரமாச்சு. சமையல் ரெடியா? வெந்நீர் ரெடியா?'' என்று கத்திய அப்பா ரேஸரை எடுத்து குரங்கு மாதிரி கன்னத்தை உப்ப வைத்துக் கொண்டபோது அம்மா வந்தாள்.

''ஏன்னா... நேத்து சாயந்திரம் அந்த சுந்தரியம்மாள் வந்து கன்னா பின்னாவென்று கத்திவிட்டுப் போனா. வீட்டைக் காலி பண்ணணுமாம். வேற வீடு பார்க்கணுமாம்.

அப்பா காதில் விஷயத்தைப் போட்டு விட்ட நிம்மதியோடு அடுக்களைக்குப் போனாள் அம்மா.

அப்பா குளித்து சாப்பிட்டு உடை உடுத்து டையோடு மன்றாடிக் கொண்டிருந்தபோது அம்மா டிபன் பொட்டலத்தோடு வந்தாள்.

''டீ லல்லி அப்பா ஆபீஸ் போனதும் ஜாக்கிரதையாக் கதவைச் சாத்திக்கோ. நான் அம்புஜத்தாத்துக்குப் போய் வீட்டு விஷயமாச் சொல்லிட்டு வரேன்.''

''சாரதா எங்கே போறே?''

வழக்கத்துக்கு விரோதமாக டையை கழுத்திலிருந்து உருவி எறிந்துவிட்டு அப்பா கத்தினார்.

''இதோ பார் சாரதா, உன் ஸ்லோகக் கிளாஸை இன்னியோட மூட்டை கட்டி வெச்சுடு. வீடு காலி பண்ணவும் வேண்டாம் வேற வீடு பார்க்கவும் வேண்டாம்.''

''சுலோகக் கிளாஸ் ஒண்ணும் முக்கியமில்லை! மூட்டை கட்டி வெச்சுடறேன். ஆனா நான் சொல்ல வந்தது என்னன்னா நாம்ப இந்த மாதிரி குடக்கூலிக்கு இருக்கிறதுனாலதானே நம்மைப் பார்த்து ஒருத்தர் பல் மேல் நாக்கைப் போட்டுண்டு வந்து காலி பண்ணுங்கோன்னு சொல்றா... ஏன்னா நாமே சொந்தமா ஒரு வீடு வாங்கிட்டா என்ன?''

அப்பாவின் பதிலை எதிர்பார்க்காமலே அம்மா வெளியே போய்விட்டாள்.



"ஸ்..ஸ்..பாரும்மா,
ரொம்ப அரிக்குது..எரியிதும்மா."
உபயோகியுங்கள்
நைஸில்.
உடனடி நிவாரணம்
அளிக்கும்
வியர்க்குரு பவுடர்.
2 தினுசு
டப்பாக்களில்
கிடைக்கிறது
'நீலம்' மற்றும்
'சந்தனம்'.
மருந்துப் பொருட்கள்
அடங்கிய—நைஸில்:
1. அதிக வியர்வையைத் தவிர்க்கிறது.
2. வியர்வையை உறிஞ்சுகிறது.
3. துர்நாற்றம் ஏற்படுத்தும் கிருமிகளை அழிக்கிறது.
4. சருமத்திற்கு இதமளிக்கிறது.
Glaxo
nycil
வாங்குவீர்
நைஸில்
விரட்டுவீர்
வியர்க்குருவை.
CASGLN-4-182 TAM

## ரேவதி பாலு

கல்யாண அலுப்புத் தீர இன்னும் ஒரு வாரம் ஆகும்போலிருந்தது. அதுவும் இந்தப் பால்காரன் வந்துவிடுவானே, வேலைக்காரி வந்துவிடுவாளேன்னு பயந்து பயந்து தூங்குகிற இந்த மத்தியான வேளைத் தூக்கத்தில் உடம்பு வலி இன்னும் ஜாஸ்தியாகிருப் போல் தோன்றுகிறது. கல்யாணம் ஆன கையோடு புது மணத் தம்பதிகள் ஹனிமூன் போவது போல, பெண்ணைப் பெற்றவர்களும் எங்கேயாவது கண்காணாமல் போயிருந்து ஒரு வாரம் சாப்பாடு தூக்கத்தைத் தவிர வேறு வேலையில்லாமல் ரெஸ்டாக இருக்கும்படி ஏதாவது ஏற்பாடு இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டே மெதுவாய்எழுந்து உடம்பு சுவாதீனப்படும்வரை உட்கார்ந்து இருந்துவிட்டுக் காரியங்களைக் கவனிக்கப் போனேன்.

''என்னம்மா தள்ளாடறே?'' என்றாள் என் இளைய மகள் உமா. அவளுக்குத் தன்னுடைய அலுப்பைப் பொருட்படுத்த முடியாதபடி அடுத்த வாரம் செமஸ்டர் பரிட்சை. படித்துக் கொண்டிருக்கிறாள். பரிட்சை முடிந்துதான், மொத்தமாய் ரெஸ்ட் எடுக்கணும்.

''ஒண்ணுமில்லேடி! உடம்பு பக்கம் பக்கமாய் வலிக்கிறது. ஒண்ணுமே முடியலே. அதான்.'' என்றேன்.

''என்னம்மா, நீயும் அக்கா



# தோரணங்கள்

மாதிரி ஆரம்பிச்சுட்டே?'' என்று சிரித்தாள் உமா.



எங்கள் பேச்சு சப்தத்தில் விழித்துக் கொண்டார் என் கணவர்.

''ஐயய்யோ! சுசீக்கு உடம்பு கிடம்பு ஒண்ணும் படுத்தாமல் இருக்கணுமே. நான் வேணு சாயங்காலம் ஒரு நடை போய்...'' என்று நீளமாய் ஆரம்பித்தவரை ''ஒன்றும் வேண்டாம்'' என்று இடைமறித்தேன்.

''கல்யாணமாகி ஒரே வாரம்தான் ஆறது. அவ அந்தச் சூழ்நிலைக்கெல்லாம் தன்னைச் சரிப்படுத்திண்டு குடித்தனம் ஆரம்பிக்கட்டும். அடுத்த வாரம் ரெண்டுபேருமா போகலாம்.''

''பெண்ணை வீட்டை விட்டு அனுப்பிவிட்டு நான் தவியாய்த் தவிச்சிண்டிருக்கேன். நீ ராக்ஷஸ ஜன்மம்டீ! துளிக்கூட இரக்கமே கிடையாது உனக்கு!''

''இருங்கள் இருங்கள்'' என்று கையமர்த்தினேன் அவரை. ''ஊர் ஒலகத்தில இல்லாத அதிசயமா நீங்கதான் பெண்ணைப் பெத்துக் கல்யாணம் பண்ணிக் குடுத்திட்டேளா இப்படி மாஞ்சு போறதுக்கு. எனக்கும் அக்கறை இருக்கு. டாக்டர் சொன்னதை மறந்து போயிட்டேளா?''

அவர் யோசனையில் ஆழ, நான் வேலையைப் பார்க்கப் போனேன்.

எங்களுக்கு சுசீலா உமா ரெண்டே பெண்கள். சுசீலாவுக்கு படிப்பு ரொம்ப ஏறவில்லை. எஸ். எஸ். எல். ஸி. மூன்று தடவை எழுதியும் பாசாகவில்லை. பிடிவாதமாய் வீட்டிலேயே இருந்துவிட்டாள். உமா அவளுக்கு நேர் எதிர். படிப்பு, பாட்டு எல்லாவற்றிலும் முதல். அதைத் தவிர, ஓவியம், யோகா என்று எத்தனை யெத்தனையோ விஷயங்களில் ஆர்வம். ரொம்பத் துடி.

சுசீலா சுபாவத்திலேயே சிறிது சோம்பேறி. அதிலும் முதல் பெண் என்று அப்பா செல்லம் வேற ஜாஸ்தி. படித்துக் கொண்டிருந்த நாட்களில் சாதாரணமாக ஜுரம் கூட வராதவள், வீட்டில் இருக்க ஆரம்பித்த நாள் முதல் தினமும் ஏதாவது வியாதி சொல்ல ஆரம்பித்தாள்.

அவளுக்கு எப்போதும் சினிமாப் பாட்டு கேட்க வேண்டும். 'ஹாய்'யாகப் படுத்து கொண்டு கதைப் புத்தகம் படிக்க வேண்டும். வீட்டில்தானே இருக்கிறாள் என்று ஏதாவது ரெண்டு காரியம் சொன்

னால் அரை மனதாய்ச் செய்வாள். செய்துவிட்டு, கால் வீங்கி விட்டது, கை குடைகிறது, மண்டையைத் தெறித்துப் போகிறது என்று விதவிதமாய் வியாதி சொல்வாள். நான் முதலில் இதைச் சட்டையே செய்யவில்லை. பொண்ணுகப் பொறந்துட்டு, அதுவும் நாளைக்கு இன்னொரு எடத்துக்குப் போக வேண்டியவ காரியம் ஒண்ணும் கத்துக்காம கதை பண்ணினா எப்படி?

ஆனால் இது நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வந்தது. திடீரென்று ''அம்மா எனக்கு என்னவோ பண்றதே, தலையைச் சுத்தற மாதிரி இருக்கே! ஒருவேளை ரத்த அழுத்தம் இருக்குமோ?'' என்பாள். இன்னும் தனக்கிருக்கிற அறிகுறிகளுக்குத் தனக்கு எப்பேர்ப்பட்ட வியாதிகளெல்லாம் வரக்கூடும் என்று ஆராய்ந்து சொல்லிக்கொண்டிருந்தாள்.

''அசடு! தத்துப் பித்துன்னு உளருதே சும்மா படுத்திண்டிருக்காம எழுந்து சுறுசுறுப்பா வளைய வந்தா ஒருவியாதியும் வராது.'' என்பேன்.

**தேமலை போக்குவது எப்படி?**

**தேமலை மிக சுலபமான முறையில் போக்கி விடலாம். விபூதி பச்சிலை சிறிது துளசி, உப்பு கொஞ்சம் மூன்றையும் விழுதாய் அரைத்து தேமல் உள்ள இடங்களில் நன்கு தடவி விடவும். அரைமணி நேரம் கழித்து சீயக்காய் தேய்த்து குளிர்ந்த நீரால் கழுவி விடலாம். நான்கு தினங்களில் தேமல் மறைந்துவிடும்.**

**-புவனா நாகராஜன்**

''உனக்கு இரக்கமே கிடையாதே! என்னை கண்டாலே ஆகாதே! நான் கஷ்டப்பட்டா சந்தோஷப்படறவதானே நீ'' என்று என்னென்னவோ ஆத்திரத்தில் கத்துவாள். 'ஓ'வென்று அழுவாள். எத்தனை நல்ல வார்த்தை சொன்னாலும் சமாதானமாக மாட்டாள்.

சாயந்திரம் அவ அப்பா எப்போ வருவார்னு காத்திருந்து அன்னிக்கு அவளுக்கு உடம்பு படுத்தின விதத்தை அவரிடம் விஸ்தாரமாக விவரித்து அழுவாள்.

உடனே, ''கொழந்தை முடியலேங்கறாளே, கொஞ்சம் கவனிக்கக் கூடாது? காலுக்குத் தவிட்டு ஒத்தடம் கொடு. கையில ஐயோடக்ஸைத் தேய்'' என்று எனக்கு உத்தரவுகள் பறக்கும்.

முதலில் சாதாரண டாக்டர்களிடம் காண்பித்துப் பார்த்தோம். ஒன்றும் குணம் தெரியவில்லை. சுசீலா விடாமல் மூச்சுக்கு முன்னூறு வியாதி சொல்லிக் கொண்டுதான் இருந்தாள். சரிதான். இந்தப் பெண்ணுக்கு நெஜமாகவே உடம்பில் எங்கேயோ ஏதோ கோளாறுதான்போலிருக்கிறது என்று பயந்துபோய் உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்வரை அது அதற்கான ஸ்பெஷலிஸ்டுகளிடம் அழைத்துச் சென்று காட்டினோம். பணம் தண்ணீராய்ச் செலவழிந்தது. எங்கேயும் எந்தக் கோளாறும் இல்லை. நார்மல்தான் என்று சொல்லிவிட்டார்கள்.

கடைசியாய் மண்டையிடிக்காக ஒரு நியூரோலாஜிஸ்டிடம் காட்டியபோது, அவர்தான் சொன்னார்: ''தலைவலி என்பது மனசு சம்பந்தப்பட்ட காரணங்களால்கூட வரலாம். எதுக்கும் ஒரு சைக்கியாட்ரிஸ்ட்டையும் பார்த்து விடுங்கள்.''

சைக்கியாட்ரிஸ்ட் ராஜகோபாலன் சிரித்த முகமாய், பொறுமையாய், அவளுக்கு எந்தெந்தச் சமயத்தில் உடம்பு எப்படியெப்படிப் படுத்துகிறது என்று சுசீலா பட்டியல் போட்டுச் சொன்ன விவரங்களைக் கேட்டார். பிறகு இவரிடம் திரும்பினார்.

''படிக்க வெக்கலேன்னா என்ன? வேற ஏதாவது விஷயத்தில் உங்க மகளை நீங்க ஈடுபடுத்தியிருக்கலாமே!''

''உடம்பு படுத்தி அவ ஒரே 'வீக்'கா இருக்காளே. அவளாலே ஒண்ணும் முடியாதே!' என்றார் இவர்.

டாக்டர் ஒரு நிமிடம் தன் முன்னாலிருந்த லெட்டர் பேடையே வெறித்தபடி யோசனையில் ஆழ்ந்தார்.

பிறகு சுசீலாவை அடுத்த அறையில் போய் அமரச் சொன்னார்.

நாங்கள் மனச் சஞ்சலத்தோடு அவரையே பார்த்தோம். என்ன சொல்லப் போகிறார்?

''முதல் விஷயம், நீங்க உங்க பெண் எதிரே, அவளுக்கு உடம்பு சரியில்லை அவளால முடியாதுன்னு சொல்லவேகூடாது. அதுவே அவ மனசுல படிஞ்சு போயிடும். உங்க பெண்ணைத் தெரிஞ்சோ, தெரியாமலோ ஒண்ணும் கற்றுக் குடுக்காம அப்படியே விட்டுட்டீங்க. உங்க ரெண்டாவது பெண் எல்லா விஷயங்களிலும் ரொம்பக் கெட்டிக்காரின்னு சொன்னீங்க. அப்ப, சந்தேகமில்லாம நீங்க ரெண்டு பேரும் அந்தப் பெண்ணை சுசீலா முன்னிலையில் புகழ்ந்திருப்பீங்க. அவளுக்குத் தான் அந்த மாதிரி இல்லையேங்கற ஒரு தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டிருக்கலாம். என்னடா இது, அப்பா அம்மா நம்மைக் கவனிக்காமப் போயிடப் போறாளோங்கிற பயத்தில அட்டென்ஷன் தனக்கு வேணுங்கிற வெறியிலே கற்பனையாய் வியாதி சொல்ல ஆரம்பித்திருக்கலாம். உடனே நீங்க மாய்ஞ்சு மாய்ஞ்சு சிசுருஷை பண்ணினதில் ஒரு திருப்தி

கிடைத்தது. அந்தத் திருப்தியைத் தொடர்ந்து பெறுவதற்காகவே திரும்பத் திரும்ப உடம்பு முடியவில்லை என்று கூறி கடைசியில் இந்த மாதிரி கேஸில் அவர்கள் கற்பனை பண்ற விஷயங்களை நாளடைவில் அவர்களே தீவிரமாய் நம்ப ஆரம்பித்து விடுவார்கள். பிறகு நீங்க எத்தனை டாக்டரைப் பார்த்தாலும் பிரயோஜனமில்லை. டாக்டருக்குக் கண்டுபிடிக்கத் தெரியவில்லை. ஆனால் எனக்கு உள்ளூர ஏதோ இருக்கு என்பார்கள். ஆமாம்! உங்கள் பெண்ணுக்கு இருபத்திமூணு வயசாகிறதே கல்யாணம் பண்ற உத்தேசமில்லையா உங்களுக்கு?'' என்றார்.

''உடம்பு படுத்திண்டே இருக்கிற போது எப்படின்னுதான்....'' என்று இழுத்தார் இவர்.

''உஸ்! உங்களுக்கு மொதல்ல வைத்தியம் பண்ணணும் போலிருக்கே! இதோ பாருங்க. இந்த நொடி முதல் சுசீலாவுக்கு ஒரு உடம்புமில்லை. எல்லாப் பெண்களையும் போல நார்மலாத்தான் இருக்கிறாள் என்று முதல்ல நீங்க நம்பணும். பிறகு மெதுவாய் அவளை நம்ப வைக்கணும். அவரை விட நீங்களே தைரியமாயிருப்பீங்க போலிருக்கு. அதனால உங்ககிட்டயே சொல்றேன். கேளுங்க! எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் சுசீலாவுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணுங்க. அவளுக்குன்னு ஒரு குடும்பம், பொறுப்புன்னு வந்து சூழ்நிலையில் ஒரு மாறுதல் ஏற்பட்டால் நிச்சயம் மனநிலையிலும் மாறுதல் ஏற்பட்டு உடம்பு குணமாகிவிடும்.''

அவரிடம் விடை பெற்றுக் கொண்டு எழுந்த எங்களை ''ஒரு நிமிடம்!'' என்று நிறுத்தினார் டாக்டர்.

''இன்னொரு விஷயம். கல்யாணம் பண்ணிக் குடுத்தீங்கன்னா கொஞ்ச நாளைக்குக் குறைஞ்ச பட்சம் ஒரு பதினைந்து நாளைக்காவது அவளைப் போய்ப் பார்க்கற வேலை வெச்சுக்காதீங்க. அந்த சூழ்நிலைகளுக்கெல்லாம் அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டு அவ ஒரு மாதிரியா 'செட்டில்' ஆக 'டைம்' குடுத்துட்டு அப்புறம் போய்ப் பாருங்க. இது ரொம்ப முக்கியமான விஷயம்'' என்றார்.

அன்று டாக்டர் சொன்னதைத்தான் இப்போது இவருக்கு நினைவு படுத்தினேன்.

இவரும் சுசீலாவும் பலமாய் எதிர்த்தும் டாக்டர் சொன்னபடி நானே தீவிரமாய் வரன் பார்த்து, முனைப்பாய் நின்று எல்லாக் காரியங்களையும் கவனித்து ஒரு வழியாய் ஒருவன் கையில் பிடித்துக் கொடுத்தாயிற்று.

அவளுடைய நன்மைக்காக நான் கண்டிப்பாய் இருக்கிறேனே தவிர எனக்கு மட்டும் கல்யாணம் பண்ணிக் கொடுத்த பெண்ணைப் போய் பார்க்க ஆசையில்லையா? பதினைந்து நாட்கள் எப்போ முடியும் என்று காத்திருந்து இருவரும் ஆவலாய் ஓடினோம்.

எங்களை எதிர்பாராமல் பார்த்த மகிழ்ச்சி சுசீலா முகத்தில் வெளிப்படையாய்த் தெரிந்தது. ஓடிவந்து வரவேற்றாள்.

''எப்படி அம்மா இருக்கே? மாப்பிள்ளை இல்லையா?'' இவர் சுபாவமான உரத்த குரலில் ஆரம்பிக்க, ''உஷ்'' என்று வாயில் விரலை வைத்து எச்சரித்தாள்.

''அவருக்கு ஒரே தலைவலி. உள்ளே படுத்திண்டிருக்கார். இதோ அவருக்குத் தான் அடுப்பில் கஷாயம் போட்டுண்டிருக்கேன்'' அடுப்பைப் பார்க்க ஓடினாள்.

நான் அவளையே கண் கொட்டாமல் பார்த்தேன். என்ன துள்ளல்! என்ன சுறுசுறுப்பு!

மாப்பிள்ளைக்குத் தொந்திரவில்லாத படி அவர் அறைக் கதவைச் சாத்திவிட்டு வந்து அமர்ந்தாள்.

''பாக்டரியிலே ஓயாம நின்னுண்டே சூபர்வைஸ் பண்ணுரா, அப்பப்ப கால்வலி வந்து அவஸ்தைப் படுவார். பாவம்! நான் தைலம் தடவி உருவினாத்தான் மறுநாள் வேலை செய்ய முடியறதும்பார். நான் பாட்டுக்குப் பேசிண்டே இருக்கேனே, இருங்கோ காப்பி டிபன் கொண்டுவரேன்''

திரும்பி 'ஒரு ஓட்டம்' சமையலறைக்கு,

''எங்களோட வந்து ஒரு வாரம் இருந்துட்டுப் போயேம்மா!'' என்றார் அவளுடையஅப்பா.

''ஐய்யய்யோ! நான் இல்லாட்டா அவருக்கு ஒரு நிமிஷம் கூட முடியாது. அப்புறமாய்ப் பார்க்கலாம்.''

அடேயப்பா! நான் ஆச்சரியப்பட்டுப் போனேன். கல்யாணமான பதினைந்தே நாள்ல எவ்வளவு மாற்றம்!

''இப்படி ஓடு ஓடுன்னு ஓடுறாளே... இவளுக்குத் திரும்பி ஏதாவது உடம்புக்கு வராம இருக்கணுமே'' — வீட்டுக்குத் திரும்பும்போது என்னிடம் கவலையுடன் அங்கலாய்த்தார் இவர்.

நான் பொங்கிவந்த சிரிப்பை அடக்கிக் கொண்டேன்.

**பாயசம் செய்யும்போது பால் திரிந்து போனால், இரண்டு சிட்டிகை சமையல் ஸோடாவைப் போட்டால் திரிந்த பால் சரியாகிவிடும்.**

**-ஜெயா. வி. ராமன்**

# அன்புக்கும் மேலே...

## ஆர். சூடாமணி



அவர் முகத்தைப் பார்த்தாள். தயங்கி நிற்கிறார். ஏதோ சொல்ல வருகிறார். நிறுத்திக்கொள்கிறார். அவளுள் ரகசியச் சிரிப்பு எழுந்தது. வெளியே அதே கலையாத முகம். ''வரட்டுமா?'' என்று வழக்கம்போல் விடைபெற்றுக் கொண்டு பஸ் நிலையம் நோக்கி நடந்தாள்.

மாணிக்கம் வீட்டுக்குள் திரும்பினார். இனி மாலை அவள் அலுவலகத்திலிருந்து திரும்பும்வரை வீட்டில் அவருடைய தனி ராஜ்யம் தான்.

முகம் மழித்துக் குளித்துச் சாப்பிட்டும் ஆகிவிட்டது. லலிதா அதிகாலையிலேயே எழுந்து, காப்பி, சாப்பாடு, பிற்பகலுக்குச் சிற்றுண்டி எல்லாமே தயாரித்து விடுவாள். முன்பு போலவே காலை எட்டரை மணிக்கு அவரும் தானுமாக ஒன்றாய் உட்கார்ந்து சாப்பாட்டை முடித்துக் கொள்வாள். ''உங்களுக்குத்தான் இனிமே அவசரம் இல்லையே, நான் சாப்பிட்டுக் கிளம்பறேன், நீங்க அப்புறம் நிதானமா உக்கார்ந்து சாப்பிடுங்க'' என்று மறந்தும் சொன்னதில்லை. ஒரு மணிக்கு அவர் குடிக்கக் காப்பியை ஃப்ளாஸ்கிலும் மூன்று மணி டிபனை 'ஹாட் கேஸி'லும் வைத்துவிட்டுத் தனக்குச் சிற்றுண்டி காப்பியைக் கையில் எடுத்துக் கொண்டு ''வரட்டுமா?'' என்று கூறி வேலைக்குக் கிளம்புவாள். மாலைக் காப்பியை அவள் வீடு திரும்பிய பின் இருவருக்குமாகத் தயாரிப்பாள். முன்பெல்லாம் ஒரு அவசரத்துக்கு அவரைப் பால் காய்ச்சவோ காப்பி போடவோ கறிகாய் வாங்கி வரவோ சகஜமாய்ச் சொன்னதுண்டு. அவரும் வீட்டு வேலைகளை ஆணும் பெண்ணும் பகிர்ந்து செய்வதைக் கௌரவக் குறைவாய் நினைத்ததில்லை. ஆனால் கடந்த நான்கு மாதங்களாக அவருக்கு எந்த வேலையும் ஏவக் கூடாதென்பதில் லலிதா மிகவும் கவனமாய் இருந்தாள்.

அவள்தான் எத்தனை சூட்சுமம்!

'என்ன நினைக்கிறேன் நான்!' என்று அந்த எண்ணம் சுரீரென்று குத்த, சோபாவில் சாய்ந்திருந்தவர் நிமிர்ந்து உட்கார்ந்தார். இப்போது வீட்டில் சும்மா உட்கார்ந்திருப்பதால் முன்பு இயல்பாய்ச் செய்த வீட்டுப் பணிகள் இப்போது உறுத்தும் என்று அவள் கணக்குப் போடுவதை அவளுடைய சூட்சும அறிவு என்று பாராட்டினால் அவள் கணக்கு சரிதான் என்றுஒப்புக்கொள்வதாகவல்லவோ ஆகிறது? அவருக்கு ஒரு 'காம்ப்ளெக்ஸ்' வந்துவிட்டது என்று சொல்கிறாப்போல் அல்லவா ஆகிறது? சேசே, அதெல்லாம் ஏதுமில்லை. நாளைக்கு அவரே அவளிடம் சொல்லப்போகிறாராக்கும்: 'நீ சாப்பிட்டுவிட்டு வேலைக்குக் கிளம்பு. எனக்கு இப்போது என்ன அவசரம்? நிதானமாய் அப்புறம் சாப்பிட்டுக் கொள்கிறேன். நான் ரிடையராகிவிட்டேனென்று எனக்குத் தெரியாதா என்ன? அது எனக்கு உறுத்துமென்று ஏன் நினைக்கிறாய்? என்னை அவ்வளவு சாதாரணமானவனாகவா எண்ணிவிட்டாய்?'

இப்போதெல்லாம் அவள் வேலைக்குக் கிளம்புகையில் விடைபெற்றுக் கொள்ளும்போது அவர் முகத்தில் எதைக் கண்டு அவளிடம் அப்படி ஒரு விசித்திர முகபாவம் தோன்றுகிறது? உள்ளே ஏதோ சிரிப்புத் தளும்புவது போல்... உதடுகள் சிரிப்பதில்லை. ஆனால் அவள் கண்களின் பாஷை அவருக்குப் புரியாதா என்ன?

அவர் எழுந்து சிறிது நேரம் அறையில் நடை போட்டார். பிறகு லைப்ரேரியிலிருந்து கொண்டு வந்திருந்த ''தி மாஜிக் மௌண்ட்டின்'' புத்தகத்தை எடுத்து வந்து மறுபடியும் உட்கார்ந்தார். கவனத்தைச் சிதற விடக் கூடாதென்று கட்டுப்பாட்டில் சிறிது நேரம் படித்தார்.

கடியாரம் பத்து முறை அடித்தது.

காலை பத்து மணிக்கு வீட்டில் இருக்கும் அநுபவம் நாலு மாதமாகியும் முழுவது

மாகப் பழகவில்லை. உடம்பு தானுகவே படபடத்து எழுந்திக்க முற்பட்டது. "சே அசட்டு மனமே, சும்மா கிட" என்று அதட்டி அடக்கு முன்பாக, 'ஏன் லேட் என்று மானேஜர் கேட்பாரே' என்ற நினைப்பு ஒரு முறை அலையடித்துப் போகாமல் இல்லை.

கையிலிருந்த புத்தகத்தை வெறித்தார். அந்த நிமிஷம் தாமஸ் மான் மீது பொறுமை பொங்கி வந்தது. இந்த எழுத்தாளர்கள் பாடு தேவலை. வயது வரம்பு கிடையாது. கால வரையறை இல்லை. மனசில் ஊற்று வற்றுத வரையில் தம் பணியில் தொடர்ந்து ஈடுபட்டிருக்கலாம்.

**யோசனை**

**வெயிற்காலம் வந்துவிட்டது. புதிதாக வற்றல் போட ஆரம்பித்து விட்டோம். டப்பாவைத் திறந்தால் பழைய வற்றல்கள் தூள்களாக கொஞ்சம் இடக்கிறதே. இவற்றை என்ன செய்யலாம்.**

மற்றவர்களுக்கு அப்படியா? மூளை இன்னும் சுறுசுறுப்பாய் இருக்கிறது. மனம் இன்னும் கூர்மையாய் பழைய பரிமாணங்களை நோக்கித் தாவத் தயாராயிருக்கிறது. தன்னுள்ளிருக்கும் தனக்கு இன்னும் இளமை மாறவில்லை. ஆனுல் "உனக்கு 58 வயதாகி விட்டது, இனி நீ வேலைக்கு லாயக்கில்லை, வீட்டுக்குப் போ" என்றல்லவா அனுப்பி விடுகிருர்கள்!

இன்னும் ஐந்து ஆண்டுகள் போக வேண்டும், லலிதாவுக்கு ஐம்பெத்தெட்டு வயது ஆக.

மாணிக்கம் மீண்டும் உறுதியாய்ப் படிக்க முயன்றுர். ஆனுல் திடீரென்று வார்த்தைகளுக்கு அர்த்தம் புரியவில்லை. புத்தகத்தின் பருமன் அச்சமூட்டியது.

"எனக்குப் புத்தகங்கன்ஞ உயிர். சின்னப் பிள்ளையிலேர்ந்து ஏதேதோ பண்ணிட்டிருந்ததில் ஒழுங்கா படிக்க நேரமே கிடைக்கல்லே. இப்பவோ ஆபீஸ் தொல்லை. பாருங்களேன், ரிடையர் ஆனதுமே எல்லா லைப்ரெரியிலும் சேர்ந்து புஸ்தகங்களாய் வீட்ல கொண்டு வந்து குவிக்கப் போறேன். இங்கிலீஷ், தமிழ் ரெண்டிலேயும் க்ளாஸிக்ஸ்லேர்ந்து இன்னிக்கு எழுதற கத்துக்குட்டிங்க வரை ஒண்ணு விடாம படிக்கப் போறேன். படிக்கற ஆசை உள்ளவங்களுக்குப் பொழுது போறது ஒரு பிரச்னேயே இல்லை. ரிடையர் ஆனப்புறம் என்ன செய்யறதுன்னு ஒவ்வொருத்தர் மலைச்சு உக்கார்ருங்களே ! எனக்கு அந்தக் கவலையே கிடையாது. அருமையான ஹாபி எனக்கு இருக்கு. இன்னொரு ஹாபி பாட்டுக் கேட்கறது. ஊரிலே எந்த சபாவிலே நல்ல கச்சேரி வந்தாலும் போய்க் கேக்கப்போறேன். என்நேரமெல்லாம் எனக்கே சொந்தமாயிருக்கும்."

இப்படி எத்தனை தடவை சொல்லிப் பெருமையடித்துக் கொண்டிருக்கிருர்—வேலையில் இருந்தபோது!

புத்தகத்தை அடையாள அட்டை வைத்து மூடினுர். வீட்டில் கொண்டுவந்து குவித்திருந்த மற்ற புத்தகங்களோடு அலமாரியில் வைத்தார். அத்தனையில் இரண்டுதான் இதுவரை முழுதாகப் படித்திருக்கிருர். புத்தகங்களை முடிக்காத காரணத்தால் அடிக்கடி காலக் கெடுவைப் புதுப்பித்துக் கொண்டார். அல்லது படிக்காமலே திருப்பிக்கொடுத்தார். ஏன் இப்படி? ஏன் பொருந்திப் படிக்க முடியவில்லை? பிடித்த ஹாபி. வேண்டுமென்றளவு நேரம். பின்னே என்ன தடை?

"ஐயா, கொஞ்சம் தள்ளிக்கிறீங்களா? இந்த இடத்தைக் கூட்டணும்."

வேலைக்காரக் கிழவி சொன்னதும் அவர் பரபரவென்று வாசல் வராந்தாவுக்கே போய் விட்டார். அவள் வேலையில் தாம் இடைஞ்சலாய் இருப்பது போல் தோன்றியது. எதற்கும் உதவாத, உபரியான ஓர் இடைஞ்சல். எல்லாவற்றிலுமேதான். அதுதான் அவள் கூட அதட்டுகிருள். ....சேசே, அவள் சாதாரணமாய்ச் சொன்னது தமக்குஏன் தப்பாய்ப் படுகிறது? முன்பெல்லாம்—அவர் உத்தியோகத்தில் இருந்தபோது— இவள் காலை ஆறரை மணிக்கே வந்து அவர், லலிதா இருவரும் ஆபீஸுக்குக் கிளம்பு முன் வீட்டு வேலைகளை முடித்துக் கொண்டு போய் விடுவாள். நாலு மாதம் முன்பு இவள், "அம்மா, மூணு நாலு இடத்தில நான் வேலை செய்யறதுனுல எல்லா இடங்களுக்கும் காலை சீக்கிரம் ஓடறது கஷ்டமா யிருக்குது. இனிமே இங்கே ஒன்பதரை, பத்து மணிக்கு வரலாங்களா? எல்லா வேலையும் முடிச்சுட்டுப் போறேன். அய்யாதான் வீட்ல இருப்பாரே, வீடு தெறந்துதானே இருக்கும்" என்றபோது லலிதா தயங்கினுள். அவரும் வேலைக்காரியின் சொற்களில் ஒரு கணம் கூசிப் போனுலும் "அதுக்கென்ன, அப்படியே செய்" என்றுர். நாலு மாதத்துக்குள்ளா மனசு இப்படிக்

கெட்டுப்போய் எல்லாமே குதர்க்கமாய்த் தோன்றும்?

''கூட்டிட்டேன் ஐயா, வந்து உக்காந்துக் குங்க.''

''சரி சரி, உன் வேலையை செஞ்சிட்டு நீ போ.''

பிடிவாதமாக அங்கேயே சிறிது நேரம் நின்றார். இவள் சொல்லி அவர் என்ன உள்ளே போவது?

வாசல் இரும்புக் கேட் மீது கோல் தட்டும் சத்தம்.

''அய்யா, தர்மம் போடுங்கய்யா....''

இந்தப் பிச்சைக்காரர்களுக்கு நேரம், காலம் கிடையாதா? இவன் இந்த வட்டாரத்தில் பிரசித்தம். எந்த வேளையிலும் எந்த வீட்டுக்கும் வந்து கோலால் தட்டி உரிமையாய்ப் பிச்சை கேட்பான். சாதாரணமாய் எப்போதும் ''அம்மா, தர்மம் போடுங்கம்மா'' என்றுதானே கேட்பான்? இந்த ''அய்யா'' அழைப்புப் புதுசோ? இந்த வீட்டில் இனி அய்யா எப்போதும் ஆஜர் என்று தெரிந்து கொண்டிருப்பானோ? அல்லது இதற்கு முந்தைய ''அய்யா'' விளிகளை அவர் கவனிக்காதிருந்து இப்போதுதான் காதில் படுகிறதோ?

''பிச்சையுமில்லே, ஒண்ணுமில்லே போடா. இந்தத் தேசம் உருப்படாமப் போறதே பாதி இந்தப் பிச்சைக்காரங்களாலேதான்...''

அவர் ஆபீசில் டெஸ்பாட்ச் க்ளார்க் ஸி. எம். கோபாலன் இந்தப் பிச்சைக்காரர் பிரச்னையைப் பற்றி எப்படிக்காரசாரமாய் மணிக் கணக்கில் பேசுவான்! கெட்டிக்காரன். வேலையிலும்தான். கோபாலனுக்கு வயது முப்பத்து ஒன்று. இன்னும் வெகு காலம் ஸர்வீஸ் இருக்கிறது அவனுக்கு.

'அவர்' ஆபீஸ் என்ன! முற்பிறவி தொடர் போல் இது என்ன அஞ்ஞானம்! அவர் அங்கிருந்து வந்தாயிற்று. இனி அவருக்கும் ஆபீஸுக்கும் சம்பந்தம் இல்லை. இப்போது அவர் சுதந்திரப் பறவை.

உள்ளே திரும்ப இருந்தவர் 'கேட்' திறக்கும் சப்தம் கேட்டு நின்றார். தபால்காரர்.

''இந்தாங்க ஸார்.''

நான்கு கடிதங்களில் அவருக்கு இரண்டு, லலிதாவுக்கு இரண்டு.

''அம்மாவுக்கு ஒரு ரிஜிஸ்டர் லெட்டர் இருக்குது....''

''நான் கையெழுத்துப் போடட்டுமா?''

''ஆத்தரைஸேஷன் இருக்கா?''

''இல்லே.''

''வாங்கி வச்சிருங்க, நான் நாளைக்குக் கொண்டு வரேன். ஒரு ஆத்தரைஸேஷன் லெட்டர் போஸ்ட் ஆபீஸிலேயே கொடுத்து வச்சிட்டிங்கன்னா கவலையில்லை. அவங்களுக்கு எப்ப ரெஜிஸ்டர் ஆர்ட்டிகிள்ஸ் வந்தாலும் நீங்க கையெழுத்துப் போட்டுவாங்கிக்கலாம்.''

அதிகப்பிரசங்கி. அவருக்குத் தெரியாது என்று சொல்லிக் கொடுக்கிறானோ?

உள்ளே வந்தபோது முகம் ஜிவுஜிவுத்தது. சோபா மேல் இருந்த குஷனைத் தூக்கித் தரையில் அறைந்து விட்டுப் பொத்தென்று உட்கார்ந்தார்.

தம் கடிதங்களைப் பிரித்தார்.

ஒன்று டில்லியிலிருந்து மகன் எழுதியது. பல விஷயங்களிடை முகத்தில் குத்து விட்ட ஒரு வரி: ''ரிடையர்ட் வாழ்வு எப்படி இருக்கிறது?''

கோ டு ஹெல்!

மற்றொன்று நாலு மாதம் முன்வரை சக ஊழியராக இருந்த பட்டாபியிடமிருந்து.

## புதிய பேல்பூரி

அரிசிப் பொரி, துண்டுதுண்டாக்கப் பட்ட வெங்காயம், நறுக்கிய பச்சை மிளகாய், இவற்றை தயார் செய்து கொள்ளவும். தூளாகிப் போன பழைய கூழ் வற்றல்களை வறுத்து இத்துடன் கலந்து கொள்ளவும். தக்காளி சாறுடன் கலந்து சாப்பிட்டுப் பாருங்கள். தூளான வற்றலுக்கு ஒரு மாற்று. ரோஜி

அலுவலகத் தகவல்கள் நிறைய எழுதியிருந்தார். ''புதிய சீஃப் அக்கௌண்டண்ட் ஒன்றும் சுகமில்லை. உங்கள் இல்லாமையை நாங்கள் மிகவும் உணர்கிறோம். ஜி. எம். பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சயமாகியிருக்கிறது. அதற்காக ஆபீஸ் ஊழியர் பலரைச் சொந்த எடுபிடிஆட்களைப் போல் கல்யாண சம்பந்தமான வேலைகளுக்கு ஏவிக்கொண்டிருக்கிறார். இந்தப் பயல்களும்தான் என்னமாய்க் கூழையடிக்கிறார்கள்! 'உத்தியோக உயர்வுக்குக் குறுக்கு வழி சுவாமி' என்று நம் டெஸ்பாட்ச் கோபாலன் கிண்டல் செய்வத நீங்கள் கேட்க வேண்டுமே....''

மாணிக்கத்தால் கற்பனை செய்ய முடிந்தது. ஸி. எம். கோபாலன் பரிகாசமாய்ப் பேச ஆரம்பித்தால் இன்னும் பத்துக் கண்கள் முளைத்து விட்டது போல், முக மெல்லாம் கண்களாய் மின்னும். குரலில் நமுட்டுக் கம்பீரம் இழையும். ஏதாவது நக்கலாய்ச் சொல்லிவிட்டு இடது கையா தலையை அளைந்து கொண்டவாறே

ஓரங்கள் வரியிடக் குபீரென்று சிரிக்கும் போது பெரிய ஈறுகள் முந்திக்கொண்டு வெளிவரும்.

கண நேரம் மாணிக்கம் மீண்டும் அலுவலகத்தில் இருந்தார். காலை வெட்டி எடுத்து விட்டால் பிறகு சில காலம் வரை கால் இன்னமும் இருப்பது போலவே உணர்வது போல், நான்கு மாதங்களே ஆகிய ஓய்வு வாழ்வில் இப்படி முந்தைய ஆபீஸ் நண்பர்கள் யாரிடமிருந்தேனும் தகவல் வந்தால் இன்னும்உத்தியோகப் பூச்சு முற்றிலும் கலைந்திராத மன நிலையில் ஆபீஸ் தற்காலிகமாய்ப் புத்துயிர் பெறுவதுண்டு.

அவர் இல்லாமையை நண்பர்கள் உணர்கிறார்கள் என்பது திருப்தியாய் இருந்தது.அலுவலகத்தில் சாங்கியமாய் விருந்துவைத்து மாலை போட்டு நடத்திய பிரிவுபசாரத்தில் எல்லோரும் புகழ்ந்து பேசியதைவிட இந்தத் தனிப்பட்ட முறையில் ஒலித்த குரல் உண்மையாய்த் தொனித்தது.

ஜி. எம். பெண் திருமணத்துக்குத் தனக்கும் அழைப்பு வருமா? புது சீஃப் அக்கௌண்டண்ட் பிரயோஜனமில்லையாமே. அப்படியென்றால்? குறிப்பாக என்ன குறைபாடு? இந்தப் பட்டாபி இது போல் நிறைய ஆபீஸ் விஷயங்களையெல்லாம் நேரில் வந்து சொல்லக் கூடாதா? உள்ளூர் தானே? ஆனால் அவனுக்கு நேரம் ஏது? வேலையில் இருக்கும் ஆள். தன்னைப் போலவா?

பட்டாபி இன்னும் இரண்டு ஆண்டுகளில் ஓய்வு பெறும்போதும் இப்படி வீட்டில் கொட்டுக் கொட்டென்று தனியாய் உட்கார்ந்திருக்க மாட்டான். அவன் மனைவி கூடவே இருப்பாள்.

''மேடம்!''

வாசலில் அழைப்புக் குரல் கேட்டு ''பார்'' என்று அவர் எழுந்து போய்ப் பார்த்தார். இரு இளம் பெண்கள் தோளில் தோல் பைகளுடன் நின்றிருந்தார்கள்.

''நாங்க இந்த வட்டாரத்துத் தெருக்கள்ல சர்வே பண்ணிட்டு வரோம். உங்கவீட்ல என்ன டூத் பேஸ்ட், ஸோப் உபயோகிக்கிறீங்க, சமையலுக்கு என்ன எண்ணெய் எல்லாம் சொன்னால்....''

ஒரு வழியாக அவர்களை அனுப்பிவிட்டுக் கதவைத் தாழிட்டுக் கொண்டு வந்தார்.





பட்டாபி வீட்டில் யாராவது 'மேடம்' என்று குரல் கொடுத்தால் அவன் போய்ப் பதில் சொல்லி அனுப்ப வேண்டி யிருக்காது.

இன்னும் ஐந்து வருடங்கள்!

அடேயப்பா!

மறுபடியும் புத்தகங்களிடை வந்தார். ''மாஜிக் மவுண்ட்டன்'' வேண்டாம். லைட்டாக ஏதாவது படிக்கலாமா?

புத்தகத்தைத் தேர்ந்தெடுத்துப் பிரித்துக் கொண்டார். பி.ஜி. வோட்ஹவுஸ் பக்கத் துக்குப் பக்கம், வரிக்குவரி, எழுதியிருந்த தெல்லாம் 'லலிதா லலிதா லலிதா!'

புருஷன்-பெண்ஜாதிக்குள் வயது வித்தியாசமே இருக்கக் கூடாது என்று அவருக் குத் தோன்றியது. பழங்காலத்தில் பார்த்த பொருத்தங்களெல்லாம் இன்றைய வாழ்வின் நடைமுறைக்குச் சரியல்ல. இது இருபாலா ரும் வேலைக்குப் போகும் காலம். இப்போது திருமணப் பொருத்தங்களில் ரிடையர்மென்ட் ஏஜையும் பார்க்க வேண்டும்...

படிப்பெதெதுவும் மூளைக்கு எட்டவில்லை. மறுபடியும் சிறிது நேரம் அறைக்குள் நடந் தார். நேரம் ஊர்ந்தது. அவர் யுக யுக மாய் நடை போட்டாலும் கடியாரம் ஐந்து நிமிடங்களுக்கு மேல் நடக்க மறுத்தது.

இப்படி முட்டாள்தனமாய் மனசை அலைய விடக் கூடாதென்று மறுபடியும் உட்கார்ந்து சிறிது நேரம் கவனத்தை வழிப்படுத்தி உறுதியாய்ப் புத்தகம் படித்தார். படிப்பதில் ஆர்வம் உள்ளவர்களுக்குப் பொழுதுபோவது ஒரு பிரச்னையா என்ன?

லலிதாவை அவளுடைய ஸ்டேனோ வேலையை விட்டுவிடச் சொன்னால் என்ன? அவள் வேலை பார்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏதுமில்லை. ஆசைக்குச் செய்கிறாள். அவள் ஆளுகைக்கு அதில் ஒரு நிறைவு கிட்டுகிறது என்பது உண்மைதான். ஆனால் அவருக்காக விட்டுக் கொடுக்க மாட்டாளா என்ன? இப்போது அவள் ராஜிநாமாச் செய்தாலும் கணிசமான பென்ஷனுக்கு உரியவள்தான். பிராவிடன்ட் ஃபண்ட் முதலியவை கைக்கு வரும். அவ ளுக்குப் பெரிதாக ஏதும் நஷ்டம் இல்லை.

எப்படியோ நேரத்தைக் கழுத்தைப் பிடித் துத் தள்ளினார். காப்பி நேரம். சிறிது படிப்பு. குட்டித் தூக்கம்.

நான்கு மணிக்குச் சற்று நடந்துவிட்டு வரக் கிளம்பினார். அடுத்த தெருவில் ஒரு கல்யாண மண்டபம். இப்போது யாரோ சாமியார் வந்து பத்து நாளாக விசேஷ முருகன் பூஜை ஒன்று நடத்துவதற்காகப் பந்தல் போட்டிருந்தது. இன்று இரவு ஏழு மணிக்கு ஒரு முருக பக்தர் திருப்புகழ் பாடப் போகிறாராம். ஓரளவு பெயர்பெற்ற பாடகர். மாணிக்கம் அவர் பாட்டை முன்பே கேட் டிருக்கிறார். 'இனிய குரல், உணர்ச்சி பூர்வ மான இசை. யார் வேண்டுமானாலும் முன் ஏற்பாடுகள் இன்றியே வந்து கேட்கலாமாம்.

அவர் உற்சாகமாய் வீடு திரும்பினார்.

ஏழு மணிக்கு லலிதாவோடு வந்து பாட்டுக் கேட்க வேண்டும்.

லலிதா சுமார் ஆறு மணிக்குத்தான் வீட்டுக்குத் திரும்பினாள். மிகவும் களைப்பாய்த் தென்பட்டாள். அலுவலகத்தில் அவள் பிரிவில் அவள் மட்டத்து மூன்று ஊழியர்கள் உடல்நலமின்றி லீவில் இருந்ததால் அவளுக்கு வேலைப் பளு அதிகம். நேரத்தோடு வீட்டுக்கு போய்விடுவேன் என்று மேலதிகாரியிடம் உரிமை பேசத் தாட்சண்யம். நாளைக் காலையும் சற்று சீக்கிரமே ஆபீஸ் போக வேண்டும்.

''காப்பி குடிச்சீங்களா?'' ''டிபன் எடுத்துக்கிட்டீங்களா?'' என்றெல்லாம் வழக்கம் போல் விசாரித்தாள். புதுப் பாலில் இரு



**மணமான ரசம் தயாரிக்க:**

கடலைப் பருப்பு, சீரகம், மிளகு, தனியா, வறுத்துப் பொடி செய்து கொண்டு தக்காளிப் பழம் இரண்டு அல்லது மூன்று பச்சை மிளகாய்களைப் போட்டு ரசம் தயாரித்து அதில் இந்தப் பொடியைப் போட்டு, உப்பு அளவாகச் சேர்த்துக் கொதிக்கவைக்கவும். பெருங்காயம் சிறிது சேர்க்கவும். இறக்கி வைத்த பிறகு கொத்தமல்லி, கறிவேப்பிலை, போடவும். நெய்யில் சீரகம், கடுகு தாளிக்கவும்.

—பிரேமா சந்தானம்



வருக்குமாகக் காப்பி தயாரித்து அவரோடு சேர்ந்து பருகினாள். இரவு உணவைச் சமைத்தாள். பிறகு அவரோடு முன் அறையில் வந்து உட்கார்ந்துகொண்ட போது அப்படியே சுருண்டு படுத்துத் தூங்கிவிடத் தயாராய் இருப்பவள் போல் முகத்தில் ஆயாசம் மண்டியிருந்தது. அப்படியும் கொட்டாவிகளை அடக்கிக் கொண்டு அவரோடு கலகலப்பாகப் பேசினாள். முன்பெல்லாம் அவரும் அதே போல் தம் ஆபீஸில் நடந்தவைகளை யெல்லாம் அவளுக்குச் சொல்வது வழக்கம். இப்போது அந்தப் பரிமாற்றம் இல்லை. பேச்சு இப்போது ஒரு வழிச் சாலைதான்.

அவள் எப்போது பேசுவதை நிறுத்தினாள்? அவள் கை கனிவாக அவர் மீது படிந்தபோது தான் அவள் இப்போது வாய் பேசாமல் தம்மையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்ததை அவர் உணர்ந்தார். தம் மௌனம் தம்மையே அறைய, தலை நிமிர்ந்து அவளை நோக்கினார். இயல்பாய்ச் சிரிக்க முயன்றார்.

''என்னங்க?'' என்றாள் அவள் மிருதுவாக.

''ஒண்ணுமில்லையே... சொல்ல மறந்துட்டேனே லல்லி, உனக்கு ரெண்டு காகிதம் வந்திருக்கு.''

''சரி.''

''படிக்கிறியா?''

''அப்புறம் ஆகட்டுமே. நாம இன்னும் கொஞ்ச நேரம் பேசிக்கிட்டிருப்போம்.''

''ரிஜிஸ்டர் கூட ஒண்ணு வந்தது. ஞாபகமா நாளைக்கு என்கிட்ட ஒரு ஆத்தரைஸேஷன் லெட்டர் எழுதிக் கொடுத்துட்டுப் போ.''

''அதுக்கென்ன, நீங்க இன்னிக்குப் பொழுதை எப்படிக் கழிச்சீங்க? ஏதாவது சுவாரஸ்யமா உண்டா? யாரானும் வந்திருந்தாங்களா?''

''பிச்சைக்காரனும், ஸர்வேப் பெண்களும்தான் வந்தாங்க. பை த வே, அடுத்த தெரு மண்டபத்தில ஒரு பூஜை நடந்துட்டிருக்குது.''

''தெரியும். பத்து நாளாப் பந்தல் போட்டிருக்குதே.''

''அங்கே இன்னிக்கு ஏழு மணியிலேர்ந்து பாட்டாம். முதல்லே திருப்புகழ். யாரோ முருக பக்தர் பாடறார். இப்போ நடந்திட்டிருக்கும். ஒன்பது மணி வரைக்கு மாவது பாடுவாராம். நாம ரெண்டு பேரும் போய்க் கேக்கலாம்னு யோசிச்சேன்.''

கண நேரம் அவள் மௌனமானாள். பிறகு, ''ஓ போகலாமே, சாப்டுட்டுப் போகலாமா, வந்து சாப்பிடலாமா?'' என்றாள்.

அவர் அவளைக் கூர்ந்து பார்த்தார். கண்கள் திறந்திருக்கவே கஷ்டப்படுபவை போல் கனமாய்த் தெரிந்தன. புன்னகை கூடக் கலைந்திருந்தது.

''வேணும் லல்லி போகவேணும்.''

''ஏன்?''

''நீ ரொம்ப டயர்டா இருக்கே. சீக்கிரம் சாப்டுட்டுப் படுத்துத் தூங்கு. காலைல வேற சீக்கிரம் வேலைக்குக் கிளம்பணும்னு சொன்னே.''

''பரவாயில்லைங்க. அதுக்கும் இதுக்கும் என்ன? எனக்கு அஞ்சு மணி நேரம் தூங்கினாப் போதும். நான் போய்த் தயார் பண்ணிட்டு வரேன். போவோம்.''

அவள் எழுந்து நின்றாள். அவர் உட்கார வைத்தார்.

''வேணும் லல்லி. சொல்றதைக் கேளு. நீ ரெஸ்ட் எடுத்துக்க.''

''அப்புறம் எடுத்துக்கறேன். உங்களுக்குப் பாட்டுன்னா எத்தனை ஆசை!''

''அப்படி வேணும்னா நான் மட்டும் போய்க் கொஞ்ச நேரம் கேட்டுட்டு வரேன். நீ கவலையே படாதே. உனக்கு இப்போ

ரெஸ்ட் தேவை.'' அவளைச் சமாதானப் படுத்துபவர் போல் புன்னகை செய்தார்.

மறுநாள் காலை அந்தக் கனிந்த மனநிலை மறைந்து விட்டது. 'கடைசியில் நான் தனியாய்த்தானே போய்ப் பாட்டுக் கேட்டேன்' என்று ஒரு கோபம், தன்னிரக்கம்.

சாப்பிட அவள் அழைத்தபோது அந்தச் சிடுசிடுப்பு அவள் மேல் வெடித்தது.

''நீ சாப்பிட்டுட்டுக் கிளம்பேன். உனக்குத்தான் வேலைக்குப் போகணும். எனக்கென்ன? நீ சீக்கிரம் கிளம்பணுமேன்னு நீ எந்த நேரம் சொன்னாலும் நான் பசிக்குதோ இல்லையோ, சோத்தை வயித்திலே போட்டுத் திணிச்சுக்கணுமா? எல்லாம் அப்புறமா எனக்குப் பசிக்கிறப்பச் சாப்ட்டுக்கிறேன். நீ உன் வேலையைப் பார்த்துக்கிட்டுப் போ.''

அவள் அவரை ஏறிட்டுப் பார்த்தாள். மீண்டும் அவள் கண்களுக்குள் அந்த விசித்திரச் சிரிப்பா? ஆனால் ஒரு வருத்தமும்தெரிந்தது முகபாவத்தில். லலிதா எதுவும் சொல்லாமல் தன் உணவைமுடித்துக்கொண்டாள்.

''ஆத்தரைஸேஷன் லெட்டர் எழுதிக் குடுத்துட்டுப் போ. உன்னுதை நான் வாங்கி வைக்க வேணாம்?''

எழுதிக் கொடுத்தாள். ''வரட்டுமா?'' என்று விடை பெற்றுக் கொண்டு வேலைக்குக் கிளம்பினாள்.

அன்று புத்தகம் படிப்பது மாணிக்கத்துக்கு முன்பை விடவும் கஷ்டமாக இருந்தது. ஒரு பயலாவது உருப்படியாய் எழுதக் காணோமே, சே!

வீட்டில் சில மரச் சாமான்களை மாற்றிச் செய்து புதுப்பிக்கவும் மேருகேற்றவும் டவுனில் தச்சு வேலைக் கடை ஒன்றில் அவரும் லலிதாவும் பேசி வைத்திருந்தார்கள். மொத்தச் செலவு முன்னூறு ரூபாயில் நூறு ரூபாய் முன் பணம் தரவேண்டும். தபால்காரர் வந்துவிட்டுப் போனதும் பதினோரு மணிக்கு மாணிக்கம் பணத்தை எடுத்துக் கொண்டு ஓர் ஆட்டோ பிடித்து மரக் கடைக்குச் சென்றார்.

''வாங்க ஸார்! உக்காருங்க. ஏது, இந்த நேரத்தில் வந்திருக்கீங்க? ஆபீஸ் லீவா?'' என்றான் இளைஞனான கடை முதலாளி.

'உன் வேலையைப் பார்' என்று மனம் சொல்ல, ''இனிமே என்னிக்கும் லீவு தான்!'' என்று கூறி மிகையாய்ச் சிரித்தார்.

''ஓ, ரிடையர்டா? அதானே பார்த்தேன் இல்லேன்னா பொதுவா இந்த நேரத்திலே லேடீஸ்தானே வருவாங்க. இப்போ கூட அம்மா வந்திருக்காங்களே! இந்த வெய்யில்ல ஏன் கஷ்டப்பட்டுக்கிட்டு வந்தீங்க? கூல் ட்ரிங்க் ஏதாவது வாங்கி வரச் சொல்லட்டுமா?''

ரிடையர்ட் என்றதும் தொண்டுக் கிழவனென்று எண்ணிப் பணிவிடை செய்கிறாயாடா வெறும் பயலே? நீ என்றைக்கும் இளைஞனாகவே இருக்கப் போகிறாயோ? அம்மா வந்திருக்கலாமாம். இந்த நேரத்தில் அம்மா எப்படிடா வருவாள்? அதற்கு இன்னும் ஐந்து வருடங்களல்லவா போக வேண்டும்!

''அதெல்லாம் வேணும். பணத்தை வாங்கிட்டு ரசீது கொடுங்க. சாமானெல்லாம் எப்போ தயாராகும்?''

வீட்டுக்கு வந்த பின்னும் எரிச்சல் அடங்கவில்லை. படிக்க முயன்றார். முடியவில்லை. கடியாரத்துடன் போர் செய்து அலுத்தார். ஒரு வழியாக இரண்டு மணிக்கு மேல் கொஞ்சம் தூக்கம் வந்தது.

அப்பப்பா என்ன விலை
விற்கிறது எலுமிச்சம் பழம்
எப்படி வற்றல் போடுகிறது
என்று சித்திரை மாத
வெயிலில் அலுப்பவர்களுக்கு
அருமையான யோசனை.
புளிப்புள்ளமாங்காய்
தோலைச்சீவி,
காரட்துருவியில்
துருவிக்கொள்ளவும்.
பச்சை மிளகாயுடன் அரைத்த
விழுதை கூழ்வற்றல்மாவுடன்
கலந்து பிழிந்து பாருங்கள்.
வற்றல் பொரிந்து வெளே
ரென்று விரிந்து சிரிக்கும்.

ரோஜி

தூங்கி எழுந்தபோது எரிச்சல் அவ்வளவாக இல்லை. தாமதமாக உணவு கொண்டிருந்ததால் ஒரு மணிக் காப்பியையும் தாமதமாய் இப்போதுதான் குடித்தார். காப்பி உள்ளே இறங்கியதும் புத்துணர்ச்சி தோன்றியது. தாம் லலிதாவிடம் மிகவும் சின்னத்தனமாய் நடந்து கொண்டதாய்த் தோன்றியது.

அதற்குப் பரிகாரமாய் என்ன செய்யலாம்? இதோ அறையில் சில சுவர் மூலைகளில் ஒட்டடை தெரிகிறதே! அதைச் சுத்தப்படுத்தி 'பார், நான் எப்போதும் போல்தான் இருக்

கிறேன், நீ தவருய் நினைக்காதே' என்று சமாதானத்தைக் குறிக்க வேண்டும்.

வேஷ்டியை மடித்துக் கட்டிக் கொண்டு ஒட்டடை அடிக்க ஆரம்பித்தார்.

''என்னய்யா, வீட்டு வேலையா? பலே! பண்ணுங்க, பண்ணுங்க!''

பொத்தென்று ஒட்டடைக் கம்பு நழுவ, அவர் திடுக்கிட்டுத் திரும்பினர். முகம் சிவந்து போயிற்று. கதிரேசன் அறைக்குள் வந்திருந்தார். கதிரேசனும் அவரைப் போல் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றவர். பார்த்து நிறையக் காலமாகி யிருந்தது. இப் போதென்ன திடீரென்று? கதவைத் தாள் போடவில்லையா? அப்படியே கவனக் குறை வால் திறந்தபடி விட்டிருந்தாலும் இந்த மனிதர் முதலில் ஒரு குரல் கொடுக்கக் கூடாதா? என்னதான் நண்பரென்றாலும் இப்படியா திறந்த வீட்டில் எதுவோ நுழைந்த மாதிரி தடதடவென்று உள்ளே நுழைவது? நாகரிகம் தெரியாத மனுஷன்...

''வாங்க கதிரேசன். வீட்டு வேலைதான். சொல்ருப்பலே!'' என்று சிரித்துச் சமாளித் தார். வேஷ்டியைச் சரியாய் நீளப்படுத்திக் கொண்டு, ''உட்காருங்க'' என்று கூறி தானும் உட்கார்ந்தார்.

''பாவம், டைம் நிறைய இருக்குதாக்கும், இதெல்லாம் செய்றீங்க! பொழுது போகணு மில்லே?''

தனக்கு ஏன் இந்தக் கூச்ச உணர்வு வர வேண்டும் என்று மாணிக்கம் வியந்தார். முன்பும் இந்த வேலை செய்தவர்தான். அவர் உத்தியோகம் பார்த்த நாளிலும் ஒவ்வொரு ஞாயிறன்றும் லலிதா துணிகளுக்குக் கஞ்சி போடும்போது அவர் வீட்டை ஒட்டடை அடிப்பார். வேலைக்காரி அன்றைக்கு மட்டும் சிறிது நேரம் தாழ்த்தி வந்து துணிகளைக் காயப்போட்டு வீட்டைப் பெருக்கிவிட்டுப் போவாள். அப்போது சகஜமாகச் செய்த அதே வீட்டுப் பணி இப்போது ஏன் மன சைத் தைக்க வேண்டும்?

''பொழுது போறது ஒண்ணும் எனக்குக் கஷ்டம் இல்லே கதிரேசன். நிறையப் படிக் கறேன், பாட்டுக் கேக்கறேன். மத்தபடி நம்ம வீட்டு வேலையை நாம பண்றதில் என்ன அவமானம் சொல்லுங்க? ரிடையர் ஆகிறதுக்கு முந்திக்கூட நான் இதெல்லாம் பண்ணினவன்தான்.''

''ஆமாம். உங்க ஒய்ஃபும் வேலைக்குப் போறவங்களாச்சே. அதனுல வீட்டுக் காரியங்களையும் ரெண்டு பேருமாத்தான் செய் யணும்.''

''நீங்க எப்படி இருக்கீங்க? என்ன நியூஸ்?''

''ஒரு நியூஸும் இல்லே. சும்மாத்தான் வந்தேன். உங்களைப் பார்த்து நாளாச் சில்ல? நீங்க ரிடையர் ஆய்ட்டு ஒய்ஃபும் வேலைக்குப் போயிருக்கிறப்போ தனியாத் தானே உக்கார்ந்திருப்பீங்க. அதனுல விச் ராந்தியா உக்காந்து அரட்டை அடிக்க லாம்னு வந்தேன். அவ்வளவுதான். அப் புறம் சொல்லுங்க. என்ன சமாசாரம்? ரிடை யர்ட் லைஃப் எப்படி இருக்குது? ஒட்டடைக் கிட்டடை அடிச்சு வீட்டைப் பார்த்துக் கிறீங்களாக்கும்! ஆனு நீங்க குடுத்து வச்ச வங்கதான் தெரியுமே? ரெண்டு சம்பளம், ரெண்டு பென்ஷன்!''

கதிரேசன் சிரித்தார். மாணிக்கத்தால் சிரிக்க முடியவில்லை.

உரையாடல் என்று ஏதோ பெயருக்கு நடந்தது. மாணிக்கத்துக்கு அவர் நெடு நாளைய நண்பர்தான். ஆனல் இன்று மனம் இந்தச் சந்திப்பில் பொருந்தவில்லை

கதிரேசன் கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டார் ''நாலரையா? நான் கிளம் பறேன், மாணிக்கம். ரொம்ப நாளுக்கப் புறமா பார்த்தது ரொம்பச் சந்தோஷம். இன்னும் இருந்து பேசலாம்தான். நாம ரெண்டு பேரும் ரிடையர்ட் பீப்பிள். வேறு என்ன வேலே! ஆனு வீட்ல நான் குளிக்க வென்னீர் போட்டு வைக்கும்படி ஒய்ஃப் கிட்டச் சொல்லிட்டு வந்தேன். தினம் எனக்கு வேண்டியபடி சாயங்காலம் வெத வெதன்னு வென்னீர் தயார் பண்ணி வைப்பா. அதனுல நான் கிளம்பணும். உங்க மிஸஸ் ஆபீஸி லேருந்து வரவரைக் கும் நான் இருக் கிறதுக்கில்லே. அவங் களுக்கு என் வணக் கத்தைச் சொல்லி டுங்க, என்ன? வரட் டுமா?''



‘‘காப்பி குடிச்சிட்டுப் போகலாமே.’’

‘‘அதெல்லாம் இன்னொரு நாள் ஆகட்டும். இப்ப நேரமில்லே.’’

அவர் போன பின் மாணிக்கம் வெகு நேரம் ஆத்திரத்தில் குமைந்தார். ராஸ்கல்! இவன் பெண்டாட்டி வீட்டோடு இருந்து சிசுருஷை செய்வதாகவா பீற்றிக் கொள்கிறான்? ஏன், என் லலிதா மட்டும் நான் ‘இரு’ என்றால் இருக்க மாட்டாளா?

கணவன் — மனைவி இருவரும் சம வயதினராய் இருக்க வேண்டுமென்பதில் சந்தேகமே இல்லை. அல்லது பெண்ணின் ரிடையர்மென்ட் வயதைக் குறைக்க வேண்டும்....

அன்று லலிதா வீடு திரும்ப ஏறக் குறைய ஏழு மணியே ஆகிவிட்டது. மிகவும் களைத்திருந்தாலும் அவரைப் பார்த்ததும் வழக்கம் போல் புன்முறுவலித்தபடியே ‘‘ஸாரி, நேரமாயிடுச்சு. ஆனா எக்ஸ்ட்ரா வேலையெல்லாம் இன்னியோட முடிஞ்சுது. லீவில் இருந்தவங்கள்ல ரெண்டு பேர் நாளைக்கு வந்துடறாங்க. இருங்க, பால் காய்ச்சிக் காப்பி கலந்துக்கிட்டு வரேன்’’ என்று உள்ளே போனாள்.

எவ்வளவு களைத்திருந்தாலும் அவருக்கு அவள்தான் பணிவிடை செய்ய வேண்டும் என்பதை ஒரு கடமையாக நினைக்கிறாளா? அல்லது அவர் அப்படி எதிர்பார்க்கிறார் என்று கருதி அதைச் செய்கிறாளா? சேச்சே, அவர் ஒன்றும் அப்படியில்லை... பின்னே ஏன் அவள் வரத் தாமதமாகிறதே என்று அவரே பாலைக் காய்ச்சி வைத்திருந்து அவளுக்கு ஒரு வேலையைக் குறைத்திருக்கக் கூடாது?


காப்பியைக் கொடுத்துவிட்டு அவள் சமையலில் முனைந்தாள். அவருக்குப் பிடித்த புடலங்காய்க் கூட்டை அவள் ஆக்கிப் பரிமாறியபோது அவருள் குற்ற உணர்வு நெருடியது. ‘உன்னிடம் என் அக்கறை ஒரு போதும் குறையாது’ என்று அவள் திரும்பத் திரும்ப உறுதியளிக்க வேண்டியபடியா அவர் நடந்து கொள்கிறார்?

சாப்பாட்டுக்குப் பிறகு இருவரும் முன் அறையில் வந்து உட்கார்ந்தார்கள். லலிதாவுக்கு இன்றும் தூக்கம் கண்களைச் சுழற்றியது. இருப்பினும் அல்லியாய் மலர்ந்த முகம் மாறாமல் ‘‘இன்னிக்கு என்ன நியூஸ்? யாரானும் வந்திருந்தாங்களா? நீங்க எங்கேயானும் போயிருந்தீங்களா?’’ என்றாள். தன் அலுவலகச் செய்திகள் எதையும் அவள் வழக்கம்போல் விவரிக்கவில்லை என்பதைக் கவனிக்கையில் அவருக்கு மீண்டும் குற்ற உணர்வு எழுந்து அடங்கியது.

‘‘கதிரேசன் வந்திருந்தார்.’’

‘‘ரொம்ப நாளாச்சில்ல அவர் வந்து? எப்படி இருக்கார்?’’

‘‘அவருக்கென்ன கேடு? நல்லாத்தான் இருக்கார். ஜம்ப மன்னன்!’’




**காய்கறிகளின் சத்து வீணாகாதிருக்க**

காய்கறிகளைக் குறைந்த நேரம் வேக வைப்பது நல்லது. எனவே, தண்ணீரைக் கொதிக்க வைத்து பின்னர் காய்கறிகளை அதில் போடுவது சிறந்தது. இதனால் ஊட்டச் சத்துக்கள் வீணாகாத வண்ணம் ஓரளவு பாதுகாக்கப்படும்.

—வி. உஷா

அவ்விஷயம் ஏனோபிடிக்கவில்லை என்பதைப் புரிந்து கொண்டு லலிதா, ‘‘அவர் சம்சாரம் சௌக்கியமாமா?’’ என்று பேச்சை மாற்றினாள்.

‘‘ம், ம்... இருப்பாங்க. நான் கேக்கல்லே. அப்புறம் அந்த ஃபர்னிச்சர் கடையில் அட்வான்ஸ் பணம் கொண்டு போய்க் கொடுத்துட்டு வந்தேன். நம்ம வேலையை இன்னிக்கு நாளைக்கு ஆரம்பிக்கிறாங்களாம். பத்து நாளில் முடிஞ்சுடும்னு சொன்னான்.’’

‘‘நல்லதுதான்.’’ அவள் கொட்டாவி விட்டாள். ‘‘ஸாரி. அப்புறம்?’’

‘‘அப்புறமென்ன? ஒண்ணுமில்லே.’’

‘‘ஏதாவது படிச்சிருப்பீங்களே. எத்தனை புஸ்தகம் முடிச்சாயிடுத்து? நீங்க படிக்கிற ரேட்டைப் பார்த்தா எனக்கு மலைப்பாக இருக்கு.’’

அவர் எதுவும் சொல்லாமல் அவளையே உற்றுப் பார்த்தார்.

‘‘என்ன அப்படிப் பார்க்கிறீங்க?’’

அவர் மௌனமாய்ப் பார்த்துக் கொண்டே இருந்தார். சொல்லிவிடலாமா? உதடுகள் அசைந்தன. ஆனால் பேச்சு வரவில்லை.

‘‘ஏதோ சொல்லணும்னு வரீங்க. ஆனா மனசோடு வச்சுக்கிறீங்க இல்லே?’’

அவர் இப்போதும் பேசவில்லை. சொற்களை மனத்துள் ஒத்திகை பார்த்தார்.

‘‘நீங்க ரிடையரான நாலு மாசத்திலே மூணு மாசமாவே தினம் இது ஆகுது’’ என்றாள் அவள் மென்மையான குரலில்.

‘‘நீ கவனிச்சயா?’’

‘‘முப்பது வருஷம் உங்க கூட குடித்தனம் பண்ணிட்டு வரேனே. உங்களை எனக்குத் தெரியாதா?’’

‘‘லல்லி...’’ என்று நிறுத்தினார். எப்படித் தொடர்வது என்று புரியவில்லை.

‘‘மனசில இருக்கிறதை வாய் விட்டுச் சொல்லிடுங்க. உங்களுக்கு நிம்மதியா இருக்கும்.’’

''நான் ஏதோ சொல்ல நினைக்கிறேன்னு தெரிஞ்சுக்கிட்ட உனக்கு... என்ன சொல்ல நினைக்கறேன்னு தெரியாதா?''

அவள் அவரை நிதானமாகப் பார்த்தாள். கண்களில் இப்போது தூக்கக் கலக்கமே இல்லை. ''எனக்கு ஒரு ஊகம் இருக்கு. ஆனா வார்த்தை உங்க வாயிலிருந்துதான் வரணும்.''

''ஏன்?''

''ஏன்னா ஊகம் எனக்கே பிடிக்கல்லே. அந்த ஊகம் சரின்னு மனசுக்குத் தெரியற போதே அது தப்பா யிருக்கக் கூடாதாங்கற ஏக்கமும் இருக்கு.''

அவர் தடைப்பட்டார். சிறிது நேரம் பேசவில்லை.

பிறகு, ''நீ உன் வேலையை விட்டுடுன்னு சொன்னால்... விட்டுடுவியா லல்லி?'' என்றார்.

**உங்கள் மனைவி 'கடுகடு'வென்று எரிந்து விழுந்தால்...**

உங்கள் மனைவியோ, பிறசகோதரி களோ போதுமான காரணமின்றி 'கடுகடு'வென்று எரிந்து விழுந்தால் மனவருத்தமேயடையாதீர்கள்! அது ஒருவேளை மாதவிடாய்க்கு முன் மன நிலையில் தாறுமாறாக ஏற்படும் கோளாறாகவும் இருக்கலாம். சில சமயம் இத்தகைய மன்நிலைக் கோளாறு அளவுக்கு மீறும் போது கொலை செய்யும் அளவுக்குக் கூட மனநிலை மாற்றம் ஏற்படலாம் என்று இத்துறையிலுள்ள ஆராய்ச்சி வல்லுனர்கள் கூறுகிறார்கள்.

தகவல்: எஸ். இ. பாத்திமா

இமைப் பொழுது தாமதத்துக்குப் பின் அவள் பதிலளித்தாள்.'' விட்டுடுவேன்.''

மனம் துள்ளியது. உடனே அதற்காக அவமானமாயிருந்தது.

''நான் அப்படி வேலையை விடச் சொல்ற தனால என்கிட்ட உனக்கு அன்பு போயிடுமா?''

''அன்பு போகாது.''

அவர் திருப்தியாய் நாற்காலியில் சாய்ந்து கொண்டார். அவள் மேஜை மேல் இருந்த பதுமையையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

திடீரென்று அவருக்குப் பொறி தட்டியது. முதுகு திடுக்கிட்டு நிமிர்ந்தது. முப்பது வருடம் சேர்ந்து குடித்தனம் நடத்திய மனைவியை அவரும் புரிந்து கொண்டார். 'அன்பு போய்விடுமா' என்று கேட்டால் 'போகாது' என்று பதிலுரைக்க வேண்டியது தானே? 'அன்பு போகாது' என்றால் என்ன அர்த்தம்? பின்னே வேறெது போய்விடும்?

அவ்விருவரும் திருமணத்தில் இணைந்த போது ஒரே கருத்துடன் இணைந்தவர்க ளல்லவா?

'திருமண பந்தம் என்பது இரு உயிர்கள் பங்குகொள்ளும் தோழமைத் தொடர்பு. அதில் உயர்வு தாழ்வுக்கு இடமில்லை. லட்சிய மண வாழ்வு எனில் அதில் இரு பாலரிடையே பரஸ்பர அன்பு இருந்தால் மட்டும் போதாது பரஸ்பர மதிப்பும் இருக்க வேண்டும்' இது தானே திருமணத்துக்கு அவர்கள் ஒரு மனதாய்த் தந்திருந்த விளக்கம்?

''லல்லி...அதாவது....லல்லி.... நீ சொல்றது....?'' அவர் தலையை முன்னால் நீட்டிக் கேட்டார்.

''ஆமாம்.'' அவள் பார்வை மேஜை மீதிருந்துவிலகி அவர் கண்களுக்குள் நேராக, ஆழமாக, நிலைத்தது.

''அதாவது... அன்பு போகாது, ஆனா மதிப்பு போய்விடும்னு சொல்றே, இல்லையா?''

''ஆமாம்.''

சிறிது நேரம் ஒருவரை யொருவர் பார் வைகளால் பிணைத்தபடி உட்கார்ந்திருந் தார்கள். ஏதோ ஒரு விளிம்பு நிலையின் இறுக்கம் உறைத்தது. ஆம் வாழ்வின் வெற்றி — தோல்வியை நிர்ணயிக்க வேண் டிய ஒரு மிக முக்கிய கணம். மாணிக்கத் தின் வாய் உலர்ந்தது. அவர் முடிவு எது வானாலும் லலிதா ஏற்றுக் கொள்வாள். அதுவல்ல பிரச்னை. தம்மைத் தாமே அவர் உணர வேண்டிய சோதனைக் கணம் அது அவருக்கு என்பதுதான் முக்கியம்.

திரை போல் மூடியிருந்த மேலோட்டச் சலனங்கள். ஆனால் மெல்லிய திரைதான். ஊடே வெளிச்சம் பாய்ந்தது.

'ஆமாம்' என்ற அவளுடைய அந்த நேர் மையான பதிலினால் அவளிடம் அவருக்கு மதிப்பு அதிகரித்தது. அதே போல், அவ ளுடைய மதிப்பும் அவருக்குத் தேவை யல்லவா? அதை இழந்து அவரால் வாழ முடியாது. 'சே, நீ இவ்வளவுதானா!' என் னும் நினைப்பை அவளிடம் ஏற்படுத்திவிட்டு அவரால் வாழ முடியாது.

மெல்ல அவள் கையைப் பற்றிக்கொண் டார். புன்சிரிப்பும் பார்வையும்தான் அவ ளிடம் பேசின. லலிதாவின் முகத்தில் பளீ ரென்று ஒளி பாய்ந்தது. இதயமே அலர்ந்து திறந்து கொண்டது போல் முறுவலித்தாள். கைகள் பிணைய, நரைத் தலைகள் ஒன்றாய் இணைந்தன.

''வா, லல்லி, நேரமாச்சு. இப்போ நீ படுத்துத் தூங்கினாத்தான் காலைல எழுந்து வேலைக்குப் போகத் தெம்பாயிருக்கும்'' என்ற வாறு மாணிக்கம் எழுந்தார்.

(முற்றும்)

# புகைப்பட தொகுப்பு

## ஹிந்து சமயக் கலை விழா

பிற்காலத்தில் மருவிக் குறைந்து போனாலும் ஹிந்து சமயத்தில் பெண்களின் பங்கு சிறப்பாகத்தான் இருந்திருக்கிறது. சமய மற்றும் எந்த விசேஷங்களும் பெண்கள் இல்லாமல் நடத்த முடியாது என்ற நிலை தான் இன்றும் இருக்கிறது. பெண்ணின் இந்த உயர்வை நினைத்தே சென்னையில் (மார்ச் 30ந் தேதி முதல் 5ந் தேதி வரை) நடந்து கொண்டிருக்கும் ஹிந்து சமயக் கலை விழாவிலும் ஒரு நாளை மகளிருக்கெனவே ஒதுக்கியிருக்கிறார் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள். பெண்களையே இந்நாளைக்குப் பொறுப்பேற்கச் செய்து அருளாசி வழங்கியுள்ளார் ஸ்ரீ பெரியவர்.



சமீபத்தில் அடையாறு பஞ்சாப் அன்ட் சிந்து பாங்க் பிற்பட்ட வகுப்பினருக்குக் கடனுதவி அளித்தது. இவ்விழாவுக்கு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் வருகை தந்து கடனுதவிகளை வழங்கி அருளினார்.





சேலம் ஸ்ரீ வாசவி மஹிளா சமாஜம் சமீபத்தில் கலைக் கண்காட்சி நடத்தியது. சிறந்த சமூக சேவை நிறுவனமாக, பெண்களின் வாழ்வைப் பயனுள்ள வகையில் முன்னேற உதவும் சங்கமாக விளங்கும் இச்சமாஜத்தின் சிறப்புக் கருதியே பல தொழிலதிபர்களும் பல வகையிலும் உதவி வருகின்றனராம்.

# மனிதர்களா இவர்கள்?

சென்னை பாலவாக்கத்தில் பெண்கள் முதியோர் இல்லமாக நடத்தப்படும் விச்ராந்தியில் அந்தப் பெண்மணியைச் சந்தித்தபோது சொன்னேன், ''உங்க கதையை வெளியிடுவதன் நோக்கமே இதைப் படிச்சுட்டு இந்த மாதிரி மனிதர்கள் திருந்த வேண்டும் என்பதுதான்.''

அந்த வயதான பெண்மணி அமைதியாகச் சிரித்தார். ''இவர்களா திருந்துவார்கள்....?'' என்று கேட்டார். வாழ்க்கையின் விரக்தியின் எல்லைக்கே இந்த முதியோர்களைத் துரத்தியிருக்கிறது நமது சமூகம். இப்படிப்பட்டவர்களே 'அம்மா' என்று அன்புடன் அழைக்கப்படுபவராக இருக்கிறார் (அவர்களைவிட வயதில் குறைந்த) இந்த இல்லத் தலைவி திருமதி சாவித்திரி வைத்தி.


**மனுஷ்யத்தனம் – மானுடம்! – அடடா, அதுதான் எத்தனை அற்புதமான சொல்! தயை, கருணை, இரக்கம், அன்பு, காதல் ஓ... எத்தனை குணங்கள் அதற்கென்று... ஆனால் இதெல்லாம் இந்த வார்த்தையில்தான் இருக்கிறதா? மனிதர்களிடம் அறவே இல்லையா? இத்தனை நன்றி கெட்டவர்களா இவர்கள்? ஆண்டவனே, மனிதர்கள் இத்தனை தாழ்ந்து விட்டார்களா? இப்படியெல்லாம் மனம் குமுறுகிறது இவர்களைப் பார்க்கும்போது... இந்த இரண்டு கதைகளைக் கேளுங்கள்...**



**எ**ங்களது பெரிய குடும்பம். நாலு ஆண் பிள்ளைகள் பிறந்து, அஞ்சாவது பெண்ணாக நான் பிறந்தேன். ரொம்பச் செல்லம். வசதிக்குக் குறைச்சலே இல்லை. எல்லோரும் வக்கீலாகவும், ஜட்ஜாகவும், கலெக்டராகவும் இருக்கிறவா. ஒரு வேளைக்கு ஐம்பது இலை விழும். எல்லாம் கூட்டுக் குடும்பமாகத்தான் இருந்தது.

ஒரே பொண்ணுன எனக்கு ஒன்பது வயசு ஆனவுடனே ஜாதகம் பார்க்க ஆரம்பிச்சா. எங்களது ரொம்ப செல்வாக்கான ஃபேமிலிங்கறதால தானுவே நிறையப் பேர் பொண் கேட்டா. கடைசியில இன்ஜினியர் மாப்பிள்ளைய செலக்ட் பண்ணி, அந்தக் காலத்தில ஐம்பத்திரண்டாயிரம் செலவு பண்ணிக் கல்யாணம் பண்ணி வச்சா. கல்யாணச் செலவு மட்டும் இது. வைர அன்னப்பட்சி, தோடு, அட்டிகை, வெள்ளி அப்படின்னு அது வேற.

அப்போ நான் வயசுக்கு வரல. மூணு வருஷம் அண்ணா வீட்டில இருந்தேன். அவா கிட்ட இருந்து எந்தத் தகவலும் இல்லையே,



பொண்ணு மாதிரியாச்சும் வச்சுக்கிட்டட்டும்னு என்னைக் கூட்டிண்டு அண்ணா கிளம்பினார்.

அன்றைக்குத்தான் என் மச்சினருக்குக் கல்யாணமாகிக் கிரகப் பிரவேசம் ஆயிண்டிருக்கு! 'ஏண்டியம்மா, மூத்த நாட்டுப்பெண் வரலியா, அவதானே இந்த வீட்டுக்குச் சொந்தக்காரி'ன்னு எல்லோரும் கேட்டிருக்கா.

என் மாமியார், 'அவளா, அவ எங்கேயோ மலையாள நாட்டிலே சாகக் கிடக்கிறா. அவளாவது வர்றதாவது' சொல்லிண்டே இருக்கிறப்ப நானும், அண்ணாவும் போய் இறங்கினோம். எல்லோரும் மாமியாரைப் பிலுபிலுன்னு அரிச்சிருக்கா. அப்போதைக்குச் சும்மா இருந்துவிட்டாள் என் மாமியார். அப்புறம் மூணே மாதத்தில் திருப்பி அனுப்பிவிட்டாள்.

திருப்பியும் அண்ணா என்னைக் கொண்டு விட்டார். ஒவ்வொரு முறையும் சீர் செனத்திதான். இத்தனை செய்து கொண்டு வரும் அவரிடம் முகம் கொடுத்துக் கூடப் பேச மாட்டார்கள். நமஸ்காரம் செய்துவிட்டுப்

மஞ்சுளா ரமேஷ்

போய்ட்டு வரேன்னு சொன்னாப் பதிலே வராது. எத்தனையோ பெரிய உத்தியோகத்தில் இருந்த அண்ணா எனக்காக மௌனமாகப் போவான்.

ஒன்பதாவது வயது வரை ராஜகுமாரி போல இருந்த நான் திருமணமானது முதல் அவர்கள் வீட்டுச் சமையற்காரி, வேலைக்காரி ஆனேன். அப்போ பத்து வயதுகூட ரொம்பலை. நாள் பூரா வேலை இருக்கும். மாமனாருக்கு மிளகு தட்டிப் போட்டுச் சமையல். மற்றவர்களுக்கு அரைத்து விட்டுச் சமையல். ஒரு நாத்தனார் விட்டு ஒருத்தி பிரசவத்துக்கு வருவார். மூணு வருஷம் தங்கியிருப்பாள். கூடம் பூரா மனிதர்கள்தான்.

ஒரு நாள் மாமியாருக்குப் பயந்துகொண்டு ஒரு மணிக்கு எழுந்து சமையல் செய்திருக்கிறேன். (பத்து வயசுக் குழந்தை!) அந்தப் பக்கம் வந்த நாத்தனார் என்னைப் பார்த்துவிட்டு வீட்டில் எல்லோரையும் எழுப்பிச் சொல்லி விட்டாள். எல்லாருமாச் சேர்ந்து கைகொட்டிச் சிரித்தார்கள். எனக்கு ஒண்ணும் புரியலை....''



என்று அந்த அம்மாள் சொன்னபோது எனக்குக் கண்ணில் நீர் படர்ந்தது. ஆனால் பெரிய வசதியான குடும்பத்தில் பிறந்த கௌரவமும், குழந்தைத்தனமும், பெருந்தன்மையும் அந்த முகத்தில் படர்ந்தது.

''மாசா மாசம் நாத்தனார்கள் வந்து ஆயிரக் கணக்கில் வாங்கிண்டு போவா. ஆனால் மாமனார் சம்பாரிச்சுக் கொடுத்தார்.' என்று பெருந்தன்மையுடன் சொன்ன போது இந்தப் பெரிய மனதிற்கா இவ்வளவு கஷ்டம் என்று தொண்டையை அடைத்தது.

''தினமும் காலையில் குளத்துக்குப் போய் குளித்து, வகை வகையாய்ச் சமைத்து எல்லோருக்கும் போட்டு நான் சாப்பிடறப்போ எனக்கு ரச வண்டலும், ஒரு பிடி சோறும் தான் மிஞ்சும். பதினோரு வயசுலயே உலகம் வெறுத்துப் போச்சு எனக்கு. குடும்ப வாழ்க்கைன்னா என்னன்னு தெரியலை. எதுவும் அனுபவிக்கலை. வேலையே செஞ்சு உருகிப் போன என்னப் பார்த்து அண்ணா மாமியார் கிட்டக் கெஞ்சினான், 'உங்க பொண்ணாட்டம் பாத்துக்கங்கோ'ன்னு. மாமியார் வாயே திறக்க மாட்டாள்.

வயசுக்கு வந்தப்புறம் கூட எனக்கு ஒண்ணும் நடக்கலை. என்ன நடக்கும்கிறதும் எனக்குச் சொல்லித் தாலை. சமையல் கட்டு தான் எனக்கு விதிச்சிருந்தது.

ஒரு நா என் நாத்தனார் எங்கிட்ட அன்பொழுகச் சொன்னா, 'உங்கண்ணாவுக்கு எழுது, இங்க என் ஆம்படையானோட பேசக்கூட விடமாட்டேங்கறான்னு. என்ன வந்து கூட்டிண்டு போன்னு கடுதாசி போடு'ன்னா. அவளே எழுதி நான் கையெழுத்துப் போட்டேன். அண்ணா வந்து என்னைக் கூட்டிண்டு போனான். அப்புறம்தான் தெரிஞ்சது, அது அவர் ரெண்டாங் கல்யாணம் பண்ணிக்கிறதுக்காகச் செஞ்ச ஏற்பாடுன்னு.

இப்படிப் பண்ணலாமான்னு மாமனார் கிட்ட அண்ணா கேட்டால், 'பொண்ணு கறுப்பு. அழகாவே இல்ல. எனக்கு வேண்டாங்கறான். நானென்ன செய்ய?'ன்னு கைய விரிச்சுட்டார். அதோட என் புகுந்தவீட்டு வாழ்க்கை முடிஞ்சுது.

அப்புறமா வீடு வீடா இருந்தேன். ஒவ்வொருத்தர் வீட்லயும் வீட்டு வேலை செஞ்சுண்டு உபகாரமா இருந்துட்டுக் கடைசியா இங்க வந்துட்டேன்.....''

என்று பெருந்தன்மையாக முடித்துவிட்டார் அந்தப் பெண்மணி.

இவரைப் பற்றிச் சொல்லும்போது, இல்லத் தலைவி சாவித்திரி வைத்தி குறிப்பிட்டார் ''முதலில் இவரைச் சேர்த்துக்கொள்ள முடியாதுன்னுதான் சொன்னேன். ஏன்னா சொந்தக்காரா லிஸ்டைப் பார்த்தா பெரிய மனிதர்கள், பிரபலமான மனிதர்கள். ஆனா திரும்பத் திரும்ப இவர் என்னைக் கேட்டுக் கொண்டதால் இவங்க இருக்கிற இடத்துக்கே போனேன். இத்தனை பேர் இருந்தும் யாருமே இவரை வைச்சுக்கத் தயாரா இல்ல. ஏன்னா கண்ணு பார்வை மங்கிப் போச்சு. உடம்புல தெம்பு இருந்தவரைக்கும் உழைச்சு உழைச்சுத் தேய்ஞ்சு போயிருக்கா. இனிமே பாரம்தானே? எல்லாருமே சீசீன்னவுடனேதான் நான் இவங்களைச் சேர்த்துக்கிட்டேன்.''

எப்பேர்ப்பட்ட மனம்? என்ன வாழ்க்கை! கணவர் வசதியாக — இப்போதும் வசதியாக வாழ்ந்து வருகிறார். ஆனால் 'இவரா மனிதர்? பதினோரு வயதில் ஒரு சிறுமியின் மனதைக் கொலை செய்து வாழ்க்கையில் நடைப்பிணமாக்கி விட்டார்களே. ஏன் இவர்களெல்லாம் வீட்டுக்கு வந்தவளும் தன்னைப் போல மனம் என்ற ஒன்றுள்ள உயிர், பெண் என்று நினைக்க மாட்டார்களோ?

''எங்கப்பா ஒரு வக்கீல். மூத்த பெண் நான். ஹைகோர்ட் ஜட்ஜ் இந்தப் பையனைத் தான் சுவீகாரமா எடுத்துக்கப் போறார்ன்னு நம்ப வச்சு எங்கப்பாவைச் சம்மதிக்க வச்சு கல்யாணம் பண்ணிண்டா. எனக்குப் பதினாலு. இவருக்கு இருபத்தி நாலு.



அவருக்குப் படிப்பும் ஏறல. வேலை செய்யவும் வணங்கல. அவருக்கு ஒரே பொழுது போக்கு என்னை அடிக்கிறதுதான். அம்மா எனக்கு அடி தாளலம்மான்னு பொறந்த வீட்டுக்கு வந்துட்டேன். நான் முத்து லட்சுமி நடத்தற ஹோமுக்குப் போயிட றேன்னு சொல்லிச் சேரவும் சேர்ந்துட்டேன். ஆனா எனக்கப்புறம் தங்கை, தம்பிக்கெல்லாம் என்னாலை கல்யாணம் ஆகாதுன்னு அம்மா என்னைக் கூட்டிண்டு போய், திரும்பவும் என் கணவர் கிட்டயே விட்டுட்டாங்க.

அந்த ஜட்ஜ் கால்ல விழுந்து ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் வேலய இவருக்கு வாங்கிக் குடுத்தேன். சரியாவும் போமாட்டார். முப்பது ரூபா சம்பளம். வரிசையா குழந்தைகள்.

முதல்ல பொறந்த பொண்ணையும், பிள்ளையையும் மாமியாரும், நாத்தனாரும் எடுத்துண்டு போயிட்டா.''

'என்ன எடுத்துண்டு போயிட்டாளா?... அதெப்படி பெற்ற குழந்தையைக் கொடுத்தீர்கள்? உலகத்திலேயே பெரிய தியாகமல்லவா அது?' என்று குறுக்கிட்டேன் நான்.

அவர் விரக்தியாகச் சிரித்தார். ''தியாகமாவது, ஒண்ணாவது? அவா எடுத்துண்டு போயிட்டா. நான் முடியாதுன்னு சொன்னா கொலைதான் விழும். என்னையும் அடிச்சு அந்தக் குழந்தைங்களையும் குரூரமா கொடுமைப்படுத்துவார். கடைசில என்னென்னவோ சொல்லிக் கொடுத்து அவங்க ரெண்டு பேருக்கும் தாயார்னு ஒருத்தி இருக்காங்கறதே மறந்து போச்சு.

அப்புறம் எனக்கு ஒரு பிள்ளை, மூணு பொண்ணு. பிள்ளை தலையெடுத்துச் சம்பாதிக்க ஆரம்பிச்சப்புறம், இதுதான் சாக்குன்னு வேலைய விட்டுட்டார். 'நானேண்டி இனிச் சம்பாதிக்கணும், என் பிள்ளை எனக்குச் சோறு போடுவான்'னு பேசுவார். அதோட இருந்தாப் பரவால்லே. ஒரு பொண்ணு சினேகிதமும் புதுசா ஆரம்பிச்சது. இதக் கேள்விப்பட்டு அவன் வந்து சத்தம் போட்டான். அவர் கேக்கலே.

என்னையும் மூணு பொண்களையும் ஹைதராபாத்துக்குக் கூட்டிட்டுப் போயிட்டான். அப்படி முப்பது வருஷம். அவன் கொண்டு வர்ற கொறைச்ச சம்பளத்துல பாடுபட்டுப் பொண்களைப் படிக்க வுச்சு ஒவ்வொருத்தரையாக் கரை யேத்தினேன். அவனைப் பண்ணிக்கோடான்னா மாட்டேன்னான். அப்பாவுக்குப் பொண்ணு சினேகிதம்னா இவனுக்குக் குடி சிநேகிதமாச்சு.



நான் முட்டி மோதி அழுதேன். அவன் கேக்கலே. ஒரு நா என்னை அம்போன்னு விட்டுட்டு ஓடிட்டான். கடைசிப் பொண்ணு என்னை வச்சிண்டா — வேலைக்காரியா—வேலைக்குப் போற புருஷன் பெண்டாட்டிக்குச் சமைத்து, வர்றவாளுக்கு டின்னர் பண்ணி, குழந்தையைப் பார்த்துண்டு, வீட்டு வேலை செஞ்சுண்டு... கொஞ்சம் சமையல் சரியில்லேன்னா, ஒரு சாமான் கீழே கொட்டிப்போச்சுன்னா அவ்வளவுதான். வீடே விழரு மாதிரி கத்துவா. அவங்க ஃபிரெண்ட்ஸ் வர்றப்ப, அவளோட பிள்ளை ஸ்கூல் ஃபிரெண்ட்ஸ் வர்றப்பக்கூட நான் வெளியே வரக்கூடாது. வத்தலா இருக்கிற என்னை அம்மான்னு சொல்லிக்க வெக்கம். மத்த யார் வீட்டுக்கும் போகவும் விடாம என்னை வதைச்சா. அப்படிப் போயிருந்தப்ப பெரிய பெண்கள் இரண்டும் பேசிக்கிறதுகள்,

''என்னதான் அம்மான்னாலும் ஒருத்திக்கான சாப்பாடு துணி மணி என்னறது....?''

நான் இவா அப்பா கிட்ட வாங்கின அடி உதை, ஹைதராபாத்துக்கு வந்து பட்ட கஷ்டங்கள், இவர்களைப் படிக்க வச்சு ஆளாக்கினது, கல்யாணம் பண்ணிக் கொடுத்தது இதற்கெல்லாம் கணக்குப் பார்க்கலே. ஆனா நான் பெற்ற குழந்தைகள்?

வாழ்க்கை பூராக் கஷ்டப்பட்டேன். கடைசி காலத்திலே எனக்கு வேண்டியது நிம்மதி. அது எனக்குக் கொஞ்சம் கூட இல்லே. எப்படியோ அந்தச் சிறையிலே இருந்து தப்பிச்சு இங்க வந்திட்டேன். இப்போ ரொம்ப நிம்மதியா இருக்கேன்.

இந்த இரண்டு பேரையும் கடைசியாக ஒரு கேள்வி கேட்டேன். ''உங்களுக்கு வசதியான இத்தனை சொந்தக்காரங்க இருந்தும் இப்படி ஒரு இல்லத்தில் அநாதை மாதிரி இருக்கோமேன்னு வருத்தப்பட்டதுண்டா?''

ரெண்டு பேரும் தனித் தனியாத்தான் சொன்னார்கள். ஆனால் ஒரே வார்த்தையைச் சொன்னார்கள். ''எங்களுக்கு வாழ்க்கை அவ்வளவு கசந்து போச்சு. ரொம்பச் சிரமப்பட்டுட்டோம். எந்த ஆசையும் இல்லே. இங்க நிம்மதியா இருக்கோம். இது போதும்''

வாழ்க்கை கசந்து போச்சு! என்ன வார்த்தை, இதற்கா இத்தனை பாடு? காலம் நிற்கவே நிற்காத மாபெரும் சக்கரம். நாம் வாழப்போவது மிகச் சில ஆண்டுகள். அதில் வாழ்விலே அன்பை, கருணையை, தெய்வீகத்தைக் கண்டாலென்ன?

# ரணம், குழந்தைகளின் விரைந்த முழுவளர்ச்சிக்கான
# திக ஊட்டச்சத்துள்ள திட உணவாகும் ஃபாரெக்ஸ்.

கள் குழந்தையின்
ர்ச்சிக்குத் தேவையான
ச்சத்து நிரம்பியதாகும் ஃபாரெக்ஸ்.

தச்சத்துப் பற்றாக்குறையிலிருந்து
ந்தையைப் பாதுகாப்பதற்கென்றே உலக
ல்நலக் கழகம் பிராண்டு செய்யப்பட்ட
உணவுகளில் அடங்கி இருக்கவேண்டிய
தச்சத்தின் அளவு பற்றி சில தர நிர்ண
கள் விதித்துள்ளது. சிபாரிசு செய்துள்ள
றையைப் பின்பற்றி ஃபாரெக்ஸ் திட
ாவைத் தயாரித்து அளித்தால் அது
கள் குழந்தையின் வளர்ச்சிக்கு அத்தியா
யமான புரதச்சத்து செறிந்ததாகும்.

ரோக்கியமான இரத்தத்திற்கென
தல் இரும்புச்சத்து
ங்கியதாகும் ஃபாரெக்ஸ்.

ாயிடமிருந்து ஏராளமான இரும்புச்
தைப் பெற்று குழந்தை பிறக்கிறது.
ந்த பிறகு மெல்ல மெல்ல இரும்புச்
தின் அளவு குறையத் தொடங்குகிறது.
் நல்ல உணவாக இருப்பினும்,
ம்புச்சத்துப் பற்றாக்குறையினால் அது
ழமையாவதில்லை. ஆகவே, குழந்தைக்கு
ம்புச்சத்து அடங்கிய திட உணவு
வைப்படுகிறது.''

—டாக்டர் சுபாஷ் C. ஆர்யா

ந்தையின் இரத்தத்திற்கும், தொற்று
ாய் எதிர்க்கும் சக்திக்கும், அவனது


பொது ஆரோக்கியம் மற்றும் வளர்ச்சி
இவற்றுக்குத் தேவை இரும்புச்சத்து.
அதனால்தான் ஃபாரெக்ஸில் வேறு எந்த
பிராண்டு செய்யப்பட்ட திட உணவைக்
காட்டிலும் அதிக இரும்புச்சத்து
அடங்கியுள்ளது.

உங்கள் குழந்தையின் பற்களுக்கும்
எலும்புகளுக்கும் அத்தியாவசியமான
கால்ஷியம் மற்றும் ஃபாஸ்ஃபரஸ்
சரியான விகிதத்தில்
அடங்கியுள்ளதாகும் ஃபாரெக்ஸ்.

உங்கள் குழந்தையின் பற்கள் மற்றும்
எலும்புகளின சீரான வளர்ச்சிக்குத் தேவை
கால்ஷியம் மற்றும் ஃபாஸ்ஃபரஸ். ஆனால்
2 : 1 என்னும் விகிதத்தில் இவை ஒன்று
சேர்ந்திருந்தால்தான் குழந்தைக்கு
மிகச்சிறந்த பயனளிக்கும். இந்த இரண்டு
அத்தியாவசியமான உட்பொருள்களும்
உன்னதமான விகிதத்தில் அடங்கியதாகும்
ஃபாரெக்ஸ். அது உங்கள் குழந்தை மிக
ஆரோக்கியமான எலும்புகளையும் மிக
திடமான பற்களையும் பெறுவதை உறுதி
செய்கிறது.

தவிர, ஃபாரெக்ஸ்
எளிதில் செரிக்கக்கூடியதாகும்.

குழந்தையின் மென்மையான செரிக்கும்
சக்திக்கேற்றவாறு விசேடமாக முன்
கூட்டியே பக்குவம் செய்யப்பட்டதாகும்
ஃபாரெக்ஸ்.






டாக்டர்கள் சிபாரிசு செய்வது

## ஃபாரெக்ஸ்®

வழங்குவோர் க்ளாக்ஸோ

CASGLF-40-206

# ரன் அவுட்

தேவி பாலா

'உங்கம்மா ஓடிப்போயிட்டா மஞ்சு!' ஒவ்வொரு வார்த்தையாகத் திணறித் திணறிச் சொல்லி முடித்தபோது வியர்வையில் நனைந்து போனது ராமதாஸின் உடம்பு. அவமானச் சிகப்பு முகத்தில் மேகமாகப் படர, கண்கள் கலங்கி யிருந்தன.

பதினாலு வயசு மஞ்சு. ஆண்களைப் பார்த்தால் வெட்கப்படத் தெரியாத மஞ்சு, புரிந்தும் புரியாமல் அப்பாவைப் பார்த்து விழித்தாள். ஆனால் அப்பாவுக்கு இது பெரிய இழப்பு என்பது மட்டும் புரிந்தது.

''ரிலாக்ஸ் டாடி!''

''எப்படிம்மா எப்படி? உங்கிட்டச் சொல்லக்கூடாத விஷயம்மா இது. பட், சொல்லித்தான் ஆகணும், நாளைக்கு அம்மா எங்கேன்னு நீ கேட்டா, நான் என்ன பதில் சொல்றது?'

''அது யார் டாடீ?''

''சொல்றேன்.''

''ரஜினி, உனக்கொரு ஹாப்பி நியூஸ்!'' உற்சாகமாக மனைவியின் தோளில் தட்டினார் ராமதாஸ்.

''என்ன?''

''எங்க ஆபீஸ்ல இருக்கிற எக்ஸிக்யூட்டிவ் விஜய் நாளைக்கு நம்ம வீட்டுக்கு டின்னருக்கு வரப் போறார்.''

''இதுல எனக்கென்ன சந்தோஷம்?''

''அவர் ஒரு கிரிக்கெட் விளையாட்டுக்காரர் டெஸ்ட்ல விளையாட அழைப்பு வந்திருக்கு. அதற்காகத்தான் இந்த டின்னர்.''

'வாவ்!' துள்ளினாள் ரஜினி.

மறுநாள் மாலைக்காகத் தவமிருக்கத் தொடங்கினாள். பார்த்துப் பார்த்து தானே ஒவ்வொரு அயிட்டத்தையும் தயாரித்தாள். காரட் அல்வா போதாதென்று தோன்ற குலாப்ஜாமுனுக்கு ஆயத்தம் செய்தாள். பீச் மெல்பா செய்து பிரிட்ஜை நிரப்பினாள்.

—வெள்ளை உடையில் கண்ணாடியை பெருமைப்பட வைத்தாள். மஸ்காரா தடவிய முகத்துக்குப் பொருத்தமான சாயத்தை உதட்டுக்குத் தேர்ந்தெடுக்க முயன்று தோற்றாள்.

அழைப்பு மணியின் சங்கீதத்தில் பதறிப் போய் வாசலுக்கு ஓடினாள்.

''வெல் கம் மிஸ்டர் விஜய்!'' உள்ளே அழைத்த ராமதாஸ் ''மை ஒய்ஃப் ரஜினி... ஒரு நல்ல கிரிக்கெட் ரசிகை'' அறிமுகப் படுத்தினார்.

''அதுக்காகவா இந்த வெள்ளை உடை? லுக் லைக் அப்ஸரஸ்...'' கவர்ச்சியாகச் சிரித்த போது கன்னத்தில் சின்னக் குழி விழுந்தது.

இவன் இப்படிச் சிரித்துக் கொண்டே பந்து போட்டால் விக்கெட்டுகளைச் சுலபமாக வீழ்த்தலாம் என்று தோன்றியது.

''கிர்க்கெட்ல என்ன விதத்தில நீங்க ஃபேவரிட்?''

பீச் மெல்பாவை ஸ்பூனில் எடுத்தவன், மறுபடியும் சிரித்தான். ''ஃபாஸ்ட் பௌலர், குட் பாட்ஸ்மேன் ஆல்ஸோ... நானே சொல்லக் கூடாது. டெஸ்ட் மாட்ச் சொல்லட்டும். ரசம் ரொம்ப நல்லா இருக்கு, விறுவிறுப்பா ஒரு சிக்ஸர் அடிச்ச மாதிரி.''

மெல்லச் சிவந்து போனாள்.



நுட்பமாகக் கிரிக்கெட்டை அவள் விமரிசிக்க, சமையலேயும் (அவளேயும்) ரசித்துக்கொண்டே அவனும் பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

எதிலும் கலந்து கொள்ளாமல் கைக்கும் வாய்க்கும் யுத்தம் நடத்திக் கொண்டிருந்தார் ராமதாஸ்.

''என்ன ராம், நீங்க ஒண்ணுமே பேசல! ட்வெல்த் மேனு நீங்க?''

'களுக்'கென்று சிரித்த ரஜினி, ''அவருக்குக் கிரிக்கெட்னு என்னன்னே தெரியாது. 'எத்தனே கோல் போட்டாங்க'ன்னு கேப்பாரு.''

அவனும் அட்டகாசமாகச் சிரிக்க ராம் எதையும் சட்டை செய்யாமல் வடையில் இருந்த கொத்தமல்லியைத் தனியாகக் கிள்ளி ஸ்வாரஸ்யமாகக் கடித்துக் கொண்டிருந்தார்.



''நா வரலாமா?''

குரல் கேட்டு நிமிர்ந்த ரஜினி மலர்ந்தாள்.

''இதென்ன கேள்வி? ப்ளீஸ் கம் இன்'' ஓடிப்போய்க் குனிந்து தலையசைத்து வர வேற்றாள்.

''அவர் இல்லே?''

''ஐ'ம் ஸாரி. நான் அப்புறமா வர் றேன்.'' அவசரமாக எழுந்தான்.

''ஏன் என்னை மனுஷியாத் தெரியலியா?'' பொய்க் கோபத்தோடு உருட்டி விழித்தாள்.

''அப்படிப் பார்க்காதீங்க. அப்புறமா நான் ஈ. பி. டபிள்யூ. ஆயிடுவேன்.''

''அப்படீன்னா?''

''ஐ பிஃபோர் விக்கெட்!''

''ச்சீ! குறும்பு!'' மெல்லச் சிரித்தாள் அவள், ''என்ன சாப்பிட றீங்க?''

''ரசம். உங்கிட்டப் பிடிச்ச... ஐ'ம் ஸாரி...'' ஒருமையில் சட்டென அழைத்து நாக்கைக் கடித்துக் கொண்டான்.

''நோ ரிசர்வேஷன். தாராளமாக அப் படியே நீங்க கூப்பிடலாம். எனக்கும் அது தான் பிடிச்சிருக்கு.''

கிரிக்கெட் மட்டுமல்லாமல், எத்தனையோ விஷயங்களில் அவன் மேதை என்பது தெரிந்த போது மெல்ல மெல்லத் தன்னை அவனிடம் இழக்கத் தொடங்கினான்.

அவன் வராத நாட்களில் துக்கம் அனுஷ் டித்தாள். அவன் விளையாடப் போன நாட் களில் லைட்னிங் கால் போட்டு பல முறை பேசினாள். தன் சொந்தப் பிரசினைகளைக் கூட மனம் விட்டுப் பேசினாள். இவனது கம்பீரமான ஆளுமையினால் ராமதாஸ் மெல்ல மெல்ல மனத்தில் மங்கிக் கொண்டு வருவது புரிந்தது. —

''ஏன் ரஜி டல்லா இருக்கே?''

''அது கொஞ்ச நாளா எனக்கே புரியலே விஜய். ஆனா வீட்ல இருக்கும்போது சந் தோஷமே இல்லே. அது மட்டும் நிச்சயமாத் தெரியுது. வாழ்க்கைல எத்தனையோ விஷ யங்களை இழந்துட்டேன்னு உங்களைச் சந் திச்ச பின்னாலதான் புரியுது விஜய்!''

அவன் பேசாமல் இருந்தான். குழம்பிப் போன அவளது முகத்தில் இதயத்தைப் படிக்க முயற்சி செய்தான்.

''விஜய், எனக்குப் பதினாறு வயசில கல் யாணம் ஆச்சு. பெரிய வீடு, உடுத்துக்க துணி, பரப்ரம்மமான புருஷன் இதான் உலகம்னு நெனைச்சு நான் ஏமாந்துட்டேன்.

''நீங்க ஒரு கவிதை படிச்சிருக்கீங்களா விஜய்?''

''என்ன அது?''

'' 'மனைவி'ன்னு தலைப்புப் போட்டு எழு தப்பட்ட கவிதை.

'வாழ்வெனும் கிரிக்கெட் பந்தயத்தில்
அடுக்களைக்கும் படுக்கை அறைக்கும்
ரன் எடுக்க ஓட்டமாய் ஓடி
ரணமாய்ப் போனவள்'னு'

பெரிதாகச் சிரித்தான்.

''இனிமே என்னால ஓட முடியாது விஜய். நான் அவுட்டாகப் போறேன் விஜய்.''

புரிந்துகொண்ட பாணியில் மறுபடியும் சிரித்தான் விஜய். கன்னத்தில் இம்முறை விழுந்த குழியில் பதித்த கண்களை எடுக்க வில்லை ரஜினி.

மறுநாள் ராமதாஸை அனுப்பிவிட்டுக் கடி தம் எழுத உட்கார்ந்தாள் ரஜினி.

'கசப்போடு வாழ இனிமேல் இஷ்ட மில்லை. சொல்லாமல் ஓடிப்போக விரும்ப வில்லை. விருப்பமான வாழ்வை அமைத்துக் கொள்ள விஜய்யோடு போகிறேன். –ரஜனி''

அந்தக் கடிதத்தைப் படித்தபோது ஓரளவு மஞ்சுவுக்கு எல்லாமே புரிந்தது.

''கசப்புன்னு எழுதியிருக்காங்களே மம்மி அது எனக்குப் புரியலே டாடி. நீங்க மம் மியை என்னிக்காவதுபுண்படுத்தியதுண்டா''

''இல்லேம்மா. எனக்கும் அதுதான் புரி யலே. அவளை ராணி மாதிரி வச்சு தாங்கி னேன். ஆனா ஒண்ணு, உதட்டுல தேனைத் தடவிட்டு இலக்கியம் பேச எனக்குத் தெரி யாது. கன்னத்துல குழி விழ அழகாச் சிரிக்கத் தெரியாது. கண்ணம்மா, நா ஒரு நல்ல கணவனா இருந்தது சத்தியம். ஆனா ரசனையுள்ள ஒருத்தனைத் தேடியிருந்தா உங் கம்மா தோத்திருக்கலாம்.'' ராமின் குரல் கொஞ்சம் கொஞ்சமாக உடைந்து நொறுங்க உடல் குலுங்க அந்த ஆண்மகன் அழுவதை முதன் முதலாகப் பார்த்தாள் மஞ்சு.

முகம் தெரியாத அந்த மனிதன் மேல் கோபம் வந்தது.

## தர்பூசணி கீர்

**தேவையான பொருட்கள்:**

தர்பூசணி பழம் 50 பைசா
சர்க்கரை 6 ஸ்பூன்
விருப்பமானால் பால் சேர்க்கலாம்.

**செய்முறை:**

தர்பூசணிப் பழத்தை தோல் நீக்கி சிறு சிறு துண்டங்களாக நறுக்கிக் கொள்ளவும். மிக்ஸி யில் போட்டு, சிறிது சர்க்கரை சேர்த்து அரைக்கவும். அந்த ஜூஸை எடுத்து தேவைக் கேற்ப சர்க்கரை, வேண்டுமானால் பால் சேர்த்து ஃப்ரிஜ்ஜில் வைத்துச் சாப்பிட்டால் இந்தக் கடும் வெய்யிலுக்கு மிகவும் குளிர்ச்சி யாகவும், இதமாகவும் இருக்கும். இந்த வெய்யிலுக்கு இப்பழ ஜூஸ் உடலுக்கு மிகவும் குளிர்ச்சியைக் கொடுக்கிறது. சூட் டைத் தணிக்கிறது. அதிகமாக செலவும் ஆவதில்லை.

ஜனனி முரளி

''டாடி, அவங்க எங்க போயிருக்காங்கனு உங்களுக்குத் தெரியுமா?''

''இந்த ஊர்லதான் இருக்காங்க இடத்தைச் சொன்னுர்.

''ஒரு புதுஸ்நேகிதியை உனக்கு அறிமுகப்படுத்தப்போறேன் ரஜினி!'' புதிரோடு வாசல் பக்கம் கையைக் காட்டினுன் விஜய்.

அந்தப் பெண் நுழைந்தபோது காலுக்கடியில் பூமி இடம் மாறியது. கண்களை இருட்டிக் கொண்டு வந்தது.

''இது யாருன்னு சொன்னீங்க?''

''என்னேட புதிய ஸ்நேகிதி.''

மெல்ல மஞ்சுவை நெருங்கிய ரஜினி, பளீரென அறைந்தாள் மஞ்சுவின் கன்னத்தில்.

அதிர்ந்தான் விஜய்.

''எத்தனை நாளா இந்த ஸ்நேகிதம்?''

''அதை அவசியம்நீங்கதெரிஞ்சுக்கணுமா'' அலட்சியமாக மஞ்சு ஒரு கேள்வியை வீசினுள்.

''தெரிஞ்சுக்கணும்டீ!''

''எதுக்கு?''

''எதுக்கா? எதுக்குன்னு கேள்வி கேக்கற. நா....நா.... ஒன்னேட....'' தடுமாறினுள் ரஜினி.

''கமான். ஏன் நிறுத்திட்ட சொல்லு!''

''அதைச்சொல்ல அவங்களால முடியாது. ஏன்னு அவங்க என்னேட எக்ஸ் அம்மா!''

''எக்ஸ் அம்மாவா?''

''என்னைப் பெத்ததினுல அம்மா. பட்நாட் நௌ.''

''ரஜினி,உனக்கு இவ்வளவு பெரியசைஸ்ல ஒரு பெண்ணு இருக்கிறதா எனக்குச் சொல்லவே இல்லையே நீ?''


''எதுக்குச் சொல்லணும்?நீங்க ப்ளேயர்னு தான் எனக்குச் சொன்னீங்க. ப்ளேபாய்னு சொல்லலல்லியே?'' வெறுப்புக் கொப்பளிக்க வார்த்தைகளை வீசினுள். மகளை அவனுடன் பார்த்தபோது மற்றதெல்லாம் மறந்து போகத் தாய்மை விழித்துக்கொண்டது.

''நான் சுமந்த குழந்தை என் கண் முன்னுலே பாழாப்போறதை அனுமதிக்க மாட்டேன். நா இப்ப ஒரு மனைவியோ ரசிகையோ இல்லை. தாய். மஞ்சு ப்ளீஸ் வா, போகலாம்.''

''மம்மி, அது முடியாது. உன் பாஷைல சொல்லப் போனு, நீ ரன் அவுட் ஆயாச்சு. ஆட்டக்காரர் தனக்குள்ள வட்டத்துக்குள்ள இருக்கும்போது எந்தப் பந்து அங்க வந்து விழுந்தாலும் ஆபத்தில்லை. வட்டத்தை விட்டு வெளியே வந்துட்ட சமயம் பந்து விழுந்தா ஆட்டம் க்ளோஸ்.

உன் குடும்ப வட்டத்தை விட்டு நீ வெளிய வந்தாச்சு. ரன் அவுட் ஆனவங்களை மறுபடியும் ஆட்டத்தில சேக்கறதில்லேன்னு உனக்கு நல்லாத் தெரியுமே! நான் வரட்டுமா?''





## ஆலு சர்ப்ரைஸ்

பெரிய உருளைக் கிழங்கு 8 எடுத்துக் கொண்டு வேகவைத்து மத்தினுல் நன்ருக மசிக்கவும். இதில் உப்பு, தனி மிளகாய்ப்பொடி, பெருங்காயம், சேர்க்கவும். வாணலியில் சிறிது எண்ணெயை விட்டு 2 வெங்காயத்தை அரிந்து வதக்கவும். அத்துடன் 4 தக்காளியையும் பொடியாக நறுக்கிச் சேர்த்து உருளைக் கிழங்குக் கலவையுடன் சேர்த்துப் பிசையவும். மைதா மாவை நீர்க்கக் கரைத்துக்கொள்க. உருளைக் கிழங்கை வடை போல் செய்து மைதா மாவில் தோய்த்து எண்ணெயில் போட்டு எடுக்கவும்.

## வெஜிடபிள் பீஸா பை

ஒரு கப் மைதா மாவில் சிறிது உப்பு, அரை டீஸ்பூன் பேகிங் பௌடர் போட்டுச் சலித்துக் கொள்ளவும். ஒரு எலுமிச்சம் பழ அளவு வெண்ணெயை மாவுடன் சேர்த்துப் பிசறிக் கொள்ளவும். குளிர்ந்த தண்ணீரைத் தெளித்து பிசைந்துகொள்க.

வெங்காயம், காரெட், உருளைக்கிழங்கு, தக்காளி இவற்றை உப்பு, மிளகாய்ப் பொடி சேர்த்து கூட்டைப் போல் செய்து கொள்ளவும்.

பிசைந்த மைதா மாவைப் பரத்தி 'பை' செய்யும் தட்டில் சிறிது வெண்ணெய் தடவி அதில் வைக்கவும். அதன் மேல் காய் கறி கூட்டைச் சமமாகப் பரத்தி வைத்து, மாவின் விளிம்பை ஓரத்தில் மடக்கிக் கொள்ளவும். இதன் மேல் ஆவக்காய் விழுதோ, வடு மாங்காய் தண்ணீரோ பரவலாக விடலாம். இதை 'ஓவனி'ல் 25 நிமிடம் வரை வைத்துச் சுடவும்.


தமிழகத்தின்
சிறப்புகள்
எவை, எவை?
கோவில்,
கோபுரம்,
சங்கீதம்,
நாதஸ்வரம்,
பரதநாட்டியம்,
இட்லி,
தோசை,
நரசூஸ்
காபி!
ஜீவனுள்ள ஒரே காபி!
நரசூஸ்
"தெர்மலோ" காபி!
நரசூஸ்
காபி கம்பெனி
சேலம் 636 007.
கிளைகள்:
தமிழ்நாடெங்கும்.
ADWAVE NCC 2165







## ஸ்ப்ரே ட்ரை செய்யப்பட்ட அமுல் ஸ்ப்ரே

அமுல் ஸ்ப்ரே-நன்கு சமச்சீராக கலக்கப்பட்ட சத்துக்களுடன் கூடியது—பிரதம தரமுள்ள புரதம், ஜீரணிக்க எளிதான கொழுப்பு மற்றும் கார்போஹைட்ரேட்டுகள், சரியாகக் கலந்துள்ள வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள்.

ஏற்கனவே கொதிக்க வைத்த வெதுவெதுப்பான நீரில் அதைக் கலப்பது எளிது, முன்னாலேயே அதை பசை போல் தயாரிக்க வேண்டிய அவசியம் இல்லை.

### சிக்கனமானது

டின்னில் அடைக்கப்பட்டுள்ள குழந்தை உணவுகளில் மிகவும் சிக்கனமானது, அமுல் ஸ்ப்ரே. காரணம், அது இந்தியாவின் 'வெண்மைப் புரட்சிக்கு' முன்னோடியான நவீன பால் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆனால் கொதிக்க வைத்த நீர் சுகாதார முறையில் கிருமி நீக்கம் செய்யப்பட்ட பாத்திரங்கள் மற்றும் பால் புட்டிகள் உபயோகித்தலை உறுதி செய்து கொள்ளுங்கள். பால் கலக்கப்படும்போது அதிகம் நீராகி விடுவதைத் தவிர்ப்பதற்கும், போதுமான ஊட்டச் சத்துக்களை உறுதி செய்வதற்கும் டின் மீது குறிப்பிட்டுள்ள வழி முறைகளை கவனமாக பின்பற்றுக.

**இலவசம்! அமுல் வளர்ப்பு வழி—**

இதில் அடங்கியுள்ளவை: கருத்தரித்தல், பேறு காலத்திற்கு முன் கவனிப்பு, பிரசவம், தாய்ப்பால் ஊட்டுதல், வெளியில் கிடைக்கும் உணவு வகைகள், லேசான தானிய உணவு தருதல், குழந்தையின் அன்றாடக் கடன்கள், குழந்தையின் வளர்ச்சி, நோய்த் தடுப்பு, முதலுதவி, பொதுவான நோய்கள், நோயுற்ற குழந்தையைப் பாதுகாத்தல், ஆங்கிலம், இந்தி, மராத்தி, குஜராத்தி, தமிழ், தெலுங்கு, மற்றும் மலையாள மொழிகளில்.

உங்கள் பெயர், மற்றும் முகவரியுடன் ரூ. 1.25 தபால்தலை வைத்து எழுதுக இம் முகவரிக்கு: தபால் பெட்டி எண் 10124, பம்பாய் 400 001.

உங்கள் குழந்தையின் ஆரோக்கிய ஆர்வத்தில் ஒரு நற்செய்தி வழங்குகின்றனர்.
அமுல் ஸ்ப்ரே தயாரிப்பாளர்கள்.

**அமுல்ஸ்ப்ரே**

இந்தியாவின் முன்னணி பால் நிறுவனத்தின் தயாரிப்பு.



குஜராத் கோ-ஆப்பரேடிவ் மில்க் மார்க்கெட்டிங் ஃபெடரேஷன் லிமிடெட், தபால் பெட்டி எண்.10, ஆனந்த் 388 001 குஜராத் மாநிலம்.

ASP/AS-2/83



**நா**ன் இவளைக் கொலைதான் செய்திருக்கிறேன்.

இந்தக் கொலைக்கு எந்தக் கோவிலிலும் எனக்குப் பாவ மன்னிப்புக் கிடைக்காது. எந்தக் கோர்ட்டிலும் மரண தண்டனையைத் தவிர வேறு தண்டனை கொடுக்க முடியாது.

ருக்மிணி என்னைச் சத்தியமாய் மன்னிக்க மாட்டாள். அவளுடைய உயிர் பிரிகிற அந்தக் கடைசி விநாடியில் 'பாவி' என்னை இப்படி அநியாயமாய்க் கொலை பண்ணிட்டியேடி நீ விளங்குவியா?' என்று சாபமிட்டிருப்பாள்.

அது என்னைத் தீயாய் எரித்துக் கொண்டிருக்கிறது.

நான் அவளுக்குக் கொடுத்த மருந்து விபரீதமாகி விட்டது. அவள் நோயைக் குணப்படுத்துவதற்காக நான் செய்த ட்ரீட்மெண்ட் இசகு பிசகாகித் திரும்பி விட்டது.

அவளை நானே கொலை செய்து இருக்கிறேன். என் பிரியத்துக்குரிய தோழியை— ருக்குவை — என் இளம் பருவ சிநேகிதியை— அநியாயமாய் நானே கொலை செய்திருக்கிறேன்.

**நா**ன் எதிர்பார்க்கவே இல்லை.

அவளை — ருக்குவை — அந்த நிலையில் மீண்டும் நான் சந்திப்பேன் என்று. ஒரு நிமிடம் நான் ஆடிப்போய் விட்டேன். திடீரென்று கிளைத்துக் காற்றில் பறந்து போய் விடும் மென்மை எனக்கு வந்து விட்டது போல் இருந்தது.

இடைவெளி சுமார் பதினைந்து வருஷத்துக்கு மேல் இருக்கும்.

இதற்குள் இவ்வளவு உருமாற்றமா?

அந்த ஆஸ்பத்திரியின் பத்தாம் நம்பர் வார்டில் நான் ஹெட் நர்ஸ். வலதும் இடதுமாகப் போட்டிருக்கிற இருபத்தாறு இரும்புக் கட்டில்கள் சுமந்து கொண்டிருக்கிற பேஷண்டுகளுக்கு நான் தாய், மாதிரி தங்கை மாதிரி, அக்காள் மாதிரி. என் கண்காணிப்பில், என் பாதுகாப்பில் இருக்கிற இருபத்தாறு பேர்களும் என்னை இப்படித்தான் கருதுவார்கள்.

என் பரிவில், என் கனிவான கவனிப்பில் உடம்பு சுத்தமாகி வார்டை விட்டு வெளியே வரும்போது அவர்களில் சிலர், 'தாயே, உன்னால்தாம்மா என் உடம்பு இவ்வளவு சீக்கிரம் சொகமாச்சு' என்று என் இரு

ஷோபா லலித்



கைகளைப் பிடித்துக் குரல் தழுதழுக்க கண்களில் நீர் மல்க சொல்லும்போது ''என்னால என்ன இருக்கு? எல்லாம் கடவுளோட அனுக்கிரகம்'' என்று பவ்வியமாய்ச் சொல்வேன்.

அது இன்று எனக்கு இல்லை.

எல்லோருடைய கடந்த கால வாழ்த்துக்களையும் அழுத்திக் கொண்டு ருக்குவின் சாபம் மேலேறியது.

'பாவி, படுபாவி, அடுத்துக் கெடுப்பவளே. நான் உனக்கு என்ன பாவம் பண்ணினேன். உன்னோட வாழ்க்கையிலே நான் குறுக்கே வரலியே., என்னை ஏன் இப்படிச் செய்தே? கொடூரமாப் பழி வாங்கினே, நீ நாசமாய்ப் போக, நீ உருப்படவே மாட்டே, நீ விளங்கவே மாட்டே, நீ மண்ணாத்தான் போவே'.

இப்படித்தான் ருக்கு என்னை வைது



இருப்பாள். அவள் வயிற்றெரிச்சல் நியாயம். அவள் இட்ட சாபம் பலிக்கும். நான் தவறிவிட்டேன்.

இது இப்படியாகும் என்று நான் கணித்திருந்தால் எச்சரிக்கையாக இருந்திருப்பேன். எனக்கும் சம்பந்தமில்லாதது போல் தலையிடாமல் இருந்திருப்பேன்.

ருக்குவைத் தவிர வேறுயாராக இருந்தாலும் நான் இந்த விஷப் பரிட்சையைக் கையாண்டிருப்பேனா?

மாட்டேன், சத்தியமாக மாட்டேன்.

# விஷத்தை மறந்தேனே...

''என்ன ஆச்சு?''

''டி. பி. ரொம்ப முத்திப் போச்சாம். வந்திருக்கேன்.''

''........''


''ஆரம்பத்திலேயே கவனிச்சிருந்தா சரியாப் போயிருக்குமாம். சொல்றாங்க. அதுக்கு வழி இல்லை, வசதியும் இல்லை. ஊரிலே அப்பாவும் போயிட்டார், அம்மாவும்போயிட்டாள். என் ஒருத்திக்குச் சாப்பாட்டுக்குப் பார்த்துக்கறதுக்கே போராட்டம், என் வேலை என் தேவைக்குக் குறைவாதான் சம்பாதிக்க முடியும். தேவைக்கு மேலே வராது. சேத்து வைச்சுக்க முடியாது.''

ருக்கு தனக்குச் சம்பவித்திருக்கிற எல்லாக் கஷ்டங்களையும் முழுமையாகச் சொன்னாள். எல்லாவற்றையும் ஜீரணித்துக் கொண்டு, 'இது சாதாரணம்' என்பது போல் இயல்பாய்ச் சொன்னாள். வருத்தத்தை அதிகமாகக் காட்டிக் கொள்ளாமல் இருப்பது ஒரு ஆண்மை. அது முழுசாக ருக்குவுக்கு கைவந்திருந்தது.

எனக்குப் பகீரென்றது.

சின்ன வயதில் இந்த ருக்கு எத்தனை வாளிப்பாய் இருப்பாள்! 'பொதுக்பொதுக்' என்று உருண்டை வடிவம். அப்போதே வயசுக்கு மீறிய பருமன். படர்ந்த முகத்தில் பெரிசாய்ச் சாந்துப் பொட்டும் வைத்துக் கொண்டு வரும்போது எங்களுக் கெல்லாம் 'லீடர்' மாதிரி தெரிவாள். ஒரு பாதுகாப்பு மாதிரி இருக்கும். அவள் அருகில் இருக்கும் போது பயம் இருக்காது. நாலு இடங்களுக்குப் போக, தைரியமாகத் திரிய அவள்தான் எங்களுக்குச் சரியான துணை.

அப்படி இருந்தவள் இப்போது எலும்பைத் தோல் போர்த்தி இருக்க, வதங்கிப் போய், முகம் பள்ளத்தில் விழுந்து, உருண்டைக் கண்கள் உள்ளடங்கி இத்தனைவிகாரமாய்....



சமையல் செய்யும்போது சூடான எண்ணெய் உடலில் தெறித்துவிட்டால் உடனே அந்த இடத்தில் உருளைக் கிழங்கைக் கொஞ்சம் அரைத்துப் பூசினால் கொப்புளம் ஏற்படுவதை தடுத்துவிடலாம்.

-கே. தியாகராசன்

மூச்சு இழுத்துக் கொண்டே வந்தது. கொர் கொர் என்று சத்தம்.

''பிரைவேட்டாப் பார்த்துக்க எனக்கு வசதி இல்லே: 'லேடிஸ் டெய்லரிங்' வேலையிலே பிரமாதமா என்ன கிடைக்கப் போறது. அந்த வருமானத்திலே அப்பா பட்ட கடனையெல்லாம் தீர்க்கணும், சாகறதுக்கு முன்னே ஊரில் அப்பா நிறையக் கடன் பட்டிருந்தார். அவர் போன பின்னாலே எல்லாரும் 'க்யூ'விலே வந்து நின்னுட்டாங்க. அம்மாவுக்குத் திகிலாயிட்டது. 'இத்தனை பேரிடம் அவர் எப்போது கடன் பட்டார்' என்று கேட்டுக் கொண்டே இருந்தாள். அதுக்கு அவளாலே பதில் கண்டு பிடிக்க முடியல்லே. கேள்வி கேட்டுக் கொண்டே ஒரு நாள் அவளும் செத்துப் போனாள்.

'லேடீஸ் டெய்லரிங்'லே உள் பாவாடையும் ஜாக்கெட்டும், உள் பாடியும் எத்தனை நாளைக்குத் தைக்க வரும். ரெடி மேடா தெச்சு வச்ச உள் பாடியை, உள் பாவாடையை வாங்கத் தொடங்கிட்டாங்க. ஜாக்கெட்டுக்கு மட்டும்தான் என்கிட்ட வருவாங்க. இந்த வியாதிக்கு நான் உள்ளானப்ப, எங்கே இது தன்னைத் தொத்திடப் போகுதோன்னு அதுவும் வரல்லே. நின்னு போச்சு.

இருபது ரூபாய் வாடகையிலே நான் குடி இருந்தேனே, வீடு, அந்த வீட்டுக்காரங்க ரொம்ப சுத்தம், பார்க்கறவங்க. ஆரோக்கியமாக இருக்கணும்னு நெனைக்கிறவங்க. கண்டிப்பாச் சொல்லிட்டாங்க. நான் வேற இடத்துக்குப் போயிடணுமாம். முனிசிபல் ஆஸ்பத்திரியில் ஆரம்பத்திலே கவனிச்சேன். இந்த வியாதிக்கு வேண்டிய எந்த மருந்தும், மாத்திரையும் இப்போ இல்லேன்னு சொல்லிட்டாங்க.''

என் கண்களில் ருக்கு மங்கலாய்த் தெரிந்தாள்.

''நீ ஏண்டி அழறே, நான் செய்திருக்கிற பாவம் அனுபவிக்கிறேன். யார் யாருக்கு என்ன விதிச்சிருக்கோ, தடுக்க முடியுமோ? நீ எப்படி இருக்கே? இந்த வேலைக்கு எப்படி வந்தே? அப்பா, அம்மா சௌக்கியமா? உனக்கு அண்ணன் ஒருத்தன் இருந்தானே, அவன் இப்போ என்ன பண்றான்?''

**அ**ப்படி இப்படி என்று ருக்கு வார்டுக்கு வந்து ஒரு மாதம் ஆகி விட்டது. ஆஸ்பத்திரி சாப்பாடும், மருந்தும், மாத்திரையும் அவளிடம் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. எனக்குக் கவலையாக இருந்தது.

உடல் நோயை மருந்து கொடுத்து போக்க முயற்சிக்கலாம். க்ஷயரோக நோயாளி எத்தனைதான் சத்தான உணவு சாப்பிட்டாலும் வியாதியைப் போக்கும் மருந்து உள்ளுக்குள் இறங்காவிட்டால் சத்துணவெல்லாம் உடம்போடு தன் உயிரை வைத்துக் கொண்டிருக்கும் கிருமிகளுக்குத்தான் போகும். அதை அழிக்க மருந்துதான் தேவை. உணவும் மருந்துமே அழிக்க முடியாத சில வகை கிருமிகள் இருக்கும்.... கவலை.

இந்த ருக்கு என் இளம் பருவத்துத் தோழி. எதையோ தன்னுள் புதைத்து வைத்துக் கொண்டு தன்னைத் தானே அரித்துக்கொண்டிருக்கிறாளோ... வெளியே கூற முடியாமல் மருகிக் கொண்டிருக்கிறாளோ... எந்தத் துக்கமாக இருந்தாலும் அதைக் கொட்டிக் கவிழ்த்து விட்டு, இருந்த இடத்தைத் தூய்மையாக்கிக் கொண்டால்தான் நிம்மதி. அவளை நான் ஒரு நாள் சீண்டிப் பார்த்தேன்.

ருக்குவின் அருகில் ஸ்டூலைப் போட்டுக் கொண்டு ஆரம்பித்தேன்.

''உனக்கு ஏதோ சொல்ல முடியாத துக்கம் இருக்கும் போல இருக்கு.''

''இல்லியே.''

''சும்மா சொல்லு ருக்கு.''

மிக மென்மையான பகுதியில் நான் தொட்டிருக்கிறேன்.

திடீரென்று அவள் கண்கள் கலங்கின. இமைகள் படபடத்தன. மூச்சு புஸ் புஸ்



# அமிர்தாஞ்சன் அறியும் உடல்வலியின் கடுமையை

உடல்வலியைப் போக்க சுலபமான வழி, அமிர்தாஞ்சன். சிறிதளவு அமிர்தாஞ்சன் எடுத்து நன்ருக அழுத்தித் தேயுங்கள். உடல் வலியிலிருந்து இதமான உடனடி நிவாரணம் கிடைக்கும்.

அமிர்தாஞ்சன் மற்ற மருந்துகளைப் போலல்ல. அமிர்தாஞ்சனில் உள்ள சக்திமிக்க 10 மருந்துப் பொருட்கள் உடனடியாக செயல்புரிந்து வலியிலிருந்து உங்களுக்கு துரிதமாக நிவாரணம் அளிக்கின்றன, தீங்கு செய்யும் பின் விளைவுகள் எதுவுமில்லை.

85 ஆண்டுகளுக்கும் மேலாக புகழ்வாய்ந்த அமிர்தாஞ்சன் சுளுக்கு, தலைவலி, மற்றும் ஜலதோஷம் இவற்றிலிருந்தும் சிறந்த நிவாரணம் அளிக்கிறது.

எப்பொழுதும் அமிர்தாஞ்சன் உங்கள் கைவசம் இருக்கட்டும். ஏனெனில், அது, எப்போது தேவைப் படுமென்று சொல்ல முடியாது.




## அமிர்தாஞ்சன்

துரித நிவாரணம் உறுதியுடன் அளிப்பது. பின்விளைவுகள் இல்லாதது.

OBM 7656 TM

என்று எழுந்தது. மார்பு ஏறி... இறங்கி.. அவள் பரிதாபமாய் இருந்தாள்.

''என்ன சொல்லு ருக்கு.''

''சொல்றதுக்கு விசேஷமா இல்லே. ஊர்ல ஒருத்தரோட எனக்கு ஸ்நேகம் இருந்தது. காதல் கீதல்னு எதுவும் இல்லே. சாதாரணமாத்தான் ஆரம்பிச்சது. எனக்குள்ளே நான் ஆகாசக் கோட்டைகள் கட்டிக்கல்லே. தெய்வீகக் காதல், அமரத்துவக் காதல்னு ஆகாசக் கோட்டை கட்டிக்கலே லேசா, சின்ன ஆசை மட்டும் இருந்துச்சு. இவர் எனக்குரியவரா யிருந்தா சந்தோஷமா இருக்குமேன்னு ஆசை. எனக்கு இப்பிடி ஆன பிறகு அவரே என்னோட பேசிக்கிறதை நிறுத்திக்கிட்டாரு. ஒதுங்கிப் போயிட்டாரு. இதுவே எனக்குப் பெரிய வலியாஇருந்துச்சு''

ருக்குவோட 'காம்ப்ளக்ஸ்' எனக்குப் புரிந்தது. இது புறக்கணிப்பாலே ஏற்பட்ட வேதனை. மனத்தை அறுக்கும் வேதனை. ஒரு ஆணோட ஸ்நேகம் அவளுக்குச் சுகமாய் இருக்கும். தன்னை நேசிப்பதற்கும் ஒருவன் இருக்கிறான் என்பதே ஒரு மென்மையான ஒத்தடம்.

அண்ணு வந்தான்.

''சுகு, இது யார் ஞாபகம் இருக்கா பார்.''

அண்ணு நெற்றியைச் சுருக்கிக் கொண்டான். கண்களைக் கூர்மையாக்கினான். ஆழமாய் அவளைப் பார்த்தான். கொஞ்ச நேரம் சிந்தித்தான்.

''இது நம்ம ருக்கு இல்லே?''

''ஆமாம்'' — நான் மேலும் அவனிடம் சொன்னேன்..

''எப்படி இருக்கிறாள் பார்த்தியா...''

சுகுமார் நான் சொன்னகதையெல்லாம் அனுதாபத்தோட கேட்டான். 'ச்சோ, ச்சோ' என்றான். பரிதாபம் இழைந்தது.

ஸ்வாதீனமாய் அவன் ருக்குவின் கட்டிலில் உட்கார்ந்து கொண்டான்.

''இதோ பார், ருக்கு, பயப்படாதே. உனக்கு எதுவும் ஆயிடாது. 'மெடிக்கல் சயன்ஸ்'லே ஒரே ஒரு வியாதிக்குத்தான் மருந்து கண்டு பிடிக்கலையாம். அதைக்கூட கட்டுப்படுத்தறதுக்கு வழி கண்டு பிடிச்சாச்சாம். 'கேன்ஸர்'! எல்லாத்துக்கும் மருந்து கண்டு பிடிச்சாச்சு. சொஸ்தப் படுத்திடறாங்க. நல்ல வேளை. உனக்கு வந்தது கான்ஸர் இல்லையேன்னு சந்தோஷப்படு; இந்த சந்தோஷமே உன்னோட உயிருக்கு உத்தரவாதம். பயப்படாதே.'

ருக்கு இதழ் பிரியாமல் சிரித்தாள். முகம் லேசாக மலர்ந்தது.

'ரொம்ப நாளைக்குப் பிறகு அவள் சிரிக்கிறாள்.' போல் இருக்கிறது. அந்தச் சிரிப்பில் ஜீவன் இருந்தது.

''நீ.... என்ன பண்றே சுகுமார்?''—ருக்கு.

''ஆபீசரா.....''

''ஓ... அவ்வளவு பெரிய உத்தியோகமா?''

''அவசரப்படறியே. நிதானமா கேள். நான் ஆபீசரா இருக்க ஆசைப்பட்டு ஒரு ஆபிசிலே... ஆபீஸ் பாய்... அட்டெண்டர் அந்தஸ்துக்குக் கொஞ்சம் மேலே... ஒரு உத்தியோகம்.''

ருக்குவுக்குச் சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்து விட்டது. தாங்க முடியாமல் சிரித்தாள்.

அண்ணு தொடர்ந்து வந்தான். அடிக்கடி வந்தான். நான் இல்லாத நேரங்களில் எல்லாம் அவன் வந்தான். அப்படி வரும் போது ஒரு வியாதியஸ்தரைப் பார்க்க வருவது போல் இல்லாமல், தனக்கு வேண்டியவர்களை, தனக்குப் பிரியமானவர்களை பார்த்துப் பொழுது போக்குவது போல் வந்தான்.

ருக்குவின் சிரிப்பும் வளர்ந்து வளர்ந்து வளர்பிறை நிலவாய்.... சுகுமார் வலுவில் அவளோடு ஒட்டிக் கொண்டான். ஒவ்வொரு நாளும் ருக்குவுக்கு சுகுமாரும் தேவையானவனாகப் பட்டான். ஆச்சரியமாய் அவள் உருமாறினாள். முழுமையாய்ச் சொஸ்தமானாள்....

''ஏய் சாந்தி, உன் நாடகத்திலே என்னோட போர்ஷன பெர்ஃபெக்டா முடிச்சுட்டேன். ருக்குவோட ஸ்நேகமா இருக்கச் சொன்னே, அற்புதமாய் ஆக்ட் பண்ணிட்டேன். பாவம் அந்த ருக்கு நான் அவளை உண்மையாவே 'லவ்' பண்றதா நினைச்சுட்டாப்போல இருக்கு. நாளைக்கு அவ டிஸ்சார்ஜ் ஆகப் போறாப் போல இருக்கு.''

''யார் சொன்னது?''

''டாக்டர் சொன்னதா ருக்குதான் சொன்னா.''

நான் ரெண்டு நாள் லீவில் இருந்ததால் இந்த விஷயம் எனக்குத் தெரியவில்லை.

''பாவம், அந்த ருக்கு ஏமாற வேண்டாம்னு உண்மையை அவ கிட்டச் சொல்லிட்டேன். நீதான் இந்த டிராமாவுக்கு ஏற்பாடு பண்ணினதாகவும் உடம்பு குணமாறதுக்காக நீ இப்படிச் செய்ததாகவும் சொன்னேன். அவ இடிஞ்சு போயிட்டா.''

அடுத்த நிமிஷம் நான் ஆஸ்பத்திரிக்குப் பறந்தேன்.


''மிஸ் சாந்தி, இந்த விசித்திரத்தைப் பார்த்தியா? இந்த ருக்கு இருக்காளே நியாயமா அவ டி.பி .யிலேதான் செத்துப் போயிருக்கணும். ஆனா டி.பி.யிலே இருந்து தேறிட்டாள். அவளுக்கு ஹார்ட் கொஞ்சம் வீக். அதிலே போயிட்டா... பாடிய மார்ச்சுவரிக்கு அனுப்பி....''

இந்தக் கொலை நானே செய்த கொலை.

அந்த விஷப் பரீட்சைக்கு நான் ருக்குவை உள்ளாக்கி இருக்கக் கூடாது. அதைச் செய்யாமல் இருந்திருப்பேனேயானால் ஒரு வேளை வியாதியோடவாவது அவள் உயிரோடு இருந்திருக்கக் கூடும்.

எனக்கு எந்தக் கோவிலில் பாவ மன்னிப்புக் கிடைக்கும், எந்தக் கோர்ட்டில் விடுதலை கிடைக்கும்?....

# தையல்




உடை-தைத்தபின்னர்



## மாகியர் சைட் காதரிங் ப்ராக்

அளவுகள்
உயரம் - 18"
மார்பு சுற்றளவு - 20 + 4 = 24"/4 = 6"
கழுத்து - 2"
தோள்பட்டை - 2½"
ஆம் ஹோல் — 18"

- - - - - - - - வெட்டும் கோடுகள்
———— துணை கோடுகள்

லலிதா கணபதிராமன்

இந்த ப்ராக் தைக்க பாப்ளின், பிரிண்டட் டுபைடு ஆகிய துணிகள் ஏற்றவையாகும். இந்த உடை தைத்து முடிக்க சுமாராக ஒரு மீட்டர் துணி தேவைப்படும்.

பேப்பர் பேட்டனை வரையும் முறை:

குழந்தைகளின் (அவரவர்க்கு தேவையான அளவுப்படி) முழு உயரத்தைத் தோள்பட்டையிலிருந்து கால் முட்டி வரையிலும் இஞ்ச் டேப்பால் அளந்து குறித்துக் கொள்ளவும். மார்புச் சுற்றளவையும் இடுப்பு சுற்றளவு, தோள்பட்டை, கழுத்து அளவுகளையும் குறித்துக்கொள்ளவும். பின்னர் கீழ்க்கண்டவாறு ஒரு பழைய செய்தித் தாளில் வரைந்து கொள்ளவும்.

அளவுகள்:

| | | |
|---|---|---|
| 0 to 1 | = | 18'' (முழு உயரம்) |
| 0 to 2, 3 to 3' | = | 6'' (¼ மார்பளவு) |
| 3 to 4 | = | 2'' (இடுப்பு உயரம்) |
| 0 to 6 | = | 2'' (கழுத்து) |
| 0 to 7 | = | முதல் கட்டத்தின் 3 பகுதிகளுள் முதல் பகுதி பின் கழுத்து) |
| 0 to 8 | = | முதல் கட்டத்தின் 3 பகுதியுள் 2வது பகுதி (முன் கழுத்து) |
| 6 to 9 | = | 2½'' (தோள்பட்டை) |
| 9 to 10 | = | ½'' (தோள்பட்டை இறக்கம்) |
| 11 | = | 2வது கட்டத்தின் மையப் புள்ளி |
| 11 to 11' | = | ½'' |
| 5' to 4' | = | ½'' |
| 4' to 5' | = | 3'' (சுருக்கம் அமைக்க) |
| 4 to 1, 5 to 12 | = | 10'' (முழு உயரத்தில் மேல் பாடி உயரம் 8'' போக மீதமுள்ள பகுதி.) |


முழு நீளத்தைக் குறித்துக் கொண்ட பின் (18'') மார்புச் சுற்றளவை (20''+ லூஸுக்காக 4''=24'') 4 சமமான கட்டங்களாகப் பிரித்துக் கொள்ளவும். மேலும் 2'' (இது பொதுவான அளவு) இடுப்பு பாகத்தின் உயரத்துக்காக குறித்துக்கொண்டு இதைத் தனிக் கட்டமாகப் படத்தில் உள்ளது போன்று வரையவும். பின் கழுத்து (2'') முன் கழுத்தை வரையவும். தோள் பட்டை அளவை (2½'') குறித்துக் கொண்டு (6—9) ½'' இறக்கம் வைத்து சாய்வாக வரைந்து கொள்ளவும். 2வது கட்டத்தின் மையப் புள்ளியுடன் (11) ½'' அதிகம் சேர்த்துக் குறித்துக்கொண்டு (11') ஆம் ஹோலை (10 to 11) வளைவாக வரையவும் பின் உயரப் பகுதியில் படத்தில் உள்ளது போன்று 2வது கட்டத்தில் மையப் புள்ளியிலிருந்து கீழாகச் சுருக்கம் அமைக்கும் பகுதியை இணைக்குமாறு ஒரு துணைக் கோட்டை வரைந்து கொள்ளவும். இந்தக் கோட்டின் ஆரம்பத்திலிருந்து 5 வரை உள்ள பகுதி வெட்ட வேண்டிய பகுதியாகும். இப்பகுதியில்தான் சுருக்கம் அமைத்துத் தைக்க வேண்டும். 4 to 1, 5 to 12ஐ இணைத்து படத்தில் உள்ளது போல் வரைந்து கொள்ளவும். பின்னர் ஒரு சிறு கத்தரியால்... என்ற கோடிட்ட பகுதியைத் தனியாக வெட்டி எடுத்துக் கொள்ளவும்.

**பேப்பர் பேட்டனைத் துணியில் வைத்து வெட்டுதல்;**

துணியைத் தேவையான அகலத்துக்கு 2ஆக மடித்து உயரத்தைக் குறித்துக்கொண்டு மீண்டும் நீளவாக்கில் 2 ஆக மடிக்கவும். எல்லா இடமும் ½'' இடம் விட்டு துணியை அமைத்து பேப்பர் பேட்டன் துணியை விட்டு விலகாதவாறு குண்டூசியால் பின் செய்து பென்சிலால் வரைந்துகொள்ளவும். கவுனின் கீழ்ப் பகுதியில் மட்டும் 1½'' அல்லது 2'' மடிப்புக்காக அவரவர் விருப்பப்படி இடம் விட்டுப் பென்சிலால் மார்க் செய்து கொள்ளவும். பின்னர் பேப்பர் பேட்டனை எடுத்துவிட்டு, முதலில் பின்பக்க பாடியையும் (பின் கழுத்தையும்) பின், முன்புறக் கழுத்து வரைந்து, முன் பக்கப் பாடியையும் வெட்டிக் கொள்ளவும். இந்த உடையின் மேற்புறமும், கீழ் பாட்டமும் சேர்ந்தாற் போல் அமைந்து வரும். இடுப்பின் பக்க வாட்டுப் பகுதிகளில் மட்டும்தான் சிறிதளவு சுருக்கம் வரும். இதை நன்கு கவனித்துத் துணியை வெட்டவும். பாடியின் பின்புறம் இடுப்பு வரை ஓபன் வெட்டிக்கொள்ளவும்.

**தைக்கும் முறை:**

ஓபனின் வலப்புறம் 1½'' பட்டியையும், இடது புறம் 2'' பட்டியையும் வைத்துத் தைக்கவும். பின்னர் வலதுபுறப் பட்டியின் இடப்புறப் பட்டியின் மீது நன்கு பதியுமாறு வைத்துப் பட்டியின் கீழ்ப்புறம் சதுரமாக (நல்ல பக்கம்) தையல் போடவும் (பட்டியின் கீழ்ப் பகுதி நாளடைவில் கிழிந்துவிடாமல் இருக்க) பின்னர் சுருக்கம் அமைக்கப் போகும் துணியை ஒரு ஊசியில் நூலைக் கோர்த்து ஒட்டுத் தையல் பொடியாகச் செய்து கொள்ளவும். (Running) அதற்கு முன்னர் மேல் பாடியின் இடுப்பில் ஓரமும் சுருக்கம் அமைக்கப் போகும் துணியின் ஓரமும் தைத்து முடித்திருக்க வேண்டும். மேல் பாடியில் உள்ள இடத்திற்கு சரியாக கீழ்த் துணியின் சுருக்கங்களைச் சரிசெய்து கெட்ட பக்கம் திருப்பி இரு துணிகளையும் இணைத்து முதலில் ஒட்டுத் தையல் தைத்துக் கொண்டு பின்னர் மிஷினால் தைக்கவும். இந்தச் சுருக்கங்கள் பிசிர் பிசிராகத் தெரியாதிருக்க, 1'' அகலமுள்ள நீண்ட துணியை இரு ஓரங்களிலும் ¼'' மடித்து இணைத்துத் தைத்த சுருக்கங்களின் மீதாகத் தைத்து, சரி பாதியாக மடித்து, பிசிர் தெரியாத வண்ணம் ¼ மடித்து மறுபுறம் மிஷினால் தைக்கவும். இரண்டு பக்கங்களிலும் இவ்வாறு தைக்கவும். கழுத்து, தோள்பட்டை ஆம்ஹோல் ஆகியவற்றை தைத்து முடிக்கவும். கீழ்ப்புறம் ப்ராக்கின் பாட்டத்தைத் துணி விட்டதற்கு ஏற்றவாறு (1 or 1½'') மடித்துத்தைக்கவும்ப்ராக்கின்முன்புறம்தொடர்ச்சியாகப் படத்தில் உள்ளது போன்று எம்ப்ராய்டரி செய்தால் பார்ப்பதற்கு மிகவும் எடுப்பாகத் தோற்றமளிக்கும்.






மங்கையர் மலர்
அவளும்
அவரும்
கீதாபென்னட்
குறுநாவல்

## அவன்

"Intelligent Man with a very good background, well educated with a good job, Reasonably good looking with a sense of humor"
-Unwed Indian Woman in U.S. Would Like to Marry.
-India Abroad, Newspaper from New York, January 28, 1983.

கோடையில் ஒரு நாள். பனிக் காலத்தில் மொட்டையாய் நின்ற மரங்களுக்கு வசந்தோத்சவம். புத்தம் புதியதாய் கிளிப் பச்சை, கரும்பச்சை என்று விதம் விதமாய் மரங்களில் இலைகள், துளிர்கள்.

நியூ ஜெர்ஸி, அமெரிக்காவில் ஒரு வீடு. வழக்கம்போல் மூன்று படுக்கை அறை, இரண்டு பாத்ரூம், ஒரு சமையலறை என்று அமெரிக்கத்தனமாக இருந்தாலும் விஸ்தாரமான பச்சைப் புல் தோட்டத்தில் போட்டிருந்த வெள்ளைத் துணிப் பந்தல் அது ஒரு இந்திய வீடு என்பதை வெளிப்படுத்தியது.




பந்தலின் கீழே நிறையத் தென்னிந்தியர்கள். ஒரு மூலையில் முருகன் படம். அதன் முன் பிரும்மாண்டமான பித்தளைக் குத்து விளக்கில் ஒளிர் விடும் சுடர். நிறைய ஊது வத்தி வாசனை. பதினொரு டாலருக்கு வெள்ளிக் காசில் லட்சுமியை விற்கும் பணக்கார சாஸ்திரிகள்— அவர் ஒரு IBM விஞ்ஞானி-ஒரு மூலையில் மைக்கில் பாடும் அமெச்சூர் வைர மூக்குத்தி. பந்தலுக்கு வெளியே நிறையக் குழந்தைகள் சூயிங்கம் மென்று கொண்டு ஓடினார்கள், அன்று கந்த சஷ்டி.

பஞ்சகச்சம் வைத்துக் கட்டியிருந்த அந்த வீட்டின் சொந்தக்காரர் — திரு ரமணி — பந்தல் வெளியே வந்தார். பைப் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டு தோட்ட நாற்காலியில் அமர்ந்தபோது....

அவசரமாக அவரிடம் ஓடிவந்தாள் அவள். டைட் பேண்டின் பின்புறம் LEE என்றது. மேலே பர்பிள் நிறத்தில் டீ ஷர்ட். கழுத்தில் மாலையாய் காமரா. அதன் மறைவில் இரண்டு வரிகள் ''ஸி யூ லேடர், ஆலேகடர்''.

''என்காருக்குப் பின்னால் ஒரு டயோடா ஸெலிகா நிற்கிறது. ஆம்ப் 232 லைஸன்ஸ் நம்பர். கொஞ்சம் தயவு செய்து மைக்கில் அறிவித்து நகர்த்தச் சொல்கிறீர்களா?''

''ஓ.கே! இதைப் பிடி'' — திரு ரமணி பைப்பை அவள் கையில் கொடுத்தார். ''ஒரு நிமிடம்'' என்று பந்தலுக்குள் போக அவள் பைப்பை என்ன செய்வது என்று யோசித்தாள்.

அன்றைய விழாவில் அவள் தான் போட்டோகிராபர். இது முடிந்து இன்னொரு அப்பாயிண்ட்மெண்ட் இருக்கிறது ''போட்டோகிராபி'' பத்திரிகை அனுப்புகிறது. சீக்கிரம் போக வேண்டும். அவள் அவசரப்பட்டாள்.

மைக் முன்னாடி அமர்ந்திருந்த வைர மூக்குத்தி அசைந்து கொடுக்க, ரமணி அறிவிக்க, அவள் நிம்மதிப் பெருமூச்சு விட, தன் காருக்கு வந்தாள். கதவைத் திறந்து பின் ஸீட்டில் காமிராவை வைக்கையில் ''ஐ ஆம் ஸாரி ஃபார் தி ட்ரபிள்'' என்று குரல் கேட்டு சட்டென்று தலையை வெளியே எடுத்தாள்.

அவனுக்கு இருபத்தைந்து வயது இருக்கும். வேஷ்டி, ஜிப்பா, லேசான குங்குமம். காலில் செருப்பு.

''மைக்கிலே அறிவிக்கும்படி நேரிட்டதுக்கு மன்னிக்கவும். எனக்கு எங்கேஜ்மெண்ட் இருக்கு.'' என்றவள் காரில் ஏறிக் கொண்டு சாவியைப் பொருத்தினாள்.

அவள் குறிப்புணர்ந்தவனாய் பின்னால் நந்தியாய் நின்ற டயோடாவுக்குப் போனான். இரண்டு நிமிடங்களில் அவளது கார் உறுமிக் கொண்டு போயே விட்டது. காரின் பின்பு ஸ்டிக்கர் 'என்னுடைய மற்றொரு கார் ஒரு ரோல்ஸ் ராய்ஸ்'' என்றது.

யார் இவள்? பார்த்தால் இந்தியத் தோற்றம் இருக்கிறது. நடவடிக்கை, பேச்சு அமெரிக்கனாய் இருக்கிறது. — அவன் திகைத்தபடி உள்ளே போனான். அவள் பூஜையின்போது நிறைய போட்டோ எடுத்துக்கொண்டிருந்ததை அவன் பார்த்திருந்தான். கிட்டத்தில் இன்னும் அழகாய்த் தான் இருக்கிறாள்.

அவன் இருப்பது கனெக்டிகட்டில். நியூயார்க், கனெக்டிகட் என்று அமெரிக்க வரைபடம் பார்த்தால் அவை பக்கத்துப் பக்கத்து

மாநிலங்கள் என்று புரியும். வேலை கிடைத்து ஒரு மாதம்தான் ஆகிறது. இது புதிய அனுபவம். கனெக்டிகட்டில் அவ்வளவு தமிழ் பேசும் இந்தியர்கள் இல்லை. அவன் இருக்குமிடத்துக்குப் பக்கத்தில் நிறைய அமெரிக்க வீடுகள்தாம். அதிகம் பேசாதவர்கள். அவனுக்கு ஹோம்சிக் நிறைய இருக்கிறது. கல்சுரல் ஷாக் இன்னும் நிறைய இருக்கிறது. இன்னும் சென்னையையும், அமெரிக்காவையும் ஒப்பிட்டுப் பார்ப்பது நிற்கவில்லை. மயிலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸில் அண்ணு, மன்னியோடு கச்சேரி போக ஆசையா யிருக்கிறது. மிட்லண்டில் ஜேம்ஸ்பாண்ட் படத்துக்கு டிக்கெட் கிடைக்காமல் திரும்பி வந்தது ஞாபகத்துக்கு வந்து, கோபமாய் வருகிறது. இங்கேயோ 007க்கு வெற்றிலை பாக்குவைத்து அழைக்கும் படியாய் கும்பலே இல்லை. என்ன இருந்தாலும் இந்தியா இந்தியாதான்!

இந்த ஹோம் சிக்கினுல்தான் சனி, ஞாயிறு தவருமல் நியூயார்க் வருகிருன். அவனுடைய ஒன்று விட்ட சித்தப்பா பெண் வானதி இருக்கிருள். அவள் கணவன் டாக்டர் சந்திரசேகரன் ஒரு பிரைவேட் கம்பெனியில் கன்ஸல்டன்ட் ஆக இருக்கிருன். அவளுடைய வற்புறுத்தலில்தான் அமெரிக்கா வந்ததே!

நியூயார்க், நியுஜெர்ஸியில் நிறைய நிறைய இந்தியர்கள். பாம்பே சினிமாவில் 'தூறல் நின்னு போச்சு' — நார்த் அமெரிக்கன் மியூஸிக் அகாடமியில் மகாராஜபுரம் சந்தானம். பாரதி சங்கத்தில் தமிழ் மகாநாடு... இப்படி கொஞ்சம் கொஞ்சம் இந்தியாவையும் பார்க்க முடிகிறது.

வானதியும் சந்திரசேகரும், அவனும் இந்த பூஜை முடிந்ததும் வீட்டுக்குப் போய் உடனடியாய் மறுபடியும் கிளம்ப வேண்டியிருந்தது. வானதியின் சிநேகிதியின் பெண்ணுக்கு அரங்கேற்றம். பத்மினியின் நாட்டியப் பள்ளியில் கற்றுக் கொண்டவள். நேராய் வந்து கூப்பிட்டுவிட்டுப் போயிருக்கிருர்கள்.

வாசலில் டபிள் பார்க் பண்ணி காரை நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்தார்கள். மிஸஸ் மோகன் அரக்கப் பரக்க ஓடிக் கொண்டே 'ஹாய் வானதி' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள். பெரிய கொண்டை, செக்கச் சிவக்க ரத்த நிற உதடுகள், ஸ்லீவ்லெஸ் —ஏனோ அது அவளுக்குப் பொருத்தமாயில்லை போலத் தோன்றியது அவனுக்கு.

நிறைய விஷயங்கள் இங்கே செயற்கையாகத்தான் இருப்பது போல் தோன்றுகிறது. இதோ வெள்ளித் தட்டுக்களில் கல்கண்டும் சந்தனமும் கொடுத்துக் கொண்டு தாவணி நழுவியது தெரியாமல் நின்று கொண்டிருக்கு!! இந்திய இளசுகள் காதில் வாக்மேனை வைத்துக்கொண்டு டிஸ்கோசங்கீதத்துக்கு இடுப்பை லேசாக அசைப்பது! ஸில்க் ஜிப்பா போட்டுக் கொண்டு அந்தக் கல்கண்டில் ஒன்றை சந்தனத்தைத் தொட்ட கையோடு வாயில் போட்டு முகத்தைச் சுளிக்கும் அமெரிக்கன்!

ஆங்கிலத்திலேயே பேசிக் கொள்ளும் இரண்டு அம்மாமிகள்.... சுற்று முற்றும் பார்த்தான்.

அப்போதுதான் அவளும் கண்களில் பட்டாள். வீட்டிற்குப் போய் உடையை மாற்றிக்கொண்டிருக்க வேண்டும். கருப்பும், தங்க நிறமும் கலந்த கவுன், இடுப்பில் தங்க நிற பெல்ட் அவளைக் கொடி இடையாள் என்பதை எடுத்துக் காட்டியது.


''வானதி... அந்தப்போட்டோகிராபரைப் பத்திச் சொன்னேனே! அங்கே நிற்கிருள். அறிமுகப்படுத்தேன்'' — என்று மெள்ள வானதியின் காதுகளில் சொன்னுன்.

கால் ஆணிகளை அறுவைச் சிகிச்சையின்றி, நிரந்தரமாக நீக்க ஒரு எளிய வழி:

அம்மாம்பச்சரிசி செடியின் ஒவ்வொரு இலையாகக் கிள்ளி அதில் வரும் பாலை ஆணிகளின் மேல் கெட்டியாகத் தடவி வைக்கவும். பாதத்தை நன்ருகச் சுத்தம் செய்து துடைத்துவிட்டு, காலையிலும் மாலையிலும் (படுக்கப்போகுமுன்) இவ்வாறு மூன்று நாள் செய்ய—ஆணி ரப்பர் போல மிருதுவாகிவிடும். பிறகு வராது.

அம்மாம்பச்சரிசிச் செடி தரையோடு படரும் சிறு பூண்டுச் செடி. கிணற்றடி, வரப்புக்கள் வெட்ட வெளிகளில்முளைத்துக் கிடக்கும் இலை பொன்னுங்கண்ணிக் கீரை மாதிரி நெருக்கமாக அரும்புகள் சேர்ந்து கம்மல் போல காய்கள் ஒற்றைக் காசு அளவில் இருக்கும். எங்கு கிள்ளினுலும் பால் வரும்.

எஸ். பட்டம்மாள்.



அந்தப் பெண் மும்முரமாய் இன்னொரு பெண்ணுடன்உரையாடிக்கொண்டிருந்தாள். அத்தனை தாவணி, புடவை நடுவே அவள் மட்டும் அமெரிக்க டிரஸ். அதுவே அவள் தனித் தன்மையைக் காட்டுகிறதா? அல்லது இந்தியன் என்று சொல்லிக் கொள்ள வெட்கமா?

வானதியும் சந்திரசேகரனும் முன்னே போக அவன் பின்தொடர்ந்தான்.

வானதி அவள் பார்வையைக் கவர்ந்த கணம், ''ஹாய் சூ (Sue) ஹௌ ஆர் யூ?''

என்றாள். ''ஓ ஆம் ஃபைன். தாங்க்யூ'' என்றவள் தான் பேசிக் கொண்டிருந்த பெண்ணிடம், 'எக்ஸ்க்யூஸ் மி' என்றபடி இவர்களிடம் திரும்பினாள்.

''இவன் என் கஸின் தியாகராஜன். தியாகு என்று கூப்பிடுவோம். திஸ் இஸ் சுஜாதா. நாங்கள் சூஸனின் சுருக்கம் போல் Sue என்று அழைப்போம்.''—சுஜாதா அவனைப் பார்த்து லேசாய் முறுவலித்தாள். சிரிக்கும்போது கண்களும் சேர்ந்து சிரித்தன.

''உங்களை மத்தியானம் பார்த்தேன் இல்லையா. மறுபடி பார்ப்பதில் மிக்க சந்தோஷம்'' என்றாள். வரிசையாய் அரிசிப் பற்கள். சிறிய வாய், மெல்லிய உதடுகள். வெளியில் தெரியாமல் மேக்கப் போட்டுக் கொள்வது எப்படி என்று மிஸஸ் மோகன் இவளிடம் கற்றுக் கொள்ளலாம்.

''இன்னிக்கு ஃபோட்டோகிராபி மாகஸினிலிருந்து இன்டர்வ்யூ பண்ண வந்திருந்தாங்க. நேரமாச்சுன்னு அதே டிரஸ்ஸோட வந்துட்டேன். கையிலயாவது ஒரு புடவை கொண்டுவந்திருக்கலாமோ என்னவோ!'' என்றாள்.

ஏதோ ஓர் உணர்வு தூண்ட ''இந்த டிரஸ் உனக்கு ரொம்ப அழகாய் இருக்கிறது'' என்றான் தியாகு. சொன்ன கணமே அதிகமாகப் பேசிவிட்டோமோ என்று மலைத்தான்.

அவள் அழகாய் ''தாங்க்யூ'' என்றாள்

அவர்கள் எல்லோரும் ஒன்றாய் உள்ளே போனார்கள். மிக இயல்பாய் சுஜாதா அவனுக்கு அடுத்த இருக்கையில் அமர்ந்தாள். சிக்கனமான 'ஷார்லி' மென்மையான வாசனையை அவன் பக்கம் அனுப்பியது. அத்துடன்



அவள் ஏதாவது கேட்கத் திரும்பும்போது நிறைய அமெரிக்க வாசனே.

''எனக்கு டான்ஸ் பற்றி ஒன்றும் தெரியாது. இந்தப் பெண்ணின் பெற்ருேர் என் கஸினேட பிரண்ட்ஸுக்குத் தெரிந்தவர்களாம். போயிட்டுத்தான் வரணும்னு அவ அம்மா எழுதியிருந்தாள்.''-சுஜாதா நிறையப் பேசினுள்.

தியாகுவுக்கு இதெல்லாம் புதிது. பேசக் கூச்சப் பட்டுக் கொண்டு அதே சமயத்தில் சந்தர்ப்பம் கிடைத்தால் இளிக்கும் பெண்களைப் பார்த்திருக்கிருன். சென்னே கச்சேரி



களில் தெரிந்த அறுபது வயது மாமிகள் கூட இரண்டு நாற்காலிகள் தள்ளி உட்கார்ந்து கொண்டுதான் ''என்னடாப்பா தியாகு! அம்மா சௌக்கியமா?'' என்று கேட்பார்கள். அறிமுகமான உடனேயே இப்படிக் கூச்ச மில்லாமல் பேச முடியுமா? நான் கல்யாணம் ஆகாத இளைஞன். அவளும் ஒரு இள யுவதி. ஆனாலும் இவளைத் தப்பாக நினைக்க முடியவில்லை. இப்படி நடந்து கொள்வது இவளுக்கு இயற்கையாகவே இருக்கிறது.

இண்டர்மிஷன் வந்தது. வெளியே சாமோசாவும், காபியும் குலாப்ஜாமுனும் வழங்கப்பட்டன. சுஜாதா தன்னைப் பற்றிய விவரங்களைச் சாப்பிட்டுக் கொண்டே சொன்னாள்.

அவள் பெற்றோர் விங்கான்ஸினில் இருந்தார்கள். அவளுக்குப் பத்து வயதாகும் போது கார் ஆக்ஸிடெண்டில் இறந்தார்கள். அவள் சூனி என்கிற (State University of Newyork) பல்கலைக் கழகத்தில் வேதாந்தம் பி.ஏ. படிக்கிறாள். ஆனால்

> **புளியும் மருந்தாகும்**
>
> புளியைக் குறைந்த அளவு நீரில் கரைத்து, அப்படியேயோ அல்லதுசிறிது உப்பு சேர்த்து அருந்தினாலோ, அதுவே சிறந்த மலமிளக்கியாகிறது!
>
> —வி. உஷா

வாழ்க்கையின் ஒரே நோக்கம் தலைசிறந்த காமிரா உமனாக வரவேண்டும் என்பது. பிறந்தது மட்டும்தான் இந்தியப் பெற்றோருக்கு. நினைவு தெரிந்த நாளாய் அமெரிக்காதான். பத்து வயதுக்கு முன்னால் இந்தியாவுக்கு ஒரே ஒரு முறை போயிருக்கிறாள்.

அவள் சொல்லும்போது கண்கள் ஓரிடத்தில் நிலையில்லாமல் தவிப்பதைப் பார்த்தான். அவளது ஆங்கிலத்தின் அமெரிக்க உச்சரிப்பைக் கண்டு வியந்தான். அவ்வப்போது பிளாரஸண்ட் ஒளி விளக்குகளின் உபயத்தில் ஒளிர்ந்த அவளது கூந்தலின் செம்பட்டை நுனியை ரசித்தான். பேப்பர் பிளேட்டிலிருந்து பிளாஸ்டிக் ஃபோர்க்கினால் சாமோஸாவை வெட்டி, வாயைத் திறக்காமல் அதை மெல்லுவதைப் பாராட்டிக் கொண்டான்.

''நான் தனியா வீட்டுக்குப் போகணும். ஸீ யூ லேட்டர்'' — என்றாள்.

அவன் ''ஓ.கே. ஆலகேட்டர்'' — என்றான். அவள் சிக்கனமாய்ச் சிரித்தபடி வெளியேறிய போது அவள் சுகமாய் வீடு போய்ச் சேர வேண்டுமே என்று அநாவசியமாய்க் கவலைப் பட்டான்.

அன்று இரவு படுக்கப் போகு முன், இருட்டில் தனியாய் லிவிங் ரூமில் அமர்ந்த போது தியாகுவின் நினைப்பெல்லாம் சுஜாதா மேலேயே இருந்தது. கருப்பு டிரஸ்ஸில் தெரிந்த அவளது நெளிவு சுளிவுகள். LEE பேண்டு இறுக்கிப் பிடித்த பின் பகுதி. ஏன் இப்படிப் படுத்துகிறாள்? காதலா? ஊருக்குப் போய் அம்மாவைத் திருப்திப் படுத்த அவள் சொல்லும் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள நினைத்தது என்னவாயிற்று? அம்மா இல்லாமல், மன்னி அண்ணன் இல்லாமல் இங்கேயே அவளைத் திருமணம் செய்து கொள்ள முடியுமா? மனசு காத்திருக்க நினைத்தாலும் உடம்பு இருக்காது போலிருக்கிறதே! ''தனிமை'' என்கிற இந்த நோய்க்கு அவள்தான் மருந்தோ!

அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. அதே சமயத்தில் அதிகம் யோசிக்காமல் அவளைத் திருமணம் செய்து கொண்டால் ஏற்படும் விளைவுகளை எண்ணிப் பார்க்க அவன் முயலவில்லை.

மறுநாள் காலையில் வானதி பிரேக்ஃபாஸ்டுக்குத் தோசை வார்த்துக் கொண்டிருக்கும்போது தியாகு சமையல் அறைக்கு வந்தான்.

''திரும்ப கனெக்டிகட்டுக்குப் போகணுமேன்னு இருக்கு. தினம் கார்த்தால கோல்ட் சீரியல், சாயந்திரம் தயிர் சாதம். நாக்கு செத்துப் போச்சு.''

''பேசாம அப்ப ஒரு கல்யாணம் பண்ணிக்கோ'' — வானதி அப்படி ஒன்றும் முட்டாள் அல்ல. அவன் மனத்தைப் படிக்கத் தெரிந்தவள்தான். அவன் அவளையே உற்றுப் பார்த்தான்.

''அப்படி சந்தேகமாப் பார்க்காதே. அந்த பொண்ணு கூ கூச்சப்படாமே உன்னோட சிரிச்சுப் பேசினதாலே உடனே அந்தப் பெண்ணுக்கு உன் மேலே காதல்னு முடிவு பண்ணிடாதே. அது முதல்லே டேடிங் பண்ணணும்னு சொல்லும்!''

''அப்ப நீ வேணு ஒரு நாள் அவளை இங்கே கூப்பிடேன். ஏதாவது ஸப்பர் அல்லது லஞ்ச் மாதிரி!''

''கூப்பிட்டாச்சு! உனக்கு ஸர்ப்ரைஸிங்கா இருக்கட்டும்னு பார்த்தேன். அடுத்த சனிக்கிழமை மத்தியானம் லஞ்ச். நீ வெள்ளிக் கிழமையே வந்துடு.''

சுஜாதா ஏன் 'ஸீயூ லேட்டர்' என்றாள் என்று அவனுக்கு இப்போது புரிந்தது. அந்தக் கணமே அடுத்த சனிக் கிழமைக்குக் காத்திருந்தான்.

**ம**று வாரம் அவள் வரும்போது, அவன் தான் கதவைத் திறந்தான். வோக் (VOGUE) பத்திரிகையிலிருந்து இறங்கி வந்தாற்போல்

தோற்றம். ஆலிவ் பச்சையில் விவரிக்க முடியாத வகையில் புஸ் புஸ்ஸென்று ஸ்கர்ட். அதே நிற புஸ் புஸ் டாப். ஸ்டாக்கிங்ஸில் கூட ஆலிவ் பச்சை வேலைப்பாடு.

லஞ்சுக்கு வானதி சப்பாத்தியும் குருமாவும் புலாவும் பண்ணி யிருந்தாள். சாப்பிட்ட பின் வானதியும் சந்திரசேகரனும் நாஸுக்காக நகர்ந்து விட்டார்கள். தியாகுவும் சுஜாதாவும் தனியே விடப்பட்டார்கள்.

''காபி வேணுமா'' என்று கேட்டவளுக்கு அவன் சரியென்று தலையசைத்தான். பெர்குலேட்டரில் சுட்டுக் கொண்டிருந்த காபியை இரண்டு கப்புகளில் விட்டுக் கொணர்ந்து மேஜை மேல் வைத்து விட்டு அவன் எதிரே அமர்ந்தாள்.

இதுதான் நல்ல சமயம்! கேட்டுவிடலாமா அவன் பாலையும், சர்க்கரையையும் தன் காபியில் சேர்த்துக் கொண்டான்.

''உனக்கு நியூயார்க்கில் தனியா இருக்க பயமாக இல்லையா?'' என்றான்.

''பழகி விட்டது. சின்ன வயசிலிருந்தே தனியாய் இருக்கவும் பழகி விட்டது. இந்த நகரத்தின் பரபரப்பு சுறுசுறுப்பு எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது.''

''அதுக்காக லைஃப் லாங் தனியா இருக்க நினைத்திருக்கிறாயா?''

அவள் அவன் கேள்வியைப் புரிந்துகொண்டாள். ''ஐ ஆம் இன்ட்ரஸ்ட்டட் இன் மேரேஜ். ஆனா சரியா ஒருத்தரும் கிடைக்கலை. மிஸ்டர் ரைட்டுக்காகக் காத்திருக்கிறேன்'' என்றாள்.

''மிஸ்டர் ரைட் இடத்துக்கு நான் அப்ளை பண்ணவா?'' அவன் கேட்டே விட்டான்.

அவள் சிறிது நேரம் மௌனமானாள். பின் மெல்லிய குரலில் சொன்னாள்.

''என்னை கைட் பண்ணப் பெரியவர்கள் யாரும் இல்லை. நான் மிகவும் வித்தியாசமானவள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். எனக்கு என்று நிறைய ஆசைகள். என் வாழ்க்கையில் என் குறிக்கோள்களுக்கு இடையே கணவன், குடும்பத்துக்கே இடம் இல்லையோ என்று கூட சில சமயம் எனக்குத் தோன்றுகிறது.''

தியாகு நிறைய ''கரீயர் விமன்'' பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறான். இவளும் ஒருத்தி போலும்!

அவன் மெள்ளத் தன் கைகளுக்குள் அவள் கைகளை அடக்கினான்.

''உன்னைத் திருமணம் செய்து கொள்ள நான் மிக விரும்புகிறேன். சரி என்று சொல்வாயா?'' — அவளது மென்மையான விரல்களைத் தன் அதரங்களில் வைத்தான். அவள் அவனைத் தடுக்கவில்லை. எழுந்து அவன் அருகில் வந்து நின்றாள். இன்னும் அவர்கள் கைகள் ஒன்றாகவே இருந்தன.

''என்னைத் திருமணம் செய்து கொள்வது பற்றி நீங்கள் நிறைய யோசிக்க வேண்டும். நான் இந்தியப் பெற்றோர்களுக்குப் பிறந்



11 புள்ளி 6ல் நிறுத்தம் (இடைப் புள்ளி)
திருமதி மிதிலா தேவதாஸ்,

தாலும் அமெரிக்கன்தான் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.''

அவள் மேலே பேசுவதற்குள் வானதியின் கனைப்புக் கேட்டது. அவன் தன் கையைச் சட்டென்று விலக்கிக் கொண்டான். இருவர் முகத்தையும் கைகளையும் பார்த்த வானதி புரிந்து கொண்டாள்.

''கன்கிராஜுலேஷன்ஸ்.''

அப்போதே, அன்றைக்கே தியாகு சென்னையில் அம்மாவுக்கு இண்டர்நேஷனல் கால் ஒன்று போட்டுத் தொலை பேசியில் பேசினான். அண்ணா, மன்னியோடு ஓரிரு நிமிடங்கள்.

''அம்மாவும் அண்ணனும் சரின்னுட்டா. நான் சுஜாதாவை அழைத்துக் கொண்டு வெளியே போகிறேன்.'' என்றான்.

மாலை டின்னருக்கு இருவரும் நாற்பத்திரண்டாவது தெருவில் இருக்கும் அமெரிக்க உச்சரிப்பில் மேட்ரஸ் உட்லண்ட்ஸுக்குப் போனார்கள்.

அதற்கு முன் ஒரு ஜுவல்லரி கடையில் இறங்கி அவளுக்கு ஒரு மோதிரம் வாங்கினான்.

உட்லண்ட்ஸின் இருட்டு மூலையில் அமர்ந்திருக்கும்போது, ஒளிவிட்ட தன் மோதிரத்தை சுஜாதா பார்த்துக் கொண்டாள். இன்று மத்தியானம் கூட அவள் இதைப் பற்றி நினைக்கவில்லை, இப்போது அவள்

''எங்கேஜ்டு''. எல்லாம் அவசரமாக நடக்கிறதோ?

அவன் இரண்டு மசாலா தோசைக்கு ஆர்டர் கொடுத்தான்.

''நம் எங்கேஜ்மெண்டை ஒட்டி ஷாம்பைன் குடித்து விழா எடுக்கலாமா?'' என்று அவள் கேட்டபோது, ''நான் குடிப்பதில்லை'' என்றான் அவன்.

''அப்போ, பார் டெண்டர்! ரெண்டு செவன் அப்'' – என்று அவளாகவே ஆர்டர் பண்ணி, அது வந்த போது டம்ளரை உயர்த்தி 'சியர்ஸ்' சொல்லி மோதிக் கொண்டார்கள்.

மசாலாவில் இருந்த பச்சை மிளகாயைக் கடித்துவிட்டு அவள் 'உஸ் உஸ்' என்றதைப் பார்த்து அவன் சிரித்தான்.



அதன் பின் அவர்கள் கலர் கலராய் வெளியில் எழுத்துக்கள் ஓடின ஒரு டிஸ்கோ கிளப்புக்குப் போனார்கள். ஏகமாய் கண்ணாடி டம்ளர்களின் ஒலி. பச்சை, நீலம், அடிக்க வரும் சிவப்பு என்று விளக்குகள் மாற்றி மாற்றி வட்டம் போட அந்த ஒளி வட்டங்களில் இடுப்பையும், கையையும் ஆட்டி டிரம்ஸ்கள் கொடுத்த லயத்திற்கு ஏற்ற மாதிரி நிறைய ஜோடிகள் ஆடினார்கள்.

''எனக்கு ஒரு பார்ட்னர் வேண்டும்'' என்று அவனையும் இழுத்துக் கொண்டு ஒளி வட்டத்தில் சிக்கினாள். அவன் தடுக்கி அவள் மேல் விழ இருவரும் ஒரு நிமிடம் ஆடாது அசங்காது அணைப்பில் மயங்கி நின்றார்கள்.

அந்தக் கிளப்பில் நிறைய இளைஞர்கள், யுவதிகள் ''ஹாய்'' என்று அவளை விசாரித்தார்கள். அவள் பெருமையாக ''என் ஃபியான்ஸே'' என்று அவனை நிறைய ஜான்களுக்கும் ஜோக்களுக்கும் அறிமுகப்படுத்தினாள்.

அதன் பின் அவளை அவன் டாமடோரியில் கொண்டு விட்டான்.

''வுட் யூ லைக் டு கம் இன்'' – அந்தஹாஸ்டல் அறை வாசலில் அந்த அர்த்த ராத்திரிக்கும் நிறைய மாணவ மாணவிகள் போய்க் கொண்டிருந்தார்கள்.

''வேண்டாம்!'' – அவனுக்குத் தன்னிடமே நம்பிக்கை இல்லை. திருமணம் ஆகும் வரை இவளை ஒன்றும் செய்யக் கூடாது. இந்தத் தனிமை, அவளது நெருக்கம், அவன் ஜாக்கிரதையாகத்தான் இருக்க வேண்டும்.

'குட்நைட்' சொல்லிவிட்டு காரில் திரும்பும்போது எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு விரைவில் திருமண ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று முடிவு செய்து கொண்டான்.

### அவள்

திருமணம் முடிந்து கனெக்டிகட்டுக்கு வந்து விளையாட்டுப் போல இரண்டு மாதங்களாகின்றன. அவள் படிப்பு முடிந்து கிராஜுவேஷன் முடிந்த அவசரத்தில் கல்யாணமும் முடிந்து விட்டது. பிட்ஸ்பர்க் 'திருப்பதி' கோயிலுக்குப் போய் ஐயர் திருமணம் பண்ணி வைக்க, அவள் தாலி கட்டிக் கொண்டாள். அவளுக்கு என்று ஒரு தூரத்து கஸின் தான் வந்தாள். எங்கும் இந்தியத் தலைகள்! திடீரென்று அவளுக்குக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போலிருந்தது.

சர்ச்சில் வெள்ளைக் கவுன் போட்டுக் கொண்டு பின்னால் தோழிப் பெண்கள்நடக்க தன் திருமணம் நடக்கும் என்று நினைத்திருந்தவளுக்கு ஒரு நிமிடம் தன்னிடமே ஆச்சரியம் ஏற்பட்டது. 'கல்யாணத்தில் வெள்ளை நிற உடையா?' என்று கேட்ட தியாகுவிடம் எப்படிப் பணிந்து போனேன்?

ரிஸப்ஷன் வானதி வீட்டில். வந்தவர்கள் சுஜாதாவோட ஏகப்பட்ட சிநேகிதிகள். ஒருசில சிநேகிதர்கள். தியாகு ஒன்றைக் கவனித்தான். கேட்டும் விட்டான். ''உனக்கு இந்திய நண்பர்களே கிடையாதா?''

சுஜாதா சிரித்தாள். ''இப்போ என்னோட நெருங்கிய நண்பர் ஒரு இந்தியன்தான்.''

அன்றிரவே கனெக்டிகட் திரும்பினார்கள்.

இந்த இரண்டு மாதங்களில் இருவருக்கும் சண்டை அதிகம் வரவில்லை. அவன் மத்தியான வேளையில் வேலையில் இருக்கும்போது அவள் வீட்டைச் சுத்தம் செய்வாள். போட்டோக்களை டெவலப் செய்வாள். நியூயார்க்கின் பரபரப்புக்கு மாறாய் அதற்கு இத்தனை அருகாமையில் இருக்கும் கனெக்டிகட்டின் அமைதியே அவளுக்குப் பிடிக்க நாளாகும் போல் இருந்தது.

முதல் நாள் சமையல் ஒரு சாதம் –பாதி வெந்ததும் வேகாததுமாய் ஆனது – ஆவி

யில் வைக்கப்பட்ட பீன்ஸ், அவ்வளவுதான். அவளுக்குத் தெரிந்த இந்தியச் சாப்பாடு. அவன் ஒன்றும் சொல்லாமல் சாப்பிட்டுவிட்டான். ஆனால் வரிசையாக மூன்று நாட்கள் அவள் நாக்கும் செத்து விட்டது. அன்று அவள் தனக்கு ஹாம்பர்கர் செய்துகொண்டும் அவனுக்குச் சாதமும் கீரையும் பண்ணி வைத்தாள்.

அவர்கள் சாப்பிட உட்கார்ந்தார்கள்.

''ஐய்யய்யே! இது என்ன? உன் மாமிசம் பண்ணின பாத்திரத்தில் என் கீரையையும் பண்ணி விட்டாயா?'' — அவன் அருவருப்பாய் அவள் தட்டைப் பார்த்தான்.

''எனக்கு வெறும் தயிர் போதும்''—அவன் கீரையைத் தொடாமலே சாப்பிட்டுவிட்டான்.

''நான் அந்தப் பாத்திரத்தை அலம்பி விட்டுத்தானே கீரை செய்தேன்'' — அவளுக்கு அவன் நடவடிக்கை புரியவில்லை.

''எனக்கு மாமிசம் சாப்பிட்டுப் பழக்கமாகி விட்டது. அதனால் நான் தனியாய் ஒரு பாத்திரத்தில் சமைத்துக் கொள்கிறேன். பரவாயில்லையா?'' — அவள் கேட்டபோது, 'ஆமாம். எனக்குப் பிடிக்கவில்லை. மாமிசத்தைக் கண்ணால் பார்க்கவும் அருவருக்கும் குடும்பத்திலிருந்து வந்தவன் நான்' என்று சொல்ல அவனால் முடியவில்லை. அதற்கு அவனது நாகரிகம் இடம் கொடுக்கவில்லை. அதுதான் பின்னால் அவர்கள் முதல் சண்டைக்குக் காரணமாயிற்று.

தினம் ஆவியில் வைத்த காய்கறிகளைச் சாப்பிட்டு விட்டு அவன் நல்ல இந்தியச் சாப்பாட்டுக்கு ஏங்க ஆரம்பித்தான். ஒரு வீக் எண்ட் வானதி வீட்டுக்குப் போனபோது 'அப்பாடி! இந்த சாம்பார் சாதம் சாப்பிட்டு எத்தனை நாட்கள் ஆகிவிட்டன?''—என்று வாய் தவறிச் சொல்லி விட்டான். சுஜாதாவிற்குப் பாவமாகி விட்டது. ''ப்ளீஸ், எனக்கு சாம்பார் கறி இது மாதிரி பண்ண ரெஸிபி தாங்களேன்'' என்று எல்லாவற்றையும் எழுதிக் கொண்டாள். புளிக்கு டாமரிண்ட், சீரகத்துக்கு க்யூமின் என்று ஒருவாறு தெரிந்து கொண்டாகி விட்டது.

அன்றே கனெக்டிகட் போகும் வழியில் ஒரு லெக்ஸிங்டன் அவென்யூ இந்திய கடையில் அவற்றையும், கொஞ்சம் இன்ஸ்டண்ட் இட்லி, புளியோதரை பொடிகள், ஊறுகாய் வாங்கி அடுக்கிக் கொண்டார்கள்.

அவள் ஒருவாறு சாம்பார் பண்ணக் கற்றுக்கொண்டாள். அவளுக்குப் புளியையும் சாம்பார் பொடியையும் போட்டுப் பண்ணும் ஒரே சமையல் தினம் பிடிக்கவில்லை. தனக்கு என்று ஸ்டேக் என்றும் சிக்கன் என்றும் தனிச் சமையல் பண்ணிக் கொண்டாள்.

அவன் மாலை ஆபீஸிலிருந்து வந்ததும் சிறிது நேரம் பேப்பர் படிப்பான். டி.வி.யில் நியூஸ்பார்த்துக்கொண்டே சாப்பிடுவார்கள். அதன் பின் அவள் பாத்திரம் தேய்த்து சமையல் அறையைச் சுத்தம் செய்து விட்டு அவனுக்கு மறு நாள் உடையை அயர்ன் பண்ணி வைப்பாள். எப்பொழுதாவது அவர்கள் வீட்டுப் பக்கத்தில் வரும் தொண்ணூற்றொன்பது ஸெண்ட் இரண்டாந்தர தியேட்டரில் நாள் கடந்து வரும் படம் ஏதாவது பார்க்கப் போவார்கள்.

அவளுக்குத் திடீரென்று மத்தியான வேளைகளில் சந்தேகம் வரும். இப்படிச் சமைத்துப் போட்டு, இவன் துணி இஸ்திரி பண்ணி, எப்போதாவது நியூயார்க் போவதுதான் தன் வாழ்க்கையாகி விட்டதே! தனியாகவே

**இப்படி இணைக்கும் பாகம் கெடுவதால் பல விளைவுகள் ஏற்படக்கூடும். அப்பாகத்திற்கு மேல் பொருத்தப்பட்டுள்ள நைலான் குமிழின் இரு பாகங்களிலும் கீறல் ஏற்படலாம். இக்கீறலினால் தண்ணீர் கசிந்து, அரைக்கும் பாத்திரத்திற்குள்ளும், மோட்டார் எனப்படும் இயக்கும் எந்திரத்தினுள்ளும் செல்வதால், மோட்டார்காயில் எரிந்து விடும்.**

வாழ்ந்து பழகிய அவளுக்கு இப்போது கையைக் கட்டி விட்டாற் போலிருந்தது. இப்படியே தன்னால் காலம் கழிக்க இயலாது என்பதும் அவளுக்கு நன்றாய்ப் புரிந்தது.

மாதம் முதலில் இருவரும் அமர்ந்து பட்ஜெட் போடுவார்கள். மூன்றாம் மாதம் தான் அந்தப் பெரிய மனஸ்தாபம் வந்தது.

அவள் ''சாப்பாட்டுக்குப் போன மாசம் போட்ட பட்ஜெட்டை விட ஐம்பது டாலர் அதிகமாகி விட்டது'' — என்றபோது அவன் திடுக்கிட்டுப் போனான்.

''எங்கே கொண்டா பார்ப்போம்''—அவன் பட்ஜெட்டைப் பார்த்தான். பின் சற்றும் யோசிக்காமல்,

''நீ மீட் சாப்பிடறதை நிறுத்தினால் என் சம்பாத்தியத்தில் பாதி, சாப்பாட்டுக்குப் போறதைத் தடுக்கலாம்.''

சுஜாதா ஒரு நிமிஷம் திகைத்துப்போனாள். பின் பேசாமல் அந்த இடத்தை விட்டு எழுந்து போனாள்.

அவன் அப்படிச் சொல்லி யிருக்கக் கூடாதோ? அவள் மாமிசம் சாப்பிடுவது பிடிக்கவில்லை என்று முதலிலேயே சொல்லி யிருந்தால் அவள் நிறுத்தியிருப்பாளோ என்னவோ? மனதிற்குள்ளேயே தன் எதிர்ப்பை வைத்துக் கொண்டிருந்ததால் வார்த்தைகள் நினைத்ததற்கு மாறாய், ஏடாகூடமாக வந்து அவள் கோபத்தைக் கிளப்பி விட்டன.

தன் சாப்பாட்டு விஷயத்தில் அவன் எப்படித் தலையிடலாம்? அவனை அரிசிச் சாப்பாடு இல்லாமல் பத்து நாள் இரு என்றால் இருப்பானா?

அவன் சுஜாதாவைத் தேடிக் கொண்டு போனபோது அவள் படுக்கையில் மல்லாக்கப் படுத்துக் கொண்டு விட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அழுகிறாளா? இல்லை. அவள் முகம் சிவந்து இருந்தது. அவ்வளவு சீக்கிரம் அழுபவள் இல்லை.

''உங்க சம்பாத்தியத்திலே என் சாப்பாட்டுச் செலவுக்கு இத்தனை நாள் கொடுத்ததற்கு நன்றி. நான் நாளையிலிருந்து வேலைக்கு மும்முரமாத் தேடப் போறேன். ஏதாவது கிடைக்காமப் போகாது. அட்லீஸ்ட் தினம் எனக்கு வேண்டியதைசாப்பிடவாவதுகிடைக்கும். அப்புறம் என் துணி மணி, வீட்டு வாடகையில் பாதி இதற்கெல்லாம் நான் எப்படியாவது சம்பாதித்துக் கொடுத்து விடுகிறேன்'' – அவள் வார்த்தைகளில் கசப்பு இருந்தது.

''நான் ஸாரின்னு சொல்லிட்டேனே! நான் அப்படி அர்த்தம் பண்ணலை.''

''மனசிலே இருக்கிறதுதான் வார்த்தையா வெளிவரும்.'' – அவள் சொல்லிவிட்டுத் திரும்பிப் படுத்தாள்.

அன்று முழுவதும் இருவரும் பேசிக்கொள்ள வில்லை. மறுநாள் அவன் ஏதும் பேசாமல் அவள் கொடுத்த டோஸ்டைச் சாப்பிட்டு விட்டு வேலைக்குப் போனான்.

சாயங்காலம் அவன் வரும்போது வீடு பூட்டியிருந்தது. வரும் வழியில் பூக்கடையில் காரை நிறுத்தி விலை அதிகம் கொடுத்து வாங்கிய பூக்கள் எல்லாம் குப்பைக் கூடைக்குப் போகத்தானா? தான் பணிந்து போக எண்ணிய நேரத்தில் பூட்டியிருந்த கதவு அவன் கோபத்தை இன்னும் அதிகமாக்கியது.

மறுபடியும் அப்படியே காரில் ஏறிக் கொண்டு வீட்டு அருகே இருந்த இத்தாலியன் ரெஸ்டாரண்டுக்கு வந்தான். நிறையப் பேர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவன் ஒரு பிட்ஸா – சின்ன ஸைஸுக்கு ஆர்டர் கொடுத்துவிட்டு ஒரு மூலையில் அமர்ந்தான். கல்யாணமான மூன்றும் மாதமே இப்படித் தனியாய் உட்கார்ந்து சாப்பிட வேண்டி யிருக்கிறதே என்று சுய பச்சாதாபம் வந்தது. நேற்று மன்னிப்பு கேட்டபோதும் திரும்பிப் படுத்துக் கொண்டாளே, என்ன திமிர்! பூ என்ன வேண்டிக் கிடக்கிறது? ஒருவேளை அம்மா சொன்ன பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்க வேண்டுமோ? தமிழ் பேசத் தெரியாத, இந்திய கலாசாரம் அறியாத பெண்ணின் அழகில் மட்டும் மயங்கி அகலக் கால் வைத்து விட்டேனோ?

அவன் வீடு திரும்பியபோது அவள் வந்திருந்தாள் என்பது கண்ணாடி ஜன்னல் வழியாய்த் தெரிந்த விளக்கொளியில் தெரிந்தது. கார் சத்தம் கேட்டுத் தன்னை வரவேற்க வருவாள் என்று எதிர்பார்த்து இன்னும் ஏமாந்தான்.

சுஜாதாவுக்கும் கோபம் இருக்கும் என்று அவன் ஏன் நினைக்கவில்லை? அவள் வீடு திரும்பியபோது பூட்டியிருந்த வீடும், காலையில் போட்டது போட்டபடியே எல்லாம் கிடந்ததும், ஒரு மாலையில் அவன் சமைத்து வைக்கக் கூடாதா என்று அவள் நினைத்துக் கொண்டதும் வார்த்தைகளில் வெளிவரவில்லை.

''நான் சாப்பிட்டாயிற்று'' என்றுமட்டும் அவன் சொல்லிவிட்டு டி. வி. பார்க்கப் போனபோது, 'நான் சாப்பிட்டேனா இல்லையா என்று கவலை இல்லை பார்' – என்று அவளுக்கு இயல்பான கோபம் வந்தது.

அவள் சாப்பாட்டை முடித்துக் கொண்டு வேலைகளை முடித்துக் கொண்டு வந்தபோது மணி ஒன்பது. அங்கே நிலவிய புழுக்கம் இருவருக்குமே பிடிக்கவில்லை. டீ. வி.யைத் தானாகவே நிறுத்திவிட்டு அவன் அருகில் வந்து அமர்ந்தாள். அவன் ஒன்றும் பேசவில்லை. சிறிது நேர மௌனத்துக்குப் பின் அவள்தான் முதலில் பேசினாள்.

''நான் நிறைய இன்டர்வ்யூவுக்குப் போய் விட்டு வந்தேன். ஒரு புரோக்கர்ஸ் கம்பெனியிலே கிடைக்கும்போல இருக்கு. நாளைக்கு மறுபடியும் வரச் சொல்லி இருக்கிறார்கள்.''





Visit Temples
ALWAYS
WITH A PACKET OF
BKR
PERFUMERY
Scented Bathies
B.K.R. PERFUMERY, COIMBATORE-1.
லெவண்டர்
பத்திகள்
சுகந்தப்பிரியா
B.K.R. PERFUMERY
B.K.R. PERFUMERY, RAJA ST. COIMBATORE-1.
முல்லைப்பூ
பத்திகள்
VARIETIES TO CHOOSE
THALAMPOO
MULLAIPOO
ROJAPOO
LAVENDER
KADAMBAM
SUGANDA PRIYA
AGARBATHIS
TRADE BKR MARK
PERFUMERY
MEANS
FLOWERY FRAGRANCE
B.K.R. PERFUMERY, RAJA ST. COIMBATORE-1.
THALAMPOO
BATHIES
தாழம்பூ
பத்திகள்
PHONE: 25283
Mfrs:-
B·K·R·PERFUMERY
COIMBATORE-2.(S. INDIA)

''கங்கிராஜுலேஷன்ஸ்.''

''வேதாந்தம் படித்தவர்களுக்கு இந்தக் காலத்தில் வேலை இல்லை என்று புரிகிறது. கம்ப்யூட்டர் ஸையன்ஸ் படிச்சிருக்கியா அல்லது ஏதாவது பிஸினஸ் கோர்ஸ் படிச்சிருக்கியான்னு கேட்கிறாங்க.''

அவன் பேசாமல் இருந்தான்.

''இன்னும் என்ன கோபம்? இந்த நைட் கவுனைப் பாருங்க தியாகு! எனக்கு 'வெட்டிங் கிப்டா ஒரு போக்கிரிப் பொண்ணு கொடுத்தா'' — அவள் தன் ஹவுஸ்கோட்டை நீக்கினாள். அது ஒரு கருப்பு லாங்கரே.

**மிக்ஸியின் எந்தப் பாகத்தில் கிறல் ஏற்பட்டாலும் அசிரத்தையாக இல்லாமல் உடனே பழுது பார்க்க வேண்டும்.**

**உலர்ந்த நீரில்லாத பொருட்களைப் பொடி செய்வதற்கென்று தரப் பட்டுள்ள பாத்திரத்தில் தண்ணீர் விட்டு அரைக்கவோ ஈரமான பொருட்களை அரைக்கவோ கூடாது.**

**மிக்ஸியில் அளவுக்கதிகமான பொருட்களைப் போட்டு அரைத்தல் கூடாது.**

அது மறைத்ததை விட மறைக்காததுதான் அதிகம். தைக்கப்பட்டிருந்த லேஸ்கள் வேறு அந்த வேலையை இன்னும் சுலபமாக்கின. அத்துடன் அவர்கள் அன்றைய மனஸ்தாபங்களை மறந்து போனார்கள்.

அப்போதைக்கு அவர்களது பிரச்னைகள் மறந்து போகப் பட்டன. ஆனால் மறைந்து போகவில்லை.

சுஜாதாவுக்கு அந்த எட்வர்ட்ஸ் புரோக்கர் கம்பெனியில் கிளெரிகல் வேலை கிடைத்தது. அத்துடன் போட்டோகிராபர் வேலையும் பார்ட் டைமாகச் செய்ய ஆரம்பித்தாள். அதற்கு நிறைய நியூயார்க் போக வேண்டியிருந்தது. இதனால் வீட்டு வேலைகள் பாதிக்கப்பட ஆரம்பித்தன. வீட்டில் இருக்கும் சில மாலை வேளைகளிலும் போட்டோக்களை டெவலப் பண்ணவே சரியாயிருக்கும்.

மாலை வேளைகளில் இருவரும் ஆபீசிலிருந்து வருவார்கள். அவன் பேப்பர் படிக்க அவள் சமைப்பாள். சாப்பிடுவார்கள். அதன் பின் அவள் எல்லாவற்றையும் எடுத்து வைத்துச் சுத்தம் செய்வாள். வாரம் ஒரு நாள் இந்த வேலை என்று ஷிப்ட் போட்டுக் கொண்டு ஒரு நாள் பாத்ரூம் கழுவுவாள். ஒரு நாள் துணிகளைத் துவைத்து மடித்து பீரோக்களில் அடுக்கி வைப்பாள். ஒரு நாள் வாக்யூம் க்ளீனரை வைத்துக் கொண்டு வீடு பெருக்குவாள். சனி ஞாயிறுகளில் துணிகளை அயர்ன் செய்வது போன்ற வேலைகள். வாரம் முழுவதற்கும் சமையல் பண்ணி குளிர் பதனப் பெட்டியில் வைப்பதும் உண்டு.

மன்ஹாட்டனில் அவளுக்கு வேலை இருக்கும். வீக் எண்டுகளில் அவன் வானதி வீட்டுக்குப் போவான். ஏதாவது இந்தியர்கள் வீட்டில் பார்ட்டி இருக்கும். அல்லது சில நண்பர்கள் சேர்ந்து கொண்டு வீடியோவில் 'சங்கராபரணம்' அல்லது 'இரு நிலவுகள்' என்று மொழி பேதம் இல்லாமல் படம் பார்ப்பார்கள்.

வீட்டு வேலைகள், முழு நேர ஆபீஸ் வேலை, காமிரா வேலை என்று அவளால் தாக்குப் பிடிக்காமல் போகும்போது அவன் தனக்கு வீட்டு வேலைகளில் உதவுவது இல்லையே என்று அவளுக்குக் கோபம் வரும். ஒரு முறை அவனைக் கேட்டபோது, 'நானா உன்னை வேலைக்குப் போகச் சொன்னேன். நீயாகத் தானே போகிறாய்?'' என்று சொல்லிவிட்டதால் மற்றொரு முறை அவனைக் கேட்க அவள் தன்மானம் இடம் கொடுக்கவில்லை.

அதன் பின் அவனாகவே எப்பொழுதாவது உதவுவானோ என்று அவள் எதிர்பார்த்தாள். அவன் பின்னணியே வேறு என்பதை சுஜாதாவும் புரிந்து கொள்ளவில்லை.

அவன் பெற்றோருக்கு இரண்டு பிள்ளைகள். அண்ணா சங்கருக்கு மன்னி பக்கத்திலேயே அவன் கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்க வேண்டும். அவன் சமையல் அறை வாசலில் நின்று, வீட்டின் முன் பக்கம் இருக்கும் அவளைக் கூப்பிட்டுத் தண்ணீர் எடுத்துத் தரச் சொல்லுவான். காலையில் காபி சாப்பிடும் போது அவன் பேப்பர் படிக்கும்போது அது அரை மணியானாலும் அவள் கூடவே நிற்க வேண்டும். இல்லாவிட்டால் 'இருந்து டம்ளரை வாங்கிக் கொண்டு போகக் கூட உனக்குப் பொறுமை இல்லையோ'' என்று கத்துவான். மன்னி விடியற்காலை நான்கு மணிக்கு எழுந்ததிலிருந்து இரவு பதினொரு மணி வரைக்கும் பம்பரமாய் வேலை செய்வாள். அந்த வீட்டில் குடும்பத் தலைவன் யார் என்பதில் சந்தேகத்துக்கே இடமில்லை. அவனுக்கும் சின்ன வயசிலிருந்தே அம்மா

எல்லாம் செய்து வந்ததால், தன் வீட்டில் தான் தாலி கட்டினவளுக்குள்ள சிரமங்கள் புரியவில்லை.

இந்தியா மாதிரி வேலைக்காரர்களும் கிடையாது. எல்லாம் நாமே செய்து கொள்ள வேண்டும். அத்துடன் வேலைக்கும் போக வேண்டும். கணவனிடமிருந்தும் உதவி கிடையாது என்னும்போது அவள் அடிக்கடி சிடுமூஞ்சியாகிப் போனது நிஜம்தான். அவன் இன்னும் தனக்குப் பணிவிடை செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிருனே என்ற கோபம் — தன்னுடைய போட்டோகிராபர் வேலைக்கு இன்னும் நிறைய நேரம் வேண்டும் என்ற ஆதங்கம் — இவையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய் அதிகரிக்க அவள் அதைப் பற்றியெல்லாம் அவனிடம் மனதை விட்டுப் பேசாமல் இருந்ததால் தியாகுவுக்கு அவை பற்றி ஒன்றும் தெரிந்து கொள்ள விருப்பம் இல்லாமல் போயிற்று.

இந்தச் சின்னச் 'சின்ன வெறுப்புகள் எல்லாம் பெரிதான பிரச்னைகளாய் மனத்தைக் குடைய ஆரம்பித்தது உண்மைதான். இருவருக்கும் மற்றவர்கள் கால் பட்டால் குற்றம் கைபட்டால் குற்றம் என்று கொஞ்சம் கொஞ்சமாகத் தோன்ற ஆரம்பித்ததும் நிஜம்தான்.

**அரைபடும் பொருட்களுடன் பிளேடு சுலபமாக சுற்றக்கூடிய அளவு தண்ணீரை தாராளமாக விட்டு அரைக்க வேண்டும். இல்லாவிட்டால் பிளேடு உடையவோ மோட்டார் எரியவோ நேரிடலாம்.**

**பொருட்களைப் போட்டு அரைக்கும் பாத்திரத்தை மூடியபின் தான் அரைக்க வேண்டும். நடுவில் மிக்ஸி வேலை செய்யும் பொழுது தண்ணீரோ, மேலும் பொருட்களோ சேர்க்கக் கூடாது. அரைப்பதை நிறுத்திய பின்தான் எதையும் சேர்க்க வேண்டும்.**

### அவர்கள்

டிசம்பர் வந்தது. அத்துடன் ஏகப்பட்ட குளிர். பனி வெள்ளையாய் பொடியாய் மாவாய் உதிர்ந்து கொண்டே இருந்து சட்டென்று நாலைந்து அங்குலம் வெள்ளைப் பாய் விரித்தாற்போல் ஆகிவிடும். வீட்டுக்குள்ளே கூட இரண்டு ஸ்வெட்டர்கள், லெக் வார்மர் (Legwarmer) என்று போட்டுக்கொண்டால் தான் கொஞ்சம் குளிர் அடங்குகிறது.

இந்தப் பனி தியாகுவுக்குப் பிடிக்கவில்லை. வெளியே சாயந்திரம் மூன்று மணிக்கே இருட்டி விடுகிறது. கார்கள் போகமுடியாமல் ஐஸான ரோடுகள். நடக்க முடியாமல் தடுக்கும் பனிக் குன்றுகளில் சறுக்கல்கள்.

இந்தப் பனிக்காலம் சுஜாதாவைப் பாதிப்பதில்லை.

''ஐ லவ் விண்டர் தியாகு! ஸ்கேட்டிங் ஸ்கீயிங்ஸ் போகலாம். வெர்மாண்டில் எனக்கு ஒரு கன்வென்ஷனில் போட்டோ எடுக்கப் போகணும். ஒருஅஸைன்மெண்ட் வந்திருக்கு, அங்கே நிறைய நிறைய பனி சறுக்கு மலைகள் இருக்கின்றன. நீங்களும் வருகிறீர்களா?'' என்று கேட்டாள்.

அன்று வெளியே பத்து டிகிரி. காற்றின் வேகத்தோடு சேர்ந்து குளிர் சைபருக்கும் கீழே போன மாதிரி உணர முடிந்தது.

''எனக்கு இந்தக் குளிரே பிடிக்கலே. பனியும் இதன் வெள்ளையும் பிடிக்கலே''— அவன் தன் ஸ்வெட்டரின் காலரை இன்னும் இழுத்து விட்டுக் கொண்டான். சென்னை டிஸம்பரின் எண்பது டிகிரி சூரியனுக்கு அந்தக் கணம் ஏங்கினுன்.

''கமான் தியாகு! இது ஈஸ்ட் கோஸ்ட். பனிக்குப் பயந்தா முடியுமா? வாங்களேன் நான் ஸ்கீ பண்ண சொல்லித் தரேன்''— அவள் வற்புறுத்தினுள்.

''வேண்டாம்மா! கையைக் காலை எங்காவது உடைத்துக் கொண்டு விட்டால் அவ்வளவுதான்.''

''அப்போ என் ஆபீஸில ஜார்ஜோடு வேணும்னு போகட்டுமா? கார்த்தாலே போயிட்டு சாயந்திரம் வந்துடறோம். அவன் ஸ்கீ எக்ஸ்பர்ட்!'' — அவள் சாதாரணமாய்க் கேட்டாள்.

''ஜார்ஜும் வேண்டாம், ஜானும் வேண்டாம்'' — அவன் அரை குறையாய் சொன்ன போது அவள் சந்தேகமாய்ப் பார்த்தாள்.

''நீ கண்டவன்களோடு போறது எனக்குப் பிடிக்கலே. போனு என்னோட போகலாம். இல்லாவிட்டால் வேண்டாம்.''

''நீங்கதான்வரமாட்டேன் என்கிறீர்களே''

''அப்போ போக வேண்டாம்.''

அவள் அவனை ஒரு கணம் தீவிரமாகப் பார்த்துவிட்டுக் கேட்டாள்.

''ஜார்ஜ் ஒரு பெண்ணுயிருந்தால் அனுப்புவீர்களா?''

''மே பீ.''

''எனக்கு ஜார்ஜும் ஒண்ணுதான் ஜாக்கியும் ஒண்ணுதான். நான் பல முறை சொல்லி

யிருக்கிறேன். இன்னும் ஒரு முறை சொல்லு கிறேன். நான் வளர்ந்த விதம் அது. நான் அவர்களை ஒரு மனித இனமாகத்தான் பார்க் கிறேன். நண்பர்கள் என்று வரும்போது ஆண் பெண் வித்தியாசம் கிடையாது. அமெரிக் காவில் ஆண் பெண் சுதந்திரமாகப் பழகு வதால் எல்லாப் பெண்களும் எல்லா ஆண் களுடன் படுத்துக் கொள்வதாகக் கற்பனை பண்ண வேண்டாம்.''

அவள் இதை நிறையத் தடவை சொல்லி யிருக்கிறாள். ''போட்டோகிராபி'' பத்திரி கையில் அவளைப் பற்றிய சிறு கட்டுரை வந்த போதும் அப்படித்தான். அவள் ஆசையாக அவனிடம் காட்டியபோது அவன் அப்படி ஒன்றும் சந்தோஷத்தில் துள்ளவில்லை.

**சூடான நீரைச்சேர்த்து மிக்ஸியில் அரைத்தல் கூடாது.**

**மிக்ஸியுடன் தரப்பட்டுள்ள குறிப்புகள் அடங்கிய புத்தகத்தில் குறிக்கப்பட்டுள்ள வேகத்தில், குறிப்பிட்டுள்ள நேரத்திற்கே அரைத்தல் வேண்டும்.**

மாறாக, ''இது என்ன எவனோ உன் தோளில் கை போட்டுக் கொண்டிருக்கிறான்?'' என்றான்.

''அது எவனோ இல்லை. என் டீச்சர். என் அப்பா உயிரோடிருந்தால் இவர் வயசுதான் அவருக்கும் இருக்கும். கட்டுரையைப் படிச் சுப் பாருங்களேன்'' என்றாள்.

அவள் தோளில் படர்ந்த கை அவனை உறுத்தியது. அந்தப் பத்திரிகையில் அவள் போட்டிருந்த கறுப்பு டிரஸ்ஸில் அவளை நாட்டிய அரங்கேற்றத்தில் பார்த்தது நினை வுக்கு வந்தபோது, அந்த அழகை மட்டும் பார்த்து மயங்கி விட்டோமோ என்ற உறுத் தலும் கூட வந்தது.

அவள் எந்த வித உறுத்தலும் இல்லாமல் கட்டுரையைப் படித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தபோது அவள் அந்நியமாய்த் தோன் றினாள். அவளுடைய ஆண் நண்பர்கள் டெலிபோனில் கூப்பிட்டால் அவனுக்குக் கோபம் வரும். நியூயார்க்கில் அவளுடைய அறைத் தோழியின் பாய் ஃபிரண்டு இவளைத் திடீரென்று பார்த்த சந்தோஷத்தில் அவளை அணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டு, 'கங் கிராஜுலேஷன்ஸ் சூ, உனக்குக் கல்யாணம் ஆகிவிட்டதாமே! ஹூ ஈஸ் தி லக்கி கை (Guy) என்றபோது அவன் மிக அதிர்ச்சியே அடைந்தான்.

இப்போது ஏதோ ஒரு ஜார்ஜோடு ஸ்கீ பண்ணப் போவதா? அவனுக்கு எல்லா சம் பவங்களும் நினைவுக்கு வர, வழக்கம்போல் என்ன பேசுகிறோம் என்று நினைத்துப் பார்க் காமல் சொன்னான்.

''இப்படி மத்த ஆம்பிளைகளோட அலையற துக்கு என்னைக் கல்யாணம் பண்ணிக்கொண் டிருக்க வேண்டாமே! பேசாம இருந்திருந்தா தினம் ஒருத்தனோட கூட போயிண்டு இருக் கலாம். வேணும்னா மனச்சாட்சி உறுத்தல் இல்லாமப் படுத்துண்டும் இருக்கலாம். யூ பிளடி பிட்ச்....''

அவள் அவனைச் சட்டென்று ஏறிட்டாள். அவள் கண்களில் நிறையக் கோபம். நிறைய நிறைய வெறுப்பு.

திஸ் இஸ் இட்! சட்டென்று தன் ஷூக் களை மாட்டிக் கொண்டு கோட்டை எடுத்துப் போட்டுக் கொண்டு கையுறைகளோடு வெளி யறினாள். அவள் பின்னால் கதவு படாரென்று சாத்தப்பட்டது.

''போகட்டுமே! நான் சொல்வதில் என்ன தப்பு இருக்கிறது? நான்தான் கணவன். என் சொல்படிதான் அவள் நடக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் எல்லை இருக்கிறது'' அவன் கோபமாய் இருந்தான்.

இரண்டு மணி நேரம் கழித்து மூக்கு நுனி சிவந்து குளிரில் விரைத்திருக்க, கண்களில் லேசான நீரோடு திரும்பி வந்தாள்.

பனித் துகள்களை வாசல் மிதியடியில் தட்டிவிட்டு, ஷூக்களைக் கழற்றி அங் கேயே போட்டாள்.

தன் கோட்டை க்ளாஸட் தரையில் தூக்கி எறிந்துவிட்டு அவனிடம் நேராய் வந்தாள்.

''உங்களோடு பேச வேண்டும்.''

அவன் அப்போது லிவிங் ரூம் ஸோபாவில் உட்கார்ந்து கொண்டு ''என்கொயர்'' பத் திரிகையில் 'மக்கள்' பகுதியில் டயானா வுக்கும், சார்லஸுக்கும் நடந்த சண்டையைப் பற்றிப் படித்துக் கொண்டிருந்தான்.

''உன்னோடு பேச எனக்கு ஒன்றுமில்லை. நான் பண்ணின பெரிய தவறு உன்னைக் கல் யாணம் பண்ணிக் கொண்டதுதான்'' — அவன் கையிலிருந்த பத்திரிகையைப் பிடுங்கி அவள் கீழே எறிந்தாள். ''அதைத்தான் நானும் சொல்ல வந்தேன். நான் இந்தியர் களுக்குப் பிறந்தவளாய் இருக்கலாம். ஆனால் நான் ஒரு அமெரிக்கப் பெண். நான் வளர்ந்த விதம் வேறு. நீங்கள் முழுக்க முழுக்க இந்தியன். ஒருவேளை இந்த நாட் டில் பல வருடங்கள் இருந்து நிறைய அமெரிக்கர்களோடு பழகியிருந்தால் என் னைப் புரியலாம். நீங்கள் வந்த கொஞ்ச நாட்களிலேயே என்னைக் கல்யாணம் செய்து

கொண்டு விட்டீர்கள். இங்கும் உங்கள் வட்டம் இந்திய வட்டம்தான். மேலும் இன்னொரு கலாசாரத்தைக் குறைத்துப் பார்ப்பதை மாற்றிக் கொண்டு விட்டீர்களா என்றும் புரியவில்லை. அடிப்படையே நம்மிடம் தவறு. நம் சாப்பாடு வழக்கம் வேறு. நம் நோக்குகள் வேறு. நம் எண்ணங்கள், கொள்கைகள் எல்லாவற்றுக்கும் மேலாய் கலாசார வழக்கங்கள் வேறு. இதை யெல்லாம் யோசிக்காமல் நாம் திருமணம் செய்து கொண்டு விட்டோம்.''

அவள் உடம்பு நடுங்கியது. குளிரினால் மட்டும்தானா, அல்லது அதிகம் உணர்ச்சி வசப்பட்டதாலா? மேலும் தொடர்ந்தாள்.

''வாய் கூசாமல் என் கற்பைப் பத்திப் பேசுகிறீர்கள். நானும் இன்னும் இரண்டு பெண்களும், இரண்டு ஆண்களும் ஒரு அபார்ட்மெண்டில் ஒரு வருடம் இருந்திருக்கிறோம். அதில் வாடகைப் பங்கைத் தவிர வேறு எந்த விதமான உறவும் இல்லை. ஆனால் என் மேல் உங்களுக்கு நம்பிக்கை இல்லை. காதல் இல்லை. ஒரு கவர்ச்சிதான். கல்யாணத்துக்கு முன்னாடியே நான் வித்தியாசமானவள்னு சொன்னேன். இந்தக் கல்யாணத்துக்குச் சரின்னு சொன்னதிலே தப்பு என் பேரிலேயும் ஐம்பது சதவீதம்.''

அவள் படபடவென்று பேசினாள்.

''அப்போ என்ன பண்ணச் சொல்றே?''

''நாம பேசாம விவாகரத்துப் பண்ணிக்கலாம்.''

அவன் இப்போது மேலே நெருப்புப் பட்டவன் போல் நிமிர்ந்து அமர்ந்தான்.

''விவாகரத்தா?''

''ஆமாம்! இரண்டு மனசு ஒண்ணுசேராத போது பிரிஞ்சா என்ன தப்பு? ஒரு கூரைக்குக் கீழே விரோதிகளாய் இருப்பதை விட பிரிந்திருந்து நண்பர்களாய் இருப்போம். இது கடவுள் அல்லது இயற்கை செஞ்சு வச்ச உறவா என்ன? நாமா ஏற்படுத்திக் கொண்ட உறவுதானே! நம் தப்பை நாமே திருத்திக் கொள்வோம்.''

விவாகரத்தா? கேட்கவே என்னவோ போல் இருக்கிறது. அப்புறம் ஊர் என்ன பேசும்? அவன் குடும்பத்தில் கேள்விப்படாத விஷயம் ஆயிற்றே? ஆயிரம் காலத்துப் பயிர், இப்படி ஆறு மாசத்திலே அழிவதா? நினைத்துப் பார்க்கவே அவனுக்குப் பயமாக இருந்தது.

இல்லை. விவாகரத்துப் பண்ண முடியாது.

அவள் படுக்கை அறைக்குப் போய் கதவைத் தாழிட்டுக் கொண்டு படுத்துக்கொண்டாள். அன்றிரவு முழுவதும் அவள் தூங்காமல் யோசித்தாள்.

அவன் அந்த சோபாவிலேயே படுத்தபடி யோசித்துக் கொண்டிருந்தான்.

இருவரும் தாங்கள் அறியாமலே தூங்கிய போது குளிர்கால சூரியன், சோம்பேறித்தனமாய் மேகங்கள் வழியாய் எட்டிப் பார்க்க முயன்று கொண்டிருந்தான்.

''எடுத்துக்கொண்ட சூழ்நிலையில் எடுத்துக் கொண்ட கதாபாத்திரத்துக்கு எது பொருத்தமான முடிவோ அதைத்தான் தீர்மானிக்கிறேன்.''

—பாலசந்தர் சாவி, 19-12-82

**நான்**

கீதாவாகிய எனக்கு இந்தக் கதைக்கு என்ன முடிவு என்று யோசித்ததில் தலைவலி தான் வந்தது. வழக்கம் போல் 'அவர்கள் அத்துடன் சுகமாக வாழ்ந்தார்கள்' என்று அவர்களை சிரஞ்சீவிகளாய் ஆக்கிவிடலாம். எப்படி ஒன்று சேர்த்து வைப்பது என்ற

**மிக்ஸியை நிறுத்தியபின் பத்து வினாடிகள் கழித்துத்தான் பாத்திரத்தைத் திறக்கவோ, அடிப்பாகத்தில் இருந்து பிரித்து எடுக்கவோ வேண்டும்.**

**மிக்ஸியையும் பாத்திரங்களையும் எப்போதும் நன்றாகத் துடைத்து வைக்கவேண்டும்.**

**குறைந்த வேகத்தில் அரைத்தல் நீண்டநாள் மிக்ஸியைப் பழுதடையாமல் பாதுகாக்க ஒரு நல்ல வழி.**

**—'பானுப்ரியா'**

எண்ண ஓட்டத்திலிருந்து சிறிது நேரம் விடுதலை பெற ஆரஞ்சு சினிமா 1, 2, 3, 4, 5, 6 நோக்கிப் போனேன். ஒரே கட்டிடத்தில் ஆறு தியேட்டர்கள்.

போகும்போதும் ஒரு யோசனை. ஒரு வயதான தாத்தா அவர்களுடன் வந்து தங்கி அவர்களைத் திருத்த முடியுமா? வானதி ஏதேனும் செய்வாளா? ஊருக்குப் பயந்து, தியாகுவும் சுஜாதாவும் தங்கள் பிரச்னைகளுக்கு முடிவு காண்கிறார்களா? எப்படியாவது சேர்ந்து விடுங்களேன்!

சினிமா ஒன்றில் 'காந்தி' படத்துக்கு நீளமாய் வரிசை. அதில் கும்பிடப் போன தெய்வம் குறுக்கே.

''ஹலோ மிஸ்டர் தியாகராஜன்! லாங் டைம் நோ ஸீ'' என்றபோது திரு தியாக ராஜன் என்னோடு வரிசையில் சேர்ந்துகொண் டார்.

''சௌக்கியமா? வரலாறு காணாத வகை யில் ஒரு படத்துக்கு இவ்வளவு கும்பலா? ரொம்ப ஹிட் படம் போலிருக்கிறது'' — நாங்கள் உபசார வார்த்தைகள் பேசிக்கொண் டோம்.

''நியூயார்க் கச்சேரியின்போது ஸுவைப் பார்த்தேன். எப்படி இருக்கிறாள்? இன்னிக் கும் ஏதாவது வேலையா?'' என்றபோது அவர் முகம் சிறிது குவிந்தது.

''அவள் கட்டாயம் விவாக ரத்து வேண் டும் என்று கேட்டு விட்டாள். ரொம்ப ரொம்பயோசித்ததில் சரி என்றுதான்சொல்ல வேண்டி யிருந்தது. எப்படி இந்தத் திரு மணம் தப்பாயிற்று? படித்த, நாகரிகமான எங்கள் இருவரால் எப்படிக் குடித்தனம் பண்ண முடியாமல் போயிற்று?''

''ஒண்ணு கேட்பேன், மிஸ்டர் தியாக ராஜன்! ஒரு அமெரிக்கப் பெண்ணை ஒரு மேரி அல்லது ஒரு எலிஸபெத்தை அவள் அழகுக் காக கண்ணை மூடிக்கொண்டு கல்யாணம் பண்ணிக் கொண்டிருப்பீர்களா?'' அவர் யோசித்துப்பார்த்தார்.

'ஊஹூம். ரொம்ப கல்சுரல் டிஃபரன்ஸ்'

''அதைத்தான் நானும் சொல்ல வரேன். சுஜாதா என்ற இந்தியப் பெயர் கொண்ட, இந்தியத் தோற்றம் கொண்ட அமெரிக்கப் பெண் அவள். இரண்டு கலாசாரங்கள் ஒன் றாய் ஒரு கூரையின் கீழே வாழ நிறைய தியா கங்கள் வேண்டும். நிறைய ஒருவரை யொரு வர் புரிந்து கொள்ள வேண்டும். அதில் நிறைய ''வேண்டும்'' இருக்கின்றன. இதை நீங்கள் இருவரும் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். அவளுடைய பெற் றோர்கள் சீக்கிரம் இறந்து விட்டதால் அவ ளுக்கு இந்தியக் குடும்ப வாழ்க்கை கிடைக்க வில்லை. அதுவே ஒருவேளை ஒரு வரமோ என் னமோ! இரண்டு நாட்டுக் கலாசாரங்களும் முழுதும் புரியாமல் தாங்கள் இந்தியனா, அமெ ரிக்கனா என்றும் புரியாமல் வளரும் — இந் தியர்களுக்குப் பிறந்து அமெரிக்காவிலேயே குழந்தை முதல் வளரும் — இரண்டாவது தலைமுறையின் பிரச்னைகள் இல்லாமல் அவள் வளர்ந்து விட்டது சுஜாதாவைப் பொறுத்தவரையில் அதிருஷ்டம்தானோ என் னவோ!''

நான் சொன்னது அவருக்குப் புரிந்ததா? நிஜ வாழ்வில் அந்தத் திருமணம் ரத்தில் முடிந்தது எனக்கு வருத்தமே! இருவருமே நல்லவர்கள். நல்ல குடும்பத்திலிருந்து வந்த வர்கள். பழக்க வழக்க வித்தியாசங்களினால் ஒரு உறவு முறிந்தது என்னும்போது ஏன் வித்தியாசங்கள் இல்லாத உலகம் தோன்றக் கூடாது என்று தோன்றுகிறது.

நாங்கள் தியேட்டருக்குள் போனபோது, திசை பிரிந்தோம்.

இந்த வித்தியாசங்கள் மனிதனுக்கு மனி தன் காட்டும் ஜாதி, இனம், நாகரிக, கலா சார வித்தியாசம் போக வேண்டும் என்று பலமுறை பட்டினி கிடந்த 'காந்தி' பொக்கை வாய்ச் சிரிப்போடு திரையில் வந்தபோது அவர் காலில் விழுந்து வணங்கிய ஒருவன் எழுந்து அவரைச் சுட்டான்.

''ஓ காட்!'' — காந்தி சொல்லிக்கொண்டே விழுந்தார்.

தியேட்டர் விசித்து அழுதது.

**முற்றும்**



**ஷாம்பு வாங்க முடியவில்லை என்று கவலை வேண்டாம். முட்டையின் வெள்ளைக் கருவை சீயக்காயுடன் சேர்த்துத் தேய்த்துக் குளி யுங்கள். முடி உதிர்வது குறையும். பொடுகு அறவே நீங்கும்.**

**-நா. செந்தில் முரு**